# சங்கத் தமிழர் வாழ்வியல்

மு. சண்முகம் பிள்ளை

TNSDA
11576

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

# சங்கத் தமிழர் வாழ்வியல்

மு. சண்முகம் பிள்ளை

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES
இரண்டாம் முதன்மைச் சாலை, மையத் தொழில் நுட்பப்
பயிலக வளாகம், தரமணி, சென்னை - 600 113.

Book C

# BIBLIOGRAPHICAL DATA

TAMIL NADU STATE DEPARTMENT OF ARCHAEOLOGY LIBRARY, MADRAS-8
11576
Acc. No.
Date



| | | |
|---|---|---|
| Title of the Book | : | Cankat tamilar vālviyal |
| Author | : | M. Shanmugam Pillai |
| Publisher | : | International Institute of Tamil Studies<br>IInd Main Road,<br>C.I.T. Campus, Chennai 600 113<br>Ph: 22542992 |
| Publication No. | : | 516 |
| Language | : | Tamil |
| Edition | : | Second; First Edition 1997 |
| Date of Publication | : | 2004 |
| Paper used | : | 18.6 kg TNPL Maplitho |
| Size of the Book | : | 1/8 Demy |
| Printing type used | : | 10 points |
| No. of Pages | : | x + 342 |
| No. of Copies | : | 1000 |
| Price | : | Rs.100/- (Rupees One Hundred Only) |
| Printing | : | Pavai Printers (P) Ltd.,<br>142, J.J. Khan Road,<br>Chennai - 600 014 |
| Subject | : | Life of the Tamils in the Sangam Period |

முனைவர் சா. கிருட்டினமூர்த்தி
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
தரமணி, சென்னை-600 113.

# அணிந்துரை

சங்கத் தமிழரின் வாழ்வுப்பெட்டகமாகத் தனி மனித வாழ்வியல் நெறிமுறைகளையும் சமுதாய வாழ்வியல் செயற்பாடுகளையும் படம்பிடித்துக் காட்டும் கருவூலமாகச் சங்க இலக்கியங்கள் திகழ்கின்றன.

சங்கத் தமிழர்களின் அகம், புறம் என்ற இருவேறு வாழ்க்கை நெறிகளான இல்லற வாழ்வையும், புற உலக வாழ்வையும் தெளிவுற எடுத்துக்காட்டும் காலக்கண்ணாடியாகச் சங்க இலக்கியங்கள் அமைந்துள்ளன. தொல்காப்பியம் தொடங்கிப் பாட்டும் தொகையும் இத்தகு வாழ்க்கை விளக்கங்களை எடுத்துக்கூறுவதை நாம் காணமுடியும்.

அக்கால மக்களின் வாழ்க்கை வெளிப்பாடுகளாக இத்தகு நெறிமுறைகள் அமைந்துள்ளன என்பதை இவற்றின் வழி நாம் அறியலாம்.

சங்கத் தமிழர்களின் இத்தகு வாழ்வியல் கூறுகளை முறையாகத் தொகுத்தளிக்கும் நோக்கில் 'சங்கத் தமிழர் வாழ்வியல்' எனும் இந்நூல் அமைந்துள்ளது. இந்நூலை உருவாக்கியவர் பேராசிரியர் மு. சண்முகம்பிள்ளைஅவர்கள் ஆவார். இலக்கியம், இலக்கணம், நிகண்டு, ஆகிய முப்பெரும் கடலில் ஆழம் கண்டவராகிய இப்பேராசிரியரின் அரிய முயற்சியால் இந்நூல் உருவாகியுள்ளது. இவர்தம் பெரும் புலமைக்குத் தமிழ் தமிழ் அகராதி, தமிழ் நூல் விவர அட்டவணை, நிகண்டு சொற்பொருள் கோவை, திவாகர நிகண்டு, நாமதீப நிகண்டு ஆகிய நூல்களைச் சான்றாகக் கூறலாம்.

இவர் சென்னைப் பல்கலைக்கழகம், மதுரைக் காமராசர் பல்கலைக்கழகம், தமிழ்ப் பல்கலைக்கழகம், ஆசியவியல்

நிறுவனம் ஆகியவற்றில் பணிபுரிந்த பெருமைக்குரியவர். தமிழ்ப் பல்கலைக்கழக ஓலைச்சுவடித் துறை இவரால் சிறப்படைந்தது என்று கூறினால் அது மிகையாகாது. இத்தகு பெருமைக்குரிய இப்பேராசிரியரின் '**சங்கத் தமிழர் வழிபாடும் சடங்குகளும்**' என்ற நூலை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் முன்பே வெளியிட்டுள்ளது. '**சங்கத் தமிழர் வாழ்வியல்**' என்ற இந்நூலை 1997இல் இந்நிறுவனம் வெளியிட்டுப் பெருமை சேர்த்துள்ளது. இந்நூலின் இரண்டாம் பதிப்பு இப்போது வெளிவருகிறது. இதனை இரண்டாம் பதிப்பாக வெளியிட இசைவளித்த இந்நிறுவனப் பதிப்புக் குழுவினர்க்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நிறுவன வளர்ச்சிக்கு ஆக்கமும், ஊக்கமும் தந்து வருகின்ற நிறுவனத் தலைவர் **மாண்புமிகு கல்வி மற்றும் வணிகவரித் துறை அமைச்சர் திருமிகு சி.வி. சண்முகம்** அவர்களுக்கும், தமிழ் வளர்ச்சி பண்பாடு-மற்றும் அறநிலையத்துறைச் செயலாளர் திருமிகு **பு.ஏ. இராமையா இ.ஆ.ப.** அவர்களுக்கும், சிறப்புச் செயலாளர் திருமிகு **தா. சந்திரசேகரன் இ.ஆ.ப.** அவர்களுக்கும் என் நன்றியறிதலைப் புலப்படுத்திக் கொள்கிறேன்.

இந்நூலை அழகுற அச்சிட்டுத் தந்த பாவை அச்சகத்தார்க்குப் பாராட்டுகள்.

**சென்னை** **இயக்குநர்**
**16-07-2004**

# முகவுரை

சங்க இலக்கியங்களை நான் ஊன்றிக் கற்பதற்கும் ஆராய்வதற்கும் வாய்ப்பாக அமைந்தது அந்நூல்களின் பதிப்புப் பணியே. 1956 முதல் 1960 வரை மர்ரே எஸ். ராஜம் வெளியிட்ட இலக்கியச் செல்வம் நூல்களின் பதிப்பாசிரியனாயிருந்தேன். இலக்கியச் செல்வம் நூல் வெளியீட்டு வரிசையில் திவ்யப் பிரபந்தம் முதல் சந்தி - குறியீட்டு விளக்கம் ஈறாக 64 நூல்கள் 45 தொகுதிகளில் வெளியிடப் பெற்றன. இவற்றுள் சங்க இலக்கியத் தொகுதிகள் 10. பத்துப்பாட்டு ஒரு தொகுதி, எட்டுத் தொகை நூல்கள் தனித்தனியாக எட்டுத் தொகுதிகள். இவற்றிற்குரிய துணை நூலாகப் 'பாட்டும் தொகையும்' என்னும் ஆய்வுத் தொகுதியும் (186 பக்கம்) வெளியிடப் பெற்றது.

பாட்டும் தொகையும் தொகுதியில் புலவர்கள் அகராதி, பாடப்பட்டோர் பெயர் வரிசை, சொல் தொடர் விளக்கம், கதைகளும் வரலாற்றுக் குறிப்புக்களும், பழக்க வழக்கங்கள், கட்டுரைத் தொடர்கள் (சுவைப் பகுதிகள்) உவமைகள், வருணனைகள் இடம் பெற்றுள்ளன. தவிரவும் பாட்டு தொகை நூல்களில் சிறப்புப் பெயர் அகராதியும் தரப்பெற்றன. இவை செய்திகளைத் தொகுப்பதற்கு உதவியாக அமைந்தன. சுடர் விளக்காயினும் நன்றாய் விளக்கிடத் தூண்டுகோல் ஒன்று வேண்டுமன்றோ? எனது பதிப்புப் பணிக்கிடையில் சங்க இலக்கிய ஆய்வுப் பணியிலே ஈடுபடத் தூண்டியவர் மர்ரே எஸ். ராஜம் அவர்களே. அவர்தம் தூண்டுதலும் உதவியுமே இந்த ஆய்வுகள் உருவாவதற்குத் துணை நின்றன. அமரரான அப்பெரியவர்க்கு என் முதல் வணக்கமும் நன்றியும்.

பண்டைத் தமிழகத்தின் வரலாற்றை அறிய நமக்கு இன்று கிட்டியுள்ள சிறந்த கருவி. சங்க இலக்கியம் என்று போற்றப் பெறும் பத்துப்பாட்டும் எட்டுத் தொகையுமே. இவற்றிற்கு இலக்கணமாக ஆன்றோர் போற்றும் தொல்காப்பியம் பழைய நூலே. இந்த நூற்றாண்டில் அச்சுப் படிகள்தாம் ஆதார நூல்களாகின்றன. இலக்கியச் செல்வம் வரிசையில் வெளியிட்ட பாட்டு தொகை நூல்களின் மூலப் பாடல்களே இந்த உரைக்கோவைக்குக் கருவி நூல்களாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

திருவாளர்கள் சி.வை.தாமோதரம்பிள்ளை, டாக்டர் உ.வே. சாமிநாதையர், இராஜகோபாலையங்கார் முதலியோர் வெளியிட்ட இவற்றிற்குரிய பண்டை உரையாசிரியர்களின் உரைகளும் பொருள் விளக்கத்திற்கு உதவின. பழைய உரை இல்லாத குறுந்தொகை. நற்றிணை,

அகநானூற்றின் பிற்பகுதிகள் ஆகியவற்றிற்கு முறையே டாக்டர் உ.வே. சாமிநாதையர், பின்னத்தூர் அ. நாராயணசாமி ஐயர், ஔவை துரைசாமிப் பிள்ளை, நாவலர் ந.மு. வேங்கடசாமி நாட்டார், கரந்தைக் கவியரசு வி. வேங்கடாசலம் பிள்ளை ஆகியோரின் புத்துரைகளும் பயன்பட்டன.

சங்க இலக்கியம் பற்றிய முதல் ஆய்வு நூல், சங்கத் தமிழரின் வழிபாடும் சடங்குகளும் என்பது. இந்நூலைச் சென்ற ஆண்டு உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் வெளியிட்டு உதவியது. இதற்கு அடுத்தபடியாக நான் எழுதிய சங்கத் தமிழரின் வாழ்வும் பண்பாடும் என்னும் நூலையும் இப்பொழுது நிறுவனம் வெளியிட முன்வந்தது, என் நல்வினைப்பேறு என்றே கருதுகிறேன். இந்த ஆய்வு நூலை எழுதி ஏறத்தாழ 37 ஆண்டுகள் ஆகின்றன. இவை வெளிவர இன்னருள் புரிந்த இறைவன் திருவருளைப் போற்றுகிறேன்.

சங்கத் தமிழரின் வாழ்வும் பண்பாடும் என்னும் இந்நூலில் பத்து அத்தியாயங்கள் உள: முதலாவது அத்தியாயம் சங்க நூல்களின் அறிமுகமாக அமைகிறது. ஆய்வுக்கு அடிப்படையான சங்க நூல்களின் வரலாற்றை இதில் காணலாம். இந்த இலக்கியங்களின் பழமை, அவற்றின் பொதுத்தன்மை, பாண்டியர் மூன்று சங்கங்கள் நிறுவித் தமிழ் வளர்த்த பாங்கு ஆகியவை முதற்கண் விவரிக்கப்பட்டுள்ளன. இவற்றுள் கடைச்சங்கத்து உருவான நூல்களே சங்க இலக்கியங்கள். இவை பத்துப் பாட்டு, எட்டுத் தொகை என இருபெரும் பகுதிகளாகும். இவற்றைப் பாட்டு, தொகை எனவும் வழங்குவர்.

பத்துப்பாட்டு பற்றிய பொது இயல்புகள் முதலில் தரப்பட்டுள்ளன. அடுத்துத் திருமுருகாற்றுப்படை முதல் மலைபடுகடாம் ஈறாகப் பத்துப் பாடல்களுள் ஒவ்வொன்றின் அமைப்பு, தன்மை, பொருளடக்கம் அவற்றில் காணும் சிறப்புக் கூறுகள் முதலிய விவரங்கள் விரிவாக அமைகின்றன. இதுபோலவே எட்டுத் தொகை நூல்களின் பொது நிலைகளை விளக்கி, அதன்பின் நற்றிணை முதல் புறநானூறு ஈறாக உள்ள எட்டுத் தொகை நூல்களின் அமைப்பு, தொகுத்தார் தொகுப்பித்தார் பற்றிய செய்திகள் அவற்றின் சிறப்புத் தன்மை முதலியன எடுத்துரைக்கப்பட்டுள்ளன. சங்க நூல்களுக்கு இலக்கணமாக விளங்கும் தொல்காப்பிய வரலாறு இடம் பெறுகிறது. இறுதியில் சங்கத் தமிழின் பொது இயல்புகள் குறித்த தொகுப்புரை அமைகிறது.

குடி என்பதில் சங்ககாலத்து வாழ்ந்த மக்களின் இயல்பும் வாழ்க்கை முறைகளும் இரண்டாம் அத்தியாயமாக அமைகிறது. ஐவகை நிலத்து வாழும் மாந்தர்களின் தனித்தன்மை, தொழில், உணவுப் பழக்கம்,

வாழ்விடம், வழிபாடு முதலியவை விவரிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு நில மாந்தரும் அவ்வவ்நிலத்திற்குத் தக்க வண்ணம் வாழ்ந்து வரும் முறை தெரிய வருகின்றது.

அடுத்து அந்நாளில் மக்கள் வாழ்ந்த சிற்றூரும் பேரூரும் எவ்வெவ்வாறு அமைந்திருந்தன என்பது எடுத்துக்காட்டப்படுகிறது. நகரின் உள்ளமைப்பு எவ்வாறு இருந்தன என்பது மதுரையும் கச்சி நகரும் பற்றிய செய்தி கொண்டு விளக்கப்படுகிறது. தெருக்கள், மாட மாளிகை, அரண்மனை, பல்வேறுபட்ட மக்களின் வாழ்விடங்கள், கோயில்கள் முதலியவற்றின் காட்சியும் மக்களின் வாழ்க்கை நிலையும் சித்திரிக்கப் படுகின்றன. கடற்கரைப் பட்டின மக்களின் வாழ்வு உள்நாட்டு வாழ்வாரினின்றும் வேறுபடுதலும் காண்கிறோம். அந்நாளில் சிறந்து விளங்கிய நகரங்கள் பற்றிய காட்சிகளும் நன்கு விவரிக்கப்பட்டுள்ளன.

நாற்பாற்குலம் என்னும் பகுதியிலே அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் முதலியோர் தொழில் முறைபற்றித் தனித் தனிக் குழுவினராய் வாழ்ந்தனர். எனினும் ஒருவர்க்கொருவர் உதவி வாழ்ந்தனர். நாற்பால் குலத்தவர் வாழ்வியலும் நன்கு விவரிக்கப்பட்டுள்ளன. பழங்குடி மக்கள் வாழ்ந்த நிலையும் தரப்படுகிறது. தமிழகத்தில் பிற நாடுகளிலிருந்து வந்து தமிழருடன் கலந்து வாழ்ந்த வேற்று நாட்டார் ஆரியர் பற்றிய செய்திகள் விரிவாக உள்ளன. ஆரியச் சொற்கள் தமிழில் வந்து கலந்தமையும் குறிக்கப்படுகிறது. இறுதியாகக் கொற்றவனும் குடிகளும் எந்நிலையில் வாழ்ந்து வந்தனர் என்பதும் எடுத்துரைக்கப்படுகிறது.

ஐந்தாவது அத்தியாயம் தொழிலும் தொழிலாளரும் பற்றியது. நானில மக்களுக்கும் மேற்குலத்தினர்க்கும் அவரவர்தம் வாழ்க்கைத் தொழில்களுக்கு வேண்டும் துணைக் கருவிகளைச் செய்தளிக்கும் பணியில் ஈடுபட்டார் பலர். கொல்லர், தச்சர், பொன் செய் கம்மியர், சங்கறுப்பார், குயவர், ஆடை நெய்வோர், மருத்துவர் முதலாகப் பலர். அரசர்க்குரிய பணியாளர்களாக அமைச்சர், சேனாபதியர், தூதர், ஒற்றர், பல்வகைப் படைவீரர் முதலியோர் சுட்டப்படுகின்றனர். உழவர்க்கு உதவியோர், இசைகாரர், கூத்தாடுவோர், நாடோடிக் கலைஞர் முதலியவர்களைப் பற்றிய விவரங்களும் தெரிய வருகின்றன.

மக்களின் நாள்முறை வாழ்க்கை பற்றியது ஆறாம் அத்தியாயம். ஒவ்வொரு நாளும் துயிலெழுவதிலிருந்து மீண்டும் படுக்கைக்குச் செல்வது வரையில் பல்வேறு செயல்களில் மக்கள் ஈடுபடுகின்றனர். மாந்தர்களிடையே அன்றாடம் நிகழும் நிகழ்ச்சிகளை முறைப்பட இதில் காணலாம்.

சமுதாய நடைமுறையும் நம்பிக்கையும் பற்றி உரைப்பது ஏழாம் அத்தியாயம், ஒரு சில நிகழ்ச்சிகள் பரம்பரை வழக்கமாக வந்து, பின் சடங்குகளாக மாறிவிடுகின்றன. கட்டுவிச்சி குறி, வேலனின் கழங்குக் குறி முதலியன பார்த்தல் முதலிய நடைமுறை. வெறியாட்டு, குரவைக் கூத்து, கடவுள் வழிபாடு முதலியன குறிப்பிடத்தக்கன. நாள் கோள் பார்த்தல், புள் நிமித்தம் பார்த்தல், விரிச்சி கேட்டல், பல்லி சொல் பலன் கேட்டல், கனவுப்பலன் கேட்டல் முதலியவை மக்கள் நம்பிக்கைக்கு எடுத்துக்காட்டு. சான்றோர் வழிபடப்பட்டனர். புலவர்களைப் போற்றினர். மக்கள் ஒருவருக்கொருவர் பகுத்துத் கொடுத்து உதவிச் சமுதாய வாழ்க்கையைச் சிறக்கச் செய்தனர்.

எட்டாம் அத்தியாயம் தெய்வங்கள் பற்றியும் வழிபாட்டு முறைகள் பற்றியும் எடுத்துரைக்கின்றது. அச்சம் விளைக்கும் பேய், பிசாசு, பூதம் என்பவற்றையும் வழிபட்டனர். ஊர்களில் சதுக்கம், சந்தி, அம்பலம் ஆகியவற்றிலும் தெய்வம் போற்றினர். நானிலத் தெய்வங்களும் பிறவும் கருதப் பெற்றன. திருமால், முருகன், முக்கண்ணன் முதலிய பெருந்தெய்வங்களும் வழிபடப்பட்டனர். நித்திய பூசை, சிறப்பு விழா முதலியன வழிபாட்டில் இடம் பெற்றன. தேவர்களும் தேவகணத்தாரும் நாள்களும் கோள்களும் தெய்வநிலையில் கருதப்பட்டனர்.

கலைகள் தொடர்பானது ஒன்பதாம் அத்தியாயம். மக்கள் கல்வியும் கலையும் போற்றினர். இசையுங் கூத்தும் மக்கள் வாழ்க்கையுடன் ஒன்றி அமைந்திருந்தன. இயற்கையின் ஒலிகள் அவர்களுக்கு இன்பமூட்டின. யாழ், குழல், முழவு முதலிய இசைக் கருவிகள் பற்றிய குறிப்புகள் பல காணப்படுகின்றன. இசை எழுவகைப்பட்ட ஓசையமைதி உடையது. ஓசை ஒழுங்கைப் பண் என்பர். இசைக்கு ஏற்பமிடற்றுப் பாடலும் இவற்றிற்கு ஏற்ப ஆடலும் உண்டு. ஆடற்கலை இருபாலாரிடத்திலும் சிறப்புற்றிருந்தது. இசை நூல்களும் வழக்கில் இருந்தன. இயற்கைப் பொருள்களின் இயல்புகளை நுனித்து ஆராய்ந்து உரைக்கும் தன்மை புலவர்களிடம் காணப்பட்டது. ஐம்பூதங்கள் பற்றிய அறிவும் சிறப்பாக இருந்தது. தமிழ் மக்களின் வாழ்க்கையை நோக்கும் போது இயற்கையோடு இயைந்த வாழ்வும் இயற்கைப் பொருள்களிடத்து ஈடுபாடும், அறிவியற் கலைகளில் அவர்க்குள்ள விருப்பமும் நன்கு புலனாகின்றன.

இறுதி அத்தியாயமாகிய 10 ஆம் அத்தியாயம் செந்நெறியும் சீரிய குறிக்கோளும் என்பது. இது இந்நூலில் உள்ள அத்தியாயங்களில் மிகப் பெரியது; 114 பக்கங்கள் கொண்டது. வாழ்க்கை சீரிய முறையில் அமைய நல்ல குறிக்கோள் வேண்டும். உள்ளுவது எல்லாம் உயர்வுள்ளல்

என்றபடி உயர்ந்த குறிக்கோள் கொண்டு வாழ வேண்டும். மக்களின் அறவாழ்க்கைக்குரிய நல்ல நெறிகளைப் பேண வேண்டும் என்பதை அறிவுறுத்துகிறது. அறம், பொருள், இன்பம் என்னும் இலட்சியங்களும் அவற்றை அடைவதற்குரிய வழிகளும் காட்டப்பட்டுள்ளன. ஆண்-பெண் காதல் வாழ்க்கைச் சித்திரம் ஒரு புறம். அடுத்து மனை வாழ்க்கை இலட்சியங்கள், பின்னர் விருந்தோம்பல், மக்கட் பேறு, அன்பு, நட்பு, சான்றோர், ஒழுக்கத்தின் விருப்பம், அடக்கம், மெய்ம்மொழி, இனியவை கூறல் முதலிய பற்பல அறக்கோட்பாடுகள் சங்க இலக்கியங்களில் பொருந்தியுள்ளமையைச் சான்று காட்டி இந்த இயலில் விளக்கப்பட்டுள்ளன. சமூக வாழ்க்கை இலட்சியங்களும் நன்கு விளக்கப்பட்டுள்ளன. குறிக்கோள்களை வகுத்தும் தொகுத்தும் விரித்தும் உரைக்கும் இந்த இயலைச் சங்க இலக்கிய நீதிக்களஞ்சியம் எனலாம்.

நூலுள் கூறப்பட்டுள்ள ஒவ்வொரு செய்திக்கும் சங்கப் பாடல்கள், தொடர்கள், சொற்கள் சான்றாக எடுத்துத் தரப்பட்டுள்ளன. ஆதாரம் எதுவுமின்றி எழுதப் பெறவில்லை என்பதை இந்நூலைக் கற்பார் நன்கு உணர்வர். இந்த நூலும் சங்கத் தமிழரின் வழிபாடும் சடங்குகளும் என்ற நூலும் சங்க நூல்களுக்குச் சிறந்த மணிமகுடமாக விளங்கும்.

இந்நூலின் அச்சுப்படியைத் திருத்தி உதவிய அன்பர் சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ் மொழித் துறையின் தலைவர் முனைவர் இ. சுந்தரமூர்த்தி அவர்களாவர். இவர்களுக்குப் பெரிதும் கடமைப்பட்டுள்ளேன். இவர்கள் செய்த உதவிக்கு மிக்க நன்றி.

இந்த ஆய்வு நூலை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் வழி வெளியிட முன்வந்து, ஊக்கம் தந்து பல வகையிலும் உதவியவர் நிறுவன இயக்குநர் முனைவர் ச.சு. இராமர் இளங்கோ அவர்களாவர். அவர்களுக்கு நன்றி தெரிவிப்பதோடு அவர்தம் பணிசிறக்க உளமார அவரைப் பாராட்டுகிறேன் - வாழ்த்துகிறேன்.

மு. சண்முகம் பிள்ளை

கவிமணி நிலையம்
5-12-1997

# பொருளடக்கம்


1. சங்க இலக்கிய அறிமுகம் .... 1
2. குடி .... 43
3. சிற்றூரும் பேரூரும் .... 70
4. நாற்பால் குலம் .... 84
5. தொழிலும் தொழிலாளரும் .... 100
6. மக்களின் நாள்முறை வாழ்க்கை .... 126
7. சமூக நடைமுறையும் நம்பிக்கையும் .... 155
8. தெய்வங்கள் .... 178
9. கலை .... 200
10. செந்நெறியும் சீரிய குறிக்கோளும் .... 228

# 1. சங்க இலக்கிய அறிமுகம்

## (அறிமுகம்)

பண்டைத் தமிழகத்தை எண்ணும்போது, அந்நாளில் வாழ்ந்த புலவர் பெருமக்களின் பாடல்களே நம் கண்முன் நிற்கின்றன. அவை நம்முடைய உணர்ச்சிகளைக் கிளர்ந்தெழச் செய்கின்றன. முற்காலத் தமிழகத்தையும், அங்கே சிறப்புற வாழ்ந்த தமிழ் கூறும் நல்உலக மக்களையும், அவர்கள் வாழ்ந்த பெருமித வாழ்வினையும், அவர்களிடையே வழங்கிய அறிவியல் செல்வம் முதலியவற்றையும் ஒளிப்படம்போல் காட்டுகின்றன, இப் புலவர் பெரு மக்களின் பாடல்கள். அவற்றுள் இன்று நமக்குக் காணக் கிடைப்பவை பாட்டு-தொகை நூல்களில் சேர்க்கப்பெற்ற செந்தமிழ்ப்பாக்களே.

இங்கே ' பாட்டு' என்பது பத்துப்பாட்டையும், ' தொகை' என்பது எட்டுத் தொகை நூல்களையும் குறிப்பனவாகும். இந்தப் பாட்டு-தொகை நூல்களே தமிழ் நூல்களுள் மிகப் பழமையானவை. 'தமிழ்விடுதூது' பாடிய புலவர் பெருமகனார், இவற்றைக் குறித்துக் கூறும்போது, ' மூத்தோர்கள் பாடியருள் பத்துப் பாட்டும் எட்டுத் தொகையும்' என்கிறார். இங்கே அவர் முற்காலத்து வாழ்ந்த புலவர்களை' மூத்தோர்கள்' என்கிறார். மேலே சுட்டிய பதினெட்டுச் செய்யுள் நூல்களையும் பழைய உரைகாரர் குறிப்பிடுகின்றனர். எல்லாவற்றையும் தொகுதியாகச் சொல்லும் சில இடங்களில் ' பாட்டு','தொகை' என்னும் தொகுதிப் பெயர்களால் குறித்துள்ளனர். (தொல். அகத்.5; புறத்.35; செய்யு.50,80 உரை).

இவற்றுள், ' பத்துப்பாட்டு' என்னும்பொழுது, அது பல்வேறு ஆசிரியன்மார் எண்மர் பாடிய பத்துப் பெரும்பாடல்கள் சேர்ந்த தொகுப்பாதலின், இதனையும் எட்டுத்தொகை போன்ற

தொரு தொகைநூல் என்றே கருதவேண்டும். இத்தொகைகளுள் அடங்காத வேறுபல பாடல்களும் அந்நாளில் இருந்திருத்தல் இயல்பே. தொகை செய்த தமிழ்க்குழுவிற்கு வாராத வகையிலும் சில புல்வர்களின் பாடங்கள் நின்று போயிருக்கலாம். இப்புலவர் பெருமக்கள் செய்த தனிநூல் எதுவும் நமக்கு இன்று கிட்டவும் இல்லை. ஒருசில தனிநூல்களைப் பற்றிய குறிப்புகள் பாட்டு தொகைகளில் காணப்பெறுதல் கொண்டு அந்நாளில் நிலவிய தனி நூல்களும் பலவாதல் வேண்டும் என்று கொள்ளலாம். ஆனால், இன்று அவையெல்லாம் ஊகித்தறியும் நிலையில் அமைந்துள. நமக்குக் கிடைத்துள்ளவை ' பாட்டு, தொகை' எனப் போற்றப் பெறும் நூல்களே. இவையே நாம் நோக்கும் பொருளுக்குரிய, அடிப்படை.

பழந்தமிழ் மக்கள், நெடுந்தொலைவில் உள்ள யவனம், கடாரம் முதலிய இடங்களில் வாழ்ந்தவர்களோடு வாணிகத் தொடர்பு கொண் டிருந்தனர். இமயமலைக்கு அப்பாலும் அவர்கள் கருத்து சென்றதுண்டு. உலகின் பிறபகுதிகளில் வாழ்ந்த மக்களோடு தமிழ் மக்கள் தொடர்பு கொண்டிருந்தமையைப் பழம் பாடல் களினாலன்றியும் யவனாசிரியர்கள் (கிரேக்கர்) முதலிய பிற நாட்டாரின் குறிப்புகளினாலும் தெளியலாகும். ஆகவே, கிரேக்க நாட்டு முந்தையோர் குறிப்புகளையும், பிறநாடுகளில் காணும் சின்னங்கள் முதலியனவற்றையும் ஓரளவு துணைச் சான்றுகளாகக் கொள்ளலாம்.

நூல்கள் வழிவழியாக எழுதப்பெற்றுச் சுவடிகளாக வழங்கிவந்த முற்காலத்தில், அவை ஏடு எழுதுவோராலும் படிப்பவராலும் சிற்சில மாறுதல்களைப் பெற்றிருத்தல் இயல்பே. கல்லெழுத்தாகிய வரைவுகளைப் போன்றவையல்ல இலக்கியச் சுவடிகள். சுவடிக்குச்சுவடி காணும் பாட வேறுபாடுகளைக் கூர்ந்து நோக்குவோமாயின், சுவடிகள் எழுதுவோரின் கைவண்ணமும், மறப்பும், சோர்வும், சேர்ந்து பல மாறுபாடுகளைத் தோற்றுவித் திருத்தல் காணலாகும். இன்று அச்சுப் படிகளைப் பயன்படுத்துவ தனால் இவை எளிதில் புலப்படா. சில ஆண்டுகளுக்கு முன் பழைய ஓலைச்சுவடிகளையும் மூல நூல்களையும் ஆதாரமாகக் கொண்டு வெளியிடப்பெற்ற ' இலக்கியச் செல்வம்' வெளியீட்டு

வரிசையில் வெளிவந்த பாட்டு தொகை நூல் மூலங்களே இவ் வாராய்ச்சிக்குப் பயன் படுத்தப்பட்டுள்ளன.

பாட்டு - தொகை நூல்களில் பாடல்களை அடுத்துக் காணப் பெறும் குறிப்புகள் அப்பாடல்கள் தொகுக்கப்பட்ட காலத்து எழுதப்பட்டவனாகும். இவை முற்றும் பாடல் பாடிய ஆசிரியர் களாலேயே எழுதப்பெற்ற குறிப்புகள் என்று துணிய இட மில்லை. இக்குறிப்புகளால் பாடலின் பொருள் தெளிவுற விளக்கமாகின்றது. திணை துறை பற்றிய குறிப்புகளும் பொருள் உணர்ச்சிக்கு அவசியமானவையே. பாடினோர், பாடப்பட்டோர் வரலாறுகளை இவை புலப்படுத்துகின்றன. எனினும், இக்குறிப்பு கள் முதன்மைச் சான்றாக எடுத்துக்கொள்ளத் தக்கனவல்ல. பழைய உரைகாரர்தரும் கருத்துகளும் பொருள் விளக்கத்திற்குரிய துணைச் சான்றாகவே கருதத்தக்கன.

பாட்டு பத்து, தொகை எட்டு என்னும் வரையறை பண்டைய உரையாசிரியர்களின் காலத்திற்கு முன்பே ஏற்படுத்தி விட்டது.

ஆசிரியப் பாட்டின் அளவிற்கு எல்லை
ஆயிரம் ஆகும் இழிபு மூன்று அடியே

என்னும் தொல்காப்பியச் செய்யுளியல் சூத்திர உரையில் (150) இளம் பூரணர், பெரிய பாட்டு பத்துப் பாட்டினுள்ளும், சிலப்பதிகாரத் துள்ளும், மணிமேகலையுள்ளும் கண்டுகொள்க' என்று எழுதி யுள்ளார். நச்சினார்க்கினியரும் இச் சூத்திர உரையில் ,' கூத்த ராற்றுப்படைதலையளவிற்கு எல்லை, மதுரைக் காஞ்சியும் பட்டினப் பாலையும் ஒழிந்த பாட்டு ஏழும், பரிபாடலும் கலியும் ஒழிந்த தொகை ஆறும் இடையளவிற்கு எல்லை' என்று எடுத்துக் காட்டியுள்ளார். இவற்றால் பத்துப்பாட்டு எட்டுத்தொகை என்னும் அமைப்பு முறை உரைகாரர்களின் காலத்திற்கு முன்பாகவே ஏற்பட்டு விட்டமை தெளிவாம். எவ்வளவு காலம் முந்தியது என்பதில் ஆராய்ச்சியாளர்களிடையே கருத்து வேறுபாடு உண்டு. கி.பி. மூன்றாம் நூற்றாண்டை ஒட்டி, மதுரையில் நிலவிய கடைச்

சங்கத்துச் சான்றோர் குழுவினரால், பாட்டு தொகைகள் அடைவு படுத்தப்பெற்றன எனப் பெரும்பாலரும் கருதுகின்றனர். ஆனால், இதுவும் பாடல்கள் தோன்றிய காலமன்று. பாடல்கள் தொகைப் படுத்தப்பெறுவதற்கு முன் நீண்ட காலந்தொட்டு அவை வழக்கி லிருந்து வந்திருக்க வேண்டும். ஆகவே, சங்கப் பாடல்களில் பல கிருத்துவ ஆண்டு தோன்றுவதற்கு முற்பட்டவாயும் இருத்தல் கூடும்.

முற்காலத்திலே பாண்டிய மன்னர் மூன்று சங்கங்களை ஒன்றன்பின் ஒன்றாகக் காலப்போக்கில் நிறுவி, முத்தமிழையும் வளர்க்க வழிசெய்தனர் என்பது செவிவழிச்செய்தி. இம்முச்சங்க வரலாறு இறையனாரகப்பொருள் உரைகாரரால் கட்டுரைக்கப் படுகின்றது. இவர்தரும் வரலாற்றுக்குறிப்புகளின்படி நோக்கின், இடைச்சங்க நூலாகிய தொல்காப்பியமும், கடைச்சங்கத்தில் தொகை பெற்ற நூல்களும் இன்றும் நமக்குக் கிட்டியுள்ளன. இடைச் சங்கத்தார்க்கு இலக்கண நூலாகிய தொல்காப்பியம் ஒன்றைத் தீவிர அவர் சுட்டிய இலக்கியங்களுள் ஒன்றுகூடக் கிட்டப்பெறாமை வியப்பிற்குரியதே. பொதுவாகக் கூறுமிடத்து இவ் உரைகாரர் வழிவழியாக வந்த செவிவழிச் செய்தியை ஆதார மாகக் கொண்டு கூறினார் என்று கொள்ளலாம்.

முச்சங்கம் பற்றிய செய்திகள் எவ்வாறிருப்பினும் மதுரை மாநகரில் புலவர்குழு ஒன்று இருந்தது என்னும் உண்மையைப் பாட்டு- தொகை நூல்களில் வரும் சில குறிப்புகளால் உணரலாகும்.

*மண்மாறு கொண்ட மாலை வெண்குடைக்*
*கண் ஆர் கண்ணிக் கடுந்தேர்ச் செழியன்*
*தமிழ் நிலைபெற்ற தாங்க அரு மரபின்*
*மகிழ் நனை மறுகின் மதுரை' (சிறுபாண்.64-87)*

*தமிழ் கெழு கூடல் தண் கோல் வேந்தே*
*தொல் ஆணை நல் ஆசிரியர்*
*புணர் கூட்டு உண்ட புகழ்சால் சிறப்பின்*
*நிலம் தருதிருவின் நெடியோன் (மதுரைக். 781-763)*

இவற்றுள் ' சங்கம்' என்னும் பெயர் வெளிப்படையாக இல்லை. ஆயினும், மதுரையில் தமிழ் நிலை பெற்று விளங்கியது' என்றும் ' புணர் கட்டுண்ட' (புலவர் பலர் குழுவாக இருந்து தமிழாய்ந்த) என்றும் கூறப்படுதலினால் மதுரையிலே பாண்டிய மன்னரின் ஆதரவில் தமிழ்ப் புலவர் குழு ஒன்று இருந்ததெனக் கொள்ளலாம்.

இடைக்காலப் பிற்கால நூல்களும் கல்லெழுத்தும் மதுரைச் சங்கத்தைச் சிறப்புறப் பேசுகின்றன.

*'புலம்புரி சங்கம் பொருளோடு முழங்க'*
*(மணிமே . 7:114)*

எனவும்,

*நன் பாட்டுப் புலவனாய்ச் சங்கம் ஏறி*
*நற் கனகக் கிழி தருமிக் கருளினோன்காண்*
*(தேவா. நாவுக். 678:3)*

எனவும்,

*கூடலின் ஆய்ந்த ஒண் தீந்தமிழ்* *(திருக்கோ.2)*

எனவும் வரும் பாடற்குதிகள் மதுரையில் வழிவழியாகத் தமிழ்ச் சங்கம் வளர்ந்துவந்தமையைப் புலப்படுத்துகின்றன.

*முழுது ணர்ந்தருள் மலய நன்முனி*
*மொழியும் முத்தமிழும்*
*பழுதறும்படி புலவர் ஏறிய*
*பலகை ஒன்று உடையான்*
*(வி.பா.16 ஆம் போர்க். 41)*

என வில்லிபுத்தூரார் மதுரைச் சங்கத்தே திகழ்ந்த பலகையைச் சுட்டுகிறார். கி.பி. 19 ஆம் நூற்றாண்டில் தோன்றிய சின்னமனூர்க் கல்லெழுத்தும் மதுரைச் சங்கம்பற்றி உரைக்கின்றது. பாண்டியன்

தமிழோடு வடமொழியும் ஆய்ந்தான் என்றும் இக்கல்வெட்டு குறிப்பிடுகிறது.

*'செந்தமிழ்ப் பூணொடு தோன்றித் தென்தமிழின்*
*கரைக்ண்டும்*
.... .... .... .....
*வளமதுரை நகர்கண்டும் மற்றதற்கு மதின் வகுத்தும்*
*உளமிக்க மதியதனால் ஒண்டமிழும் வடமொழியும்*
*பழுதறத்தா னாராய்ந்து பண்டிதரின் மேற்தோன்றியும்*
.... .... .... .... ....
*தலையாலங் கானத்திற் றன்னொக்கு மிருவேந்தரைக்*
*கொலைவாளிற் றலைதுமித்துக் குறைத்தலையின்*
*கூத்தொழித்தும்*
*மஹாபாரதந் தமிழ்ப்படுத்தும் மதுராபுரிச் சங்கம் வைத்தும்*

என வருவது அக்கல்வெட்டில் ஒரு பகுதி. கி.பி. பத்தாம் நூற்றாண்டிற்கு முன்பே தமிழோடு நிகராக வடமொழியையும் தமிழ் நாட்டில் கருதினர் என்பதைத் தேவாரம், திவ்யப் பிரபந்தப் பாடல்களில் வரும் சிற்சில குறிப்புகளால் அறியலாகும். சங்கப் பாடல்களிலோ வடமொழி அருகிய வழக்காய் வருவதனால், அதுவும் அப்பாடல்களின் பழமையை நமக்குப் புலப்படுத்துகிறது.

முரஞ்சியூர் முடிநாகராயரும் (புறம்.2) மாமூலனாரும் (அகம். 233) மகாபாரதப் போரில் ஈடுபட்ட படைகளுக்குச் சேர மன்னன் பெருஞ்சோறு கொடுத்த செய்தியைக் குறிப்பிடுகின்றனர். இதனால் இவர்தம் பாடல்களைப் பாரத காலத்தன என்று கொண்டு தமிழின் தொன்மையைப் புலப்படுத்துகிறது என்பார் சிலர். பாரதப் போர்ச் செய்தி மரபு பற்றிக் கூறிய நிகழ்ச்சியேயாம் என்றும், சமகால நிகழ்ச்சியைச் சுட்டியதாகாது என்றும் மறுத்துரைப்பார் வேறுசிலர். இதுபோன்றே மௌரியர் தென்னாட்டின்மீது படையெடுத்துவந்த செய்தியைச் சங்கப்பாடல்களில் வரும் மோரியர் பற்றிய குறிப்புகள் தெரிவிக்கின்றன என்று கொண்டு மௌரியர் காலத்தோடு ஒப்ப வைத்துப் பழமை கூறுவாரும்

உண்டு. ஆனால், இந்த மோரியர் பற்றிய பகுதிகளை ஒரு புராணக் கதை என ஆராய்ச்சியாளரில் சிலர் மறுத்துரைக்கின்றனர்.

வடநாட்டில் கங்கைப்பேரியாற்றின் இணைநதியான சோணையாற்றைக் குறித்தும், அதன் கதையில் அமைந்த பொன் நிறைந்த பாடலிபுத்திர நகரைக் குறித்தும் (குறுந்.75) நந்தர்கள் கங்கையில் மறைத்து வைத்த பெருநிதியத்தைக் குறித்தும் (அகம்.255) ஒருசில குறிப்புகள் சங்கப்பாடல்களில் உள. இவை யெல்லாம் பாட்டு, தொகைப் பாடல்களின் தொன்மையை ஓரளவு உணர்த்துகின்றன என்று பொதுப்படக் கூறலாமே யன்றி அறுதி யிட்டுக் கூறத்தக்கன அல்ல. இவற்றை உறுதி செய்வதற்கு மேலை நாட்டார் தமிழகத்தைக் குறித்து எழுதியுள்ள குறிப்புகளும் துணைசெய்வனவாக உள்ளன. ஹிரேடோட்டஸ், டேஸியஸ், மெகாஸ்தனிஸ், ஸ்ட்ராபோ, தாலமி, பெரிப்புளூஸ் முதலியோர் எழுதியுள்ள பழங்குறிப்புகளில் தமிழகத்தைக் குறித்த பற்பல செய்திகள் உள. இவற்றைக் கொண்டு சங்கப்பாடல்களில் மிகவும் பழமையானவை பெரிபுளூஸின் காலமான கி.பி முதல் நூற்றாண் டிற்கும் முற்பட்டனவாகலாம் என்று கருதுவர்.

## பத்துப்பாட்டு

திருமுருகு ஆற்றுப்படை முதல் மலைபடுகடாம் ஈறாக உள்ள பாடல்கள் பத்தும் பத்துப்பாட்டு எனப்படும். இவற்றின் அடைவு முறையைச் சுவடிகளில் கண்ட தனிப்பாடல் ஒன்று பின்வருமாறு சுட்டுகிறது:

> முருகு, பொருநராறு, பாண் இரண்டு, முல்லை,
> பெருகு வளமதுரைக் காஞ்சி, மருவினிய
> கோல நெடுநல்வாடை, கோல் குறிஞ்சி, பட்டினப்
> பாலை, கடாத்தொடும் பத்து.

இப்பாடலில் குறித்த முறைப்படியே பல பிரதிகளிலும் பாடல்கள் அமைந்துள்ளன. அன்றியும், முதலாவது, இரண்டாவது என எண்ணுப் பெயராலும் இவை குறிக்கப்பெற்றுள்ளன.

எனினும், 'பத்துப்பாட்டு' எனக் குறிக்கும் வழக்கம் மிக முற்பட்டது என்று கொள்வதற்கு இல்லை. இப்பெயரை இளம்பூரணரும் மயிலைநாதருமே (நன். 387) தத்தம் உரைகளில் குறித்துள்ளனர். பேராசிரியரோ தமது தொல்காப்பிய உரையில் ' பாட்டு' என்றே (செய்யு. 50,80 உரை) வழங்கியுள்ளார். இளம்பூரணரும் பிற உரையாசிரியர்களும் பத்துப்பாட்டுப் பாடல்களை மேற்கோள் காட்டும்பொழுது, அவற்றின் தனிப்பெயராலேயே குறித்துள்ளார்கள். எட்டுத்தொகை நூல்களிற் போல இத்தொகுதியைத் தொகுத்தார் தொகுப்பித்தார் பற்றிய குறிப்புகள் எதுவும் கிடைக்கப்பெறவில்லை. கடைச்சங்க வரலாறு கூறுமிடத்து, எட்டுத்தொகை நூல்களை முறையாக எடுத்து விளக்கும் இறையனாரகப் பொருளுரையில் (சூ.1) பத்துப்பாட்டைப் பற்றிய செய்தி எதுவும் காணப்பெறவில்லை.

பிற்காலத்திலே எழுந்த பன்னிருபாட்டியலில் பத்துப் பாட்டு' என்னும் நூலின் இயல்பு குறித்து இரண்டு சூத்திரங்கள் உள்ளன.

*நூறு அடிச் சிறுமை, நூற்றுப் பத்து அளவே,*
*ஏறிய அடியின் ஈர் - ஐம்பாட்டுத்*
*தொகுப்பது பத்துப் பாட்டு எனப்படுமே (384)*

*அதுவே, அகவலின் வரும் என அறைகுவர் புலவர்(385)*

இந்தச் சூத்திரங்கள் 'பத்துப்பாட்டு' என்னும் வழக்குப் பெருகிய காலத்தில் இயற்றப்பெற்றவை. 'பத்துப்பாட்டு'த் தொகுதியை நோக்கி வகுக்கப்பெற்றதே இந்த இலக்கணம். வேறுவகையான பத்துப்பாட்டுகள் தமிழுலகில் இல்லை.

பத்துப்பாட்டு நூல் பத்துப்பாடல்களைக் கொண்ட ஒரு கோவையாயினும், ' குறுந்தொகை' 'புறநானூறு' போன்ற நூற் கோவை அன்று. இவை ஒன்றற்கு ஒன்று தொடர்பு இன்றி, வெவ் வேறு சூழ்நிலையில், வெவ்வேறு காலத்தில், எழுந்த பாட்டுகள்

இவற்றுள் செம்பாதி ஆற்றுப்படைகள். அவையாவன: திருமுருகு ஆற்றுப்படை, பொருநர் ஆற்றுப்படை, சிறுபாண் ஆற்றுப்படை, பெரும்பாண் ஆற்றுப்படை, மலைபடுகடாம். திரு முருகு ஆற்றுப்படைக்குப் ' புலவர் ஆற்றுப்படை' என்னும் ஒரு பெயரும் உண்டு. மலைபடுகடாம் ' கூத்தராற்றுப்படை' எனவும் வழங்கும்.

'முல்லைப்பாட்டு', குறிஞ்சிப்பாட்டு', 'பட்டினப்பாலை' என்னும் மூன்றும் அகத்திணை யொழுக்கம் பற்றியன. குறிஞ்சிப் பாட்டைப் ' பெருங்குறிஞ்சி' என்ற பெயராலும் உரையாசிரி யர்கள் வழங்கியுள்ளனர். ' நெடுநல்வாடை' அகப்பொருட் செய்தி பொதிந்ததாயினும். பாண்டியனது அடையாளப் பூவைக் கூறின மையால், இதனைப் புறத்திணைப்பாற் படுத்துவர். வாகைத் திணையுள் கூறிய ' கூதிர்ப்பாசறை' என்னும் துறையுள் இதனை நச்சினார்க்கினியர் அடக்குவர். ' மதுரைக்காஞ்சி' வீடுபேறு நிமித்த மாகப் பல்வேறு நிலையாமைகளைச் சான்றோர் எடுத்துக் கூறும் பகுதியாகிய ' காஞ்சித்திணை' எனும் புறப்பொருட் பகுதியைச் சார்ந்தது.

பத்துப்பாட்டுள் சிறியது முல்லைப்பாட்டு, இதில் 103 அடிகள் உள்ளன. மிகப் பெரிய பாடல் மதுரைக்காஞ்சி; இதில் உள்ள அடிகள் 782.

ஒவ்வொரு பாடலையும் இயற்றிய புலவர் பெயரும், அவரால் பாடப்பெற்ற பாட்டுடைத் தலைவர் பெயரும், அவ்வப் பாடல்களின் இறுதியில் கொடுக்கப்பெற்றுள்ள பழைய வாக்கியங் களால் புலனாகின்றன. பட்டினப்பாலை, மலைபடுகடாம் நூல்களைப் பாடினோர், அவற்றின் பாட்டுடைத் தலைவர்கள் பற்றிய செய்திகள் பிற்கால இலக்கியங்களிலிருந்தும் கல்வெட்டு களிலிருந்தும் தெரியவருகின்றன.

*தத்து நீர் வரால் குருமி வென்றதும்*
*தழுவு செந்தமிழ்ப் பரிசில்வாணர் பொன்*
*பத்தொடு ஆறு நூறாயிரம் பெறப்*
*பண்டு பட்டினப் பாலை கொண்டதும்*

எனவரும் கலிங்கத்துப்பரணிச் செய்யுட் பகுதியில் பட்டினப் பாலை பாடிய உருத்திரங்கண்ணனாருக்கு அரசன் செய்த சிறப்பைக் கவிஞர் போற்றியுள்ளார். இச்செய்தியை,

*பாடிய பாக்கொண்டு பண்படு பதினாறு*
*கோடி பசும்பொன் கொடுத்தோனும்* (10)

எனவரும் சங்கரசோழன் உலாவிலும் காணலாம். பிற்காலத்த தாகிய தமிழ்விடு தூதில்.

*பாடியதோர் வஞ்சிநெடும் பாட்டால் பதினாறு*
*கோடி பொன் கொண்டது நின் கொற்றமே*

எனப் பாராட்டப்பெற்றிருக்கின்றது. திருவெள்ளறைக் கல்லெழுத்தில் உள்ள பின்வரும் பாடல் பட்டினப்பாலையின் அரங்கேற்றம் பற்றிய செய்தியைத் தெரிவிக்கிறது.

*வெறி ஆர் தளவத் தொடைச் செயமாறன்*
*வெகுண்டது ஒன்றும்*
*அறியாத செம்பியன் காவிரி நாட்டில்*
*அரமியத்துப்*
*பறியாத தூண் இல்லை; கண்ணன் செய் பட்டினப்*
*பாலைக்கு அன்று*
*நெறியால் விடும் தூண் பதினாறுமே*
*அங்கு நின்றனவே.*

இச் செய்யுளில் ' கண்ணன்' என்றது கடியலூர் உருத்திரங்கண்ண னாரை ; ' அரமியம் ' என்றது அரண்மனை முற்றத்தை. இங்குக் குறித்த போர் நிகழ்ச்சியால் அரண்மனைப் பகுதிகளில் பதினாறு மண்டபம் ஒன்று தவிர ஏனைய எல்லாம் அழிவுற்றன என்பதும் விளங்கும். பண்டை நாளில் பட்டினப்பாலை அரங்கேறிய மண்டபம் ஆதலாலும், அதனை அழிப்பின் தமிழிலக்கிய நினைவுச் சின்னம் ஒன்றைச் சிதைத்ததாக முடியும் ஆதலாலும், அம்மண்டபம் மட்டும் பாதுகாக்கப்பட்டதாதல் வேண்டும்.

இதிலிருந்து முன்னையோர் தமிழிலக்கியச் சின்னங்களை எவ்வாறு பேணிப் போற்றினர் என்பதும் புலப்படும்.

*நல் இசைக் கடாம் புனை நன்னன் வெற்பில்*
*வெல் புகழ் அனைத்தும் மேம்படத் தீட்டிய*

என்பது திருவண்ணாமலைச் சாசனப்பகுதி. இதில் 'கடாம்' என வரற் பாலது 'படாம்' எனச் சாசனக் குறிப்பில் காணப்படுவது பிழையாதல் வேண்டும். இச்சாசனப் பகுதியில் மலைபடு கடாமும். அதன் பாட்டுடைத் தலைவனாகிய நன்னன் சேய் நன்னனும் குறிக்கப் பெறுதல் காணலாம்.

பாண்டியருள் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ் செழியனும், சோழருள் கரிகாற் பெருவளத்தானும், தொண்டைமான் இளந்திரையனும் பத்துப்பாட்டில் புகழப்பட்டிருக்கின்றனர். ஓய் மானாட்டு நல்லியக்கோடன், செங்கண்மாத்துவேள் நன்னன் சேய் நன்னன் என்னும் இரு குறுநில மன்னர்கள் முறையே சிறுபாண் ஆற்றுப்படை, மலைபடுகடாம் ஆகிய நூல்களால் சிறப்பிக்கப்பட்டுள்ளனர்.

*முருகாறு செவ்வேள்; பொருநாறு பாலை*
*கரி கால்; நெடுஞ்செழியன் காஞ்சி; இருபாணும்*
*நல்லியக்கோடன், இளந்திரையன்; நன்னன்கடாம்*
*கல்வித் தலைவர் கருது.*

எனவரும் பழம்பாட்டும் இதனைத் தெளிவுறுத்துகிறது. இந்நூல்கள் ஒரு காலத்தன்றிப் பல்வேறு காலத்தில் பல்வேறு இடத்தினராகிய புலவர்களால் இயற்றப்பட்டனவாம். இவை ஒவ்வொன்றும் தனித்தனி இலக்கியங்களாகப் போற்றப்படுவனவாதலின், இவற்றின் அமைப்பினையும் சிறப்பினையும் விளக்கமாக நோக்குவோம்.

## 1. திருமுருகாற்றுப்படை

முருகன்பால் வீடுபெறுவதற்குச் சமைந்தான் ஓர் இரவலனை, வீடு பெற்றான் ஒருவன் முருகனிடத்தே ஆற்றுப்படுத்தது' என்று நச்சினார்க்கினியர் இந்நூற்பெயர்க்கு விளக்கம் தருகிறார். பிற ஆற்றுப்படைகள் எல்லாம் ஆற்றுப்படுக்கப்பட்டார் பெயராலும் பெயர் பெறுதலும் மனங்கொள்ளத்தக்கன. பிற ஆற்றுப் படைகளுள் காணப்படுட'வனாகிய ஆற்றுப்படுத்தப்படுவானை விளித்தலும், அவனது நிலையை விரித்தலும், ஆற்றுப்படுத்து வான் தனது பழையநிலை, பரிசில் பெற்ற முறை என்பவற்றைக் கூறுதலும் இதில் விவரிக்கப்படாமல் உய்த்துணர வைக்கப் பெற்றிருக்கின்றன. இதற்குரிய மற்றொரு பெயராகிய 'புலவ ராற்றுப்படை' என்பதே நூல் முதலிய பொருளுக்கு ஏற்புடைப் பெயராயும், பழம் பெயராயும் தோன்றுகிறது. பின்னாளில், இப்புலவராற்றுப்படை சமயத்துறையில் போற்றப்படவே, ' 'முருகாற்றுப்படை' எனத் தெய்வப் பெயருக்கு முதன்மை ஏற்பட லாயிற்று. பதினோராந்திருமுறையில் தொகுக்கப்பட்ட பிரபந்தங் களுள் ஒன்றாக இத்திருமுருகாற்றுப்படையும் இடம்பெற்றுள்ளது.

இப்பாட்டு ஆசிரியப்பாவால் ஆகியது; 317 அடிகள் கொண்டது. முருகன் எழுந்தருளியிருக்கும் திருப்பரங்குன்றம், திருச்சீர் அலைவாய், திரு ஆவினன்குடி, திரு ஏரகம், குன்றுதொறு ஆடல், பழமுதிர்சோலை என்னும் ஆறு இடங்களைச்சுட்டும் ஆறு பகுதிகளாகப் பாடல் அமைந்துள்ளது. ஒவ்வொரு பகுதியும் முடிந்ததும் இடையே 'அதாஅன்று' என்னும் தனிச்சொல்லை இடையிட்டுப் பிரித்துக்காட்டி, என்னும் என்று மேற்செல்கிறார். இவ் ஆறனுள் 'குன்றுதொறு ஆடல்' 'பழமுதிர்சோலை' என்னும் இரண் டும் ஒரு குறிப்பிட்ட இடத்தைச் சுட்டுவனவல்ல. எல்லாக் குன்றங்களும், எல்லாச்சோலைகளும் முருகனுக்கு இருப்பிடமாக அமைகின்றன என்று பொதுவாகக் கூறுகிறது. அதுபற்றியே இந்த இரண்டையும் இறுதியாக அமைத்துள்ளார் கவிஞர். முருகக் கடவுளின் அவதாரம், அவருக்குரிய மலர், கொடி, ஊர்திகளும், அவர் கிரவுஞ்ச மலையைப் பிளந்து, சூரனைத் தடிந்தது முதலிய திருவிளையாடல்களும், பக்தர்கள் முருகனை வழிபடும் முறை களும் இப்பாட்டில் விவரிக்கப்பட்டுள்ள.

இதனைப் பாடியவர் நக்கீரர்; இவரே நெடுநல்வாடைக்கும் ஆசிரியராக உள்ளார். முருகாற்றுப்படை ஆசிரியரும் நெடுநல் வாடை நக்கீரரும் ஒருவரல்லர், வெவ்வேறு காலத்து வாழ்ந்த இருவேறு புலவர்கள் என ஆய்வாளர்களுள் சிலர் கருதுகின்றனர்.

## 2. பொருநர் ஆற்றுப்படை

பொருநர் ஆவார் இசையில் வல்ல ஓர் இனத்தார். இவர் களில் ஏர்க்களம் பாடுவோர், போர்க்களம் பாடுவோர், பரணி பாடுவோர் என்னும் பிரிவுகள் உண்டு. இப்பாட்டில் வரும் பொருநனோ போர்க்களம் பாடுவோன்; தடாரிப்பறை கொட்டுப வன். பரிசல் பெற்றானாகிய பொருநன், பரிசல் பெறக் கருதி வரும் மற்றொரு பொருநனை இளஞ்சேட் சென்னி புதல்வனாகிய கரிகாற்பெருவளத்தானிடத்தே ஆற்றுப்படுத்தியதைப் பொரு ளாகக் கொண்டது. பாலை யாழின் வருணனை, விறலியினுடைய கேசாதிபாத வருணனை, கரிகாற் பெருவளத்தானின் வெற்றிச் சிறப்பு, கொடைச் சிறப்பு என்பன பற்றிக் கூறும் பகுதிகள் சிறப்பாக நோக்கத் தக்கன. இதனைப் பாடியவர் முடித்தாமக் கண்ணியார்; இப்பாட்டு 248 அடிகளைக் கொண்டது; வஞ்சி யடிகள் இடையில் வந்த ஆசிரியப்பாவால் ஆகியது.

## 3. சிறுபாணாற்றுப்படை

பாணர் என்பார் பாடுபவர்; இவர் இசைப்பாணர், யாழ்ப் பாணர், மண்டைப் பாணர் எனப் பலராவர். இப்பாடலில் குறிக்கப் பெறும் பாணன் யாழ்ப்பாணன், யாழில் சீறியாழ் பேரியாழ் முதலிய பலவகை உண்டு: இவ்வகை யாழைக் கருவியாகக் கொண்டு இசைக்கும் காரணத்தால் முறையே சிறுபாணர், பெரும்பாணர் என்று வழங்கப்படுவர். இச்சிறுபாண் ஆற்றுப் படையில் இன்குரல் சீறியாழ் ' இடவயின் தழீஇ (35) எனவும், அடுத்து வரும் பெரும் பாண் ஆற்றுப்படையில் ' இடனுடைப் பேரியாழ் முறையுளிக் கழிப்பி' (462) எனவும் வருவதுகொண்டு, இவர்தம் பெயர்க் காரணம் விளக்கமாகும். பரிசில் பெறக்கருதிய சிறுபாணன் பரிசில் பெற்றான் ஒரு பாணன் ஓய்மானாட்டு

நல்லியக்கோடனிடத்தே ஆற்றுப்படுத்துவது இந்நூற்பொருள். இதில் விறலியின் கேசாதி பாத வருணனை, வஞ்சி, மதுரை, உறந்தை என்னும் மும்மன்னர்களின் தலைநகரப் பெருமைகள், ஏழு வள்ளல்களின் அருஞ் செயல்கள், பாணன் கடந்து செல்ல வேண்டும் வழியின் இயல்புகள் முதலியன முக்கியமாகக் குறிப்பிடத்தக்கன. இது 269 அடிகளைக் கொண்ட ஆசிரியப்பாட்டு. இதனைப் பாடியவர் இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனார்.

## 4. பெரும்பாணாற்றுப்படை

இத் 500 அடிகளையுடைய ஆசிரியப் பாவால் ஆகியது. சிறுபாணாற்றுப்படையின் இது பெரிய பாட்டு. பெரும் பாண ராவார் குழலர், பாணர் முதலிய பெரிய இசைகாரர் என்பர் அடி யார்க்கு நல்லார். காஞ்சி நகரில் சிறந்து விளங்கிய தொண்டைமான் இளந்திரையனிடம் பரிசில் பெறுதற்குரிய பெரும்பாணன் ஒருவனைப் பரிசில் பெற்றான் ஒருவன் ஆற்றுப்படுத்தியதாகப் பாடப்பெற்றது. இந்த ஆற்றுப்படையின் ஆசிரியர் கடியலூர் உருத்திரங்கண்ணனார். ' பாணாறு' எனவும் இப்பாட்டு வழங்கும் என்பர்.

யாழின் வருணனை, இளந்திரையனுடைய செங்கோல் முறைமை, வணிகர் இயல்பு, மறவர், இடையர், உழவர் வலைஞர் முதலிய நானில மக்களின் வாழ்க்கைமுறை, அந்தணர் இல்லம், முனிவர் இருக்கை இவற்றின் இயல்புகள், பட்டினத்தில் அமைந்த கலங்கரைவிளக்கம், காஞ்சி நகர்ச் சிறப்பு, திருவெஃகாவில் திருமால் பள்ளிகொண்டுள்ள காட்சி, இளந்திரையனுடைய வீரம், கொடை முதலியன சிறப்பிக்கப்பட்டுள்ளன. நாட்டின் ஒவ்வொரு பகுதியிலும் வாழும் வேறுபட்ட இனத்தார், சாதியினர் முதலியோர் விருந்தோம்பும் வகைகள் இப்பாடலில் விவரிக்கப்பட்டுள்ளன.

## 5. முல்லைப் பாட்டு

தலைவன் வினைக்குப் பிரிய, மனைவி இல்லத்தே பிரிவுத் துயரைப் பொறுத்து வாழும் ஒழுக்கம் முல்லை [illegible]படும். 'முல்லை' ஒழுக்கம் பற்றிய இப்பாட்டு முல்லைப்ப[illegible] எனப்

பெயர் பெற்றது. தலைமகன் போருக்குப் பிரியக் கருதியதனைக் குறிப்பால் உணர்ந்து தலைவி ஆற்றாளாகப், பெருமுது பெண்டிர் தலைவிக்கு ஆறுதல் கூற, அதனால் அவள் தேறி ஆற்றியிருந்ததும், தலைவன் போர் வினை முடித்து மீள வந்தது கண்டு தோழி முதலியோர் தம்முட் கூறியதுமாக அமைந்தது இப்பாட்டு. பெருமுது பெண்டிர் விரிச்சி கேட்டுத் தலைவியைத் தேற்றுதல், பாசறையின் இயல்பு, வீரர் நிகழ்ச்சிகள், அரசன் சிந்தனை, தலைவியின் பிரிவுத் துயரம், மன்னன் கார்காலத் தொடக்கத்தே வெற்றியுடன் மீண்டு வரல், கார்காலக் காட்சிகள் என்று இன்னோரன்ன செய்திகளை இப்பாடலிற் காணலாம்.

இதனைப் பாடியவர் காவிரிப்பூம்பட்டினத்துப் பொன் வணிகனார் மகனார் நப்பூதனார். இது 103 அடிகள் கொண்ட ஆசிரியப் பாட்டு. பத்துப் பாடல்களுள் இது சிறியது.

## 6. மதுரைக் காஞ்சி

காஞ்சி என்பது வீடுபேறு நிமித்தமாகப் பல்வேறு நிலையாமையைச் சான்றோர் அறிவுறுத்தக் கூறும் குறிப்பினது. எனவே, ' மதுரைக்காஞ்சி' என்னும் தொடர் மதுரையிடத்து அரசனுக்குக் கூறிய காஞ்சி என்றாகும். தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனுக்கு வீடுபேறு நிமித்தம் பல்வேறு நிலையாமைகளை எடுத்து அறிவுறுத்தற்கு மாங்குடி மருதனார் பாடியது; வஞ்சியடிகள் விரவிய ஆசிரியப்பாட்டு 782 அடி களையுடையது. இது பத்துப்பாட்டில் அதிகமான அடிகளைக் கொண்டது.

தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் பற்பல போர்களில் பெற்ற வெற்றிகள் இதில் விரிவாகக் கூறப் பட்டுள்ளன. பாண்டிய நாட்டில் மருதம், முல்லை, குறிஞ்சி, பாலை, நெய்தல் என்னும் ஐந்நில இயல்புகளும், அவ்வந் நிலத்துள்ள பல்வகைக் காட்சிகளும் நிகழ்ச்சிகளும் சித்திரிக்கப் பட்டுள்ளன. மதுரை மாநகரின் அமைப்பும், அங்கு வாழும் மக்களின் வாழ்க்கைநிலை நாகரிகச் சிறப்புகள் முதலியனவும்,

அந்நகரில் பகலிலும் இரவிலும் நிகழும் பல்வேறு நிகழ்ச்சி களும் மதுரையின் மாண்பும் (320 அடிகளில்) விவரிக்கப்பட் டுள்ளன. (328-698).

*கங்கையம் பேர் யாறு கடற்படர்ந்தாஅங்கு*
*அளந்து கடை அறியா வளம் கெழு தாரமொடு*
*புத்தேள் உலகம் கவினிக் காண் வர,*
*மிக்குப் புகழ் எய்திய பெரும்பெயர் மதுரை* (696-698)

என்று இந்நகரின் வளப்ப மிகுதியையும் பெரும்புகழையும் எடுத் துக்காட்டுகின்றார். இறுதியில் மன்னன் சிறந்த வீரர் முதலாயின ருக்குப் பெருங்கொடை வழங்கும் வண்மைகளைக் கூறி, அம் மன்னனையும் வாழ்த்துகின்றார் கவிஞர்.

## 7. நெடுநல்வாடை

நெடிதாகிய நல்லதோர் வாடை என்பது பொருள். தலை யாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் பகைப்புலம் சென்று பாசறையிடத்து இருப்ப, அரண்மனையில் அவனைப் பிரிந்து வாழும் அரசி அவன் பிரிவை நினைந்து நினைந்து வருந்திக் கொண்டிருக்கிறாள். இத்தகு தலைவியைத் தலைவன் விரைவில் அடையக்கடவன் என்று கொற்றவையைப் பரவுவாள் கூறியதாக உள்ளது இப்பாட்டு. வாடைக் காலத்து தலைவனைப் பிரிந்து வாழும் மாதர்க்கு ஒரு நொடி ஓர் ஊழியாகத் தோன்றுமாதலின், அவளுக்கு இக்காலம் நெடியதோர் வாடைக் காலமாயிற்று. அரசன் போராசை மீதூர அவனுடைய நோக்கத்தை முற்றுவித்ததற்கு மனவெழுச்சியை ஊக்குவதனால் இது அவ னுக்கு நல்லதோர் வாடைக்காலமாயிற்று.

இச்செய்யுள் தலைவனைப் பிரிந்தமை கூறி, போர்க் களத்தே அவனே வெற்றியெய்த வைத்தலின், இது பாலையும் அதற்குப் புலனாய வாகைத் திணையுமாயிற்று என்பர். பாலை யினது இயல்பு பிரிதல். வாகையினது இயல்பு பகைவரை வெல்லுத லும் வெல்லுதல் நிமித்தமும் ஆகும்.

இது 188 அடிகளை உடைய ஆசிரியப்பா. இதனைப் பாடிய வர் நக்கீரர். இவரைத் திருமுருகாற்றுப்படை பாடிய நக்கீரரினும் காலத்தால் முற்பட்டு வாழ்ந்த ஒரு புலவர் என ஆய்வாளருட் சிலர் கருதுகின்றனர்.

கூதிர்கால நிலை, மாலைக் காலத்தில் மகளிர் தெய்வத்தை வணங்குதல், கூதிர் காலத்தின் விளைவுகள், அரசியின் அரண்மனை அமைப்பு, ஆண்டு அரசி தனித்துக் கட்டிலில் படுத்துப் பிரிவினால் வருந்தும் நிலைமை, சேடியர் செவிலியர் தேற்றவும் தணியாது ஓங்கும் அவளுடைய வருத்த மிகுதி, பாசறையில் தங்கிய அரச னுடைய நிலை ஆகியவற்றைத் தக்கவண்ணம் விவரிக்கிறது.

## 8. குறிஞ்சிப்பாட்டு

குறிஞ்சி என்பது புணர்தலும் புணர்தல் நிமித்தமுமாகிய ஒழுக்கம். இப்பாட்டில் இயற்கைப் புணர்ச்சியும், பின்னர் நிகழும் புணர்ச்சிக்களுக்குரிய நிமித்தங்களும் கூறப்படுதலின்,' குறிஞ்சிப்பாட்டு' எனப் பெயர் பெறுவதாயிற்று. இது 261 அடி களைக் கொண்ட ஆசிரியப் பாவால் ஆகியது. இப்பாட்டு' பெருங் குறிஞ்சி' எனவும் வழங்கும். களவுக் காலத்து நிகழும் நிகழ்ச்சி களின் பெரும்பாலனவும் இதில் முறையே கூறப்பட்டுள்ளன. தலைவி பாங்கிற்கு அறத்தோடு நிற்றதற்குக் காரணமாகிய சிறைக்காவல், தலைவனுக்கு வரும் இடையூற்றிற்கு அஞ்சுதல், தலைவி பாங்கிற்கு அறத்தோடு நிற்றல் எனப் பலவும் இடம் பெறுகின்றன. தலைவி சுனை நீராடி விளையாட்டாகப் பல்வேறு பூக்களைப் பறித்துப் பாறையில் குறித்த நிகழ்ச்சியை விவரிக்கும் பகுதியில் 99 மலர் களின் பெயர்கள் சொல்லப்பட்டிருக்கின்றன.

ஆரிய அரசன் பிரகத்தனுக்குத் தமிழ்ச் சுவையை அறி வுறுத்தற் பொருட்டுக் கபிலர் பாடியது இப்பாட்டு. பொருளிலக் கணத்தை உடைய தமிழை ஆராயாத தலைவர் களவொழுக்கத்தைக் கொள்ளமாட்டார் எனப் பரிபாடல்,

*தள்ளாப் பொருள் இயல்பின் தண்தமிழ் ஆய்வந்திலார்*
*கொள்ளார், இக்குன்று பயன் (பரி. 9:25-26)*

எனக் கூறுதல் நோக்கத் தக்கது. இங்கே 'குன்றுபயன்' என்றது கள வொழுக்கத்தை.

## 9. பட்டினப்பாலை

இதன் பாட்டுடைத் தலைவன் சோழன் கரிகாற்பெரு வளத்தான். இதனைப் பாடியவர் கடியலூர் உருத்திரங்கண்ணனார். இது 301 அடிகள் கொண்டது. பெரும்பான்மையும் வஞ்சியடிகளால் அமைந்து, ஆசிரிய அடிகளால் இறுவது. எனவே, இது 'வஞ்சி நெடும்பாட்டு' எனவும் பெயர் பெறும். வேற்று நாட்டிற்குச் செல்லத் தொடங்கிய தலைவன், தன் நெஞ்சை நோக்கி, ' தலைவியைப் பிரிந்து வாரேன்' என்று செலவழுங்கிக் கூறும் கூற்றாக உள்ளது. இந்நூலின் பெருமையை உணர்ந்த பாட்டுடைத் தலைவன் கரிகாலன் பதினாறு கோடிப் பொன் கண்ணனாருக்குப் பரிசு அளித்தான்.

இது பட்டினத்தைச் சிறப்பித்துக் கூறிய பாலைத் திணை யாதலின், இப்பெயர் பெற்றது. இங்கே பட்டினம் என்பது சோழர் தலைநகராக விளங்கிய காவிரிப்பூம்பட்டினம்.

*பூவிரி நெடுங்கழி நாப்பண் பெரும் பெயர்க்*
*காவிரிப் படப்பைப் பட்டினத்து அன்ன*
*செழுநகர் (அகம்: 205:11-13)*

என நக்கீரர் கூறியவாறு, காவிரியாறு கடலொடு கலக்குமிடத்தில் அமைந்தது, இப்பட்டினம். சோழ நாட்டின் பெருமையும், காவிரிப் பூம்பட்டினத்தின் பல்வேறு சிறப்புகளும், கரிகால் பெருவளத்தான் வீரச் செயல்களும், அவன் உறையூரை வளம் படுத்தி யமையையும் இப்பாடல் கூறுகிறது. காவிரிப்பூம் பட்டினத்தின் அமைப்பும் சிறப்பும் அங்கு வாழும் மக்கள் நிலையும், வணிகப் பெருநகராய் இது விளங்கிய மாண்பும் பிற சிறப்புகளும் இப்பாடலால் நன்கு புலனாகும்.

## 10. மலைபடுகடாம்

மலைக்கு யானையை உவமித்து, அம்மலையிற் பிறந்த பல்வேறு ஓசைகளைக் 'கடாம்' எனச் சிறப்பித்ததனால், இப் பாட்டு 'மலைபடுகடாம்' எனப் பெயராயிற்று. 'கடாம்' என்பது ஆகுபெயராய் அதனால் பிறந்த ஓசையை உணர்த்திற்று.

*அலகைத் தவிர்த்த எண் அருந் திறத்த*
*மலைபடுகடாம் மாதிரத்து இயம்ப* *(347-348)*

என இதனுள் வரும் 'மலைபடுகடாம்' என்னும் தொடரின் பொருட்சிறப்பு நோக்கி இப்பாட்டின் பெயர் அமைந்தது. இது 'கூத்தராற்றுப்படை' எனவும் வழங்கும்.

பரிசில் பெற வரும் கூத்தன் ஒருவனைப் பரிசில் பெற்றான் ஒருவன் செங்கண் மாத்துவோன் நன்னன் சேய் நன்னனிடத்தே ஆற்றுப் படுத்தியதாக உள்ளது. இந்நன்னனைப் பாடியவர் இரணிய முட்டத்துப் பெருங்குன்றூர்ப் பெருங்கௌசிகனார் ஆவர். இப்பாடல் 583 அடிகளையுடைய ஆசிரியப் பாவாவாகியது.

கூத்தர் கொண்டு செல்லும் பல இசைக் கருவிகள், யாழ்வருணனை, மலைவாழ் மக்களும் பிறரும் புதியராய் வருவோரை விருந்தோம்பும் வகை, நன்னனது ஊரின் பெருமை, அவனுடைய அரண்மனைவாயிலில் அவனைக் காண்பதற்காக வந்து நிற்பார் கொண்டுவந்துள்ள கையுறை வகைகள், அவர்கள் அவனைப் புகழும் முறை, அவன் கூத்தர் முதலாயினார்க்குப் பரிசில் அளித்து அனுப்பும் வண்மை முதலிய பலவும் விவரிக்கப் பட்டுள்ளன.

இங்ஙனமாக இப்பத்துப் பாடல்களும் தனித்தனிப் பொருள்களைக் கொண்ட வெவ்வேறான நூல்கள். இவை நீண்ட பெரு அகவல்களாயிருத்தலின் இவற்றை ஒரு தொகுப்பாகப் பின் புள்ளோர் கருதினர். களவியலுரைகாரர் காலத்தே இக்கருத்து நிலவாமையின், அவர், 'பத்துப் பாட்டு' பற்றி எதுவும் கூறாது

சென்றனர். எனவே, தொகை நூல்களுக்குப் பிற்பட்டு, பத்துப் பாட்டுத் தொகுப்பு வழக்கிற் பயின்றது எனலாம்.

இவற்றைத் தொகுத்துப் பார்க்குமிடத்து ஒன்றற்கொன்று இயைபுடைய நூல்களாகவும் உள்ளன. பொருநராற்றுப்படையும் பட்டினப் பாலையும் கரிகால் பெருவளத்தானைப் பற்றியவை. பட்டினப்பாலை இயற்றிய கடியலூர் உருத்திரங் கண்ணனார் பாடியதே பெரும்பாணாற்றுப்படையும். மதுரைக் காஞ்சியும் நெடுநல்வாடையும் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுங் செழியனைத் தலைவனாகக் கொண்டவை. நெடுநல்வாடை இயற்றிவர் நக்கீரர். இப்பெயருடையாரே திருமுருகாற்றுப்படை பாடியவராகிறார். மலைபடுகடாத்தின் பாட்டுடைத் தலைவ னாகிய நன்னன் மதுரைக்காஞ்சியிலும் (618-619) குறிப்பிடப்பட் டிருக்கிறான். குறிஞ்சிப்பாட்டின் ஆசிரியராகிய கபிலரை நக்கீரர் தாம் பாடிய பாடல் ஒன்றில் (அகம். 78) சுட்டியுள்ளார். 'குறிஞ்சிப் பாட்டு போன்ற பொருளமைதி கொண்டதே முல்லைப்பாட்டு. இதில் வரும் மிலேச்சர் பற்றிய செய்தியை ஒத்து (60-66) நெடுநல்வாடையிலும் மிலேச்சர் (31-35) பற்றிய குறிப்பு உளது. சிறுபாணாற்றுப்படையோ கடையெழு வள்ளல்களின் வரலாற்றை இறந்தகாலச் செய்தியாக உரைக்கின்றது (84-112). இங்ஙனம் வரும் பல இயைபுகளைக் கொண்டு பத்துப் பாடல்களும், பொருந ராற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, மலைபடுகடாம், மதுரைக் காஞ்சி, நெடுநல்வாடை, முருகாற்றுப்படை, முல்லைப் பாட்டு, சிறுபாணாற்றுப்படை என்னும் அடைவில் பிறந் திருக்கக் கூடும் என்று கருதுகிறார் ஆராய்ச்சிப் பேரறிஞர் பேராசிரியர் எஸ் வையாபுரிப் பிள்ளை (இலக்கிய தீபம்: பத்துப்பாட்டும் காலமுறையும், பக்.11).

## எட்டுத்தொகை

பழைய தனிப்பாடல் ஒன்று எட்டுத்தொகை நூல்களை நற்றிணை, குறுந்தொகை, ஐங்குநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறு என்னும் வரிசையில்,

*நற்றிணை, நல்ல குறுந்தொகை ஐங்குறுநூறு*
*ஒத்த பதிற்றுப்பத்து, ஓங்கு பரிபாடல்,*
*கற்றறிந்தோர் ஏத்தும் கலியே, அகம், புறம், என்று*
*இத்திறத்த எட்டுத்தொகை*

எனத் தருகிறது. பேராசிரியர் எஸ். வையாபுரிப்பிள்ளை அவர்கள், 'தொகை நூல்களின் கால்முறை' குறித்துத் தாம் எழுதிய கட்டுரையில் 'இலக்கிய தீபம்: பக். 70-83) குறுந்தொகை, நற்றிணை, அகநானூறு, ஐங்குறுநானூறு, பதிற்றுப்பத்து, புறநானூறு, கலித்தொகை, பரிபாடல் என்ற வரிசை முறையில் தொகை நூல்கள் தோன்றியிருத்தல் கூடும் என்று குறித்துள்ளார்கள்.

இறையனார் அகப்பொருள் உரையாசிரியரும் நச்சினார்க்கினியரும் அகநானூற்றை முதலாகக் கொண்டு தொகை நூல்களை வரிசைப்படுத்திக் கூறுகின்றனர்.

*'செய்யுள் மொழியால் சீர்புனைந்து யாப்பின்*
*அவ்வகைதானே அழகுஎனப்படுமே*

என்னும் தொல்காப்பியச் செய்யுளியல் சூத்திர (36) உரையில், 'அவ்வகை என்றதனால் அது வேறு வேறாக ஈண்டிய தொகை நிலைச் செய்யுள் என்று உணர்க. அவை நெடுந்தொகை முதலிய தொகை எட்டுமாம். அது தலைச் சங்கத்தாரை ஒழிந்தோர் சிறு பான்மை வழக்கும் பெரும்பான்மை செய்யுட் சொல்லுமாக இவ் இலக்கணத்தால் செய்தவாறே இக்காலத்துச் செய்யினும் ஆம்' என்று எழுதுகின்றனர். இறையனார் அகப்பொருள் உரையாசிரியர் கூறுவது பின்வருமாறு:

''கடைச் சங்கம் இருந்து தமிழ் ஆராய்ந்தார்..... நாற்பத்தொன்பதின்மர் என்ப அவருள்ளிட்டு நானூற்று நாற்பத்தொன்பதின்மர் பாடினார் என்ப. அவர்களால் பாடப்பட்டன நெடுந்தொகை நானூறும், குறுந்தொகை நானூறும், நற்றிணை நானூறும்,

புறநானூறும், ஐங்குறுநூறும், பதிற்றுப்பத்தும், நூற்றைம்பது கலியும், எழுபது பரிபாட்லும், கூத்தும், வரியும், சிற்றிசையும், பேரிசையும் என்று இத்தொடக்கத்தன. அவர்க்கு நூல் அகத்தியமும் தொல்காப்பியமும் என்ப''

இவ்விரு உரையாசிரியர்கள் கூற்றிலிருந்தும் தொகை நூல்கள் தலைச்சங்க காலத்திற்குப் பிற்பட்டவை என்பதும், அவை அகநானூறு முதலாக எண்ணப்பட்டன என்பதும் தெளிவாம். உரைகாரர்கள் காட்டிய முறைவைப்பில் நானூற்றுத் தொகைகளை முன்னரும் பாவகையில் வேறுபட்ட கலித்தொகை பரிபாடல்களை ஈற்றிலும் வைத்து, நூறு நூறு பாடல்களைக் கொண்ட ஐங்குறுநூற்றையும், பத்துப்பத்துப்பாடல்கள் கொண்ட பதிற்றுப்பத்தையும் இடையே கொண்டுள்ளமை புலனாகிறது. இதுவே பழமையாக வழங்கிய வரிசை முறையாதல் கூடும்.

எட்டுத்தொகை நூல்களுள் ஒவ்வொன்றின் வரலாற்றையும் அடுத்து நோக்குவோம்:

## 1. நற்றிணை

எட்டுத் தொகையுள் ஒன்றாகிய நற்றிணை ஒன்பது முதல் பன்னிரண்டு அடிவரையிலுள்ள நானூறு அகவற் பாக்களின் தொகுதி. குறுந்தொகை, நெடுந்தொகை, இரண்டிற்கும் இடைப் பட்டு, அளவான அடிகளை உடைமையினால், இது 'நற்றிணை' என வழங்கப்பட்டது போலும்.

'நற்றிணை நானூறு' என்றும் இது வழங்கப்பெறும். இறையனாரகப் பொருள் உரையில், கடைச்சங்க வரலாறு பற்றிக் கூறுமிடத்து, 'அவர்களால் பாடப்பட்டன நெடுந்தொகை நானூறும், குறுந்தொகை நானூறும், நற்றிணை நானூறும் புறநானூறும் ஐங்குறுநூறும்.... என்று இத் தொடக்கத்தன' என்று குறிக்கப்பட்டுள்ளது. இதனால் 'நற்றிணை நானூறு' என்ற வழக்கே பழமையானது என்பது தெளிவாம். எனினும். எட்டுத்தொகை நூல்களைத

தொகுத்து உரைக்கும் மேலே குறித்த பழம்பாடல் 'நற்றிணை' என்றே இந்நூற் பெயரைச் சுட்டுத்லாலும், களவியற்காரிகை உரை முதலியவற்றில் நற்றிணை என்றே பெயர் குறிப்பிட்டிருத்தலாலும் 'நற்றிணை' என்னும் பெயர் பெரு வழக்கினது என்னலாம்.

'இதனைத் தொகுப்பித்தான் பன்னாடு தந்த பாண்டியன் மாறன் வழுதி' என்பது பழங்குறிப்பு. தொகுத்தாரது பெயர் தெரிய வில்லை. நற்றிணைப் பாடல்களில் 234ஆம் பாடல் முற்றும் கிடைக்கவில்லை. இது குறித்து ஆராய்ச்சியாளர், 'சான்றோர் வருந்திய வருத்தமும்' எனத் தொடங்கும் பாடலோ, ''நெருநலும் முன்னாள் எல்லையும் ஒரு சிறை'' எனத் தொடங்கும் பாடலோ (இலக்கியச் செல்வம் நற்றிணைப் பதிப்பு, பக்கம் 141) மறைந்த நற்றிணைப் பாடலாக இருக்கலாம் எனக் கருதுகின்றனர். 385ஆம் பாடலின் பிற்பகுதியும் மறைந்து போயிற்று. 56 பாடல்களின் ஆசிரியர் பெயர் காணப் பெறவில்லை. ஏனைய பாடல்களைப் பாடியவர்க்ளின் தொகை 192.

நற்றிணைச் செய்யுட்களுக்குக் குறிஞ்சி, முல்லை, முதலிய ஐந்திணைப் பாகுபாடு ஏட்டுப்பிரதிகளில் காணப் பெறவில்லை. இவை பதிப்பாசிரியர்களால் ஊகித்துக் கொடுக்கப் பெற்றனவே. அகப்பொருட் பாடல்களின் பொருள் விளக்கத்திற்கு இத்திணை விளக்கம் இன்றியமையாதது என்னும் கருத்தாலும், அகநானூறு, ஐங்குறுநூறு, கலித்தொகை ஆகியவற்றில் திணைப் பாகுபாடு பழமையாக உள்ளமையாலும், இந்நூலுக்கும் திணைப் பாகுபாடு கொள்வது பொருத்தமே. பாடல்களின் அடியில் கொடுக்கப் பெற்றுள்ள கருத்துகள் பழமையானவை. அவை இந்நூலைத் தொகுத்த வராலேனும் பிற்காலத்தவராலேனும் அமைக்கப் பெற்றிருத்தல் வேண்டும்.

## 2. குறுந்தொகை

நற்றிணை, குறுந்தொகை, அகநானூறு, என்னும் மூன்றும் பாவகையிலும் பிறதிறங்களிலும் பெரிதும் ஒப்புமையுடையன.

குறுந்தொகைப் பாடல்களின் சிற்றெல்லை நான்கு அடி; பேரெல்லை எட்டு அடி. நீண்ட பாடல்கள் அடங்கிய அக நானூற்றை 'நெடுந்தொகை' என்று குறித்தல் போல, அகவற் பாவின் அமைப்பில் சுருங்கிய அடி வரையறையைக் கொண்ட பாடல் தொகுதி குறுந்தொகை என்று பெயர் பெறுவதாயிற்று. இந்த அடி அளவினாலும், வேறுசில ஏதுக்களாலும், எட்டுத்தொகை நூல்களில் முதலில் தொகுக்கப்பட்டது இக்குறுந்தொகை எனத் துணிதற்கு இடமுண்டு.

எட்டுத்தொகை நூல்களின் பெயர்களைத் தொகுத்து உரைக் கும் வெண்பா இந்நூலை 'நல்ல குறுந்தொகை' என்று பாராட்டு கின்றது. பண்டைய உரையாசிரியர்கள் தத்தம் உரை நூல்களில் மேற்கோளாக இந்நூற் செய்யுட்களைப் பெரிதும் எடுத்தாண் டுள்ளனர். 'இந்நூலுள் இப்போது தெரிந்தவரையில் 165 செய்யுட் களே பிற நூலுரைகளில் மேற்கோளாகக் காட்டப்பெறாதவை' என்று டாக்டர் உ.வே. சாமிநாதையர் அவர்கள் குறித்துள்ளார்கள்.

குறுந்தொகை நூலின் செய்யுள் - தொகை கடவுள் வாழ்த்தை விடுத்து 401. நற்றிணை, அகநானூறு, போலவே இதுவும் 400 செய்யுட்களாயிருத்தலே பொருத்தமுடையதாகும். 'குறுந் தொகை நானூறு' என்றே இந்நூலை இறையனராகப் பொருள் உரை யாசிரியர் குறிப்பிடுகின்றனர். இதனுள் 307, 391ஆம் செய்யுட்கள் ஒன்பது அடி உடையன. எட்டு அடிப்பேரெல்லையைக் கடந் துள்ள இந்த இரண்டு பாடல்களும் ஐயத்திற்கு இடமானவை. நற்றிணையில் முற்றும் காணப்பெறாத செய்யுள் இவ் இரண்ட னுள் ஒன்றாயிருக்குமோ என்று நினைக்கவும் இடமுண்டு. 391ஆம் செய்யுள் சில பாடபேதங்களுடன் எட்டு அடியாகச் சில பிரதிகளில் எழுதப்பட்டுள்ளது என்றும், இதனை எட்டு அடியாகக் கொண்ட போதிலும், 307ஆம் செய்யுள் எல்லாப் பிரதிகளிலும் ஒன்பது அடிகளை உடையதாக இருக்கிறதென்றும், இந்தப் பாடலைக் (307) குறுந்தொகையுள் சேராதது என்று விலக்கின் 400 செய்யுட்கள் என்னும் வரையறை நிரம்பியதாகும் என்றும், டாக்டர் சாமி நாதையர் அவர்கள் கருதியுள்ளார்கள். இவை மேலும் ஆராய்வ தற்கு உரியனவாம்.

'இத்தொகை முடித்தான் பூரிக்கோ. இத்தொகை பாடிய கவிகள் இருநூற்றைவர்' என்பது பழங்குறிப்பு. இதனைத் தொகுப்பித்தார் பெயர் தெரியவில்லை. 10 பாடல்களின் ஆசிரியர் பெயர் காணப்பெறவில்லை. எஞ்சிய பாடல்களைப் பாடியவர்களின் தொகை 205 என்ற வரையறையைப் பூர்த்தி செய்கின்றது.

பாடல்களின் அடியில் கொடுக்கப்பெற்றிருக்கும் கருத்துக்கள் பழமையானவை. ஆனால், பாடல்களின் தலைப்பில் இடம்பெற்றுள்ள திணைக் குறிப்புக்கள் பழமையானவை அல்ல; நற்றிணையிற் போலப் பதிப்பாசிரியர்களால் ஊகித்துக் கொடுக்கப் பெற்றனவே.

குறுந்தொகையில் 380 செய்யுட்களுக்குப் பேராசிரியர், தமது கல்வித் திறம் விளங்க, அரியதோர் உரை வகுத்திருந்தனர் என்று தெரிய வருகிறது.

*நம் அறிவுடைய தொல் பேராசான்*
*கல்வியும் காட்சியும் காசினி அறிய,*
*பொருள்தெரி குறுந்தொகை இருபது பாட்டிற்கு*
*இது பொருள் என்று அவன் எழுதா தொழிய*
*இது பொருள் என்று அதற்கு ஏற்ப உரைத்தும்*

எனவரும் நச்சினார்க்கினியர் உரைச் சிறப்புப் பாயிரத்தால், பேராசிரியர் உரை எழுதாத இறுதி இருபது செய்யுட்களுக்கும் நச்சினார்க்கினியர் உரை எழுதி அப்பணியை முற்றுவித்தனர் என்பது விளங்கும். பேராசிரியரின் குறுந்தொகை உரையை நச்சினார்க்கினியர் தமது தொல்காப்பிய உரையிலே ஓரிடத்தில் மேற்கோளாகவும் (பொருள். அகத். சூ. 46) எடுத்துக் காட்டியிருக்கின்றனர். இந்த இரண்டு சிறந்த உரையாசிரியர்களாலும் எழுதப் பெற்ற பழைய உரை இன்று நமக்குக் கிடைக்கப் பெறவில்லை. தமிழகம் இழந்த அரிய செல்வங்களுள் இவர்கள் எழுதிய குறுந்தொகை உரையும் ஒன்றாகும்.

## 3. ஐங்குறுநூறு

ஐந்திணைகளில் ஒவ்வொன்றுக்கும் குறைந்த அடிவரையறை பெற்ற நூறுநூறு பாடல்களைத் தனித்தனிப் பெற்றுள்ளமையினால் ஐங்குறுநூறு என்னும் பெயர் பெற்றது. இதில் அமைந்த பாடல்கள் அகவற்பாவின் கீழ் எல்லையாகிய மூன்று அடிச் சிறுமையையும் ஆறு அடிப் பேரெல்லையையும் கொண்டவை.

நூலுக்குப் புறம்பாகிய கடவுள் வாழ்த்துப் பாடலைப் பாடியவர் பாரதம் பாடிய பெருந்தேவனார். மருதம், நெய்தல், குறிஞ்சி, பாலை, முல்லை என்ற வரிசையில் இதன் ஐந்து பகுதிகளும் உள்ளன. இவற்றைப் பாடியவர்கள் முறையே ஓரம் போகியார், அம்மூவனார், கபிலர், ஓதலாந்தையார், பேயனார், என்னும் ஐவராவர்.

ஒவ்வொரு நூறும் பத்துப் பத்துப் பாடல்கள் கொண்ட பத்துப் பகுதிகளாக உள்ளது. இவற்றுள் ஒவ்வொன்றும் 'பத்து' என்று குறிக்கப்படுகிறது. ஒவ்வொரு பத்தும் தனித்தனியான கட்டுக்கோப்பு உடையது. இது பொருளமைப்பினாலேயோ, இதனுள் அமைந்த பத்துப் பாடல்களிலும் ஆட்சி பெறும் ஏதேனும் ஒரு சொல்லினாலேயோ, பெயரிடப்பட்டிருக்கின்றது. 'களவன் பத்து', 'மஞ்ஞைப்பத்து', 'தெய்யோப்பத்து', முதலியன சொல் லாட்சியினால் பெற்ற பெயர்கள். பருவம் கண்டு கிழத்தி உரைத்த பத்து, 'தோழி வற்புறுத்த பத்து', 'அன்னாய்ப்பத்து' முதலியன சொல்லாட்சியும் பொருளமைதியும் பொருந்தியவை.

இத்தொகையைத் தொகுத்தவர் புலத்துறை முற்றிய கூடலூர் கிழார் என்றும், தொகுப்பித்தார் யானைக்கட் சேய் மாந்தரஞ் சேரலிரும் பொறையார் என்றும் நூலிறுதியில் உள்ள பழங் குறிப்பினால் தெரியவருகின்றன

இந்நூலின் செய்யுள் - தொகை 500. 129, 130ஆம் செய்யுட்கள் பிரதிகளில் காணப்பெறாது மறைந்து போயின. 416, 480ஆம்

செய்யுட்களின் இரண்டாம் அடிகளில் சீர்கள் குறைந்து காண்கின்றன. ஒவ்வொரு பாடலின் கீழும் கொடுக்கப் பெற்றிருக்கும் கருத்துகள் பழமையானவையே. சில பிரதிகளில் மட்டும் எட்டு மிகைப்பாடல்கள் காணப்படுகின்றன.

இந்நூலுக்குப் பழைய உரை ஒன்று உள்ளது. இது பதவுரையாகவோ பொழிப்புரையாகவோ அமையாது, உள்ளுறை உவமம் இறைச்சிப்பொருள், முதலியவற்றை நன்கு விளக்கி, சிற்சில இடங்களில் மட்டும் திரிசொற்களின் பொருளையும் புலப்படுத்திச் செல்லுகின்றது. ஒருசில இடங்களில் இலக்கணக் குறிப்பும், சொல் முடிபு பொருள் முடிபுகளும் விளக்கப்பெற்றுள்ளன. இந்தப் பழைய உரை நூல் முழுமைக்கும் கிடைக்காமற் போனது ஒரு பெருங்குறையே. இந்த உரையை இயற்றிய ஆசிரியரைப் பற்றி யாதொன்றும் அறியக்கூடவில்லை. ஆயினும், இவரது உரைப் போக்கிலிருந்து பேராசிரியர், நச்சினார்க்கினியர், பரிமேலழகர், முதலிய உரையாசிரியர்களை ஒத்த பெருமை உடையவர் என்று திண்ணமாகக் கூறலாம்.

## 4. பதிற்றுப்பத்து

எட்டுத்தொகை நூல்களுள் பதிற்றுப்பத்தும் புறநானூறும் புறப்பொருள் பற்றிய தொகை நூல்கள். இவை இரண்டும் அகவற்பாக்களால் இயன்றவை. எனினும் இரண்டிற்கும் ஒரு முக்கிய வேறுபாடு உண்டு. முடிமன்னர் மூவரையும், வேளிர் முதலிய பிறரையும் பற்றிய பாடல்களின் தொகுதி புறநானூறு. ஆனால் பதிற்றுப்பத்தோ சேரமன்னர்களையே பற்றிய பாடல்களின் தொகுதி.

பத்துப்பத்து அகவற்பாக்களால் அமைந்த பத்துப்பகுதிகளைக் கொண்ட நூல் ஆதலின், இது 'பதிற்றுப்பத்து' என்று பெயர் பெறலாயிற்று. ஒவ்வொரு பத்தும், தனித்தனியே, ஒவ்வொரு புலவரால், ஒவ்வொரு சேரமன்னரைக் குறித்துப் பாடப் பெற்றமையின், இந்நூல் பப்பத்துப் பகுதியாகக் கொள்ளத் தக்கது. இதிலுள்ள பத்துப் பத்துகளும் 'முதற்பத்து', 'இரண்டாம் பத்து'

என்று இவ்வாறு எண்ணால் பெயர் பெற்றுள்ளன. இதனைத் தொகுத்தார், தொகுப்பித்தார் பற்றி யாதொன்றும் அறியக் கூடவில்லை.

நூலின் முதற்பத்தும், பத்தாம் பத்தும் பிரதிகளில் மறைந்து போயின. எனினும், இவற்றைச் சார்ந்த பாடல்கள் சில தொல்காப்பிய உரைகளாலும், 'புறத்திரட்டு' என்னும் தொகை நூலாலும் தெரிய வருகின்றன. தொல்காப்பியப் பொருளதிகாரம் புறத்திணையியல் 260ஆம் சூத்திர உரையில் நச்சினார்க்கினியர் எடுத்துக் காட்டும், 'எரி எள்ளு அன்ன நிறத்தன்' எனத் தொடங்கும் பாடல் இப்பதிற்றுப்பத்தின் கடவுள் வாழ்த்தாகலாம் என ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர் (பொருள். புறத். சூ. 26 நச்.). எனினும், இதனை ஒரு தலையாகத் துணியக்கூடவில்லை; இக் கடவுள்வாழ்த்து நூலைப் போன்று அகவற்பாவால் அமையவில்லை. ஈற்று அடி இரண்டு தவிர ஏனைஅடிகள் வெள்ளடியாக உள்ளன. ஆகவே இது மருட்பா ஆகும். பரிபாடலிலும் கலித்தொகையிலும் அவ்வவ்வகைப் பாடல்களாலேயே கடவுள் வாழ்த்து அமைந்துள்ளது. ஏனைய தொகை நூல்களில் ஆசிரியத்தால் அமைந்துள்ளது. இது மேலும் ஆராய்தற்கு உரியது.

ஒவ்வொரு பாட்டின் இறுதியிலும், துறை, வண்ணம், தூக்கு, பெயர் என்பவற்றைப் புலப்படுத்தும் பழங் குறிப்புகள் உள்ளன. அவ்வப்பாட்டில் அமைந்த சிறந்ததொரு தொடரே பாட்டின் பெயராக அமைக்கப்பட்டிருக்கிறது. இவை நூலாசிரியராலோ தொகுத்தவராலோ கொடுக்கப்பெற்றன ஆகலாம்.

ஒவ்வொரு பத்தின் இறுதியிலும் அப்பத்தைப் பாடினார், அதன் பாட்டுடைத் தலைவர், அவர் செய்த அரும்பெருஞ் செயல்கள், புலவருக்கு அவர் அளித்த பரிசில், முதலிய செய்திகளைக் குறிப்பிடும் பதிகம் உள்ளது. இப்பதிகங்கள் ஆசிரியப் பாவில் தொடங்கி, கட்டுரையாக முடிவுபெறுகின்றன. இவை சாசனங்களில் காணப்பெறும் மெய்க்கீர்த்திகளைப் போன்ற அமைப்பை உடையன. இவை தொகுத்தார் காலத்திற்குப் பிந்தியும், இதன் உரையாசிரியர் காலத்திற்கு முந்தியும்,

TAMILNADU STATE DEPARTMENT OF ARCHAEOLOGY LIBRARY 11576

தோன்றியதாதல் வேண்டும் என்பது சில ஏதுக்களால் புலனாகின்றது.

இந்நூலுக்குப் பழைய உரை ஒன்று உள்ளது. இதனை எழுதியவரைப்பற்றிய செய்திகள் ஒன்றும் அறியக் கூடவில்லை.

இப்பழைய உரை, ஒவ்வொரு செய்யுளின் கருத்தையும் விளக்கி, 'இதனால் இன்னது கூறப்பெற்றது' என்று சுட்டுகின்றது. இங்ஙனம் உரையாசிரியர் எழுதியுள்ள தொடர்களையே சுருக்கி, இலக்கியச் செல்வம் பதிப்பில் ஒவ்வொரு பாட்டின் தொடக்கத்திலும், தலைப்பாக அமைத்திருக்கின்றனர். இவை பாடலின் உள்ளுறை பொருளைப் பொதுமையாக உணர உதவுவனவாம்.

இந்நூற் செய்யுட்களில் இப்பொழுது கிடைப்பன 80; உரைகளால் தெரியவருவன 6: ஒருசில செய்யுட்களில் சில சீர்களும் அடிகளும் சிதைந்து போயின. நாலாம்பத்துச் செய்யுட்கள் மட்டிலும், ஐங்குறுநூற்றிலுள்ள பதினெட்டாம் பத்தைப் (தொண்டிப் பத்து) போல, அந்தாதியாக அமைந்துள்ளன.

## 5. பரிபாடல்

பரிபாடல் என்பது பாட்டு வகைகளுள் ஒன்று. இதன் இயல்பைத் தொல்காப்பியம் நன்கு விவரித்துள்ளது. உறுதிப் பொருள் நான்கனுள் இன்பத்தையே பொருளாகக் கொண்டு, மலை விளையாட்டு, புனல் விளையாட்டு, முதலியன பற்றி இப்பாடல் வரும் என்பர் பேராசிரியர். இது இசைப்பாவாகும். இவ்வகைப் பாடல்களால் அமைந்த தொகை நூலும் 'பரிபாடல்' என்றே வழங்கி வந்துள்ளது. 'இன் இயல் மாண் தேர்ச்சி இசைபரிபாடல்' என்று இத்தொகையில் அமைந்த பாடல் ஒன்றில் வரும் அடியும் (11 : 137) இதன் அமைதியைப் புலப்படுத்துகிறது. 'பரிபாட்டு' எனவும் இது வழங்கும்.

சங்கத்தார் தொகுத்த பரிபாடல்கள் 70 என்பது இறையனாரகப் பொருள் உரையாலும் (சூ. 1), தொல்காப்பியப் பொருளதிகாரத்தின் பேராசிரியர் உரையாலும் (செய்யு. சூ. 149) தெரிய

வருகிறது. இப்பாடல்களில் யார் யாரைக் குறித்து எத்தனை பாடல்கள் இருந்தன என்பதைப் பின்வரும் செய்யுள் வெளியிட்டுள்ளது.

*திருமாற்கு இரு-நான்கு; செவ்வேட்கு முப்பத்*
*தொருபாட்டு; காடுகாட்கு ஒன்று; மருவினிய*
*வையை இருபத்தாறு; மாமதுரை நான்கு என்ப*
*செய்ய பரிபாடல்திறம்.*

'காடுகாள்' என்றது காளியை, 'காடுகாட்கு' என்பதற்குப் பதில் 'கார்கோளுக்கு' என்றும் பாடபேதம் உண்டு. 'கார்கோள்' என்பது கடல். அந்த ஒரு பாடல் காளியைப் பற்றியதா? கடலைப் பற்றியதா? என்று இப்பொழுது அறிய வழியில்லை.

இவற்றுள் இப்பொழுது நமக்குப் பிரதிகளில் கிடைப்பன முதலிலிருந்து 22 பாடல்களே. எஞ்சியவை இறந்துபட்டன. எனினும், பழைய உரைகளிலிருந்தும், புறத்திரட்டுத் தொகை -நூலிலிருந்தும் 2 முழுப் பாடல்களும், சில பாடல்களின் உறுப்புக் களும் தெரியவருகின்றன. இவை 'பரிபாடல்-திரட்டு' என்னும் தலைப்பில் நூலிறுதியில் பதிப்பாசிரியர்கள் சேர்த்துள்ளனர். 22 பாடல்களில் 6 திருமாலுக்கும், 8 முருகனுக்கும், 8 வையைக்கும் உரியன வாயுள்ளன. பரிபாடல் திரட்டில் உள்ள 2 முழுப்பாடல் களுள் ஒன்று திருமாலைப் பற்றியும் மற்றொன்று வையையைப் பற்றியும் அமைந்தவை. பாடற்பகுதிகளுள் சில மதுரையையும் வையையையும் குறித்தன. ஒருசில உறுப்புக்கள் இன்னவற்றைச் சார்ந்தவை என்று தெரியக் கூடவில்லை.

இந்நூலைத் தொகுத்தார், தொகுப்பித்தார், பெயர் ஒன்றும் அறியக் கூடவில்லை. தொகுத்த பாடல்களின் அடி வரையறை பற்றிய குறிப்பும் கிடைக்கவில்லை. பரிபாடலின் சிற்றெல்லை 25 அடி என்றும், பேரெல்லை 400 அடி என்றும், தொல்காப்பியர் வரையறுத்துள்ளார். ஒவ்வொரு பாடலின் முடிவிலும் துறை, இயற்றிய ஆசிரியர் பெயர், இசை வகுத்தோர் பெயர், பண்ணின் பெயர், பற்றிய பழங்குறிப்புக்கள் உள்ளன. ஆயினும், பிரதிகள்

கிடைக்கவில்லை. 13ஆம் பாடலுக்கு இசை வகுத்தோர் பெயர் காணப்படவில்லை. முதற்பாடலில் அராகமாக வருகின்ற 14ஆம் அடி முதல் 28ஆம் அடி வரையிலுள்ள பகுதி தெளிவின்றி உள்ளது. இப்பகுதியில் பொருள் வரையறை செய்வதற்குப் பிரதிகளின் உதவியும் பழைய உரையின் உதவியும் கிடைக்கவில்லை. இவ்வாறே ஏனைய பாடல்கள் சிலவற்றிலும் ஒருசில இடங்கள் உள்ளன.

22 பாடல்களில் 'கடவுள் வாழ்த்து'ப் பொருளில் வந்தவை 14. ஏனைய எட்டுப்பாடல்களும் வையையைப்பற்றியன. இந்த எட்டிலும் அகப்பொருள் பற்றி எழுதப்பெற்ற பழைய கருத்துக்களும் உள்ளன.

முதலில் அமைந்த 11 பாடல்களின் (2-12) பண் பாலை யாழ்; அடுத்து வரும் ஐந்து பாடல்களின் பண் (13-17) நோதிறம். அதன் பின்னருள்ள நான்கு பாடல்களின் பண் (18-21) காந்தாரம். இவ்வகைப் பண் வரிசையில் பாடல்கள் அமைந்துள்ளமையை நோக்கினால், தேவாரப் பாடல்களைப்போல், பரிபாடலும் பண் முறை பற்றித் தொகுக்கப்பெற்று, பாடகர்களால் பாடப்பெற்று வந்தது என்று கருத இடமுண்டு.

'எழுதினர் பிழைப்பும் எழுத்துரு ஒக்கும்
பகுதியின் வந்த பாடகர் பிழைப்பும்'

எனவரும் உரைச் சிறப்புப் பாயிரப் பகுதியும் இவை பண்ணோடு பாடப் பெற்றமையை வலியுறுத்தும்.

இந்நூலுக்கு உரை வகுத்தவர் பரிமேலழகர்.

## 6. கலித்தொகை

எட்டுத்தொகை நூல்களுள் பாவின் பெயரைப் பெற்ற தொகை நூல்கள் பரிபாடலும் கலித்தொகையும். அகன் ஐந்திணையாகிய அகப்பொருட் செய்திகளைப் பாடுதற்கு உரிய தகுதி

வாய்ந்த பாவாக இவ் இரண்டையும் தொல்காப்பியர் குறித் துள்ளனர்.

> *நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்*
> *பாடல் சான்றபுலனெறி வழக்கம்*
> *கலியே பரிபாட்டு ஆயிரு பாங்கினும்*
> *உரியதாகும் என்மனார் புலவர்* *(அகம். 53)*

என்பது தொல்காப்பியரது வாக்கு. இச்சூத்திரத்தில் 'என்மனார் புலவர்' என்று குறிப்பதனால், ஆசிரியர் தொல்காப்பியர் காலத் திற்கு முன்னரே அகப்பொருள் இலக்கிய வழக்கில் பரிபாடலும் கலியும் முதன்மை பெற்று விளங்கின என்பது புலனாம்.

பா அமைப்பிலும் பரிபாடலும் கலியும் பெரிதும் ஒப்புமை உடையன. இவ் இரண்டையும் வெண்பா நடைத்து எனத் தொல் காப்பியர் கூறுவர். கொச்சகம், அராகம், சுரிதகம், எருத்து என்னும் உறுப்புகள் இவ் இரண்டு பாவிற்கும் பொதுமையானவை. மேலும், இவ் இரண்டையும் இசைப்பாட்டு எனவும் - உரை யாசிரியர் முதலியோர் குறித்துள்ளனர். இவ்வகை ஒப்புமை களால் இவற்றை வேறுபடுத்துக் கண்டு கொள்ளுதல் அத்துணை எளிதன்று. 'பரிபாடல் பரிந்து வருவது', அஃதாவது, கலியுறுப்புப் போலாது பல அடியும் ஏற்று வருவது (செய்யுள். 118) எனப் பேராசிரியர் கூறும் விளக்கம் இவ் இரண்டு பாடல்களின் வேற் றுமையை ஒருவாறு புலப்படுத்தும்.

சங்கத்தார் தொகுத்த கலிப்பாட்டு நூற்றைம்பது எனப் பேராசிரியரும் (செய்யு. 149, 153, 154, 155, 160), இறையனார் அகப்பொருள் உரையாசிரியரும் (சூ. 1) குறித்துள்ளனர். ஏனைய தொகை நூல்களிற் போலப் பாடல்களில் சிதைவும் குறைவும் இன்றி, கலி நூற்றைம்பதும் இப்பொழுதும் வழங்குவது தமிழ் மக்களின் தவப்பயன் எனலாம்.

நூற்றைம்பது பாடல்களுள் முதற்பாடல் கடவுள் வாழ்த்து. பின்னர், பாலை, குறிஞ்சி, மருதம், முல்லை, நெய்தல் என்ற

வரிசையில் ஐந்திணைக்களுக்கும் உரிய பாடல்கள் அமைந்துள்ளன. இவை முறையே 35,29,35,17,33, பாடல்களைக் கொண்டுள்ளன. இப்பகுதிகளை மருதக்கலி (செய்யு. 155), முல்லைக்கலி (செய்யு. 156) என வழங்கியதோடு மருதப்பாட்டு - (செய்யு. 160), முல்லைப்பாட்டு (செய்யு. 154, 155), குறிஞ்சிப்பாட்டு (செய்யு. 160) எனவும் பேராசிரியர் தமது உரையில் வழங்கியுள்ளனர்.

> 'பெருங் கடுங்கோன்பாலை; கபிலன் குறிஞ்சி;
> மருதன் இளநாகன் மருதம்; அருஞ் சோழன்
> நல்லுருத்திரன் முல்லை; நல்லந்துவன் நெய்தல்
> கல்வி வலார் கண்ட கலி

என வழங்கும் பாடல் ஐந்திணைப் பகுதிகளும் வெவ்வேறு ஆசிரியர்களால் பாடப்பெற்றவை எனக் கூறுகின்றது. இதனைத் தொகுத்தார் தொகுப்பித்தார் பற்றிய குறிப்பு **நூல்** இறுதியில் காணப் பெறவில்லை. உரையாசிரியராகிய நச்சினார்க்கினியர் குறிப்பிலிருந்து நெய்தற் பகுதியைச் செய்த நல்லந்துவனாரே கடவுள் வாழ்த்துப் பாடலையும் பாடி, இத்தொகையைத் தொகுத்தார் என்று கொள்ள இடந்தருகிறது.

கலித்தொகையை முதன்முதலாகப் பதிப்பித்த (1887) சி.வை. தாமோதரம் பிள்ளை அவர்கள் 'நல்லந்துவனார் கலித்தொகை' என்றே குறித்துள்ளார். பேராசிரியர் எஸ். வையாபுரிப் பிள்ளை அவர்களும் தாம் ஆங்கிலத்தில் எழுதிய தமிழ் இலக்கிய வரலாற்றில், நெய்தற் பகுதியின் ஆசிரியராகக் குறிக்கப்பெற்ற நல்லந்துவனாரே ஏனைய பகுதிகளுக்கும் ஆசிரியராயிருத்தல் கூடும் என்று எழுதியுள்ளனர். ஐவர் பாடியதாகக் கூறும் தனிப் பாடல் மிகப் பிற்பட்ட காலத்தது என்றும், நூலின் நடை, அமைப்பு, போக்கு முதலிய சில தனி இயல்புகளைக் கவனித்தாலும் இது ஒரே ஆசிரியர் இயற்றியதாகும் என்றே கொள்ளத் தக்கதாயுள்ளது என்றும் இவர் கருதுகின்றார். இங்ஙனம் மாறுபட்ட கருத்துகள் கலித்தொகை பற்றி நிலவுவதால், சி.வை. தாமோதரம் பிள்ளை அவர்கள் குறித்தபடி, கோத்தவர் பெயராலேயே, 'நல்லந்துவனார் கலித்தொகை' என்று குறிக்கலாம் எனத் தோன்றுகிறது.

ஒவ்வொரு பாடலின் கீழும் அவ்வப் பாடலுக்கு உரிய கூற்று விளக்கம் பற்றிய பழைய குறிப்பு உள்ளது. இக்குறிப்புகள் சில பாடல்களில் தொல்காப்பிய மேற்கோளுடன் மிக நீண்டும் செல்லுகின்றன. வேறுசில பாடல்களில் முன் பாடலுக்கு உரிய கூற்றே வந்தால், 'அதுவும் இது' என்று குறிக்கப்பட்டுள்ளது. இதனால் ஒவ்வொரு பாடலின் தொடக்கத்திலும், 'இன்னார் கூற்று' என்பது விளங்கச் சுருக்கமாகக் கூற்றுப் பற்றிய தலைப்பு இலக்கியச் செல்வம் பதிப்பில் கொடுக்கப்பட்டிருக்கிறது. மேலும், இப்பதிப்பில் தலைவன், தலைவி, தோழி, முதலி யோரது உரையாடலாக வரும் பாடல்களில் மட்டும் பேசுவோரது பெயர் விளங்கச் சிறு தலைப்புக்களும் அமைக்கப் பெற்றுள்ளன.

கலித்தொகை முழுமைக்கும் நச்சினார்க்கினியரின் சிறந்த உரை அமைந்துள்ளது.

'கற்றவர் மெச்சும் கலித்தொகையாம் இன்பக்
கற்பனை சேரும் களஞ்சியத்தை
முற்ற அளந்து தெரிவோமே - காதல்
மூழ்கும் துறை கண்டு வாழ்வோமே'

என்று இத்தொகை நூலைச் சிறப்பித்துப் பாடிய கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை அவர்கள், இதனை 'இன்பக் கற்பனை சேரும் களஞ்சியம்' எனக் குறித்த நலம் எண்ணி எண்ணி மகிழ்தற்குரியது.

## 7. அகநானூறு

அகம் புறம் என்னும் பொருட் பாகுபாடு பற்றித் தொகுக்கப்பெற்றவை அகநானூறும் புறநானூறும். இவ் இரண்டும் அகவற்பாக்களினால் இயன்றவை, நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, கலித்தொகை ஆகியவை அகப்பொருள் பற்றிய வையே. ஆயினும் எட்டுத்தொகை நூல்களுள் 'அகம்' என்னும் பெயரையே இத்தொகை நூல் பெற்றிருத்தல் இதன் சிறப்பு நோக்கி எழுந்தது போலும். இறையனார் அகப்பொருள் உரையாசிரியர் எட்டுத்தொகை நூல்களைக் கூறுமிடத்து, 'நெடுந்தொகை' நானூறு,

குறுந்தொகை நானூறு....' என இந்நூலை முதலாவதாக எடுத்து ஓதுதலும் நோக்கத்தக்கது.

அகவற்பாவில் அமைந்த ஏனைய நூல்களினும் இதன்கண் அமைந்த பாடல்கள் அடி அளவால் மிகவும் நீண்டவை. இப் பாடல்கள் 13 அடிச் சிறுமையும் 31 அடிப் பெருமையும் கொண்டவை. எனவே, இதனை 'நெடுந்தொகை' எனவும் வழங்குவர்.

'ஆய்ந்த கொள்கைத் தீம் தமிழ்ப்பாட்டு
நெடியவாகி அடி நிமிர்ந்து ஒழுகிய
இன்பப் பகுதி இன்பொருட் பாடல்
நானூறு எடுத்து நூல் நவில் புலவர்
.... .... .... ....
முன்னினர் தொகுத்த நல் நெடுந்தொகைக்கு'

எனவரும் நூல் இறுதியிலுள்ள பாயிரப் பாடலும், 'நெடுந்தொகை நானூறும் கருத்தினோடு முடிந்தன' எனவரும் நூல் இறுதிக் குறிப்பும், இப்பெயரையே சுட்டியுள்ளன. மேலும், அகம், அகப்பாட்டு என்னும் பெயர்களாலும் உரையாசிரியர் முதலி யோர் இத்தொகை நூலைக் குறித்துள்ளனர்.

கடவுள் வாழ்த்துச் செய்யுளைத் தவிர்த்து, 400 பாடல்கள் இதில் உள்ளன. இந்த நானூறு பாடல்களும் களிற்றியானை நிரை (1-120), மணிமிடை பவளம் (121-300), நித்திலக்கோவை (301-400) என மூன்று பெரும்பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. அன்றியும் இதன்கண் உள்ள பாடல்கள் தக்கதொரு நியமத்தை மேற்கொண்டு அமைந்துள்ளன. ஒற்றைப்படை எண்களை யுடைய பாடல்கள் (1,3,5,7,9,11 முதலியவை) பாலைத்திணை பற்றியனவாகும். 2,8,12,18 என்று இவ்வாறு இரண்டும் எட்டுமாக வரும் எண்கள் குறிஞ்சித்திணை பற்றிய பாடல்களாக உள்ளன. 4,14,24 என்று இவ்வாறுள்ள நான்காம் எண்கள் முல்லைத் திணைக்கு உரியன. 6,16,26,36 என்று இவ்வாறு ஆறாவது எண்ணாக உள்ளவை மருதத்திணை பற்றிய பாடல்களாகும். 10,20,30 என்று

இவ்வாறு வரும் பத்து பத்தான எண்கள் நெய்தல்திணைக்கு உரியன வாம். இவ்வகையான முறையில் ஐந்திணை அமைப்பு தொகை நூல்களில் இந்நூலுக்கு மட்டும் அமைந்திருத்தலும் - சிந்தித்தற் குரியது.

இத்தொகையைத் தொகுத்தவர் மதுரை உப்பூரிகுடிகிழார் மகனார் உருத்திரசன்மர். இதனைத் தொகுப்பித்தவர் பாண்டியன் உக்கிரப் பெருவழுதியார். இத்தொகை பாடிய புலவர்கள் நூற்று நாற்பத்தைவர். இம்மூன்று செய்திகளும் சில பழங் குறிப்பு களிலிருந்து நமக்குத் தெரியவருகின்றன. மூன்று பாடல்களின் (114, 117,165) ஆசிரியர் பெயர் காணப்பெறவில்லை. ஏனைய பாடல்களைப் பாடியவர்களின் தொகை 142.

இத்தொகை நூலின் முதல் தொண்ணூறு பாடல்களுக்குப் பழைய உரை உள்ளது. இது மிகச்சிறந்த உரையாகும். நூல் முழுமைக்கும் இவ் உரை கிடைக்காமற் போனது ஒருபெருங்குறையே. அகப்பொருள் நூலாயினும் இதில்வரும் வரலாற்றுக் குறிப்புகள் மிகப் பலவாகும்.

## 8. புறநானூறு

புறப்பொருள் பற்றிய நானூறு பாடல்களைக் கொண்ட தொகுதி ஆதலின், இது 'புறநானூறு' என்று பெயர்பெற்றது. புறம், புறப்பாட்டு, புறம்பு நானூறு, என்னும் பெயர்களாலும் இந்நூலை நச்சினார்க்கினியர் முதலியோர் குறித்துள்ளனர். இதில் அமைந் துள்ள அகவற்பாடல்களின் அடிச்சிறுமை பெருமை எல்லைகள் துணிய இயலாதபடி பாடல்கள் பலவும் சிதைந்துள்ளன. இதனைத் தொகுத்தார், தொகுப்பித்தார், பற்றிய செய்திகளும் அறியக் கூடவில்லை.

பண்டைத் தமிழகத்தின் அர்சியல் வரலாற்றையும், சமூக வரலாற்றையும், அறிவுறுத்தும் அரிய - கருவூலமாக இத்தொகை நூல் உள்ளது. பண்டைக் காலத்து வாழ்ந்த பேரரசர்களையும், சிற்றரசர்களையும், வீரர்களையும், வீரவழிபாட்டு முறைகளையும்,

பல சமூகப் பழக்க வழக்கங்களையும், எடுத்தியம்பும் நோக்குடைய பாடல்களை இத்தொகுதி ஒன்றில்தான் நாம் பரக்கக் காண இயலும். இந்நூற் பாடல்கள் தோன்றிய காலம் 'தமிழகத்தின் வீரயுகம்' என்று சிறப்பித்துச் சொல்லத்தக்க பொற்காலமாகும்.

இந்நூலில் கடவுள் வாழ்த்து உட்பட 400 - பாடல்கள் உள்ளன. நூற்றைம்பது கலியுள் கடவுள் வாழ்த்தும் உட்பட்டிருத்தல் போல, புறப்பொருள் பற்றிய இத்தொகை நூலில் கடவுள் வாழ்த்தும் நூலின் அங்கமாய் அடங்கியுள்ளது. ஆராய்ச்சியாளரில் ஒரு சிலர் கடவுள் வாழ்த்தைத் தவிர்த்து 400 பாடல்கள் இருந்திருத்தல் கூடும் என்று கருதுகின்றனர். இவற்றுள் 267,268ஆம் பாடல்கள் முற்றும் மறைந்து போயின. இப்பாடல்களுக்கு உரிய பழைய உரை கூடப் பிரதிகளில் காணப்பெறவில்லை. 266ஆம் பாடலுக்கு மேற்பட்டுள்ள பிற்பகுதிப் பாடல்கள் பலவற்றின் அடி, சீர், முதலியனவும், பாடல்களின் பிற் குறிப்புகளில் பெரும் பாலனவும், சிதைவுபட்டுள்ளன. இந்தச் சிதைந்த பகுதிகள் புள்ளி நிரை இட்டுப் பதிப்புகளில் காட்டப் பெற்றுள்ளன. இத்தொகை பாடிய புலவர் நூற்று ஐம்பத்து அறுவர் ஆவர்.

இதன்கண் அந்த செய்யுட்கள் ஏதோ ஒரு வகை இயைபு கருதி முறைப்படுத்தப்பட்டிருக்க வேண்டும் என்று ஊகிக்கும் வகையில் சில இயல்புகள் அங்கங்கே தென்படுகின்றன. எனினும், திட்டவட்டமாகக் கூற இயலவில்லை. முதலில் முடிமன்னர் மூவரைப் பற்றிய பாடல்களும், அதன் பின்னர், குறுநில மன்னர், வேளிர், முதலிய சிறப்புடை மக்களைப் பற்றிய பாடல்களும், போர்ப் பாடல்களும், கையறுநிலை, நடுகல், மகளிர் தீப்பாய்தல், முதலிய போர் நிகழ்ச்சியுடன் இயைபுடைய பாடல்களும் அமைந்துள்ளன. மூவேந்தரைப் பற்றிய பாடல்களில் சேரர், பாண்டியர், சோழர் என்ற வரிசை முறை மாறி மாறி முதற் பதினெட்டுப் பாடல்களில் உள்ளன. பின்னரும், சிறிது இடையிட்டு இவ்வகையானதொரு முறை வைப்பு உள்ளமையும் சிந்தித்ததற்கு உரியது. அரசர்க்கும் பிறர்க்கும் அறநிலையை எடுத்து உரைக்கும் பாடல்களும், பாணாற்றுப்படை, விறலியாற்றுப்படை, புலவராற்றுப் படை, முதலிய ஆற்றுப்படைச் செய்யுட்களும் இடையிடையே உள்ளன. பெரும்பாலான இடங்களில் திணை, துறை, முதலிய

அமைப்பில் செய்யுட்களிடையே தொடர்பு காணப்படுகிறது. இந்நூற் பிரதி ஒன்றின் தொடக்கத்தில் 'அறநிலை', 'பொருள் நிலை', 'இன்பநிலை' என முப்பெரும் பகுதியுடையதாக ஊகிக்க லாம் என டாக்டர் உ.வே. சாமிநாதையர் குறித்துள்ளார்.

ஒவ்வொரு பாட்டின் இறுதியிலும், திணை, துறை, பற்றிய குறிப்புகளும், பாடப்பட்டோர், பாடினோர், பாடப்பெற்ற சூழ் நிலை இவற்றை விளக்கும் குறிப்புகளும் உள்ளன. இவற்றுள் திணை, துறை பற்றிய குறிப்புகள் அவ்வப் பாட்டிற்குப் பொருத்த மாக அமைந்தனவல்ல என்று நச்சினார்க்கினியர் கருதுகிறார் (தொல். பொருள். புறத். 35). அன்றியும், புறத்திணை இயல் உரையில், இப்புறநானூற்றுப் பாட்டுகள் சிலவற்றை வேறு திணை துறைகளுக்கு உதாரணமாகக் காட்டியதோடு புறநானூற்றுக் குறிப்பை மறுத்தும் உள்ளனர் (சூ. 5,8,21 உரை). ஆனால், பாடினோர் முதலாயினாரைப் பற்றிய குறிப்புக்கள் மறுக்கப் படாமையால், அவை பண்டை வரலாற்றைத் தெரிந்து எழுதிய சிறந்த குறிப்புக்களாகவே கருதத்தக்கன.

இந்நூலின் முதல் 266 பாடல்களுக்கு உரிய பழைய உரை கிடைத்துள்ளது. இவ் உரையாசிரியர் சில பாடல்களுக்கு எழுதி யுள்ள விசேட உரைக் குறிப்புக்களிலிருந்து, இவ் உரைக்கும் முந்திய உரை ஒன்று இந்நூலுக்கு இருக்க வேண்டும் என்று தெரிய வருகிறது. ஆனால், அந்த மிகப் பழைய உரை நமக்குக் கிடைக்க வில்லை. இந்த உரையாசிரியர்களைப் பற்றிய செய்திகளும் தெரியக்கூடவில்லை.

## தொல்காப்பியம்

பாட்டு தொகைகளுக்கு உரிய இலக்கண நூல் அகத்தியமும் தொல்காப்பியமும் என்கிறார் இறையனார் அகப்பொருள் உரையாசிரியர். நச்சினார்க்கினியர் கருத்தும் இதுவேயாகும். தொல்காப்பியப் புறத்திணை இயல் உரையில் (35),

> 'தத்தம் புதுநூல் வழிகளால் புறநானூற்றிற்குத் துறை
> கூறினாரேனும், அகத்தியமும் தொல்காப்பியமுமே

தொகை நூல் களுக்கு நூலாகலின், அவர்
சூத்திரப் பொருளாகத்
துறை கூறவேண்டும் என்று உணர்க''

என்று கூறியுள்ளார்.

கலித்தொகைப் பாடல்களுக்குக் கூற்று விளக்கம் அமைத்த தொகுப்பாசிரியர் தொல்காப்பிய மேற்கோள்கள் காட்டித் துறை விளக்கம் தந்திருக்கின்றார். எனவே, சங்கப் பாடல்களின் இலக்கிய மரபை உணர்ந்து கொள்ளத் தொல்காப்பியம் சிறந்த கருவி நூலாம் என்பது பெறப்படும்.

கூறிய குன்றினும் முதல்நூல் கூட்டித்
தாம் இன்று உணர்தல் தொல்காப்பியன்தன்
ஆணையின் தமிழ் அறிந்தோர்க்குக் கடனே

எனத் தொல்காப்பியரின் தலைமைச் சிறப்பைப் பழங்காலப் புலவர் ஒருவர் பாராட்டுகின்றார். பிற்காலப் புலவராகிய சுவாமி நாத தேசிகர், தமது இலக்கணக் கொத்தில்,

பல்கால் பழகினும் தெரியா உளவேல்
தொல்காப்பியம், திருவள்ளுவர், கோவையார்
மூன்றினும் முழங்கும்

எனத் தமிழ் அறிவார்க்கு முதல் நூலாகத் தொல்காப்பியத்தைக் குறிப்பிடுகின்றார். நன்னூல், சின்னூல் முதலியனவும், ஐந்து இலக்கணமும் அடக்கிச் சுருங்க உரைக்கும் இயல்பால் 'குட்டித் தொல்காப்பியம்' எனப் பாராட்டப்பெறும் இலக்கண விளக்கம் போன்ற பிறநூல்களும், இவ்வளவு தெளிவுபடக் கூறியவை என்று எண்ணுதற்கு இல்லை. காலத்துக்கு இயைய ஒருசில புதுமை வழக்குகளைப் பின்னூல்கள் மேற்கொண்டிருக்கின்ற வகையில் அவற்றிற்கும் சிறப்பு உண்டு. தொல்காப்பியர் அமைத்துள்ள அதிகார, இயல் பாகுபாடுகளும், அவற்றின் பெயர், அமைப்பு, அவற்றுள் பொருள் அடைவு, நூற்பா அடைவு முதலியனவும் சிறந்த கட்டுக்கோப்பு உடையன:

# சங்கத் தமிழ்

பாட்டு தொகை நூல்களையும் அவற்றின் சொற்பொருள் மரபுகளை உணர்த்தும் கருவி நூலாகிய தொல்காப்பியத்தையும் சங்கத்தமிழ் என்று கொள்ளலாம். சங்கத் தமிழ் என்பது புலவர் களால் மதிக்கப்பட்ட நல்ல தமிழ். இதனைச் செந்தமிழ் நடைக்கு ஒரு பெயராகவும் கொள்வர். கோதையார் தாம் பாடிய திருப் பாவைப் பாசுரங்களைச் 'சங்கத் தமிழ்மாலை' (திருப். 30) என்கிறாள். சங்க காலத்துப் பாட்டு மரபுள் தொல்காப்பியர் முதலாவதாகக் கொண்டு கூறிய 'துயிலெடை' நிலையின் மரபை ஒட்டி அமைந்த பாடலே ஆண்டாள் திருப்பாவை.

சங்க இலக்கியங்களிலே பொதிந்துள்ள பொருள்கள் காதலும், போர் முதலிய புறநிகழ்ச்சிகளுமாம். காதல் வாழ்வை 'அகம்' என்பதும் 'போர்' முதலிய புறநிகழ்ச்சிகளைப் புறம் என் பதும் தமிழ் வழக்கு. சமுதாய வாழ்வின் ஒரு பகுதியான இல் வாழ்க்கையின் இயல்புகளைச் சித்திரிக்கும் பாடல்களே அகப் பாடல்கள். சமுதாய ஒழுக்கங்களும் முயற்சிகளும் சிதைவுறாமல் இருப்பதற்கு நாட்டில் அமைதி தேவை. அக்காலச் சூழ்நிலையில் பகைவரிடமிருந்து நாடு காக்கும் பொறுப்பு மாந்தர் கடமைகளில் ஒன்றாகப் போற்றப்பட்டது. மகனைப் பெற்றுத் தருதல் தனது கடன் என்றும், வாட்போரில் குதித்து யானைகளை எறிந்து வெற்றியோடு மீள்தல் தன் மகனுக்குரிய கடன் என்றும் புற நானூற்றுப் பாடல் கூறுகிறது (312). தலைவன் பிரிவுகளுள் வேந்து வினைக்காகப் பிரியும் பிரிவும் ஒன்று. வேந்து வினையாவது அரசர்க்காகப் போரில் சென்று பணி புரிதலாம். ஆகவே, சமு தாயத்தையும், அரசையும், நாட்டையும் காக்க, எப்பொழுதும் மக்களைப் போருக்கு ஆயத்தமாக வைத்திருக்க வேண்டிய இன்றி யமையாமை அந்நாளில் ஏற்பட்டது. வீர வாழ்க்கையை மக்கள் பெரிதும் விரும்பி, விழுப்புண்படுதலைப் பெரும் பேறாகக் கருதினார்கள். ஆகவே, அகம், புறம் என்னும் பொருள் பற்றிய பாடல்கள் பல எழுந்தன.

தொகை நூல்கள் எட்டில் ஐந்து நூல்கள் காதலைப் பற்றியனவே. இவற்றில் 1850 செய்யுட்கள் உள. பத்துப் பாட்டிலும், மூன்று நெடிய பாட்டுக்கள் (முல்லைப்பாட்டு, குறிஞ்சிப்பாட்டு, நெடுநல்வாடை) காதல் பற்றியனவாம். புறப்பொருள் பற்றிய நூல்கள் பதிற்றுப்பத்து, புறநானூறு என்னும் இரண்டுமாம். இவற்றில் அடங்கிய செய்யுட்கள் 500. பரிபாடல் என்ற நூலில் தெய்வங்கள், வையை, மதுரை என்னும் பொருள் பற்றிய பாடல்கள் உள. இந்நூலிலும் காதல் பற்றிய பகுதிகள் பல உள. இங்ஙனமே, அகம் பற்றிய நூல்களிலும், அரசர்கள், மக்கள், நாடுநகரங்கள், பிற இயற்கைப் பொருள்கள் பற்றிய புறச் செய்திகளும் கலந்து வருகின்றன.

சங்க காலக் கவிஞர்கள் இயற்கையில் ஈடுபட்டு, அவற்றுள் பொதிந்துள்ள உண்மைகளை நன்கு சித்திரிக்கின்றனர். மிகைபடக் கூறலான பகுதிகள் மிகமிகக் குறைவு. அவர்கள் பாடுதற்குத் தேர்ந்து கொண்ட தமிழ் அவர்கள் கருத்துக்களைத் தெளிவுற விளக்குகின்றன. அழகும் உணர்ச்சியும் ததும்பும் கருத்தொடு பிணைந்து செல்லும் சொற்களையும் தொடர்களையுமே எடுத்தாளுகின்றனர். மக்களின் வாழ்க்கை நிகழ்ச்சிகளையும், சமுதாயப் பழக்க வழக்கங்களையும், அரசியல், வாணிகம் முதலிய துறைகளின் இயல்புகளையும், அந்நாளில் வாழ்ந்த தலைமக்களையும் சான்றோர்களையும் பற்றிய பற்பல உண்மை நிகழ்ச்சிகளையும் தத்தம் பாடல்களில் பொதிந்து வைத்துள்ளனர். பறவை, விலங்கு, தாவரம், குன்று, மலை, யாறு, இருசுடர் இயற்கைத் தோற்றங்கள் போன்றவற்றையும் இவர்கள் கூர்ந்து உணர்ந்து ஏற்ற இடங்களில் உவமை வாயிலாகவும் பல சூழ்நிலைகளைச் சித்திரிக்கும் வாயிலாகவும் பொதிந்து வைத்துள்ளனர். இவற்றால் பண்டை மக்களின் நிலவியலறிவு, பூதபௌதிகம் பொருள்களைப் பற்றிய சிந்தனை, இயற்கைப் பொருளின் இயல்புகளைக் கூர்ந்து அறிதல் போன்ற அறிவியல் வளர்ச்சிகளையும் காண்கின்றோம். வீரமறவரின் பெயரையும் பெருமையையும் போற்றிக் கல்லில் அவர்தம் செயலைப் பொறித்து வைத்த மரபினால் சிறந்த நினைவுகளைப் போற்றிக் காக்கும் பண்பும்

புலப்படும். பண்டை நாளில் சாசனச் சான்றுகள் இல்லாக் குறையைப் போக்கும் வகையில் இந்த இலக்கியப் பாடல்கள் சிறந்த பிரமாணங்களாக நமக்கு உள்ளன. எனவே; பண்டைத் தமிழக வரலாற்றுக்குப் பெரிதும் துணைபுரியும் சங்கப் பாடல்களைத் தமிழ் நாகரிகத்தின் நினைவுச் சின்னங்கள் என்று கொள்ளலாம்.

தமிழில் பண்டைநாளிலே தொகை நூல்கள் தோன்றியமைபோலக் கிரேக்க மொழியிலும் மிகப்பழங்காலத்தில் 'அந்தாலஜி' என்று கூறப்படும் தொகை நூல்கள் தொகுக்கப் பட்டனவாம். கிரேக்கத் தொகை நூலின் வரலாற்றிலும் தமிழிற் போலவே புறப்பாடல்களும் அகப்பாடல்களுமாகவே பாடல்கள் அமைந்துள்ளன என்பர். சுருங்கச்சொல்லல், பொருள் ஆழம், நவின்றோர்க்கு இனிய மொழிகளால் கூறல், பொருளின் ஒருமைப்பாடு இவற்றால் கிரேக்கத் தொகைநூல்கள் சங்கத் தொகை நூல்களோடு ஒப்பிடத் தகுந்தனவாம். இரண்டிலும் பழைய நாகரிகங்களும் பழைய ஒழுக்கங்களும் பொதிந்து மிளிர்கின்றன என்பர். கிரேக்கத் தொகை நூலின் வரலாற்றைக் குறித்து 'ரிச்செர்ட் கார்நெட்' என்ற ஆசிரியர் ஆங்கிலக் கலைக்களஞ்சியத்தில் எழுதியுள்ள கட்டுரையால், அவ்வியல்புகளோடு கூடிய தமிழ்த் தொகை நூல்களின் பழமையும் சிறப்பும் உணரத்தக்கனவாகும்.*

---

* இலக்கியச் சிந்தனை: எஸ். வையாபுரிப்பிள்ளை, பக். 81-82.

# குடி

## ஐவகை நிலத்து வாழும் மாந்தர்

### குறிஞ்சிநில மக்கள்

ஐவகை நிலத்து வாழும் மக்களுடைய வாழ்க்கையைப் பொது வகையாக நோக்குவோம். குறிஞ்சி நில மக்கள் 'கானவர்' (முருகு. 194; குறிஞ்சி. 225; நற். 75) குறவர் (குறு. 339; அக. 78:1) குன்றவர் (பரி. 9 : 67) என்று அழைக்கப்படுவர். இவர்கள் மலைப் பகுதிகளில் வாழ்ந்த வீரப்பெருமக்களாவர். மலை வாழ்க்கைக் கேற்ற திண்ணிய உடல் வலிமையும் வாய்ந்தவர்கள். இவர் மறம் பூண் வாழ்க்கையர் என்றும் (பெரும். 134-136) வாட்குடிகள் (பெரும். 137) என்றும் குறிக்கப்படுகின்றனர். சிலம்படைந்திருந்த பாக்கம் (மலைபடு. 162), குறவர் பாக்கம் (குறுந். 319) சிறுகுடி (முருகு. 196; நற். 82). இவர்களுடைய வீடுகள் சிறிய குடிசைகளாய் இருந்தன. கால்களை நட்டு, அவற்றின் மேல் புற்களால் வேய்ந் திருப்பர் (நற். 285; ஐங் 252) இவர்களுடைய குடிசைகளின் முன் புள்ள முற்றங்களிலே வேங்கை முதலிய காட்டுமரங்கள் வளர்ந் தோங்கிக் காட்சி நல்கும் (நற். 276). இம்மலை வாழ் மக்களின் குடிசைகள் சேர்ந்திருக்கும் பகுதியைச் சிறுகுடி (முருகு. 196; நற். 82) என்றும் பாக்கம் (மலைபடு. 162; குறுந். 339) என்றும் வழங்குவர்..

### குறவர் தொழில்

கான் உறை வாழ்க்கையராகிய(புறம். 33 : 1) இம்மக்கள், காட்டில் வாழும் விலங்குகளோடு போரிட்டு வெல்லும் வில்லாற்றல் உடையராய் வாழ்க்கை நடத்தும் நிலையினர். விற்பயிற்சி பெறுதலினாலே இவர்கள் தோள் வலிமை வாய்ந்திருந்தனர். இதனால் இவர்கள் 'சிலை நவில் எறுழ்த் தோள் (பெரும். 145) உடையவர் என்றும், 'வன்கைக் கானவன்' (நற். 285) கொடுவிற் கானவர் (நற். 750 என்றும், கொடுந்தொழில் வில்வில் கொலைஇய கானவர் (முருகு. 194) என்றும், சிறப்பிக்கப்

படுகின்றனர். வேட்டையாடுதல் இவர்களுடைய முக்கிய தொழில். வில்லும் அம்பும் இவர்தம் ஆயுதங்கள். வேட்டைக்கு உதவியாக நாயும் உடன் கொண்டு செல்வர் (நற். 282; 285). இந்நாய்களும் மிருகங்களைக் கொன்று இவர்தம் வேட்டைக்கு உதவுகின்றன. பகைமன்னருடைய பசுக்களைக் கவர்ந்து வருதலும் உண்டு. (பெரும். 138-142). இவர்கள் உழுதொழிலும் செய்வர். அகில், சந்தனம் முதலிய மரங்களை அழித்து நிலத்தைத் திருத்தித் தினை பயிரிடுவர் (நற். 282; 209). தினையுடன் அவரை முதலியனவும் பயிரிடுவது உண்டு. தினை அறுத்தபின் அவரைகள் பூத்துப் பயன் தருகின்றனவாம். (குறுந். 82). தினைக்கதிர் முற்றும் பருவத்து அதனைக் கவர வரும் கிளி முதலிய பறவைகளைக் குறவர் மகளிர் பரண்மேலிருந்து கவண் எறிந்து ஓட்டிக் காவல் புரிவர். இரவில் யானைகள் வந்து புனத்தை அழித்து விடாதபடி பரணிலிருந்து குறவர் காவல் புரிவர். இரவில் தீக்கொள்ளிகளை எறிந்து இவர்கள் யானைகளை ஓட்டுவர். (நற். 393) பலர்கூடி அம்பு எய்து, கிணைப்பறை முழக்கி, கவண் எறிந்து அவற்றை ஓட்டுதலும் உண்டு.

*துணையின் தீர்ந்த கருங்கண் யானை*
*அணையக் கண்ட அம்குடிக் குறவர்*
*கணையர் கிணையர் கைபுனை கவணர்*
*விளியர் புறக்குடி ஆர்க்கும் நாட (நற். 108)*

எனவரும் இப்பகுதி குறவர்கள் யானையை ஓட்டிய வகையைத் தெரிவிக்கிறது. மலையிடத்துள்ள தேன் அடைகளை எடுத்து வந்து தேன் சேகரித்தலும் செய்வர் (அக. 78:7; 322-12) ஒருசில கிழங்குகளையும் தோண்டி எடுத்துப் பயன்படுத்துவர். இனிய பல பழங்களையும் உண்பர் (மலை. 292).

## உணவு

எனவே இவர்தம் உணவு மிருகங்களின் தசையும், தினை முதலிய மலைத் தானியங்களும், கிழங்கு, பழம், தேன் முதலியனவும் ஆகும். கள்ளும் சமைத்துப் பருகுவர். அவர்தம் இல்லத்

தில் சமைக்கும் ஒருவகைக் கள்ளிற்குத் 'தோப்பி' என்பது பெயர் (பெரும். 142). மதுவை மூங்கிற் குழாய்களில் இட்டு வைத்து அவை விளைந்து பக்குவம் வந்தபின் பருகும் பழக்கமும் உண்டு. (முருகு. 95; நற். 276) மான் முதலிய மிருகங்களின் தசையோடு முள்ளம் பன்றியின் தசையும் இவர்கள் மிக விரும்பும் உணவுப் பொரு ளாகும் (நற். 285; அக. 202:1-4; புறம். 177:17-20) தம் பால் வரும் விருந்தினர்க்கு முள்ளம்பன்றித் தசையுடன் சோறு அளிப்பர் என்றும் ஒரு புறப்பாட்டு குறிப்பிடுகிறது (புற. 177:13-16).

மலையில் கிடைக்கும் மான்தசை, யானைக்கோடு, அகில், சந்தனம் முதலியவற்றை இவர்கள் நாட்டில் வாழ்வார்க்கு விற்று, நெல் பெற்றுச் செல்லுதல் இவர்தம் வாணிக வாழ்க்கையாகும் (புற. 33:1-7).

## விருந்தோம்பல்

தம்பால் வரும் விருந்தினரை உபசரிப்பதோடு மலையில் யாரேனும் வழி தவறித் திகைத்து நிற்பாராயின், அவர்களுக்கு வழிகாட்டியும் இவர்கள் உதவுவர் (மலைபடு. 278-280).

## சிறுவர் சிறுமியர்

குறவர் சிறுவரும் தம் குலத்தொழிலில் பழகுவராம். 'குலவிச்சைகல்லாமல் பாகம்படும்' என்பது பழமொழியல்லவா? இவர்கள் விளையாட்டாக வளாரினால் விற்போல செய்து உடை முள்ளை ஊகங்கோலிற் கோத்து அம்பாக வைத்து, ஊர்ப்பக்கத்தி லுள்ள பருத்திக்காட்டு வேலிகளில் எலிகளை எய்கின்றனராம் (புறம். 324:1-8). குறச் சிறுமியர்கள் தம் கூந்தலில் வேங்கை மலரைப் பறித்துச் சூடுவர் (குறு. 208). சுனைகளிலும் அருவி களிலும் நீராடி மகிழ்வர்.

## கடவுள் வழிபாடு

குறவரும் குறவர் மகளிரும் மலைக்கடவுளை வாழ்த்தி வணங்குவர் (அக. 13;4). இக்கடவுளை வேங்கை மலராற் பூசிப்பர்.

இனிய பலிகளும் இடுவர். தம் குடும்பத்தாரோடு கூடி வாழ்த்துக் கூறுவர்.

*குன்றக் குறவன் காதல் மடமகள்*
*மன்ற வேங்கை மலர் சில கொண்டு*
*மலை உறை கடவுள் குல முதல் வாழ்த்தி*
*தேம் பலிச் செய்த ஈர் நறுங் கையள்* (ஐங். 259)

என வரும் ஐங்குறு நூற்றுப்பாடல் ஒரு குறமகள் செய்த கடவுள் வழிபாட்டைத் தெரிவிக்கிறது. முருகனே இவர் வாழும் நிலத்துப் பெருந்தெய்வம். 'முருகப்பெருமான் பொருட்டு வெறியாட்டு' என்னும் முருக பூசையும் செய்து (முருகு. 227-244) குரவைக் கூத்து ஆடி, வழிபாடு செய்வர் (முருகு. 197; நற். 276) வெறியாடும்போது இவர் முழக்கும் பறை 'முருகியம்' எனப்படும். (முருகு. 243) மடி வாய்த் தண்ணுமையும் (பெரும். 144); தொண்டகச் சிறுபறையும் (முருகு. 197) இவர்கள் முழக்குதல் உண்டு. 'கோடு' என்னும் ஊது கொம்புகளினால் முழக்கம் எழுப்புதலும் செய்வர்.

'மலைபடுகடாம்' என்னும் கூத்தராற்றுப்படை மலையில் எழும் பல்வேறு ஓசைகளைத் தொகுத்துத் தருகின்றது. இப்பகுதியில் பெருங்கௌசிகனார் தரும் செய்திகள் மலைவாழ் மக்களின் வாழ்க்கை நிகழ்ச்சிகள் பலவற்றை உணர்த்துதலினாலே இப்பகுதியை நோக்கி மேலே செல்லுவோம்.

முசுக்கலை என்னும் குரங்குகள் பெரிய பலாப்பழங்களைத் தோண்டி உண்கின்றன. இவை தோண்டியதனால் அப்பழங்களிலிருந்து வழிந்த தேன் மலையிடங்களில் சிந்தி மணம் வீசுகின்றன. அம்மலையிலே அருவியாடுதற்கு வந்த தேவமகளிர் தம் கையால் நீரைக் குடைந்து குடைந்து நீராடுகின்றனர். அவர்கள் நீராடுதலால் எழும் ஓசை வாச்சியங்களின் ஒலி போல உள்ளது.

மலையின் மேல் பரண்களில் இருந்து தினைப்புனம் காக்கும் கானவர் தமது புனத்தை உண்ணவரும் யானையைப் பிடிப்பதற்காக ஆரவாரம் செய்து அதனை வளைக்கின்றனர்.

குகைகளில் குடியிருக்கும் முள்ளம் பன்றி தனது கூரிய முள்ளால் கானவரைத் தாக்குகின்றது. அத்தாக்குதலுக்கு உள்ளான சில குறவரின் அழுகை ஒலி ஒருபால் கேட்கிறது.

இன்னும் சில குறவர் வேட்டையில் புலி தம் மார்பில் தாக்கப் புண்பட்டு வருகின்றனர். அவர்தம் புண்ணுக்குக் காப்பாக வேண்டி குறவர் மகளிர் பாடுகின்ற பாட்டொலி மற்றொரு புறம். முதலிற் பூத்த வேங்கைப் பூவைப் பறித்துச் சூடுதற்குச் சென்ற குறமகளிர் அதனைப் பறிப்பதற்காகப் 'புலி புலி' என்று ஒலி எழுப்புகின்றனர். இவ்வாறு இவர்கள் கூவும்போது வேங்கை, அவர்கள் மலர் பறித்துக்கொள்ளும் வகையில் வளைந்து கொடுக்குமாம். சூலுற்ற பெண்யானைக்கு ஆண்யானை உணவு தேடிக் கொடுத்துவர, அப்பொழுது மறைந்திருந்த புலி அதன்மேல் பாய்ந்து விடுகிறது. அப்பொழுது அந்தப் பெண்யானை தன் இனத்தோடு பிளிறி ஓலமிடுகின்றது.

தன் குட்டியைத் தழுவிக்கொள்ள பெண்குரங்கு மறந்து விடவும் அந்தக் குட்டி தவறிக் குகையிடத்தே விழுந்துவிடுகிறது. அந்தக் குட்டிக்காக அது குரங்குக் கூட்டத்தோடு வந்து நீண்ட ஆரவாரம் செய்கிறதாம். சில ஆண் குரங்குகள் மூங்கிலின் கணுக்களாகிய கண்ணேணி வழியாக மேலே ஏறிச் சென்று மலைப் பக்கங்களில் தேனீ திரட்டி வைத்துள்ள தேனை உண்டு ஆரவாரம் செய்கின்றன.

பகைவருடைய சிற்றரண்களை வென்று வந்த கானவர்கள் மகிழ்ச்சியில் ஆரவாரம் செய்து வெற்றி விழாக் கொண்டாடுகின்றனர். குறவர்தம் பெண்டிருடன் கூடிக் கள்ளுண்டு மான்தோல் போர்த்த சிறு பறை ஒலிக்க குரவைக் கூத்தாடுகின்றனர்.

தேரோடி வரும் ஒலிபோல மலைக்குகைகளிலே அருவி நீர் கல்லென ஒலித்துக் கொண்டிருக்கின்றது. காட்டாறுகளின் பெரிய சுழிகளில் தவறி விழுந்து அகப்பட்ட யானையைப் பிடித்து அதன் சினத்தைப் போக்கி, அதனைப் பாகர்கள் பழக்குகின்ற ஒலியும் அங்கு உண்டு.

தினைப்புனங்களில் எல்லாம் காவல் காக்கும் மகளிர் மூங்கிலிலான தட்டை என்னும் கருவியை ஒலிக்கச் செய்து கிளி களை ஓட்டுகின்றனர்.

ஆய்ருடைய நிரை இனத்திலிருந்து பிரிந்து வந்த எருதும், மலையிலுள்ள மரையா என்னும் காட்டெருதும் ஒன்றுடன் ஒன்று முட்டிப் போர்புரிகின்றனவாம். இதனைக் கண்ணுறும் முல்லை நிலக் கோவலரும் குறிஞ்சிநிலக் குறவர்களும் அவற்றின் போர் வெற்றி கண்டு ஆரவாரம் செய்கின்றனராம்.

பலாப்பழத்தில் தின்றது போக எஞ்சிய பழங்களைக் குவித்து அவற்றின் கொட்டைகளைப் பெறும்பொருட்டு அவற்றின் மேல் கன்றுகளை ஓட்டும் சிறுவர்கள் ஆரவாரம் ஒருபால். கரும்பிலிருந்து சாறு எடுக்கும் ஓசையும் அங்குக் கேட்கிறது. தினையைக் குற்றுகின்ற மகளிர் வள்ளைப் பாட்டுப் பாடுகின்றனர்.

சேம்பு, மஞ்சள் ஆகியவற்றைப் பன்றிகள் அகழ்ந்து விடாமல் அவற்றைக் காப்போர் பறை கொட்டுகின்றனர். இப்படி யாகப் பல்வேறு ஒலிகள் நன்னனுடைய மலையிடத்தே கேட்கக் கூடும் என்கிறார் கவிஞர். இப்பெருங் குன்றூர் கௌசிகனாரின் மலை ஓசை வருணனைகளைக் கொண்டு மலையுறை மாக்களின் சில வாழ்க்கைக் கூறுகளையும் பழக்க வழக்கங்களையும் நாம் காண்கிறோம் (மலைபடு. 292-348).

## முல்லை நிலத்து வாழ்நர்

### வன்புலம்-மென்புலம்

குறிஞ்சி நிலத்தைப் போலவே இம்முல்லை நிலமும் 'வன்புலம்' (பெரும்பாண். 206) என்று வழங்கப்பட்டது. மரஞ்செடி கொடிகள் அடர்ந்து நீர் தங்காது வழிந்தோடும் உயரிய மலை களையும் குன்றுகளையும் கரடுமுரடான மேட்டு நிலங்களையும் உடைய நிலப்பகுதியாதலின் இவற்றை 'வன்புலம்' என்று வழங்க

லாயினர். இதற்கு மாறாக நீர் நில வளமுடைய மருதத்தையும் நெய்தற் பகுதியையும் 'மென்புலம்' என்றனர்.

'வன்புலக் கேளிர்க்கு வருவிருந்து அயரும்
மென்புல வைப்பின் நல்நாட்டுப் பொருந'
(புறம். 42:17-18)

எனவரும் புறநானூற்றடிகள் நால்நிலமும் 'வன்புலம்', 'மென் புலம்' என் இருபெரும் பகுதியவாய் அமைந்துள்ளமையை விளக்குகின்றன.

## முல்லைநில மக்கள்

முல்லைப்பகுதி மேய்ச்சல் நிலங்களைக் கொண்டிருந் தமையால் ஆடுமாடு வளர்த்தலை முக்கிய தொழிலாகக் கொண்ட மக்கள் இப்பகுதியில் வாழ்ந்தனர். இவர்களைக் கோவலர், ஆயர், அண்டர், இடையர் என்னும் பெயர்களால் அழைப்பர். இவர்கள் வாழ்ந்த இடங்கள் சிறுசிறு ஊர்களாக இருந்தன. முல்லை நிலத்து ஊர்களைக் 'கோவலர் பெருந்தண் நிலைய பாக்கம்' (ஐங். 439) என ஐங்குறு நூற்றுப் பாடல் ஒன்று குறிப்பிடுகிறது.

இவர்கள் வாழ்ந்த குடிசைகள் குறுகிய கால்களை யுடையனவாயிருந்தன. அந்தக் கால்களில் ஆட்டுமறிகள் தின்னுவ தற்குரிய தழைகளைக் கட்டிவைத்திருப்பர். அதன் வாயில் சிறு தூறுகளைக் கொண்டு அமைக்கப்பட்டிருக்கும். கழிகளினால் கட்டப்பெற்ற கதவுகளையே அக்குடிசைகள் பெற்றிருந்தன. வரகுத்தாள்களினாலான இருக்கையும் ஆட்டுக்கடாயின் தோலா லாகிய படுக்கையும் அமைத்திருந்தனர். அக்குடிசை வீடுகளின் முற்றங்கள் மாடுகளைக் கட்டி வைப்பதற்குரிய தாம்புகள் கட்டப் பெற்ற சிறிய முளைகளைக் கொண்டிருந்தன. வெள்ளாடும் செம்மறியாடும் அடைவதற்குரியனவாகக் கட்டுமுள்ளாலாகிய வேலி சூழ்ந்த கிடைகளும் அங்கு உண்டு. ஆடுமாடுகளின் மிகுதி யினால் அங்கங்கே எருக்களும் கும்பல் கும்பலாகக் கிடந்தன. (பெரும்பாண். 149-155). இவர்தம் குடிசை அடுத்துள்ள பந்தர்

களிலே குமிழம்பழத்தை உண்டு, வெள்ளாடு போட்ட வெள்ளிய குமிழ் விதைகள் பரவிக்கிடந்தன (புறம். 324:10-11). இந்தப் பந்தரின் கீழ் அவர்கள் இரவில் மூட்டி வைத்த சிறு தீயாகிய விளக்கும் காணலாம். இங்ஙனம் தீயை வளர்ப்பதற்காக மாலையில் தீக்கடைக் கோலினால் கடைந்து நெருப்பு உண்டாக்குவர். ''புல்லென் மாலைச் சிறு தீ ஞெலியும் கல்லா இடையன்'' (புற. 331:4-5) என்று இவர் தீ மூட்டலைத் தெரிவிக்கின்றது ஒரு புறப்பாட்டு. (331:4-5).

## தோற்றமும் நடையுடை பாவனையும்

ஆயர்களின் தோற்றம் நடையுடை பாவனைகளையும் புலவர் வாக்குகளால் சிறப்பித்துள்ளனர். இவ்வாயர் எப்பொழுதும் காலில் செருப்பு அணிந்திருப்பர்; இச்செருப்பின் தழும்பு அவர்கள் பாதங்களிலே பதிந்து கிடைக்கும். ஆநிரைகளை ஓட்டுவதற்குரிய தடியை கையினால் ஊன்றிக் கொண்டிருப்பர். தழைகளை இழுத்துப் பறிப்பதற்கு ஏற்ற கவரான கோலும் கொண்டிருப்பர். தவிர மரங்களை வெட்டியெறிந்து கொடுப்பதற்கு ஏற்ற கருவியான கோடாரியைத் தாங்கியதனால் அவர்தம் கை, தழும்புடன் வலியனவாயிருந்தது.

நீர் ஊற்றுக்களைத் தோண்டுவதற்கு ஏற்ற குந்தாலியும் இவர்கள் வைத்திருப்பதுண்டு. இதனை 'வல்வாய்க் கணிச்சி' (அகம். 21:22) எனக் குறிப்பிடுகிறார் ஒரு புலவர். இவர்களின் கால், கைகளில் தழும்பு பட்டிருப்பது போலவே தோள்கட்டும் உறிக்காவினால் தழும்புடன் காணப்பெற்றது. இரண்டு தலைகளிலும் உறியினைக் கொண்ட காத்தண்டினால் பொருள்களைச் சுமந்து செல்வர். பசுவைக் கறந்த பாற்கையால் தடவியதனால் இவர்தம் தலைமயிர் பால் மணத்துடன் உள்ளது. ஆடுமாடுகளை ஓட்டுங் காலத்துச் சீழ்க்கையொலி செய்வாராதலின் இவர்தம் வாய் மடிந்து காணப்படும். இதுபற்றி இவரை 'மடிவாய்க் கோவலர்' (பெரும். 164) மடிவாய் இடையன் (புறம். 54:11) என்று குறிப்பிடுவார்.

இவர் அணிந்துள்ள ஆடை ஒற்றை ஆடையே (பெரும் பாண். 175) அந்த ஆடையும் அழுக்கடைந்து காணப்படுமாம். கரிய

உடம்புடைய இவர்செந்நிறம் ஊட்டப்பெற்ற துவர் ஆடை அணிந் திருப்பர் (கலி..102:37). 'காயாம்பூங்கண்ணிக் கருந்துவர் ஆடையை' என்று ஒருவன் விளிக்கப்படுகிறான். (கலி. 108:10)

காட்டிடத்துள்ள கொம்புகளிலும் கொடிகளிலும் பூக்கும் பலவகைப் பூக்களாலாகிய கதம்ப மாலையினை இவர் சூடுவர். தழையாலான மாலையும் அணிவர். குருந்த மலர் (ஐங். 439) கோடல் மலர் (காந்தள்) (அக. 266:3-4) மலர்கள், தழைகள் விரவிய பல்வண்ணங்கொண்ட மாலை இவர்கள் அணியும் மாலை.

> *'ஒன்று அமர் உடுக்கை கூழ்ஆர் இடையன்'*
> *(பெரும். 175)*
>
> *'பாசிலை தொடுத்த உவலைக் கண்ணி*
> *மாசு உண் உடுக்கை, மடிவாய், இடையன்'*
> *(புறம். 54:10-11)*
>
> *'.... .... ஓங்குமிசைக்*
> *கோட்டவும் கொடியவும் விரைஇக் காட்ட*
> *பல்பூ மிடைந்த படலைக் கண்ணி'*
> *(பெரும். 172-174)*

எனவரும் பாடலடிகள் இடையரின் உடுக்கையினையும் அணியும் மலர் மாலைகளையும் சுட்டிச் செல்கின்றன.

## இசைக்கருவிகள்

செந்தீயினால் துளையிடப்பட்ட கரிய துளைகளோடு கூடிய புல்லாங்குழலினை ஊதுவர். இந்த ஊது கருவி' குழல்' (அக. 354:5) 'சிறுகுழல்' (அக. 74:15-17) 'ஆம்பல் தீம் குழல்' (குறி. 322) என்று பெயர் பெறும். ஆம்பற் குழல் என்பதற்கு ' ஆம்பற்பூவின் வடிவாக அளைசுபண்ணிச் செறித்த குழல்' என்றும் ஆம்பல் என்னும் பண்ணை ஒலிக்கும் குழல் என்றும் கருத்துக் கூறுவர். குமிழினது உள்ளீடற்ற கொம்புடனே வளைத்துக் கட்டின மரல் கயிற்றாலாகிய நரம்பினையுடைய யாழை வாசித்தலும் இவர் மரபு (பெரும். 180-183; அக. 214: 10:13).

இவர் மகளிராகிய ஆயர் மகளிர் அழகிய மாமை நிறத்தோடு கூடினவர்கள். தாளுருவி என்னும் சிறு குழையைக் காதில் அணிந்திருப்பர். மூங்கில் போன்ற தோளும், அரல் போன்ற கருமையான கூந்தலினையுமுடையவர்கள். இவர் 'பூங்கரை நீலம் புடைதாழ' உடுத்திருப்பர். (கலி. 111:3). இம்மகளிர் குடங்களில் பாலை வைத்து அவற்றிற்கு மோர்த்துளிகளை உறைவிடுவார்கள். (புறம். 276:4-6).

இவ்வுறை மோரினை விரலால் பாலின் மீது தெளிப்பர் (புறம். 276:46). புலிக்குரல் போன்ற முழக்கம் எழ விடியற் காலையில் மத்தினால் இறுகத் தோய்ந்த அத்தயிரினைக் கடைவர். மோர், வெண்ணெய் முதலியனவற்றைப் பானையில் எடுத்துக் கொண்டு தம் தலைமேலுள்ள பூவாற் செய்த சும்மாட்டின்மேல் வைத்துச் சுமந்து விலை கூறி ஊர்களிலே விற்கச் செல்வர். (பெரும். 163-165). தாம் எடுத்துச் செல்லும் மோரிற்கு விலையாக நெல், பொன் முதலியனவற்றைப் பெற்று வருவர். விலையாக நல்ல பசுவையும் கரிய எருமைக் கன்றினையும் பெறுவதும் உண்டு. (பெரும். 164-165) இந்தப் பொருள்களால் அவர் உணவாக்கினர்.

ஆயர்கள் புரிந்து வந்த முக்கியமான தொழில் ஆனிரை மேய்த்தல், இளங்கன்றுகளைத் தாயிடமிருந்து பிரித்துத் தனியே வீட்டில் கட்டிவிட்டு அவற்றை மேய ஓட்டுவர். (அக. 293:11-13; 264:3-6).

## தொழில்

தமது பொருள்களை உறிகளில் இட்டுக் காக்களிலே வைத்துத் தோளில் சுமந்து செல்வர் (பெரும். 171). தமது கையில் உள்ள நீண்ட கவர்கோல், கோடாரி முதலியவற்றால் தழைகளை ஒடித்து ஆடுகளுக்குக் கொடுப்பர். ஆடுமாடுகள் நீர் உண்ண குந்தாலியால் நீர் ஊற்றுக்களைத் தோண்டுதலும் உண்டு (அக. 21:21-22) வியன் கரைப் படுமணி இன நிரை உணீஇய, கோவலர் விடுநிலம் உடைத்த கலுழ்கண் கூவல் (அக. 321:6-8) என வருவதும் இதற்குத் தக்க சான்று.

### உணவு

இவ்வாயர்களின் உணவு தினைச்சோறு, வரகுச் சோறு முதலியனவும், கூழ், பால், இறைச்சி முதலியன ஆம். பாற்கூழே இவர் உண்ணும் முக்கிய உணவு. இதனால் இவரைக் 'கூழ் ஆர் இடையன்' (பெரும், 175)' கூழ் ஆர் கோவலர்' (அகம். 21:22) என்பர். இவர் தமது உணவுடன் அவரைப் புழுக்கினையும் சேர்த்துக் கொள்வர் (பெரும்பாண். 195).

> 'மடிவாய்க் கோவலர் முடிவாயின் சேர்ப்பின்,
> இருங்கிளை ஞெண்டின் சிறுபார்ப்பு அன்ன
> பசுந்தினை மூரல் பாலொடும் பெறுகுவிர்
> (பெரும்பாண். 166-168)
> குறுந்தாழ் வரகின் குறள் அவிழ் சொன்றி....
> ..... ..... ..... ....
> அவரை வான்புழுக்கு அட்டி, பயில்வுற்று,
> இன்சுவை குரல் பெறுகுவிர்' (பெரும்பாண். 193-196)

## முல்லையை அடுத்த மருதம்

முல்லையை அடுத்துள்ள தாழ்நிலப்பகுதி மருதமாகும். ஆகவே மருத நிலத்தைச் சார்ந்த முல்லை நில வாசிகள் உழு தொழிலையும் செய்வர். இந்த மருதப் ' புல் ஆர் வியன்புலமாகிய' முல்லையும் மருதமும் தழுவும் இணைநிலப் பகுதிகளாம். இங்குள்ள காடுகளில் விடத்தே தொடரி முதலிய முட்காடுகள் ஊரைச் சூழ்ந்திருக்கும். பசுக்கள் வந்து வயற்பயிர்களை அழித்து விடாதபடி காக்கும். இளங்காடுகளும் உள. வரகு முதலிய தானியங்களைக் கொண்டு விளங்கும் குதிர்கள் இவர்களின் முற்றத்தில் உண்டு. வரகு திரிகையுடைய பந்தரும் காணப்படும். சகடம். உருளைகளோடு கலப்பைகளும் சார்த்தி வைக்கப் பெற்ற எருதுகள் கட்டியுள்ள மாட்டுக் கொட்டில்கள் உள. இப்பகுதி வீடுகள் வரகு வைக்கோலால் வேயப்பெற்றிருக்கும். இங்கு வாழுபவர் முல்லை நிலத்து மக்களுள் உழுதுண்டு வாழ்வதனைத் தொழிலாகவுடையவர்.

## ஏறு கோடல்

இளங்காளையை விரட்டி, அவற்றின்பின் ஓடி, அவற்றைப் பிடித்து இளைஞர்கள் அடக்குவர். இவ்வகை நிகழ்ச்சியை 'ஏறு கோடல்' என்பர். இது ஆயர், ஆய்ச்சியர் முதலியோர் கூடிநின்று காண நடைபெறும். ஏறுகோடல் ஒரு விழாப் போன்று கொண்டாடப்பெறும்.

## திருமால் வழிபாடு

'இவர்கள் வணங்கும் பெருந்தெய்வம் மால்.

*'திண்ணிதா*
*தெய்வமால் காட்டிற்று இவட்கு ' என நின்னை அப்*
*பொய்இல் பொதுவற்கு அடைசூழ்ந்தார்'*

எனவரும் கலித்தொகைப் பாடல் பகுதி அவர்க்குரிய தெய்வம் திருமால் என்பதனையும், திருமாலிடம் அவர்க்கு உளதாகும் பக்திப் பெருக்கையும் காட்டும். ஆயரும், ஆய்ச்சியரும் ஒருங்கு கூடிக் குரவைக் கூத்தாடித் திருமாலுக்கு வணக்கம் செலுத்துவர். (கலி. 104: ) இக்குரவையாட்டினுள் ' தொல் கதிர்த் திகிரியாற் பரவுதும்' (கலி. 104:78) என்றும்,

*'பாடு இமிழ் பரப்பகத்து அரவணை அசைஇய*
*ஆடுகோள் நேமியற் பரவுதும்' (கலி. 105:71-72)*

என இவர் கூறுதலின் திருமாலை வணங்குதற் பொருட்டாக ஆடப் படுவது இக்குரவைக் கூத்து என்பது போதரும்.

## சிவ தெய்வ வழிபாடு

தவிர, நடுகல்லையும் காடு உறையும் சிறுதெய்வங் களையும் போற்றுதலும் உண்டு.

*'பல் ஆன் கோவலர் படலைசூட்ட*
*கல் ஆயினையே கடுமான் தோன்றல்' (புறம். 265. 4-5)*

என்பதனால் இவர் நடுகல்லிற்குத் தழைமாலை முதலியன சூட்டி வணங்குதல் பெறப்படும். ஆனிரை காத்து ஓம்பி, அதன் பயனை உலகிற்கு அளிக்கும் இல்வாயர்களை ' அறவை நெஞ்சத்து ஆயர்' (புறம். 390உ) என்று பாராட்டுகின்றார் ஒரு புலவர்.

## மருதநில மாந்தர்

மலைக்கும் கடலுக்கும் இடைப்பட்ட நாட்டுப்பகுதியே மருதம். பல்வகைப் பயிர்வகைகளும் வளர்ப்பதற்கு ஏற்ற நில வளமும் நீர் வளமும் கொண்டது. எனவே, மக்கள் மிகுதியாக வாழ்கின்ற இடம் இதுவே. இதன் மண்பாடும் வளமும் கருதி இதனை ' மென்புலம்' (புறம், 42:17-18) என்பர். இங்கு மக்கள் சேர்ந்து வாழும் இருப்பிடங்கள் ஊர் எனப்படும். அவற்றின் சிறுமை பெருமை கருதிச் சிற்றூர், பேரூர் என வழங்கப்படும் (கலி. 109:6); பேரூரின் பகுதிகளாகப் பற்பல சேரிகளும் (கலி. 68:16; அக.220:1) இருக்கும். இந்த ஊர்கள் செல்வம் நிரம்பித் திகழ்வன வாதலின் இவற்றை 'மல்லல் பேரூர்' (பெரும். 254) என்பர்.

## மருதநில ஊர்கள்

மருதநில ஊர்களைச் சுற்றிலும் குளிர்ந்த வயல் பரப்புகள் காணப்படும். இங்குள்ள இல்லங்கள் ஏணிக்கும் எட்டாத உயர்ந்த வடிவுடன் அமைந்திருந்தன. செந்நெல், வெண்ணெல் முதலிய பல்வகை உணவுப் பொருள்களும் கொண்ட நெற்கூடுகள் (குதிர்கள்) அவற்றில் உள. அந்த இல்லங்களின் பக்கங்களில் உழவர்க்கு இன்றியமையா மாட்டுச் செல்வங்களும் தொழுவங் களில் இருந்தன. பெருமையுடை நல்ல பசுக்கள் ஈன்ற கன்றுகளைக் கட்டின தாமணியையுடைய நெடிய தாம்புகள் நட்ட தறிகளில் பிணிப்புண்டு கிடந்தன. தச்சச் சிறுவர் பிறர் விரும்பும்படியான அழகுடன் அமைத்த சிறுதேர்களைச் சிறுவர்கள் உருட்டி விளை யாடித் திரிந்தனர். தளர்நடை பயிலும் சிறுகுழந்தைகள் அவ் வருத்தம் தீரத் தாய்மாரைத் தழுவிப் பாலை நிறைய உண்டு படுக்கைகளில் துயிலும். மக்கள் வாழ்க்கைக்கு வேண்டும் பல் பொருளும் நிரம்பியிருத்தலினாலே இவ்வூரார் பசியின் கொடு

மையை அறியார். எனவே, மருதநிலத்து ஊர்களை, ' தொல் பசி அறியாத் துளங்கா இருக்கை மல்லல் பேர் ஊர்' (பெரும். 253-254) என்கிறார் கடியலூர் உருத்திரங்கண்ணனார், (பெரும். 242-254).

## நீர்வளம்

இம்மருத நிலத்து ஊர்களில் மக்கள் நீர் பருகுவதற்கு ஏற்ற நல் நீர்க் குளங்கள் உண்டு. இப்பொய்கைகள் பாசி படர்ந்தும் காணப்படுதலும் உண்டு. ' ஊர் உண்கேணி உண் துறை தொக்க பாசி அற்றே பசலை'(குறுந். 399) என்று இப்பொய்கையின் பாசியைப் பசலைக்கு உவமை கூறுகிறார் பரணர். இவ்வகைச் சிறுகுளங்களே ' ஊருணி என்று வழங்கப்படுவன. 'ஊருணி நீர் நிறைந்து அற்றே' என்கிறார் வள்ளுவப் பெருந்தகை. இதனைத் தவிர மருதநில ஊர்களை அடுத்துப் பெரிய நீர்நிலைகளாகிய பொய்கைகள் அங்கங்கே காணப்படும். ஆறு, குளங்களே உழவர்களின் உழு தொழிலுக்கேற்ற நீரை உதவுவன; இவற்றில் நாரை முதலிய நீர்ப் பறவைகள் இரைதேடிப் பறந்துகொண்டிருக்கும். இவற்றை அடுத்த பசுஞ்சோலைகளும் பரந்து காணப்படும்.

> *'ஊர்க்கும் அணித்தே பொய்கை; பொய்கைக்குச்*
> *சேய்த்தும் அன்றே, சிறு கான் யாறே;*
> *இரை தேர் வெண்குருகு அல்லதுயாவதும்*
> *துன்னல் போகின்றால் பொழிலே'* (குறுந். 123)

என மருதநில நீர்வளம் பாடிய புலவர் பெருமகனார் ' மாதீர்த் தன்'என்னும் புனைபெயருடன் குறுந்தொகையில் காணப்படு கிறார். நீர்நிலைகளிலிருந்து வயல்களுக்குப் பாயும் மதகுகளின் வழி நீர் ஓடிப்பரந்து நிலங்களுக்குப் பாய்ந்தன. காஞ்சி, மருதம் முதலிய மரங்களும் உயர்ந்தோங்கிக் காணப்பெற்றன. மெல்லிய விளைநிலங்களோடு பொழில்களும், பள்ளிகள் எனப் படும் இடைச் சேரிகளும் ஆக நன்னன் சேய் நாட்டிலுள்ள மருத நிலம் விளங்கியதாக,

*'புல் அரைக் காஞ்சி, புனல் பொரு புதவின்,*
*மெல் அவல், இருந்த ஊர்தொறும், நல்யாழ்ப்*
*பண்ணுப் பெயர்த்தன்ன, காவும், பள்ளியும்,*
*பலநாள் நிற்பினும் சேந்தனிர் செலினும்,*
*நன்பல உடைத்து அவன் தண்பணை நாடே'*
*(மலைபடு. 449-453)*

என மலைபடுகடாம் கூறும்.

## மருதநில மக்கள்

இம்மருதநிலத்தே வாழும் மக்கள் களமர் (பொருந. 194; மலைபடு. 469) உழவர் (புறம். 13;10; புறம். 289:3; 230:13) எனப்படுவர். இவர்கள் வயலில் உழுதொழில் புரிதலினால்' கழனி உழவர்' (புறம். 13:11) எனவும் சிறப்பிக்கப்படுவர். வயல்களில் நெல்லையும் கரும்பையும் பயிர் செய்தனர். (பொருந. 193-194) வயல்களில் ஓரங்களில் சண்பு எனப்படும் சண்பங்கோரைகளும் வளர்ந்து காணப்படும் (மலைபடு. 454-455). வயலையடுத்துள்ள நீர்ப்பகுதிகளில் நண்டுகள் ஊர்ந்துகொண்டிருக்கும். வாளை, வரால் முதலிய மீன்கள் துள்ளிக்கொண்டிருக்கும். இவர்கள் உழுவதற்குக் கருவியாகக் கொள்ளும் கலப்பை பெண்யானையின் வாயைப்போல் வளைந்தும் அதன் நுனியிலுள்ள கொழு உடும்பினது முகத்தைப்போல் கூராகவும் அமைந்திருக்கும். ஏர்களில் உழவுத்தொழிலில் பயிற்சிபெற்ற நல்ல எருதுகளைப் பூட்டி உழுவர். உழவர் எருதுகளைத் தேர்ந்தெடுத்து ஏர்களில் பூட்டுவர் என்பதை,

*'ஈரச் செவ்வி உதவின ஆயினும்*
*பல் எருத்துள்ளும் நல் எருது நோக்கி,*
*வீறு வீறு ஆயும் உழவன் போல'* *(புறம். 289; 1-3).*

எனவரும் புறப்பாட்டுப் பகுதியால் தெரியலாம்.

## உழுதொழில்

ஏர்களை வயல்களில் வளைய வளையச் சால்களாக உழுது கொண்டு செல்வர். சில இடங்களில் வயல்களில் எருதுகள் ஒன்றோ டொன்று போரிட அதனால் உழாமலேயே அப்பகுதி நடுவதற் குரிய பக்குவத்தை அடைந்துவிடுகிறதாம். சேற்று நிலத்தில் விதைகளை விதைத்தும், நாற்றாக வளர்த்துப் பின் பெயர்த்து நட்டும் இருவகை முறைகளில் பயிர்செய்தனர் (புறம், 230:12-13). பயிர் வளர்ந்து வரும்போது அவற்றிடையே களைகளாக வளர்ந்த நெய்தல் முதலியவற்றை உழத்தியர் பறித்து வரப்புகளில் எறிவர். காவிரி நாட்டில் ஒருவேலி நிலம் ஆயிரங்கலமான செந்நெல்லை விளைவித்தது. இச்செய்தியை,

> 'சாலி நெல்லின் சிறை கொள் வேலி
> ஆயிரம் விளையுட்டு ஆக,
> காவிரி புரக்கும் காடு கிழவோனே' (பொருந, 246-248)

என்பதனால் அறியலாம்.

## உழவர் பெருங்களம்

கழனிகளில் விளைந்து காணப்படும் கதிர்கள் வரவரப் பசுமையற்று முற்றிச் செந்நிறமாகின்றன. விளைந்த நெற்கதிர்களை உழவர்கள் அரிந்து தெய்வமுறையும் களத்துமேடுகளிலேயே சூடாக அடுக்குகின்றனர். அவர்கள் கொண்டுவரும் நெற்கதிர் களோடு வயல்களில் ஏற்கனவே மயில்கள் உதிர்த்துவிட்டுச் சென்ற பீலிகளும் சேர்ந்து வருகின்றனவாம். (புறம். 13;10-11) நெற்சூடுகளில் சிலம்பியின் வலைகளும் மேலே சேர அவை பூதங்களைப்போல் காட்சி தருகின்றனவாம். இச்சூடுகளின் அடுக்கிய அரிகளைக் கலைத்துப் பரப்பி அவற்றின்மேல் கடா விட்டு நெல்லை வேறு பிரிக்கின்றனர். பிரித்துத் திரட்டி வைத் திருக்கும் நெற்குவியலைப் 'பொங்கழி' என வழங்குவர். நெல் லோடு கூடிய வைக்கோலை நீக்கி அவற்றுடன் கலந்து காணப்படும் தும்பு, தூசுகளை நீக்குவதற்கு அவற்றை முறங்களில் அள்ளி

மேல்காற்றில் தூற்றுகிறார்கள். தூற்றும்போது அதிலிருந்து எழும் தூசுகள் திசைகளை மறைக்கும்படியாக நெற்குவியல்கள் மேரு மலைபோல் காட்சி தருகின்றன. இவற்றை இல்லங்களிலுள்ள நெற்கூடுகளில் (குதிர்) சேர்த்து வைப்பர். களத்தின்கண் வரும் இரவலர் முதலியவர்களுக்கு நெல்லை வாரி வழங்குவர்.

*'பெருங்களம் தொகுத்த உழவர் போலப்*
*இரந்தோர் வறுங் கலம் மல்க வீசி '* *(அகம். 30; 8-9)*

என வரும் அகப்பாட்டுப்பகுதி உழவர்களின் கொடைத் தன்மையை தெரிவிக்கிறது.

களத்தில் வருவார்க்கு நெல் வழங்குதலே அன்றி உணவும் அளித்தனர்; வாளை மீனின் பொரியலை நெல்லாலான கள்ளுடனே சேர்த்து வழங்குவர் (மலைபடு 454-464).

## கரும்பாலை

முற்றிய கரும்புகளை வெட்டி வந்து கரும்பு ஆலைகளில் இட்டு அவற்றின் சாற்றை எடுப்பர். சாற்றைக் காய்ச்சி கட்டி கட்டியாகச் செய்வர். இந்தக் கரும்பு ஆலைகளின் ஓசை யானையின் பிளிற்று ஒலியைப் போல ஆங்கே கேட்கும். அங்கு வருவார்க்குக் கரும்பின் சாற்றைப் பருகுவதற்கு வழங்குவர் (மலைபடு. 341; பெரும்பாண். 259-262).

## அவல் இடித்தல்

வயல் வரம்புகளில் அமைந்த புதுவைக் கோலால் வேய்ந்த குழல்களின் முற்றத்தே அவலையிடித்தல் உண்டு. அவல் இடிக்கும் ஓசையை அருகிலுள்ள கிளிகள் கேட்டுத் தமக்குப் பகையோ என அஞ்சுமாம் (பெரும்பாண். 224-227) வயல்களைக் காக்கின்ற காவலர்கள் வயல் ஆமைகளின் முதுகிலேயே நத்தைகளை உடைத்து அவற்றின் தசை கொள்வர் (நற். 250; 6-8).

## விருந்தோம்பல்

உழவர்கள் தம்மிடத்து வரும் சுற்றத்தார்க்கு வாளை, ஆமை முதலியவற்றின் தசைகளோடு, கரும்பிலிருந்து எடுத்த இனிய சாற்றையும் சேர்த்து விருந்து செய்வர் (புறம். 42; 12-17) (புறம். 249; 1-7).

உழவர் மகளிர் வரும் விருந்தினரைத் தம் தலைவர் இல்லில் இல்லாத போழ்து பிள்ளைகளைக் கொண்டு உபசரிக்கச் செய்வர். உலக்கையால் குற்றி எடுத்த அரிசியாலாக்கிய வெள்ளிய சோற்றுடன் நண்டும் பீர்க்கங்காயும் கலந்த கலவைக் கறிகளை உண்பிப்பர் (சிறுபாண். 183-195), மலையில் வாழும் கோழியின் பொரியலுடன் உணவு அளித்தலும் உண்டு (பெரும்பாண். 254-256) அரிசியாலாக்கின கள்ளும் அருந்தக் கொடுப்பர். (மலைபடு. 460-464).

## உழவரின் சிறுவர்கள்

உழவரின் சிறுவர்கள் நீர்முள்ளிப் பூவையும் நெய்தல் பூவையும் பறித்து பைஞ்சாய்க் கோரையைப் பல்லால் கிழித்த நாரில் தொடுத்து மாலையாக அணிந்து கொள்வர். சண்பங் கோரையின் காய்களைப் பறித்து அதிலுள்ள தாதைத் தங்கள் மார்புகளில் பூசிக்கொள்வர். இதனால் அச்சிறுவர்களின் மார்புகள் பொன்னுரை கற்களைப் போல் தோன்றுகின்றன. இவர்கள் பழஞ்சோற்றின் கட்டிகளை உண்பர். இதனை வெறுத்தால் அவல் முதலிய தின் பண்டங்களை உண்பர் (பெரும்பாண். 213-226).

மருதநிலத்தின் இருபாலும் முல்லையும் நெய்தலும் இணைதலில் அந்நிலத்திற்குரிய பொருள்களும் ஓரளவு ஆண்டுச் செல்வார்க்குக் கிடைப்பதுண்டு (பெரும்பாண். 351-371)

## ஊர்கள்

இங்குள்ள சிற்றூர்களிலும் பேரூர்களிலும் உள்ள பொதியிலிலும் தெய்வக் கோவில்களிலும் மக்கள் வழிபாடு செய்தனர்.

இவ்வூர்களில் பல்வேறு வகையான மக்களுடைய சேரிகளும் தெருக்களும் அமைந்திருந்தன. ஊர்களில் விழாக் கொண்டாட்டங்களும் அவ்வப்பொழுது நடந்தன. இந்த விழாக்களில் இந்திரவிழா முக்கியமாகக் குறிப்பிடத்தக்கதாகும். இந்திர விழாவில் மிகுதியான பூக்களைப் பயன்படுத்துவர் (ஐங்குறு. 62) மதுரை, உறையூர், காஞ்சி, வஞ்சி, ஆமூர், வேலூர் முதலிய பல ஊர்களின் வாழ்க்கை முறைகளைத் தனிப்பட மற்றோர் இடத்தில் விரிவாகக் காண்போம்.

# நெய்தனில மாக்கள்

## நெய்தல்நில ஊர்கள்

கடற்கரையை அடுத்த பெருமணற்பகுதியில் கடல் வளத்தை நம்பி வாழும் மக்கள் உறைந்தனர். இங்குள்ள ஊர்கள் கடலையடுத்தும் உப்பங்கழியையடுத்தும் தாழைவேலிகளுடன் காணப்பட்டன. இந்த ஊர்களைப் 'பாக்கம்' என்பர்.

''துறை தணி மிகுந்த பாக்கம்'' (நற்.101:5) இங்கு வாழும் மக்கள் மீன் பிடித்தலைத் தொழிலாக உடையர். ஆதலின், ''பெருங்கடற் பரதவர்'' (குறுந். 320:1) எனப்படுவர். இவர்கள் வாழ்ந்த ஊரைப் பாக்கம் என்றலோடு, கூடச் சிறுகுடி என்றும் அழைப்பர்; ''கானலம் சிறுகுடி'' (நற்றி. 4;1 அகநா. 320;5).

## மக்கள் வாழ்விடம்

இவர்கள் வாழும் குடிசைகள் வஞ்சி, காஞ்சி என்னும் மரங்களின் வெண்மையான கொம்புகளோடு கொறுக்கச் சித்தட்டையையும் வரிச்சாகக் கொண்டு கட்டப்பட்டிருக்கும். தாழை நாரால் கட்டித் தருப்பைப் புல்லால் கூரையை வேய்ந்திருப்பர். குறுகிய கூரையையுடைய வீடுகளின் முன் தூண்டில் கம்புகள் வைக்கப்பட்டிருக்கும். இதைப் பார்ப்பதற்குக் கேடயமும் வாளும் வைத்த நடுகல்லின் தோற்றம்போலக் காணப்படும். குடிசைகளின் முற்றத்தில் மீன் பிடிக்கும் வலைகள் இருக்கும்.

அங்கு அவ்வலைகளை வெய்யிலிலும் உலர்த்துவதுண்டு. புன்னைக் கிளைகளால் அமைந்த பந்தல்களும் உண்டு.

## மக்களின் தொழில்

இங்குள்ள பரதவர்கள் தம் பிள்ளைகளோடு உலாவி கடலிலும் கழிகளிலும் குளங்கள் முதலிய நீர்நிலைகளிலும் உள்ள மீன்களைப் பிடிப்பார்கள் (பெரும்பாண். 263-273; பட்டினப். 80-81) இதனால் இவரை ''மீன்வேட்டுவர்'' (அகநா. 270:3) என்பர்.

தொழில் வினைஞராகிய இவர்கள் வலிமையான கையையுடையவர்களாய்க் காணப்பட்டனர் (நற். 303:9). இவர்கள் பரதவர் (பொருந.218; சிறுபாண்.159; குறுந்: 304; 320; நற்றி.38;175; 303;372;388) வலைஞர் (பட்டின. 197) திமிலோன் (அகம். 320:2) என அழைக்கப்படுவர். உப்பெடுத்தல் தொழிலும் இவருக்குடைமையால் 'உமணர்' என்றும் கூறப்படுவர் (பெரும்பாண். 65; அகம். 102:4; புறம்.116:7) இவர்களை நுளையர் என்றும் சொல்வதுண்டு (சிறுபாண். 158).

## நெய்தல் மகளிர்

இவரது மகளிரைப் பரத்தியர், உமட்டியர் (சிறுபாண. 60) நுளைமகள் (சிறுபாண். 158) என்று அழைப்பர். இவர்கள் சுருங்கிய இடையினராயும், அசைகின்ற கூந்தலையுடைவராயும் காணப்பட்டனர். இவர்கள் வேல் போன்ற கண் பார்வை உடையவர். (சிறுபாண், 59-60; 158) இப்பரதவர்களின் முக்கியத் தொழில் மீன்பிடித்தலும் அவற்றை உலர்த்துதலும் உப்பு எடுத்தலும் ஆம். இவர்கள் தூண்டிலை இட்டும் வலை வீசியும் மீன் பிடிப்பர். தூண்டிலின் முள்ளில் மீனுக்குரிய இரையை வைத்து வீசுவர். இவர் தம் வலைகள் முடிச்சுகளோடு கூடி அமைந்து இருக்கும் (பெரும்பாண். 253- 257; நற்றிணை 303). இவர்கள் மீன் பிடிக்கும் படகுகளாகிய திமிலில் ஏறி, கழியையும் கடலையும் துழாவி மீன் பிடித்து வருவர். சுறாமீன் பிடித்தலைச் சுறாமீன் வேட்டம் என்பர். அவர்கள் எறிகின்ற உளிகளில் கயிறு கட்டப்பட்டிருக்கும்.

- தோன்புரிக்
கயிறு கடையாத்த கடுகடை நெயுளித்'

'கொல்வினைப் பொலிந்த கூர்வாய் எறிஉளி
முகம்பட மடுத்த முளிவெதிர் தோன்காழ்
தாங்கு அருநீர்ச் சுரத்து எறிந்து, வாங்குவிசைக்
கொடுந் திமிற் பரதவர் கோட்டுமீன் எறிய'

(குறுந் . 304: 1-4)

எனவரும் பாடற்பகுதிகளால் பரதவர் சுறாமீனையும் பிடிக்கும் வகை விளக்கமாகிறது.

## இரவிலும் மீன் பிடித்தல்

இரவு வேளைகளில் படகுககளில் வெளிச்சத்திற்காக மீன் நெய்யால் ஏற்றப்பட்ட விளக்கினை வைத்திருப்பர். ஆகவே இவர்கள் இரவு வேளைகளிலும் மீன் பிடிக்கக் கட்லில் செல்வதுண்டு (நற். 358: 4-5). கரையிலுள்ள சிறுவர்கள் வெளிச்சத்தின் தன்மையைக் கொண்டு தங்கள் தந்தையர் படகு இது என்று கூறி மகிழ்வர் (நற்.331:1-8; 372: 10-13; 388:1-5), காலையில் சென்றவர்கள் மாலையிலும் இரவில் சென்றவர்கள் காலையிலும் மீன்களுடன் கரைக்குத் தம் இல்லங்களை நோக்கி மீள்கிறார்கள். கொண்டுவந்த மீன்களைக் கடற்கரையிலே குவித்துப் புன்னை நிழலில் அமர்ந்து தம் பிள்ளைகளோடு கள்ளைக் குடித்துப் பரதவர் மகிழ்கிறார்கள் (நற். 388: 5-9).

## மீன் வணிகம்

இம்மீனை மகளிர் வெய்யிலில் உலர்த்துவர். அப்பொழுது அதைக் கவர வரும் பறவைகளை ஓட்டுவர் (நற். 45:67; 331:4; குறுந். 320: 1-3) இரவில் மீன் குவியல்களுக்குப் பக்கத்தில் மீன் நெய்யை வார்த்து எரியவிட்ட கிளிஞ்சல்களில் விளக்குகளை வைத்து அதன் பக்கத்தில் காவல் புரிவர். (நற். 175: 1-5) பரதவர் மகளிர் மீன்களை வட்டிகளில் சுமந்து சென்று அடுத்துள்ள மருதநிலத்து ஊர்களில் விற்று நெல் முதலியன பொருள்களுக்கு மாறிவருவர் (அகம். 32:1-5).

## வேறு தொழில்கள்

கடலில் சங்குகளைத் தொகுத்து முத்தெடுத்தலும் அந்தச் சங்குகளை வளையல்களாக அறுத்து எடுத்தலும் இவர்கள் செய்யும் வேறு தொழில்களாகும்.(மதுரை. 315-316). உப்பு விளைவித்தல் இவர்களது பெருந்தொழில்களில் ஒன்று. உழாமலேயே உவர் நீரைப் பாத்தி கட்டி உப்பை விளைவித்தலினால் ' உவர் விளைவு உப்பின் உழா உழவர்' என்கிறார், உலோச்சனார். உப்பெடுத்து வாணிகம் செய்யும் மக்கள் ' உமணர்' என்று கூறப்படுவர். வண்டிகளில் உப்பை ஏற்றி மருதநிலத்து ஊர்களில் சென்று விற்று வருவர். இவர்களது வண்டியின் தன்மைமையும் அதில் ஏற்றிச் சென்ற பொருள்கள் முதலியனவற்றையும் பெரும்பாணாற்றுப் படை விரிவாகக் கூறுகிறது.(பெரும்பாண். 45-65). மேடு பள்ளங்களில் செல்லினும் அச்சு முறிந்துவிடாதபடி கீழ்மரத்தில் சேம அச்சு இணைத்திருப்பர் (புறம். 102:1-5) உப்பு வணிகர்களின் வண்டிகள் வரிசையாகச் செல்வதை உமணர் ஒழுகை என்பர் (சிறுபாண். 55; புறம்.116;7-8). குறிஞ்சி நிலத்துச் சிறு பெண்கள் பஞ்சு பறந்த முற்றத்தையுடைய தமது வீட்டின் கூரையில் ஏறி அங்கே செல்லும் உமணர்களின் வண்டிகளை எண்ணி மகிழ்வர் என்கிறார் ஒரு புலவர் (புறம். 116: 1-8).

இவர்கள் செல்லும் வழியில் வண்டியில் பூட்டிய பகடு களில் ஏதேனும் ஊனமாகிவிட்டால் அவற்றை அவிழ்த்து பாதுகாக்காமல் விட்டுச் செல்வர். இந்நிகழ்ச்சி புறநானூற்றில்:-

> 'நீரும் புல்லும் ஈயாது, உமணர்
> யாரும் இல் ஒரு சிறை, முடத்தொடு துறந்த
> வாழா வான் பகடு ஏய்ப்ப' (புறம். 307: 8-10)

என்று உவமையாகக் காட்டப்பட்டுள்ளது.

உமணர் ஊர் திரும்பும் காலத்து அவரோடு வந்த பொருள் களில் குரங்கும் கூட வந்து அவர்தம் சிறுவரோடு கிலிகிலி என்னும்

விளையாட்டை விளையாடுகின்றது என்னும் நிகழ்ச்சி சிறு பாணாற்றுப்படையில் (55-62) காணப்படுகின்றது.

### உணவு

இவர்களுடைய உணவு அரிசிக்கூழ், மீன் சூட்டு, கள், முதலியன ஆம். கூழைப் பரந்த பாத்திரங்களில் விட்டு ஆற்றி உண்பர். (பெரும்பாண். 275-282). (சிறுபாண். 158-159).

### வழிபாடு

சுறா மீனின் எலும்பை நட்டு அதில் கடவுள் உறைவதாக வழிபட்டனர் (பட்டினம். 86-87) தாழை மலர், புன்னை மலர் முதலியவற்றை அறிவர். உலா நாளில் மீன் பிடிக்கச் செல்லாது தம் மகளிரோடு கடற்கரையில் வழிபாடு செய்தும் உணவும் கள்ளும் உண்டு ஆடியும் பொழுதுபோக்குவர் (பட்டினம். 88-93).

## பாலைநில மறவர்

### பாலை நிலம்

பாலை என்பது ஒரு தனிநிலம் அன்று எனவும், முல்லை., குறிஞ்சி நிலங்கள் வெயிலின் கொடுமையால் வளம் இழந்து நிற்கும்போது பாலை என்று குறிக்கப்படும் எனவும் முன்பு நாடு பற்றிக் கூறிய இடத்துக் கண்டோம். தமிழகத்தில் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என நால்வகை நாட்டுப்பகுதிகள் கொள்ளப்பட்ட போதிலும் வளம் மாறி நிற்கின்ற நிலையில் 'பாலை' எனக் கூறுவர். பாலையில் வெயில் மிகுதியால் மரஞ்செடி கொடிகள் கரிந்து, விலங்குகள் உணவும் நீரும் வேண்டும் அளவு பெறாது ஓய்ந்து காணப்படும். இதனைச் 'சுரம்' என அழைப்பர். இங்குள்ள பரல்கற்கள் வேல்போல் அங்கு நடப்பாரின் கால்களை வருத்தும். இங்கே பிறக்கும் கானலை நீர் என மயங்கி விலங்குகள் சோர்வுறும். பாலையில் பறக்கும் கானல் 'உருஇல்பேய் ஊராத்தேர்' (அக.67:15-17) இலங்குதேர் (கலி.26:10) பேய்த்தேர்

என்று கூறப்படும். இது பார்வைக்கு நீர் போன்று தோற்றம் அளிப்பதால்தான் இவற்றை நீர் என மயங்குதற்கு ஏதுவாகிறது. புயல்துளி மாறியதனால் நீர்வளம் அற்று, யானை மெலிந்து சேற்று நீரைச் சுவைத்துத் தன் உயிரைத் தாங்குதலையும் கலித்தொகையின் பதின்மூன்றாம் பாட்டுக் கூறுகிறது. இப்பாலை நிலத்தின் கடத்தற்கு அருமை நோக்கி அதனை அருஞ்சுரம் (பெரும். 117), 'போக்கு அரு வெஞ்சுரம்' (கலி. 13;9) என்பர். வளம் இழந்து நிற்கும் இந்நிலத்தைப் 'புன்நிலம்' என்பர்.

## பாலை மக்கள் வாழ்விடம்

இங்கு வாழும் மக்கள் மறவர், எயினர் எனப்படுவர். இவர்கள் வாழும் ஊர் 'குறும்பு'எனப்படும். ''கடுங்கண் மறவர் கல்கெழு குறும்பின்'' (அக.87:7) எனக் கற்கள் நிரம்பிய பகுதியில் 'குறும்பு' அமைநதிருந்தமையை இந்த அகநானூற்றுப் பாடலடி தெரிவிக்கிறது. இவர்தம் குடிசை ஈந்தின் இலையால் வேயப் பட்டிருக்கும்; இதனால் இவை முள்ளம்பன்றியின் முதுகு போல் காட்சி தரும். இதனால் அணிலும், எலியும் இதனை நெருங்குவ தில்லையாம். நாணைக் கோத்து அமைத்த வில்லும், அம்பும் இவ்வீடுகளில் இருக்கும் அம்புக் கட்டும், துடியும் துங்கும் பந்தரும் இங்குண்டு. நாய்களைச் சங்கிலியால் கட்டி வைத்திருப்பர். அதனால் இவ்வீடுகள் எளிதில் பிறர் நெருங்க இயலாதபடி இருக்கும். ஊகம்புல்லால் வேய்ந்த உயர்ந்த மதிலும் இங்குக் காணப்படும். இவர் வாழும் ஊரைச் சுற்றிலும் முள்ளையுடைய வாழ்வேலியும், காவற்காடும் அமைந்திருக்கும். ஊரின் வாசலில், கூரிய கழுக்களை வரிசையாக வைத்திருப்பர்; (பெரும். 83-88 (118-129).

## மறவர் தோற்றம்

இங்கு வாழும் மறவர் உடல்வலி படைத்தவர்; வற்கென்ற உடம்பினை உடையவர்; புலி போன்ற பார்வையுடையர்; அஞ்சா நெஞ்சம் கொண்டவர்; வளர்ந்த மயிரினையுடையர்; கலைமானின் கொம்பு போல முறுக்குண்டு தாழ்ந்த தாடியினை உடையர். சிலைமரத்தால் செய்த வில்லினைத் தாங்கியிருப்பர் (கலி. 4, 1 5)

(கலி. 15; 1-7). இவர்தம் ஆடை செந்நிறம் வாய்ந்தது. செந்துவர் ஆடை, (ஐங். 363, நற். 33); காலில் தோற்செருப்பும் கொண்டிருப்பர் (மதுரை. 265).

## பாலை மக்கள் தொழில்

இவர்தம் தொழில் வேட்டையாடுதலும், வழிச் செல்லுவோரை வருத்தி அவர்தம் பொருள்களைப் பறித்து வருதலும் ஆம். மழையற்ற பொழுது நீர் வேண்டித் தோண்டிய ஊற்றுகளின் பக்கத்திலுள்ள குழிகளில் மறைந்து ஒதுங்கி இரவில் அங்கு நீருண்ணவரும் பன்றியினை எய்வதற்கு நோக்கி நோக்கி இருப்பர். இந்தப் பன்றி வேட்டையோடு பகலில் புதர்களில் வலைகளை மாட்டி, நாய்களுடனே சென்று அவற்றைக் கலைத்து அங்குள்ள முயல்களை வளைத்துப் பிடிப்பர் (பெரும்.106-116). ஆநிரைகளைக் கவர்ந்து விடுதலும் உண்டு. (அக. 297: 16-18, 277:5). காட்டு வழிகளிலே பதுங்கியிருந்து வழிப்போவோரை வருத்திப் பொருள் பறிப்பர். இதனால் இவரைக் 'கொலை வெங் கொள்கைக் கொடுந்தொழில் மறவர்' (அகம். 363:10) என்பர். வழிச் செல்லும் மாந்தரிடத்துத் தமக்குக் கொள்வதற்கு ஏற்ற பொருள் இல்லாவிடினும் தங்கள் அம்புபட்டு அவர்கள் பதைப்பதைக் கண்டு மகிழ்வதற்காக அவர்தம் உயிரைக் கொல்வாராம். இக் கொடுமையினால் பறவைகள் கூட அங்கு பறப்பதில்லையாம் (கலி.4:3-6). இவரை,

> ' அத்தம் செல்வோர் அலறத் தாக்கி
> கைப்பொருள் வௌவும் களவுஏர் வாழ்க்கைக்
> கொடியோர்' (பெரும். 39-41)

என்றும்,

> 'வில் ஏர் வாழ்க்கை விழுத்தொடை மறவர்' (அக. 35:6)

என்றும்,

> 'கான் உயர் மருங்கில் கவலை அல்லது,
> வானம் வேண்டா வில் ஏர் உழவர் (அகம். 193:1-2)

என்றும் கூறுகின்றனர். இவர்கள் கொள்ளை கொள்ளுங்கால் துடி'யினை ஒலிப்பர் (கலி.15:4) நிரை கவரும்போது தண்ணுமை முழக்குவர். (அக. 297:16). இவர்கள் ஒலிக்கும் தண்ணுமை, துடி

ஒலிகளை வழிச் செல்வார் கேட்கும்போது அவர்தம் நெஞ்சம் துண்ணென நடுங்குமாம் (அக. 87:8-10).

## மகளிர்

இவர்தம் மகளிராகிய எயிற்றியர் கரம்புகளில் எறும்பு சேர்த்து வைத்திருக்கும் புல்லரிசியை எடுத்து வருவராம். மகவு ஈன்ற மகளிர் மான் தோல் படுக்கைகளில் இல்லில் இருக்க, ஏனையோர் கரம்பைத் தோண்டிக் கிளைப்பதற்குரிய இரும்பைத் தலையில் கொண்ட கருவியுடன் செல்வர். புல்லரிசி இருக்குமிடம் அறிந்து கரம்பைக் கிளைத்து உள்ளேயிருக்கும் புல்லரிசிகளைக் கவர்ந்து வருவர். அதனைக் கொண்டு வந்து பார்வைமான் கட்டி வைக்கப்பட்டுள்ள தம் முற்றத்தில் விளாமரத்தில் அடியில் உள்ள நிலவுரலில் பெய்து உலக்கையால் குற்றுவர்; ஆழ்ந்த கிணற்றில் இல்லூற்றாக ஊறும் நீரை முகந்து வருவர். பழைய பானையிலே வார்த்துச் சோறாக்குவர். வாடிய ஊனாகிய உப்புக்கண்டமும் சமைப்பர். இந்த உணவை விருந்தினர்க்குத் தேக்கிலையில் வைத்துக் கொடுப்பாராம் (பெரும். 89-105).

இன்னும் சிலர் மேட்டு நிலங்களில் விளைந்த நெற்சோற்றுடன் நாயினால் பிடிக்கப்பட்டுக்கொண்டு வரப்பட்ட உடும்பின் தசைக்கறியுடன் உணவு கொள்வாராம் (பெரும். 130-13). திணையிலிருந்து செய்யப்பட்ட ஒருவகைக் கள்ளையும் உண்பர் (அகம். 284:9). அயிற்றியர் எறும்பு சேர்த்த அரிசியை எடுக்கவந்து உணவாக்குதலையும், மறவர் ஆநிரை கவர்ந்து வருதலையும்,

*'கோடை நீடலின், வாடு புலத்து உக்க*
*சிறுபுல் உணவு, நெறிபட மறுகி*
*நுண்பல் எறும்பி கொண்டு அளைச் செறித்த*
*வித்தா வல்சி, வீங்குசிலை, மறவர்*
*பல்ஊழ் புக்குப் பயன் நிலை கவர.'*

*(அகம். 377:145)*

எனவரும் அகப்பாட்டும் தெரிவிக்கும்.

## வழிபாடு

இவர்கள் நடுகல்லையும், இறந்தாரையும் புதைத்து வைத்த பதுக்கைகளிலே உள்ள தெய்வங்களையும் வழிபடுவர். பதுக்கையிலுள்ள கடவுளை வழிபடுவதற்கு அங்குள்ள நடுகல்லுக்குப் பீலி முதலியன சூட்டி, துடியை அடிப்பர்; நெல்லால் ஆகிய கள்ளையும், செம்மறிக் குட்டியையும் பலியாகக் கொடுப்பர் (அக. 35: 6-10).

## ஐவகை நிலக்காட்சி

இங்ஙனமாக, இங்குக் கூறிய ஐவகை நில மாந்தர் வாழ்வு, தமிழக நிலத்தில் பரந்துபட்டு அங்கங்கே வாழ்ந்த மக்களின் பொது வாழ்க்கையாகும். அங்கேயுள்ள நில அமைப்பு, நீர்வளம், பொருள் வளம் முதலியனவற்றிற்கு ஏற்றாற் போல மக்களின் தொழில் முயற்சி, வாழ்விடம், உணவுப் பழக்கம் முதலியன மாறுபட்டன வாய் அமைதலைக் கண்டோம். இம்மக்கள் தத்தம் நிலப்பண்பிற்கு ஏற்ற வாழ்க்கையர் ஆயினும் ஒரு நிலத்து விளையும் பொருளைப் பிற நிலத்துவாழ்வார்க்குப் பண்டமாற்று செய்து கொண்டு வாழ்ந்தமையும் புலனாகிறது. இங்ஙனம் நாட்டுப்புற மக்கள் வாழ்க்கை அமைந்ததேனும் நல்ல பண்பாடும் நாகரிக வளர்ச்சியும் பெற்ற சிற்றூர்களும் பேரூர்களும் ஆங்காங்கே அமைந்திருந்தன. தவிரவும், கடற்கரைப் பட்டினங்களில் கடல் வாணிகம் சிறக்கப் பல்வேறு இனத்தார் ஒருங்குகூடி வாழ்ந்த துறைமுகநகர்களையும் பண்டைத் தமிழகத்துக் காண்கிறோம். இத்தகைய வாணிகம் சிறந்தோங்கிய கடற்கரைப் பட்டினங்களையும், உள்நாட்டில் பேரூர்களாய் விளங்கிய அரசர்களின் தலைநகரங்களையும், நாகரிகச் சிறப்பாலும், தெய்வம் உறைவதாலும் சிறந்த புகழ் பெற்று விளங்கிய பல ஊர்களையும், ஆங்கு நிலைபெற்ற நகரமாந்தர் வாழ்வினையும் இனி தொடர்ந்து காண்போம்.

# 2. சிற்றூரும் பேரூரும்

நானில மக்கள் அவ்வந் நிலத்தின் இயற்கையோடு பொருந்திச் சூழ்நிலைக்கேற்ற தொழில்களையுடையராய் ஒரு வருக் கொருவர் வணிக முறையில் பண்ட மாற்று செய்து கொண்டு வாழ்க்கை நடத்தினர். இவர்கள் வாழ்ந்த ஊர்கள் அவர்கள் தொழில் புரிந்த நிலங்களுக்குப் பக்கங்களிலேயே அமைந்திருந்தன. நீர் வசதியைப் பொறுத்துக் காட்டுச் சுனைகளை அடுத்தும், ஆற்றோரங்களிலும், வயல் வரம்புகளிலும், கடலோரங்களிலும் வாழ்ந்தனர். இவர்கள் உறைந்த வீடுகள் சிறுகுடிசைகளாக இருந்தன. சிறு நாட்டுத் தலைவர்களாயும் சிறந்த நல்வாழ்க்கை புரிந்தனர். இவ்வகை ஊர்கள் நான்கு நிலத்திலும் சிறியனவும் பெரியனவும் ஆக அமைந்திருந்தன.

நக்கீரர், ''கேள் கேடுன்றவும்'' என்னும் அகநானூற்றுப் பாட்டில்(93) சோழனது உறந்தை அவையையும் வழுதி கடலின் நாளங்காடியையும் கருவூர் முன்றுறையில் உள்ள தண்ணான் பொருநை மணலையும் எடுத்து ஒப்புக்காட்டியுள்ளார். எனவே மூவேந்தரும் வாழ்ந்த கோநகர் தமிழ்நாட்டின் நகரங்களுள் தலைசிறந்து விளங்கிய பேரூர்களாம் என்பது போதரும்.

## ஊர்களின் அமைப்பு

சிற்றூர்களும் பேரூர்களும் பல்வேறு வகையான தொழில் புரியும் மக்களும் ஒருங்கு கூடி வாழத்தக்க பேரமைப்புடன் கூடிய நிலையில் விளங்கின. பொதுவாக எல்லா ஊர்களும் காவல் அரண்களைப் பெற்றிருந்தன. காடுகளிலும் குன்றுகளிலும் அமைந் திருந்த சிற்றூர்களும் கூட முள் வேலிக் காப்புடன் இருந்ததாகக் குறிப்புள்ளது. சிற்றூர்களைச் சுற்றிலும் உடை, விடத்தேர் முதலிய முள்மரங்களைக் காவலுக்காக வளர்த்து வந்தனர். இந்த அமைப்பு பேரூர்களிலும் மதில் சூழ்ந்த அகழியைச் சுற்றி அமைக்கப்

பட்டிருந்தது. அகழியில் இது 'மிளை' என அழைக்கப்படும் குறுங்காடாகும். பேரூர்களில் ஊரைச் சுற்றிலும் பெரிய மதில் அமைப்பும், அதைச் சுற்றிலும் குறுங்காடும் இருந்தன. அகழியில் முதலைகள் வளர்க்கப்பட்டன.

*'நில வரை இறந்த குண்டு கண் அகழி*
*வான் தோய்வு அன்ன புரிசை, விசும்பின்*
*மீன் பூத்தன்ன உருவ ஞாயில்*
*கதிர் நுழைகல்லா மரம்பயில் கடி மிளை*
*அருங்குறும்பு உடுத்த கானப்பேர் எயில்'*

*(புறம். 21:2-7)*

எனவரும் கானப்பேர் எயிலின் வருணனையிலிருந்து பேரூர்களின் மதில், அரண் முதலியவைகளை நன்கு உணரலாம். மதில், அரண் சூழ்ந்த பேரூர்களுக்கு உட்செல்லக் கூடிய வாயில் மிகப் பெரிதாக அமைந்துள்ளது. எப்பொழுதும் மக்களும் யானை, குதிரை முதலிய விலங்குகளும் தேரும்வண்டியும் முதலிய வாகனங்களும் போய் வந்துகொண்டிருக்கும் காரணத்தால் அது உயிர்ப்புப் பெற்று விளங்கும். மதுரை வாயிலை இடையறாது ஓடும் வையாற்றுக்கு ஒப்பிட்டு,

*'வையை யன்ன வழக்குடை வாயில்'*

*(மதுரைக்காஞ்சி 356)*

என்கிறார் மாங்குடிமருதனார்.

## நகரின் உள்ளமைப்பு

நகரின் உள்ளமைப்பு அரசன் இருக்கையை நடுவாகக் கொண்டு அந்தணர், அரசர், வேளாளர் என்னும் நாற்பெருங் குடிமக்கள் வீதிகளும், போர் மறவர், கொல்லர், குயவர் முதலிய பல்வேறு தொழில் புரியும் மாந்தரும் வாழும் வீதிகளும் முறை முறையாக அமைந்திருந்தன. இந்த அமைப்பு தாமரைப்பூவின் நடுவிலுள்ள கொட்டையை அடுத்து இதழ்கள் அமைந்திருப்பதைப் போல உள்ளது என்று மதுரை நகரையும், கச்சி நகரையும் குறிப்பதிலிருந்து நகரங்கள் ஒருவகை நியதியின்படி அமைக்கப் பட்டிருந்தன என்பதை உணரலாம்.

*'மாயோன் கொப்பூழ் மலர்ந்த தாமரைப்*
*பூவோடு புரையும், சீர்ஊர்; பூவின்*
*இதழகத்து அனைய தெருவம்; இதழகத்து*
*அரும் பொகுட்டு அனைத்தே; அண்ணல்கோயில்;*
*தாதின் அனையர், தண் தமிழ்க் குடிகள்;*
*(பரிபாடல் திரட்டு 8:1-5)*

என மதுரை அமைப்பைப் பரிபாடல் கூறுகிறது. இது போன்றே கச்சியின் அமைப்பும் உள்ளமையை'

*''நீல நிற உருவின் நெடியோன் கொப்பூழ்*
*நான்முக ஒருவற் பயந்த பல் இதழ்த்*
*தாமரைப் பொகுட்டின் காண் வரத்தோன்றி*
..... ..... ..... .....
*மலர்தலை உலகத்துள்ளும் பலர் தொழ*
*விழவு மேம்பட்ட பழவிறல் மூதூர் - (கச்சி)*
*(பெரும்பாண். 402 - 411)*

எனவரும் பெரும்பாணாற்றுப்படையால் அறியலாம்.

## தெருக்கள்

தெருக்கள் எல்லாம் ஒழுங்கானவையாய் இருபுறத்தும் மாடமாளிகை ஓங்கியவையாய் அமைந்து இருந்தன. மாடங்களை மலைக்கும் தெருக்களை ஆறுகளுக்கும் ஒப்பிட்டுப் புலவர்கள் கூறுகிறார்கள். சுருங்கை எனப்படும் பாதாள வழிகளும் பெரு நகரங்களில் இருந்தன (பரி. 16:20: 20:104).

*' மண் உற ஆழ்ந்த மணி நீர்க் கிடங்கின்*
*விண் உற ஓங்கிய பல்புடைப் புரிசை*
*தொல் வலி நிலைஇய அணங்குடை நெடுநிலை*
*நெய்படக் கரிந்த திண்போர்க் கதவின்*
*மழை ஆடும் மலையின் சிவந்த மாடமொடு*

வையை அன்ன வழக்குடை வாயில்
வகை பெற எழுந்து வானம் மூழ்கி
சில் காற்று இசைக்கும் பல்புழை நல்இல்
யாறு கிடந்தன்ன அகல் நெடுந்தெருவில்
(மதுரைக்காஞ்சி, 351-359)

என வருவது காண்க.

## மாட மாளிகை

மாடங்களில் மேகங்கள் தவழ்வதைக் கூறுவதினால் அவற்றின் உயரத்தை உணரலாம்.

'மழை தோயும் உயர்மாடத்து'
(பட்டினப்பாலை 145)

இம்மாடங்கள் பல நிலைகளோடு அமைந்திருந்தன. இவற்றின் உயர்ச்சியால் வான மாளிகைக்கு அமைந்த தூண்களெனச் சொல்லும்படியாக இவை விளங்கினவாம்.

'வானம் ஊன்றிய மதலை போல
ஏணி சாத்திய ஏற்று - அருஞ் சென்னி
விண் பொர நிவந்த வேயா மாடத்து
(பெரும்பாண். 346-348)

என்னும் அடிகளில் வானுற ஓங்கி உயர்ந்து நிற்கும் பெருமாடங்களைக் காண்கிறோம்.

இம்மாடங்களில் சில் காற்றெனும் தென்றல் காற்று உள் நுழைந்து செல்வதற்குப் பல 'புழை' யென்றும் (மது. 358) கட்டளை (நெடுந, 62) என்றும் கூறும் சாளரங்கள் இருந்தன என்பதையும் அறிகிறோம்.

மேல்மாடங்களின் முற்றங்களில் மகளிர்கள் உலாவி, பந்து முதலிய விளையாடல்களில் ஈடுபட்டனர். வீதிகளில் நடைபெறும்

திருவிழாக்காட்சி முதலியவைகளை மேல் இருந்து நோக்கினர். வீதியில் நின்று பார்ப்பதற்கு அம்மகளிரது முகங்கள் மேகத்திடை மறைந்து காணப்படும் சந்திரனைப் போன்ற தோற்றமுடைய வனாக இருந்தனவாம் (மதுரைக். 448-452).

*'ஒண் குழை திகழும் ஒளி கெழு திருமுகம்*
*திண் காழ் ஏற்ற வியல் இரு விலோதம்*
*தெண் கடற் திரையின் அசைவளி புடைப்ப*
*நிரை நிலை மாடத்து அரமியம் தோறும்'*
*மழை மாய் மதியின் தோன்றுபு மறைய'*
*(மதுரைக் காஞ்சி 448-452)*

## வெவ்வேறு வகை மாடங்கள்

மாடங்கள் அமைத்துத் தருவதற்குச் சிற்ப நூலறிந்த புலவர் கள் இருந்தனர். இவர்கள் நல்ல நாளில் மனை வகுப்பதற்கு உரிய இடத்தின் திசைகளைக் குறித்து, அத்திசைகளில் நிற்கும் தெய்வங் களை நோக்கி, நூலால் அளந்து மனையின் கருவை அமைப்பர். 'பெரும்பெயர் மன்னருக்கு ஒப்ப மனை வகுத்து' (நெடுநல். 78) என்பதனால் அவ்வவர் தகுதிக்கேற்ப மாளிகைகள் வெவ்வேறு வகைகளில் அமைக்கப்பட்டன என்பது பெறப்படும்.

### அரண்மனை

அரசர்க்குரிய அரண்மனையைச் சிற்ப நூல் வல்லார் அமைத்துத் தந்த வகையை நெடுநல்வாடையில் (72-114) காண் கிறோம். இந்த அரண்மனை கோபுரவாயில்களும், பெரிய முற்ற மும் முன்வாயிலும் உடையனவாய் அமைக்கப்பட்டன.

கோபுரம் பெரியதொரு குன்றைக் குடைந்து வாயிலில் அமைத்ததைப் போன்ற தோற்றமுடையதாயிருக்கிறது. வெற்றிக் கொடியோடு யானை நடந்து செல்லும்படியாக அத்தனை உயர முடைய வாயிலைப் பெற்றிருந்தது. மாளிகைகளின் பல இடங் களில் பறந்து கொண்டிருந்த பலநிறக் கொடிகள் மலைமேல்

காணும் இந்திரவில்லைப் போல் காட்சியளித்தன. வாயிலின் உத்திரக்கல்லிலே நடுவே திருவும், இருபுறத்தும் இரண்டு செங் கழுநீர் பூவைக் கையில் கொண்ட இரண்டு பெண்யானை உருவங் களும் அமைக்கப்பட்டிருந்தன. வாயின் நிலையிலே பொருந்தி யிருக்கும் இரண்டு கதவுகளும் கம்மியனது வேலைப்பாட்டின் நுட்பத்தால் புகையும் உட்புக இடைவெளி இன்றி நன்றாகப் பொருத்தி அமைக்கப்பட்டிருந்தன. அங்குள்ள முற்றங்களில் மணல் பரப்பி இருக்க, கவரி மாவும் அன்னமும் தாவித் திரி கின்றனவாம். மயில்கள் செருக்குடன் ஆரவாரித்து ஆடிக்கொண் டிருக்கின்றனவாம்.

இம் மாளிகையில் நிலவுப் பயன் நுகர்தற்கு ஏற்ற நீண்ட வெண்ணிய மேல் மாட முற்றங்கள் இருந்தன. அரண்மனையின் ஒருபால் அரசனேயன்றி ஆடவர் எவரும் நுழையாத அந்தப்புரம் அமைந்து இருந்தது. அரமண்மனையில் பல இடத்தும் யவனர் களால் செய்து தரப்பட்ட பாவை விளக்குகள் சுடர்விட்டு ஒளியைத் தந்துகொண்டிருந்தன.

## மாடங்கள்

மாடங்கள் எல்லாம் வெள்ளி போன்ற சுண்ணச் சாந்தினால் பூசப்பட்டிருந்தன. நீலமணி போன்ற கரிய திரண்ட தூண்கள் அங்கங்கே காணப்பட்டன. செம்பினால் செய்து அமைத்த நீண்ட உட்புறச் சுவரிலே அழகிய பல பூக்களைக் கொண்ட பூங்கொடிகள் எழுதப் பெற்றிருந்தன.

## அரண்மனையை அடுத்துப் பிறர் வாழ்விடம்

அரண்மனையடுத்து அமைச்சர், புரோகிதர், சேனாபதியர், தூதுவர், ஒற்றர் என்னும் அரசியலில் ஈடுபட்ட ஐம்பெருங் குழுவினர் முதலியோர் இருப்பிடங்கள் இருந்தன. அந்தணர், அரசக்குடியினர், வணிகர், வேளாளர் என்னும் நால்வேறு பெரு வகுப்பினர் இருப்பிடங்கள் அமைந்திருந்தன. மேலும், மணி களைத் துளையிடுவோர், பொற்பணித்தட்டார், ஆடை விற்பார்,

ப, சாந்து முதலியன விற்போர், சித்திரகாரிகள் முதலிய பல்வேறு வினைஞர் தத்தம் தொழிலுக்கு ஏற்புடைய இடங்களில் கலந்து வாழ்ந்தனர்.

## பரத்தையர் வாழ்க்கை

இவர்களுக்கு மத்தியில் வரைவில் மகளிராகிய பரத்தையரும் வாழ்ந்தனர். இப்பரத்தையர் ஏழிசை யாழை வாசிக்கும் இன்னிசைக்கலையில் சிறந்திருந்தனர். இவர்தம் கொண்டையிலே வெண்ணிறப் பூக்களை அணிந்துகொள்வர். புறமண்டலத்தாரும் உள்ளூரிலுமாய்த் தம் வடிவழகை விரும்பி வரும் இளையராகிய செல்வர் பலரை விரும்பிச் சேர்வர். முற்படப் பலருடன் புணர்ந்த புணர்ச்சியால் குலைந்த ஒப்பனையைச் சீர்செய்து கொள்வர். தம்மை அடுத்துவரும் செல்வரை வஞ்சனையுடைய பொய் வார்த்தையால் முதலிற் கூட்டிக்கொண்டு, நுண்ணிய பூண்களோடு கூடிய அவர்தம் மார்பைத் தம் மார்பிலே வடுப்படும் படியாக தழுவிக்கொள்வர். இங்ஙனம் அன்புடையார்போலக் கூடிய தழுவலை அவர் பொருள் தரும் அளவும் மறைத்து, அவருடைய செல்வம் எல்லாவற்றையும் வாங்கிக்கொள்வர். வண்டு பூவில் தேனை உண்டு நீங்குவது போல் பொருள் பெற்றபின் அவரைத் திரும்பியும் பாரார். பழுத்த மரத்தைத் தேடி அலையும் பறவைபோல மேலும் பொருள் தரும் பிறரை நாடித் தம்முயிரைப் பாதுகாக்கின்ற பரத்தமை வாழ்க்கையிலே திளைத்து நின்றனர்: தம்மைக் கண்டாரை நெஞ்சக் காமத்தால் வருத்த முறச்செய்வித்து அவர்பால் உள்ள பொருள்களைக் கொள்ளை கொள்ளுதலின் இவரை 'நெஞ்சு நடுக்குறூப கொண்டி மகளிர்' (மது. 559-589) என்கிறார்.

புலவியால் கற்பு வாழ்க்கை சிறத்தற்கு இப்பரத்தையர் ஏதுவாக உள்ளனர் என்றும், தமிழை ஆராயாதார் களவு கற்பொழுக்கப் பயனை உணர்ந்துகொள்ளப்படார் என்றும் பரத்தையரையும் வாழ்வின் ஓர் அங்கமாகப் பரிபாடல் குறிப்பதும் ஈண்டுக் கருதற்பாற்று.

*'கா்தற் காமம், காமத்துச்சிறந்தது*
*விருப்போர் ஒத்து மெய்யுறு புணர்ச்சி:*
*புலத்தலின் சிறந்தது, கற்பே; அதுதான்*
*இரத்தலும் ஈதலும் இவை உள்ளீடாப்*
*பரத்தை உள்ளதுவே: பண்புறு கழறல்,*
*தோள் புதிது உண்ட பரத்தைஇல் சிவப்புற*
*நாள் அணிந்து உவக்கும் சுணங் கறை அதுவே;*
*கேள் அணங்குற மனைக் கிளந்துள சுணங்கறை;*
*சுணங்கறைப் பயனும் ஊடல் உள்ளதுவே*
*அதனால் அகறல் அறியா அணியிழை நல்லார்*
*இகல்தலைக் கொண்டு துனிக்கும் தவறுஇலர்; இத்*
*தள்ளாப் பொருள் இயல்பின் தண்தமிழ் ஆய்வந்திலார்*
*கொள்ளார் இக்குன்று பயன்'*

*(பரி. 9:12-26)*

இப்பாடற்பகுதி அகப்பொருளாம் இல் வாழ்வின் களவு கற்பு நிகழ்ச்சிகளையும், கற்பு வாழ்வின் இன்பச் சிறப்பை மிகுவித்து தற்கு பரத்தையும் ஏதுவாக இடைவருதலையும் விளக்குகிறது. ஆண்மக்களுடைய மனைவிட்டுப் பிரிதல் நிகழ்ச்சியில் 'பரத்தையர் பிரிவு' ஒன்று என்றும்,

*'பரத்தை வாயில் நால்வர்க்கும் உரித்தே;*
*நிலத்திரிபு இன்று அஃது'*

*(தொல். பொருளியல். 28)*

என்றும் தொல்காப்பியர் கூறுவதனாலும் இவ்வொழுக்கம் தீமை யுடையதாக அந்நாளில் கடியப்படவில்லை என்பது போதரும்.

## புறஞ்சேரி

ஊருக்குப் பறம்பாக உள்ள சேரியில் பாணர் முதலியோரது இருக்கைகள் இருந்தன.

*'துடியன், பாணன், பறையன், கடம்பன், என்று
இந்நான்கு அல்லது குடியும் இல்லை.*
*(புறம். 335 7-8)*

என்று புறநூனுற்றில் பாணரைப் பழங்குடியினரில் ஒருவராகக் கூறப்படுதலின் இவர்தம் இருக்கை ஊர்ப்புறத்தே அமைந்தன போலும்.

## கோயில்கள்

தெய்வத் திருக்கோயில்களும் அங்கங்கே காணப்பட்டன. திருமால், முருகன், இந்திரன், பலராமன், கண்ணன், முக்கண்ணன், கொற்றவை முதலியோர் கோயில்கள் இருந்தன. கோயில்களில் மக்கள் நித்திய வழிபாடு செய்தலோடு திருவிழாவும் கொண்டாடினர். திருவிழாவில் ஏழாம்நாள் அந்தியில் தீர்த்தமாடுதல் வழக்கமாயிருந்தது. தெய்வ பூசையில் பூ, புகை, விளக்கு பண்ணியங்கள், பழங்கள், சோற்றுப்பலி முதலியன வைத்து வழிபட்டனர். நகர் காவல் செய்யும் பூதங்களும் வழிபட்டன. யானை, தேர், குதிரை, காலாள் படையைச் சேர்ந்த வீரர்களும் நகரில் வாழ்ந்தனர். எருத்துச் சாலைகளும் தவப்பள்ளிகளும் இடம்பெற்றிருந்தன. தவப்பள்ளிகளில் அந்தணர் பள்ளிகளோடு அமணப்பள்ளி, பௌத்தப் பள்ளிகளும் காணப்பட்டன.

## போக்குவரவு வசதிகள்

மக்கள் போக்குவரவுக்கு உபயோகித்த பலவகையான வாகனங்களும் தெருவில் சென்றுகொண்டிருந்தன. அகன்ற தெருக்களில் தேர் சென்றதனலாகிய குழிகளும் காணப்பட்டன. அறச்சாலைககளில் சோறாக்கிப் புதியோர்களுக்கு உணவளித்தனர்.

## செல்வர் நிலை

செல்வர் நல்ல பட்டாடை அணிந்து, சந்தனம் முதலியனவற்றைப் பூசி கழுநீர் மாலை முதலியவற்றை அணிந்து கொண்டு

தேரில் ஏறிச் செல்வாராயினர். ஆடவர் மகளிருடன் ஆற்றுக்குச் சென்று புதுப்புனலில் ஆடி மகிழ்தலும், பொழில்களில் உலாவி யும், உறைந்தும், உண்டும், தின்றும் மது முதலியன பருகியும் இன்பமாகப் பொழுதுபோக்குவர்.

## கல்வியும் கலையும்

கல்வியும் கலையும் சிறந்தோங்கின. புலவர் பெருமக்க ளும் பலர் இருந்தனர். 'தெரிமாண் தமிழ் மும்மைத் தென்னம் பொருப்பன்' (பரி. திரட்டு.4) எனப்படுதலின் முத்தமிழும் பொலி வுற்றிருந்தன. புலவர் பெருமக்களைப் 'புலன்நா உழவர்' (கலி. 68:4) என்று சிறப்பித்தலின் இவர்தம் உரையால் சிறந்தனர் என்பது போதரும். இவர்களால் பாடப்பெறும் பேற்றை மன்னர் முதலி யோர் பெரும்பேறாகக் கருதினார்கள். மாந்தர் 'பாடல் ஓர்த்தும் நாடகம் நயந்தும் வெண்ணிலவின் பயன் துய்த்தலும்' (பட்டி. 113-114) இரவில் பொழுதுபோக்கினர் எனப்படுதலின் ஆடல் பாடல்களையும் மக்கள் பெரிதும் விரும்பியமை பெறப்படும். புலவர்கள் சபைகள் கூடி வாதப்போர் புரிந்தனர். இவ்வகையாகக் கல்வி, கொடை முதலியனவற்றின் பொருட்டுக் கொடி தூக்கப் பட்டதும் உண்டு. 'நன்பல பல்வேறு குழூஉக் கொடி' (மது. 372-373) என்பதன் உரையில் 'நன்பல என்றால் கல்வி, கொடை, தவம் முதலியவற்றை ' என நச்சினார்க்கினியர் எழுதும் குறிப்பும் நோக்கத்தகும். கல்வி வல்லோர் கொடி -தூக்கி வாதம் புரிந்தமையை,

> *பல் கேள்வித் துறை போகிய*
> *தொல் ஆணை நல் ஆசிரியர்*
> *உறழ் குறித்து எடுத்த உருகெழு கொடியும்*
> *(பட்டி. 169-170)*

எனவரும் பட்டினப்பாலை அடிகளால் உணரலாம். இவர்கள் வாதப் போர் புரியும்போது இருவிரல்களை நீட்டிக்கொண்டு பேசுவது இயல்பு. வரகின் இரட்டித்த கதிர்களுக்கு இவருடைய கை ஒப்பிடப்பட்டிருக்கிறது.

*'வாதிகை அன்ன கவைக் கதிர் இறைஞ்சி*
*இரும்பு கவர் வுற்றன பெரும்புன வரகே'*
*(மலைபடு. 112-113)*

என்பது மலைபடுகடாம். மதுரை மாநகரம் தமிழுக்கு உறைவிட மாயிருந்தது. மூவேந்தர் தலைநகரங்களையும் சுட்டிய சிறு பாணாற்றுப்படை, மதுரை மாநகரை,

*'தமிழ் நிலை பெற்ற தாங்க அருமரபின்*
*மகிழ் நனை மறுகின் மதுரை' (சிறுபாண். 66-67)*

எனச் சிறப்பிக்கிறது. தமிழ் நிலைபெற்ற என்பது ஒருகால் மதுரையில் அமைந்த புலவர் குழாத்தைக் கருதிக் கூறப் பெற்றதாகலாம். மேலும், மதுரையைக் குறிக்குமிடத்துக் 'கூடல்' என்னும் பெயரையே சங்கப் புலவர் பலரும் குறித்துள்ளனர். இப்பெயர் தமிழகப் புலவர்கள் ஒருங்கு கூடும் நகரமாயிருந்தமையால் ஏற்பட்ட பெயராதல் பொருந்தும்.

## மக்களின் வாழ்க்கை நிலை

இரவில் ஊர் காப்பாளர்கள் நகரில் சுற்றித் திரிந்து காவல் புரிந்தனர். மதுரைமா நகரில் இரவின் நான்கு சாமங்களிலும் எந்தெந்த நிகழ்ச்சிகள் நடைபெற்றன என்பதை மதுரைக்காஞ்சி விரிவாகத் தருகிறது (536-639) நாழிகை அறிவிப்போர் 'கன்னல்' என்னும் நாழிகை வட்டினால் காலத்தை அளந்து மக்களுக்கு அறிவித்து வந்தனர். விடியற்காலையில் கிழக்கே வெள்ளி தோன்றுதலும் நகரத்தில் அமைதி கலைகிறது. பொய்கை மலரின் இன்னொலி செய்யும் வண்டைப்போல அந்தணர்கள் வேதம் பாடத் தொடங்குகின்றனர். ஏனைய நகர்களில் கோழியின் குரலால் மக்கள் துயில் எழுவது போலன்றி மதுரை மக்கள் மறை ஒலியால் துயில் எழுகின்றனர் என்கிறார் ஒரு கவிஞர்.

*'நான்மறைக் கேள்வி நவில்குரல் எடுப்ப*
*ஏம இன் துயில் எழுதல் அல்லதை*

*வாழிய வஞ்சியும் கோழியும் போலக்*
*கோழியின் எழாது எம்பேர் ஊர் துயிலே'*
*(பரி.திரட்டு. 8:9-12)*

யாழோர் காலைப் பண்ணாகிய மருதப்பண்ணை இசைக்கின்றனர். பரிக்காரர் யானைக்குக் கவளத்தை உண்பிக்கின்றனர். குதிரைகள் புல் உணவைத் தின்று குதட்டுகின்றன. பல்வேறு வகைப்பட்ட பண்டங்கள் விற்கும் கடைகளை மெழுகுகின்றனர். கள் விற்போர் கள் விலை பகர்ந்து செல்கின்றனர். கள்ளுண்டு களித்தோர் முழங்கும் குரல்கள் ஒலிக்கின்றன. மகளிர் சிலம்பொலிக்க எழுந்து கதவுகளைத் திறத்தலினால் கதவோசைகள் எழுகின்றன. பள்ளியெழுச்சி முரசுகள் முழங்குகின்றன. சூதர்கள் வாழ்த்துகின்றனர்; மாகதர் புகழ்பாடுகின்றனர். வேதாளிகர், நாழிகை சொல்வார் தத்தம் துறைக்குரியவற்றை இயம்புகின்றனர். எருதுகள் ஒன்றுடன் ஒன்று மாறுபட்டு முழங்குகின்றன. புள்ளியோடு அழகிய நிறத்தை உடைய கோழிச் சேவல்களும் அழகிய மயில்களும் தத்தம் பெடைகளைக் கூவி அழைக்கின்றன. பெண் யானைகளோடு கூடி ஆண்யானைகள் முழங்குகின்றன. கீழ் வானத்தில் செக்கர் நீங்கிக் கதிரவன் தோன்றுகிறான். விடியற்காலத்தில் நகரம் தொழில் முயற்சிகளில் ஊக்கத்துடன் ஈடுபடுகிறது. இவ்வகையான நிகழ்ச்சிகள் மதுரைமாநகரில் நிகழ்வதாக நமக்கு மதுரைக்காஞ்சி தெரிவிக்கிறது.

## பட்டின வாழ்க்கை

உள்நாட்டின் வாழ்க்கைத் தன்மை இவ்வாறாக இருக்கக் கடற்கரைப் பட்டினங்களின் வாழ்க்கையில் கடலோடு இயைந்த வேறுசில நிகழ்ச்சிகளையும் நாம் காணக்கூடும். கடல்படு பொருள்களாகிய மீன், உப்பு இவற்றை விளைவிக்கும் நெய்தல் நில மாந்தரின் தொழில்கள் கடலையடுத்து இடையறாது காணப்படும். வாணிக நிமித்தம் கடல்வழி வரும் கலங்கள் கடற்றுறையில் காணப்படும். கடலை அடுத்த கழிகளில் பண்டங்களை ஏற்றிவரும் படகுகள் காணப்படும். கடலில் செல்லும் கலங்களுக்கு இரவில் துறையை அறிவித்ததற்கு உயர்ந்த மாடங்களின் உச்சியில் விளக்கு

கள் வைத்து அறிவிப்பர். நீரினின்று நிலத்தும் நிலத்தினின்று நீரிலுமாகப் பொருள்கள் ஏற்றி இறக்கப்பட்டன. இறங்கிய பண்டப் பொதியாகிய மூடைகளில் காவிரிப்பூம்பட்டினத்து கடல் துறையிலே சோழனது புலிப்பொறி பொறிக்கப்பட்டனவாம்.

இந்நகரில் வடமலைப் பிறந்த மணி, பொன், குடமலை யில் உள்ள ஆரம், அகில், தென்கடலில் விளைந்த முத்து, கங்கை நாட்டுப் பண்டங்கள், காவிரி நாட்டுப் பொருள்கள் ஈழம், காழகம் முதலிய கடல் கடந்த வெளிநாட்டுப் பொருள்கள் எல்லாம் குவிந்து கிடந்தன. யவனர், மிலேச்சர் முதலிய கிரேக்க நாட்டார் வணிகத் தின் பொருட்டு வந்து தங்கிய இடங்களும் இக்கடற்கரையில் காணப்பட்டன. வணிகத்தின் பொருட்டு வந்து தங்கிய மக்களின் தெருக்கள் கடற்கரையையடுத்து அமைந்து இருந்தன. நீர்நில வாணிகம் சிறந்தோங்கி இருந்தது. பலமொழி பேசும் மக்கள் இந்நகரில் உறைந்தனர். தமிழ்நாட்டிலே அடைமொழி எதுவு மின்றிப் 'பட்டினம்' என்னும் பெயரைப் பெற்று விளங்கியது காவிரிப்பூம்பட்டினம். இந்நகரின் செல்வத்துக்கு ஈடாக வேறு எந்த நகரையும் ஒப்பிட இயலாது.

*'மொழி பல பெருகிய பழி தீர் தேஎத்துப்*
*புலம் பெயர் மாக்கள் கலந்து, இனிது, உறையும்*
*முட்டாச் சிறப்பின், பட்டினம் பெறினும்...*
*வாரேன்'* *(பட்டினப்பாலை 216-218)*

எனக் கூறுவதினால் இந்நகரின் செல்வச் சிறப்பை அறியலாம்.

## சிறந்து விளங்கிய நகர்கள்

காவிரிப்பூம்பட்டினத்தைப் போன்றே கொற்கை, முசிறி, தொண்டி முதலிய கடற்கரைப் பட்டினங்கள் வெளிநாட்டு வாணிகத்தால் சிறந்து விளங்கின. கொற்கைத் துறைமுகம் முத்து ஏற்றுமதிக்கும், முசிறித் துறைமுகம் மிளகு ஏற்றுமதிக்கும் பெயர் பெற்றவை. மேலை நாட்டினரது கலங்கள் இத்துறைமுக நகரங் களுக்கு வந்து சென்ற வண்ணமாய் இருந்தன. யவனரது கலங்கள் பொன்னோடு வந்து மிளகை ஏற்றிச் செல்லும் காட்சியை,

*'சுள்ளியம் பேரியாற்று வெண்ணுரை கலங்க*
*யவனர் தந்த வினைமாண் நன்கலம்*
*பொன்னொடு வந்து கறியொடு பெயரும்*
*வளங்கெழு முசிறி' (அகம். 149 : 8-10)*

என அக்னூறு அழகுபட விளக்குகிறது.

மூவேந்தர்களின் தலைநகரங்களிலும் கடல்துறைப் பட்டினங்களும் பல்வகை வளங்களும் நிரம்பி, பல்வேறு மொழி பேசும் மக்களும் கலந்து இனிது உறைந்து நல்வாழ்வு வாழ்ந்தனர் என அறிகிறோம். சிறு குறும்பு முதல் சிற்றூர்களும் பேரூர்களும் யாவும் ஒன்றோடு ஒன்று இணக்கமாகத் தங்கள் பொருள்களையும் பண்புகளையும் பரிமாறிக்கொண்டு வாழ்ந்த நிலையைப் பண்டைத் தமிழகத்தில் காண்கிறோம். இனி, நாட்டின் செல்வச் செழிப்புக்குக் காரணமாய்ப் பல்வகைத் தொழில் முயற்சிகளையும் அவர்களது வாழ்க்கை நிலைகளையும் காண்போம்.

# 3. நாற்பால் குலம்

## சமுதாய அமைப்பு

நானில மக்களின் பொதுவகையான வாழ்வும், நகர மாந்தரின் வாழ்க்கை நிலையும், சூழ்நிலைக்கேற்ற வண்ணம் வெவ்வேறு வகையாக அமைந்திருக்கக் கண்டோம். வேறுபாடு தெரிதற்கு நானிலப் பகுப்பின்படி கூறப்பட்டாலும், இவர்கள் ஒருவருக்கொருவர் அடுத்து வாழ்ந்து தங்களது பொருள்களைப் பரிமாறிக் கொண்டு வாழ்ந்தனர். கானிலுறையும் வேட்டுவன் தான் வேட்டை யாடிய மானின் தசையை வட்டிலில் எடுத்து வந்தும், ஆய்மகள் தயிர் முதலியவற்றைத் தாழியில் கொண்டுவந்தும் மருதநிலத்தார்க்குக் கொடுத்துவிட்டு மாற்றாக அவர்கள் அளித்த நெல்லைப் பெற்றுச் சென்றனர். இவ்வாறே கடல்வாழ் மக்களாகிய பரதவர்களும், உமணர்களும், தாம் ஈட்டிய மீனையும் உப்பையும் பிறநிலங்களில் கொண்டு கொடுத்து உணவு தானியங்களை அதற்கு ஈடாகப் பெற்றனர் (புறம். 33:1-6), உழவர் தூற்றிய பொலியிலுள்ள தூசுகள் பக்கத்தேயுள்ள உப்பு வயல்களில் சென்று படிந்ததினால் வெள்ளிய உப்பு சிதைந்ததாம். இதனால், மாறுபட்ட பரதவர் கழனி உழவரோடு பகைகொண்டு சேற்று நிலத்தினிலே செருச் செய்தனராம். அப்பொழுது உழவர் நுளையர்க்கு முதிர்ந்த கள்ளைச் சமாதானத்தின் அறிகுறியாக வழங்கினராம். இத்தகைய நிகழ்ச்சிச் சித்திரம் அகநானூற்றுப் பாடலில் (366) காணப்படுகிறது. இவ்வகை நிகழ்ச்சிகளிலிருந்து ஒரு பகுதியில் வாழ்ந்த மக்களே தொழில் முறையால் வேறுவேறு பெயருடன் வழங்கப்பட்டனர் என்பது போதரும்.

## நாற்பெருங்குலத்தினர்

நானில மக்களைப் போன்றே அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் எனப்படும் நாற்பெரும் குலத்தாரும் தொழில்முறை

யால் வேறுபட்டுத் தனித்தனிக் குழுவினராய் வாழ்ந்தனர் என்றும் தெரியவருகின்றது. இவர்களது வாழிடங்கள் ஒரூரிலேயே ஒன்றை யொன்றை யடுத்து தனித்தனிச் சேரிகளையும் தெருக்களையும் கொண்டிருந்தன (பரிபாடல் திரட்டு 1:18-27). இந்நால்வர்க்குரிய இயல்புகளையும் தொழில்களையும் தொல்காப்பியர் தமது மரபியலில் எடுத்துக் கூறியுள்ளார் (தொல். மரபு. 71-84) ''வேற்றுமை தெரிந்த நாற்பால்'' என்று புறத்தில் வருவதும் இக்கருத்துப் பற்றியே (புறம். 183).

## அந்தணர்

இவர்களுள் அந்தணர் வேதம் ஓதி, அறுதொழில் புரிந்து, முத்தீப்பேணி, அரசர் பொருட்டாகவும் பிறர் பொருட்டாகவும் வேள்வி முதலியன செய்து எல்லாருடைய போற்றலுக்கும் உரியராய் வாழ்ந்தனர். ''இருபிறப்பாளரென''ப் போற்றப் பட்டனர். மார்பில் பூணூல் தரித்திருந்தனர். நெருப்பினை வழி பட்டனர். இவர் வாழ்ந்த இல்லம் சாணத்தால் மெழுகப்பட்டிருக்கும். வழிபடும் தெய்வங்களும் அங்கு உண்டு.

இல்லத்தையடுத்த குறுங்கால் பந்தரில் பசுங்கன்றுகள் கட்டப்பட்டிருக்கும். இவர்தம் வீடுகளில் கோழிகளும் நாய்களும் வளர்க்கப்படுவதில்லை. அவ்வில்லத்தில் வசித்த கிளிகள் கூட வேத ஒலி செய்தனவாம். இவர் நெற்சோற்றைக் கொம்மட்டி மாதுளையின் பசுங்காயோடு மிளகுப் பொடி சேர்த்தும் மாவடு ஊறுகாய் செய்தும் பசுவின் மோரோடும் உண்டனர் (பெரும். 297-310).

இவர்களைக் கொண்டு பேரரசர்களும், குறுநில மன்னர்களும், செல்வர்களும் யாகங்களைச் செய்வித்தனர். இவர்க்கு நிலமும் பொன்னும் பிற பொருள்களையும் தானமாக அளித்தனர். நிலப்பகுதிகளும் மானியமாகத் தரப்பட்டன (புறம். 122:1-3; 367:4-5; 361:4-6; பதிற்று. 64:3-6).

இவர்களில் ஒரு சிலர் துறவிகளாய்த் தவ ஒழுக்கத்தில் சிறந்து, அறநெறி வழுவாமல் அன்புடைய நெஞ்சத்தோடு வாழ்ந்தனர். முக்கோல், கமண்டலம், கல்லாடை முதலிய சின்னங் களையும் கொண்டிருந்தனர். உலகத்தை ஒரு தன்மையராய் எண்ணும் நிலையில் விளங்கி, மேலுலகத்தை இவ்வுலகத்தி லிருந்து அடையும் வழியில் சென்றனர். இவர் வாழ்ந்த தவச்சாலைகள் ''அந்தணர் பள்ளி'' என்று அழைக்கப்பட்டன (மதுரை. 468-474).

வேறுசிலர் அரசரையடுத்து அவர்க்கு அறிவுரை கூறுபவ ராய் அரசியலிலும் ஈடுபட்டனர். மன்னர் முதலியோர்க்காகத் தூது செல்வதும் உண்டு. பாரியின் நண்பராக விளங்கிய கபிலர் இவ் வகுப்பைச்சார்ந்தவர். இவர்கள் ஊன், மது ஆகியவற்றை நீக்காமல் அருந்தினர் என்பதும் தெரியவருகிறது (புறம். 113) வேள்வி செய்யாத பார்ப்பனர் சங்கு அறுத்தல் முதலிய தொழில்களிலும் ஈடுபட்டிருந்தனர் என்றும் தெரியவருகிறது (அகம். 24:1-3).

பொதுவாக அந்தணர்கள் சமூகத்தில் சிறந்த ஒழுக்கம் உடையராக மதிக்கப்பட்டனர், இவர்கள் வருந்தும்படியான எச்செயலையும் மன்னர்கள் புரிவதில்லை (புறம். 43:13-15). மன்னர்களும் பார்ப்பனரிடம் பண்புடன் நடந்தனர். ''பார்ப்பார்க் கல்லது பணிபு அறியலையே'' (பதிற். 63:1) என்பது பதிற்றுப்பத்து. ''இறைஞ்சுக பெரும நின் சென்னி, சிறந்த நான்மறை முனிவர் ஏந்துகை எதிரே'' (புறம். 6:19-20) என்று பாண்டியன் பல்யாக சாலை முதுகுடுமிப் பெருவழுதிக்கு அறிவுரை வழங்குகிறார் காரிகிழார்.

## அரசர்

மன்னர்களின் அரண்மனையும் பிற பரிவாரங்களும் கோநகர்களில் விளங்கியிருந்தன. இவருக்குக் கொடி, குடை, முரசு, பூ, வாள் முதலிய தனிச் சின்னங்களும் நால்வகைப் படைகளும் உரியவாய் இருந்தன.

'படையும் கொடியும் குடையும் முரசும்
நடை நவில் புரவியும் களிறும் தேரும்
தாரும் முடியும் நேர்வன பிறவும்
தெரிவு கொள் செங்கோல் அரசர்க்கு உரிய
(தொல். மரபு. 72)

எனவரும் இத்தொல்காப்பியச் சூத்திரத்தினால் அரசர்க்குரிய சின்னங்களை அறியலாம்.

அரசியலில் இவர்க்கு உதவ அமைச்சர் முதலிய ஐம் பெருங்குழு இருந்தது (மதுரைக்காஞ்சி. 510) அரசனுக்கு அண்மை யில் மெய்க்காப்பாளர் எப்பொழுதும் காவல் புரிந்து வந்தனர். (முல்லை. 50-54) இக்காவற்படையில் யவனர் எனப்படும் கிரேக்க நாட்டு மிலேச்சர்கள் இடம்பெற்றிருந்தனர் (முல். 65-66).

இவர்கள் பாணர், கூத்தர், இரவலர் முதலியவர்களுக்கு அருங்கலன்களை வழங்கியும் யானை முதலியவற்றைப் பரி சளித்தும் புரந்தனர். புலவர்களைப் பெருஞ்சிறப்புடன் வரவேற்று, அவர்தம் அறிவுரைகளைக் கேட்டு, அவர்களுக்கு உண்டி முதலியன அளித்து உபசரித்துப் போற்றினர். வேந்தவையில் நீதி வேண்டி வருவார்க்கு - அறங்கூறு அவையத்தின் மூலம் நீதி வழங்கினர். அந்தப்புரத்தில் மகளிருடன் இன்பமாகப் பொழுது போக்கினர். தன் நாட்டிற்குப் பகைவரால் கேடு நேர்ந்தபொழுது படைகளுடன் பாசறையில் சென்று தங்கிப் பெரும் போர்களில் ஈடுபட்டதும் உண்டு.

அரசர்களின் வாழ்க்கையில் நிகழ்ந்த பல நிகழ்ச்சிகளைப் பேரெயின் முறுவலார் பாடிய புறப்பாட்டொன்று தெளிவுற விளக்குகின்றது.

'தொடியுடைய தோள் மணந்தனன்;
கடிகாலில் பூச் சூடினன்;
தண் கமழும் சாந்து நீவினன்;
செற்றோரை வழி தபுத்தனன்;

*நட்டோரை உயர்பு கூறினன்;*
*வலியர் என, வழிமொழியலன்;*
*மெலியர் என, மீக்கூறலன்;*
*பிறரைத் தான் இரப்பு அறியலன்;*
*இரந்தோர்க்கு மறுப்பு அறியலன்;*
*வேந்துடை அவையத்து ஓங்குபுகழ் தோற்றினன்*
*வருபடை எதிர் தாங்கினன்;*
*பெயர்படை புறங் கண்டனன்*
*கடும் பரிய மாக் கடவினன்;*
*நெடுந் தெருவில் தேர் வழங்கினன்*
*ஓங்கு இயல்களிறு ஊர்ந்தனன்;*
*தீம்செறி சதும்பு தொலைச்சினன்*
*பாண் உவப்பப் பசி தீர்த்தனன்;*
*மயக்குடைய மொழி விடுத்தனன்; ஆங்குச்*
*செய்ப எல்லாம் செய்தனன் ஆகலின் -*
*இடுக ஒன்றோ! சுடுக ஒன்றோ!*
*படுவழிப் படுக; இப்புகழ் வெய்யோன் தலையே!*
*(புறம். 239)*

இப்பாடல் அரசரது வாழ்க்கை நிகழ்ச்சிகளை அழகுறத் தொகுத்து வைத்தல் நோக்கத்தகும்.

## வணிகர்

வணிகருடைய முக்கிய தொழில் - வணிகமே. இவர் வாழ்ந்த இல்லங்கள் மலை போன்று உயர்ந்து விளங்கின. பல வகைத் தொழில் மாட்சிகள் பெற்று இருந்தன. இவற்றின் கூரைகளிலே பருந்துகள் தங்கி இளைப்பாறி இருந்து மேலே பறக்குமாம். அறனெறி சிறிதும் பிழையாது இல்லறத்திற்குரிய வழிகளிலேயே வாழ்க்கை நடத்தினர். பல்வகைப் பண்டங்களும் பல்வகை உணவுகளும் இவர்கள் இல்லங்களில் நிரம்பியிருந்தன.

மலை, நிலம், நீர் இவைகளிலிருந்து தோன்றும் பல்வகைப் பண்டங்களும் விற்றனர். மணி, முத்து, பொன் முதலிய சிறந்த

பொருள்களும் இடம்பெற்றன (மதுரைக்காஞ்சி 500-506). இப் பொருள்களில் உண்ணுவ, பூசுவ, பூண்ப, உடுப்பவை, மண்ணுவ முதலியவற்றிற்குத் தேவைப்பட்ட பொருள்கள் எல்லாம் இவர்கள் இடத்தில் கிடைத்தன. தேவர்களை வழிபட்டும், வேள்வியில் ஆவுதி செய்தும், பசுக்களையும் எருதுகளையும் ஓம்பியும் வாழ்ந்த னர். நான்மறையோர்க்குத் தானமளித்து உணவு முதலியன கொடுத்தனர். நடுநிலையில் இருக்கும் நெஞ்சத்தவர், கொடுப்ப திலும், கொள்வதிலும் கூடுதல் குறைவின்றி நேர்மையாக வாணிகத் தைப் போற்றினர். இவர் ''புண்ணியம் முட்டா தண்ணிழல் வாழ்க்கை'' (பட்டின. 194-21 உடையர் என்று சிறப்பிக்கப்படுவர். இவர்கள் வாழ்ந்த தெருவினை,

> ''ஆங்கு ஓர்சார் உண்ணுவ, பூசுவ, பூண்ப, உடுப்பவை
> மண்ணுவ, மணி, பொன் மலைய கடல்
> பண்ணியம், மாசு அறு பயம்தரு கருகப்
> புண்ணிய வணிகர் புனை மறுகு ஒருசார்''
> (பரிபாடல் திரட்டு. 1:22-25)

எனப் பரிபாடல் இயம்புகிறது.

## வேளாளர்

உழவுத் தொழிலால் நெல் முதலிய பொருள்களை விளை விக்கும் உழவர், நாட்டின் உயிர்நாடியாகக் கருதப்பட்டனர். மென்புலத்துத் தாம் விளைவிக்கும் உணவுப் பொருள்களை வன்புலத்து வாழும் ஏனைய மக்களுக்குக் கொடுத்து உதவினர் ''விளைக வயலே, வருக இரவலர்'' (ஐங்குறு. 2) என்னும் கோட் பாட்டோடு வருவார்க்கு வரையாது வழங்கினர். கதிர் அரிவார் கீழ்மடையில் கொண்ட மீனையும், உழவர் உருபடையால் வெளிப்பட்ட ஆமையும், கரும்பில் இருந்து எடுத்த தேனையும் சேர்த்து மகளிர் பறித்துவந்த பூக்களோடு வரும் விருந்தினர்களை ஓம்பினர் (புறம். 42:12-18).

இரந்தோருடைய வெறுங்கலங்கள் நிறையப் பொருள் களை நல்கினர். கள்ளையும் விருந்தினர்க்கு வழங்குவது உண்டு

(மலை படு. 454-470; சிறுபாண். 177-195) 'உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத்தோரே, உண்டி முதற்றே உணவின் பிண்டம்'' (புறம். 18:19-20) என்றபடி உணவுப்பொருள்களை உலகத்திற்கு வழங்கி உயிர்களைப் புரக்கின்ற பெருந்தொழிலுக்கு அடிநிலையாக இருப்பவர்கள் இவ்வேளாளர்களே. அரசர்கள் வெற்றிமாலை சூடுவதும் இவர் செய்யும் பெருந்தொழிலினால்தான்.

> *''பொருபடை தரூஉம் கொற்றமும் உழுபடை*
> *ஊன்றுகால் மருங்கின் ஈன்றதன் பயனே''*
>
> *(புறம். 25-26)*

என இவ்வுண்மையை வெள்ளைக்குடி நாகனார் என்னும் புலவர் கிள்ளிவளவனுக்கு எடுத்து மொழிகின்றார். இதிலிருந்து இவ் வேளாளர்களின் பெருமை நன்கு புலனாகிறது.

## பழங்குடி மக்கள்

துடியன், பாணன், பறையன், கடம்பன் என்னும் நால் வரும் பழங்குடி மக்களாகப் புறநானூறு கூறுகிறது.

> *'துடியன், பாணன், பறையன், கடம்பன் என்று*
> *இந்நான் கல்லது குடியும் இல்லை.'*
>
> *(புறம். 335:7-8)*

**இவர்களுள் பாணன் என்பான் யாழிசையில் வல்லவனாய்ச் செல்வர்களின் போற்றுதலுக்கு உரியவனாய் உள்ளான். தலை மகனுக்கு வாயிலாகத் தலைவிபால் தூது செல்லும் தொழிலும் இவனுக்கு உண்டு (கலி. 85:22-23; கலி. 95:10-11) துடியன், பறையன் என்னும் பெயர்கள் 'துடி', 'பறை' என்னும் கருவிகளை இயக்கு தலால் உண்டான பெயர்கள் ஆகும். இந்நால்வரும் 'இழி பிறப் பாளர்' என்றும் 'இழிசினர்' என்றும் கூறப்படுகின்றனர். இதனால் 'புலையன்' என்றும் இவர்களைக் குறிப்பதுண்டு.**

போர்ப்படையிலும் இவர்கள் துடி முழக்கியும் வீரர் களுக்கு ஆயுதம் முதலியன கொடுத்தும் உதவினர். போருக்கு பூக் கொள்ளுமாறு வீரர்களை அழைத்து, பறையறையும் தொழிலும் இவர்களுக்குண்டு. ''பூக்கோள் இன்று என்று அறையும் மடிவாய் தண்ணுமை இழிசினன் குரலே'' (புறம். 289:8-10)

*''வில்லுழுது உண்மார் நாப்பண் ஒல்லென*
*இழிபிறப்பாளன் கருங்கை சிவப்ப,*
*வலி துரந்து சிலைக்கும் வன்கண் கடுந்துடி''*
*(புறம். 70:4-7)*

*''மலையன் மா ஊர்ந்து போகி புலையன்*
*பெருந்துடி கறங்கப் பிறநலம் புக்கு''*
*(நற். 77-1-2)*

என வருவன போர்ப்பறை கொட்டும் தொழில் இவர்க்குண்டு என்பதைத் தெரிவிக்கிறது.

*''துடியன் கையது வேலே அடிபுணர்*
*வாங்கிரு மருப்பிற் றீந்தொடைச் சீறியாழ்ப்*
*பாணன் கையது தோலே'' (புறம். 285:2-4)*

என்று புறநானூறு கூறுவதால் துடியன் போரில் வீரர்களுக்கு வேலையும், பாணன் வீரர்களுக்கு 'தோல்' என்னும் கிடுக்குப் படையையும் அளித்தார்கள் எனத் தெரியவருகிறது.

இவர்கள் தழைமாலை, பூமாலை முதலியவற்றை அணிந்து கொள்வர் (புறம். 242; 269:6-8) பாணர்களுக்கு மீன் பிடித்தல் தொழிலும் மீனைச் சீவிப் பக்குவம் செய்யும் தொழிலும் உண்டு (புறம். 348:3-4).

மதுரையிலுள்ள பாணர்சேரி நகரின் புறஞ்சேரியை யடுத் துள்ளது என மதுரைக்காஞ்சி கூறுகிறது (332-342). இதனால் இப் பாணர் முதலியன பழங்குடி மக்கள் ஏனைய முத்தாயத்தாரை விட

ழிந்தவராயும் ஒதுக்குப்புறங்களில் வாழும் மக்களாயும் கருதப் பட்டனர் என்று கொள்ளலாம்.

# வேற்று நாட்டவர்

## வேற்றுநாட்டு மக்கள்

தமிழர் வாணிகத்தின் பொருட்டு வேங்கடத்திற்கு அப் பால் உள்ள பிறமொழி வழங்கும் தேசங்களுக்கும் இமய வரைக்கு அப்பாலும், கடல்வழி ஈழம், கடாரம் முதலிய கடல்கடந்த நாடுகளுக்கும் சென்றது போலவே, பிறமொழியாளரும் தமிழகத்து வருவாராயினர் (குறு. 11, அக. 31:15; 67:12; 211:8; 295:17, அக. 69:10-12. 251:10-19; 281:8-12). யவனர் எனப்படும் மேலைநாட்டினர் வணிக நிமித்தம் வந்ததோடு, தமிழக மன்னருடைய காவற்படை யிலும் கலந்து பணியாற்றினர் என்று தெரிகிறது (முல்லை. 64-65; நெடுநல். 29-35) போர்ப்படைகளில் பலமொழி பேசும் மக்கள் சேர்ந்திருந்தனர்.

*'பல்நூறு அடுக்கிய வேறுபடு பைஞ்ஞிலம்*
*இடம் கெட ஈண்டிய வியன்கண் பாசறை*
*களம் கொளற்கு உரியோர் இன்றித் தெ...*
*உடன் வீழ்ந்தன்றால் அமரே'* (புறம். 62:10-13)

என வரும் புறப்பாட்டுப் பகுதியில், 'வேறுபடு பைஞ்ஞிலம்' என்பது பல்வேறு படை மாக்களைக் குறிச் ... இப்பாடல் அடிகட்குப் பழைய உரைகாரர்,

''பலநூறாக அடுக்கப்பட்ட பதினெண்பாடை மாக்க ளாகிய படைத்தொகுதி இல்லையாம்படி தொக்க அகன்ற இடத்தை யுடைய பாடிய வீட்டின்கட் போர்க்களம் தமதாக்கிக் கொள்ளு தற்கு உரியோர் ஒருவர் இன்றிக்கண்டார்க்கு அச்சம்வர உடனே மடிந்தது பூசல்''

என எழுதியுள்ள விளக்கமும் ஈண்டு நோக்கத்தகும்.

சங்க இலக்கியங்களில் யவனர்களைக் குறித்துப் பத்து இடங்களில் குறிப்புகள் உள. முல்லைப்பாட்டு,

*'உடம்பின் உரைக்கும் உரையா நாவின்*
*படம்புகு மிலேச்சர்'* *(முல்லை. 65-66)*

என இவரை மிலேச்சர் என்று குறிப்பிடுகிறது. நெடுநல் வாடையிலும் (31-35) புறநானூறு 343ஆம் பாட்டிலும் பொது வகையாக இவரைக் குறித்துக் கூறப்பட்டிருக்கிறது. ஆயினும், சந்தர்ப்பத்தை நோக்கும்போது அவை யவனரைக் குறித்துக் கூறி யதே என ஐயமின்றித் துணியலாம். ஏனைய ஏழிடங்களிலும் யவனர் என்னும் பெயர் வழக்கே வந்துள்ளது (முல்லை. 61, பெரும்பாண். 316, பதிற்று. பதிகம். 2; அகம். 57, 149, நெடுநல். 101-102, புறம். 56).

இவர்கள் அரசர்களின் மெய்காப்பாளராய்ப் பணியி லிருந்ததைவிடவும் வியாபார நோக்கோடு வந்தவர்களே பெருந் தொகையினராவர். இல்லங்களில் ஏற்றுதற்குரிய 'ஓதிமவிளக்கு' (அன்ன விளக்கு) 'பாவை விளக்கு' என்பன இவர்களால் அழகுறச் செய்து கொண்டு வரப்பட்டன. (பெரும்பாண். 316-319, நெடுநல். 101-102), மேலும், அவர்கள் தம் கலங்களில் தங்கமும் மது வகை களும் ஏற்றிவந்து தமிழகத் துறைகளில் விற்று மிளகு பெற்றுச் சென்றனர்.

மேலைக் கடற்கரையில் உள்ள முசிறியை மிளகுத் துறை என்றே கூறலாம்.

*- சேரலர்*

*'சுள்ளிஅம் பேரியாற்று வெண்நுரை கலங்க,*
*யவனர் தந்த வினைமாண் நன்கலம்*
*பொன்னொடு வந்து கறியொடு பெயரும்*
*வளம் கெழு முசிறி'* *(அகம். 149-7-11)*

என்று யவனர் மிளகினைப் பொன்னுக்கீடாகப் பெற்றுச் சென் றமை விவரிக்கப்பட்டுள்ளது. முசிறித் துறைமுகத்தில் வீடுகளில் மிளகு மூட்டைகள் குவித்து வைக்கப்பட்டிருந்தன. இவற்றை கழித்தோணிகளில் ஏற்றிச்சென்று கலங்களில் சேர்த்து மீண்டும் பொன்னாகிய விலையைப் பெற்றுக் கரையில் சேர்த்தனராம். மலைபடுபொருள் கடல்படு பொருள்களை ஒருங்கு தொகுத்து இத்துறைமுகம் வருபவர்க்கு ஈந்ததாம்.

*'மனைக்குவை இய கூறி மூடையால்*
*கலிச் சும்மைய கரைகலிக் குந்து;*
*கலம் தந்த பொற்பரிசம்*
*கழித் தோணியான் கரை சேர்க்குந்து;*
*மலைத் தாரமும் கடல் தாரமும்*
*தலைப்பெய்து, வருநர்க்கு ஈயும்*
*புனல் அம் கள்ளின் பொலந்தார்க் குட்டுவன்*
*முழங்கு கடல் முழவின் முசிறி அன்ன*
*நலஞ்சால் விழுப் பொருள்'* *(புறம். 343:3-11)*

என்பதனால், யவனர் தம் வணிகத்தால் இந்நகர் செல்வச் செழிப்பு மிக்கு விளங்கியமை போதரும்.

## ஆரியர்கள்

வேற்று நாட்டார் தொடர்பு ஒருபுறமிருக்க, வடநாட்டி லிருந்து வந்து ஒன்றிய ஆரியர் கலப்பினால் தமிழரது வாழ்க்கையில் ஆரியப் பண்பாடுகள் சில புகுந்ததோடு, அவர்தம் மொழியாகிய ஆரியமும் தமிழ்மொழியுடன் சிறிது சிறிதாகக் கலந்து பெருக லாயிற்று. ஆரியர் தெற்கில் தமிழகத்தில் குடியேறியது எப்பொழுது என்பது சங்க நூல்களைக் கொண்டு வரையறுக்க இயலாது போயினும், அந்நாளில் ஆரியர் தொடர்பு காலூன்றி வளரத் தொடங்கிவிட்டமையைக் காணுகின்றோம்.

ஆரியர்கள் தமிழினத்தின் வேறுபட்டவர் என்பதும் வட இமயம் சார்ந்து வாழ்ந்த இனத்தினர் என்பதும், இவ் இனத்தினர்க்

கும் தமிழ் மன்னர்களுக்கும் போர்கள் நிகழ்ந்தன என்பதும், ஆரியர் கூட்டுறவும் கலாச்சாரக் கலப்பும் தமிழகத்து நேர்ந்தது என்பதும் சங்க இலக்கியத்தில் வரும் ஒருசில குறிப்புகள் கொண்டு அறியலாம். முள்ளூரில் ஆரியர் மிகுதியாக நெருங்கி வாழ்ந்தனர் என்பது, 'ஆரியர் துவன்றிய பேரிசை முள்ளூர்' (நற். 170:6) என்பதனால் பெறப்படும். இவ்வாசிரியர் இமயத்தை அடுத்து நெருங்கி வாழ்ந்தவர் என்பது,

*'ஆரியர் துவன்றிய பேர் இசை இமயம்'* *(பதிற்றுப். 11:23)*

*'ஆரியர் பொன்படு நெடுவரை'* *(அகம். 398:18-19)*

என வருவனவற்றால் விளங்கும்.

ஆரியத் தலைவர்களுக்கும் தமிழக மன்னர்களுக்கும் போர்கள் பல அவ்வப்போது நிகழ்ந்திருத்தல் வேண்டும். ஒருசில போர்களைப் பற்றிய குறிப்புக்களையும் பின்வரும் பாடல்களில் காணலாகும்.

*' பேர் இசை மரபின் ஆரியர் வணக்கி'* *(பதிற்று. 4 பதிகம்)*

*ஆரியர் அலறத்தாக்கிப் பேர் இசைத்*
*தொன்று முதிர் வடவரை வணங்கு வில்பொறித்து,*
*வெஞ்சின வேந்தரைப் பிணித்தோன்*
*வஞ்சி அன்ன என் நலம் தந்து சென்மே'*
*(அகம். 396:16-19)*

*''கடவுள் பத்தினிக் கற்கோள் வேண்டி*
*கான் நவில் கானம் கணையின் போகி*
*ஆரிய அண்ணலை வீட்டி, பேர் இசை*
*இன்பல் அருவிக் கங்கை மண்ணி*
*இனம் தெரிபல் ஆன் கன்றொடு கொண்டு*
*மாறா வில்வில் இடும்பில் புறத்து இறுத்து''*
*(பதிற்று. 5-ஆம் பத்து, பதிகம் 4-9)*

மாரி அம்பின் மழைத் தோல் சோழர்
வில் ஈண்டு குறும்பின் வல்லத்துப் புறமிளை
ஆரியர் படையின் உடைக என்
நேர் இறை முன்கை வீங்கிய வளையே''

(அகம். 336:20-23)

புறநானூற்றில் 183ஆம் புறப்பாடலைப் பாடியவன் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் ஆவன். பாண்டியர்களுள் ஆரியப்படைகளை வென்றவர்களில் இவனே பெருவெற்றி கொண்டவன் போலும், இவற்றால் மூவேந்தர்களில் ஒருசிலர் இமயம் வரை படையெடுத்துச் சென்று, ஆரிய மன்னரை அடக்கித் தங்கள் பெருவெற்றியை நிலைநாட்டினர் என்பது புலனாகும்.

## ஆரியச் சொற்கள்

பண்பாட்டு (கலாசார) முறையிலும் ஆரியர் கலப்பு மிகுதியாயிருந்தது என்று தெரியவருகிறது. ஆரியச் சொற்கள் தமிழ் மொழியில் ஓசை வேறுபாடு இன்றியும், தமிழோசைக்கு ஏற்ப ஒரு சில மாறுபாடுகளுடனும் வழங்கத் தலைப்பட்டன. அவற்றின் வழக்குப் பயிற்சி மிகுதியாகவே சான்றோர் இலக்கியங்களிலும் அவை புகுந்தன. இது கண்ட இலக்கண ஆசிரியராகிய தொல்காப்பியர் தமிழ்ச் சொற்களோடு ஆரியமொழிச் சொற்களையும் ஒரு கூறாகக் கொண்டு அவற்றை 'வடசொல்' என்னும் பெயரால் தழுவிக் கொள்கின்றார். அவற்றின் வழக்கியல்பினையும் புலப்படுத்துகின்றார்.

''இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் என்று
அனைத்து செய்யுள் ஈட்டச் சொல்லே''

(சொல். எச்.1)

என்பது முதலாக வரும் எச்சவியல் சூத்திரங்களில் அவ்வட சொல்லின் இயல்பு கூறப்படுதல் காணலாம்.

மேலும், ஒருசில செய்திகளை விளக்கும்போது, வடநூல் மரபுடன் ஒப்பிட்டுப் பேசுவது கொண்டும் அம்மரபுகள் தமிழகத்தி லும் நன்கு தெரிய வந்தனவாக இருந்தது என்பது பெறப்படும்.

*'இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு*
*அன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கின்,*
*காமக் கூட்டம் காணும் காலை*
*மறையோர் தேஎத்து மன்றல் எட்டனுள்*
*துறை அமை நல்யாழ்த் துணைமையோர் இயல்பே'*
*(தொல். பொருள். களவு.1)*

*எல்லா எழுத்தும் வெளிப்படக் கிளந்து,*
*சொல்லிய பள்ளி எழுதரு வளியின்*
*பிறப்பொடு விடுவழி உறழ்ச்சி வாரத்து,*
*அகத்து எழுவளி இசை அரில் தபநாடி,*
*அளபின் கோடல் அந்தணர் மறைத்தே,*
*அஃது இவண் நுவலாது எழுந்து புறத்து இசைக்கும*
*மெய்தெரி வளிஇசை அளவு நுவன்றிசினே*
*(தொல். எழுத். பிறப்பு 20-21)*

எனவரும் சூத்திரங்கள் மேலதற்குச் சான்றாம். இன்னும் இவர் அந்தணர், அரசர், வைசிகர், வேளாண் மாந்தர் இயல்புகளை மரபியலில் உரைத்துள்ளமையும் ஆரியரை ஒக்க நாற்பால் குலம் தமிழகத்து வேரூன்றியமையைப் புலப்படுத்தும்.

ஆரியவரசன் பிரகத்தனைத் தமிழறிவித்தற்குக் கபிலர் பாடியது குறிஞ்சிப் பாட்டு என்று கூறப்பட்டிருக்கிறது.

யானையைப் பழக்கும் தொழிலில் ஈடுபட்டுள்ளவர் ஆரியர் என்று குறிப்பிடுகிறார்.

*ஆரியர்*
*'பிடிபயின்று தரூஉம் பெருங்களிறு போல'*
*(அகம். 276:9-10)*

எனவருவது காண்க. யானைக்கு வடமொழி பயிற்றி, அதனால் அதனைப் பழக்கி வசப்படுத்தினர் என்றும் தெரியவருகிறது.

''தேம் படுக வுள சிறுகண் யானை
கனவமுட் கருவியின் வடமொழி பயிற்றி
கல்லா இளைஞர் கவளம் கைப்ப''
(முல்லைப். 31-37)

''பெரு வெறிப் பிணிமார்
விரவு மொழி பயிற்றும் பாகர் ஓதை''
(மலைபடு. 326-327)

எனவரும் பாடப்பகுதிகள் மேலதற்குத் தக்க சான்று ஆம்.

பாணன் என்பானொடு மற்போர் செய்த ஆரியப் பொருநன் செய்தியை அகநானூற்றுப் பாடல் ஒன்று கூறுகிறது (அகம். 386). ஆரியக் கூத்தர் கழைக் கூத்தாடுதலும் தெரிய வருகிறது (குறுந். 7).

`இங்ஙனமாக வரும் பல செய்திகளால் ஆரியர் கலப்பு பல்வேறு வகையாகத் தமிழகத்து வந்து வேரூன்றியமை பெறப் படும். வேத்நெறியோடு புத்த, சமண சமயங்களின் கொள்கைகள் வந்து தமிழகத்தில் மோதியபோதும் ஆரியக்கலப்பு சமயச் சார்பில் மிகவும் நேர்ந்தது. பௌத்த, சமணப் பள்ளிகளைக் குறித்து மதுரைக்காஞ்சி கூறுகிறது (461=467, 475-487) இதனாலும் ஆரியப் பண்பாடு தமிழர் வாழ்விலும் மிகுவதாயிற்று.

யவனர், ஆரியர் முதலிய வெவ்வேறு தேசத்து வாழ்ந்த பல்வேறு இனத்தார் தமிழக மக்களுடன் வேறுபாடு இன்றி ஒன்றி இன்பமாக வாழ்ந்தனர் என்றும் தெரியவருகிறது.

'மொழிபல பெருகி பழிதீர் தேஎத்துப்
புலம்பெயர் பாக்கள் கலந்து இனிது உறையும்
முட்டாச் சிறப்பின் பட்டினம் (பட்டி. 216-218)

எனக் காவிரிப்பூம்பட்டினத்தில் பல்மொழியாளர் ஒருங்குகூடி ஒற்றுமையுடன் வாழ்ந்தமை குறிக்கப்பட்டிருக்கிறது. இங்கே, பலமொழி பேசுவாரை 'மாக்கள்' எனக் கவிஞர் குறிப்பிட்டமை குறித்து நச்சினார்க்கினியர், 'மாக்கள் என்றார் ஐயறிவு உடையராத லின் என்றது சோனகர், சீனர் முதலியோரை' என்று விளக்கம் தருகின்றார். 'ஈழத்து உணவும் காழகத்து அக்கமும் அரியவும் பெரியவும் நெளிய ஈண்டி' (பட்டின. 191-192) என்ற இடத்தும் இவ்வுரைகாரர், சிங்களம், கடாரம் என்னும் தேசங்களில் உண்டான நுகர்பொருள்களைக் குறித்ததோடு, 'அரியவும்' என்பதற்கு, 'சீனம் முதலிய இடங்களினின்றும் வந்த கருப்பூரம், பனிநீர், குங்குமம் முதலியனவும்' என்று விளக்கம் எழுதியுள்ளார். இதனால் தமிழக எல்லைக்கு வடபால் பாரதநாடு முழுமையிலும் உள்ள மொழி பெயர் தேசத்தினரும் இவற்றைச் சூழ்ந்து கிடக்கும் இலங்கை, பர்மா, சீனம் முதலிய தேசத்தினரும் மேற்கே மிகு தொலைவி லுள்ள யவனர், சோனகர் முதலியோரும் தமிழக மக்களோடு தொடர்பு கொண்டவராய் வாழ்ந்த வேற்றுநாட்டார் என்பது போதரும்.

## கொற்றவனும் குடிகளும்

மன்னனைக் குடிமக்கள் வாழ்த்திப் போற்றினர். தம் மன்னனுக்கு வெற்றி மிக வேண்டும்; புகழ் பெருக வேண்டும் என்று தெய்வத்தை வேண்டினர். குரவைக் கூத்தாடிய ஆயர் மகளிர் தம் அரசன் வெற்றி பெறவும் பிரார்த்திக்கின்றமையைக் கலித் தொகையுள் காணலாம் (கலி. 104:78-80; 105:71-75; 106:48-50). இதனால் மக்கள் கொண்டாடும் முக்கிய நிகழ்ச்சிகளில் அரச வாழ்த்தும் இடம்பெற்றிருந்தது என்று கருதலாம். மேலும், அரசரை அடுத்துச் செய்தி கூறுவார் முதற்கண் அவரை வாழ்த்திப் பின்னர் குறித்த செய்தியை மொழிதலும் மரபாகும்.

நாடு வளம் சிறந்ததாய், நாட்டிற்கு உயிராக விளங்கும் மன்னன் அறநெறி பிறழாது முறைசெய்து குடிகளைக் காத்தலோடு, அந்நாட்டில் வாழ்வாரும் சிறந்த குறிக்கோள் உடையராய் இருத்தல் வேண்டும். ஒரு நாடு காடு அடர்ந்ததாயிருப்பினும், நிலம் வளம்

கொழிக்கும் நாடாக இருந்தாலும் சரி. அல்லது அந்நாடு பள்ள மானாலும் மேடானாலும் சரியே. அங்கு வாழும் மக்கள் தத்தம் கடமைகளைச் சரிவரச் செய்பவர்களாய், நல்லவர்களாய் இருப்பாராயின், அந்நாடே நல்ல நாடு என்னும் புகழுக்கு உரிய தாகும்.

*'நாடா கொன்றோ; காடா கொன்றோ*
*அவலா கொன்றோ; மிசையா கொன்றோ*
*எவ்வழி நல்லவர் ஆடவர்*
*அவ்வழி நல்லை; வாழிய நிலனே!'*

*(புறம். 187)*

என்பதனால் நல்லார் சேர்ந்திருக்கும் நாடே யாவரும் விரும்பும் நாடு ஆம்.

மக்களும் அரசும் தவறு புரியும் காலத்து, அவர்தம் குறை களை எடுத்துக் காட்டி அறிவுரை தந்து, அவர்களை நல்வழியில் நடத்துவதற்கு வழிகாட்டியாய் அமைந்த சான்றோர்களும், அருந்தவர், முனிவர் முதலிய பெரியோர்களும் அந்நாளில் வாழ்ந்த் னர். இவர்களை உலகமாகிய பெரிய மரக்கலம் கவிழ்ந்து விடாதபடி காத்துச் செலுத்தும் மீகாமர் என்று கூறலாம். இத்தகு பெரியோர்களின் இயல்பு குறித்து செந்நெறியும் சீரிய குறிக் கோளும் என்னும் இறுதி இயலில் விரிவாகக் காணலாம்.

## தொழிலும் தொழிலாளரும்

நானில மக்களுக்கும் மேற்பாற் குலத்தினர்க்கும் தத்தம் வாழ்க்கைத் தொழில்களுக்கு வேண்டும் துணைக்கருவிகளைச் செய்தளிக்கும் பணியில் ஈடுபட்ட தொழில் மாந்தர் பலராவர். இவரைக் 'கம்மியர்', 'தொழுவர்' என்று அழைப்பர் இப்பெயர் களுள் 'கம்மியர்' தொழில் செய்வார் என்னும் பொருளில் வந்தன என்று கருதுவர் (மதுரைக். 521; 89) உடல் வருத்தி உழைத்தலினால் நல்ல உறுதி பெற்ற உடலினையுடையராய் வாழ்ந்தனர். [illegible]

மேந்தோல் இரும்பை வடித்துத் தருத்தியதைப் போல் சுருக்கமின்றி இருந்ததாம். ''இரும்ப வடித்தன்ன மடியா மென்தோல், கருங்கை வினைஞர்'' (பெரும். 222-223) 'கருந்தொழில் வினைஞர்' (சிறுபாண். 257) என்று கூறப்படுகின்றனர். இவர்களுள் தச்சர், கொல்லர், குயவர், பொன் செய் கம்மியர் முதலியவர்களைச் சிறப்பாகக் குறிப்பிடலாம்.

## கொல்லர்

இவர் இரும்புக் கருவிகளைச் செய்பவர். இவரது உலைக் கூடத்தில் நெருப்பைத் தூண்டுவதற்கு உலை இருக்கும். இரும்பைக் காய்ச்சி அடிக்கும் கூடம், சூடான பொருளைப் பற்றி எடுப்பதற்குரிய கொடிறு (இடுக்கி), இரும்பை வைத்து அடித்தற் குரிய பட்டடை, வெம்மையை ஆற்றுவதற்குரிய நீர்த் தொட்டி முதலியன அமைந்திருக்கும். காய்ச்சி அடித்த இரும்பினது வெம் மையை நீக்குவதற்கு நீர்த்தொட்டியிலிருக்கும் நீரை மடலால் எடுத்துத் தெளிப்பான் (நற். 133:9-11). துருத்தியை ஊதும்போது உலை நெருப்பிலிருந்தும், காய்ச்சிய இரும்பை அடிக்கும்போது சூட்டிரும்பிலிருந்தும் சிறுசிறு நெருப்புப் பிதிர்வுகள் தெறிக்கும். இப்பிதிர்வுகளை வேங்கை மரத்திலிருந்து கழன்று விழுகின்ற பூக்களுக்கு உவமை கூறுவர் (நற். 13:5-7; அகம். 202:5-8.) இவ்வகை உலைகள் மிதித்தும், ஊதியும் இயக்கப்பட்டன (பெரும். 206-208; நற். 125:3-4) உலையிலிருந்து வெளிவருகின்ற பெருங் காற்றைத் துன்பத்திலிருப்பவர் வெளிவிடும் பெருமூச்சுக்கு ஒப்பிடுவர் (நற். 125:3-4, அகம். 224:2-3). கூடம் அடிக்கும் ஓசையால் அருகிலுள்ள இல்லங்களில் இருந்த புறாக்கள் உறக்கம் தீர்ந்தது என்று ஓரிடத்தில் கூறப்பட்டிருப்பதால் (பெரும். 436-440) இக்கொல்லர்களின் உலைக்களம் ஊர்களிடையே இருந்தது என்பது தெரியவருகிறது. உலைக்களம் சிறியதாக அமைந்திருந்தது. சொல் துறைக் குற்றில் (புறம். 95:5) என வருவதால் அறியலாம். இவர் இரும்பு செய்கொல்லன் (பெரும்பாண். 436) என்று சிறப்பிக்கப் படுகின்றனர். போருக்குரிய கருவிகளை வடித்துத் தருவதும், களிறுகளின் கொம்புகளுக்குப் பூண் அமைப்பதும் யானைகளைக் கட்டுவதற்குரிய சங்கிலிகளைச் செய்வதும் (மதுரைக்காஞ்சி 382-383) இவர்களுடைய பணியாகும் (புறம். 312:3; 95:4-5).

## தச்சர்

இவர்கள் மரவேலை செய்பவர். எனவே இவர் ''மரங் கொல் தச்சன்'' (புறம். 206:11) எனச் சிறப்பிக்கப்பட்டுள்ளனர். மழு, உளி, முடுக்கு, கருவி, எறிகுறடு முதலியன இவர்தம் ஆயுதங்கள். இவர்கள் கலப்பை முதலியன செய்வதோடு இல்லங்களுக்குரிய நிலை முதலியவற்றையும் ஆக்குவர். வண்டி, தேர் முதலிய ஊர்திகளும் இவரால் செய்யப்படுவன. யாழை ஆக்குபவரும் இவரே (புறம். 206:11-13; 290:4-5; நெடுநல். 85-86; சிறுபாண். 256-258), இவர்கள் மரத்தால் இயன்ற பலபொருள்களை மிகுதியாக ஆக்கி நாட்டிற்குதவினர் (புறம். 87:2-4). தச்சச் சிறுவர்கள் தங்கள் தொழிலுக்கு வேண்டிய மரங்களைக் காட்டில் சென்று வெட்டி எடுத்துவருவர் (புறம். 206:11-13). இச்சிறுவர் கூடப் பிறர் பாராட்டும் வகையில் சிறுதேரைச் செய்கின்றனராம் (பெரும் பாண். 248-249).

## பொன் செய் கம்மியர்

இவர் பொன்னை நெருப்பில் உருக்கி ஆபரணங்கள் செய்து தருபவர். ''சூடுறு நன்பொன் சுடரிழை புனைவார்'' (மதுரை. 512) என்று இவர்தம் இயல்பினை மதுரைக்காஞ்சி கூறும். வேங்கையின் பூ, இவர் செய்யும் பொற்பணிகளைப் போல அழகுற்று விளங்கு கிறதாம் (நற். 313:1-3). பொன்னின் மாற்றை அறிதற்குக் கட்டளை எனப்படும் உரைகல் உண்டு (பெரும்பாண். 220). தாது அளைந்து வரும் வண்டின் தோற்றம் பொன்னுரைகல் போல் உள்ளது என்பர் (நற். 25:3-4). ஆபரணம் செய்யும் தட்டாரோடு பொன்னுரை காண் தட்டாரும் பணித்தட்டாரும் வெவ்வேறு பணிகளைச் செய்தனர்(நற். 25:3-4). 'ஆபரணம் செய்யும் தட்டாரோடு பொன் னுரை காண்பர்' (மதுரை. 513) என தனிப்படக் கூறுதலின் உரை காணும் தட்டாரும் பணித்தட்டாரும் வெவ்வேறு பணிகளைச் செய்தனர் என்பது தெரிய வருகிறது.

## செம்பு செய் கம்மியர்

செம்பை நிறுத்து வாங்கி, பானை முதலிய கலங்களைச் செய்வதற்கு மண்ணால் உரு செய்து, செம்பை உருக்கி வார்த்து அமைப்பர். இதற்குரிய மண்ணைத் துறைகளிலிருந்து எடுத்து வருவர் (மதுரை. 514; நற். 363:4-6). உலோகத்தால் செய்த பாத்திரங்களைக் கடைந்து அழுத்தம் கொடுப்பர். கடைகின்ற பொழுது மின்னல் போல் ஒளி தோன்றும் (நற். 153:2-3).

## முத்து மணிகளில் பணி செய்வார்

முத்தையும் மணியையும் மூடியிருக்கும் மாசினைப் போக்கி ஒளிபெறச் செய்து அவற்றிற்குத் துளை முதலியன இடும் பணி செய்வாரும் ஒருவகை கம்மியர் (நற். 94: 4-6).

தமிழகத்தில் பொன் மேற்கு மலையில் காவிரி தோன்றுமிடத்தையடுத்தும், கொண்கானம் நாட்டிலும் கிடைத்தது (புறம். 166:27-28; நற். 331:6-8) பந்தர் என்ற ஊரில் பலரும் புகழும்படியான முத்துக்கள் கிடைத்தன (பதிற்று. 67:2-4; 74:6).

பொன், மணி, முத்து, பவழம் ஆகியவற்றைக் கொண்டு விலைமதிப்புடைய ஆபரணங்களைச் செய்தனர். அணிகளுக்கு உதவிய பொருள்களை,

> ''பொன்னும், துகிரும், முத்தும், மன்னிய
> மாமலை பயந்த காமரு மணியும்
> இடைபடச் சேய ஆயினும், தொடைபுணர்ந்து
> அருவிலை நன்கலம் அமைக்குங்காலை
> ஒருவழித் தோன்றியாங்கு...'' (புறம். 218:1-5)

என்று புறநானூற்று அடிகள் தெளிவாக எடுத்துக் கூறுகின்றன.

கொடுமணம் என்னும் ஊர் நல்ல அணிகலன்களுக்குப் பெயர்பெற்று விளங்கியது (பதிற்று. 67:1-4; 75:5).

## சங்கு அறுப்போர்

இத்தொழில் வேளாளப் பார்ப்பார்க்கு உரியதாம்.' வாள் அரத்தினாலே சங்குகளை அறுத்துச் சுத்தம் செய்வர் (அகம். 241:1-2) சங்கிலிருந்து வளையல்களும் செய்வர் (அகம். 24:1-2) சங்கு வளையல் செய்வோரைக் ''கோடு போழ் கடையினர்'' என மதுரைக் காஞ்சி கூறுகின்றது

## குயவர்

குயவர் ''கலம் செய்கோ'' என்றும் ''வேட்கோ'' என்றும் (புறம். 228:1; 256:1; 32:3) அழைக்கப்பெறுகிறார். மண்ணைக் கொண்டு வலக்கைக் கலங்களைச் செய்து சூளையில் சுட்டு மண்பாண்டங்களை மக்களுக்கு வழங்குவர். கலங்களை வனைதற்குத் திகிரி என்னும் கருவியில் மண்ணை வைத்துத் தண்டினால் சுழற்றி, தங்கள் கை வண்ணத்தினால் தங்களுக்கு வேண்டிய பல்வேறு வகையான மண்பாண்டங்களைச் செய்வர். இத்தொழிலில் இவர்களுடைய சிறுவர்களும் ஒத்துழைப்பர் (புறம். 32:8-9). இக்குயவர் நொச்சிமாலை அணிந்து தெருக்களில் சென்று ஊரில் நிகழும் விழா நிகழ்ச்சிகளை அறிவிக்கும் பணியும் செய்வர். விழாவிற்காக மன்றத்தில் கள் முதலிய பலிகளை அளித்தலும் இவர்களுடைய உரிமைத் தொழில்களாகும். (நற். 200:3-4; 293:1-4).

## ஆடை நெய்வோர்

வன்புலத்துக் காடுகளில் இல்லங்களை யடுத்து, வேலி போல், பருத்தி பயிரிட்டனர். 'பருத்திவேலிச் சீறூர்' (புறம். 299:1) 'பருத்தி வேலிக் கருப்பை பார்க்கும், புன்புலம் தழீஇய அங்குடிச் சீறூர் (புறம். 324:7-8) என வருவன நோக்கத்தகும். இதன் பூவைப், பாரம் (குறிஞ். 92) எனக் குறிப்பதுண்டு. முதிர்ந்து வெடித்த பருத்திக் காயிலிருந்து கிடைக்கும் பஞ்சை வில்லால் அடித்துச் சுத்தம் செய்வர் (நற். 299:7-8). இந்நெய்தல் தொழிலில் சிறியவரும் பெரியவரும் ஈடுபட்டிருந்தனர். இவரைக் 'கம்மியர்' என்று

மதுரைக்காஞ்சி அழைக்கிறது (521-2) இவர்கள் நெய்த ஆடைகளைத் தெருவில் கொண்டு சென்று விற்பதும் உண்டு. நூலாடைகளைக் 'கலிங்கம்' 'சிதார்' 'மடி' என வழங்குவர். பட்டினால் நெசவு செய்யக்கூடியவர்களும் இருந்தனர். பட்டாடை களின் ஓரங்களில் முடிச்சுகள் செய்து அழகு செய்தனர் (பெரு. 155). இராக் காலத்தில் பட்டாடையை நீக்கி நூலாடை அணிதல் உண்டு என்று தெரிவதனால் இருவகை ஆடைகளை நெய்யும் மக்கள் இருந்தனர் என்பது தெரியவரும் (பட்டினம். 107)

## கிடைச்சு மூங்கில் முதலியவற்றால் பணி செய்யும் தொழிலாளர்கள்

கோரை, கிடைச்சு, மூங்கில், பனம்போழ், நார், முதலியவற்றைக் கொண்டு கூடை, முறம், கட்டில் முதலியன அமைத்த தொழிலாளர்கள் இருந்தனர். இவ்வகைத் தொழில் செய்வார் இழிந்த குலத்தினராகக் கருதப்பட்டனர். ''கட்டில் நிணக்கும் இழிசினன் கையது, போழ்தூண்டூசியின் விரைந்தன்று'' (புறம். 82:3-4) 'மாதர்ப் புலைத்தி விலையாகச் செய்தது ஓர், போழின் புனைந்த வரிப்புட்டில், (கலி. 117:7-8) என வருவன மேலதற்குச் சான்றாம்.

## மனை வகுப்பார்

சிற்ப நூல் அறிந்த தச்சர்கள் கூடி மன்னர்க்கேற்ற வகையில் மனை வகுத்த செய்தி நெடுநல் வாடையில் (76-78) கூறப்பட்டுள்ளது. பல நிலைகளோடு கூடிய பெரிய மாளிகைகளோடு சிறிய இல்லங்களும் இவர்களால் ஆக்கப்பட்டன. பெரிய மாளிகைகள், ஓவியச் சிறப்புடன் சிறந்து விளங்கின. ''வேறுபட்ட வினை ஓவத்துவெண் கோயில்'' (பட்டி. 49-50) என்பது பெரிய மாளிகையைச் சுட்டும். 'சிற்றில் நற்றூண் பற்றி' (புறம். 86:1) என்று குறிப்பிடப்படுவது சாதாரண மக்களின் இல்லங்களைக் குறிக்கும்.

## ஓவமாக்கள் (ஓவியர்கள்)

எவ்வகைப்பட்ட செய்திகளையும் காட்சிகளையும் ஒப்புக் காட்டி வரைந்தளிப்பவர். துகிலிகையைக் கொண்டு அரக்கு முதலிய வண்ணங்களைத் தோய்த்துச் சித்திரம் வரைந்தனர். நோக்கினார் கண்ணிடத்தே தம் தொழிலை நிறுத்துதல் பற்றிக் ''கண்ணுள் வினைஞர்'' (மதுரைக். 516-518) என்றும் இவர்களை அழைப்பர். அழகிய காட்சிகளுக்குச் சித்திரங்களை ஒப்புக்காட்டும் மரபும் உண்டு. ''ஓவத்தன்ன கோவச் செந்நிலம்'' (அகம். 98:11-12) எனவருவது இதற்குச் சான்றாம். சித்திரங்களை எழுதிய மண்டபங்கள் தெய்வக் கோயில்களில் அமைந்திருந்தன. இதனை, ''எழுத்து நிலை மண்டபம்'' என்பர் (பரி, 19:53.) திருப்பரங் குன்றத்தில் அமைந்திருந்த எழுத்து நிலை மண்டபத்திலுள்ள காட்சிகளை மக்கள் கண்டு களித்து அவற்றைச் சுற்றி அச்சித்திரங் களின் கருத்தினைக் குறித்து, ஒருவருக்கொருவர் உரையாடினர் என்று (பரி. 19:46-53) தெரியவருகிறது.

## மடைத்தொழில் (உணவு சமைப்பார்)

உணவு சமைக்கும் பகுதியை 'அட்டில்' என்பர். உணவு சமைத்தலால் இது கரிய நிறத்துடன் விளங்குவதும், மக்கள் தனிப் பட்ட ஆக்கி உண்ட உணவு வகைகளும் பல இடங்களில் குறிக்கப் பட்டுள்ளன. ''ஊன்துவை கறி சோறு'' சமைத்தும் (புறம். 14:12-13) கோல்களில் கோத்து இறைச்சியைச் சுட்டும் (புறம். 105) புளிங்கூழ் முதலியன சமைத்தும், கள் முதலிய பானங்களை ஆக்கியும் பல்வேறு வகையான சமையல் தொழில்களைச் செய்தும் வந்தனர். சமைக்கின்ற பாத்திரத்தை 'அடுகலம்' என்றும் (புறம். 32:17) சமைக்கின்ற பெண்பாலரை 'அடுமகள்' (புற. 399) என்றும் குறிப்பர். அறச்சாலைகளில் மிகுதியான அளவில் உணவாக்கிப் படைக்கும் மடைத்தொழிலாளர்கள் இருந்தனர். இச்சாலைகளில் சோறு வடித்த கஞ்சி ஆறு போலப் பரந்து சென்றனவாம் (பட்டினப். 44-46). அறச்சாலைகளில் உண்ணுவார் ஆரவாரமும் மிகுந்து இருந்தனவாம்.

*''கொண்டைக்கடன் ஏன்ற கோடா நெஞ்சின்*
*உதியன் அட்டில்போல ஒலி எழுந்து'*

*(அகம். 168:6-7)*

இவ்வாறு உதியன் அட்டிலை வருணித்துள்ளனர். சமையற் கலையைப் பற்றிய நூல்களும் இருந்தன. வீமன் இயற்றிய சமையல் கலை நூல் முறையில் அடிசில் ஆக்கப் பெற்றமையைச் சிறுபாணாற்றுப்படை கூறுகிறது (238-241). ஊன் உணவு ஆக்கும் தொழிலில் வல்ல மடையன் வாள்வடுப்பதிந்த வலிய கையை உடையவனாய் இருந்தமையைப் பெரும்பாணாற்றுப்படை,

*'கொடுவாள் கதுவிய வடுஆழ் நோன்கை*
*வல்லோன் அட்ட பல்ஊன் கொழுங்குறை'*

என்று குறிப்பிடுகிறது.

## ஆடை ஒலிப்போர் (புலைத்தி)

ஊரவர்களின் அழுக்கு உடைகளை எடுத்துச்சென்று நீரில் தோய்த்து வெளுக்கும் மக்களும் இருந்தனர் (கலி. 72:13-44). இத்தொழிலைச் செய்பவள் 'புலைத்தி' என்று அழைக்கப்படும் பெண்பாலராவர். உவர் நிலத்தில் கிணறு தோண்டி துணி வெளுத்தனராம் (புறம். 311:1-2). ஆடைகளுக்குப் பசை தோய்த்து அவற்றைப் பெரிய திரியைப் போல் முறுக்கிக் குளத்தில் இட்டு தோய்த்தனராம் (குறு. 330:1-3; அகம். 34:11-12; 387:6-7). விழா நாட்களில் இவர்கள் மிகுதியான ஆடைகளை வெளுத்துக் கொடுத்தனர் (நற். 90:1-4) வெளுக்கப்பட்ட ஆடை ''கழுவுறு கலிங்கம்'' (குறு. 167:2) எனப்படும்.-

## மருத்துவர்

மக்கட்கு நேரும் பிணியறிந்து மருந்து கொடுக்கும் தொழிலில் ஈடுபட்டவர் மருத்துவர் என்று அழைக்கப்பட்டார் (கலி. 137:24-25). உற்ற நோய்க்கு ஏற்ற மருந்தைத் தேர்ந்து

அளித்தனர் (கலி. 63:10-13; 81:18; 107:27). மருந்து துன்பத்தைத் தீர்த்து உயிரை நிலைபெறச் செய்ததாம் (கலி. 32:15; 44:21) மருந்தினால் நோயுற்றார் தெளிந்து யாக்கை தேறிவருதல் ''திருந்திய யாக்கையுள் மருத்துவன் ஊட்டிய மருந்துபோல் மருந்து ஆகி மனனுவப்ப'' (கலி. 17:18-20) என்பதால் தெரியவருகிறது.

## அரசர்க்குரிய பணியாளர்

### அமைச்சர்

அரசர்க்கு அறிவுரையளிக்கும் அமைச்சர் முதற்கொண்டு அரண்மனையில் குற்றேவல் புரியும் ஏவலாளர் ஈறாகப் பல்வேறு பணியாளர் அரசரைச் சூழ்ந்து காணப்படுகின்றனர். அமைச்சரைக் 'காவிதி மாக்கள்' என்பர். காவிதி என்பது இவர்க்கு மன்னரால் அளிக்கப்படும் ஒரு பட்டப் பெயராகும். இது போன்றே 'ஏனாதி' என்னும் பட்டப்பெயரும் சிலருக்கு வழங்கப்பெற்றது (புற. 167; கலி. 86;17). இவ்வமைச்சர் மார்பில் சந்தனம் பூசியவர்களாய்த் தலையில் துகில் மடித்தவராய் காணப்பட்டனர். நன்று தீது ஆய்ந்து, அறத்தின் வழுவாது, மன்னர்க்கு அரசக்காரியங்களை அறிவுறுத்தி வந்தனர். இவரைச் செம்மை சான்ற காவிதி மாக்கள் (மது. 499) என்று சிறப்பிக்கின்றார் மாங்குடி மருதனார் (மது. 493-499).

### நாற்பெருங்குழு

அமைச்சரோடு அரசர்க்கு அரசியலில் உதவ நாற்பெருங் குழுவினரும் இருந்தனர். இவர்கள் தமது மொழியினால் மேம் பட்டு விளங்கினர். இவர் புரோகிதர், சேனாபதியர், தூதர், ஒற்றர் என்னும் நால்வர் ஆவர். தூதர், ஒற்றர் இவர்தம் பணிகளைப் பற்றிய செய்திகள் சிலவற்றைப் புறநானூறு, பதிற்றுப்பத்து பாடல் களிலும் பிற தொகைநூல் பாடல்களிலும் அறியலாம்.

### அறங்கூறு அவையம்

நீதித்துறையில் மன்னர்க்கு உதவ ''அறங்கூறு அவையம்'' என்னும் ஒரு பகுதி இருந்தது. இவர்கள் துலாக்கோல் போன்ற

நடுநிலைமையுடன் துன்பமும் பற்றுள்ளமும் இன்றி, சினமும் உவகையும் கொள்ளாது, நீதி வழங்கினர் (மதுரை. 489-492).

## மெய்க்காப்பாளர்

மயிர்க்கட்டுக் கட்டிச் சட்டையிட்ட மெய்க்காப்பாளர் தூக்கமின்றி மன்னரைக் காத்து நின்றனர் (முல்லை. 50-54). இத்தொழிலில் சட்டையிட்ட மிலேச்சர்களும் ஈடுபட்டிருந்தனர் (முல்லை. 65-66).

## நாழிகைக் கணக்கர்

பொழுதினை யறிந்து மன்னர்க்கு அறிவிக்கும் பணியாளர் நாழிகைக் கணக்கர் எனப்படுவர். இவர் கன்னல் என்னும் நாழிகை வட்டிலினால் காலத்தைக் கணித்து அறிவர் (முல்லை. 55-58).

## பெண்பணியாளர்

அரசனது அந்தப்புரத்தில் பெண்பணியாளர் பலர் இருந்தனர். இளம் பெண்களாக அமைந்த தோழியரும் முதுபெண்களாக அமைந்த செவிலியர்களும் அரசிக்கேற்ற பணிகளைச் செய்தனர் (நெடுநல். 149-156). அரண்மனையில் அதிகாலையில் இசை எழுப்பி மன்னர்க்குத் துயிலுணர்த்தும் சூதரும் இருந்து புகழ் கூறும் மாகதரும், புகழ் பாடும் வேதாளிகர் களும் மன்னர் புகழ் பாடினர். காலை முரசம் முழக்கும் பணியாளர் முரசறைந்தனர் (மதுரை. 670-672).

## நகரக் காவலர்

நகரத்தையும் நாட்டையும் காக்கும் காவற்பணியில் ஈடு பட்ட மாந்தரும் பலராவர். நகரக் காவலர் களிற்றின் இருப் பிடத்தை யறியும் புலியைப்போல, கள்வர் ஒதுங்கியிருக்கும் இடத்தைப் பிறரறியாதபடி தெரிந்துகொள்ளும் திறமையர். இவர் துயிலாத கண்ணையுடையவர். எதற்கும் அஞ்சாத ஆண்மை

யுடையர் (மதுரை. 643-647) 'யாமம் கொள்பவர்', 'யாமம் காவலர்' என்றும் இவரைக் குறிப்பிடுவதுண்டு. இவர்களின் காவல் தொழிலின் பொழுது மணியடித்துச் செல்வதும் உண்டு (நற். 132:9-10: குறு ':3-4) இவர்கள் துஞ்சாக் கண்ணர், அருங்கடிக் காவலர் என்று சிறப்பிக்கப்பட்டுள்ளனர். (அகம். 122:6; அகம். 162:7; 2: 14).

## கடை காப்பாளர்

நகரிலுள்ள கடைகளைக் காப்பதற்கும் தனிக்காவலர் இருந்தனர். கடைகளுக்கு மிகக் காப்பான வாயில்கள் அமைத்து இருந்தனவாகத் தெரியவில்லை. சட்டக் காலை வாங்கி நெடிய கடையை அடைத்து உறங்கினர் என்பதால் (மதுரை. 621-623) கடைவாயிலை மறைப்பதற்குத் திரை போன்ற ஓரமைப்பு இருந்தது என்றும், திறக்கும்போது சட்டக்கால்களில் அவற்றைத் தூக்கி நிறுத்திவிடுவர் என்றும் கொள்ளலாம். வணிகர் நிறைந்த தெருக்களில், அவர்தம் ஏவலரும் இவ்வகைக் காவல் பணிகளைப் புரிந்து வந்தனர் (பெரும். 322-324).

## நீர்நிலை காப்பார்

பெரிய நீர்நிலைகளைக் காப்பதற்கும் காவற் பணியாளர் அமைந்திருந்தனர். இவர்களும் மழைக்காலங்களில் இரவில் துயிலாது ப்ணிபுரிந்தனர் என்று தெரிய வருகிறது.

> ''தொழில் மழை பொழிந்த பானாட் கங்குல்
> எறிதிரைத் திவலை தூஉம் சிறு கோட்டுப்
> பெருங்குளம் காவலன் போல
> அருங்கடி அன்னையும் துயில் மறந்தனளோ?''
> (அகம். 252:11-14)

எனவரும் அகப்பாடல் அடிகள் இதற்குச் சான்றாம்.

## நாற்பெரும்படை

நாடு காவற்குத் துணையாக நாற்பெரும்படைகளை மன்னர் பாதுகாத்து படை வலிமையால் செருக்குடன் வாழ்ந்தனர்.

''நெடுநல் யானையும், தேரும், மாவும் படை அமை மறவரும் உடையம் யாம்'' என்று மன்னர்கள் செருக்குற மொழிந்ததாகத் தெரிகிறது (புறம். 72:4-5).

> 'கடுஞ் சினத்த கொல் களிறும், கதழ்பரிய கலிமாவும்,
> நெடுங் கொடிய நிமிர்தேரும், நெஞ்சு
> உடையபுகல் மறவரும், என
> நான்குடன் மாண்டது ஆயினும்' (புறம். 55:7-9)

எனவரும் புறப்பாட்டடிகள் ஓர் அரசர்க்கு நாற்படைகளும் மாட்சிமைபெற அமைந்திருந்தன என்பதை உணர்த்தும். இவற்றுள் படைக்குரிய குதிரைகள் பிறநாட்டினின்று இறக்குமதி செய்யப் பட்ட பொருள்களில் ஒன்று (பட்டினம். 185; மதுரை. 321-323).

## குதிரைப்படை

ஆகவே குதிரைப்படை மிக அருமையாகப் போற்றப் பட்டது என்று கொள்ளலாம். காற்றைவிடக் கனவேகத்தில் செல்லும் குதிரைகளைப் பழக்கிப் போர்களில் ஈடுபடுத்தினர் (புறம். 304:3-4) குதிரைப்படை கொண்டு எதிரியின் படையை அழித்தலைக் 'குதிரை மறம்' என்பர் (புறம். 273; 299; 302; 304).

## யானைப்படை

யானைகள் தமிழகத்து மலைகளில் மிகுதியாகக் கிடைத் தமையின் யானைகளைப் பிடித்துப் பழக்கியும் அவற்றைப் போரில் ஈடுபடுத்தியும் வந்தனர். ஆய் என்னும் மன்னவன் யானைப் படைகளை மிகுதியாக உடையவன் எனத் தெரிய வருகிறது.

யானையைப் பிடிக்கவும், அவைகளைப் பழக்கித் தொழி லில் ஈடுபடுத்தவும், அவைகளுக்கு வேண்டிய உணவை அளிக்கும் தொழிலாளர்கள் இருந்ததாகத் தெரிய வருகிறது. பெரிய காடுகளில் குழிகளை வெட்டி யானைகளைப் பிடிக்கும் கலையை உணர்ந் திருந்தனர். பெண்யானையைக் காட்டிக் குழியிலிருந்து ஆண்

யானையை மேலே ஏற்றினர் (பட்டினம். 222-225), யானையைப் பழக்குவதில் யானை மேல் ஏறிச்செல்லும் பாகரும் அருகில் இருந்து குத்துக்கோலால் வழிநடத்தும் காழோர் எனப்படும் மாந்தரும் இருந்தனர். இவர்களுக்கு மேலோர், கோலோர் என்ற பெயரும் உண்டு (மதுரை. 380-381). யானையைப் பழக்குமிடத்து இவர்கள் யானைப் பேச்சான வடமொழிகளைக் கூறிப் பயிற்சி அளிப்பர் (முல். 35-36). இவற்றின் சினத்தைத் தணியப் பண்ணி பெரிய கம்பத்திலே இரும்புச் சங்கிலியால் பிணித்து வைப்பர் (மலை. 325-327). நெற்சோற்றுக் கவளத்தை இதற்கு ஊட்டி பெருங்காவுகளிலே இவற்றைக் காப்பாற்றினர் (புறம். 337:14-15; பெரும். 393-397). யானையை நீர்த்துறைக்கும் பிற இடங்களுக்கும் கொண்டு செல்லும்போது பறையடித்து மக்கட்கு யானையின் வருகையைத் தெரிவித்து, வழி விலகி நிற்கச் செய்யும் வழக்க முண்டு (கலி. 56:32-33). யானைக்கு முன்னும் பின்னும் சங்கொலித் தும் அதன் செலவினை அறிவித்தலும் உண்டு. முன்னும் பின்னும் சங்கு ஊதல் மதம் பிடித்து அலையும் யானையின் போக்கினை அறிவித்தற்குச் செய்யும் ஓர் அறிகுறியாகும் (மதுரை. 379-385).

## போர் மறவர்

முழு வலி படைத்த மாந்தர் பலர் போர்ப்படையில் பணி புரிந்தனர். அரையில் கச்சை வாள் முதலியவற்றை அணிந்து, மார்பில் கவசம் பூண்டவராய், வில், வேல் முதலிய ஆயுதப் பயிற்சியுடையவராய் விளங்கினர் (நற். 21:13, பதிற்ந். 41:11-12, புறம். 263:5-8). இவரை 'வாளின் வாழ்நர்' (புறம். 24:29) என்றும், இவர் பிறந்த குடியை 'வாட்குடி' (பெரும்பாண். 136) என்றும் அழைப்பர். எத்தகைய தடைகள் இருந்தபோதிலும் அவற்றை அழித்துச் செல்லும் மறம்பூண் வாழ்க்கையையுடையவர். இவருக்குரிய ஆயுதங்களைக் கொல்லர்கள் வடித்துத் தந்தனர். அரசர்கள் ஆயுதங்களை எண்ணெய் முதலியன பூசிப் பாதுகாக்கும் ஆயுத சாலைகளை அமைத்து இருந்தனர் (புறம். 95). போரில் யானையை வேலால் எதிர்த்து அழித்தலைப் பெரும்பேறாகக் கருதினர். கள் முதலிய போதைப் பொருள்களை இவர்கள் உண்பர். போர்ப் படைக்குத் தம் புதல்வரை மகிழ்ச்சியுடன் அனுப்பி

வைக்கும் வீரத்தாய்மார் இயல்புகளைப் புறநானூற்றில் காண் கிறோம். வெற்றி வீரர்களுக்கு பொற்பூ முதலியவற்றையும் வீரப்பரிசாக அளித்தனர். நல்ல விளைநிலங்களையும் மான்யமாகக் கொடுத்தனர் (புறம். 312:277; 278; 279; 86).

நால்வகைப் படைகளும் மன்னர்களின் தலைநகரங்களில் மிகுதியாக இருந்தன. மதுரை மாநகரில் நால்வகைப் படைகளும் இயங்கிய தன்மையை மதுரைக்காஞ்சி விளங்க எடுத்து உரைக் கின்றது (375-394).

## வணிக மாந்தர்

நகரங்களில் உள்ள நாளங்காடி, அல்லங்காடிகளில் நிலை யாக இருந்து பல பொருள்களைக் கடைகளில் விற்பனை செய்த மாந்தர் ஒருவகையினர் (மதுரை. 621-622). துறைமுக நகரங்களில் பெரிய பண்டகசாலைகளை அமைத்துக்கொண்டு பெரிய அளவில் நீர், நில வாணிகம் செய்தோர் பிறிதோர் வகையினர் (பட்டின. 126). கடைத்தெருக்களில் பல்வேறு பண்டங்களின் விற்பனையைக் குறிக்கும் கொடியடையாளம் வைக்கப்பட்டிருக்கும். இத்தெருவை 'ஆவணம்' என வழங்கினர். ஆவணத்தில் வெறியாட்டு விழாவும் நடைபெறுவது உண்டு (பட்டின. 146-158).

கள் முதலிய போதைப் பொருள்களை விற்ற கடைகளும் இருந்தன. இவர்களைக் கள்ளோர், பழையர் என்று அழைத்தனர் (மதுரை. 662: அகநா. 831:5; 201:7).

## கனி வகைகள்

பொருள்களை உடன் கொண்டு திரிந்து வாணிகம் செய்த மக்களும் காணப்பட்டனர். துணி, பூ முதலிய வாசனைப் பொருள் கள், பலகாரப் பொருள்கள் முதலியன இங்ஙனம் விற்கப்பட்டன. 'கலிங்கம் பகர்நர்' (மதுரை. 513) 'பூவும் புகையும்' ஆயும் மாக்கள் (மதுரை. 515) 'கூவியர்' (அப்பவாணிகர்) (மதுரை. 627) என்போர் முறையே ஆடை, பூ முதலிய வாசனைப் பொருள்கள், அப்பம்

முதலிய பலகாரப் பொருள்களைத் திரிந்து விற்ற வணிகராவர். கூவியர் விற்ற மோகத்தின் தன்மையும் விவரிக்கப்பட்டுள்ளது (மதுரை. 624-627). மத்தளத்தின் கண் போன்ற பூந்தட்டிலே பூக் களையும் பலவகையாகக் கட்டப்பட்ட மாலைகளையும், பூந்தாது போன்ற பல்வேறு வாசனைப் பொடிகளையும் விற்றனர். பசிய பாக்குடனே வெற்றிலை சுண்ணாம்பு விற்பாரும் இருந்தனர். இவர்கள் பொருள்களைத் தம் கைகளில் ஏந்தி விற்கும் தன்மையர். இவ்வகையினர் ''பல்வேறு பண்ணியத் தழீஇத் திரிவிலைஞர்'' என்று அழைக்கப்பெற்றனர் (மதுரை. 395-406). பூ முதலிய வாசனைப் பொருள்களை விற்றவர் பெண்கள் எனத் தெரிய வருகிறது. இவர்களைப் ''பூவிலைப் பெண்டு'' (புறம். 293:6) என்பர். சந்தனம், அகில் முதலிய வாசனைப் பொருள்களைக் குழம்பாக அரைத்து விற்பனை செய்தவர்களும் இருந்தனர் (நெடுநல். 49-52). இப்பொருள்களை அரைக்கும் கற்கள் வடநாட்டிலிருந்து வந்தவையாகத் தெரிகிறது. ''வடவர் தந்த வர்ன் கேழ் வட்டம்'' (நெடுநல். 51). இக்கற்களைச் செய்பவன் சிறுகாரோடன் என வழங்கப்பட்டான் (அகம். 1:5-6; 356:8-9).

## உமணர் ஒழுகை

உப்பு முதலிய சில பொருள்களை வண்டிகளில் கொணர்ந்து உமணர் விற்றனர். வண்டிகளில் பொருள்களை ஏற்றி ஊர் ஊராகச் சென்று விற்கும் குழுவின் செலவை 'ஒழுகை' (சிறுபாண். 65) என்றும் அக்குழுவை வணிகச்சாத்து (பெரும்பாண். 80) என்றும் வழங்குவர். கழுதைகளின் மேலும் உணவுப் பொருள்களை ஏற்றிச் செல்லும் ஒழுகையின் இருமருங்கிலும் காவல் காத்துச் சென்ற உடல் வலியுடைய மக்களும் இருந்தனர் (பெரும். 59-62).

## வாகனங்களை இயக்குவோர்

தேர், வண்டி முதலிய வாகனங்களைச் செலுத்தியவர்கள் பாகன், வலவன் என்று குறிக்கப்பட்டனர். தேரில் பூட்டப் பட்ட குதிரைகளை ஓட்டிய தேர்ப்பாகர் தம் கைகளில் முட்கோல்

தாங்கியிருப்பர் (நற். 21:3-4); (சிறுபாண். 258-260) நீரில் செல்லும் நாவாய், தோணி முதலியவைகளை இயக்கிய மக்களும் இருந்தனர் (மதுரை. 321-323; பெரும். 432-433). தோணி இயக்கும் தொழிலில் ஈடுபட்டோர் கடைப்பட்ட குலத்தினர் என்ற ஒரு குறிப்பும், அவர் இயக்கும் நாவாயில் அவர் தம் குலம் கருதாது மேற்குலத்தார் ஏறிச்சென்றனர் என்ற செய்தியும் நாலடிச் செய்யுள் ஒன்றால் தெரியவருகிறது (14:6).

> ''தோணி இயக்குவான் தொல்லை வருணத்துக்
> கர்ணின் கடைப்பான் என்று இகழார்''

என்பது நாலடியார் (14:6) உள்நாடுகளில் நிலத்தின் வழியாகச் செல்லும்போது குறுக்கிடும் நதிகளைத் தோணிகளின் மூலம் கடந்தனர் என்பது தெரியவருவதால் நதிகளிலும் தோணியை இயக்கிய மக்கள் வாழ்ந்தனர் என்பதை அறியலாம். (நற். 159:5).

## வரி வாங்குவோர்

வணிகப் பொருள்களுக்கு வரி வாங்குபவர்களும் இருந்தனர். இவர்கள் உள்நாட்டில் கவர்த்த வழிகளிலும் (பெரும். 80-82) துறைமுகங்களிலும் (பட்டி. 124-125) காணப்பட்டனர். சுங்கத்தால் வரும் பொருள் வருவாயை 'உல்கு' என்பர்.

## கள்வர்

செல்வம் நிரம்பிய நகரங்களில் திருட்டைத் தொழிலாகக் கொண்டவரும், வணிகச் சாத்துகளைக் கொள்ளையடித்து வாழ்வோரும் சமுதாயத்தில் இருந்தனர். பேய் வழங்கும் நடு இரவே அக்கள்வர்களுக்கு உரிய காலமாகும். இக்கள்வர் கரிய ஆடை, கருஞ்சட்டை, நீலக்கச்சு ஆகியவற்றை அணிந்திருப்பர். அடியில் செருப்பு பூண்டிருப்பர். இவர்தம் கச்சில் குறுங்கத்தி தொங்கும். இடுப்பிலும் கத்தி சொருகி இருப்பர். கல், மரம் இவற்றை துண்டிக்கும் கூரிய வாளையும், கன்னம் இடுதற்குரிய உளியும் கொண்டிருப்பர். மெல்லியநூல் ஏணியை அரையில் சுற்றி இருப்பர். பிறர்

கண்ணில் படாதவாறு விழித்த கண் இமைக்கும் முன் மறைந்து விடும் இயல்பினர் ஆதலின் இவரைக் 'கண்மாறு ஆடவர்' என்பர் (மதுரை. 642). இவருடைய தொழில் நுட்பம் தெரிவிக்கும் களவு நூலும் இருந்ததாம். ஊர் காப்பாளர் களவு நூல் நுட்பம் தெரிந்து இக்கள்வரின் இயக்கத்தைத் தொடர்ந்து அவரைப் பிடித்துத் தண்டிக்கச் செய்வர் (மதுரை. 631-650).

## ஆறலை கள்வர்

வழிப்பறி செய்யும் கள்வரை ஆறலை கள்வர், 'அத்தக் கள்வர்' களியர் என்பர். இவர்கள் விற்படை கொண்டு வழிப் போவாரை வருத்தி, அவர்களிடமிருந்து பொருள் பறித்து வாழ் வோர் ஆவர் (பொருந. 202; புறம். 161:9; 9; புறம். 136:11-14). இவ்வாறலை கள்வர்களிடம் அன்பு இல்லாததால் வழிப் போவாரை துன்புறுத்திப் பொருளைப் பெறுவர் (கலி. 4:1-5).

## இரவலர்

உடல் உழைப்பு முதலியவற்றில் ஈடுபடாது இருத்த லையே தொழிலாகக் கொண்ட ஒரு கூட்டத்தினரும் இருந்தனர். இவர்கள் பிச்சை ஓட்டில் இரந்து திரிபவர்கள் (புறம். 139:2). இவர்களுடைய பிச்சையோடு மண்டை எனப்படும் (புறம். 103;3; 115;2; 125;3; 179;2-3). இசை, கூத்து, புலமை முதலிய திறமைகளைக் காட்டி தேர், களிறு, பொன், பொருள் அடைந்தவர்களையும் இர வலர் என்று குறிக்கும் வழக்கம் உண்டு. இரவலரது முகக்குறிப்பை அறிந்து அவருக்கு வேண்டுவன செய்து அவரைப் போற்றிப் புரந்த புரவலர்களும் மிக்கிருந்தனர். (புறம். 3:24-26).

## உழவர்க்கு உதவியோர்

உழவருடைய பயிர்த்தொழிலுக்கு உதவிய தொழிலாளர் களும் சிலர் உளர். இவர்களில் உழுவோர், விதைப்போர், நாற்று நடுவோர், நீர் இறைப்போர், களை எடுப்போர், நெல்லரிவோர், கடா விட்டடுச் சூடு அடிப்போர் முதலியோரை முக்கியமாகக்

குறிப்பிடலாம். நீர் இறைப்போர் கிடா எனும் இறைகூடையாலும், ஏற்றத்தின் மூலமும், கிழார் என்னும் பூட்டைப் பொறியாலும் நீரை இறைத்தனர். இக்காலத்தில் வழங்கும் கபிலையைப் போன்றது கிழார் ஆகும். (மதுரை. 89-95).

## அடிமைத்தொழிலும் குற்றவேல் தொழிலும்

'செய்துவந்தோரும் உண்டு. குற்றவேல் தொழிலைப் புரி வாரைக் குறுந்தொழிலர்', (நெடுநல்.50) என்று நெடுநல்வாடை குறிக்கிறது. இவர்கள் பிறர் ஏவிய தொழிலைச் செய்கின்ற 'வினை பலர்' ஆவர். அடியோர் என்பவர் இவரினும் வேறாகக் குறித்த ஒருவர்க்குக் கட்டுப்பட்டு உரிமையின்றி வாழும் நிலையினர் ஆவர்.

*'அடியோர் பாங்கினும்வினைவலர் பாங்கினும்*
*கடிவரை யில புறத் தென்மனார்புலவர் '*
*(தொல். அகம். 23)*

என்று இவ்விரு வகுப்பினரையும் தொல்காப்பியர் குறிப்பிடுகின் றார். அடியோர் உரிமையின்றித் தம் தலைமைக்குக் கட்டுப்பாட்டு வாழ்ந்தனர் என்பதைக் கலித்தொகையில்,

*'கொடிய எமக்கு நீ யாரை? பெரியார்க்கு*
*அடியரோ ஆற்றாதவர்' (88:3-4)*

என்று குறிப்பிட்டிருப்பதால் அறியலாம்.

## இசைகாரர்

யாழ், தண்ணுமை, வயிர்(ஊதுகொம்பு) முதலிய இசைக் கருவிகளை இயக்குவோர் இசைகாரர் ஆவார். இவர்களைப் பொதுவாக 'இயவர்' (ஐங். 215:3-4; பதிற். 17:7:19:7-8); பயிரியர் (அக.45: 11-12; 155:13-15, 238:1-2) வினையர் (நற்.108) என அழைப்பர். இயங்களை இயக்குவோரேயன்றி, பாடுவோரும் ஆடுவோரும் ஆகிய கலை வல்ல மக்களும் உள்ளனர். ஆடற்பாடற்

கலையில் ஆண் பெண் இருபாலரும் ஈடுபட்டிருந்தனர். பாடல் வல்லாரைப் பாணன், பாடினி என்பர். பொருநர், கூத்தர், என்பார் ஆடற்கலையில் சிறந்த பெண் மகள் ஆவள். எனவே, ஆடல் பாடல்களில் வல்ல இந்நால்வகையாரும் ஒன்றுகூடிச் சென்று, ஊர் மன்றங்களில் தங்கி, தம் ஆடல், பாடல் திறம் காட்டிப் பரிசில் பெற்று வாழ்ந்தனர். விழா நாட்களிலும் இவர்தம் கூத்து நிகழும். விழாவில் ஆடும் மகள் அழகிய ஆடை அணிகளைப் பூண்டு,ஆடுகளத்தே தோன்றுவாள். 'இழை அணி அல்குல் விழவு ஆடு மகளிர்' (நற். 138:9) என்பது இதற்குச் சான்றாம். அரங்கில் ஆடும் ஆடவன், கச்சு, கழல், மாலை முதலியன பூண்டிருப்பான்.

*'கச்சினன், கழலினன், தேம் தார் மார்பினன்,*
*வகை அமை பொலிந்த வனப்பு அமைதெரியல்*
*கரியல் அம் பொருநன் '* *(அகம். 79:7-9)*

என வருவது ஆடற்கலை வல்லான் அணிகளைப் புலப்படுத்து கின்றது.

## ஊர் ஊராகக் கலைஞர்

இசையில் வல்ல இம் மாந்தர் ஊர் ஊராகச் சென்று ஆடல் பாடல் நிகழ்த்தியும், விழாக் காலங்களில் தமது கலைத் திறமையைப் புலப்படுத்தியும், மக்கள் ஆதரவையும் செல்வர்கள், மன்னர்கள் ஆதரவையும் பெற்று வாழ்ந்தவர்கள். இதனால் பாணர், பொருநர், கூத்தர், விறலியர் என்னும் இவர் ஓர் இடத்தில் நிலைத்து வாழாத நாடோடி மக்கள் எனலாம்.

*'அறாஅ யாணர் அகன் தலைப்பேரூர்*
*காறு கழிவழி நாள், சோறு நசை உறாது,*
*வேறு புலம் முன்னிய விரகு அறிபொருந'*
*(பொருந. 1-3)*

*'அழியா விழவின், இழியாத் திவலின்,*
*வயிரிய மாக்கள் பண் அமைத்து எழீஇ*
*மன்றம்நண்ணி மறுகு சிறைபாடும்*
*அகன் கண் வைப்பின் நாடு'* *(பதிற். 29:7-10)*

என வருவன இவர்தம் வாழ்வின் போக்கினை உணர்த்துகின்றன. பழுத்த மரத்தை தேடியலையும் பறவையைப் போலத் தமக்கு ஆதரவு கிடைக்கும் இடங்களை நாடிச் சென்ற வண்ணமாக இவர் இருப்பர்.

> *'பழுமரம் தேரும் பறவை போல*
> *கல்லென் சுற்றமொடு கால் கிளர்ந்து திரிதரும்*
> *புல்லென் யாக்கைப் புலவுவாய்ப் பாண'*
>
> (பெரும். 4-6)

என ஒரு பாணனைப் பிறிதொரு பாணன் அழைக்கின்றபோது அப்பாணன் சுற்றத்தாருடன் கூடிப் பிழைப்பிற்கு ஏற்ற இடம் நாடிச் செல்லும் தன்மையைக் குறிப்பிடுதல் காணலாம்.

## இசைக்கருவிகள்

இவர்கள் பல்வேறு இசைக்கருவிகளைப் பையில் இட்டுத் தம்முடன் எடுத்துச் செல்வர். கூத்தர் தலைவன் ஒருவன் பையி லிட்டுக் கட்டிச் சென்ற இசைக் கருவிகளை மலைபடுகடாம் தெரிவிக்கிறது. முழவு, ஆகுளி(சிறுபறை), பாண்டில் (கஞ்ச தாளம்), கோடு(கொம்பு), நெடுந்தூம்பு (நெடுங்கியம்), குறுந் தாம்பு, குழல், தட்டை (கரடிகை), எல்லரி (சல்லி), பதலை (ஒருகண் மாக்கிணை) என்பனவும் பிறவாக்கியக் கருவிகளும் பையில் இட்டுக்கட்டி எடுத்துச் சென்றனராம். அக்கட்டுகள் பலாக் காய் கொத்துகளைப் போலக் காட்சி அளித்தனவாம் (மலை படு. 1-13); பொருநர், பாணர் என்போர் தம் கையில் தாங்கிச் சென்று யாழின் வருணனையைப் பொருநராற்றுப்படை (4-22) பெரும் பாணாற்றுப்படை (1-16) சிறுபாணாற்றுப்படை (34, 35) (மலை படுகடாம், 21-37) முதலியவற்றில் காணலாம். சீறியாழ், பேரியாழ் என்னும் இருவகை யாழினைக் கொண்டு வாசிப்பதில் தனித்தன்மை பெற்றார் முறையே சிறுபாணர், பெரும்பாணர் என்று அழைக்கப்பட்டனர். பொருநன் பெருந்தகு பாடி னியுடனும், (பொருந.47), சிறுபாணன் வாள்நுதல் விறலியரும் சூழ்ந்து வர கூத்தச் சுற்றத்தாருடன் இருந்தமையையும் (மலைபடு. 40-50) நோக்கின், பாணர், பொருநர், விறலியர், கூத்தர் இவர்

நால்வரும் ஒன்றாய் இயங்கி, ஊர்மனறங்களிலும் விழாநாட்களிலும் ஆடல் பாடல் நிகழ்த்தினர் என்பது போதரும். கூத்தரைக் 'கண்ணுளர்' (மலைபடு. 50), 'வயிரியர்' (மது. 628), 'கோடியர்' (பொருந. 57) என்றும் அழைப்பர்.

இக்கூத்தர் தம் சுற்றத்தாருடன் கூடி ஊர் தோறும் சென்று ஆடல் பாடல் நிகழ்த்தி வாழ்ந்த வாழ்க்கை முறையை அகநானூற்றில் 301-ஆம் பாடல் நன்கு விவரிக்கிறது. இப்பாடலில் காணும் செய்தி வருமாறு.

தமக்குப் பரிசிலாகக் கிடைக்கும் சிறிய உணவைப் பாது காத்து வையாது உடனுடன் உண்டு விடுவர். நீர்வாழ் முதலை வாய் பிளந்தாற்போல் உள்ள பாயால் வேயப்பெற்ற வண்டியில் இவர்கள் பிரயாணம் செய்வர். இதுதான் இவர் ஊர் என்று சொல்லுதற்கிலாதபடி, காட்டு வழிகளில் அங்கங்கே மரத்தடிகளில் தங்கி இளைப்பாறி, ஊர் ஊராதச் சென்று கொண்டிருப்பர். இவர்தம் வாழ்க்கையில் எவ்வகை இடையூறும் இல்லை. கிணைப் பறை ஒலிக்க வழிநடப்பர்; வழிகளில் காணும் எருக்கம்பூவை ஆடவர் சென்னியில் அழகுற அணிவர். ஆவிரம் பூவாலான மாலையைப் பெண்டிர் கழுத்தில் அணிந்து கொள்வாராம். குறுந்தூம்பு நெடுந்தூம்பு என்னும் வங்கியமும், தேரைக்குரல் போன்ற ஒலியுடைய வேறுபல வாச்சியங்களும் உடன்கொண்டு, பல ஊர்களுக்கும் சென்று, அவ்வூர் மன்றங்களில் கூத்து நிகழ்த்திச் செல்வாராம். இவர் சென்ற பின் நாளில் அம்மன்றத்தை காணும் ஊரார்க்கு அது பொலிவிழந்து தோன்றும், இதனால் அவ்வூரார்க்கும் துன்பவுணர்வு மிகுமாம். இதனால் இக்கூத்தர் முதலியோரின் ஆடல்பாடல்களை மக்கள் பெரிதும் விரும்பியமையும் புலப்படும்.

## ஆற்றுப்படை

இப்படி வாழ்வு நடத்தும் கூத்தர், பாணர் முதலானோர் தாம் செல்லும் வழிகளிலே ஒரு குழுவினர் பிறிதொரு குழுவினைச்

சந்திப்பர். அப்படிச் சந்திக்கும் காலத்துப் புரவலர்களிடத்துப் பரிசில் பெற்று வருவோன், பெறாதார்க்குச் செல்லும் வழி கூறி, தமக்குக் கொடை நல்கிய பெருமகனின் கீர்த்தி முதலியனவும் அவர்க்கு உரைப்பர். இம்மரபை உட்கொண்டு எழுந்த இலக்கியமே ஆற்றுப் படை ஆகும். இதனை,

*'கூத்தரும், பாணரும், பொருநரும், விறலியும்*
*ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றி,*
*பெற்ற பெருவளம் பெறார்க்கு அறிவுறீஇ,*
*சென்று பயன் எதிரச் சொன்ன பக்கமும்'*
*(தொ. பொ. புறத். 30)*

எனத் தொல்காப்பியர் வகுத்துரைக்கின்றார். இந்த ஆற்றுப்படை இலக்கியங்களில், முன்னிலையில் வரும் ஒருமைச்சொல் பன்மைச் சொற்கொண்டு முடிதல் நீக்கத் தக்கதன்று எனத் தொல்காப்பியர் வழுவமைதியைக் காட்டுகின்றார்.

*'முன்னிலை சுட்டிய ஒருமைக் கிளவி*
*பன்மையொடு முடியினும் வரைநிலை இன்றே*
*ஆற்றுப்படை மருங்கில் போற்றல் வேண்டும்'*
*(தொல். சொல். எச்ச. 66)*

என்று கூறுவர். இதற்கு உதாரணமாக, உரைகாரர் மலைபடுகடாம் என வழங்கும் கூத்தராற்றுப்படையை உதாரணங்காட்டுவார்.

## கூத்தாடுவோர்

மகளிர் விழாக் காலங்களில் துணங்கைக் கூத்து, குரவைக் கூத்தாடுதலும்; அப்பொழுது ஆடவர் அம்மகளிர்க்கு முதற்கை கொடுத்தலும் உண்டு.

*'மன்னர் குழீஇய விழவினானும்*
*மகளிர் தழீஇய துணங்கையானும்*
*யாண்டும் காணேன் மாண் தக்கோனை*

*யானும் ஓர் ஆடுகள மகளே என்கைத்*
*தோடு ஈர் இலங்கு வளை நெகிழ்த்த*
*பீடுகெழு குரிசிலும் ஓர் ஆடுகள மகனே '*

*(குறுந்.31)*

இக்குறுந்தொகைப் பாட்டில் ஆடுகளமகள், ஆடுகளமகன் எனத் துணங்காகக் கூத்தாடியவர் குறிப்பிடப்பெறுதல் காணலாம்.

*'பாடுவார் பாணிச் சீரும், ஆடுவார் அரங்கத்தாளமும்'*
*(பரி.8:109)*

*'பாடுவார் பாடல், பரவல், பழிச்சுதல்,*
*ஆடுவார் ஆல் அமர்ந்த சீர்ப்பாணி'*
*(பரி. 10:116 - 117)*

என வருதலின், இவர்கள் ஊர்களில் நிலையாகத் தங்கி, ஆடல் பாடல்களில் ஈடுபட்ட வகுப்பினராவர். இவ்வகுப்பாரும் விழாக் காலங்களில் ஆடல் பாடல் நிகழ்த்துவது உண்டு. நாடகம் ஆடுதலும் இம் மகளிர் இயல்பு. பாடுவார், ஆடுவார் என்னும் இருவகை இனத்தாரைக் குறிப்பிடுகின்றனர். இவர்கள் திருக் கோயில்களில் பாடல் ஆடல் நிகழ்த்தியோராவர்.

*'பாடுவார் பக்கம் கொண்டென,*
*ஆடுவார் சேரி அடைந்தென' (பரி. 7:31-32)*

*'நாடக மகளிர் ஆடுகளத்து அடுத்த*
*விசி வீங்கு இன்னியம் கடுப்ப (பெரும்பாண். 55:56)*
*சேரிதோறும்'*
*'உரையும் பாட்டும் ஆட்டும் விரைஇ (மதுரை. 615-616)*
*பாடல் ஓர்த்தும் நாடகம் நயந்தும்' (பட். 113)*

எனவரும் பகுதிகளால் ஊரிடத்தே நிலையாகத் தங்கி வாழ்ந்த மகளிர் தம் ஆடல் பாடல் கலை நிகழ்ச்சிகள் புலனாகும்.

*'குழல் அகவ, யாழ முரல*
*முழவு அதிர, முரசு இயம்ப*
*விழவு அருவியல் ஆவணத்து'* (பட்டி. 156-158)

என்றபடி விழாவில் இசைக்கருவிகள் இன்னிசையுடன் இவர்கள் கலைநிகழ்ச்சிகளை நடத்தினர்.

## விழாவில் ஆடும் பரத்தையர்

ஊர் விழாவில் மகளிர் பரத்தை இனத்தவராயிருந்தனர் என்றும் கருதலாம். விழவு ஆடு மகளிரொடு தலைவன் நேசம் கொண்டான் என்று கடிந்து புலவியால் பேசும் மகளிர் கூற்றுக்கள் இதற்குச் சான்றாகும்.

*'விழவு ஆடு மகளிரொடுதழூஉ தணிப்பொலிந்து,*
*மலர்ஏர் உண்கண்மாண்இழை முன்கைக்*
*குறுந்தொடி துடக்கிய நெடுந்தொடர் விடுத்தது*
*உட்ன்றனர் போலும் நின் காதலி?'*
(அகம். 176:15-18)

எனப் பேசும் இத்தலைவி கூற்றால் மேற்கூறியதன் உண்மை புலனாம்.

## ஆரியர் கழைக்கூத்து

ஆரிய நாட்டினின்று வந்த ஒருவகைக் கூத்தர் கழையை நட்டு, அதில் கயிறு கூட்டி, அக்கயிற்றின் மேல் ஆடுவர். அப்பொழுதும் பறையும் கொட்டப்படும். இதன் ஒலி வாகையின் நெற்றொலி போலக் கேட்கும் 'ஆரியக் கூத்தாடினாலும் காரியத் திலேகண்' என்னும் ஒரு பழமொழியும் வழங்குகிறது. ஆரியக் கூத்தரின் கழைக் கூத்துச் செய்தியை,,

*'ஆரியர், கயிறு ஆடு பறையின் கால் பொரக் கலங்கு*
*வாகை வெண் நெற்று ஒலிக்கும்'* (குறுந். 7:3-5)

எனவரும் குறுந்தொகைப் பாடற்பகுதியால் காணலாகும்.

## அகவலர்

மன்னர் தம் போர்க்களத்தையும் கொடை முதலியவற்றையும் சிறப்பித்துப் பாடுவார் அகவர் எனப்படுவார். இவருள் ஆண், பெண் இருபாலரும் தொழில்புரியவாராவர். இவரை அகவலன் (பதிற். 43;28), அகவன் மகள் (குறுந். 23, 298) என்பர். இவர் கையில் வெள்ளிப் பூண் கட்டிய கோல் ஒன்று வைத்திருப்பர். 'வெண்கடைச் சிறுகோல்அகவல்மகளிர்' (குறுந். 298).

> *'மன்றம் படர்ந்து, மறுகு இறைபுக்கு*
> *கண்டி நுண்கோல் கொண்டு, களம் வாழ்த்தும்*
> *அகவலன் பெறுக மாவே.'* (பதிற். 43: 26-28)

எனவரும் பகுதிகளில் இவர் தம் கையில் உள்ள கோலின் இயல்பினைப் புலப்படுத்தும், அகவன் மகளின் கூந்தலைச் சங்கு மணிக்கு ஒப்பாகக் கூறப்படுகிறது (குறுந். 23:1-3). இவள் நெல்லை முறத் திட்டுக் குறி பார்த்துச் சொல்லும் குறிகாரியுமாவாள். இவள் 'கட்டுவிச்சி' என்றும் அழைப்பர்.

## தெய்வ வழிபாட்டுக்கு வழிகாட்டியவர்

தெய்வ வழிபாடு செய்யும் முறைமையை உணர்த்தும் மாந்தரும் இருந்தனர். இவர் தேவாலய பூசகர்களாவர். வேள்வி முறை காட்டி, விழவு முதலியவற்றை முன்னின்று நடத்தி உதவியவர் அந்தணராவர். 'மா இருந் திங்கள் திங்கள் மறுநிரை ஆதிரை, விரிநூல் அந்தணர் விழவு தொடங்க ' (பரி. 11-77-78) என்பதனால் ஆதிரை விழாவை அந்தணர் தொடங்கி வைத்தமை புலப்படும். இங்ஙனமே, அம்பாவாடல் புரியும் மகளிர்க்கு முதுபார்ப்பனிமார் முன்னின்று வழிபடும் முறைமையைக் காட்டியதாகப் பரிபாடல் கூறுகிறது (பரி. 11:81-91). திருக்கோலங்களில் நாட்பலி (அக. 213:8; அக. 287:6), அந்திவிழவு, (மதுரை. 460) முதலியன நிகழ்தலும் மக்கள் சுற்றத்தாருடன் சென்று, திருக்கோயில் வலம் வந்து, பூசகர் காட்டிய முறைப்படி வழிபாடாற்றி வந்த செய்திகளும் பரிபாடல் முதலியவற்றால் தெரியவருகிறது.

முருகபூசை செய்வான் வேலன் எனப்படுவான். முருகப் பெருமானின் வேலை இவன் தாங்குதலினால் இப்பெயர் வந்தது என்பர். இவன் பச்சிலையும் பூவும் விரவித் தொகுத்த மாலை அணிந்து, மார்பில் சந்தனம் பூசியிருப்பான். இவன் வெறியாட்டு நிகழ்த்தி முருகனை வழிபடுவன். வெறியாட்டு நிகழ்த்தும் களத்தை அலங்கரித்து, கோழிக்கொடி நாட்டிப் பூவும் சாந்தும் அணிந்து முருகனை எழுந்தருளப்பண்ணுவான். முருகப்பெருமானைப் 'பாடல் முதலியவாற்றால் புகழ்ந்துபாடி, ஆட்டுமறிப்பலி கொடுத்து, தினையரிசியுடன் குருதியைக் கலந்து பலி சிதறுவான். குறவர்தம் மகளிரும் இவ்வெறியாட்டுப் பூசை நிகழ்த்தியமையை முருகாற்றுப்படை மகளிருடன் கூடி, மன்றில் குரவைக் கூத்தாட வழிபாடு செய்தலும் உண்டு (மதுரை. 611-615). இவன் கழங்குக் குறி பார்த்து நிகழ்ந்தது உரைத்தலும் செய்வன் (குறிஞ்சி.4)

# 4. மக்களின்நாள்முறை வாழ்க்கை

## வைகறையில் துயிலெழுதல்

ஒவ்வொரு நாளும் மக்கள் துயிலெழுந்ததிலிருந்து மீண்டும் படுக்கைக்குச் செல்வது வரையில் பல்வேறு காரியங்களில் ஈடுபடுகின்றனர். இந்நிகழ்ச்சிகளும் அவரவர் வாழும் இடத்திற்கும் சூழ்நிலைக்கும் ஏற்றாற்போல் சிற்சில வேறுபாடுகளுடன் காணப்பெற்றன. சூரியன் உதிப்பதற்குச் சில நாழிகளுக்கு முன்பாகவே பெரும்பான்மை மக்களும் துயில் நீத்து எழுந்தனர். தூக்கத்தினின்றும் விழிப்பூட்டுவதற்குச் சேவலின் கூவலும், பிற பறவைகளின் ஒலியும் துணைசெய்தன. விடியற் காலத்தில் கீழ்த்திசையில் தோன்றும் விடிவெள்ளியும், ஒலியும் துணைசெய்தன. விடியற்காலத்தில் கீழ்த்திசையில் தோன்றும் இயற்கை கருவியாக இருந்து உதவியது.

*'ஒண்பொறிச் சேவல் எழுப்ப ஏற்றெழுந்து'*

*(புறம். 38:1)*

*'வெள்ளி தோன்ற, புள்ளுக் குரல் இயம்ப,*
*புலரி விடியல்'*

என வருவன விடிவெள்ளியின் தோற்றமும், சேவலின் குரலும், பிற பறவைகளின் அரவமும் விடியலில் எழ மக்களுக்குத் துணை புரிந்தமையை விளக்குகிறது.

அதிகாலையில் அந்தணர் ஓதும் ஒலியும், யாழோர் முதலியோர் எழுப்பும் இசையொலியும், கோநகரங்களில் மன்னருடைய அரண்மனையில் ஒலிக்கும் காலை முரசும், அங்கே அரசனைத் துயிலெழுப்புவோராகிய சூதர், மாகதர், வேதாளிகளின் பாடல் களும் மக்களைத் தூக்கத்தினின்று எழுப்பின. (ஐங். 448, மதுரைக். 654-686; பரி. திரட்டு. 8). அரசனைத் துயிலெழப் பாடுவார் பாடும்

பாடலின் விடியற்கால நிகழ்ச்சிகளைக் கூறி மன்னனைத் துயி லெழுமாறு வேண்டினர்.

> 'வெள்ளியும் இருளிசும்பு ஏர்தரும்; புள்ளும்
> உயர்சினைக் குடம்பைக் குரல் தோன்றினவே;
> பொய்கையும் போது கண் விழித்தன; பையச்
> சுடரும் சுருங்கின்று, ஒளியே; பாடு எழுந்து
> இருங்குரல் முரசமொடு வலம்புரி ஆர்ப்ப,
> இரவுப் புறங்கண்ட காலைத் தோன்றி
> எஃகு இருள் அகற்றும் ஏமப் பாசறை,
> வைகறை அரவம் கேளியர் 'பலகோள்
> செய்தார் மார்ப எழுமதி துயில்' என,
> தெண்கண் மாக்கிணை தெளிர்ப்ப ஒற்றி,
> நெடுங்கடைத் தோன்றியேனே' (புறம். 397:1-11)

இவ்வகையாகவே பின்னாளில் தெய்வங்களுக்குத் திருப்பள்ளி யெழுச்சி பாடியதைப் பத்திப் பாடல்களில் காண்கிறோம்.

## நீராடுதல்

துயில் எழுந்ததும் குளிர்ந்த நீரில் நீராடுதலும் பெரு வழக்கமாயிருந்தது. சுனை, யாறு, குளன் முதலியவற்றிற் நீராடினர், (தொல். பொருள், 4.50; அக.358:7, குறு.113) மகளிர் 'தைந்நீராடல்' பழக்கம் அதிகாலையில் நீராடுதலின்று பிறந்துபின் நோன் பாக மலர்ந்தது. 'புதுப்புனலாடல்', 'தீது நீங்கக் கடலாடல்' (பட். 97-100) முதலியன மாந்தர் கூட்டங்கூட்டமாகச் சென்று நீராடிய சிறப்பு நிகழ்ச்சிகளாகும். தொழில் மேற் செல்வோர் தங்கள் தொழிலிடையே வெப்பமும் வியர்வையும் நீங்க நீராடினர்.

> 'நெல் அரியும் இருந் தொழுவர்
> செஞ்ஞாயிற்று வெயில் முனையின்
> தெண்கடல் தரைமிசைப் பாயுந்து' (புற. 24:1-3)

என்பது வினையாளர் தங்கள் வேலைகளுக்கிடையே வேண்டிய போது நீராடினர் என்பதனை அறிவிக்கும்.

மகளிர் விளையாட்டாயத்தாருடன் கூடி சுனையாறு, கடல் முதலியவற்றில் நீராடி மகிழ்ந்தனர் (அக. 358:7; அக. 20:8-9) என்றும் தெரிகிறது. ஆதலால், அதிகாலையில் நீராடுவதோடு பிற காலங்களிலும் மக்கள் சூழ்நிலைக்கும் தொழில் நிலைக்கும் ஏற்ற வகையில் நீராடி வந்தனர் என்பது தெரியவருகிறது. சில காலங்களில் எண்ணெய் தேய்த்தும் நீராடினர். மகவீன்ற மகளிர்க்கு உரியதாகத் தொல்காப்பியர் கூறும் 'நெய்யணிமயக்கம்' (தொல். கற்பு.5) இவ்வழக்கத்தைக் காட்டும். புதல்வர்ப் பயந்த மகளிர் ஈன்றணியை வருத்தம் நீங்கிய பின் சுற்றத்தாருடன் குளத்தில் சென்று குளித்தலை மதுரைக்காஞ்சியும் கூறுகிறது (600-603).

*'நெய்யும் குய்யும் ஆடி, மெய்யோடு*
*மாசு பட்டென்றே கலிங்கமும்'* (நற். 380:11-2)

என மகவீன்ற மகள் ஒருத்தி நெய்யாடியதனால் அவள் ஆடை மாசு படிந்தமை விளக்கப்படுகிறது. 'என்பிழி நெய்யோடு வெண் கிழி வேண்டாது' (நற்.328:8) என்பதனால் எள்ளிலிருந்து பிழிந் தெடுத்த எண்ணெயை உபயோகித்தனர் என்றும் தெரிகிறது. குளிர்ந்த நீரில் நீராடிய செய்திகள் காணப்படுகின்றதேயன்றிக் குளிப்பதற்கு வெந்நீர் பயன்படுத்தியதாகத் தெரியவில்லை. குளித்து முடிந்ததும் கூந்தலில் உள்ள நீரைப் பிழிந்து அதனை உலர விடுவர் (குறிஞ்சி. 59-60).

## மகளிர் கூந்தலை உலர்த்தல்

பெண்கள் குளித்தவுடன் பலகாலும் எண்ணெய் தடவிப் போற்றிய தம் கூந்தலுக்கு மயிர்ச்சாந்து பூசி, அந்த ஈரம் புலரும்படியாக விரலால் அம்மயிரைக் கோதிப் பிணிப்பை விடுத்து, அகிற்புகையும் ஊட்டுவர். இப்பழக்கத்தை,

*'எண்ணெய் நீவிய சுரிவளர் நறுங்காழ்த்*
*தண்நறும்தகரம் கமழ மண்ணி*
*ஈரம் புல விரல்உளர்பு அவிழா*
*காழ் அகில் அம்புகை கொளீஇ'* (குறிஞ்சிப். 107-120)

என்பதனால் அறியலாம். இங்ஙனம் இவர்கள் மயிர்ச்சாந்து பூசுதல் குளிர்ச்சியின் பொருட்டாகும் என்பது, 'தண்ணெய் தகரம் நீவிய துவாரக் கூந்தல் வதுகை மகளிர்'' (பதிற். 89: 15-17) என்பதனால் தெரியவருகிறது.

## உணவும் உடையும்

எத்தகைய நிலையில் உள்ளார்க்கும் உணவும் உடையும் மிகவும் இன்றியமையாத பொருள்கள். அதோடு உறைவிடம் இவ்வுலகத்தை ஒரு குடைக்கீழ் ஆளும் மன்னர்களாயினும், கானில் வேட்டையாடிப் பிழைப்பவனாயினும், ஒவ்வொருவனுக்கும் உண்பதற்கு நாழி உணவும் உடுப்பதற்கு இரண்டு ஆடைகளும் அவசியம் வேண்டும் எனப் புறநானூற்றுப் பாடல் ஒன்று குறிப்பிடுகிறது (புற. 189:1-5). இப்பாட்டு, உண்பது நாழி; உடுப்பவை இரண்டே என்பதனால், ஆடவர்கள் பொதுவாக இரண்டு உடைகள் அணிந்து வந்தனர் என்பது புலப்படும். இவற்றுள் ஒன்றை அரையில் கட்டி, மேலாடையைத் தோளில் முன்னும் பின்னும் நாலுமாறு தொங்கவிட்டுக் கொள்வர் (மலைபடு. 561-562; நெடுநல். 35). மேலும் மேலாடையைக் குடுமியைச் சுற்றித் தலை கட்டாகக் கட்டிக் கொள்வதும் உண்டு (அகம். 195: 12-14). ஆனால் தொழிலாளர்கள் தாங்கள் செய்துவந்த வேலைக்கு ஏற்ப ஒற்றையாடை உடுத்தி வந்தனர். 'ஒன்று அமர் உடுக்கைக் கூழ் ஆர் இடையன்' (பெரும்.175) என ஆடு, மாடு மேய்க்கும் தொழிலில் ஈடுபட்ட இடையன் ஒருவன் குறிப்பிடப்படுகிறான். ஒற்றை ஆடையை இறுக உடுத்தியிருத்தலைத் 'தற்றுடுத்தல்' எனப் பிற்காலத்து வழங்கினர். 'தெய்வம் மடிதற்றுத் தான் முந்துறும்' என்பது வள்ளுவர் வாக்கு.

பெண்கள் நீண்ட ஒற்றையாடையை நிலத்தைத் தொடும் படியாகத் தழைய உடுத்தினர் என்று கொள்ளலாம்.

> சாந்து உளர்கூழைமுடியா, நிலம் தாழ்ந்த
> பூங்கரைநிலம் தழீஇ, தளர்பு ஒல்கி
> பாங்கு அருங்கானத்து ஒளித்தேன். (கலி. 115:13-15)

என அச்சத்தால் ஒதுங்கிக் காட்டில் கிடந்த ஒரு பெண் பேசுகிறாள். நிலத்தைத் தொடும்படியாக உடுத்த நீல ஆடை நடக்கும்போது கால்களுக்குத் தடையாயிராதபடி இந்தப் பெண் கையால் சிறிது மேலேறத் தழுவிக்கொண்டு செல்கிறாள். ஆகவே ஆடையை நிலம் தோய உடுத்தலும், வண்ண ஆடைகளை அணிதலும் பெண்கள் இயல்பு என்று தெரிகிறது. ஆடவரிலும் ஒருசாரார் வண்ண முடைய ஆடையை அணிந்தனர் என்றும் தெரிகிறது. மறவர்கள் செந்நிற முடைய ஆடை அணிந்திருந்ததாக, 'துவர்செய் ஆடைச் செந்தாடை மறவர் (நற்.36:6) என்னும் அடியால் போதருகின்றது. காவி ஆம்பல் போன்றவற்றின் இலைகளால் ஆனதழை உடையை மகளிர் அணிந்தனர் என்றும், இத்தழை உடைக்காக அவர்கள் தழை கொய்வது உண்டு என்றும் சில பாடல்களில் குறிக்கப் பட்டுள்ளன. (நற். 123: 6-7; 204: 1-2; 390: 4-6) அகம். 20:8-10) 'பைவிரி அல்குல் கொய்தழை தைஇ' (குறிஞ்சி. 102) என்பது தழை கட்டி உடுத்தமை யைக் குறிக்கிறது.

நூலாடையும் பட்டாடையும் மிக மெல்லியனவாய், தொழில்திறம் வாய்ந்தனவாய் அந்நாளில்வழக்கத்தில் இருந்தன என்று கூறும்போது, இத்தழை உடையும் சில இடத்தில் பேசப் படுவதன் உண்மையான நிகழ்ச்சியாகக் கருதுவதற்கு இல்லை. பழங்காலத்திலுள்ள ஒரு வழக்கத்தை மனத்தில் கொண்டு கூறிய தாகவே இது கொள்ளத் தகும். பரிசுப் பொருளைத் 'தன்தழை விலை' எனக் கூறுதலும் (ஐங்௦ 147:3) இங்கு ஒப்புநோக்கத்தகும்.

## பெண்கள் கச்சு கட்டுதல்

பெண்கள் மார்பில் கச்சு கட்டும் பழக்கம் உடையராய் இருந்தனர். கச்சுக்களை நெய்தபின் அதன் விளிம்புகளை முடிதலும் ஒரு கை வினையாகும். இத்தொழில் புரிவோர் 'வம்பு நிறை முடிநர்' (மதுரைக். 514) எனக் குறிப்பிடுவர். இக்கச்சு பூத்தொழி லால் அழகு செய்யப்பெற்றிருக்கும். காந்தள் மலர் பரந்து கிடக்கின்ற நிலம் பல கச்சுப் பரந்த களம் போலே அழகுபெறப் பொலிவுற்று விளங்கியது என்கிறார் கபிலர் (குறிஞ்சி. 197-199). முலையை மறைத்துக் கச்சினை இழுத்துக் கட்டுவது மரபு.

*'பூந்துகில் மரீஇய ஏந்துகோட்டு அல்குல்*
*அம்மாசு ஊர்ந்த அவர் நூற் கலிங்கமொடு*
*புனையா ஓவியம் கடுப்ப, புனைவு இல்*
*தளிர்ஏர் மேனி தாய சுணங்கின்*
*அம்பணைத் தடைஇயுமென்தோள், முகிழ்மலை*
*வம்பு விசித்து யாத்த, வாங்குகாய் நுசுப்பின்*
*(நெடுநல். 145-151)*

என்று மகளிர் துகிலெடுத்து, கச்சு கட்டும் இயல்பினை எடுத்துரைக்கின்றார் நக்கீரர்.

## தொய்யில் எழுதுகை

மகளிர் தம் முலை மீதும் தோள்மீதும் வண்ணக் குழம்பினால் முறையே தொய்யிலும் கரும்பும் எழுதிக்கொள்வது உண்டு எனத் தெரிகிறது. இவற்றைத் தம் காதலிமார்க்குக் காதலர்கள் எழுதினர் என்றும் குறிக்கப்பட்டுள்ளது. மற்று இவள்.

*'உருத்து எழுவனமுலை ஒளிபெற எழுதிய*
*தொய்யில் காப்போர் அறிதலும் அறியார்'*
*(குறு. 276:2-4)*

*'நெய்தல் நெறிக்கவும் வல்லன்; நெடுமென்தோள்*
*பெய்அம்பு ஈர்க்கவும் வல்லவன்; இளமுலைமேல்*
*தொய்யில் எழுதவும் வல்லன்; தன் கையில்*
*சிலை வல்லான் போலும் செறிவினான்'*
*(கலி. 143:31-34)*

இப்பாடற்பகுதிகள் மேலதற்குச் சான்றாம்.

## வீரர்களின் உடை

வீரர்கள் பூந்தொழிலமைந்த ஆடையை உடுத்து, அரையில் நீலக்கச்சையும் அணிந்தனர். (புறம். 274:1-2) இவர்தம் மார்பில் புலித்தோலால் செய்யப்பட்ட கவசமும் அணிவர்.

'புலிநிறக் கவசம் பூம் பொறி சிதைய,
எய் கணை விழித்த பகட்டு எழில் மார்பின்
மறலி அன்ன களிற்று மிசையோனே;'

(புறம். 13:2-4)

என்பது புலித்தோல் கவசம் அணிந்த வழக்கத்தைப் புலப்படுத்துகிறது. மெய்ப்புகு கருவியாகிய இக்கவசம் மெய்மறை (பதிற். 14:12; 21:24; 58:11; 65:5) என்றும் மெய்புதை அரணம் (பதிற், 52.6) என்றும் வழங்கப்பட்டிருக்கிறது.

## முனிவர்களின் உடை

முனிவர்கள் காவிக் கல்லைத் தோய்த்து உடுத்த உடையினராய் இருந்தனர்.

''கல் தோய்த்து உடுத்த படிவப் பார்ப்பான் ''என ஒரு முனிவர் உடையோடு (முல். 367) சார்த்தி உரைக்கப்படுகின்றார்.

## சட்டை அணியும் பழக்கம்

இக்காலத்தைப்போல் சட்டை அணியும் பழக்கம் தமிழரிடை இல்லை. தமிழகத்திற்கு வந்த வேற்றுநாட்டாராகிய யவனர்கள் மெய்ப்பை என வழங்கும் ஒருவகைச் சட்டை அணிந்து கொண்டனர்.

'மத்திகை வளைஇய மறிததுவங்குசெறிவுஉடை
மெய்ப்பைபுக்க வெருவரும் தோற்றத்து
வலி புணர் யாக்கை வன்கண் யவனர்'

(முல், 59-61)

இப்பாடற்பகுதி யவனருடைய உடையமைப்பையும் மேல்சட்டையின் இயல்பையும் புலப்படுத்துகின்றது. இந்த யவனரையொக்கப் பின்னால் வணிகத்தின் பொருட்டுச் சென்ற புதியவர்களாகிய வம்பலர்களும் சட்டையணியத் தொடங்கியதாகவும் தெரியவருகின்றது. இவர்கள் தமது உடைச்சுற்றில் சுரிகை எனப்படும்

குறுவாளினைச் சேர்த்துக் கட்டியிருப்பர். இது அரைக் கச்சையுடன் அமைந்து கிடக்கும் வாள். அதோடு அவர்கள் தமது தோளில் யானைக் கொம்பால் செய்யப்பட்ட பிடியினையுடைய நெடு வாளையும் தொங்கும்படி வரியை உடைய கச்சினாலே தோளில் கட்டியிருப்பர்.

*'எல்லிடைக் கழியுநர்க்கு ஏமம் ஆக*
*மலையவும் கடலவும் மாண் பயம் தரூஉம்*
*அரும்பொருள் அடுத்தும், திருந்துதொடை - தோன்தோள்*
*அடிபுதரரணம் எய்தி, படம்புக்கு*
*..... .... ... .....*
*சுரிகை நுழைந்த சுற்று வீங்கு செறிவு உடை*
*கருவில் ஒச்சியகண் அகன் எறுழ்த்தோள்*
*கடம்பு அமர் நெடுவேள் அன்ன, மீளி,*
*உடம்பிடித் தடக்கை ஓடா வம்பலர்'*

*(பெரும். 66-76)*

பெரும்பாண் ஆற்றுப்படையின் அடிகள் மேலதற்குச் சான்றாகும்.

## ஏழைகளின் ஆடை

ஏழைகளின் ஆடை கிழிந்தனவாய்த் தையல்களால் சேர்க்கப் பெற்று, வேற்று இழைகள் நுழைந்து, வேர்வையால் நனைந்து இருந்ததோடு ஈரும் பேனும் கூட அவற்றில் இடம் பெற்றிருந்தன (பொருந. 79-81). இந்த ஆடையின் தோற்றம் பாசியினது வேர் போன்று காணப்பட்டது (பொருந. 53-54; 467-468) கிழிந்த ஆடையாய் இருந்தமையின், இது 'கிதாஅர் (பொருந. 81;184)'சிதர்வை' (பெரும். 468) என்று குறிக்கப்படுகிறது.

## நூலாடையும் பட்டாடையும்

நூலாடையும் பட்டாடையும் அணிதல் பெருவழக்காய் இருந்தது (பெரும். 469-470; பதி, 12:19-21; மலைபடு. 561-562). இவைகள் மிக நுண்ணியவாய், தொழில்திறம் வாய்ந்தனவாய்,

பூத்தொயில் முதலியன செய்யப்பெற்று முடிச்சுகளோடு கூடிய கரைகளையும் உடையவனவாய் அமைந்திருந்தன என்றும் தெரிய வருகிறது (சிறுபாண். 236; முருகு. 138; பொருந. 82-84).

## ஆடையைக் குறிக்கும் பெயர்கள்

ஆடையைக் குறிப்பதற்கு உடை (புறம். 390:4). ஆடை (பரிபாடல் 21:62), அறுவை (பொருந.83), துகில் (குறி.55; பட்டினப். 106), கலிங்கம் (பெரு, 469; புறம். 397:15) முதலிய பெயர்கள் வழங்கப்பட்டுள்ளன. இவையெல்லாம் காரணம் பற்றி அமைந்த பெயர்களாகும்.

## போர்வை

*போர்வையும் அக்காலத்தில் பயன்படுத்தினர்.*
*''உடாஅ, போரா ஆகுதல் அறிந்தும்*
*படாஅம் மஞ்ஞைக்கு ஈத்த எம்கோ''*

*(புறம். 141:10-11)*

எனப் பேகன் மயிலுக்குப் போர்வை அளித்த செயல் பாராட்டப் படுதல் கொண்டு அக்கால மக்கள் உடுத்தலும் போர்த்தலும் செய்யும் இயல்பினர் என்பது பெறப்படும்.

## ஆடையயை வெளுத்தல்

ஆடைகளை வெளுத்துத் தூய்மையாக அணிந்து கொண்டனர். அந்நாளில் ஆடை வெளுத்துக் கொடுக்கும் தொழிலைப் புலைத்தி செய்துவந்தாள். வெளுத்து மடித்துவரும் ஆடைகளுக்கு நறும்புகை ஊட்டுதலும் உண்டு.

*''மென்நூற் கலிங்கம் நறும் புகை மடுப்ப'' (மதுரை. 554)*

என்பதனால் இதனை அறியலாம்.

## காலத்துக்குஏற்ற உடை

காலத்திற்கேற்ப வெவ்வேறு வகையான ஆடைகளை அணிவதும் அக்காலத்திலுண்டு. மகளிர் பகற்காலத்தில் தாம் அணிந்த பட்டாடையை நீக்கி, இரவில் வெண்மையான மென்மை யான உடைகளை அணிந்தனர் என்பது,

"பட்டு நீக்கித் துகிலெடுத்தும்" (பட். 107)

என்பதனால் அறிகிறோம். நீராடும்போது அதற்கென தனிப் புடைவைகளைக் கட்டிக்கொள்வதுண்டு. "புட்டகம் பொருந்துவ புனைகுவோரும்"(பரி. 12:17) என்பது பரிபாடலில் காணும் செய்தி. புட்டகம் என்பது நீராடுதற்குரிய படவையைக் குறிக்கும்.

## காலில் செருப்பு

மக்கள் காலில் செருப்பு அணிவது வழக்கம். செருப்பு இடைச்சிறுபரல் இருந்து நடப்பவர்களுக்குத் துன்பத்தை அளிப்ப தைப்போல, ஒரு வீரன் பகைவர்களுக்குத் துன்பத்தை அளித்ததாகப் புறநானூறு கூறுகிறது(257:1). பகைவரை மேலே நடக்க ஒட்டாது எதிரில் இருந்து விலக்குவதைப் பற்றி வீரனைச் சிறுபரலுக்கு இங்கே ஒப்பிடுகின்றார். தொடுதோல் என்றும் செருப்பை வழங்கு வர் (பெரும். 159; மதுரை 635; பட்டி. 265).

## தலை முடி ஒப்பனை

ஆடவரும் பெண்டிரும் தமது தலைமுடியினைப் பல்வேறு வகையாகப் பேணி வந்தனர். எண்ணெய் தடவிப் போற்றுதலும் குளிர்ச்சிக்காக மயிர்ச்சாந்து அணிதலும் வழக்கமாய் இருந்தது (புறம். 279:9) குறி. 108; - பதி.89:16) வாசனையோடு கூடிய எண்ணெயும் தேய்ப்பது உண்டு. (பரி. 12-19). பெண்கள் நீராடிய பின் தமது கூந்தலைக் கையால் கோதிவிட்டு உலர்த்தியும் அதற்கு நறும்புகை ஊட்டியும் பேணினர்.

தலைமயிரை வளர்ப்பதோடு கத்திரியினால் வெட்டிப் பல்வேறு வகையில் அலங்காரம் செய்துகொண்டனர். ஆடவர் செவியைக்கடந்து தொங்கும்படியாகத் தலைமயிரைக் கட்டிக் கொள்ளுதலும் தாடி வளர்த்தலும் செய்தனர் (புறம். 257:1-5; 83:1; அகம். 297: 5-6). குழந்தைகள் மயிரைச் சேர்த்த உச்சிக் கொண்டையாகக் கட்டி வைத்தனர். (புறம். 279:9). பார்ப்பனச் சிறுவர்களும் பிற குழந்தைகளும் குடுமித் தலை உடையவராய் இருந்தனர் களைந்து விடுதலும் மரபாய் இருந்தது.

''குடுமி களைந்த நுதல்வேம்பின் ஒண்தளிர்
நெடுங்கொடி உழிஞைப் பலரோடுமிலைந்து''
(புறம். 77:2-3)

## கூந்தல் அலங்காரம்

பெண்கள் தங்கள் கூந்தலை ஐந்து வகையாக அழகு செய்துகொள்வதினால் அவர்கள் கூந்தலுக்குப் (கலி. 32:1; 22:12-13; மதுரை. 552) பொதுப்பெயராக ஐம்பால் என்னும் வழக்கம் ஏற்பட்டது (நற். 100:4; குறு.229:1) கூந்தலின் ஐவகை அலங்காரமாவது கொண்டை, குழல், பனிச்சை, முடி, சுருள் என்பனவாம். உச்சியில் கட்டி முடிக்கும் முடியை முச்சி எனவும் வழங்கினர் (மலை. 182; ஐங். 93:5) கடை குழன்ற சுருள் மயிரைப் பித்தை எனக் கூறினர் (பொருந. 160). ''கொண்டைத்தண்தழைக் கடைசியர் (புறம். 61:1) என்பதனால் கடைசியர் கொண்டையிட்டு மயிரை முடிக்கும் வழக்கினராயிருந்தனர் என்பதை அறியலாம். கூந்தலில் வகிடு எடுத்துப் பின்னிப் பின்புறமாகத் தொங்கவிட்டுக் கொள்ளும் பின்னல் முடியும் பெண்களிடைப் பழக்கமாய் இருந்தது (கலி.1:3; நெடுநல். 137; அக. 73: 1-2). விறலி ஒருத்தியின் பின்னல் பெண் யானையின் கைபோல் உள்ளது என்று வருணிக்கப்பட்டுள்ளது (சிறுபாண். 190-191)

## மலர் அணிதல்

மலர் அணிவதில் ஆடவரும் பெண்டிரும் பெருவிருப்புடையராயிருந்தனர்.

*'இளையோர் சூடார்; வளையோர் கொய்யார்;*
*நல் யாழ் மருப்பின் மெல்ல வாங்கி,*
*பாணன் சூடான்; பாடினி அணியாள்*
*ஆண்மை தோன்ற ஆடவர்க் கடந்த*
*வல்வேற் சாத்தன் மாய்ந்த பின்றை*
*முல்லையும் பூத்தியோ ஒல்லையூர் நாட்டே? '*
*(புறம்.242)*

இப்பாடலில் துக்கத்தால் இளையோரும் முதியோரும் மலர் பறித்து அணியார் என்று கூறுவதினால் மகிழ்ச்சிக் காலத்தில் மலர் சூடும் வழக்கத்தை உடையவர் என்பதைக் குறிக்கும். மலையிலும் நிலத்திலும் உள்ள கொம்புகளிலும் கொடிகளிலும் பூத்த மலர்களை யும் பறித்து அணிந்தனர். பல நிறங்களையும் பல்வேறு வடிவங் களையும் கொண்ட மலர்களைத் தெரிந்தெடுத்து மாலை கட்டி அணிந்தனர். தாழம்பூவின் மடலை நாராகக் கொண்டும், மரம்நார் முதலியவற்றைக் கொண்டும் தொடையல், கண்ணி முதலியன வாகக் கட்டி அணிவர் (குறிஞ்சி. 113-117). மலைவாழ் மகளிர் தோழியுடன் கூடி சுனையில் புனலாடி, தழை உடுத்து பல்வேறு வகையான மலர்களைப் பறித்துப் பாறையின்மேல் குவித்து பல் வகைப்பட்ட மாலைகளாகக் கட்டியமையைக் குறிஞ்சிப்பாட்டில் விளங்கக் காணலாம். இப்பாடலில் செங்காந்தள், ஆம்பல், அனிச்சம் முதலியனவாக 99 மலர்களின் பெயர்கள் சுட்டப் படுகின்றன. கட்டாமல் விடுபூவைத் தனியாகத் தலையில் சேர்த்து அணிவதும் உண்டு. கோவலர் வெண்கோடல் பூவையும் (அக. 264:3-4). உழவர் பகன்றைப் பூவையும்(பதிற். 76:11-13),பரதவர் தாழை மலரையும் (பட். 88) அணிவதாகத் தெரிதலின் அவ்வந் நிலத்தில் கிடைக்கும் மலர்களை அங்கு வாழும் மக்கள் அணிவது இயல்பாகும் என்பது தெரியவரும். பனை ஓலையாகிய குடலை யைப் பூப்பறித்து வர உபயோகித்தனர் (புற. 352:3-4), பித்தகம் (பிச்ச) முதலிய சில மலர்களை அரும்பாக இருக்கும் நிலை யிலே பறித்துப் பனங்குடலில் பொதிந்து வைத்தலும் உண்டு (குறு. 168:1-3).

## மாலை வகை

மாலைகள் பலவகை முறைகளால் ஆக்கப்பட்டன. நெற்றின மாலைகள், கோத்த மாலைகள், தொடுத்த மாலைகள், தூக்கிக் கட்டின மாலை எனப் பல்வேறு வகையில் கட்டினர் (பரி. 19: 80-82); இவற்றின் அமைப்பிற்கு ஏற்றவகையில் கோதை, தார், மாலை, சூட்டு, கண்ணி என வெவ்வேறு பெயர்களிட்டு வழங்கினர் (பரி. 20:27-31).

*'புகை வகை தைஇயினார் பூங்கோதை நல்லார்,*
*தகை வகை தையினார் தார்;*
*வகை வகை தைஇயினார் மாலை, மிகமிகச்*
*சூட்டும் கண்ணியும் மோட்டு விலையமும்*
*இயல்அணி, அணி நிறப ஏறி.'* (பரி 20:27-32)

எனவரும் பரிபாடற் பகுதி மகளிர் பல்வகையான இயல்புடைய மாலைகளை அணிந்தமையை உணர்த்துகிறது.

*'மைந்தர் கண்ணி மகளிர் சூடவும்*
*மகளிர் கோதை மைந்தர் மலையவும்'*
(பட். 109-110)

*'மகளிர் கோதை மைந்தர் புனையவும்*
*மைந்தர் தண்தார் மகளிர் பெய்யவும்'*
(பரி. 20:20-21)

எனக் குறிப்பது கொண்டு கண்ணி, தார் என்பன ஆடவர் அணிவன எனவும் கோதை மகளிர் அணியும் மாலையைக் குறிக்கும் எனவும் தெரியவரும் குறிஞ்சிப்பாட்டில் விவரிக்கப்படும் வில்லேந்தி அம்பு தெரிந்து வேட்டைக்கு வந்த ஆடவன் அணிந்த மாலை முதலியன குறிக்கப்பட்டுள்ளன. இவன் மணம் வீசும் தொடையலையும் கண்ணியையும் தனது குஞ்சியிலே (ஆண்பால் மயிர் முடி) சூடியிருந்தான். அதில் மேலும் பிச்சித் தொடையலும் சுற்றியிருந்தான். தோளிலே புரளும்படியாக அசோகினது தளிரை ஒரு காதில் செருகியிருந்தான். அவனுடைய மார்பிலே நறிய

பூமாலை, பொலிவுற விளங்கியது (குறிஞ்சி, 13-122). மகளிர் காதில் பூவுடன் கலந்து தளிர் செருகுவது உண்டு (பரி. 11:95). தழையையும் பூவுடன் கலந்து வைத்து மாலை கட்டுவது உண்டு. இது படலைக் கண்ணி (சிறுபா. 267) என்றும் குறிக்கப்பட் டிருக்கிறது.

## சந்தனம் கத்தூரி அணிதல்

ஆடவர் மார்பிடத்தே சந்தனம் பூசுதலும் (முருகு. 193. மது.493, அக. 26:14, பதிற். 88:30) மகளிர் கத்தூரி முதலியவற்றால் அரைக்கப் பெற்ற வாசனைக் குழம்பை மயிருக்கு அணிதலும் வழக்கமாயிருந்தது. இவற்றை அரைப்பதற்குரிய அம்மி வடநாட்டி னின்றும் வடவரால் கொண்டுவரப்பட்டதாம்; இது வெண்ணிற முள்ள வட்டக் கல்லாகும். இதில் குடமலையிலுமிருந்து கொண்டு வரப்பட்ட சந்தனத்தை அரைத்தனர்.

*'வடவர் தந்த வான் கேழ்வட்டம்*
*குடுபுல உறுப்பின் குட்டுபு நிகழ்த்திய*
*வண்டு இமிர் நறுஞ்சாந்து அணிகுவம்'*

*(அக. 340:16-18)*

*'கொள் உறழ் நறுங் கல் பலகூட்டு மறுக;*
*வடவர் தந்த வான் கேழ் வட்டம்*
*தென்புன மருங்கில் சாந்தொடு துறப்ப;'*

*'கூந்தல், மகளிர் கோதை புனையார்,*
*தன் நறுங்தகரமுளரி நெருப்பு அமைத்து*
*இருங்காழ் அகிலோடு வெள் அயிரி புகைப்ப;*
*கைவில் கம்மியன் கவின்பெறப் புனைந்த*
*செங்கேழ் வட்டம் சுருக்கி'* *(நெடுநல். 50-58)*

*'நல் நெடுங் கூந்தல் நறுவியரைகுடைய,*
*நரந்தம் அரைப்ப, நறுஞ்சாந்து மறுக,*
*மென் நூற் கலிங்கம் கடும்புகை மடுப்ப,*

*(மதுரைக்க 552-554).*

என வருவன நறுஞ்சாந்து அரைத்து அணியும் வழக்கத்தை நன்கு புலப்படுத்துகின்றன.

## திலகம் இடுதல்

மகளிர் தமது நெற்றியில் திலகம் இடுதலும் அந்நாள் தொட்டு வரும் மரபேயாகும்.(*கலி. 92:35; 97:11; 143:3*), செந்நிறத் திலகம் இடுதல் பெருவழக்காயிருந்தது.

*'நெற்றி விழியன நிறைதிலகம் இட்டாளே*
*கொற்றவை கோலம் கொண்டு ஓர்பெண்'*
*(பரி. 11:99-10)*

கொற்றவையின் நெருப்பாகிய நெற்றி விழிக்கு ஒப்பாகத் திலகம் இட்டாள் என்பதனால் இங்கே இந்தப் பெண் இட்ட திலகம் செந்நிறத்தது என்பது போதரும்.

## அணிகள் பூணுதல்

குழந்தை முதல் பெரியோர் வரை எல்லாரும் பலவகை அணிகள் பூண்டு அழகு செய்தனர். குழந்தைகளுக்குப் பரல் பெய்த கிண்கிணி (*கலி. 81:61; நற். 58:1*) ஐம்படைத்தாலி, இமப்பூண் முதலியன இட்டனர். ஆடவர் காலிற் கழல் அணிந்தனர் (பெரு. *102-103*). தோளில் வீரவளை பூண்டனர். பெண் காலிற் சிலம்பும், அரையில் பொற்காசு கட்டிய கலையும் (*அக. 219-15-16*) கையில் வளையும் (*ஐங். 310:1-2; சிறுபாண்: 192; புற. 63:12*), மார்பில் பொன்னறி மாலை முதலிய ஆபரணங்களும் தலையில் பொற்றாமரைச் சுட்டியும் (பெரும். *481-482*) அணிந்தனர். அரையில் உள்ள மேகலை 'பகுமம்' என்றும் கூறப்படும்; இது எண் கோவையாக இருக்கும். 'பல்கலைச் சில்பூங் கலிங்கத்தார் (*கலி. 56:11*) என இங்கே கலை என்பது ஆடையின் மேல் அரையில் அணிகின்ற மேகலையைக் குறிக்கின்றது. காதில் பெண்கள் குழை செருகி அழகு செய்த மக்கள் நாளடைவில் அக்குழை போலப் பொன்னாற் செய்து அணிந்த அணியினையும் குழை என வழங்கி னர் போலும். சுருமீன் வடிவாக அமைந்த மகரக் குழைகளும் அணிவது உண்டு (*கலி. 92:36*).

'ஒருத்தி, செயல் அமை கோதை நகை;
ஒருத்தி, இயல் ஆர் செருவில் தொடியொடு தட்ப;
ஒருத்தி, தெரிமுத்தம், சேர்ந்த திலகம்;
ஒருத்தி, வரிஆர் அல்குல் காழகம்,
ஒருத்தி, அணிஆர் ஞெகிழ்த்து அணி சுறாத்தட்ப'
(கலி. 92-33-38)

இப்பாடற் பகுதியில் மகளிர் அணியும் தொடி, குழை, சிலம்பு, முதலியன குறிக்கப்பட்டுள்ளன.

பொன்னும் மணியும் முத்தும் பவளமும் கலந்து அரிய விலை படைத்த ஆபரணங்களை ஆக்கினர் (புறம். 218:1-5). பல்வேறு வகையான ஆபரணங்களை அணியாத காலங்களில் அவற்றைப் பேணிக் காக்க ஆபரணப் பெட்டிகளில் வைப்பர்; பல்வகை ஆபரணங்களுடன் கூடிய பெட்டியைப் போல மழை பெய்த காடு அழகிய காட்சிகளை நல்கின என்கிறார் ஒரு புலவர்.

'பொன்பெய் பேழைமூழ் திறந்தன்ன
கார் எதிர் புறவினதுவே' (குறு. 233:3-4)

என்பது அப்புலவர் வாக்கு. கங்கினாலாகிய வளைகளும் மகளிர் அணிவது உண்டு.

## அழகு நோக்கக் கண்

ஆடை, அணி, வாசம் முதலியன பூசிக்கொண்டு கோலம் புனைகின்ற காலத்துத் தங்கள் இயற்கையழகையும் செயற்கை அழகையும் நோக்குதற்குக் கண்ணாடியை உபயோகித்தனர். இதனை நிழல் காண் மண்டிலம் (அக. 71:13, பரி. 21:23) 'வயங்குறு மண்டிலம்' (கலி. 25:2) என்பர்.

'நிழல் காண் மண்டிலம் நோக்கி,
அழல் புனை அவிர் இழை திருத்துவாள் குறிப்பும்'
(பரி. 21:23-24)

என்பது கண்ணாடி நோக்கி மகளிர் கோலம் புனைதலைக் குறிப் பிடுகிறது.

## மகளிர் அலங்காரம்

மகளிர் எவ்வெவ்வகையில் தம்மை அலங்காரம் செய்து கொண்டனர் என்பது குறித்தும் பலகுறிப்புகள் சங்கப்பாடல்களில் உள. காலத்திற்கும் சூழ்நிலைக்கும் ஏற்றதான உடை, அணிவாசம் முதலியவற்றை மேற்கொண்டனர். வையையின் புதுப்புனல் வரவு காணச்சென்ற மகளிர் கொண்ட கோலத்தைப் பரிபாடல் பின் வருமாறு விளக்குகிறது:

'மின் அவிர் ஒளி இழை வேயுமோரும்,
பொன் அடர்ப்பூம்புனை திருத்து வோரும்,
அகில் கெழு சாந்தம் மாற்றி ஆற்றும்
புகைகெழு சாந்நம் பூசுவோரும்,
கார் கொள் கூந்தல் கதுப்பு அமைப்போரும்,
வேர் பிணி பல்மலர் வேயுமோரும்,
புட்டகம் பொருந்துவ புனைகுவோரும்
கட்டிய கயில் அணி காழ் கொள்வோரும்
வாசு நறு நெய் ஆடி, வான்துகள்
மாசு அறக் கண்ணாடி வயக்கி வண்ணமும்
தேசும் ஒளியும் திகழ நோக்கி,
வாச மணல் துவர் வாய்க் கொள்வோரும்
இடுபுணர் வளையொடு தொடுதோள்வளையர்,
கட்டு வடக் கழலினர், மட்டு மாலையர்
ஓசனை கமழும் வாச மேனியர்'

(பரி. 12:11-25)

இவ்வாறே விழாக்காலங்களிலும் திருமணம் முதலிய சிறப்பு நிகழ்ச்சிகளிலும் மக்கள் பல்வேறு வகையில் தங்களை அலங் கரித்துக் கொள்வது வழக்கமாயிருந்தது.

## உணவு வகை

ஆடை அணிகளுக்கு மேலாக எல்லோர்க்கும் நாடோறும் இன்றியமையாது வேண்டப்படுவது உணவு. நாட்டின் ஒவ்வொரு பகுதியிலும் அங்கங்கே விளையும் தானிய வகைகள், காய், கிழங்கு, கீரை, கனிகள் முதலியனவற்றை அவ்வப்பகுதி மக்கள் உணவாகக் கொண்டனர். காட்டில் வாழுவார் மான், பன்றி முதலியனவற்றை வேட்டையாடிய தசையையும் கடற்கரையில் வாழ்வார் மீன் முதலிய பொருள்களையும் முக்கிய உணவாகக் கொண்டனர். உள்நாட்டு நீர்நிலைகளில் உள்ள மீன்களையும் நத்தை முதலியனவற்றையும் உணவுடன் சேர்த்துக்கொண்டனர். ஓரிடத்தில் மிகுதியாகக் கிடைக்கும் தானியங்கள் மாமிசவகைகள் ஆகியவற்றைப் பிற இடங்களுக்கு எடுத்துச்சென்று பண்டமாற்றம் முறையில் ஒருவருக்கொருவர் பகிர்ந்துகொண்டு வாழ்ந்தனர்.

செந்நெல், வெண்ணெல், மலைநெல் என்னும் நெல்வகைகளும்(பெரும் 474; மலை.564; பதி. 12-17; பெரும். 130; 255); தினை. (புறம்.119:3 பதி.30:22-25) வரகு தினை (புறம். 8:9; பதி, 30-22) என்னும் புன்செய் தானியங்களும் முக்கிய உணவுப் பொருள்களாக இருந்தன. உழவர் உழாமலேயே இயற்கையாகக் கிடைத்த பொருள்களையும் உணவிற்குப் பயன்படுத்திக் கொண்டனர். பாரியின் பறம்புமலையில் உழவர் உழாதே கிடைத்த மூங்கில் நெல், பலாப்பழம், வள்ளிக்கிழங்கு, தேன் என்னும் நான்கு பொருள்கள் மக்களுக்கு உணவாகப் பயன்பட்டன என்று கூறப்பட்டிருக்கிறது (புற. 109:30). எறும்புகள் புற்றுகளில் சேர்த்து வைக்கும் புல்லரிசியைத் தோண்டியெடுத்துக் கொள்வது சிலர் வழக்கமாயிருந்தது. தானியங்களை நன்கு உமியும், தவிடும் போகக் குத்தியும் (சிறுபாண், 193-194) பல்வேறு வகையான பொருள்களைக் கலந்து கூட்டுச்சோறுகளையும் ஆக்கி உண்டனர்.

## பல்வகை உணவு

சோற்றை வல்சி (பெரு.255) சொன்றி (பெரு. 130; மிதவை (அகம். 86:1) அடிசில் (சிறு. 242 பதி. 45:13) புன்கம்(புறம்.8:10)

விதவை (புறம்.326:9-10) துழவை (பெரு.275) கூழ் (பெரும். 175) எனப் பல்வேறு பெயர்களால் அழைத்தனர். இவை ஒவ்வொன்றும் வெவ்வேறு வகையான சமையல் முறையைக் குறிப்பதாகும். சோற்றுடன் இறைச்சியைக் கலந்து சமைத்தலும் உண்டு. உழுந்து, அவரை முதலிய பருப்பு வகைகளைக் கலந்து சமைக்கும் கலவைச் சோறுகளும் வழக்கத்தில் இருந்தன. இச்சோற்றுடன் நெய்யையும் கலந்து சமைப்பர்(அகம். 136:1, புறம்.384:15; அகம்.86:1-2; பெரும். 193-196). புளியைக் கலந்து சமைத்த சோறும் தயிர் கலந்து செய்யும் சோற்று வகையும் வழக்கத்திலிருந்தன (சிறு. 175; புறம். 326: 9-10). புளி, தயிர் கலந்த சோற்றுடன் மாமிசத்தைக் கலந்தும் ஆக்குவது உண்டு (புறம். 326: 9-10; அகம். 2:7).

முல்லை நிலத்து ஆயர் செம்மறியாட்டின் பாலிலிருந்து கிடைத்த பழுப்பு நிறம் வாய்ந்த தயிரை உலையாக வைத்து, குற்றிய வரகு அரிசியைப் பெய்து, அதோடு ஈயலையும் (ஈசல்) இட்டுச் சமைத்தனர். இந்த இனிமையான் புளிச் சோற்றுக்குப் பசுவின் வெண்ணெயை மேலே கிடந்து உருகும் படியாக இட்டு உண்டனர் (அகம். 196:5-7). மோருக்கு அளவாக இனிய புளியம்பழத்தின் புளிப்பையும் சேர்த்து உலையாக வைத்துச் சமைத்தலும் உண்டு. இந்தக் காடியில் மாங்கனியின் இனிய புளிப்பைய்ம் சிலர் உடன் சேர்த்துக்கொள்வது வழக்கம் (புறம். 399: 2-4). பிரம்பின் இனிப் புடன் கூடிய புளிப்பை உடைய திரண்ட பழத்தைச் சோற்றுடன் கலந்து உண்பதும் உண்டு(அகம். 196: 5-7). உடும்பின் திரண்ட பழத்தைச் சோற்றுடன் கலந்து உண்பதும் உண்டு (அகம். 196:5-7). உடும்பின் நிணத்தைப் பெய்து ஆக்கிய தயிர்ச்சோறும் குறிக்கப்பட்டிருக்கிறது (புற. 326:9-10), தினைமாவையும் உணவாகக் கொள்வது உண்டு (பதிற், 22:24). கொழியலரிசியினாலக்கிய களியாகத் துழாவிச் செய்யப்பட்ட கூழையும் குடித்தனர். சூடான கூழை அகன்ற வாயுடைய தட்டுப் பிழாவிலே இட்டு ஆற்றி இருந் தனர் (பெரு. 275-276). முளைத்தானியத்தை இடித்துச் செய்த அடையும் செய்து உணவுடன் உண்டனர் (பெரு. 277-278) சோற்றுடன் பழஞ்சோறு உண்ணுதலும் பழக்கத்தில் இருந்தது. கட்குடி மயக்கம் தீர்வதற்கு இப்பழஞ்சோறு ஒரு கருவியாய் இருந்தது. (புற. 399: 10-11).

## கறி வகைகள்

குழம்பும், பொரிக்கறிகளும், துவையலும் இறைச்சியால் செய்யப்பட்ட கறி வகைகளும் சேர்த்துக் கொண்டனர் (புறம். 14:15; 390:17; பதி. 45:13). புளியுடன் மீன் துண்டத்தைக் கலந்தும் புளிக்குழம்பு சமைத்தனர். (அகம். 60:5-6; புறம். 119-3) தயிரைப் பிசைந்து குழம்பு செய்து கொள்வதும் உண்டு (குறு. 167:1-4). கொம்மட்டி மாதுளையின் மசிய காயொடு, மிளகுப் பொடியும் கலந்து, கருவேம்பினது இலையை அளாவி ப் பசு வெண்ணையில் வேகவைத்த பொரியலை அந்தணர் சமைத்து உண்டதாகத் தெரிகிறது (பெரு. 306-308). நண்டும் பீர்க்கங்காய் முதலிய காய்கள் கலந்தும் செய்த கூட்டையும் சேர்த்துக்கொண்டனர் (சிறு. 195). பாகல் (புறம். 399:6), வெள்ளரிக்காய் (புறம். 240:4) முதலிய காய்களும் கலந்து செய்த கூட்டும் சேர்த்துக் கொள்ளப்பட்டன. குப்பைக்கீரை (புற. 159:9), வேளைக்கீரை (புறம். 26:8) முதலிய கீரைகள் குறிக்கப்பட்டுள்ளன. கீரையுண்ணுதலைப் 'பாசடகு மிசைதல்' (புறம். 159:12) என்பர். மழைப்பருவத்திலே வளர்த்துப் பயன்படுத்தப்படுவனவாகும் சிறிய இலைகளையுடைய இந்த இலைக்கறி உணவு (மது. 530-531).

## கிழங்கு வகைகள்

கிழங்கு வகைகளும் பலாப்பழத்தின் கொட்டை போன்ற பழக்கொட்டைகளும் உணவாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டன. (பெரும். 362; மலை. 174; 425-426) கிழங்கு வகைகளில் வள்ளிக் கிழங்கு (புறம். 109:6) சேப்பங்கிழங்கு (பெரும்பாண். 360-361) கூவைக்கிழங்கு (மலைபடு. 137) என்பன முக்கியமாகக் குறிப் பிடத்தக்கன.

## ஊறுகாய்கள்

ஊறுகாய்களும் உணவிற்குப் பயன்படுத்தப்பட்டன. அந்தணர் இல்லத்தில் மாவடுவினாலாகிய ஊறுகாய் சிறப்பாகக் குறிக்கப்பட்டுள்ளது (பெரும். 308-310). மாங்காய்களைக் கொண்

டும் ஊறுகாய் தயாரிக்கப்பட்டது. மாங்காயுடன் புளிப்பதமும் சேர்த்து ஆக்கிய ஊறுகாய்க்குடத்தை வெயிலில் வைத்துப் பதப்படுத்தி உண்டனர் (அக. 37:7-11). மாங்காயை நறிய ஊறு காயாகக் கூட்டி நுகரும் இயல்பினை 'மாங்காய் நறுங்காடி கூட்டுவேம், (கலி. 109:23) என ஓர் இடைப்பெண் கூறுகிறாள்.

## மாமிச உணவு

விலங்கு பறவைகளின் மாமிசங்களையும், மீன், நத்தை முதலிய நீர்வாழ் பிராணிகளையும் முக்கிய உணவாகக் கொண்ட னர். ஆடு (பதி. 12:62), நற். 83:4) கடமான் (மலைபடு. 175, சிறுபாண். 177) மான் (மதுரை. 215) பன்றி (பெரும். 341-345) முள்ளம்பன்றி (மலை. 175-176) முயல் (புறம். 34:11) உடும்பு (பெரு. 132) எலி (நற். 83:5) கோழி (பெரும். 256, புறம். 395:9-11) முதலியன இறைச்சிக்காகப் பயன்படுத்தப்பட்டன. இறைச்சியை வேகவைத்தும், நெய்யில் இட்டுப் பொரித்தும், சூட்டுக்கோலில் கோத்துத் தீயில் சுட்டும் பக்குவம் செய்தனர். நெய்யில் பொரித்த இறைச்சியை வேவை (மலை. 168) வறை (பெரும். 132) வாட்டு (பெரும். 256) செதுக்கண் (புறம். 261:9) குறை (பதி. 12:16) என வழங்கினர். வேகவைத்த இறைச்சியைச் சூடு, சூட்டு என வழங்கினர் (புறம். 34:11) (சிறுபாண். 163-167; பெரும். 282; பட்டி. 63; நற். 83:5; அகம். 237:9).

பச்சை மீனைச் சுட்டும் (பெரும். 282) காய்ந்த உப்புக் கண்டத்தைச் சுட்டும் (சிறுபாண். 163) தின்றனர் (பட். 63) காடுகளில் இயற்கையாக எழும் காட்டுத் தீயில் வேட்டையாடிய விலங்கு களை இட்டுப் புகை நாறாமல் வக்கி (வதக்கி) அவற்றின் மயிர்போகச் சீவிவிட்டு இறைச்சியை உண்பதும் வழக்கமாய் இருந்தது (மலை. 249-250). நத்தை ஆமை முதலியவற்றின் மேல் தோட்டை உடைத்தெறிந்துவிட்டு உள்ளே இருக்கும் தசையைச் சமைத்தனர் (நற். 280:6-7) (பட். 64).

இறைச்சியின் பொருட்டு கோழி, பன்றி, ஆடு முதலியன வளர்க்கப்பட்டன (பெரு. 256; 341-345; புறம். 262:1) ஆண் பன்றிக்கு நெல்லை இடித்த் உணவைக் கொடுத்து, பெண் பன்றிகளுடன்

கூடிப் புணராமல் தவிர்க்கும் பொருட்டு, வலநாள் குழியிலே நிறுத்தி வளர்த்து, பின் அதனை உணவாகக் கொண்டனர் (பெரும். 341-345).

இறைச்சியை மேற்குறித்தவாறு பல்வேறு வகையில் பக்குவம் செய்து உண்டதோடு பச்சை இறைச்சியை உண்பதும் ஏகதேசமாக வழக்கத்தில் இருந்தது என்பதும் தெரியவருகிறது.

*தீம் கந்தாரம்*
*'நிறுத்த ஆயம் தலைச் சென்று உண்டு,*
*பச்சூன் தின்று, பைந்நிணம் பெருத்த*
*எச்சில் ஈர்ங்கை விற்புறம் திமிரி*
*புல்புக்கனனே, புல் குணற் காளை;*
*ஒருமுறை உண்ணா அளவை, பெருநிரை*
*ஊர்ப்புறம் நிறையத் தருகுவன்'* (புறம். 258:2-8)

என்பது புறநானூற்றில் காணும் ஒரு செய்தி. இங்கே ஆநிரையைக் கவரச் செல்லும் வீரன் போர்முனைக்குச் செல்லும் வேகத்தில் பச்சை ஊனைத் தின்று, கள்ளை அருந்தி, கையை வில்லிலே துடைத்துக் கொண்டு சென்றான் என்று குறிப்பிடப்படுவதினால், அவ்சர காலங்களில் சிலவகை இறைச்சிகளைப் பச்சையாக உண்பர் என்பதை அறியலாம்.

புலால் நாற்றம் வீசும் பச்சை இறைச்சிக்குப் பூநாற்றம் உடைய புகையையூட்டி அமைத்த ஊனும் உண்ணப்பட்டது (புறம். 14:1214) பச்சூன் என்பது எவ்வகை மாற்றமும் செய்யப்படாத இறைச்சியே என்பதை,

*''பச்சூன் பெய்த சுவல்பிணி பைந்தோல்,*
*கோல்வல் பாண் மகனே''* (பெரும். 283-284)

என்று வரும் அடிகளால் அறியலாம். வேறுபல இடங்களில் பைந் நிணம், பைந்தடி, என்றும் பசுமை மாறாத இறைச்சி குறிக்கப் பட்டிருப்பதைக் காணலாம் (குறி. 204; புறம். 14:13-14; மலை. 176:177; 563).

## உண்கலம்

உணவு உண்பதற்கு ஏற்ற கலங்களும் வழக்கத்திலிருந்தன. தேக்கிலை போன்ற பெரிய இலைகளையும் (பெரும். 104) ஆம்பல் இலை போன்ற நீர்ச் செடிகளின் பெரிய இலைகளையும் (அகம். 196:5) உண்பதற்குப் பயன்படுத்தினர். பனை ஓலையினாலாகிய உண்கலமும் உபயோகப்படுத்தப்பட்டது (புறம். 177:16). யாசிப்ப வர்கள் மண்டை எனப்படும் ஒருவகைப் பிச்சைப் பாத்திரத்தை உபயோகித்தனர் (புறம். 103; 155); இக்காலத்தில் இரவலர்கள் கையிலுள்ள திருவோட்டை இது ஒக்கும். உண்பதற்கு அகன்ற தாலங்கள் பயன்படுத்தப்பட்டன. அரசர்கள் பொன்னாலும், வெள்ளியாலும் செய்யப்பட்ட தாலங்களில் பாணர் முதலியோரை உண்பித்தனர் என்று தெரியவருகிறது (சிறுபாண். 245 பெரும். 477; புறம். 390:18).

## கள் வகைகள்

ஊனோடு விருப்பமாக உட்கொண்ட மற்றொரு பொருள் கள். ''மட்டுவாய் திறப்பவும், மைவிடை வீழ்ப்பவும்'' (புறம். 113) என இவ்விரண்டும் முக்கியமாகக் குறிக்கப்படுதலைக் காணலாம். பனை முதலியவற்றில் இருந்து இறக்கும் கள்ளுடன் (பட். 89) தேனும், அரிசி, தினை முதலிய தானியங்களிலிருந்து வடிக்கும் கள்ளும் வழக்கத்தில் இருந்தன (புறம். 15:2-4); (பெரும். 142; அகம். 284:8) பனை அரும்புகளிலிருந்தும் ஒருவகைக் கள் தயார் செய்யப் பட்டது. தேனையும் பக்குவப்படுத்திக் கள்ளாகப் பயன்படுத்தினர் (புற. 15:2; பதி. 12:18). இல்லத்திலேயே கள்ளும் ஆக்கப்பட்டது (பெரும். 142; புறம். 329:1). இல்லத்தில் நெல்லால் ஒருவகைக் கள்ளைத் தோப்பி (அகம். 348:7) என வழங்கினர். பிழி (பெரு. 281) தேறல் (புறம். 15:2-4) மட்டு (புறம். 390:16) அரியல் (புறம். 395:8) என்னும் பெயர்களால் மது வகை குறிக்கப்பட்டுள்ளது. கள்ளைப் பன்னாடையால் வடித்து எடுப்பர் (புறம். 367:7; புற. 170:12). கள்ளைச் சாடியிலும், மூங்கிற் குழாய்களிலும் இட்டு வந்து நன்றாகப் பக்குவமடைந்ததும் உண்டனர் (பெரும். 280-281; மலை. 171; பதி. 81-21;) பழம்படு தேறலும் (சிறுபாண். 159), கலங்கிய அடிக்கள்ளும் (புறம். 298:102) சிறப்பாகக் கொள்ளப்பட்டன.

நாட்பட்ட பழங்கள் மிக்க போதையைக் கொடுப்பதால் அதை மிகவும் விரும்பினர். இது உண்டாக்கும் மிகுந்த போதையை ஊட்டுவது என்பதை 'அரவு வெகுண்டன்ன தேறல்' (புறம். 376:14) 'பாம்பு வெகுண்டன்ன தேறல்' (சிறுபாண். 237) 'பாப்புக் கடுப் பன்ன தோப்பி' (அகம். 348:7) 'தேள் கடுப்பன்ன நாட்படு தேறல்' (புறம். 392:16) என வரும் தொடர்களால் அறியலாம். 'மகிழ்தரல் மரபின் மட்டு' (புறம். 390:16) என்பதனால், கள் மகிழ்ச்சியைக் கொடுக்கும் ஒரு பானம் என்பது பெறப்படும். கள்ளைக் குப்பி களில் அடைத்து வைத்தும் உண்பது வழக்கமாய் இருந்தது. கமுகம் பூவின் பாளையைக் கள் வைக்கும் குப்பிக்கு ஒப்புக் கூறுதலின், பச்சை நிறமான குப்பிகளை இதற்கு உபயோகித்தனர் என்று கொள்ளலாம் (பெரும். 380-382; மதுரை. 228).

கள் இருக்கும் இடத்திற்கு இஞ்சியும் நறும்பூவுமாகக் கலந்து தொடுத்த மாலையைக் கட்டியிருப்பர். கள்ளின் நாற்றத்தை மாற்றப் பூவும் கட்குடிக்கும் காலத்து இடை இடையே கடித்துக் கொள்ளுவதற்கு இஞ்சியும் பயன்படுத்தப்பட்டன. களிப்பு மிகுதி யால் கள்ளுண்டார் உடல் ஆடுவதைப் போல கட்குடமும் கள்ளின் முதிர்ச்சியால் அசைவது உண்டாம்.

'இஞ்சி வீ விராய பைந்தார் பூட்டி,
சாந்து புறத்து எறிந்த தசும்பு துளங்கு இருக்கை
தீம்சேறு விறைந்த மணி நிற மட்டம்
ஓம்பா ஈகையின் வண் மகிழ் சுரந்து;'

(பதிற். 42:10-13)

எனவரும் பாடற்பகுதி மேற்குறித்த செய்திகளைத் தெரிவிக் கின்னறது.

## யவனரின் மது வகை

மேலும் 'யவனர்கள் தங்கள் நாட்டிலிருந்து கப்பல் வழி யாகக் கொண்டுவரப்பட்ட மது வகைகளும் விரும்பி உண்ணப் பட்டன. செல்வர் மனைகளில் இளம் பெண்கள் இதனைப்

பொற்கலத்தில் ஊற்றி ஆடவரை உண்பித்தனர் (புறம். 24: 32-34; 56:18-21; 367:6-7 பொருந. 84-87, மதுரைக். 779-781).

> 'யவனர் நன்கலம் தந்த தண்கமழ் தேறல்
> பொன் செய்புனை கலத்து ஏந்தி, நாளும்
> ஒண்தொடி மகளிர்மடுப்ப, மகிழ் சிறந்து,
> ஆங்கு இனிது ஒழுகுமதி! ஓங்கு வாள்மாற!'
>
> (புற. 56:18-21)

என்பது அரசர் முதலியோர் யவனர் தரும் மதுவகை அருந்துதலைக் குறிப்பிக்கும். இக்காலத்தில் பெருமையுடன் பேசப்படுகிற சைவ உணவு என்பது அந்நாளில் மிகவும் அருமையான பழக்க மாயிருந்தது. அந்தணரும்கூட ஊன், மது உண்ணும் பழக்கத் தினராயிருந்தனர்' என்பது அந்தணப் புலவராகிய கபிலர் வாக்கி னால் **(புறம். 113)** தெரியவரும்.

## இனிப்பு வகைகள்

இனிய உணவு வகைகளும் வழக்கத்தில் இருந்தன. பருப்பு வகைகளுடன் வெல்லக் கட்டியைக் கலந்து ஆக்கிய ஒருவகை பொங்கல் வழக்கத்தில் இருந்தது (பதி. 90-25) வெல்லப்பாகுடன் மாவைக் கலந்து அப்பம் என்னும் பணியாரம் செய்தனர் (பெரும். 377-378) வரகு, அவர் முதலியவற்றுடன் பாலைக் கலந்து செய்யும் இனிய உணவையும் உண்டனர் (புறம். 8:10; பெரும். 168) கருப்பஞ்சாற்றுப் பாகுடன் பாலையும் பெய்து நெல் அவலையும் கலந்து ஒருவகை இனிப்பு உணவு தயாரிக்கப்பெற்றது (அகம். 237:9-1). கொள்ளும் பயறும் பாலுடன் கலந்து ஆக்கிய வெள்ளிக் கம்பியை அறுத்து வைத்தாற் போன்ற வெள்ளிய சோற்றுக் கஞ்சியாகிய பாற்கஞ்சியும் ஆக்கப்பெற்றது (அக. 37:12-14). தேனையும் பாலையும் கலந்து உண்ணுதலும் பெருவழக்காய் இருந்தது (நற். 110:1; அகம். 89:19-20; 207:14-17) இனிய பழங் களையும் உண்டனர் (மலைபடு. 282). பலாப்பழம், இளநீர், வாழைப்பழம், பனைநுங்கு முதலியன இனிய உணவுகளாகக் கருதப்பட்டன.

*தாழ்கோட் பலவின் சூழ் சுளைப் பெரும் பழம்,*
*வீழ் இல் தாழைக் குழவித் தீம்நீர்*
*கவ்வ முலை இரும் பிடிக்கவுள் மருப்புஏய்க்கும்*
*திரள் அரைப் பெண்ணை நுங்கொடு, பிறவும்*
*தீம்பல் தாரம் முனையின்*

*(பெரும். 356-361)*

எனவரும் இப்பாடற்பகுதியில் உண்ணுதற்குரிய இனிய பழ வகைகள் குறிக்கப்பட்டுள்ளமையைக் காணலாம். இனிய பல வகைப்பண்டங்களும் உண்டனர் என்பதைப் ''பிறவும் தீம் பல் தாரம்' எனக் குறிப்பதனால் அறியலாம். பனையினது நுங்கு நீரும், கருப்பஞ்சாறும், இளநீரும், உண்ணுதற்குரிய இனிய முந்நீர்களாகக் கொள்ளப்பட்டன (புறம். 24:12-16).

இனிய உணவுகள் ஊன் உணவுக்கும் சோறு, கறி முதலிய வற்றிற்கும் அடுத்த நிலையிலே விரும்பப்பட்டன. கரிகாலன் பொருநர்க்கு ஊனையும் கள்ளையுமே முதற்கண் உணவாகக் கொடுத்தனன் என்றும், அதில் அவர்களுக்கு வெறுப்பு வந்த பிறகே பணிகாரங்களும் சோறு, கறி முதலியனவும் வழங்கினன் என்றும் பொருநராற்றுப்படை குறிப்பிடுகிறது (104-119).

*'ஊனும் ஊணும் மனையின் இனிதுஎன*
*பாலின் பெய்தவும், பாகின் கொண்டவும்*
*அளவுபு கலந்து, மெல்லிது பருகி,*
*விருந்துறுத்து, ஆற்றி இருந்த னமாக'*

*(புறம். 381:1-4)*

இப்புறநானூற்றுப்பாடல் பகுதியும் மேற்குறித்த கருத்தை வலி யுறுத்துகிறது.

## தாம்பூலம் தரித்தல்

தாம்பூலம் தின்பதும் அந்நாளில் பெருவழக்காயிருந்தது. இது உடம்பிற்கு நலம் செய்வதாகக் கருதப்பட்டது. கருங்காலி

சீவிக் காய்ச்சின களி கலந்த இனிய பாக்கும் கொடி வெற்றிலை யும், சங்கு சுட்ட சுண்ணாம்பும் ஏந்தி மதுரைமாநகர வீதிகளில் விற்றுத் திரிந்த மாந்தர் காணப்பட்டதாக மதுரைக்காஞ்சி குறிப்பிடுகிறது (400-401). பாக்குடன் பஞ்சவாசங்களும் (தக்கோலம், ஏலம், இலவங்கம், கருப்பூரம், சாதிக்காய், கலந்து உண்ணப் பட்டன (பரி. 12:22), வெற்றிலை பாக்கினைப் பையில் இட்டு வைத்துக் கொள்ளுதலும், அதனைத் தாம் செல்லுமிடங்களுக்கு உடன் கொண்டுசெல்லுதலும், அவற்றை அவ்வப்போது தின்னுதலும் பழக்கமாயிருந்தது. புதியராய்ச்சந்திப்போரைத் தாம்பூலம் தின்னு மாறு உபசரிப்பதும் மரபாயிருந்தது (கலி. 65:13-14).

## கேளிக்கைகள்

ஆடவர் தொழிலை மேற்கொள்ளாத காலங்களில் சூதாடு தல், கோழிப்போர், புனலாடல், பொழிலாடல், விழாக் காண்டல் முதலிய கேளிக்கைகளில் தமது பொழுதைப் போக்கினர். இவ்வகைக் கேளிக்கைகளில் மகளிரும் ஒரு சிலவற்றில் சிறுவர் சிறுமியர்களும் கலந்து கொள்வதுண்டு. சூதாடுவதற்குப் பலகை யும் வட்டு என்னும் காய்களும் கருவிகளாக இருந்தன. சூதாடும் இடத்தை மக்கள் 'கழகம்' என வழங்கினர். குறளனுடைய உருவத்திற்கு வல்லுப் பலகையை ஒப்புமை காட்டுதலின் இது சிறிய அளவினதாய் இருக்கும் என்று தெரிகிறது (கலி. 94:13-14) சூது காயாகிய வட்டை உருட்டி ஆடும்பொழுது (பரி. 41:12) வெற்றி பெற்றவன் மனம் மகிழ்தலும் தோற்றவன் மனம் வருந்துதலும் இயல்பு. இதில் தோற்றார் பின்னடைதல் இன்றி மேலும் மேலும் ஆடுதற்கே விருப்பம் கொள்வர் (கலி. 136). இவ்வாறு வெற்றி தோல்வி ஆடுவாரிடையே மாறிமாறி வருதலின் வாழ்க்கை நிலையாமையைக் குறிக்க இந்நிகழ்ச்சியை ஒப்புக்கூறுவர். 'கவறுறுபெயர்த் தன்ன நிலையிலா வாழ்க்கை' (நற். 243:5).

ஊர் மன்றுகளில் நரை மூதாளர்களாகிய முதியோர்கள் சூதாட்டத்தில் பொழுதைப் போக்கினர். சூதாடுவதற்கென மன்று களில் தனி இடங்கள் இருந்தன. அந்த இடத்தில் எப்பொழுதும் சூதாடியதனால் அவ்விடம் தேய்ந்தும் குழி விழுந்தும் இருக்கும்

(அகம். 377:6-10; புறம். 52:13-15). நரை மூதாளர் பொழுதுபோக்காக இச்சூதாட்டத்தை மேற்கொள்ளினும் ஏனையோர் சூதாடு கழகங்களில் சூதாடுவது வெறுக்கப்பட்டு வந்தது. இது தாழ்ந்த கூட்டம் என்பதை உணர்ந்தே, 'தண் கழகத்து' என்று குறிக்கப் பட்டுள்ளது. தண்கழகமாவது இழிவைத்தரும் கூட்டம் என்பதாம் (கலி. 136:3).

## கோழிப்போர் முதலியன

பொழுதுபோக்காகச் சூது போர் நிகழ்த்துவதைப் போலச் சேரி மக்கள் கூடியிருந்து வேடிக்கை பார்க்க, கோழிப்போர், எருதுப்போர் முதலியன நிகழச் செய்தலும் உண்டு. குப்பை கிண்டும் கோழிகளின் போர் இடையே விலக்குவாரின்றி மிக மூர்க்கமாக நடக்கும்.

*'குப்பைக் கோழித் தனிப்போர்போல*
*விளிவாங்கு விளியின் அல்லது*
*களைவோர் இலை - யான் உற்ற நோயே'*

*(குறு. 305:6-8)*

என்பதனால் கோழியின் போர்த்தன்மையை அறியலாம்.

## விலங்குப்போர்

மலையானின் ஏறும் நல்லகாளையும் ஒன்றோடு ஒன்றி முட்டிப் பொர, கோவலரும் குறவரும் அதனைக் கண்டு ஆரவாரம் செய்து மகிழ்ந்தனர் என்பதை மலைபடுகடாத்தில் பார்க்கலாம் (330-335). இரண்டு காளைகள் தம்மில் பொருதலைப் புறநானூறும் குறிப்பிடுகிறது (288:104). இவற்றால் ஏனைய விலங்கு பறவை களையும் போரில் ஈடுபடுத்தி, மக்கள் கூடியிருந்து வேடிக்கை பார்த்துப் பொழுதைப் போக்கினர் என்பதை அறியலாம்.

கழைக்கூத்தாடிகள், பாணர் கூத்தர் முதலியோர் அவ்வப் போது வந்து நிகழ்த்தும் கூத்து, முதலியவற்றையும் கண்டு களிப்பது உண்டு (குறுந். 7). நகரமாந்தர் இரவில் பாட்டைக் கேட்டும், நாடகங்களை விரும்பிக் கண்டும் நிலாப்பண் நுகர்ந்தும் பொழுது

போக்கினர் (பட்டி. 113-114). அல்லியக்கூத்து (புறம். 33) முதலிய கூத்துகளும் கண்டனர்.

## மாலை வழிபாடு

மாலையந்தியில் மகளிர் வீடுகளில் விளக்கு ஏற்றி நெல், மலர் முதலியன தூவி வழிபட்டனர் (மதுரைக். 555-558). கோயில் களுக்குக் குழந்தைகளையும் உடன் அழைத்துச் சென்று வழி படுவதும் உண்டு (கலி.), மகளிர் தெய்வத்திற்கு மடை முதலியன கொடுப்பதும் வழக்கமாயிருந்தது (மதுரைக். 604-616). அந்தியில் அந்தணர் அருங்கடன் இறுத்தனர்.

## படுக்கை வகை

மாந்தர் சின்னஞ்சிறு குடிசை முதல் பெரிய மாளிகை ஈறாகத் தத்தம் நிலைமைக்கு ஏற்பத் உறைவிடங்களை அமைத்துக் கொண்டு வாழ்ந்தனர் என முன்பு படித்தோம். இரவில் உறக்கம் கோடற்கு ஏற்ற கட்டில்களை உபயோகித்தனர். ஏழையான ஒருவன் கயிற்றுக் கட்டிலைத் தன் மனைவிக்குப் பின் அமைத்ததைப் புறநானூற்றில் காணலாம் (புறம். 82). அரசி படுத்திருக்கும் வேலைப்பாடு அமைந்த கட்டிலை நெடுநல்வாடை வருணிக்கிறது (115-130). அரசியின் கட்டிலில் அன்னத் தூவி பரப்பிய மலர்ப் படுக்கையும், அக்கட்டிலின் மேல் சந்திரனொடு உரோகிணி எழுதப்பெற்ற மேற்கட்டியும் கட்டப்பட்டிருந்தன (நெடுநல். 132-13; 156-166). மான் தோற் படுக்கை, புற்பாய் முதலியன ஏழைகளின் இல்லங்களிலே காண்கிறோம். இவ்வாறாகத் தத்தம் இயல்புக்கும் தரத்திற்கும் ஏற்ற படுக்கைகளில் இனிது உறங்கி, பகற்பொழுதில் உழைத்த உழைப்பின் வருத்தத்தைப் போக்கினர். இவர்களுக்குப் பறவைகளின் ஒலியும் பாணர் இசை முதலியனவும் பள்ளி உணர்த்தக் காத்துக் கொண்டிருந்தன.

இங்ஙனமாக ஒவ்வொரு நாளும் மக்களின் வாழ்க்கை முறை அமைந்திருந்தது. எல்லாரும் உழைத்துப் பொருளாக்கி இன்பம் நுகர்ந்து மகிழ்வுடன் மக்கள் வாழ்ந்தனர். இதனால் ஊரும் நாடும் உலகமும் நற்பயன் பெற்றன.

# 5. சமுதாய நடைமுறையும் நம்பிக்கையும்

## பொதுச்சடங்குகள்

தமிழ்மக்கள் தாங்கள் வாழும் இடத்தாலும் பிற சூழ்நிலைகளாலும் சிற்சில வேறுபட்ட பழக்கங்களைக் கொண்டிருந்தனரேனும், எல்லா மக்களிடத்திலும் பொதுப்படையாகக் காணப்பட்ட நிகழ்ச்சிகளும் பலப்பல. ஒருசில நிகழ்ச்சிகள் பரம்பரை வழக்கமாக வழிவழி வந்து, சடங்குகளாகவும் மாறிவிட்டன. சடங்குகளை நிகழ்த்துவிப்பதற்குத் துணையாகக் குருக்கள் நிலையில் சிலர் தோன்றுவாராயினர். முதியோர்களும் சான்றோர்களும் நடைமுறை வழக்கங்களை மக்களுக்கு அறிவித்தனர். வெறியாட்டு விழா போன்ற சிறப்பு நிகழ்ச்சிகளை வேலன், அந்தணர் என்போர் முன்னின்று செய்வித்தனர். தைந்நீராடும் மகளிர்க்கு முதுபார்ப்பனிமார் சடங்கு நிகழ்த்தும் முறையினை அறிவிப்பதாகப் பரிபாடல் தெரிவிக்கிறது (பரி. 11.75-91). திருமண நிகழ்ச்சிகளில் மகப் பயந்த மகளிர் முன்னின்று வேண்டுவன செய்து வழிகாட்டுகின்றனர். மரணச் சடங்குகளைச் செய்யும்போது பிண்டம் வைத்தல் போன்ற சில காரியங்களைப் புலையன் முன்னின்று நடத்துகிறான். விழுப்புண் படாது இறந்தாரை வாளால் மார்பைப் பிளந்து அடக்கம் செய்ததாகத் தெரிய வருகின்றது. இங்ஙனமாக வரும்சடங்கு போன்றன வெல்லாம் சமுதாயத்தில் மக்கள்பால் வேரூன்றிவிட்ட சிற்சில நம்பிக்கைகளின் விளைவே.

## கட்டுவிச்சி குறி

மக்கள் தங்கள் வாழ்க்கையில் நேரும் சில நிகழ்ச்சிகளின் உண்மையை அறிவதற்கும் மேல் நிகழ்வதை அறியவும் குறி கேட்டல், நேர்ந்த துன்பங்களுக்குச் சாந்தி செய்தல் போன்ற வழக்கங்களைக் கொண்டிருந்தனர். இக்குறி கேட்பதற்குக் 'கட்டு

விச்சி' என்னும் பெண்மணியை அழைத்து வினாவுவர். கட்டுவிச்சி கையில் வெள்ளிப்பூண் கட்டிய சிறுகோல் தாங்கிய முதுகுடன் இருப்பாள். சங்குமணி போன்ற வெண்ணிற நரைமயிரையுடைய முதுமகள் என்று இவள் கூறப்படுவதனால், ஈதுமகளிரே குறியறிந்து கூறும் குறியையே மக்கள் விரும்பினர் என்பதும் விளங்கும். குறி சொல்லுபவள் முறத்தில் நெல்லை வைத்து, அதனை எண்ணி, அதனால் சில நிமித்தங்களை அறிந்து கூறுவது மரபு. அப்பொழுது தெய்வத்திற்காகப் பிரப்பரிசியும் வைத்திருப் பாள் (குறு. 23:1-3; 298:6; அகம். 97:9-10).

## வேலனின் கழங்குக்குறி

கட்டுவிச்சியிடம் நெற்குறி பார்ப்பதைப் போலவே வேலனை அழைத்துக் கழங்குக் குறி பார்ப்பதும் உண்டு. கழற்சி விதைகளை முருகன் முன்னிலையில் பரப்பி, வேலன்தன் கையிலுள்ள சிறுபைகள் கட்டிய கோலினால் அக்காய்களை அள்ளி எடுக்கும்போது, நேரும் குறிப்புக் கண்டு கூறுவதாகும் இக்கழங்குக்குறி (நற். 268:8-9; 282:3-6; ஐங். 248; 249; 250;). தாய்மார் தங்கள் பெண்களின் மேனி வேறுபாட்டின் காரணத்தை அறியவும், தாங்கள் எண்ணியது கை கூடுமா என்று அறியவும், இவ்வகையான குறிகளைக் கேட்பதில் ஈடுபடுகின்றனர். மகட் போக்கிய தாய் ஒருத்தி, அவளை உடன் கொண்டு சென்ற தலைவன், என் வீட்டிற்கே திரும்புவானா? அல்லது தன் இல்லத்திற்கே சென்று விடுவானா? அவனுடைய எண்ணம் யாதாயிருக்கும் என்று கூறுமாறு, கழங்குக் குறிபார்க்கும் வேலனை வினவிய நிகழ்ச் சியை அகநானூற்றில் (195:14-19) காணலாம்.

## வெறியாட்டு

தாங்கள் கேட்ட குறியிலிருந்து தம் புதல்விக்கு நேர்ந்த துன்பம் தெய்வத்தால் வந்தது என்று அறிந்த காலத்து அத் தெய்வத்திற்கு வேண்டும் சாந்தி வழிபாடுகளை நிகழ்த்தினர். தெய்வ வழிபாடுகளில் ஒன்று வெறியாட்டு. இவ்வெறியாட்டு நிகழ்ச்சியை நடத்தி வைக்கப் படிமத்தான் எனப்படும் வேலனை

அழைப்பர். இவன் முருகனை வழிபடுவதற்கு உரித்தாகக் கொள்ளு மிடம் 'வெறியர்களம்' எனப்படும். இது பெரும்பாலும் வீட்டின் முற்றமாக அமைந்திருக்கும். அம்முற்றம் நறுமணல் பரப்பப்பட்டு நன்கு அலங்கரிக்கப்பட்டிருக்கும். அக்களத்தின் ஒருபால் முருகப் பெருமானுக்குரிய கோழிக்கொடி நாட்டி வைக்கப்பட்டிருக்கும். பூவும் மாலையும் அதற்கு அணிவித்து, நறும்புகை காட்டி, முருகப்பெருமானை எழுந்தருளச் செய்வான்; முருகனைப் புகழ்ந்து பாடுவான். அப்பூசையில் ஆட்டு மறியை அறுத்து அதிலிருந்து பெருகும் குருதியுடன் செந்தினையைக் கலந்து பலியாகத் தூவுவான். பல்வகை இயங்கள் முழங்க முருகப் பெருமான் புகழ் கூறி வழிபடுவான். இவ்வழிபாடு இரவின் சாமப்பொழுதில் நிகழ்ந்ததாகத் தெரிய வருகின்றது (முருகு. 222; குறு. 53:3; அக. 98:18-19; 138:10; நற். 332. குறு. 10-12; 382:10). குறமகளிர் முருகனுக்கு வெறியாட்டு எடுத்து வழிபட்ட நிகழ்ச்சி முருகாற்றுப்படையில் நன்கு விவரிக்கப்பட்டுள்ளது (227-249).

## குரவைக்கூத்து

தனிப்பட்ட வேலன் வெறியாட்டு நிகழ்த்தலேயன்றிப் பல ருடன் கூடி ஊர்மன்றத்தில் வேங்கை மரத்தின் அடியில் குரவைக் கூத்து ஆடி வழிபாடு நிகழ்த்துதலும் உண்டு (முருகு. 197; மது. 611-615). குரவையாடும் பழக்கம் ஆயர்களிடத்தும் அமைந்து இருந்தது. ஆயர்மகளிரும் குரவையாடித் தெய்வம் பரவும் நிகழ்ச்சி களைக் கலித்தொகையில் காணலாம் (103; 104; 106).

## தெய்வ ஆவேசம்

புலைமகள் மேல் தெய்வம் ஆவேசம் வந்து ஆடுங்காலத்து அவள் ஆநிரைகளைப் போலத் துள்ளித் துள்ளி ஆடுவாள் என்று தெரியவருகிறது.

''முருகு மெய்ப் பட்ட புலத்தி போலத்
தாவுபு தெறிக்கும் ஆன்போல
புடையிலங்கு ஒள்வாட் புனைகழலோயே''

(புறம். 259:5-6)

என்பதனால் தெய்வ ஆவேசம் உற்றோர் தம் கால் பெயர்த்து கையோச்சித் துள்ளிக் குதித்தாடினர் என்பதை அறியலாம்.

## கடவுள் வழிபாடு

மக்கள் எந்தச் செயலைத் தொடங்கினாலும் முதலில் கடவுள் வணக்கம் செய்தே வினையைத் தொடங்கினர். திருமண நிகழ்ச்சிக்கு முன்பு கடவுள் வழிபாடு இயற்றினர் (அகம். 136:6, குறிஞ். 5-7). பாணர்கள் தாங்கள் இசையைப் பாடத் தொடங்குமுன் முதன்முதலில் கடவுள் வாழ்த்தை இசைத்தபின் பாடத் தொடங்கினர். நாள்தோறும் காலையில் கடவுட் பாணி பாடுதலை இவர்கள் கடமையாகக் கொண்டிருந்தனர் (பொரு. 48-52). அரசவை யில் கூட அரசரை வாழ்த்து முன் கடவுள் வணக்கம் செய்த பின்னரே மன்னரைப் புகழ்ந்தனர் (மலை. 538-544).

## நாள்கோள் பார்த்தல்

மக்கள் தாங்கள் செய்யப் போகும் நிகழ்ச்சிகளைத் தொடங்கும்முன் நாள் கோள் நோக்கியும் பல்வகை நிமித்தங்களை ஆராய்ந்தும் செயல் தொடங்கினர்.

> *'புள்ளும் பொழுதும் பழித்தல். அல்லதை*
> *உள்ளிச் சென்றோர்ப் பழியலர்'*
>
> *(புறம். 204:10-11)*

''நாள் அன்று போகி, புள் இடை தட்ப'' (புறம். 124:1) என வருவன இவ்வழக்கத்தைப் புலப்படுத்துகின்றன. திருமணத்திற்குத் தீய கிரகங்களின் சேர்க்கையில்லாத காலமாகவும், சந்திரன் சுடர்விட்டு ரோகிணியுடன் கூடும் பெருநாளாகவும் இருப்பதைத் தேர்ந் தெடுத்தனர் (அகம். 86:5-7; 136:4-6).

## புள் நிமித்தம்

நிமித்தம் பார்த்தலைப் புள் என்றும் வழங்குவர். முதலில் பறவைகளால் நிமித்தம் பார்க்கும் வழக்கம் தோன்றிப் பின் பிற

நிமித்தங்களுக்கும் அதுவே பெயராக வழங்கத் தலைப்பட்டனர் என்று கருதுவர். உப்பு விற்கச் செல்லும் உமணர், கீழ்க்கடற் கரையில் விளைந்த உப்பை மேற்குப் பகுதிகளுக்குக் கொண்டு செல்லும் பொருட்டுப் புள் நிமித்தம் நோக்கித் தங்கள் பயணத்தைத் தொடங்கினர் என்னும் செய்தி அகநானூற்றுப் பாடல் ஒன்றில் காண்கிறது.

*'அணங்குடை முந்நீர் பரந்த செறுவின்*
*உணங்கு திறம் பெயர்ந்த வெண்கல் அமிழ்தம்*
*குடபுல மருங்கின் உய்ம்மார், புள் ஓர்த்துப்*
*படை அமைத்து எழுந்த பெருஞ்செய் ஆடவர்'*
*(அக. 20:1-4)*

இவற்றால் மக்கள் நல்ல காலம் நோக்கியும், புள் நிமித்தம் பார்த்தும் செயலாற்றும் இயல்பினர் என்பது போதரும்.

## நல்நிமித்தம் தீநிமித்தம்

நிமித்தங்களில் நன்னிமித்தமும், தீநிமித்தமும் உண்டு. சுவர்ப்பல்லியின் ஒலி, மனையின் நொச்சியில் உள்ள குயிலின் கூவல், குருகுகள் விசும்பில் எழுந்து பறத்தல், வண்டுகள் புதரில் சூழ்ந்து ஊதுதல், முன்கை வளையும் தோள்வளையும், இறுகுதல், இடக்கண் ஆடுதல், ஆயரது குழல் ஒலி இவையெல்லாம் நன்னிமித்தங்களாகக் கருதப்பட்டன (நற். 246:1-7; ஐங். 218:1-3; குறு. 260:1-4; கலி. 101:34-35). எட்டுத் திசையிலும் எரிகொள்ளி எரிந்து விழுதல், (எரிநட்சத்திரம்), பெருமரத்திலுள்ள இலையில்லாத கொம்பு தீப்பற்றி எரிதல், கொடிய கிரணம் உடைய சூரியன் பல இடத்தும் நெருங்கித் தோன்றுதல், அச்சம் தரும் கூகை முதலிய பறவைகளின் ஒலி, கனவில் பல் நிலத்தில் வீழ்வதைப் போலவும், எண்ணெயைத் தலையில் வார்ப்பது போலவும், பன்றியின் மேல் ஏறுவது போலவும், ஆடையைக் களைவதைப் போலவும், படைக்கலங்கள் தாம் இருந்த கட்டிலுடன் மறிவதைப் போலவும் காணப்படுதல் முதலியவையெல்லாம் தீமை நிகழ்வதை அறிவிக்கும் குறிகள் என எண்ணினர் (புறம். 41:4-13). இரவின் நடுவானத்தில் வந்து தும்பி ஒலித்தலும், வீட்டில் வைத்த விளக்கு எரியாது

அணைதலும் கூடத் தீய நிமித்தங்கள் எனக் கொள்ளப்பட்டன. (புறம். 280-2-3). தீய நிமித்தம் நேர்ந்தபோது மக்கள் மனம் தளர்தலும், தீங்கு நேராது இருக்குமாறு கடவுளைத் துதித்துப் போற்றுதலும் இயல்பு என்பதைப் புறம். 260 பாட்டில் வரும் பாணனுடைய செயல்களால் அறியலாம். பாணன் யாழின் இன்னிசையை எழுப்ப அது மாறுபட்டு இரங்கற் பண்ணாக ஒலிக்கின்றது. அதனைக் கேட்டதும் அவர் யாது தீங்கு நேருமோ என்று அஞ்சி, தான் வரும் வழியில் கள்ளி நிழலிலுள்ள கடவுளை வாழ்த்தி வழிநடந்தானாம்.

## பாலையில் ஓந்தி நிமித்தம்

பாலை நிலத்தில் வழிச்செல்வோர் ஓந்தியைக் கொண்டு நிமித்தம் அறிந்தனர் என்பது,

*''வேதின வெரிநின் ஓதிமுது போத்து,*
*ஆறுசெல் மாக்கள் புள் கொள, பொருந்தும்*
*சுரனே சென்றனர், காதலர்''*

*(குறு. 140:1-3)*

என வருவதனால் தெரியவருகிறது.

## விரிச்சி கேட்டல்

புள் நிமித்தத்தைப் போலவே விரிச்சி கேட்டலும் வழக்க மாய் இருந்தது. ''புள்ளும் ஓராம்; விரிச்சியும் நில்லாம்'' (குறு. 218:3) என்பதனால் இது புலப்படும். விரிச்சி என்பது நற்சொல்லைக் குறிக்கும். விரிச்சி கேட்போர் மனையிலுள்ள பெருமுது பெண்டிராய் இருப்பர். மாலைக் காலத்தில் ஊரின் ஒருபால் சென்று விரிச்சி கேட்டலும், காவல் பொருந்திய தன் மனையிலே உள்ள மணலைப் பரப்பிய பந்தரில் சென்று விரிச்சி கேட்டலும் உண்டு. மணி ஒலிக்க நாழியில் கொண்ட நெல்லுடனே சென்று; அந்நெல் லையும் முல்லைப் பூவையும் நீருடன் சொரிந்து விரிச்சியை நோக்கி நிற்பர். அப்பொழுது அவர்கள் காதில் விழுகின்ற சொற்களைக்

கொண்டு நலம், தீங்குகளை உணர்ந்து கொள்ளுதல் மரபு (முல்லை. 6-11, பற். 40:1-4; புறம்: 280:1-7). பெருமுதுப்பெண்டு விரிச்சி கேட்டு நின்றபொழுது, பசுவைப் பிரிந்த கன்றை நோக்கி, ஓர் ஆய்மகள், ''இன்னே வருகுவர் தாயர்'' என்று சொன்ன சொல்லை நல்மொழியாகப் போற்றிய செய்தி முல்லைப்பாட்டில் உள்ளது. ''இன்னே வருகுவர் தாயர்'' என்று ஆயர்மகள் கூறிய மொழி தலைவனைப் பிரிந்து வருந்திய நிலையில் இருக்கும் தலைவிக்கு ஆறுதல் அளித்ததாம். அதனால் அந்த ஆய் மகளின் வார்த்தையை ''நன்னர் நன்மொழி கேட்டாம்'' அதனால் ''நல்ல நல்லோர் வாய்ப்புள்'' என்று தோழி பாராட்டி உரைக்கின்றாள் (முல்லை. 11-21).

## பல்லி சொல் பலன் கேட்டல்

மாந்தர் வாய் பிறக்கும் நற்சொல் கேட்பது போலவே பல்லி சொல்லும் சொல்லையும் நிமித்தமாகக் கருதினர். தலைவனைப் பிரிந்த நிலையில், தலைவி அவன் சென்றது முத்ல் ஒவ்வொரு நாளும் சுவரில் குறியிட்டு அத்னை நாள்தோறும் எண்ணி வருத்தத்துடன் வாழ்கிறாள். வருத்தத்தின் காரணமாகத் தன் முன் கையைக் கன்னத்துடன் சேர்த்து ஊன்றிக்கொண்டு படுக்கையில் பிரிவு எண்ணி அழுத கண்ணினளாய் வருந்தி யிருக்கிறாள். இந் நிலையில் அவளுடைய துயரத்தை நீக்குவதைப் போலப் பல்லி ஒலித்ததாம். அச்சொல் அவளுக்கு ஆறுதலைத் தந்ததாம். மனைவியைப் பிரிந்து சென்ற கணவன் தன் மனைவி, பல்லியின் நிமித்தம் நோக்கி வருந்தியிருக்கும் நிலையை நினைத்துக் கூறியதாக உரைக்கும் அகநானூற்று 381 பாடலால் இச்செய்தி விளக்கமாகத் தெரிய வருகிறது. பல்லியின் சொல் நன்னிமித்தமாய் கணவன் வருகையை உறுதி செய்வதாக நம்பினர்.

'இனை நலம் உடைய கானம் சென்றோர்
புனை நலம் வாட்டுநர் அல்லர்; மனைவியின்
பல்லியும் பாங்கு ஒத்து இசைத்தன
நல் எழில் உண்கணும் ஆடுமால் இடனே'

(கலி. 11:19-22)

என்னும் தோழியின் கூற்று இதற்குச் சான்றாம். பல்லி சொல் கேட்டு மகளிர் இருக்கும் நிலையைச் சங்கப் பாடல்களில் பல இடத்தும் காணலாம் (நற் 333:10-12; அகம். 9:18-23; 151:11-15; 259:14-17; 357:15-20). மகளிரேயன்றி விலங்குகளும் கூடப் பல்லி சொல்லைக் கேட்டுச் செயல்புரிகின்றன என்று கவிஞர் கட்டுரைத் துள்ளனர் (அகம். 88:1-4; நற். 98:1-7).

## கனவுப் பலன்

ஆடவரும், பெண்டிரும் நனவில் ஊடாடும் எண்ணங் களைக் கனவில் கண்டு உரையாடும் வழக்கமும் உண்டு (குறு. 147:3-5; நற். 173:4-5; ஐங். 234:2-4; 324; அகம். 39:23-25) வண்டு முதலிய பிராணிகளும் கனவு காண்பதாக உரைப்பது கவி மரபு. (அகம். 132:9-14;) கனவில் தெய்வக் காட்சி காணுவதும் உண்டு. மகளிரின் வேறுபாடு நீங்க வெறியெடுக்க எண்ணிய தாயை வெறியாட்டில் வெளிப்படும் கடவுளாகிய முருகன் கனவில் வந்து இந்நோய் என்னால் வந்ததன்று; இஃது ஒரு தலைமகனால் நேர்ந்தது என்று தெரிய செய்யக்கூடாதா என்று, ஒரு தோழி பேசுகின்றாள் (நற். 173). இங்கே தோழி கண்ணினும் கனவினும் காட்டி என்று கூறுவதினால் கனவில் தெய்வக்காட்சி காணுதல் இயல்பு என்பது பெறப்படும்.

## மகளிர் வீட்டை விளங்க வைத்தல்

மகளிர் வீடுகளில் கிளிகளை வளர்த்தலும் அவற்றுடன் தன் எண்ணங்களை உரைத்தலும் வழக்கமாய் இருந்தது (அகம். 34:14-18). வீடுகளை மகளிர் தக்க வகையில் அலங்கரித்தனர். செல்வர் வீடுகளில் இக்காலத்தைப் போலப் பூத்தொட்டிகளில் செடிகள் வளர்க்கப்பட்டன (அகம். 369:6; புறம். 105:2). செல்வப் பெண்கள் உலாவுவதற்கென நிலாமுற்றங்கள் இருந்தன. அவற்றில் இவர்கள் உலாவி மகிழ்ந்தனர் (நெடுநல். 95; மது. 451-452). தேனும் பாலும் கலந்துண்டு இனிதாகப் பொழுது போக்கினர் (நற். 110:1-4; அகம். 89:19-20; 207:14-17). மகளிர் பலவகை விளக்குகளை ஏற்றி, வீட்டை அலங்கரித்தும், வழிபட்டும் வந்தனர். காலை உடைய

பாண்டில் விளக்கு (பதிற். 4796; நெடுநல். 175; ஐங். 405:1-2) பாவை விளக்கு (முல்லை. 85-86; நெடுநல். 101-104) ஓதிம விளக்கு (சிறுபாண். 317) என்னும் விளக்குகள் உபயோகத்தில் இருந்தன. பஞ்சினாலாகிய வெண்திரியில் விளக்கு ஏற்றப்பட்டது (குறு. 359:4-7). மாலைக்காலத்தில் பூ முதலியவற்றைத் தூவி விளக்கினை மகளிர் வழிபட்டு வந்தனர்.

## விளக்கீட்டு விழா

வீடுகளிலும் வீதிகளிலும் விளக்கேற்றி மாலைகளைக் கட்டிக் கொண்டாடிய விளக்கேற்று விழாவும் அந்நாளில் கொண்டாடினர். மழை நீங்கிய பருவத்தில் சந்திரன் அறுமீனாகிய கார்த்திகையோடு சேரும் நாளில் இவ்விழா நிகழ்ந்தது. இருள் செறிந்த நடுநாளில் இவ்விழா நிகழ்ந்ததாகக் கூறப்படுதலின் இது இக்காலத்தில் கொண்டாடப்பெறும் தீபாவளியையொத்த விழா வாகலாம் என்று தோன்றுகிறது. ''மதி நிறைந்து அறுமீன் சேரும் இகல் இருள் நடுநாள்'' என்பதற்கு இருள் அகல் நடுநாள் எனச் சொற்கிடக்கையை மாற்றி கார்த்திகை விளக்கீட்டைக் குறிப்பதாகக் கொள்வாரும் உண்டு (அகம். 141:5-11). இவ்விழா ஊரிலுள்ள பலரும் சேர்ந்து கொண்டாடுவதாகவும் இவ்விழாவிற்குப் பிரிந்த தலைவர் வர வேண்டும் என்றும் தலைவி கூறுவதினால் இவ்விழா வில் ஆடவர்களும் உடன் இருந்து கொண்டாடுதல் வழக்கமாக இருந்தது என்பது போதரும் (அகம். 141:5).

## விழாவும் விருந்தும்

விழாவும் விருந்தும் எங்கும் சிறப்பாகப் போற்றப்பட்டன. ''தெய்வ விழாவும், திருந்து விருந்து அயர்வும்'', (பரி. 42) என்பது பரிபாடல். இரவிலும்கூட விருந்து வரின் உபசரித்துப் போற்றுவது மரபாய் இருந்தது.

'எல்லி வந்த நல் இசை விருந்திற்கு,
கிளர் இழை அரிவை நெய்துடிந்து அட்ட
விளர் ஊன் அம்புகை எறிந்த நெற்றி

*சிறுநுண் பல் வியர் பொறித்த*
*குறுநடைக் கூட்டம் வேண்டுவோரே'*

*(நற். 41:6-10)*

இப்பாடல் பகுதியில் ஒரு பெண் விருந்தினர்க்கு ஊட்டுதலுக்கு இரவில் சமையல் செய்த வகை பாராட்டப்பட்டுள்ளது.

## மறைத்து உணவு உண்ணல்

பானைகளில் மணத்துக்காக விளாம்பழத்தை இட்டு வைத்தல் உண்டு (நற். 12:1). வறுமையால் மெலிந்தோர் தங்கள் எளிய வாழ்க்கை நிலையைப் பிறர் கண்ணில் படாதவாறு தங்கள் வீட்டின் வாசலை அடைத்து உள்ளே இருந்து உணவு உண்டனர். இவ்வாறு உண்டதற்குக் காரணம் தம் நிலையைக் கண்டோர் புறங்கூறுவார் எனக் கருதியமையாகும். இதனால் உண்ணும் பொழுது அந்நியர் காணாதவாறு உண்ணுதல் அக்கால வழக்கம் என்பதும் தெரியவரும்.

## தீட்டுடை மகளிர் செய்தல்

தூய்மையில்லாத மகளிர் பாண்டங்களைத் தொடுதல் இல்லை. தீட்டு உடையோர் விலகியே இருப்பர். கோவில்களுக் கும் இவர்கள் செல்வதில்லை.

*'அணங்குடை முருகன் கோட்டத்துக்*
*கலம் தொடா மகளிரின் இகந்து நின்றவ்வே'*

*(புறம். 299-6-7)*

என்பதனால் தெரியவரும்.

முனிவர்களை அடுத்தோர் தம் தூய்மை இன்மை காரணமாக அவர்களை நெருங்காது விலகிச் செல்வது மரபு (குறு. 203:4-5). அயலாருடைய சுடலையையும் பார்ப்பதில்லை (குறு. 231:3-4).

## கடல்கடந்து மகளிரைக் கொண்டு செல்லாமை

ஆடவர் தமது பொருள் முயற்சிகளில் கடல் கடந்து செல்லுங் காலத்துப் பெண்களை உடன் அழைத்துச் செல்வ தில்லை. தாம் போருக்குச் செல்லும் காலத்தும் பெண்களுடன் போத லில்லை. ''முந்நீர் வழக்கம் மகடூஉவொடு இல்லை'' (தொல். பொருள். அகம். 37) ''எண் அரும் பாசறை, பெண்ணொடு புணரார்'' (தொல். பொருள். கற்பு. 34) எனத் தொல்காப்பியர் இவ்வழக்கத்தை எடுத்து மொழிகின்றார். கணவனைப் பிரிந்து வாழும் மகளிர் கூந்தலும் மேனியும் பேணாது வருத்த நிலையில் இருப்பர். கணவர் உடனுறையும் காலத்தில்தான் அவர்கள் கோலம் பூண்டு இன்பமாக வாழ்வர்.

*'அரிமதர் மழைக்கண் அம்மா அரிவை*
*நெய்யோடு துறந்த மைஇருங் கூந்தல்*
*மண்ணுறு மனையின் மாசுஅற மண்ணி,*
*புதுமலர் கமழ்ல, இன்று பெயரின்*
*அதுமன், எம் பரிசில் - ஆவியர் கோவே!'*

*(புறம். 147:5-9)*

என்பது கணவனைப் பிரிந்து வாழும் மகளிர் நிலையை உணர்த்து கிறது.

## வீரர்களையே மகளிர் விரும்புதல்

அந்நாளில் மகளிர் வீரர்களையே பெரிதும் விரும்பினர். பெருங்கோழி நாயகன் என்னும் கப்பல் வாணிகனின் மகள் ஆமுர்மல்லன் என்னும் வீரனைக் காதலித்த செய்தி புறநானூற்றில் வந்துள்ளது (83). பெண் பேசி வந்த ஒருவனுக்கு,

*'திரு நயத்தக்க பணிபின் இவள்நலனே*
*பொருநர்க்கு அல்லது, பிறர்க்கு ஆகாதே;'*

*(புறம். 342:5-6)*

இவ்வாறு கூறுவதிலிருந்து அக்கால மகளிரின் விருப்பம் நன்கு புலனாகிறது.

## கற்பு ஒழுக்க நெறி

பெண்கள் கற்பிற்கு அறிகுறியாக முல்லை மலரை அணிவது மரபு. ஆகவே 'முல்லை சான்ற கற்பு' என்று கற்பினைச் சிறப்பிப்பர் (சிறு. 30; நற்.142: 10-11; அகம். 274:13-14). ஏறு தழுவுவதற்குரிய எருதுகளை ஆயர்கள் தொழுவில் புகவிட அப்பொழுது ஏற்றைத் தழுவினுடைய சென்னியில் கிடந்த முல்லைக் கண்ணியை ஒருபோர் ஏறு கொம்பால் எடுத்து வீசியது. அக்கண்ணி அவன் காதல் கொண்ட பெண்ணின் கூந்தலில் விழ, அவள் அதனைக் கெட்ட பொருளை மீண்டும் பெற்றாற் போல் எடுத்துத் தன் கூந்தலில் முடித்துக் கொண்டாள். இந்நிகழ்ச்சி அவளுடைய கற்பு ஒழுக்கத்தைக் காட்டுவதாக அமையுமேயன்றி அதனால் அன்னை முதலியோர் கடியமாட்டார் எனத் தோழி அவளுக்கு ஆறுதல் கூறினாள் (கலி. 107).

## மனைவி சிறப்பால் கணவன் மேன்மையுறல்

மகளிரின் வாழ்க்கைச் சிறப்பு அவர்தம் கணவருக்கும் பெருமையளித்தது. கற்புடைய மனைவியின் சிறப்பால் கணவன் மார் பெருமிதத்துடன் வாழ்ந்தனர். அவரது பெருமிதத்திற்குக் காரணம் மாநலம் மிக்க மனைவியைப் பெற்றது எனக் கருதினர்.

*'காமர் கடவுளும் ஆளும் கற்பின்*
*சேண் நாறு நறுநுதல், சேயிழை கணவ'*

(பதி. 65:9-10)

*'வான் உறை மகளிர், நலன், இகல் கொள்ளும்;*
*வயங்கு குழை காத்த, வண்டு படு கதுப்பின்;*
*ஒடுங்கு ஈர் ஓதிக் கொடுங்குழை கணவ!*

(பதி. 14:13-15)

இப்பாடற் பகுதிகளால் மனைவியரின் சிறப்பால் கணவர் போற்றப்படுதல் பெறப்படும். கணவன்மார்க்கு மட்டுமல்ல, அவள் தாய்தந்தையர்க்கே மகளிரால் பெருமை வரும்.

*'இழைஅணி பணைத்தோள், ஐயை தந்தை*
*மழைவளம் தரூஉம் மாவண் தித்தன்'*

*(அகம். 6:3-4)*

எனத் தித்தனது பெருமையைக் கூறுமிடத்து அவன் ஐயையின் தந்தையாய் இருத்தலின் அவன் சிறப்புக்கு ஒரு காரணமாகக் கூறப்பட்டுள்ளது. இங்கு ஐயை தந்தை என்றது 'இவள் கற்புடைமையை நோக்கி' எனப் பழைய உரைகாரரும் சுட்டிக் காட்டுகின்றார்.

## தந்தையின் உரிமை

தந்தையின் உரிமை, அவனது மக்களுக்குத் தாய முறையில் அமைந்தது. ''தாயத்தின் அடையா ஈயச் செல்லா'' (தொல். பொருள்.25) எனத் தொல்காப்பியர் இத்தாய முறையைச் சுட்டுகின்றார். கரிகாலன் தாய் வயிற்றிலிருந்து தாயம் எழுதினான் (பொருந. 132). இவன் அரசு பெறுதற்குத் தடையாய் இருந்த பகைவர்களை ஆண் யானை போலக் கிளர்ந்து எழுந்து தாக்கியழித்துத் தனக்குரிய அரசு உரிமையைப் பெற்றான் என்னும் செய்தியை,

*'பெருங்கை யானை பிடி புக்காங்கு*
*நுண்ணிதின் உணரநாடி, நண்ணார்*
*செறிவுடைத் திண் காப்பு ஏறி, வாள்கழித்து,*
*உருகெழு தாயம் ஊழின் எய்தி'*

*(பட்டினம். 224-227)*

எனவரும் பட்டினப்பாலை அடிகளால் அறியலாம்

## தந்தையரின் சொத்து உரிமை

தந்தையின் மறைவுக்குப் பின் அவனுடைய சொத்து உரிமை மகனுக்கே உரியதாய் இருந்தது. இதனை கோப்பெருஞ் சோழன் தன் மக்களோடு போர்புரிய எண்ணிய புல்லாற்றூர் எயிற்றினார் அவனுக்கெடுத்துக் கூறிய உரைகளிலிருந்து புலப்படுகிறது.

*'பரந்து படு நல் இசை எய்தி, மற்றுநீ*
*உயர்ந்தோர் உலகம் எய்தி; பின்னும்*
*ஒழித்த தாயம் அவர்க்கு உரித்தன்றே''*
*(புறம். 9-11)*

என்பது புலவர் வாக்கு.

## உறவுமுறைப் பெயர்

தாய் தந்தையரைப் போன்றே மகன் மகள் தமையன் தங்கை முதலிய உறவுமுறைப் பெயர்களும் வழக்கத்திலிருந்தன. தோழிமார் தங்களுக்குள் அன்னை என்னும் முறைப்பெயர்களால் அழைத்துக் கொள்ளுதல் உண்டு.

*'அன்னை, 'என்னை' என்றலும் உளவே,*
*தொல் நெறி முறைமை சொல்லினும் எழுத்தினும்*
*தொண்டு மரபின' என்மனார் புலவர்'*
*(தொல். பொருள். பொருளி.50)*

இம்முறைப் பெயர்கள் தொன்றுதொட்டு வருகின்றன என்பது ''தொல் நெறிமுறையை'' என்பதனால் உணரப்படும். மகளிர்தம் இல்லத்திற்கு வரும் விருந்தினரைத் தத்தம் பிள்ளைகளைக் கொண்டு முறை சொல்லி அழைக்கச் சொல்லி, அவர்களுக்கு வேண்டுவன நல்கி உபசரித்து அனுப்பினர்.

*'அகம் மலி உவகை ஆர்வமொடு அளைக,*
*மகமுறை தடுப்ப, மனைதொறும் பெறுகுவிர்''*
*(மலை. 184-185)*

இவ்வடிகட்கு, ''நெஞ்சு நிறைந்த மகிழ்ச்சியை உடையராய் விருந்தினரைப் பெற்றேம் என்னும் ஆசையோடே நெஞ்சு கலந்து, தத்தம் பிள்ளைகளைக் கொண்டு முறை சொல்லித் தடுக்கையினாலே மனைகடோறும் பெறுகுவிர். அண்ணன், அம்மான் என்றாற் போல்வன'' என நச்சினியார்க்கினியர் தரும் உரையும் விளக்கமும் இதனை நன்கு புலப்படுத்தும்.

## ஒருவரை ஒருவர் எதிர்ப்படுதல்

ஒருவரை ஒருவர் சந்திக்கும்போது தங்கள் அன்பைப் புலப்படுத்த அவர்களைத் தழுவிக்கொள்ளுதல் மரபாகும். பெருந் தலைச் சாத்தனார் என்பவர் இளங்கண்டீரக்கோ, இளவிச்சிக்கோ ஒருங்கு இருந்த இடத்திற்குச் சென்றபோது, அவர் இளங்கண் டீரக்கோவைத் தழுவி அன்பைப் புலப்படுத்தி, இளவிச்சிக் கோவை அங்ஙனம் செய்யாது விடுத்தனர். அதனால் வருத்தம் உற்று வினாவிய விச்சிக்கோவிற்குத் தாய் தழுவாமைக்குரிய காரணத்தை எடுத்து மொழிகின்றார் (புறம்.151). தலையைத் தடவிக் கொடுத்தலும் அன்புடையார் செய்யும் மற்றோர் செயலாகும். அதியமான் நெடுமான் அஞ்சி இவ்வாறு ஔவையார் பால் தன் அன்பைப் புலப்படுத்தினான். அவனைக் குறித்து ஔவையார் பாடிய கையறுநிலையில்,

*'நரந்தம் நாறும் தன் கையால்*
*புலவு நாறும் என் தலை தைவரும் மன்னே'*
*(புறம். 235:9-16)*

என்று இதனை எண்ணி இரங்கிக் கூறியுள்ளார். குழந்தைகளின் தலையைக் கோதி, இனிய வார்த்தைகளைச் சொல்லி அவர்களுக்கு உணவு ஊட்டுகின்ற நிகழ்ச்சியிலும் இப்பழக்கம் குறிக்கப் பட்டிருக்கிறது.

*''தேம் கலந்து அளைஇய தீம்பால் ஏந்திக்*
*கூழை உளர்ந்து மோழைமை கூறவும்*
*மறுத்து சொல்லள் ஆகி,*
*வெறுத்த உள்ளமொடு உண்ணாதோளே?''*
*(புறம். 207:14-17)*

## அம்பல் மகளிரின் புறங்கூற்று

அன்பற்ற மகளிர் பிறரோடு புறங்கூறுதலைக் குற்றமாகக் கருதுதல் இல்லை. அவர்கள் சிலரும் பலருமாய்க் கூடி, தங்கள்

கடைக்கண்ணால் ஒருவருக்கொருவர் குறிப்புடன் பார்த்து, வியப்பால் தங்கள் மூக்கின்மேலே சுட்டுவிரலைச் சேர்த்து வைத்து ஊர் வம்புகளையே பேசினர். இதனால் சில இளவொழுக்கப் பெண்களுக்குத் தொலைப்பட்ட தலைவி ஒருத்தி,

> ''சிலரும் பலரும் கடைக்கண் நோக்கி
> மூக்கின் உச்சிச் சுட்டு விரல் சேர்த்தி
> மறுகில் பெண்டிர் அம்பல் தூஉற்ற
> சிறுகோல் வலந்தனள் அன்னை; அலைப்ப
> அலந்தெனன் வாழி - தோழி '' (நற். 149:1-5)

என்று பேசுகிறாள்.

## துக்கத்தால் தலை தாழ்த்தல்

மகள்மேல் வரும் அலரைக் கேட்ட தாய், தன்மகள் ஆற்றிய தினைப்புனங் காவல் நடைபெறாமல் தவறியது கண்டு அவளது செலவினைக் குறித்து கடிந்தபோது வாய்வெருவி,

> ' அருவி ஆர்க்கும் பெருவரை நாடனை
> அறியலும் அறியேன்; காண்டலும் இலனே;
> வைதர் புனை தட்டையேன் மலர் பூக்கொய்து
> சுனை பாய்ந்து ஆடிற்றும் இலன்''
> (நற். 147:6-9)

என்று கூறினள். இதைக் கேட்ட அவள் தாய் தலை இறைஞ்சினள். இவ்வாறான அதிர்ச்சி தரும் செய்திகளைக் கேட்டபொழுது பெண்கள் தலை தாழ்த்துவது ஓர் இயல்பாகும். வருத்தமுற்ற பெண்கள் கன்னத்தில் கை ஊன்றிச் சிந்தனையில் ஆழ்தலு முண்டு(அகம். 351:13-14); மிகுந்த துக்கம் நேர்ந்த காலத்து வாய் விட்டு அரற்றியும், தரை முதலியவற்றில்மோதிக் கொண்டும் தங்கள் நிலைமையைப் பிறர்க்குப் புலப்படுத்தினர் (குறு.28).

## அரசர் குற்றமிழைத்தாரைக் கடிதல்

அரசர்கள் குழந்தைகளைப் பாதுகாப்பதைப் போலத் தேசத்தைப் பாதுகாத்து வந்தனர் என்பதை முன்பு கூறினோம். இவர்கள் தங்கள் ஆணைகளைப் பறை முழக்கி வாய்மொழியாக மக்களுக்கு அறிவிக்கச் செய்தனர். போர்க்கால நிகழ்ச்சிகளிலும் செய்தி அறிவிக்கப் பறையடித்தல் பயன்படுத்தப்பட்டது (புறம். 289:9-10; பதிற். 30:43-44; கலி. 56: 132-134) தீயோர்களைத் தண்டிப்பதிலும் வெகு கண்டிப்புடன் இருந்தனர். குற்றங்களுக்கு அபராதம் விதித்ததோடு உறுப்புகளைக் குறைத்தும் கொலைத்தண்டனைச் செய்தும் தீமை நிகழாதவாறு அச்சுறுத்தி வந்தனர். பயிர்விளைந்த வயல்களிலே பசு புகுந்த சிறு பிழைக்காக உண்மையை ஒப்புக் கொண்டும் மன்னித்துவிடாது, கோசர் என்பார், அன்னி மிஞிலி என்பாளின் தந்தையின் கண்ணைப் பிடுங்குமாறு தண்டித்து விட்டனர். அதனைப் பெறாத அவள் இக்கொடுமையை செய்த கோசரைப் பழி வாங்கும் பொருட்டு கலத்தில் உண்ணாமலும் தூய ஆடையை உடுத்தாமலும் சினத்துடன் தாம் கொண்ட வஞ்சினத்தில் மாறாமல் நின்று, நீதியன் என்பானுக்கு உரைத்து, அவனைக் கொண்டு கோசரைக் கொல்லுவித்து அவள் சினம் ஆறினர் என்னும் செய்தி அகநானூற் றில் (262:1-12) வருகிறது. இந்நிகழ்ச்சியிலிருந்து கொடுமை செய்தாரைத் தண்டிக்க, அவன் அரசனாயினும் அக்கால மக்கள் தவறவில்லை என்பது தெரியவரும்.

## பெண்கொலை புரிந்த நன்னன்

நீராடச் சென்ற ஒரு பெண் நன்னனது தோட்டத்திலிருந்து நீரில் மிதந்து வந்த உண்ணக்கூடிய பசுங்காயைத் தின்று விட்டதற்காக, அவளுக்கு கொலைத் தண்டனை விதித்துவிட்டான். அப்பிழைக்குத் தண்டமாக அவளுடைய தந்தை 81 களிறுகளையும் அவள் நிறைக்குச் சரியாக பொன்னால் ஆகிய பாவையையும் கொடுப்பதாகச் சொல்லவும் அவன் ஒருப்படாது அப்பெண்ணைக் கொலை செய்துவிட்டான். இதனால் அவன் நரகக் கதிக்கு ஆளாகிவிட்டதாக மக்கள் கருதி அவனை வெறுக்க முயன்றனர். பெண் கொலை புரிந்த நன்னன் என்றும் வழங்கத் தலைப்பட்டனர்.

*''பெண் கொலை புரிந்த நன்னன் போல*
*வரையா நிரையத்துச் செலீஇயரோ அன்னை''*
*(குறு. 292:5-6)*

என்பதினால் மக்களின் உளப்பாங்கு புலப்படும். புலவர்கள் இவன் வழியில் வந்தாரையே பெருமைப்படுத்தாது வெறுத்து ஒதுக்கினர் என்பதும் தெரிய வருகிறது (புறம். 151).

## மன்னனை வாழ்த்துதல்

அறநெறியில் செங்கோல் செலுத்தும் மன்னனை மக்கள் பெரிதும் நேசித்தனர். குரவை முதலிய விழா நிகழ்ச்சிகளில் மன்னனை வாழ்த்திப் பாடுதலையும் மரபாகக் கொண்டிருந்தனர் (கலி. 103-107). தங்கள் மன்னனுடைய புகழை மேம்படச் செய்வதிலும் குடிமக்கள் கண்ணும் கருத்துமாயிருந்தனர். 'தென்னவன், தொல்இசை நட்ட குடியோடு தோன்றிய நல் இனத்து ஆயர் (கலி. 104:5-7) என்று ஆயர் பெருமக்கள் சிறப்பிக்கப்பட்டுள்ளனர்.

## ஆணையிட்டுப் பேசும் வழக்கம்

மக்கள் ஆணையிட்டுப் பேசும்பொழுது, அரசன்மேல் ஆணையிட்டுக் கூறுதலும் மரபாயிருந்தது. கூனிக்கும் குறளனுக்கும் இடையே நடந்த உரையாடலில் குறளன் கூனியை நோக்கி, இனி நான் உன்னை இகழ்ந்து கூறேன் என்று கூறும்போது, அரசன் ஆணையாக உறுதி செய்கிறேன் என்றான்.

*'ஓஓ! காண் நம்முள் நகுதல் தொடீஇயர், நம்முள் நாம்*
*உசாவுவம்; கோன் அடி தொட்டேன்'*
*(கலி. 94: 35-36)*

என்பது கலித்தொகை. இக்காலத்தில் தலையில் அடித்து ஆணையிடுதலைப்போல் அக்காலத்தில் அடியைத் தொட்டு ஆணையிடுதல் மரபாக இருந்தது என்பது இதனால் தெரியவரும்.

பசுக்களை வதைத்தலும், பார்ப்பார்க்குக் கொடுமை இழைத்தலும், மகளிர்க் கருவைச் சிதைத்தலும், பெரும்பாவச் செயல்களாகக் கருதப்பட்டன (புறம். 34:1-7).

## பார்ப்பர் போற்றப்படுதல்

பார்ப்பார் மன்னராலும் மக்களாலும் மதிப்புடன் போற்றப் பட்டனர். வைதீக சமயத்தையும், கல்வியையும் நன்கு பேணிய வர்கள். இவர்களே (புறம். 166) மன்னர் பொருட்டு யாகங்கள் செய்தலும்,·தூது சென்றும் நாட்டிற்கு நலம்புரிந்தனர் (புறம். 224: 305) இவர்களுக்கு நிலம் முதலியன கொடுத்து அரசர்கள் தக்க வண்ணம் பாதுகாத்தனர் (புறம்.122). இவர்கள் அரசபாரம் தாங்கி நாட்டையாளும் உரிமையும் பெற்றிருந்தனர். ''அந்தணாளர்க்கு அரசு வரைவு இன்றே'' (தொல். பொருள். மரபு. 83) என்று தொல் காப்பியர் இவ்வுண்மையைப் புலப்படுத்துகின்றார். இவர்கள் பிறரை யாசிப்பதையும் இழிவாகக் கருதவில்லை. கபிலர் ''யானே பரிசிலன் மன்னும் அந்தணன்'' (புறம். 200:13) என்றும் ''அந்தணன் புலவன் கொண்டு வந்தனனே'' (புறம். 201:7) என்றும் தமது தலைமையும் தாம் இரவலனாய் யாசிப்பதையும் புலப் படுத்துகின்றார். பார்ப்பார்க்குப் பொன்னும் பொருளும் தானமாய் கொடுக்கின்றபோது நீர் வார்த்துத் தானம் செய்வது வழக்கமாய் இருந்தது.

> ''ஏற்ற பார்ப்பார்க்கு ஈர்ங்கை நிறையப்
> பூவும் பொன்னும் புனல்படச் சொரிந்து''
>
> (புறம். 367:4-5)

என்பது இவ்வழக்கினைப் புலப்படுத்தும்.

## சான்றோர் வழிபாடு

சான்றோர்களைக் கண்ட மக்கள் அவர்களுக்குத் தக்க மரியாதை செய்தனர். அவரை எதிர்கொண்டு அவர்க்கு உரிய இருக்கை நல்கிப்பணிவோடு போற்றினர்.

'தாம் அறி செம்மைச் சான்றோர்கண்ட
கடன் அறி மாக்கள் போல இடன்விட்டு'

(குறு. 265:3-4)

என்பதனால் சான்றோர்க்களித்த மரியாதை புலப்படும். மக்களுக்குள் பிணக்கு நேர்ந்தபொழுது சான்றோர் வந்து விலக்கி அறிவுரை கூறுவாராயின், அதனைப் பகை கொண்டோர் இருதிறத்தாரும் ஏற்றுத் தம் பகையை விட்டு நட்புடன் வாழத் தலைப்பட்டனர் (அகம். 326:1-2).

## புலவர்கள் மதிக்கப்பட்டமை

புலவர் பெருமக்கள் எந்த மரபினராயினும் அவர்கள் மன்னராலும் மக்களாலும் நன்கு மதிக்கப்பட்டனர். அவர்கள் சென்ற இடங்களில் எல்லாம் சிறப்புடன் போற்றப்பட்டனர். மன்னர் நல்லுணவு அளித்து உபசரிப்பதோடு அவர்களுக்குப் பொன்னும் பொருளும் பிறவகை வாழ்க்கை வசதியைச் செய்து கொடுத்தனர். நான்கு குதிரைகள் பூட்டிய தேரினைப் பரிசாக அளிப்பது பண்டை மன்னர்களின் மரபாக இருந்தது. புலவரை வழி அனுப்பும் காலத்து அவர்கள் பின் ஏழடி நடந்து சென்று விடையளித்து அனுப்பினர் (பொரு. 165-167; பெரும்பாண். 488-489).

## பகுத்துண்டு வாழ்தல்

அக்கால மக்கள் ஒருவருக்கொருவர் கொடுத்து உதவி சமூக வாழ்க்கையைச் சிறக்கச் செய்தனர். இல்லாமையால் மன்னரையண்டி பரிசில் பெற்றுப் புலவர் கூடப் பொருளைப் பாதுகாவாது எல்லார்க்கும் பகுத்துண்டு வாழும் பண்புடையராகக் காணப்பட்டனர். குமண வள்ளலிடம் பரிசில் பெற்று வந்த பெருஞ்சித்திரனார் தம் மனைவியிடம், உதவி பெறவந்தோர் தகுதியை ஆராயாது சுற்றத்தார்க்கும் பிறர்க்கும் வாரி வழங்குமாறு கூறுகிறார்.

*'நின் நயந்து உறைநர்க்கும், நீநயந்து உறைநர்க்கும்*
*பல்மாண் கற்பின் நின்கிளை முதலோர்க்கும்*
*கடும்பின் கடும்பசி தீரயாழ நின்*
*நெடுங் குறியெதிர்ப்பை நல்கி யோர்க்கும்,*
*இன்னோர்க்கு என்னாது, நீயும்*
*எல்லார்க்கும் கொடுமதி - மனைகிழவோயே!*
*பழம் தூங்கு முதிரத்துக் கிழவன்*
*திருந்துவேல் குமணன் நல்கிய வளனே'*

*(புறம். 163)*

இதிலிருந்து யார் யார்க்கு உதவிபுரிந்து வாழ்ந்தனர் என்பது புலப்படும். செல்வம் பெற்றார் ஈதலையே இலட்சியமாகக் கொண்டிருந்தனர். ''செல்வத்துப் பயனே ஈதல்; துய்ப்பேம் எனினே தப்புந பலவே'' (புறம். 189:7-8) என்பது அவர்கள் லட்சியமாக இருந்தது. பிறர்க்கென வாழ்தலே பெரும்பேறாகக் கருதினர். கழங்காய்க் கண்ணி நார்முடிச்சேரல் மக்களுக்குத் தொண்டு செய்தலையே பெரும்பேறாகக் கருதி வாழ்ந்ததாக,

'பகுத்தூண் தொகுத்த ஆண்மை
பிறர்க்கு எனவாழ்திநீ ஆகன்மாறே'

(பதிற். 38:16-17)

எனக் கருதப்படுகின்றான். பண்ணன் என்பான் ''தனக்கென வாழா பிறர்க்கு உரியாளன்'' (அகம். 54:13) என்று பாராட்டப்படுகிறான். மக்கள் தம் ஊருக்குப் புதியராய் வரும் வம்பலர்களைத் தக்க வண்ணம் உபசரித்து மகிழ்ந்தனர் (பட்டி. 246-149). அரசனை நோக்கியும் வேறு நல்ல காரியங்களுக்கும் வருகின்ற புதியோர்க்கும் எவ்வகைத் துன்பமும் நேராது மக்கள் காத்தனர் (மலைபடு. 423-426). வழிச் செல்வார்க்கு ஊறு நேராத வண்ணம் காப்பாற்றுவதற்குத் தக்க காவலர்களை அரசர்கள் நியமித்து இருந்தனர் (பெரும். 65-82). காட்டு வழிகளிலும் நாட்டு வழிகளிலும் செல்லும் மக்களுக்கு அங்கங்கே வாழும் மக்கள் உதவி செய்த வகையைப் பெரும்பாணாற்றுப்படை நூற்களிலும், வேறுசில நூற்களிலும் காணலாம். காட்டில் உறையும் கானவர்கள் அங்கே வந்து வழி

அறியாது திகைத்து நிற்கும் பிறர்க்கு உற்ற துணையாய் வந்து உதவி புரிந்து அவர்களுக்கு வழிகாட்டி உணவு முதலியன கொடுத்து உதவினர் (மலைபடு. 278-287). புதியதாய் வருபவர்களுக்கு வழியறியும் பொருட்டாகப் பல வழிகளும் கூடும் சந்திப்புகளைத் துலக்கி நேர் வழிக்கு அடையாளமாக ஊகம் புல்லை முடிந்து இட்டு வைப்பது வழக்கமாயிருந்தது ( மலைபடு. 391-392).

## பொதுநலத் தொண்டர்

சமூக சேவை செய்வோர்க்கு இருக்க வேண்டிய தலையாய குணம் தன்னலமற்றுப் பிறர் பணி புரிவதேதான். உலகம் நிலை பெற்று வாழ்வதற்கும் காரணமாக இருப்பவர்கள் இவர்களே. இவர்கள் எவ்வளவு அரிய பொருளைப் பெற்றபோதிலும் தாமே உண்ணார். ''பகுத்துண்டு பல்லுயிரையும் ஓம்புதலே குறிக் கோளாகக் கொண்டிருப்பர். பலருடனும் இவர்கள் வெறுப்புக் கொள்ளுதல் இல்லை. அஞ்சவேண்டிய நிகழ்ச்சிகளுக்கு அஞ்சினர். துன்பம் வந்த காலத்துச் சோம்பி இராது முயன்று அதில் வெற்றி கண்டனர். புகழ் வரும் செயலாயின், தமது உயிரையும் கொடுக்கச் சித்தமாய் இருப்பர். உல்கமே பரிசாகக் கிடைத்தாலும் பழிச்சொல் புரியார். மனச்சஞ்சலம் அற்று என்றும் உறுதியுடன் இருப்பர். இவர்கள் வாழ்வு முற்றும் உலகத்திற்காக அர்ப்பணிக்கப் பட்டிருக்கும் இத்தகைய சமூகத் தொண்டரைப் புறநானூறு நமக்குப் படம்பிடித்துக் காட்டுகிறது.

*'உண்டால் அம்ம, இவ் உலகம்*
*இந்திரர் அமிழ்தம் இயைவது ஆயினும்,*
*இனிது எனத் தமியர் உண்டலும் இலரே;*
*முனிவுஇலர்; துஞ்சலும் இலர்; பிறர் அஞ்சுவது அஞ்சி,*
*புகழ் எனின் உயிரும் கொடுக்குவர் பழி எனின்',*

*'உலகுடன் பெறினும், கொள்ளலர்; அயர்விலர்;*
*அன்ன மாட்சி அனையர் ஆகி,*
*தமக்கு என முயலா நோன்தாள்*
*பிறர்க்கு என முயலுநர் உண்மையானே'*

(புறம். 182)

## நாகரிக வாழ்க்கை

நண்பரிடத்தில் அருளைக் காட்டுதலே நாகரிகமாகத் தமிழ் மக்கள் கருதினர். தம் நண்பர் நஞ்சு என்பதையும் அறிந்தும் அவர்கள் மனம் நோவாது இருக்க, அருந்திய உயர்ந்தோர்களை நாகரிகமுடையவர்களாகக் கருதினர்.

*''முந்தை இருந்து நட்டோர் கொடுப்பின்*
*நஞ்சும் உண்பர் நனி நாகரிகர்''*

*(நற். 355:6-7)*

என்பது புலவர் வாக்கு.

இதனால் சமூகப்பணி புரிந்தோரே சிறந்த நாகரிகம் படைத்தவர் என்று அந்நாளில் கருதப்பட்டனர் என்பது இதனால் விளங்குகிறது.

TAMIL NADU STATE DEPARTMENT OF ARCHAEOLOGY
LIBRARY.
Acc No. ----
Date ----
MADRAS

# 6. தெய்வங்கள்

## 1. தெய்வம் போற்றுதல்

தெய்வக் கோட்பாடு தொன்றுதொட்டு மக்களிடையே வேர் ஊன்றி வந்துள்ள ஒரு பண்பாகும். மனித சக்திக்கு மேற்பட்ட மற்றொரு சக்தி உலகை ஆட்டிப்படைப்பதாக அவர்கள் கருதினர். உலகில் நிகழும் நன்மைக்கும் தீமைக்கும் முதற்காரணமாக இருப்பது தெய்வ சக்தியே என எண்ணியதால், எந்த வினையிலும் முதலில் தெய்வத்தைப் போற்றும் பண்பை மேற்கொண்டனர்.

தெய்வம் போற்றுதல் முதற்கண் அச்சத்தாலும் மக்களிடையே விளைந்தது. தகாத செயல் செய்யின் தெய்வம் வருத்தும் என்று நம்பினர். இதனால் அச்சம் வருத்தும் என்னும் பொருள் தரும் அணங்கு, சூர், பேய் முதலிய பெயர்களால் தெய்வங்களைக் குறிப்பிடலாயினர். தமக்கு அச்சத்தை விளைவித்த பல பொருள்களும் பெருஞ்சக்தி படைத்தன என்றும் கொண்டனர். இதனால் மலை, காடு, மரம், கடல், முதலியவற்றிலெல்லாம் தெய்வங்கள் உறைவதாக நம்பி வழிபாடு செய்யலாயினர். ''உரு கெழு மரபின் கடவுள்'' (பதிற், 21:15) என்பதனால் அச்சம் தரும் இயல்பு கடவுளுக்கு ஏற்றப்படுதலை உணரலாம்.

மக்கள் தங்கள் வாழ்வு சிறக்கவும் தாங்கள் எண்ணிய வினை இனிது முடியவும் வேண்டி கடவுளிடம் வரம் வேண்டினர். குறவர்கள் மழை பெய்யும் பொருட்டாகப் பலி முதலியன தூவிக் கடவுளை வேண்டுகின்றனர். அவர்கள் வேண்டுகோளுக்கு இணங்க மழை மிகுதியாகப் பெய்துவிடுகின்றது. உடனே மழை நிற்க வேண்டும் என்றும் கடவுளைத் தொழுகின்றனர். இவ்வாறு மழை வேண்டும் காலத்துப் பெய்வித்தற்கும் குறவர்கள் தெய்வம் பரவினர் என்பதை,

'மலைவான் கொள்க', என உயர்பிலி தூஉய்,
'மாலி ஆன்று, மழை மேக்கு உயர்க!' எனக்
கடவுட் வேணிய குறவர் மாக்கள்
பெயல் கண் மாறிய உவகையர்' (புறம். 143: 1-4)

எனவரும் புறப்பாட்டுப் பகுதியால் அறியலாம்.

இவ்வாறே மகளிர் கரு வாய்க்க வேண்டுமென்றும் தம் கணவரது பொருள் முயற்சி கைகூட வேண்டும்மென்றும், அவர் போரில் பெருவெற்றி பெற வேண்டுமன்றும் கடவுளை வேண்டுவதாகப் பரிபாடல் குறிப்பிடுகின்றது (பரி: 8:106-108) இவற்றால் அக்கால மாந்தர் தெய்வ நம்பிக்கை உடையவராய்த் தத்தம் சூழலுக் கேற்ற வகையில் பல தெய்வங்களை வணங்கும் பழக்கத்தை மேற்கொண்டிருந்தனர் என்பது தெரியவருகின்றது.

## 2. இயற்கை வழிபாடு

மக்கள் தங்களைச் சுற்றிலும் காணும் இயற்கைப் பொருள் களில் எண்ணற்ற தெய்வங்கள் உறைவதாக நம்பினர். மலை, காடு, மரம், நீர்நிலை, கழி, கடல் முதலியவற்றில் எல்லாம் தெய்வங்கள் உள்ளன என்று நம்பினர். இத்தெய்வங்கள் மக்களை வருத்தும் இயல்பின என்றும் கருதினர்.

'அணங்கொடு நின்றது மலை' (நற். 165:3)
'காடே கடவுள் மேன; புறவே ஒள்ளிழை மகளிரோடு
மள்ளர்மேன; ஆறே அவ்வனைத்து''
(பதி. 13: 20-22)

என வருவன மலையிலும், காட்டிலும், மக்கள் செல்லும் பிற வழிகளிலும் தெய்வங்கள் உறைவதைக் காட்டும். மரஞ்செடி கொடிகளிலும் மலர் மண்டிக் கிடக்கும் காக்களிலும் புதர்களிலும் கூடத் தெய்வம் உறைதலைக் கண்டனர்; அடிமரத்திலே தெய்வம் உறைவதாக நம்பினர். மரங்களில் மராஅ, பனை, வேம்பு, ஆல், வேங்கை, ஓமை, கள்ளி முதலியவற்றில் தெய்வங்கள் சேர்ந்துள்ள

மையைச் சங்கப் பாடல்களால் அறியலாம். மலையிலும் நீரிலும் உறையும் தெய்வமகளிரை 'வரையர மகளிர்', 'நீரர மகளிர்' என்று போற்றினர். இத்தெய்வங்கள் பார்ப்பவரின் கண்களுக்குத் தென் படாது அவ்வவ்விடங்களில் உறைந்திருக்குமாம் (அகம். 342: 1-12). இவற்றை அணங்கு, சூர், என்னும் பெயர்களால் அழைத்தனர். இதனால், இவைகள் அச்சம் தரும் தெய்வங்கள் என்பது போதரும். இவை மக்களைத் தீண்டி வருத்துவதினால் 'தாக்கணங்கு'(ஐங். 23:4; அகம், 7:4-5) என்று குறிக்கப்படுகிறது. ''உருமும் சூரும் இரை தேர் அரவமும் '' (குறி, 255) என்பதனால் இடியும் பாம்பும் போல, சூரும் துன்பத்தை விளைத்தலை இங்குச் சுட்டப்படுகின்றது. சூர் மகள், சூரர மகளிர் என்றும் இத்தெய்வம் குறிக்கப்படுகிறது. சூர்த் தெய்வத்தால் தாக்கப்பட்டோர் நடுக்கத்திற்குள்ளாவர்(குறு. 52:2).

கொல்லி மலையில் உறையும் பாவைத்தெய்வம் மிகுந்த அச்சம் தருவதாகப் புலவர்களால் குறிக்கப்பட்டிருக்கின்றது. இப்பாவைத் தெய்வம் தெய்வத்தால் எழுதி வைக்கப்பட்டதாம் (அகம். 62:12-16; 209: 15-17). இதனைத் ''திருநல உருவின் மாயா இயற்கைப்பாவை'' என்று போற்றுகின்றார் ஒரு கவிஞர் (நற். 201: 10-11). இதனால் இப்பாவையின் அழகு பெண்கள் நலத்திற்கு ஒப்பிட்டுப் பேசப்படுகின்றது.

அச்சம் விளைவிப்பவற்றுள் பேய், பிசாசு, பூதம் என்பன முக்கியமாகக் குறிப்பிடத் தக்கவை. பாசம். கழுது, பழு, அணங்கு, கூளி என்பனவும் பேய் இனத்தெய்வங்களே. இவை எல்லாம் நள்ளிரவில் உருக்கொண்டும் எங்கும் சுழன்று திரிவனவாம். பொதுவாகப் பேய்கள் கண்ணுக்கினிய காட்சியுடையவையல்ல. பேயின் தலை தாழை மரத்தின் தோற்றம் போல் உள்ளதாம் (அகம். 130:4). இரண்டாகப் பிளவுபட்ட கவைத்தலைப் பேய்களும் குறிக்கப்பட்டிருக்கிறது(பதி. 13-15). இவற்றின் கண்கள் மிகப் பெரியவை; செந்நிறமானவை; கடுமையாக நோக்கும் இயல் புடையவை (மதுரை. 121). இவை தம் காதுகளில் வெள்ளாட்டு மறியை அணியாகப் பூண்டிருக்குமாம் (சிறுபாண். 197). வலிய வாயும் நெருப்புக் கொழுந்து போன்ற நாக்கும் உடையன (நற். 73:2; சிறுபாண். 196). இவற்றின் பற்கள் ஒன்றுடன் ஒன்று

மாறுபட்டு நீண்டு தோன்றும் (புறம், 356:2). இவை யானையின் கால் நகங்களை ஒத்துள்ளன என்கிறார் ஒரு புலவர் (குறு. 180:1). செம்முருக்கின் காய்ந்த பூங்கொத்துப் போன்ற விரல்களையும் பிளவுபட்ட பாதங்களையும் கொண்டவை (மதுரை. 161; சிறு பாண். 197). இவ்வகை உறுப்புகளோடு விளங்கும் பேய் வடிவம் கண்டார்க்கு அச்சமும் வருத்தமும் விளைவிக்கும் (பதி. 67:11; 371: 26) பேய்கள் குட்டை வடிவமானவை. பூதங்களோ இவற்றிற்கு மாறுபட்ட பெருவடிவு உடையவை. பேய் ஏறிச் செலுத்த ஊர்தியாக அமைவதும் பேய்தான் (பதி. 13:15). பெரும்போர் நடக்கும் களங்களில் பேய்கள் பிணங்களைத் தின்று மகிழ்ச்சிக் கூத்தாடுவதாகப் புலவர்கள் வருணிக்கின்றனர் (அகம். 265: 14-15) (புறம். 359: 4-5; 67; 2-6) புதை குழியை மூடியிருக்கும் கற்களையும் கூடத் தெய்வமாக வழிபட்டனர். பேய் முதலியவற்றால் தீண்டப்பட்டார் பொருட்டுக் கவர்ந்த வழிகளில் ஆட்டைப் பலிகொடுத்து, தினையரிசி முதலியவற்றையும் படையலாக வைத்து வழிபடுவது வழக்கமாய் இருந்தது (குறு. 263:1-4). ஊர்களிலும் மன்றங்களிலும் மாலைப் பொழுதில் இடப்படும் பலிகளை இவை உண்ணுமாம் (நற். 73:1-4; அகம். 142:9-11). பேய்களுக்குரிய பலியைக் கொடுத்துவிட்டால் அவைகள் விட்டு நீங்கிவிடும் என நம்பினர்.

> 'பலி கொண்டு பெயரும் பாசம் போல
> திறை கொண்டு பெயர்தி'' (பதிற்று. 71:23-24)

என்பதினால் பேய்கள் தம்மால் பற்றப்பட்டாரது உயிரை அவரை உண்ணாமல் அவரை வருத்தித் தமக்குரிய பலியைப் பெற்றுக் கொண்டு நீங்கிச் செல்லும் தன்மையுடயன எப்பது பெறப்படும்.

## 3. ஊர்களில் உறையும் தெய்வங்கள்

மக்கள் தாங்கள் வாழும் ஊர்களிலுள்ள சதுக்கங்களிலும், சந்திகளிலும். எல்லோரும் கூடும் மன்றங்களிலும், தாம் வாழும் இல்லங்களிலும் சில தெய்வங்களை வணங்கி வந்தனர்.

'சதுக்கமும் சந்தியும் புதுப் பூங் கடம்பும்
மன்றமும் பொதியிலும், கந்துடை நிலையினும்''
(முருகு. 225-226)

என்பதில் மேற்குறித்த தெய்வ வழிபாட்டு முறையைக் காணலாம். சதுக்கம் என்பது நான்கு தெருக்கள் கூடுமிடம். சந்தி என்பது முச்சந்தி, ஐஞ்சந்திகளைக் குறிக்கும். ஊருக்கு நடுவாய் எல்லோரும் வந்து கூடுவதற்குப் பயன்படும் மரத்தடியே மன்று எனப்படும். இந்த மன்றம் அந்தந்த ஊர்களில் ஊருக்கு நடுவாய்ச் செழித்து வளர்ந்திருக்கும் மராஅம்,. இரத்தி முதலிய மரங்களின் அடியாக இருக்கும். பொதியில் என்பது ஊருக்குப் பொதுவாக அமைந்த கட்டடம். இந்த ஊர் அம்பலத்தில் சித்திர வேலைப்பாடுகள் செய்யப்பட்டிருக்கும். ''எழுது எழில் அம்பலம்'' என்பது பரிபாடல் (18-28). இங்கே சுவரில் கடவுளின் உருவம் எழுதப்பட்டிருக்கும். பாழ்பட்ட மன்றத்திலிருந்து'' எழுது அணி கடவுள் போகலின் '' அங்குப் பலி கொடுப்பாரின்றி பலிபீடமும் அழகு இழந்து கிடந்ததை 107ஆம் அகப்பாட்டுத் தெரிவிக்கிறது. மேலும், இப்பொதியில் கந்து எனப்படும் தூள் வடிவமும் வணக்கத்துக்குரியதாய் இருந்தது. பாழ்பட்ட ஒரு பொதியில் நாட்டப்பட்ட ஒரு கந்தின் மேல் மரையா (கலைமான்) சொறிந்ததினால், அந்தக் கந்து அசையும் நிலையை அடைந்துவிடுகிறது என்று சொல்லப் பட்டிருக்கிறது. அதன் அடிப்பாகம் கருநிறமாக விளங்கியது என்பதை ''மாத்தாள் கந்தின்'' என்பதனால் அறியலாம். இந்தக் கருநிறம் வழிபடு பொருள்கள் பட்டதனால் ஏற்பட்டது போலும். ஊருக்குப் புதியவராய் வருவோர் பொதியியலில் தங்கி அங்குள்ள கந்தினை வழிபடுவர். அரசன் சிறைப்பிடித்து வந்த மகளிரைப் பொதியில் மெழுக்கு முதலிய பணிகளைச் செய்யுமாறு பணித்த தாகவும் தெரியவருகிறது (அகம். 167: 7-20; 257: 3-9; பட்டி. 246-249)'. கந்துடைப் பொதியில் ' என்பதற்குத் 'தறியினை யுடைய அம்பலம்'', ''கந்து- தெய்வம் உறையும் தறி'' என்று நச்சினார்க்கினியர் விளக்கம் தருகிறார் (பட்டி, 249). இதனால், மரத்திலிருந்து தறித்து எடுக்கப்பட்ட தூண் போன்ற ஒரு பொருள் தெய்வ வணக்கத் திற்குரிய சின்னமாக அமைந்திருந்தது என்பது விளங்கும். 'கன்றா பழம் நடுதறியைக் காணலாமே, என்னும் தொடராலும் தறியின் இயல்பு விளங்கும் (திருமுறை.6. பதிகம் 61).

இல்லங்களிலும் தெய்வ வழிபாடு நிகழ்த்தப்பெற்றது. ''அணங்குடை நல்கல்'' (மதுரை. 578) என இல்லம் குறிக்கப் படுகிறது. பொதியில் போன்றே இல்லத்திலும் சுவர்களில் எழுதிய பாவை வணக்கத்திற்குரியதாக,

*''காழ்புனைந்து இயற்றிய வனப்புஅமை நோன்சுவர்ப்*
*பாவையும் பலி எனப் பெறாஅ''* (அகம். 369: 7-8)

எனவருவது மேலதற்குத் தக்க சான்றாம். இல்லத்தில் வாயில் நிலைகளிலும்கூடத் தெய்வம் உறைவதாக நம்பினர். இதற்காக ஐய வியம் நெய்யணியும் அக்கதவிற்கிடுதல் உண்டு. (மதுரை. 353-354; நெடுநல். 86) முரசு, ஆயுதங்கள் முதலியவற்றிலும் உறையும் தெய்வங்களுக்கும் பலி முதலியன இடப்பட்டதும் தெரியவரு கிறது. இல்லுறை தெய்வத்தை வணங்கி, அதற்குப் பலி முதலியன கொடுப்பதனை மகளிர் செய்துவந்தனர்.

*''நல்இறை மெல் விரல் கூப்பி*
*இல்உறை கடவுட்கு ஆக்குதும் பலியே''*
*(அகம். 282:17-18)*

என்பது ஒரு பெண்ணின் கூற்று.

## 4. நானிலத் தெய்வங்களும் பிறவும்

நானிலப் பகுதிகளுக்கும் தனித்தனிச் சிறப்பாக மாயோன் (திருமால்), சேயோன் (முருகன்), வேந்தன் (இந்திரன்), வருணன் என்னும் தெய்வங்கள் குறிக்கப்பட்டிருக்கின்றன. இவர்கள் முறையே முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் என்னும் நிலங் களுக்கு உரியர். இவர்களோடு பலராமன், கண்ணன், முக்கண்ணன் என்னும் தெய்வங்களும் சிறப்பாகக் குறிக்கப்பட்டிருக்கின்றனர். மேலும், இவர்களோடு தொடர்புடைய திருமகள், பிரமன், காமன், உமை, கொற்றவை முதலியோரும் இடம்பெற்றுள்ளனர். காடு, மலை, மரம், நீர் முதலியவற்றையண்டி உறைவதாகக் கருதப்படும் சிறுதெய்வங்களும், ஊர் மன்றங்களிலும் கோவில்களிலும் வழி

படும் கந்து முதலியனவும், இல்லுறையும் பாவை முதலிய தெய்வங்களும் ஆகப் பலப்பல தெய்வங்களைப் பற்றிய குறிப்புகள் சங்கப் பாடல்களில் உள.

## 1. முல்லைநிலத் தெய்வம்: மால்

இத்தெய்வங்களுள் தனிக் கவிதைகளினால் பாராட்டிப் பேசப்பெற்றவர் முல்லை நிலத்திற்குரிய திருமாலும் குறிஞ்சிக் கடவுளாகிய முருகனுமே. பரிபாடல் தொகுதியில் திருமாலுக்கு ஆறும் முருகக் கடவுளுக்கு எட்டுப்பாடல்களும் உள. முருகாற்றுப் படை முருகனது பெருமையைப் பேசும் தனிநூல். பத்துப்பாட்டில் முருகனைப் பற்றிய பாட்டை முதலிலும் பரிபாடலில் திருமாலைப் பற்றிய பாடலை முதலிலும் அமைந்திருப்பது இவ்விரு கடவுளரின் முதன்மையைக் காட்டும்.

*''மாயோன் மேய காடு உறை உலகமும்*
*சேயோன் மேய மை வரை உலகமும்''*
*(தொல். பொருள். அகம். 5)*

எனத் தொல்காப்பியர் திருமாலை முதலிலும் அடுத்து முருகனையும் குறிப்பிடுகின்றார். பரிபாடல் தொகுப்பிலும் திருமாலைப் பற்றிய பாடல்கள் முதலிலும் அடுத்து முருகனைப் பற்றிய பாடலும் பிறவும் வருகின்றன. இவற்றால் திருமாலுக்கு முதலிடம் தந்து போற்றும் ஒரு மரபு தெரியவருகிறது.

திருமால் காடுறையும் ஆயர்களால் சிறப்பாக வழிபடப் பெறும் தெய்வம். முல்லைக்கலியில் ஆயர்கள் குரவையாடிப் போற்றிப் புகழ்ந்தமை சிறப்பாகக் குறிக்கப்பட்டிருக்கிறது (கலி. 103-105; 107; 108) 'ஆயர் வாக்கில் தெய்வ மால் காட்டிற்று' (கலி. 107:32) எனக் கூறப்படுவதால், ஆயர்கள் வழிபட்ட சிறப்புத் தெய்வம் மால் என்பது போதரும்.

திருமாலின் உருவக்காட்சிகளும் அவருடைய ஊர்தி, கொடி, படை முதலிய விபரங்களும், அவர் அசுரப் பகைகளை

ஒழித்து உலகைக் காத்த வகையும், அவர்தம் அவதார நிகழ்ச்சிகளும் சங்கப் பாடல்களில் அங்கங்கே விவரிக்கப்பட்டுள்ளன. திருமால் நெடிய வடிவுடையவர். இந்நெடுமால் நீலமணி, கார்மேகம், கருங்கடல், காரிருள், கரியபூவை மலர் (காயாம்பூ) இவற்றைப் போன்ற வண்ணமுடையவர். நீலநிறவண்ணன், மாயோன் என்னும் பெயர்கள் இவர்தம் நிறத்தைக் குறிப்பிடுவன. இவர்தலை மேல் தோன்றும் திருமுடி நீலமலையில் மேல் படிந்துள்ள சூரியனது ஒளியைப்போல் பிரகாசிக்கிறது. இவரது உடுக்கை இவர்தம் திருமேனி வண்ணத்திற்கு மாறுபட்ட பொன்னுடை. இவர்தம் மலை போன்ற மார்பில் அழகிய மாலைகளும் துளசி மாலை முதலியனவும் பொன்னாபரணங்களும் பொருந்தி விளங்கு கின்றன. இதில் கௌஸ்துபமணி என்னும் பெரும் பதக்கமும் விளங்குகிறது. இங்ஙனம் பல்வேறு அணிகள் விளங்கும் அவர்தம் மார்பு கரிய வானத்தில் தோன்றும் இந்திரவில்லைப் போலக் காட்சி தருகிறது என்கிறார் ஒரு புலவர் (அகம். 175:13-16). மார்பில் திருமகளும் நீங்காது மறுப் போல உறைகின்றாள் 'திருமறு மார்பன்' என்பது இவனுக்குரிய ஒரு பெயர். (கலி. 104:9). மார்பின் கீழாக உள்ள உந்தியில் உள்ள கொப்பூழில் எழுந்த தாமரையில் பிரமன் காட்சி தருகிறான். பிரமனைத் தனது உந்தியில் பிறப்பித்து, உலகைப் படைக்கும் தொழிலை இவன் செய்தனன் என்பர் (பரி. 3:91-94). திருமாலின் வலக்கரத்தில் சக்கரமும் இடக் கரத்தில் சங்கும் சூரிய சந்திரரைப் போன்று விளங்குகின்றனவாம் (பரி. 13:7-9) இவை போரில் வெற்றியளிக்கும் ஆயுதங்கள். மாற்றாரை அழிக்கும்போது சங்கும் தனதுமுழக்கத்தால் பகைவரை நிலை குலையச்செய்ய சக்கரம் அவர்களை அறுத்து எறியும் (பரி. 2:36-51). இவற்றோடு வில்லம்புகளும் அவர்க்குரிய ஆயுதங்களாகக் குறிக்கப்பட்டுள்ளன. இவருடைய அருட்கண்களும் திருவடிகளும் செந்தாமரை மலரைப் போன்றவை. இவருடைய திருவடிகள் தம்மை அடைந்தவர்களின் பிறப்பை மாற்றிப் பேரின்பம் நல்கும். அவை ''மறுபிறப்பு அறுக்கும் மாசில் சேவடி'' (பரி. 3:2) என்று புகழப்படுகின்றன. திருமாலின் கொடியாகவும் ஊர்தியாகவும் அமைந்துள்ளது கருடன் (புறம். 56:6; பரி. 3:15-18), கருடக் கொடியைத் தவிரப் பலதேவனுக்குரிய பனைக்கொடி, நாஞ்சில் படை, யானை ஊர்தி ஆகியவற்றையும் திருமாலுக்குரிய கொடி

களாகக் குறிப்பிட்டு அவற்றுள் எல்லாம் கருடக்கொடி உயர்வு பெற்று விளங்குகின்றது என்றும் ஓரிடத்தில் குறிக்கப்பட்டுள்ளது (பரி. 4:36-42).

திருமாலின் திருப்புகழை ஓதி ஞானியர்கள் ஆராதிக் கின்றனர் (பரி. 4:1-5). ஆயர்மக்கள் குரவைக்கூத்தை ஆடித் திரு மாலின் புகழை ஓதுகின்றனர். முல்லைநில மக்களின் பெருந் தெய்வமாக மால் கொண்டாடப்படினும், அவர்தம் வழிபாடு நானிலத்திலும் பரவி காணப்படுகிறது. இவர் கோவில் கொண்டு வீற்றிருக்கும் இருந்தையூர், குளவாய், திருவரங்கம், திருவெங்கா, திருவனந்தபுரம், திருமாலிருஞ்சோலை என்னும் திருப்பதிகளும் சிறப்பாகக் குறிக்கப்பட்டுள்ளன. இவற்றுள் திருமாலிருஞ் சோலையைச் சிறப்பித்துரைக்கும் பாடல்கள் பலவாம். இந்த மலையில் திருமால் பலதேவனுடன் கூடி விளங்குவதால், மேருமலை முதலிய மலைகளுக்குள்ளே இம்மலை சிறந்த இடத்தைப் பெற்றுள்ளது என்று கூறப்பட்டுள்ளது (பரி, 15:10-16).

திருமாலே சங்கருஷ்ணன், பிரத்யும்நன், அநிருத்தன், வாசுதேவன் என நால்வேறு வடிவுடன் சேர்ந்து பஞ்சமூர்த்தி யாகவும் காட்சி தருவான் (பரி. 3:81-83) மேலும், இவர் தம் திருவுருவக் காட்சிகளில் பாற்கடலில் துயிலும் நிலை, பலராமனாக நிற்கும் நிலை, வராக மூர்த்தம் என்னும் மூன்றும் சிறப்பாகவும் குறிக்கப்படுகிறது (பரி. 13: 26-37). பலராமனும் கண்ணனுமாக நிற்கும் ஈருரு நிலையும் சில இடங்களில் போற்றிப் புகழப் பட்டுள்ளன.

*''பால் நிற உருவின் பனைக் கொடியோனும்,*
*நீல் நிற உருவின் நேமியோனும், என்று*
*இரு பெருந் தெய்வமும் உடன் நின்றா அங்கு''*
*(புறம். 58:14-16)*

என இவ்விரு தெய்வமும் சேர்த்து உவமை காட்டியிருப்பதோடு இவரை இருபெருந் தெய்வம் என்று குறிப்பித்தலும் போற்றத் தக்கது.

## பலதேவன் வெண்ணிற மூர்த்தி

பாலையும் கங்கையும் இவன் மேனிக்கு ஒப்புக் கூறுவர் (புறம். 58:14; பரி. 1-3). இவனது ஒரு காதில் குண்டலம் விளங்கும்; மார்பில் கடப்ப மாலை அணிந்து இருப்பன் (கலி. 105:11-12). படை நாஞ்சில் என்னும் கலப்பை (பரி. 13-35). பனைக்கொடியும் யானைக் கொடியும் இவனுக்குண்டு (புறம். 58:14; பரி. 1-4). பலராமனைப் போலவே திருமகள், கருடன், பிரமன், ஆதிசேடன், காமன் முதலியார் திருமாலின் தொடர்புடையராய்த் தனித் தெய்வங்களாகவும் போற்றப்படுகின்றனர்.

திருமகள் செந்நிற உருவம் உடையவளாய்த் தாமரை மலரை இருக்கையாகக் கொண்டவள் (அகம். 316:13; பரி. 1: 38-39). இருபுறத்தும் யானைகள் நீர் சொரிய, நடுவில் பூ மேற் வீற்றிருக்கும் கஜலட்சுமியின் வடிவமும் குறிக்கப்பட்டிருக்கிறது (கலி. 44:5-7; நெடுநல். 81-83). இவள் செல்வத்துக்கு உரிய அதிதேவதை. செல்வம் மிகுந்து சிறந்திருத்தலைத் திருமகள் நிலையாகவும், செல்வம் இழந்து நிற்கும் வலிய நிலையைத் திருமகள் நீங்கியதாகவும் கருதினர் (முருக. 70; பட்டின. 291; அகம். 316:13-16). பற்று விட்டோர்க்கு இவள் அருள் கிட்டும் (புறம். 358:6-7) அரசர்களைத் திருமால் வழியினர் என்று போற்றுதலைப் போலத் (பெரும். 30) திருமகளை அரசர்களின் துணைவியாகக் கூறப்படுவது மரபு. ''மாமறுத்த மலர் மார்பின்'' (புறம். 7:5) என அரசரின் மார்பிடத்தே திருமகள் விரும்பி உறைவதாகக் குறிக்கப்படுகிறது.

நிலமகளையும் திருமால் ஒரு காலத்தில் கூடினான். வராகு கர்ப்பத்தில் நீரினுள் மூழ்கிக் கிடந்த நிலமகளைத் திருமால் ஆதிவராகமாக உருவெடுத்து அவளைத் தன் கொம்பிலே எடுத்து வந்து, அவளையும் மணம்புரிந்தான் என்பர் (பரி. 1:1-2).

திருமாலின் படுக்கையாகிய ஆதிசேடன் ஆயிரம் திருமுடிகளை உடையவன் (பரி. திர. 1:79-80). குடையாகவும் அவர் தலைமேலே தன் தலைகளைக் கவிழ்த்திருப்பான் (பரி. 1:1-2). தேவரும் அசுரரும் கடல் கடைந்த காலத்தில் மத்தின் நாணாக விளங்கினான்.

சிவபெருமானுடைய மேரு வில்லுக்கு நாணாக அமைந்து புகழ்கொண்டவனும் இவனே. உலகத்தைத் தன் தலைமேல் தாங்கி காப்பாற்றுகிறான் (பரி. திர. 1:64-78) இருந்தையூரில் இவனுக்கென அமைந்த கோயிலில் மக்கள் வந்து வழிபட்டுப் போற்றினர் (பரி. திர. 1:30-49).

கருடன் பாம்பிற்குப் பகையெனக் கூறப்படுபவன் (பரி. 13:38-40). பாம்பின் உடலையும் உயிரையுமே கவர்ந்து உண்ணும் இயல்பினன். ஆதிசேடனையும் தன் வாயில்கௌவிக் கொள்ளும் பெருவலி படைத்தவன். இக்கருடனின் தொடி, கண்ணிகள், கழுத்துப்பூண், சூட்டு முதலியன எல்லாம் பாம்பு களாகவே அமைத்துக்கொள்ளும் இயல்புடையான் (முருக. 148-150; பரி. 4:42-48). இத்தகைய வலி படைத்த கருடனின் செருக்கையும் ஒருசமயம் திருமால் அடக்கினன். (பரி. 3:60-61) கருடன் தன்னை ஈன்ற அன்னை விந்தையின் அடிமைத்தளையை நீக்கிய செய்தியும் தெரியவருகிறது.

திருமாலின் உந்தித் தாமரையில் விளங்கும் பிரமன் உலகத் தோற்றத்திற்காக நியமிக்கப்பட்டமையால், இவனை உலகின் முதியவன் என்று கூறுவர் (கலி. 2:1-2). நான்கு முகங்களை உடையமையால் இவனுக்கு நான்முகன் என்னும் ஒரு பெயரும் உண்டு (பெரும். 403). இவன் படைத்த உலகம் இன்பமும் துன்பமும் கலந்து ஒரு வியப்புக் காட்சியாய் உள்ளது என்பதை பெரியோர் எடுத்துக் காட்டினர் (புறம். 194; நற். 240:11). இத்தகைய உலகத்திலுள்ள மக்களுக்காக வேதத்தை அருளியவனும் இவனே (பரி. 8:7-11) இவனருளிய வேதம் 'வாய்மொழி' என்று கூறப் படுகிறது (பரி. 3:11). 'விதி' என்றும் இவனுக்குப் பெயருண்டு (பரி. 3:6).

பிரமனைப் போலவே காமன், சாமன் என்பாரும் திருமாலின் புதல்வர் எனப்படுவர் (கலி. 140:7). இவ்விருவரும் கருநிறமுடையார் (கலி. 26: 3-4; 94:33-34). காமனுக்குரிய தொடி சுருமீன் (கலி. 26:3). இவனுக்குரிய முத்திரைப் பொறியும் மீனே (கலி. 84:22-27). தாமரை, மா, முல்லை, அசோகு, நீலோற்பலம்

என்னும் ஐந்து நறுமலர்களை அம்பாகக் கொண்டவன் (பரி. 10:97). இவனது கருவூலமும் சேனையுமாக அமைந்துள்ளவர்கள் மகளிர்களே (பரி. 11:122-123). கட்டிளங் காளையரை மன்மத னுக்கும் கன்னியரை அவன் மனைவியாகிய இரதிக்கும் ஒப்பிடு வதுண்டு. இளங்காதலர் கூடித் துய்க்கும் இன்பத்தை இரதி மன்மதர்களுக்கு ஒப்பிட்டுப் பேசுவதுண்டு (பரி. 8:112-123). காமன் இரதியர் உருவங்கள் திருப்பரங்குன்றத்துச் சித்திரசாலையில் எழுதப்பட்டிருந்தன (பரி: 19:48-49). இவனுக்கெனத் தனிக் கோயிலும் அமைக்கப்பட்டிருந்தது (கலி. 109:17-20). இளவேனிற் காலம் இக்காமக் கடவுளுக்கு விழா எடுக்கும் காலமாகும். இவ்விழா ஆடவரும் மகளிரும் ஆனந்தமாகப் பொழுதுபோக்கும் ஓர் இன்ப விழாவாம் (கலி. 97:92; 67-68; 30:13-14; 35:13-14; 36:9-10).

திருமாலைக் குறித்து வழங்கும் அவதார சரிதங்களும் புராணக்கதைகளும் பல தெரியவருகின்றன. இவர் வராகத் திருக்கோலம் கொண்டது (பரி. 2:16-19; 4.22-24), அன்ன வடிவம் கொண்டது (பரி. 3:25-26), மாவலிபால் குறளனாகச் சென்று நிலத்தை மூன்று அடியால் அளந்தது (முல்லை. 3; பெரும். 29-30; பரி. 3:20; 54-56). தூணில் நரசிங்கமாய்த் தோன்றி அரக்கன் ஆகத்தைப் பிளந்தது (பரி. 4:10-21) ஆகியவை இவனது அவதார நிகழ்ச்சிகளில் சிலவாம்.

இராமசரிதமும் கண்ணனாய் வந்து நிகழ்த்திய அற்புதங் களும் மிகுதியாகப் பேசப்பட்டிருக்கின்றன. இராமாவதார நிகழ்ச்சிகளில் சீதையை இராவணன் கவர்ந்து சென்றதும் (புறம். 378:9-22), இராமன் கோடிக்கரையில் தன் துணைவர்களோடு மந்திராலோசனை நிகழ்த்தியதும் (அகம். 70:13-16) குறிப்பிடப் பட்டுள்ளன.

கண்ணனாய்ப் பிறந்து, ஆயர்களுடன் கூடிக்குலாவி, அசுரப்பகைகளைக் களைந்து வாழ்ந்த இளமைச் சரிதக் குறிப்புக்கள் காணப்படுகின்றன. கோவலன் என்று இவனை அழைத்துள்ளனர். அங்கே குடக்கூத்து ஆடி மகிழ்ந்தான் (பரி. 3:83-86). ஆயர் மகளிருடன் விளையாடிப் பொழுது போக்கினான். அவர்கள்

நீராடும்பொழுது துகில்களைக் கவர்ந்துகொண்ட நிகழ்ச்சியும் குறிக்கப்பட்டுள்ளது (அகம். 59:3-6). 'கூந்தல்' என்னும் பெயருடைய கேசியை இவன் அழித்தான் (பரி. 3:31-32) உலகை ஆளும் மன்னனாய்த் துவரைப் பதியிலிருந்து அரசாண்டான் (புறம். 201:7-12). மல்லர் முதலியோர்களின் பெருவலியை அழித்தான் (கலி. 52:5-6; 134:1-4). இவன் கீதை அருளிச்செய்த நிகழ்ச்சியும் குறிக்கப்பட்டுள்ளது (மதுரை. 761-763). இவனுடைய உதவியைப் பெற்றுப் பாண்டவர்கள் வெற்றிபெற்ற பாரதப் போர் நிகழ்ச்சிகளும் உள்ளன (பதி. 14:5-7; புறம். 2:13-16; பெரும். 415-420).

திருமால் சம்பந்தமுடைய புராணக் கதைகளில் தேவர்க்கு அமுதம் அளித்தது (பரி. 2:69-73), தேவர்களை வருத்திய அசுரர்களை அழித்தது (பரி. 1:25-30 மதுரை. 590), அசுரர்கள் மறைத்த சூரியனை மீண்டும் உலகில் நிலைபெறச் செய்தது (புறம். 741:1-5), மதியைப் பாம்பின் வாயிலிருந்து காத்தது (கலி. 104:37-38) ஆகிய செய்திகள் தெரியவருகின்றன.

## குறிஞ்சிநில முருகன்

முருகன் மலைவாழ் மக்கள் போற்றும் பெருந்தெய்வம். 'குறிஞ்சிக் கிழவன்' என்பது இவனுக்குள்ள ஒரு பெயர் (முருகு. 267). ''பிறங்குமலை மீமிசைக் கடவுள்'' (குறி. 208-209) ''காடு கெழு நெடுவேள்'' (அக. 5) எனச் சிறப்பிக்கப்படுகிறான். முருகப் பெருமானின் திரு அவதார நிகழ்ச்சிகளைப் பரிபாடலின் ஐந்தாம் செய்யுள் நன்கு விவரித்திருக்கிறது. திரிபுராந்தகன் உமையோடு கூடி முருகன் வெளிப்படுவதும், இந்திரன் கருவைச் சிதைத்தலும் பின் அறு முனிவர் பத்தினியரின் கருப்பத்தில் தாங்கியதும், இமயத்தின் உச்சியிலுள்ள சுனையிலே தாமரைப் பள்ளியில் தோன்றியதும்பிறந்த அன்றே மீண்டும் பகையாய் வந்த இந்திரனை வென்றதும், தோற்ற இந்திராதி தேவர்கள் பெருமானுக்கு ஆயுதங்கள் முதலியன கொடுத்தலும், வேறுபல நிகழ்ச்சிகளும் அப்பாடலில் விவரிக்கப்பட்டுள்ளன.

நீலக்கடலில் தோன்றும் இளஞ்சூரியனை யொத்துச் செவ்வொளி வீச, ஆறு திருமுகங்களும் அருள் காட்சி நல்க, பன்னிரு கைகளும் பல தொழில் புரிய மயிலின் மேல் பெருமான் வீற்றிருக்கும் அழகினைத் திருமுருகாற்றுப்படை பல படியாகப் பாராட்டிப் பேசுகிறது (1-11; 77-125). முருகப்பெருமானின் மேனியின் நிறம் போன்றே அவன் அணிந்துள்ள ஆடை, மாலை, கொடி முதலியனவெல்லாம் செந்தீப் பிழம்பாகக் காட்சியளிக் கின்றன (பரி. 19:97-100). முருகனுடைய உடையை ''நலம்பெறு கலிங்கம்'' (முருகு. 109) என முருகாற்றுப்படையும், ''வெண்டு கில்'' எனக் (கலி. 105:17) கலித்தொகையும் குறிக்கின்றது. இவன் மார்பில் கடப்பம் பூ மாலையும் முத்துமாலை முதலியனவும் விளங்கும். மாலையில் வள்ளிப்பூவும் இடையிட்டுத் தொடுக்கப் பெறுமாம் (புறம். 23:3; அகம். 120:1-3; பரி. 21:10). இவன் தலையில் கடம்பின் கண்ணியும் காந்தள் கண்ணியும் சூடுவன் (நற். 34:8; முருகு. 43-44) மற்றும் பேரொளி வீசும், பல்வகை அணிகளைப் பூண்டு அழகே உருவாய்த் திகழ்வான் (குறி. 51; குறு. 1:3). முருகப்பெருமான் ஏறிச் செலுத்தும் ஊர்தி பிணிமுகம் என்னும் யானையும் (குறு. 1:2; புற. 56:8) மயிலும் ஆகும் (பரி. 18:26) இவை இவனது கொடியாகவும் விளங்குவனவாம் (பரி. 19: 90-91); (புறம். 56:7; முருகு. 122). இவை தவிர கோழிக்கொடியும் அவனுக்குண்டு (முருகு. 38039). முருகப்பெருமான் கொண்டுள்ள ஆயுதங்களுள் வேல் மிகவும் சிறப்பாகப் போற்றப்பட்டுள்ளது (குறி. 51-52; சிறுபாண். 172; புறம். 380:12; கலி. 104:14; 105:17) முருகாற்றுப்படை பெருமானின் பன்னிருகைகளின் தொழில்களை வருணிக்கு மிடத்தில், அங்குசம் (தோட்டி) ஐயிரு வட்டம், (பரிசை) எஃகு (வேல்) என மூன்று ஆயுதங்கள் உள்ளனவாகக் குறிக்கப் பட்டிருக்கிறது (முருகு. 110:11). பரிபாடலில், தேவர்கள் முருகனுக் குப் படையாகத் தந்தனவாகிய மறி, மயில், கோழி, வில், மரன், வாள், ஈட்டி, கோடரி, மழு, கனலி, மாலை என்னும் பன்னிரண்டு பொருள்களை அவன் பன்னிரண்டு திருக்கரங்களிலும் கொண் டிருப்பதாகக் கூறப்பட்டுள்ளது.

முருகன் சீற்றமும் சினமும் மிக்கவன் (புறம். 16:12; அகம். 158:16-17 பதிற். 26:11; பொரு. 131). ஒப்பற்ற பெருந்திறல்

வாய்ந்தவன் (நற். 225:1; அகம். 181:6). போரிலே முன்னின்று எந்நாளும் வெற்றியைப் பெறுபவன் (அகம். 1:3; புறம். 14:19; 22:29; 100:21). முருகன் தேவர் சேனைக்குத் தலைமை தாங்கி, இந்திர னுக்குப் பகையாகிய அசுரர்களை அழித்து, அவனுக்கு வெற்றி யளித்தான் (முருகு. 260; பரி. 1:25; 5:63-70; குறு. 1:2). முருகன் அழித்த அவுணர்களுள் சூரனைக் கொன்றது முக்கியமான நிகழ்ச்சியாகும். சூரன் பாமரவுருவில் கடலில் ஒளிந்து போர் செய்ய, பெருமான் அம்மா மரத்தின் முதலையே வெட்டி அழித்து, அவனை நாசம் செய்தான் (புற. 23:3-7; பதி. 11:16; பரி. 5:1-7; கலி. 27:15-16). இதற்கடுத்தபடியாகக் குருகு பெயர்க் குன்றமாகிய கிரௌஞ்ச மலையை வேலால் எறிந்து அழித்தது முக்கியமான நிகழ்ச்சியாம் (முரு. 256; பரி. 8-29).

அசுரப்பயம் நீக்கிய பெருமானுக்கு இந்திரன் தன் மகள் தேவயானையைத் திருமணம் செய்து வைத்தானாம் (முருகு. 175; பரி. 9:9:58). இவளைத் தேவசேனை என்றும் குறிப்பிடுவர். இவளைப் பெற்றதனால் முருகன் ''மறுவில் கற்பின் வாள்நுதல் கணவன்'' (முருகு. 6) என்னும் சிறப்பைப் பெற்றான். பின்னர், பரங்குன்றத்தில் குறவர் குடியில் பிறந்த வள்ளி நாச்சியாரையும் மணந்து கொள்கிறான் (முருகு. 191-102; பரி. 8:69; 9:67; 14:21-22; 19:95). தேவயானையை இந்திரன் கொடுக்க மணந்துகொண்ட தன்றி, வள்ளி நாச்சியாரை இவன் களவினால் கூடி உடன் கொண்டுபோன நிகழ்ச்சியை ''முருகு புணர்ந்து இயன்றவள்ளி போல'' (நற். 82:4) என உவமையாக எடுத்துக் காட்டுகின்றார் ஒரு புலவர். தெய்வ யானை, வள்ளி மணாளராகப் பெருமான் விளங்குகின்றதால், ''மங்கையர் கணவ மைந்தர் ஏறே'' (முருகு. 264) என்று புகழப் படுகின்றான்.

முருகன் கன்னிப் பெண்களைத் தீண்டி வருத்துவன் என்றும் (குறி. 174-175; நற்றி. 258:10; அகம். 98:9-10). அந்தத் துன்பத்தை நீக்க அப்பெருமானுக்கு வெறியாட்டு எடுத்து வழிபாடு செய்ய வேண்டும் என்றும் மக்கள் கருதினர் (புறம். 299:6). வெறியாட்டு எடுத்தலை ''முருகாற்றுப் படுத்தல் (அகம். 22:11) ''முருகயர்தல்'' (குறு. 362:1) ''வெறி'' (ஐங். 243:2; நற். 273: 4-5)

வெறியயர்தல் (அக. 182:17-18) வெறியாட்டு என்றும் வழங்குவர். வெறியாட்டில் முருக பூசை பண்ணும் வேலன் வந்து அதற்குரிய சடங்குகளைச் செய்வான். குறவரும் ஆடவரும் பெண்டிருமாய் ஒன்றுகூடி வெறியாட்டு எடுப்பதும், ஊர் மன்றங்களில் குரவைக் கூத்து ஆடி வழிபடுவதும்உண்டு (முரு. 197; மதுரை. 611-615), அந்தணர்கள் நீராடி ஈர ஆடையுடன், உச்சியின் மேல் குவிந்த கையினராய், ஆறு எழுத்து மந்திரத்தை உச்சரித்து , மணம் மிக்க மலர்களால் வழிபட்டனர் (முருகு. 184-189). மதுரை மக்கள் கூட்டம் கூட்டமாய்ச் சென்று திருப்பரங்குன்றத்து விளங்கும் பெருமானை வழிபட்ட காட்சிகளைப் பரிபாடலில் காணலாம் (பரி. 8:96-102; 17:1-8), முருகன் விரும்பும் கடப்ப மாரத்தைத் துதித்து வழிபடுவதும் வழக்கமாய் இருந்தது (பரி. 17:1-8); குறி. 176-177). வழிபாடு இயற்றுவார் பெருமானுக்குரிய பல்வகை நாமங்களை யும் கூறி அவன் திருவடிகளில் தம் தலை பதியுமாறு வணங்கி வழிபட்டனர் (முருகு. 253-276). முருகப் பெருமானுக்கு முருகு (நற். 225:1), முருகன் (புறம். 23:4), வேள் (பட்டி. 154) நெடியான் (பரி. 19:283), கந்தன் புறம் (380:12), குமரன் (பரி. 91:81-82), இயவுள் (முருகு. 274), மதவலி (முருகு. 275) என்னும் பெயர்கள் குறிக்கப் பட்டுள்ளன.

முருகன் கோயில் கொண்டருளும் திருப்பதிகளில் திருப் பரங்குன்றம், திருச்சீரலைவாய், திருவாவினன்குடி, திருவேரகம், குன்றுதோறாடல், பழமுதிர் சோலை என்னும் ஆறு திருப்பதிகளை முருகாற்றுப்படையில் காணலாம. இவற்றுள் குன்றுதொறு ஆடல், பழமுதிர்சோலை என்பன பொதுவாக எல்லா வகையான குன்று களையும் சோலைகளையும் கருதிக் கூறினமையாம். 'சாடும் காவும்' (முருகு. 223) முருகன் இருப்பிடம் என முருகாற்றுப் படையில் வரும் முற்குறிப்பின் விளக்கமே இவை.

திருப்பரங்குன்றத்தையும், திருச்சீரலைவாயையும் முரு காற்றுப்படையைத் தவிர, பரிபாடல், புறநானூறு, அகநானூறு கலித்தொகை நூற்களும் குறிப்பிடுகின்றன (பரி. 6; 8; 29; புறம். 55: 17-21; அகம். 266:20-21; கலி. 27-16).

## மருதநிலக் கடவுள்

மருதநிலத்தில் வாழும் மக்கள் அந்நிலத் தெய்வமாகிய இந்திரனுக்கு ஆண்டுதோறும் விழாக் கொண்டாடினர். இவ்விழா இருபத்தெட்டு நாள் நடைபெற்றதாகச் சிலப்பதிகார, மணி மேகலைக் காவியங்கள் தெரிவிக்கின்றன. இந்த விழாவில் மக்கள் மிகுதியாகப் பூக்களைப் பயன்படுத்தினர். ''இந்திர விழாவில் பூவினன்ன'' (ஐங். 62:1-2) என்று சுட்டுகிறது. வயல் சூழ்ந்த மருத நிலத்து ஊர்களில் நிகழும் இந்தப் பலபூ விழாவாகிய இந்திர விழாவைக் கண்டு களிக்க மக்கள் திரண்டு செல்வதையும் பதிற்றுப்பத்து சுட்டுகிறது (30:14-21). இந்த இரு தொகை நூற்களும் மருதநிலத்தார் தம் பேரூர்களில் கொண்டாடிய விழாவாகவே சுட்டுவதினால், இந்திரன் மருதப்பூக்கள் நிறைந்த நாட்டின் சிறப்புத் தெய்வம் என்பது விளங்குகிறது. தொல்காப்பியமும் ''வேந்தன் மேய தீம்புனல் உலகம்'' (தொல். பொருள். அகம். 5) என்கிறார்.

இந்திரன் வானுலகத் தேவர்கள் அதிபதியாகக் கூறப் படுபவன் (பரி. 5:69). வடபால் உயர்ந்து ஓங்கிய பெருமலையாகிய மேருவைக் காவல் புரிபவன் (பரி. 9: 1-3). நூறு வேள்விகளைப் புரிந்தவன். அதனால் விளைந்த பகைவரை வெல்லும் வெற்றி படைத்தவன் (முருகு. 155-156). ஆயிரம் கண்களை உடையவன் (முருக. 155; கலி. 105:15). வச்சிராயுதத்தை ஏந்தியவன் (புறம். 241:3). நெடியோன் என்றும் இவனுக்குப் பெயர் உண்டு (புறம். 241:3). நான்கு கொம்புகளைப் படைத்த யானையை ஊர்தியாகக் கொண்டவன் (முருகு. 157-159). இந்திரனும் பிற தேவர்களும் அமுதை அருந்துபவர்கள். ஆதலால் அமிர்தத்தை 'இந்திரர் அமிழ்தம்' (புறம். 182:1-2) என்பர். தேவமைந்தரும் மகளிரும் புடைசூழ ஆகாய கங்கையில் நீராடி இவன் இன்பமாகப் பொழுது போக்குபவன் (பரி. திர. 2:91-97). இவன் சொர்க்க லோகத்திற்குத் தலைவனாதலின், வீர சொர்க்கம் புகும் வீரர்கள் இவனது உலகிற்குச் செல்வர். ஆய் இறந்தபொழுது, அவனை எதிர் கொள்வதற்காக இந்திரன் கோவில் முரசம் முழங்குகிறது என்று ஏணிச் சேரி முடமோசியார் குறிப்பிடுகின்றார் (புறம். 241:1-5).

வானத்தில் மழைக்காலத்தில் தோன்றும் வானவில்லை 'இந்திரவில்' என்பர் (பரி. 18:38-39) முருகப்பிரானுக்குப் பகைவனாய் இந்திரன் முதலில் தோன்றி, பின் அவனுக்குத் தோற்று, அப்பெரு மானின் வலிமை கண்டு அவனைத் தன் சேனாதிபதியாகக் கொண்டு அசுரப்பகைகளைந்து இவனும் பிற தேவர்களும் நல்வாழ்வு பெற்றனர். தன் மகள் தேவயானையை முருகப் பெருமானுக்குத் திருமணம் செய்துகொடுத்தான்.

இந்திரன் ஒரு சமயம் தன் ஐம்புலன்களுக்கு அடிமையாய் அகலிகையை விரும்பிக் கூடி, அதனால் அவளது கணவர் கௌதமரின் சாபத்திற்கு ஆளானான். இந்தப் புராண நிகழ்ச்சி திருப்பரங்குன்றத்தின் ஓவியக்கூடத்தில் தீட்டப்பட்டிருந்தது. இதனைப் பார்த்த மக்கள்,

*'இந்திரன், பூசை; இவள் அகலிகை; இவன்*
*சென்ற கவுதமன்: சினன் உறக் கல் உரு*
*ஒன்றிய படி இது' என்று* (பரி. 19:50-53)

உரையாடினராகக் குறிக்கப்பட்டிருக்கிறது.

## நெய்தல் நிலத் தெய்வம்

நெய்தல் நிலத்தெய்வம் வருணன். ''வருணன் மேய பெருமணல் உலகமும்'' என்பது தொல்காப்பியம் (தொல். பொருள். அகம். 5). பெருங்கடல் தெய்வம் (கலி. 131:1-2) என்பது இவ் வருணனைக் குறித்தது ஆகலாம். நெய்தல் நிலத்து மக்கள் சுருமீனின் கொம்பை நட்டு தங்கள் நிலத்தெய்வத்திற்கு வழிபாடு செய்தனர் என்று தெரியவருகிறது (பட்டின. 86-90).

## பாலைநிலக் கொற்றவை

கொற்றவை பாலை நிலத்துக்குரிய தெய்வம் என்பர். இவள் முக்கண்ணனுடைய (சிவன்) போர்ச் சக்தியாவாள். முருகனை உமைபாலன் என்பதைப் போலவே, ''வெற்றி வேல் போர்க் கொற்றவை சிறுவ'' ''இழையணி சிறப்பின் பழையோள்

குழவி'' முருகு 258-259) எனக் கொற்றவை சிறுவனாகக் கூறுவதும் மரபு. இவள் காட்டில் வாழும் மறவர்களால் போற்றப்படுபவள். ''கானமர் செல்வி'' (அகம். 345:3-4) 'பெருங்காட்டுக் கொற்றி' (கலி. 89:8) என்று குறிக்கப்படுகின்றனள். கொற்றவையின் கோலம் பற்றிய குறிப்பொன்று மகளிர் தைந்நீராடல் பகுதியில் காணப்படுகிறது (பரி. 11:93-100). இக்குறிப்பினால் இவள் முக்கண்ணுடையாள் என்று தெரியவருகிறது. கையில் சூலப்படையைத் தாங்கியிருப்பாள். இதனால் 'சூலி' என்னும் பெயரும் இவளுக்குண்டு (குறு. 218:1) இவளைப் போர்க் கொற்றவை என்பது இவள் மகிடா சூரனை அழித்த நிகழ்ச்சியைக் குறிப்பதாகும் (முருகு. 258). வீரர்கள் சூடும் வெற்றிப் பூவாகிய வாகையிலும் இவள் வீற்றிருப்பதாகக் கருதுவர். இதனால் அவ்வாகைப் பூவைக் 'கடவுள் வாகைத் தூய் வீ'' (பதிற். 66:15) என்று சிறப்பிக்கின்றனர். இத்தொடர்க்குப் பழைய உரைகாரர், ''வெற்றி மடந்தையாகிய கடவுள் வாழும் வாகை'' என்று விளக்கம் தருகிறார்.

கொற்றவையின் கோட்டம் காட்டிலே அமைந்திருக்கும். இதனைப் பேய், பூதம், பிசாசுகள் சூழ்ந்து நின்று காவல் புரியும். அக்கோவிலில் புறாக்களும் தங்கியிருக்கும் (பட்டின. 57-59).

கானவர் காய்ந்த விறகால் தீமூட்டி அங்கே எரிவிளக்காக அமைப்பர். காளி கோவிலின் முற்றத்திலே வந்து உறங்கும் மான் கூட்டங்களை எரிவிளக்கின் ஒளியால் மந்திகள் எழுப்பி ஒட்டி, அதனைத் துடைத்துத் தூய்மை செய்வதாகப் புறப்பாட்டில் ஒரு குறிப்புள்ளது (247:1-4). தேவியைச் சுற்றியிருக்கும் பேய்கள் அவளுக்குப் பொழுதுபோக்காக வேடிக்கையான நொடிகளைக் கூறுமாம். ''பெருங்காட்டுக் கொற்றிக்குப் பேய் நொடித் தாங்கு'' (கலி. 89:8) என்று இந்நிகழ்ச்சி குறிக்கப்பட்டுள்ளது.

மறவர் கொற்றவையைத் தொழுது அவளுக்குப் பலிகடன் களைச் செலுத்துவர். அப்பொழுது அவர்கள் காப்பாகத் தங்கள் கையில் நூலைக் கட்டிக் கொள்வதும் உண்டு. குருதிப் பலியும் கொடுப்பது வழக்கமாய் இருந்தது (குறு. 218:1-2; பதிற். 19:14-18).

கொற்றவை உறையும் இடங்களில் அயிரைமலை, விந்த மலை என்ற இரண்டையும் பற்றிய செய்தி தெரியவருகிறது. அயிரை மலைக் கொற்றவையைப் பற்றிய குறிப்புகள் பதிற்றுப் பத்தில் மட்டுமே காணப்படுகின்றன (பதி. 79:16-19;88:11-12; 90:19) இம்மலையிலிருந்து ஓடிவரும் ஆயிரையாறு,

> ''மாற்று அருந்தெய்வத்துக் கூட்டம் முன்னிய
> புனல்மலி பேரியாறு'' (பதி. 88:24-25)

என்று கூறப்படுகிறது. சேரமன்னர் தாங்கள் போர் முதலியவற்றில் ஈடுபடும் முன்னர் இந்தக் கொற்றவையை வழிபட்டுச் சென்றனர் என்று தெரிகிறது (பதி. 90:19-21).

> ''கடவுட் பெயரிய கானம்'' (பதி. 88:2)

என்பதற்குக் கொற்றவை உறையும் விந்திய மலைக்காடு என்று பழைய உரைகாரர் விளக்கம் தருகிறார். ''கடவுட் பெயரிய கானம் என்றது விந்தடவியை; கடவுள் என்றது ஆண்டு உறையும் கொற்றவையினை'' என்பது.

## பெருந்தெய்வங்கள்

உலகத்தைக் காப்பவரும் முடிவு காலத்தைச் செய்பவரும் பெரும்புகழ் படைத்தவருமான தெய்வங்கள் நால்வரை ஐம்பத் தாறாம் புறப்பாட்டுக் கூறுகிறது. அவர்களாவர் மணி மிடற்றோன் (முக்கண்ணன்), பனைக் கொடியோன் (பலதேவன்), விறல் வெய்யோன் (மால்), செய்யோன் (முருகன்) இந்நால்வரும் பாண்டியன் இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன்மாறனுடைய சீற்றம், வலிமை, புகழ், முன்னியது முடிக்கும் ஆற்றல் ஆகிய வற்றுக்கு ஒப்பிடப்பட்டுள்ளனர். இவரைத் 'தோலா நல்இசை நால்வர்'' (புறம். 56:10) என்கிறார் புலவர்.

மால், முக்கண்ணன், நான்முகன், என்னும் மூவரும் முறையே காத்தல், அழித்தல், படைத்தல் என்னும் தொழிற்குரிய

முதல்வராகக் கூறப்படுகின்றனர். பிரம தேவனிடம் இருந்து ஞாயிறு, திங்கள் முதலிய தேவர்களும் பிறரும் தோன்றுகின்றனராம் (பரி. 8:1-11). திருமுருகாற்றுப்படை, மாயோன், முப்புரம் எரித்தவன், ஆயிரம் கண்ணனாகிய இந்திரன் என்னும் மூவரையும் சிறப்பித்துரைக்கிறது (முருகு. 148-150). இம்மூவரையும்,

*'உலகம் காக்கும் ஒன்று புரிகொள்கைப்*
*பலர் புகழ் மூவரும் தலைவர் ஆக'*

*(முருக. 61-62)*

என்று குறிப்பிடுகின்றார்.

இவற்றால் மால், முக்கண்ணன், நான்முகன், இந்திரன் என்னும் நால்வர் தலைமைத் தெய்வமாகக் குறிக்கப்படுதல் எனலாம். முத்தொழிற்கு உரிமையால் அயன், அரி, அரனும் தேவர்களின் அதிபதியாதலின் இந்திரனும் தலைவராகக் குறிக்கப் பட்டனர் போலும்.

அந்திவானத்தோடு கூடிய கடலின் நிறத்திற்கு இருபெருந் தெய்வங்களின் காட்சி ஒப்பிடப்பட்டிருக்கிறது.

*''வெருவரு கடுந்திறல் இருபெருந் தெய்வத்து*
*உரு உடன் இயைந்த தோற்றம் போல*
*அந்தி வானமொடு கடல் அணிகொளாஅ''*

*(அக. 360:6-9)*

இங்கே குறிப்பிடும் செந்நிறமாகத் தோன்றும் அந்திவானம் செம் மேனி படைத்த முருகனையோ அல்லது முக்கண்ணனையோ குறிப்பதாகலாம். நீலக்கடல் கருநிறம் படைத்த மாலைக் குறிப்ப தாதல் வேண்டும்.

மதுரைக்காஞ்சியில் மழுவாள் நெடியோனைத் தலைவனாகக் கொண்டு பிற தெய்வங்கள் விளங்குவதாகக் கூறப் பட்டிருக்கிறது.

*''நீரும் நிலனும் தீயும் வளியும்*
*மாக விசும்போடு ஐந்து உடன் இயற்றிய*
*மழுவாள் நெடியோன் தலைவன் ஆக,*
*மாசு அற விளங்கிய யாக்கையர், சூழ்சுடர்*
*வாடாப்பூவின் இமையா நாட்டத்து*
*நாற்ற உணவின், உருகெழு பெரியோர்''*

*(மதுரை. 453-4,5,8)*

இப்பகுதிக்கு உரை விளக்கம் தரும் நச்சினார்க்கினியர், ''மழு வாகிய வளையுடைய பெரியோன் ஏனையோரின் முதல்வனாகக் கொண்டு மாயோன், முருகன் முதலாகிய தெய்வங்கள்'' விளங்கு கின்றன என்று குறிப்பிடுகின்றார். இவ்வுரைப்பகுதிக்கு விளக்கம் எழுதிய டாக்டர் உ.வே.சாமிநாத அய்யர், 'மழுவாள் நெடியோன் என்றது சிவபெருமானை. இக்கருத்தை ''ஏற்று வலன் உயரிய'' (புறம். 56) என்னும் செய்யுள் வலியுறுத்தும்'' என்று குறிப் பிட்டுள்ளார்.

மழுவாளைக் கொண்ட தெய்வங்கள் பரசுராமனும் முக் கண்ணனும் ஆவர். பரசுராமனை ''மன்மருங்கறுத்த மழுவாள் நெடி யோன்'' என்று சுட்டுகிறது. எனவே, இது முக்கண்ணனைக் குறிக் கும் சிறப்புப் பெயராகக் கொள்ள இடமுண்டு.

பெருந்தெய்வங்களுள் தலைமைத் தெய்வமாகக் கருதப் படும் முக்கண்ணான் அந்தி வானத்தைப் போன்ற செந்நிறம் படைத்தவன் (அகம். 360:6-9). குரால் ஏற்றின நிறத்துக்கும் முக்கண்ணான் உரு ஒப்பிடப்பட்டிருக்கிறது (கலி. 104:10). மலர்ந்து நறுமணம் பரப்பும் செண்பக மலர் இவனது திருமேனி அழகைப் பெற்று விளங்குகிறது என்கிறார் ஒரு புலவர் (கலி. 150:20-21). எனவே, முக்கண்ணனின் திருமேனியின் நிறம் அந்திவானைப் போன்ற பொன்னிறமாயும் காட்சி தருதல் பெறப் படும். ''செவ்வானன்ன மேனி'' என்று அகநானூற்றின் கடவுள் வாழ்த்தும் குறிப்பிடுகிறது (கலி.8). இவனது திருமேனி போன்றே திருமுடியில் விளங்கும் சடையும் நெருப்பை ஒத்துக் காட்சி யளிக்கிறது (புறம். 126:1; கலி. 109:11). இச்சடையில் தெள்ளிய

கங்கை நீரை மறைத்து வைத்துள்ளான். நீர் தங்கியிருப்பதனால் இச்சடை ஈரமாகவும் உள்ளது (கலி.150:9; பரி. 9:6; கலி. 150:17) இவனது முக்கண்ணையும் கறைமிடற்றையும் சங்கப் புலவர்கள் பல இடத்து ஒப்புமையாக எடுத்துக் கூறியுள்ளனர். இவை முறையே இவனது சினத்திற்கும், பேரருளுக்கும் சின்னமாக விளங்குகின்றன (முருகு. 153). இதனால் இவன் முக்கட் செல்வன் (புறம். 91:6) என்றும் பேசப்படுகின்றான். நஞ்சை உள்ளடக்கிய கழுத்தை உடைமையால் இவன் கழுத்து நீலநிறம் வாய்ந்து விளங்குகிறது. 'கறைமிடறு' (புற. 55:4) 'மணிமிடறு' (புறம். 56:2; கலி. 147:27-28) என்று சிறப்பிக்கப்படுகிறது. இவனைக் 'காரி உண்டிக் கடவுள்'' (மலைபடு. 83) என்று மலைபடுகடாம் சுட்டுகிறது. இவனுக்குக் கொன்றைமாலை உரியது (கலி.142:28; 150:1). வெள்ளிய எருதைத் தனக்குக் கொடியாகவும் ஊர்தியாகவும் கொண்டுள்ளான் (புறம். 56:1; கலி. 150:13; பரி. 8:2). கணிச்சி என்னும் மழுப்படை இவனது ஆயுதம். இவ்வாயுதம் நெருப்புப் போன்று ஒளிவிடும் காட்சியதாய் எவராலும் நெருங்குவதற்கு அரிய வன்மையுடன் பெரும்புகழ் படைத்து விளங்குகிறது (கலி. 103:25; புறம். 56:2; கலி. 105:13). முப்புரம் எரித்த காலத்து மேரு வில்லும் ஆதிசேடன் நாணும் அழல் அம்பும் கொண்டு இருந்தான் என்பதால், வில்லும் இவனுக்கு உரிய ஓர் ஆயுதம் ஆகும் (புறம். 55:1-3; கலி. 38:1; பரி. 5:24-25).

முக்கட் செல்வன் உமையை ஒருபாகத்துக்குக் கொண்டு உயர்ந்த மலையாகிய கயிலை மலையில் அமர்ந்து போகியாகக் காட்சியளிக்கிறான் (முருகு. 153; கலி. 38:1-7) உமையுடன் கூடி முருகனைத் தந்தனன் (பரி. 5:53-54). இவன் அருந்தவ முதல்வனாய் ஆலின்கீழ் அமர்ந்து அறம் உரைக்கும் யோகியாகவும் காட்சி தருபவன் (கலி. 100:7-8). வேதம் இவன் வாக்கிலிருந்தும் பிறந்தது; எப்பொழுதும் இவன் வாக்கில் நீங்காது உறைவது (புறம். 166:1-2; அகம். 181:15-16). வேதம் என்னும் முதுநூலை அருளிய இம்முக்கண்ணன் 'முதுமுதல்வன்' (புறம். 166:2) ஆகக்கொண்டாடப் படுகிறான். தேவர் பொருட்டுச் செய்யும் வேள்வியில் அவிப் பாகத்தை உண்ணும் வேள்வி முதல்வனாகவும் விளங்குபவன் இவனே (பரி. 5:26-27).

இவன் வீற்றிருக்கும் கயிலை மலையை இராவணன் பெயர்த்து எடுக்க இயலாது, அம்மலையில் அகப்பட்டு இசை பாடித் துதிக்க, அவனுக்கு அருள் செய்தான் (கலி. 38:1-5). இவன் முப்புரம் எரித்த நிகழ்ச்சி விரிவாகச் சங்கப் பாடல்களில் குறிக்கப் பட்டிருக்கிறது (கலி. 2:1-8; பரி. 5:22-26; பரி. திர. 1:75-78; புறம். 55:1-4) முப்புரம் அழித்ததைப் போலவே மூவுலகையும் முடிவில் அழிக்கும் ஊழி முதல்வனும் இவனே (பரி. 5:13; கலி. 101:24-26; 103:43-45). கயிலை மலையில் உறையும் இப்பெருமானின் திருக்கோயில் நன்னனுடைய நவிர மலையிலும் (மலைபடு. 81-82; 225-233) ஆலமுற்றம் என்னும்தலத்திலும் (அகம். 181:14-20) அந்நாளில் விளங்கிய செய்தியும் தெரியவருகிறது.

உமை முக்கண்ணனோடு உடனாகக் கயிலையில் அமர்ந்து இருந்தாள் என்பது அவனது உடலின் ஒரு பகுதியாக விளங்கும் காட்சியாகும். இறைவனுடைய செம்மேனிக்கு மாறான கருமை யும் பசுமையுமான நிறத்தையும் இவள் கொண்டுள்ளாள் (கலி. 35:3; 14:11-12; 101:24).

*'உமை அமர்ந்து விளங்கும் இமையாமுக்கண்*
*மூஎயில் முருக்கிய முரண் மிகு செல்வன்'*
*(முருகு. 153-154)*

என்பது உமையுடன் விளங்கும் காட்சியாகும்.

## தேவர்களும் தேவகணத்தார்களும்

வணக்கத்திற்குரிய பெருந்தெய்வங்கள் ஒருபுறம் இருக்க, வேறு பலரைத் தெய்வச்சக்தியுடையவர்களாகக் கருதியும் போற்றி னர். இவர்களுள் பிரமனிடத்திலிருந்து தோன்றியவர்களும் வானுலகில் வாழ்பவர்களுமாகிய தேவர்கள் ஒரு பெருங்கூட்டத் தார் ஆவார்கள் (பரி. 8:ம-7; புறம். 213:10; பதிற். 21:15). தேவர்களை அமரர், புத்தேள், ஐயர், உயர்ந்தோர், மேலோர், இந்திரர் முதலிய பெயர்களால் அழைத்தனர். இவர்கள் அழுக்கு தங்கிய உடம் புடையார்; இமையாத கண் உடையார். தெய்வ ஒளி படைத்த

வராய், வாடாத பூவை அணிந்திருப்பர். தேவர்களின் மகளிர்கள் வானவ மகளிர் (மதுரைக். 581-682) இவர்களுக்குத் தலைவனாக விளங்குபவன் இந்திரன். இவனும் பிற தேவர்களும் அமுதத்தை உணவாக உண்டு இன்பமாகப் பொழுதைக் கழிப்பர் (புறம். 62:16-19; மதுரை. 456-460).

இத்தேவர்கள் மேரு மலையிலே உறைவோர்களாவர். இமையவர் உறையும் திமைய செவ்வரை (பெரும். 429) கடவுள் நிலைஇய கல்லோங்கு நெடுவரை (பதி. 43:6) என்று இவர் உறையும் சிறப்பால் அம்மலை போற்றப்படுகிறது. பூவுலகில் நல்வினை செய்வார் இவ்வானுலக இன்பம் பெறுவர் என்று கருதினர் (கம். 55:14; புறம். 213:10). இவ்வுலகில் வளம்பல நல்கும் கற்பகக்கா முதலியன உண்டு. இங்கே உடையோர் இல்லோர்க்கு ஈதலும் இல்லோர் இரத்தலும் இல்லை. இது நல்வினைப் பயனைத் துய்த்தற்குரிய ஓரிடமென்றே கருதப்படுகிறது (பரி. 12:77-84; புறம். 174:19-20;38:11-15).

இத்தேவர்களுள் முப்பத்து மூவர் சிறப்பாகக் கூறப்படுவர். துவாத சாதியத்தரும், மருத்துவர் இருவரும், வசுக்கள் எண்மரும், எகாதசருத்திரர்களும் ஆக இவர் முப்பத்து மூவர் ஆவர். இவர்கள் எல்லோரும் பிரமனிடத்திலிருந்து தோன்றியவர்கள். பிரமன் முதலிய மும்மூர்த்திகளையும் அவரைச் சார்ந்துள்ள ஏனைய முப்பத்து மூவரையும், ஏனையோரையும்,

*'புள்மிசைக் கொடியோனும்,*
*மலர்மிசை முதல்வனும், மற்று அவனிடைத் தோன்றி*
*இலகு இருள் அகற்றிய பதின்மரும் இருவரும், நூல்*
*மரூந்து உரை இருவரும், திருந்து எண்மரும்*
*ஆதிரை முதல்வனின் கிளந்த*
*நாதர் பன்னொருவரும், நன்திசை காப்போரும்,*
*யாவரும், பிறரும், அமரரும், அவுணரும்,*
*மேஅரு முதுமொழி விழுத்தவ முதல்வரும்*
*பற்றாகின்று, நின் காரணமாக;*
*பரங்குன்று இமயக் குன்றும் நிகர்க்கும்'* (8:2-11)

எனவரும் பரிபாடல் பகுதி தொகுத்துத் தருகிறது. இத்தேவர் களையுள்ளிட்டு மேலும் அசுரர், கருடர், கந்தருவர், பூதர், பைசாசர், தாராகணம் முதலிய பதினெண் வகைப்பட்ட தேவகணத்தார்களும் குறிக்கப்பட்டுள்ளனர்.

*'நால்வேறு இயற்கைப் பதினொரு மூவரொடு*
*ஒன்பதிற்று இரட்டி உயர்நிலை பெறீஇயர்'*
*(முருகு. 167-168)*

எனத் திருமுருகாற்றுப்படை தேவர் முப்பத்துமூவரோடு பதி னெண் கணத்தாரையும் ஒப்பவைத்துப் பேசுகிறது. இவர்கள் வடக்கேயுள்ள உத்தரகுருவில் எந்நாளும் இடையறாத இன்பத் துடன் வாழ்ந்து வருபவர் (பதி. 68:12-13). தேவகணத்தாரில் கந்தருவர், அவுணர்,பூத பைசாசர், போன்ற ஒருசிலரைப் பற்றிய குறிப்புக்கள் சங்க இலக்கியங்களில் உள.

உலகில் எட்டுத் திக்கிலும் நின்று காவல் புரியும் இந்திரன், அக்கினி, யமன், திருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன் என்போரை நன்திசைக் காப்போர்'' (பரி. 8:8) என்பர். இவர்களுள் இந்திரன் மருதநிலத் தெய்வமாகவும் வருணன் நெய்தல் நிலத்தெய்வமாகவும் சிறப்புடன் போற்றப்பட்டதை முன்பு கண்டோம். அக்கினியும், யமனும், கொடுமை மிக்க தேவதை களாகவும், அழிவுத்தொழில் புரிவோராகவும் குறிக்கப்பட் டுள்ளனர் (பரி. 3:21-23). காற்றும் நெருப்பும் கலந்து அழிவு செய்தாற்போல அரசன் பகைவர் நாட்டை அழிப்பதாகக் கூறப் படுதலின் (புறம். 41:16-18) மற்றும் நெருப்பைப் போலவே வலிமை படைத்த தெய்வம் என்பது போதரும். காற்றுத்தேவன் விசும்பிலும் நிலத்திலும் எங்கும் உலாவித் திரிபவனாவான் (கலி. 144:39-40) குபேரன் ''மாநிதிக் கிழவன்'' (அகம். 66:18) என்று நிதிக்கதிபதியாகக் கூறப்படுகிறான்.

இந்திரனை விடவும் யமன் சங்கப்பாடல்களில் மகுதி யாகச் சுட்டப்படுகிறான். இவனுக்குக் கூற்றம், காலன், எமன், மடங்கல், தருமன், எருமை என்னும் பெயர்கள் தரப்பட்டுள்ளன.

உலகத்து வாழும் உயிர்களை உடலினின்றும் பிரித்துக்கொண்டு செல்பவன் ஆதலால் ''உயிருண்ணும் கூற்றம்'' (கலி. 105:37-38) என்கிறார் ஒரு புலவர். ஊழிக்காலத்தில் அழிவுத் தொழிலைச் செய்பவனும் இவனே (கலி. 105:20-21). இவன் குறித்த காலத்தில் சிறிதும் நெறி தவறாது உயிர்களை மாய்க்கும் தொழிலினால் 'தருமன்' என்றும் புகழப்படுகிறான் (பரி. 3:8). நடுநிலைமைக்கு யமனது செங்கோலை எடுத்துக்காட்டுகின்றனர் (புறம். 68:10). இவன் கணிச்சி என்னும் மழுப்படை உடையவன் எருமை ஏற்றினை ஊர்தியாகக் கொண்டவன் (புறம். 42:23; கலி. 101:25; பரி. 8:56). இத்துணைப் பேராற்றல் படைத்த யமனும் குழந்தை முருகனரல் வெல்லப்பட்டான் (பரி. 8:86). கணிச்சியோராகிய சிவன் இவனது நெஞ்சத்தைப் பிளந்து உயிரை மாய்த்தும் கால காலனாய் விளங்குகிறான் என்று கொண்டனர் (கலி. 121:24-26).

இருசுடராகிய ஆரிய சந்திரர் கண்க்ண்ட தெய்வமாக மக்களால் பெரிதும் போற்றப்பட்டனர். சூரியனது 'வருகை உலகத்திலுள்ள உயிரினங்களுக்கு உவகையளிக்கிறது. சந்திரன் தேய்தலையும் பெருகலையும், மாய்தலையும், பிறத்தலையும் உலகோர்க்குக் கண்கூடாகக் காட்டி நல்லறிவைத் தருகிறது என்கிறார் ஒரு புலவர் (புறம். 27:11-14). குடதிசையில் தோன்றும் இளம்பிறையை மகளிரும் பிறரும் தொழுது போற்றினர் (அகம். 239;9-10; குறு. 307:13; மதுரை. 193-194). காலையில் எழும் இளஞ்சூரியனையும் கைகூப்பித் தொழுதனர் (நற். 283:5-7; முருகு. 1-2). சூரியனை 'ஞாயிற்றுப் புத்தேள்' (கலி. 108:13) என்றும் சந்திரனைத் 'திங்கள் புத்தேள்' (புறம். 27-14) என்றும் அழைப்பதி லிருந்து இவ்விருவரும் தெய்வமாகப் போற்றப்பட்டனர் என்பது நன்கு விளங்குகிறது.

நட்சத்திரங்களில் சிலவும் வணக்கத்திற்கு உரியவாக விளங்கின. சந்திரனொடு சேர்ந்து விளங்கும் உரோகிணி நாளைச் சிறந்த நாள் எனக் கொண்டனர் (அகம். 136:4-6). ஓணமும் ஆதிரையும் முறையே மாயோன், முக்கண்ணன் இவர்களுக்குரிய நாட்களாகக் கொள்ளப்பட்டன. இந்த நாட்களில் இத்தெய்வங் களுக்கு விழா எடுத்தனர் (மதுரை. 590-599; பரி. 8:6; 11:74-82). அறுமீன் எனப்படும் கார்த்திகை நாள் முருகனோடும், முனிவர்

களோடும், சம்பந்தமுடையது. கார்த்திகை நாளில் விளக்கிட்டுத் திருவிழா சிறப்பாகப் போற்றப்பட்டது (அகம். 141:6-8) எழுமீன் எனப்படும் சப்தரிஷி மண்டலமும் வணக்கத்திற்குரியதாய் இருந்தது.

*''மை அற விளங்கிய மணிநிற விசும்பில்*
*கை தொழும் ம்ரபின் எழுமீன் போல''*

*(நற். 231:1-2)*

என ஒரு புலவர் இச்செய்தியைக் குறிப்பிடுகிறார்.

வா்னத்தின் வடதிசையில் விளங்கும் 'வடமீன்' எனப்படும் அருந்ததி கற்பிற்கணிகலமாகப் போற்றப்பட்டது. ''வடமீன் போல் தொழுதேத்த வயங்கிய கற்பினாள்'' (கலி. 2:21) என்பது இதன் பெருமையை விளக்குகிறது.

# 7. கலை

## அமைதியான தமிழகம்

தமிழக மக்களின் வாழ்க்கை முறைகளையும் சமயக் கோட்பாடுகளையும் மற்றும் அரசியல், சமூக நிலைகளையும் பார்க்கும் போது, அவர்கள் பல்லாற்றானும் சிறந்து மேம்பட்டு விளங்கிய ஓர் இனத்தார் என்பது புலப்படும். ஒரு நாட்டின் அமைதியே வளம்பல பெருகவும் கல்வியும் கலையும் செழிக்கவும் காரணமாகும். தமிழகத்தே முடிமன்னர் மூவரும், மற்றும் அவர்களின் ஆணைக் குட்பட்ட குறுமன்னரும், பெருநிலக்கிழாரும் குடிகளின் நலத்தில் கண்ணுங்கருத்துமாயிருந்தனர். அரசர்கள் பகைவராலும் பிற வற்றாலும் நேரும் அச்சங்களையும் அவலங்களையும் போக்கி, குடிகளைக் குழந்தைகளைப் போலப் பேணினர். புலவர் பெரு மக்களையும் இசை, கூத்து முதலிய கலைகளில் வல்லாரையும் ஆதரித்துப் போற்றினர். மக்களும் நன்கு உழைத்து உண்டு உடுத்து விழாக் கொண்டாடி மகிழ்ந்தனர். ஆகவே, அந்நாளில் இசை, கூத்து முதலிய இன்பக் கலைகளும் பொருள்களை அழகுற அமைக்கும் தொழில் திறமும் வாய்ந்து தமிழகம் புகழ்பெற்று விளங்கியது.

## இசையும் கூத்தும்

இசையும் கூத்தும் மக்கள் வாழ்வோடு ஒன்றி அமைந்து இருந்தன. இயற்கையின் எழுச்சிகள் அவர்களுக்கு இன்ப உணர்ச்சிகளை ஊட்டின. மழை பெய்யும் ஓசையும், அருவியின் வீழ்ச்சியும், வண்டின் ரீங்காரமும் யாழிசைக் கொப்ப இன்பம் செய்தலைக் கண்டனர் (அகம். 372:7-8; 355:4-5; பரி. 8:22-231). தும்பி, வண்டு, மிஞிறு இவற்றின் ஒலி யாழிசையோடு குழலிசை யையும் நினைப்பூட்டுகிறது (ஐங். 215:3-4). வாத்தியங்களின் இசையைப் போல் அமைந்தது புறாவின் குரல் (ஐங். 425:1-2). தூம்பு என்னும் இயம் யானையின் மூச்சு ஒலியையொத்து அமைந்தது. தட்டையின் ஒலி தவளைக் குரலை நினைவு ஊட்டியது

(குறு. 193:1-3). இனிய சொல்லை யாழிசைக்கு ஒப்பிட்டனர் (அகம். 109:1-2). குழல் இணைவது போல் அழுதனள் (புறம். 143:15; ஐங். 306:3; நற். 113:11) என்பதனால் இது உணரப்படும். இங்ஙனமாக, இயற்கைப் பொருள்களின் இன்னோசைகளையும், இயங்களின் ஓசைகளையும் ஒப்புக்கண்டு மகிழும் வகையில் இசைக்கலை வளர்ந்து பெருகியுள்ளது.

## இசைக்கலையின் ஆற்றல்

கல்மனத்தையும் கரையச் செய்து அன்பு கொள்ளச் செய்யும் ஆற்றலைப் படைத்து இருந்தது இந்த இசைக்கலை. ஆறலை கள்வரது சினத்தைத் தணித்து, அவர்களிடத்திலே உள்ள மறத்தைப் போக்கி, அவர் கொண்ட படைக்கலங்களையும் கைவிடும்படி செய்யவல்லது யாழிசை என்று கூறப்பட்டுள்ளது (பொருந. 20-22). குத்துக்கோல்காரர்களின் அடக்குமுறைகளுக்கும் கட்டுப்படாது மதங்கொள்ளும் யானைகள்கூட யாழிசைக்கு கட்டுப்பட்டு நிற்கும் என்பதும், உடன் தானே அதனைக் கொல்ல பறையை முழக்க அதன் வல்லோசையைப் பொறாது, உயிர்விட்டு விடும் என்பதும்,

*'மறையின் தன் யாழ் கேட்ட மானை அருளாது*
*அறை கொன்று, மற்று அதன் ஆர் உயிர் எஞ்ச,*
*பறை அறைந்தாங்கு ஒருவன் நீத்தான்'*

*(கலி. 143:10-12)*

*' அசுணம் கொல்லவர் கைபோல் நன்றும்*
*இன்பமும் துன்பமும் உடைத்தே*
*தண் கமழ் நறுந்தார் வீறலோன் மார்பே'*

*(நற். 304:8-10)*

எனவருவனவற்றால் தெரியவரும்.

இங்ஙனம் ஐயறிவு படைத்த கொடிய மாக்களும் வயங்கு முலியனவுமே இசைக்குக் கட்டுப்படும்போது, 'சாதாரண மனிதர்கள் அதிலும் பெண்பாலர், இசையால் உளம் நெகிழ்ந்துபோவது

இயல்பு. யாழிசையும் ஆடலும் பாடலும் மகளிரது தன்மையை நெகிழ்த்து, அவர்களுடைய கோபத்தை மாற்றி, மைந்தரோடு இணங்குமாறு செய்துவிடுகிறது (பரி. 10:56-58).

## இசைக்கருவிகள்

இசைக்கருவிகள் பல அந்நாளில் வழக்கத்திலிருந்தன. அவையாவன: யாழ், (புறம். 152:16) குழல் (அகம். 10:13) முழா, முழவு (புறம். 152:14, அகம். 155:13-15) தண்ணுமை (அகம். 106:12-13) முரசு (புறம். 17:0) பறை (மலைபடு. 321) ஆகுளி (புறம். 114:16) மலைபடு (3) பதலை (புறம். 114:17; மலைபடு:11) கிணை (புறம். 392:5; 263:1-2), தடாரி(புறம். 398:12) துடி (புறம். 287:1) மத்தரி (பரி. 12:41) எல்லரி (புறம். 114:165), மலைபடு. (10) வயிர் (முருகு. 120) கோடு (அகம். 94:10-11) தூம்பு (புறம். 114:15) (அகம். 109:9) மலைபடு (6) சங்கு (முல்லை: 92; குறுந். 15:1) முதலியன.

## ஊதுகொம்பு

இவற்றுள் வயிர் என்பது ஊதுவதற்குரிய நீண்ட குழல் போன்ற ஒரு வாத்தியம். இதனைக் கோடு தூம்பு என்றும் அழைப்பர்; இது மூங்கிலினது கண்ணைத் திறந்து அமைக்கப் படுவது. யானையினது கையைப் போன்ற உருவத்தை உடையது (மலைபடு. 5:67; அகம். 91:10-11; புறம். 152:15). இதனைப் பெருவங்கியம் என்று உரைக்கிறார் பழைய உரைகாரர் (புறம். 152:15). தினைப்புனங்காவலர் பறவை, விலங்கு முதலியவற்றை ஓட்டுவதற்கும் இதனை ஊதுவது உண்டு (அகம். 94:10-11).

குழல் ஏழு துளைகளையோ அல்லது ஐந்து துளை களையோ கொண்ட ஓர் இசைக்கருவி (பரி. 8:20). கோவலர்கள் ஆநிரையைத் திரட்டுவதற்கு இதனை ஊதுவது இயல்பாய் இருந் தது (அகம். 225:7-8). மாலைக்காலத்தில் ஆநிரைகளின் மீட்சியோடு ஆயர்தம் குழல் இசையும் ஊர்களில் கேட்கும்.

## யாழ்

யாழ், சீறியாழ் என்றும் பேரியாழ் என்றும் இருவகையின வாம் (சிறுபாண். 34-35; பெரும்பாண். 462). யாழின் உறுப்புக் களாகிய, மருப்பு, பத்தல், வாய், போர்வை, திவவு என்னும் வார்க்கட்டு, கடை, ஆணி, முதலியன பொருநராற்றுப்படையிலும் சிறுபாணாற்றுப்படையிலும் விளக்கி உரைக்கப்பட்டுள்ளன. பொன்னை வடித்து அமைத்தாற் போன்று முறுக்கிய நரம்புகளை யாழில் பிணைத்து இருப்பர். விரலினால் நரம்புகளைத் தடவியும் உருவியும், வடித்தும் தெறித்தும் ஒன்றைவிட்டு ஒன்றைத் தெறித்தும் இசையை எழுப்புவர் (நற். 335:9-10; பொருந. 23-24),

*''வாரியும் வடித்தும் உந்தியுமு உறழ்ந்தும்*
*சீருடை நன்மொழி நீரொடு சிதறி''*

*(பொருநர்: 23-24)*

என்பது யாழ் மீட்டிய தன்மையை விளக்குவதாகும். யாழை மீட்டுங்காலத்து அதனை இடப்பக்கமாகத் தழுவிக் கொண்டு வாசிப்பர் (சிறு. 34-37)

*''தெய்வப் பிரமம் செய்குவோரும்''* *(பரி. 19:40)*

என்பதற்குத் ''தெய்வத் தன்மையையுடைய பிரம வீணையை எழுப்புவோரும்'' என்று கருத்துரைப்பர்.

## தோற்கருவிகள்

தோலால் போர்த்தப்பட்டவை பறை, முரசு, தண்ணுமை என்பனவாம். முரசு மிகப்பெரிய வாத்தியம். அரச சின்னங்களில் இஃதொன்று. அரசர்க்கு வீரமுரசு, நியாய முரசு, தியாக முரசு என மூவகை முரசுகள் உள, இதனால் அரசரை ''முரசு மூன்று ஆள்பவர்'' என்று குறிப்பிடுவர் (புறம். 58:12-13; கலி. 132.4).

பறை இதற்கடுத்தபடியாகக் கூறத்தகும் தொண்டகச் சிறுபறைகள் தொண்டகம் முதலிய வேறு பெயர்களாலும்

வழங்கப்படும் என்பதும் தெரிய வருகிறது. 'ஆகுளி' என்பதைச் சிறுபறையென்றே பழைய உரைகாரர் குறிப்பிடுகின்றார் (புறம். 64:1; 52:16; மலைபடு. 3). பதலை என்பது ஒரு கண்ணை உடைய பறையாகும் (புறம். 152:17). இதனைக் 'கிணை' எனவும் அழைப்பர். இது யானையினது பாதம் போன்றது (புறம். 152:17; 392:5; 263:1-2). தடாரி என வழங்குதலும் இப்பறையேயாம் (புறம். 398:12). ''மதியத் தன்ன என் அரிக்குரல் தடாரி'' என்பதனால் நிறைமதி போன்ற வடிவமும் வண்ணமும் கொண்டதாய் இது இருக்கும் என்பது பெறப்படும்.

முரசு, பறை முதலியன எல்லாம் கோலால் அடித்து இயக்கப்படுவதாகும். முழவு என்பதும் இதனையே. இதனுடைய அடிக்கும் பகுதியில் மண் எனப்படும் மார்ச்சனை தடவப் பட்டிருக்கும் (புறம். 152:14; அகம். 155:13-15). துடி எனப்படும் சிறு பறையும் கையால் இயக்கப்பெறும் ஒரு வாத்தியமேயாகும். தட்டை என்னும் இயத்தைத் 'தட்டைப்பறை' (குறு. 193:2-3) என்பர். ''அமை அறுத்து இயற்றிய மூங்கிலைக் கணுவுக்குக் கண் உள்ளாக நறுக்கிப் பலவாகப் பிளந்து, தட்டப்படுவதோர் கருவி என்பர். ''அமை அறுத்து இயற்றிய வெவ்வாய்த் தட்டையின்''' (அகம். 388:2-5).

*'பெருவரை அடுக்கத்துக் குழீஇ ஒப்பி' (அக. 388:2-5)*
*'சிறுதினைப்படு சினி கடீஇணர், பல்மாண்*
*குளிர் கொள் தட்டை மதன் இல் புடையா'*
*(அக. 32:5-6)*

*'ஒலி கமை கெழுத் தட்டைபுடையுநர்' (மலைபடு. 328)*
*'தடையும் புதைத்தனை' (நற். 147:2-8; 205:5)*

என வருவனவற்றால் இதன் இயல்பு உணரப்படும்.

எல்லரி என்பது 'சல்லி' என்னும் வாத்தியமாம் (புறம். 152:16; மலைபடு. 10) பாண்டில் எனப்படுவது வெண்கலத்தால் தகடாக அமைத்த கஞ்ச தாளமாம் (மலைபடு. 4) இதனை மகுளி என்றும் உரைப்பர் (பரி. 12:41).

இசைக்கருவிகளுக்கு உறையிட்டுப் பாதுகாப்பது உண்டு என்பது ''நன்னராளர் கூடுகொள் இன் இயம்.'' (அகம். 189:13) என்பதனால் தெரிய வரும். பலவேறு வாத்தியங்களையும் பெரிய பையில் இட்டுக் கட்டி எடுத்துச் செல்வது வழக்கமாய் இருந்தது. வாத்தியக் கருவிகள் அடங்கிய பையைக் கலப்பை என்பர் (மலைபடு. 12:1-3). தேவருலகத்திலும் பல இயங்கள் இசைப்பது உண்டு என்னும் கருத்தும் நிலவியிருந்தது. ''அந்தரப் பல்லியம் கறங்க'' (முருகு. 119) தேவருலகத்தில் மண்ணுலகத்தில் அறஞ் செய்த ஆயை எதிர் கொண்டழைக்க இந்திரன் வாயிலில் முரசம் ஒலித்தது (புறம். 24) என்றும் வருவன இதற்குச் சான்றாகும்.

## எழுவகை இசையமைதி

இசை ஏழு வகைப்பட்ட ஓசை அமைதியை உடையது (மதுரை. 559-561) இவை ஒவ்வொன்றும் வலிவு, மெலிவு, சமம் என்னும் மூன்று தானபேதத்தால் இருபத்தொரு வகைப்படும். மூஏழ் துறையும் முறையுளிக் குழிப்ப (புறம். 152:2) இசை விருந்து அளித்தனர். குரலின் பேதத்தை அறியும் இசைவாணர், தாள விதிக்குத் தக்கபடி இசையை எழுப்புவர் (பரி. 10-24-25). இசை ஒலிகளை மாற்றி மாற்றி எழுப்புதலைப் 'பண்ணுப் பெயர்த்தல், என்பர் (மதுரை 560), துள்ளலோசையாக அமைப்பதனை 'முரற்கை' என்று குறிப்பிடுவர். (ஐங். 407:2; 402:3; மலைபடு. 390). வாத்தியக்காரர்களை 'இயவர்' என அழைத்தனர் (ஐங். 215:3; நற். 123:10-11). ஒரு தாளத்திற்குப் பாணி, தூக்கு, சீர் என மூவகை நிலைமைகள் உள என்பர் (கலி.1).

## பண்

பலவகையான ஓசை அமைதியைப் 'பண்' என்பர். காலத் திற்கும், பாடும் பொருளுக்கும் ஏற்ப பண்கள் மாறுபடும். காலைப்பண் மருதம் என்றும் (புறம். 149:2-4), மதுரை. 658) மாலைப்பண் செவ்வழி என்றும் (புறம். 149:2-4; கலி. 143:38-41; மதுரை. 604) கூறப்பட்டுள்ளது. விளரி என்பது இரங்கற் பண்ணாம் (புறம். 220:1-2), குறிஞ்சிப் பண் (அகம். 102: 5-6) நிலப்பெயர்

அடிப்படையிலும் பண்கள் இருந்தமை புலனாம். காமரம் சீகாமரம் (சிறுபாண்-27) நைவளம் (சிறுபாண் 36-37) என்னும் பண் வகைகளும்இலக்கிய ஆட்சி பெற்றுள்ளன.

## மிடற்றுப் பாடலும் ஆடலும்

தாளத்திற்கும் இசைக்கும் ஏற்ப மிடற்றால் பாடலும் இவற்றிற்கேற்ப ஆடலும் உண்டு. ''பருக் கோட்டு யாழ் பக்கம் பாடலொடு ஆடல்'' (பரி. 10:56) என்பது இயங்களால் எழுப்பப் படும் இசையும் பாடலும் ஒத்து அமைவதைப் புலப்படுத்தும். தாளத்தின் தன்மையை முன்கையால் ஒற்றி அறிவதும் உண்டு.

*''ஒத்த குழலின் ஒலி எழ; முழவு இமிழ்*
*மத்தரி, தடாரி, தண்ணுமை, மகுளி,*
*ஒத்து அளந்து; சீர்தூக்கி; ஒருவர்பிறப்பட்டார்*
*நித்தம் திகழும் நேர் இறை முன்கையால்*
*அத்தக அரிவையர் அளத்தல் காண்மின்''.*

*(பரி. 12:40-44)*

*''பரிநரம்பு இன் கொளைப் புகல் பாலை எழும்*
*எழூஉப் புணர் யாழும், இசையும், கூட;*
*குழல் அளந்து நிற்ப; முழவு எழுந்து ஆர்ப்ப;*
*மன் மகளிர் சென்னியர் ஆடல் தொடங்க''*

எனவரும் பாடற்பகுதிகள் மேற்கூறிய செய்தியின் உண்மையைப் புலப்படுத்துகின்றன.

## இசை நூல்

இசை அமைதிகளை வரையறுத்து உணர்த்திய கலை நூலும் வழக்கத்தில் இருந்தது.

*''நல் இசை நிறுத்த நயம் வரு பனுவல்*
*தொல் இசை நிறீஇய உரைசால் பாண்மகன்*
*எண்ணுமுறை நிறுத்த பண்ணினுள்ளும்''*

*(அகம். 352:13-15)*

என்னும் அடிகளில் பாண்மகன் இசைநூலைக் கற்று பண்ணை இயக்கிய தன்மையை அறியலாம்.

## ஆடற்கலை

ஆடற்கலையில் ஆடவரும் பெண்டிரும் ஈடுபட்டனர் (குறுந். 31:4). எனினும், பெண்பாலர் ஆடுதலே பெரும்பான்மை (பரி. 7:17; கலி. 71:4, புறம். 128:6). கூத்தாடுவதற்குரிய இடம் அரங்கு என்றும் (பரி. 16-13) 'ஆடுகளம்' என்றும் (குறு. 31:4) கூறப்படும், இந்த ஆடுகளத்தில் வந்து கூத்தாடுவோரை நாடக மகளிர் என்றும் விறலியர் என்றும் அழைப்பர் (பெரும். 55; அகம். 82:10). இவர் ஆடும் கூத்தை மக்கள் திரளாகக் கூடிப்பார்த்தல் உண்டு. இரவின் முற்பகுதியில் இக்கூத்து நடைபெறுவது வழக்கம் (பதி. 52:13-16).

## மகளிர் ஆடல்

மகளிர் களத்தில் புகுந்து ஆடும்பொழுது நிகழும் கலை களைக் கபிலர் இயற்கையுடன் இயைத்து, உருவகமாக, அகப் பாடல் (82) ஒன்றில் குறிப்பிட்டுள்ளார். மூங்கில் வளர்ந்துள்ள பக்கமலையில் மயில் உலாவி நடனமிடுகின்றது. இது விறலியரை ஒத்துக் காண்கின்றது என்கிறார். ஆடுகளத்தில் விறலியின் ஆட்டத் திற்கேற்ப இயக்கப்படும் இசையொலிகள் இங்கே இயற்கையாக எழுகின்றன்வாம். மூங்கிலில் வண்டுகளால் துளைக்கப்பட்ட துளைகளில் கோடைக் காற்றுச் சென்று வெளியே வரும்போது எழும் ஒலி குழல் இசை போன்று கேட்டதாம். ஒலித்து வரும் அருவி, முழவின் இசையாக அமைந்தது. கலைமான்கள் கூடி ஒலிக்கும் குரல் தூடம் பொன்னும் பெருவங்கியத்தின் இசை போன்று இருந்தது. பூக்களில் தேன் உண்ணும் வண்டின் ஒலி யாழிசையாக அமைந்தது. இந்த மயிலின் ஆட்டத்தை மந்திக் கூட்டங்கள் வியப்புற்று நோக்கினவாம். இவ்வுருவ வருணனை ஆடுகள மகளிரின் கூத்து நிகழ்ச்சிகளை நம் கண்முன் நிறுத்து கின்றன.

## கூத்து வகை

கூத்தில் வள்ளிக் கூத்து (பெரும். 370-371) (தொல். பொருள். புறம். 5) பேடிக்கூத்து (அகம். 206:2-3) கழைக்கூத்து (நற். 85:1-2; குறு. 7:3-5) குடக்கூத்து (பரி. 3:83) முதலிய கூத்து வகைகளும் தெரிய வருகின்றன.

## பாடல் வகை

கூத்தில் பாடுதலேயன்றி, மகளிர் தங்கள் தானியங்களைக் குத்தும்போது பாடும் வள்ளைப் பாட்டும் (அகம். 256:1-5; கலி. 42:6-9) ஊஞ்சல் ஆடும்போது பாடும் ஊசல் பாட்டும் (கலி. 131: 25-30) இதுபோல் வாழ்க்கை நிகழ்ச்சிகளில் அவ்வப்போது பாடப்பெறும் பல பாடல்களும் அக்கால வழக்கில் இருந்தன. குரவைக் கூத்தில் பாடுகின்ற பாடலைக் கண்டு நிலைச் செய்யுள்' என்பர் (கலி. 39:26-29). புலவர் முதலியோர் புரவலர் முதலாயி னாரைப் புகழ்ந்து பாடும் பாடல்களும், பாணர் முதலியோர் பாடல்களும் ஆக மக்களின் வாழ்க்கையில் பல்வேறு நிலையில் பாடல் வகைகள் பரவியிருந்தன.

## இருபாலரும் இணைந்த கூத்து

துணங்கை, குரவைக் கூத்துக்களில் ஆடவரும் மகளிரும் கைபிணைந்து ஆடியதாகத் தெரியவருகிறது. இக்கூத்தில் மக ளிர்க்கு ஆடவர் முதற் கை கொடுத்து ஆடினர். இவ்வகைக் கூத்து நிகழ்ச்சி நானில மக்களிடத்திலும் பரவியிருந்ததாகத் தெரிய வருகிறது. குறவர் (மலைபடு. 320-322; முருகு. 194-197) ஆய்ச்சியர் (கலி. 106:31-33) பரதவர் (மதுரை. 96-97) (புறம். 24:4:9) வயல் மகளிர் (பதிற். 73:8-11) என வெவ்வேறு பகுதிகளில் வாழ் மக்களும் ஆடிய குரவை நிகழ்ச்சிகளைச் சங்கப் பாடல்களில் காண்கிறோம்.

## அழகுணர்ச்சி

தாங்கள் வாழும் இடங்களையும் புழங்கும் பொருள் களையும் அழகுபடுத்திப் பார்ப்பதிலும் மக்களின் கருத்து

சென்றது. மகளிர் தமது மார்பில் தொய்யில் எழுதுதல், மலர் சூடுதல், அழகிய வண்ண ஆடைகளைப் புனைதல் என்பன எல்லாம் அவர்தம் அழகு உணர்ச்சியை வெளிப்படுத்துவனவாம்.

## சித்திரகாரர்

வீட்டிலும் மன்றங்களிலும் உள்ள சுவர்களில் உருவங்களை எழுதும் பழக்கமும் மிகுதியாக இருந்தது. எவ்வகைப் பொருளையும் தங்கள் துகிலிகையின் திறத்தால் படைக்கும் ஆற்றல் படைத்த சித்திரகாரர்களும் வாழ்ந்தனர் (மதுரை. 516-518) வண்ணம் தீட்டப்படாத வரைபடத்தை 'புனையா ஓவியம்' என்றனர் (நெடுநல். 147).

## ஆடை முதலியவற்றில் வேலைப்பாடு

மக்கள் தங்கள் ஆடைகளை மிக நேர்த்தியாகவும், மெல்லியதாகவும் செய்தலோடு அவற்றில் பூத்தொழில் முகலியன அமைத்தும் அழகு செய்தனர். ''திருமலர் அன்ன புதுமடி'' (புறம். 380:15) பாம்பு உரித்தன்ன வான்பூங் கலிங்கம் (புறம். 397:15) புகை விரிந்தண் பொங்கு துகில் (புறம். 398:20) என வருவன ஆடைகளிற் மக்கள் கொண்டுள்ள அழகு உணர்ச்சியைக் காட்டும்.

குடம் போன்று கடைந்த இலைத்தொழிலையுடைய திரண்ட கால்களைக் கொண்ட கட்டில்கள் செய்யப்பட்டன. அவற்றின் மேல் அன்னத் தூவியும் மலர் முதலிய பொருள்களும் பரப்பி, மேலே வெளுத்த நல்ல துகிலை விரித்திருந்தனர் (நெடுநல். 125-135). இவ்வகைப் படுக்கை ''நுரைமுகந்தன்ன மென் பூஞ் சேக்கை'', ''எண்ணெய் நுரை முகந்தன்ன மெண் பூஞ்சேக்கை'' (அகம். 93:13; புற. 50:14-15) என வருணிக்கப்பட்டுள்ளது.

## கலை நூல்கள்

இதுபோன்றே மக்கள் வாழ்க்கைக்கு இன்றியமையாத ஏனைய பொருள்களையும் அழகுறச் செய்து கலையுணர்ச்சியை

ஒவ்வொரு துறையிலும் காட்டினர். அவ்வத்துறைகளை விளக்கும் நூல்களும் அக்காலத்து உளவாய் இருந்தன. பீமசேனன் செய்த பாகமுறைகளை விளக்கும் சமையற்கலை நூலைச் சிறுபாணாற்றுப்படை சுட்டுகிறது (239-241).

மனை வகுப்பதற்கு உரிய நூலும் அதை அறிந்த பொறியியல் வல்லுநர்களும் வாழ்ந்தனர். அவ்வவர் தகுதிக்கேற்ற வண்ணம் பல்வேறு வகையில் மனைகளை அமைக்கும் பாங்கினை அறிந்திருந்தனர் (நெடுநல். 76-78). சித்திர வேலைப்பாடுகளுடன் அமைந்த இல்லமே ஓர் அழகிய சித்திரம்போல் கவர்ச்சிகரமாய் விளங்கியது. 'ஓவத்தன்ன வினைபுனை நல்இல்' (அக. 98:11) எனப் புலவர் ஒருவர் ஓர் இல்லத்தைக் குறிப்பிடுகின்றார்.

களவுத்தொழில் புரிவார்களுக்கும் அவரைக் கண்டுபிடிப்பதற்கும் தக்க வழிமுறைகளைக் காட்டும் நூலும் இருந்ததாம். இதனைக் 'கரவட நூல்' என்பர் (மதுரை. 645-647).

அரசியல் நெறிமுறைகளை மன்னர்க்கும் மற்றைய பணியாளர்களுக்கும் வகுத்துரைத்த நூலும் இருந்தது. தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் தான் வென்ற பகைவர்களுக்கு அரசு இலக்கணத்தை நூல் முறைப்படி காட்டி பெரியோர் சென்ற நெறியில் நடக்குமாறு அறிவுறுத்தினானாம் (மதுரை. 191-192).

பொதுவான தருமங்களை விளக்கும் அறநூலும் வழங்கி வந்தது (புறம். 34:7). அறநூல் விதித்தவற்றையும் விலக்கியவற்றையும் எடுத்துக் காட்டி மக்கள் அறிவுரை கூறினர்.

யானை, குதிரை முதலிய விலங்குகளின் இயல்புகளையும், அவற்றால் ஏற்படும் நன்மை தீமைகளையும் அறிந்து கூறிய விலங்கு நூலும் இருந்தது. குதிரையின் இலக்கணத்தைக் கூறும் போது அகப்பாட்டில் ஒரு புலவர் குதிரைநூலை எடுத்துக் காட்டியுள்ளார் (அகம். 400:5:16), காட்டிலுள்ள யானைகளைப் பிடிப்பதற்கும், அவற்றைப் பழக்குவதற்கும் மதங்கொண்ட

நிலையில் அவற்றை அடக்குவதற்கும் ஆன் வழிவகைகளை நூல் முறையால் தெரிந்து யானைப்பாகர் யானையைப் பழக்கினார்.

## புலவர்களின் இயற்கை வழிபாடு

இயற்கைப் பொருள்களின் இயல்புகளை நுனித்து ஆராய்ந்து உரைக்கும் தன்மை புலவர்களிடம் காணப்பட்டது. பழுத்த மரத்தை நாடிச் செல்லும் பறவை புரவலரை நாடிச் செல்லும் இரவலனை உணர்த்திற்று (பொருந. 64; பெரும். 20; மதுரை. 576). முதலை தன்னுடைய இளம் பார்ப்பையே தின்னும் இயல்பினதாம் (ஐங். 41:1; 24:2) நண்டினுடைய குஞ்சின் பிறப்பு தாய்க்கு மரணத்தைக் கொடுக்கிறது (ஐங். 24:1) யானையின் இளம் பார்ப்பு தாய் முகத்தைப் பார்த்து வளரும் இயல்புடையது (ஐங். 44: 1-2) புற்றில் ஊரும் ஈயல் புழுங்கல் ஒரு பக்ற்பொழுதில் தானே மாய்ந்துவிடும் (புறம். 51:8-11) இயல்பினதாம். கறையான் மிக முயன்று தனது புற்றைப் பெரிதாக வளர்த்துச்செல்லுகிறது (அகம். 142:1-2). இருப்பைப்பூவை கரடி தின்னும் (அகம். 149:3-4).

மழை வருதலை எதிர்நோக்கி எறும்பு தன் முட்டைகளைக கொண்டு மேட்டு நிலத்தை அடையும் (புறம். 173:5-8.) வானத்தி லிருந்து விழும் மழைத்துளிக்காக மழைப்புள் வான்த்தில் உழன்று திரியும் (பட்டின. 3-4; கலி. 146:52-53; 46:20; புற. 198:25). இதனை 'வானம்பாடி' என்று புறநானூற்று உரைகாரர் கூறுகிறார்.

அன்றில் பறவையும், மகன்றில் பறவையும், ஆணும் பெண்ணும் இணை பிரியாது வாழும் இயல்பினவாகும் (குறு. 57:1-2; அகம். 50:11-12; 260:6-7).

கூகை இரவில் இரை தேடும் பறவை. இது வீட்டு எலிகளை உணவாகக் கொள்ளும் (அக. 122:13-14).

'சிரல்' எனப்படும் மீன் கொத்தி குளத்தின் நீரின் மேலாகப் பறந்து சுழன்று சுழன்று திரிந்துகொண்டே நீர்மேல் எழும் மீனைக் கொத்திச் செல்லும் (பதி. 42:2-3).

கொக்கு மாரிக்காலத்தில் சிறகுகளை ஒடுக்கிக்கொண்டு அமர்ந்து இருக்கும். இக்காட்சி ஆம்பல் பூவின் முகையைப் போன்று தோற்றமளிக்கும் (நற். 250:1-2).

மீன்கள் எப்பொழுதும் சுழன்று நீரில் திரிந்துகொண்டு இருந்தாலும் இராப் பொழுதில் ஒரு சமயம் அவைகள் கண் உறங்குமாம் (நற். 319:10-11).

இறா வெண்ணிறமுடைய சிறியமீன், ஆயினும், இவை பலகூடி மரக்கலம் சிதையும்படி தாக்குமாம் (அகம். 152: 6-8).

புலி எவ்வளவு பசியிருந்த போதிலும் தான் கொன்ற மிருகம் இடப்பக்கத்தே விழுமாயின், அதைத் தின்னாது அப்பாற் செல்லும் இயல்பினது (அகம். 29:1-4), வலி மிக்க களிற்று யானை புலியையும் கொல்லும் (அகம். 148:1-6). புலி முழக்கம் கேட்ட யானை கோபத்துடன் எழுந்து தன் எதிரே புலியகப்படாத பொழுது நிற ஒப்புமையால் எதிர்ப்பட்ட வேங்கை மரத்தைப் பிளந்து தலையில் சூடிக்கொண்டு பிளிறுமாம் (பதி. 41: 7-13). யானைக் கூட்டத்திற்குள் வலிமிக்க யானை தலைமை தாங்கி ஏனையவற்றை நடத்திக்கொண்டு செல்லும் (குறு. 180: 1-2) (255:1-4).

பன்றியின் கொம்பு வயிரம் போன்று வலிமைபெற்றது. அதன் மயிர் மூங்கிலின் வேரைப் போன்று தோற்றமளிக்கும். தினைக் கதிரையும் சேப்பங்கிழங்கையும் தின்று சுனை நீரைக் குடிக்கும் (அகம். 178:1-14). நாயின் வால் வலப்பக்கமாகச் சுழிந்து இருக்கும். இரவில் வேற்று மனிதரைக் கண்டால் அது குரைக்கும் (அக. 122:7-8).

பாம்பு இரவில் இரையைத் தேடும் இயல்பினது (அகம். 258:10-11). அது தன் தலையில் உள்ள மணியை உமிழ்ந்து வைத்து அந்த ஒளியில் இரை தேடும். அதனை இழப்பின் அது மிகவும் வருந்தும் (அகம். 272:13-14).

மான், மரையா முதலியன நீர் குடிக்கும்போது, நீரின் மேலே மிதக்கும் பூ முதலியவற்றைத் தனது மூச்சுக் காற்றால் விலக்கிக் கொண்டு நீரை உண்ணும் (அகம். 184:9-11; குறு. 317:1-4).

மரஞ் செடி கொடிகளின் இயல்புகளையும் மிக நுட்பமாகக் கண்டு புலவர்கள் கூறிய நிகழ்ச்சிகளும் பலவே. மரத்திலிருந்து இயற்கையின் மோதலால் தீப்பிறந்து காடுகள் அழிவதையும் கண்டனர். தன் குடிக்குத் தானே தீங்கிழைத்தலுக்கு இந்நிகழ்ச்சியை ஒரு புலவர் ஒப்புக் கூறுகிறார் (புறம். 149:6-7). நெல்லிக் காயைத் தின்று நீர் குடிப்பது மிகச் சுவையாக அமைந்து இருந்தது (அகம். 54:15-16; குறு. 262:4-8; நற். 271:3-8).

சிறிய இலைகளையுடைய நெருஞ்சியின் பூ சூரியனுடைய கதிரை நோக்கித் திரும்பும் இயல்பையுடையது. பாழ் ஊர்களிலே இது மிகுதியாகப் படர்ந்து கிடக்கும். இது பசலையின் நிறம் போன்று அமைந்த பூக்களைக் கொண்டது. (அகம். 336:17-19; புறம். 115:4-5). மானைக்கொடி மலைப்பக்கத்தில் வளர்ந்து பாறை களிலும் கற்களிலும் படர்ந்து கிடக்கும் (குறு. 36:1-2). சிறிய விழுதுடைய இற்றியும் இதனைப் போலவே பாறைகளில் படர்ந்து விளங்கும் கொடி வகையாகும். இது வெண்மையான வேர்களை யுடையது. தூரத்திலிருந்து காண்பார்க்கு அருவிபோல் காட்சி யளிக்கும் (குறு. 106:1-2) வள்ளைக் கொடி, ஆம்பல் முதலியன நீரில் உண்டாகும் கொடி வகைகளாகும் (அகம். 376:13-14). பரப்பங் கொடி ஒன்றுடன் ஒன்று பின்னிக்கொண்டு படரும். இதனுடைய பழத்தின் புறத்தில் வரிகள் காணப்படும் (குறு. 91:1-2; 361:1; அகம். 6:19).

ஒவ்வொரு பருவங்களில் மலரும் பூவகை முதலிய வற்றையும் புலவர்கள் கூர்ந்து நோக்கினர். இருப்பை, பாதிரி, முதலியன வேனிற் காலத்தில் மலர்வதாம் (குறு. 329:1; 147:11) மாரிக் காலத்தில் மலர்வன கொன்றை (குறு. 21:3) பத்திகம் (குறு. 94:1) பீர்க்கு (குறு 98:5) காயா (குறு. 183:5) முதலியனவாம். கூதிர்க் காலத்தில் அவரை பூக்கும் (குறு. 92:5). இளவேனிற்காலத்தில் வேம்பு (குறு. 24 1; 281:3) கோங்கு (குறுந். 254:2) முதலியன மலரும்.

பூக்களின் நிறங்கள் உருவங்கள் முதலியவற்றையும் சுட்டிக் கூறிய இடங்கள் பல. இருப்பைப் பூ வெண்ணிறக் கொம்பினால் செய்த கழங்கு போன்ற உருவினதாய் வெண்ணிறப் பூவை உடையது (அகம். 135:8-9). இலவம்பூ செந்நிறமுடையது; நாக்கைப் போன்ற உருவம் உடையது (அகம். 142:1-2). புன்கம் பூ தானியப் பொரியைப் போன்று காணப்படும் (அகம். 116:5-6). ஆவிரம்பூ பொன்னிறத்தது (குறு. 173:1). நீர் முள்ளி நீல நிற முடையது (அகம். 236:1) குறிஞ்சிப் பாட்டில் குறிக்கப்பெற்றுள்ள 99 மலர்களில் சில மலர்களின் தன்மைகளும் கவிஞரால் சுட்டப் பெற்றிருக்கின்றன (61-98). செங்காந்தள் என்னும் கொடற்பூ பெரிய இதழ்களையும் சிவந்த நிறத்தையும் கொண்டது (61-62) உந்தூழ் என்னும் பெருமூங்கிற்பூ கொத்தாக மலர்ந்து மணம் பரப்புவது (65), எறுழம்பூ நெருப்பை யொத்து விளங்குவது (66). குடசம் என்னும் வெட்பாலைப் பூ வெண்ணிறமானது (67). செருவிளை என்னும் வெண்காக்கணம்பூ வெண்ணிறமும், கருவிளம்பூ நீலமணி போன்ற நிறத்தையும் கொண்டவை (68). குரவம்பூ பல இதழ்களையும், காயாம்பூ பல பூங்கொத்துக்களையும் கொண்ட தாய் இருக்கும் (69-71). நெய்தல்பூ நீண்ட வடிவாய் இருக்கும் (79). நெய்தல் என்னும் கருங்குவளைப்பூ நீலமணி போன்ற நிறத்ததாய் கொத்துச் கொத்தாய் இருக்கும் (84). கொன்றைப்பூ மாலை போன்று தொங்கி விளங்கும் (86). தோன்றிப்பூ விளக்கைப் போன்று காட்சியளிப்பது. (90).

இவ்வகையாக இயற்கைப் பொருள்களின் வண்ணங் களையும் வடிவங்களையும் தன்மைகளையும் பயன்களையும் பலவாறாகப் பண்டைப் புலவர்கள் தெரிவித்துச் செல்லும் பகுதிகள் எல்லாம் இயற்கைப் பொருள்களிடத்தில் அவர் களுக்குள்ள ஈடுபாட்டையும் பேரறிவினையும் விளக்கும்.

## மருந்தாம் மரம், செடி கொடி

மரஞ்செடி கொடி முதலியன மக்களுக்கு உணவளித்து உதவியதோடு மருந்தாகவும் பயன்பட்டன. மருந்துப் பொருள் களை எடுக்கும்போது செடிகளுக்கு ஊறு நேராவண்ணம் எடுத்து,

மேலும் பலர்க்குப் பயன்பட அவற்றை அழிக்காது விட்டு வைப்பர்.

> 'மரம் சா மருந்தும் கொள்ளார்' (நற். 226:1)

என்பதனால் இது புலப்படும்.

## மருத்துவக் கலைஞர்

பிணியுற்றோரது தன்மையையும் பிணியின் இயல்புகளையும் நன்கு ஆராய்ந்து உரிய மருந்துகளைத் தெரிந்து கொடுத்தனர்.

> ''அரும் பிணி உறுநாக்கு, வேட்டது கொடாஅது
> மருந்து ஆய்ந்து கொடுத்த அறவோன் போல''
> (நற். 136:2-3)

என வருவது மருத்துவக் கலைஞரின் இயல்பினை நன்கு புலப்படுத்துகிறது. உடம்பில் பட்ட புண்களை ஊசி கொண்டு தைத்துக் குணப்படுத்தும் முறையும் இருந்தது. ஒரு வீரனது மார்பின் புண்ணை ஆற்றுவதற்குத் தைத்த தழும்பைப் பதிற்றுப்பத்துப் பாடல் ஒன்று குறிப்பிடுகிறது. இரத்தத்தின் உள்ளாக ஊசியை நுழைத்து வாங்குதலை மீன்கொத்தி நீரில் மூழ்கி எழுதலுக்கு ஒப்புக் கூறுகிறார் அக்கவிஞர்.

> ''இரும்பனம் புடையல், ஈகை வான்கழல்
> மீன் தேர் கொட்பின் பனிக்கயம் மூழ்கிச்
> சிரல் பெயர்ந்தன்ன நெடுவள் ஊசி
> நெடுவசி பரந்த வடுவாழ் மார்பின்''
> (பதிற். 42:1-4)

என்பது கவிஞர் வாக்கு. இதனால் அறுவை வைத்திய முறையும் அக்காலத்திலே நடைமுறையில் இருந்தது என்று தெரியவரும்.

## ஐம்பூதங்கள் பற்றிய அறிவு

மக்கள் தாங்கள் வாழும் நாட்டளவில் நில்லாது உலகத்தைப் பற்றிய செய்திகளையும் அறிந்து இருந்தனர். மிகப் பெரிய அளவினதாய் விரிந்து பரந்த ஓர் பெரும் பரப்பாகவும் கடல் சூழ்ந்ததாகவும் அவர்தம் காட்சிக்கு உலகம் விளங்கிற்று. அதில் விளங்கிய பல பெரிய மலைகளும் அவர்தம் அறிவுக்கு எட்டியிருந்தன. (புறம். 18:1-2; 213:3; 382:17).

*''ஓங்கு திரை வியன் பரப்பின்*
*ஒலி முந்நீர் வரம்பு ஆக*
*தேன் தூங்கும் உயர்சிமைய*
*மலை நாறிய வியல் ஞாலத்து''*

*(மதுரை. 1:4)*

மலைகளோடு விளங்கும் இப்பெரிய உலகம் அளந்து காண்பதற்கு மிக அருமையானது. நிலம் மட்டுமன்று, நீர், தீ, வளி, விசும்பு ஏனையவும் இங்ஙனமே அளக்க இயலாதனவாம்.

*''நீர், நிலம் தீ வளி விசும்பொடு ஐந்தும்*
*அளந்து கடை அறியினும், அளப்பு அரும் குறியை''*
*(பதிற். 24:15-16)*

என்பதினால், ஐம்பூதங்களும் அளந்து காண்பதற்கு மக்களால் இயன்றது என்னும் கருத்துப் புலப்படும். நிலம் பல அணுக்களால் செறிந்தது என்றும் ஆகாயம் அந்நிலத்தில் உயர்ந்து பரந்து விளங்குவது என்றும், காற்று அவ்வாகாயத்தைத் தடவிக்கொண்டு வரும் என்றும், காற்றினின்றும் தீ பிறக்கும் என்றும் தீயொடு மாறுபட்டு நீர்விளங்கும் என்றும் முரஞ்சியூர் முடிநாகராயர் ஐம்பூதங்களின் இயல்பை விளக்குகிறார்.

*'மண் திணிந்த நிலனும்*
*நிலன் ஏந்திய விசும்பும்*
*விசும்பு தைவரு வளியும்*

*வளித் தலைஇய தீயும்*
*தீ முரணிய நீரும் என்றாங்கு*
*ஐம்பெரும் பூதத்து இயற்கை போல'*

*(புறம். 2:1-6)*

## குமரி முதல் இமயம் வரை அறிந்தமை

தென்குமரியிலிருந்து வடபெருமலையாகி இமயம் வரையிலும் கிழக்கும் மேற்கும் அமைந்த கடல் எல்லை வரையிலும் உள்ள குன்று, மலை, காடு, நாடுகளைப் பற்றித் தமிழ் மக்கள் நன்கு அறிந்து இருந்தனர். கங்கையையும் இமயத்தையும் தாண்டி அதற்கப்பால் உள்ள நிலப்பரப்பிற்கும் மக்கள் சென்றுவந்து, ஆண்டுள்ள செய்திகளைத் தமிழகத்தில் பரப்பினர். இமய மலையில் விளங்குகின்ற இடை கழியாக அமைந்த (கணவாய் (அ) அறைவாய் வழியைத் தாண்டி மக்கள் செல்ல நேர்ந்தது. இந்த இடைகழி மோரியர் தங்கள் தேர் செல்லும் பொருட்டாக மலையைக் குறைத்துச் செய்யப்பட்டது என்று குறிக்கப் பட்டுள்ளது. (அகம். 69:6-13; 251:12-20). ஆயர் மகளிர் ஆடும் குரவையில் மன்னனது ஆட்சி இமயத்திற்கப்பாலும் சிறந் தோங்க வேண்டும் என்று வாழ்த்தியதாக ஒரு குறிப்பு உள்ளது (கலி. 105:71-75).

*'வடாஅது பனி படு நெடுவரை வடக்கும்,*
*தெனாஅது உருகெழு குமரியின் தெற்கும்,*
*குணாஅது இரைபொரு தொடு கடற்குணக்கும்,*
*அடாஅது தொன்றுமுதிர் பௌவத்தின் குடக்கும்'*

*(புறம். 6:1-4)*

என்று புறப்பாட்டினால் நம் பரத கண்டத்திற்கப்பாலுள்ள நான்கு திசைகளிலிருந்து உலகப் பகுதிகளைப் பற்றிய அறிவு இவர்களுக்கு இருந்தது என்பது புலனாகும்.

## வானியல் கலை

நிலப் பகுதிகளை ஆய்ந்து உணர்ந்ததைப் போலவே வானியலையும் அதில் விளங்கும் சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள் முதலியவற்றின் செலவினை ஆய்ந்து கண்ட கலைஞர்கள் விளங்கினர். அவற்றை உணர்த்திய அறிவியல் நூல்களும் அக்காலத்து இருந்தன. சூரியனது வீதியையும், அதன் இயக்கத்தையும், அவ்வியக்கத்தால் சூழப்பட்டுள்ள பூமி வட்டத்தையும், காற்று இயங்குகின்ற திக்குகளையும், ஒரு ஆதாரமும் இன்றித் தானே நிற்கிற ஆகாயத்தையும் நன்கு ஆராய்ந்தனர். இவற்றையெல்லாம் அந்தந்தப் பகுதிகளுக்கு நேரில் போய் அளந்து அறிந்தவர்களைப் போலக் கணக்கிட்டுக் கூறினர். கோள் முதலியவற்றின் இயக்கம் இத்துணை நாழிகைக்கு இவ்வளவு செல்லும் என்னும் வேகத்தின் அளவையையும் கணித்தனர். இத்தகு திறமை வாய்ந்த வானநூல் புலவரின் இயல்பினை,

*''செஞ் ஞாயிற்றுச் செலவும்*
*அஞ்ஞாயிற்றுப் பரிப்பும்*
*பரிப்புச் சூழ்ந்த மண்டலமும்*
*வளி திரிதரு திசையும்*
*வறிந்து நிலைஇய காலமும், என்று இவை*
*சென்று அளந்து அறிந்தோர் போல, என்றும்*
*இனைத்து என்போரும் உளரே''*

*(புறம். 30:1-7)*

என்னும் புறப்பாடல் பகுதியால் அறியலாம்.

## நாள் கோள்களின் இயக்கம்

நாள் கோள்கள் தத்தம் நிலையில் சிறிதும் தவறாது இயங்கி வருவதனால் உலகம் ஒரு நிலையில் நிலைபெற்று வாழ்கிறதாம். ஏதேனும் ஒன்றின் நிலை தவறுமாயின், அதனால் உலகத்திற்குத் தீங்கு விளையும் என நம்பினர். மழை பெய்வதற்குரிய கோள்நிலை நன்கு உணரப்பட்டிருந்தது. முதுவேனிற் காலத்திற்குப் பின் வரும் கார் காலத்து மழை நிலைமைக்கு ஏதுவான கிரக சேர்க்கைகளைப்

பதினொன்றாம் பரிபாடல் குறிப்பிடுகிறது. 'வெள்ளி' என்னும் சுக்கிரன் வடப்பக்கத்தே தாழ்ந்தால் மழை பெய்யும் என்றும் தெற்கே சாய்ந்தால் மழை பெய்யாது என்றும் சொல்லப் பட்டிருக்கிறது (பதி. 24:25; புறம். 35; 6-8; 117:1-3). விசும்பு வீழ் கொள்ளியாகிய எரிநட்சத்திரம் விழுந்தால் பசும்பயிர்கள் அழிந்து விடும் என்று தெரியவருகிறது (குறு. 189:2-4). மேலும், இந்த எரி கொள்ளி பின் நிகழப்போகும் தீமையை அறிவிக்கும் உற்பாத மாகவும் கருதப்பட்டது (புறம். 229).

மக்கள் நாள் கோள்களின் நலன் தீங்குகளை ஆய்ந்து அதற்கேற்ப வினை புரிந்தனர். களவொழுக்கத்தில் ஈடுபட்டார், நாள்கோள்களைக் கவனிப்பதில்லை.

''மறைந்த ஒழுக்கத்து, ஓரையும் நாளும்
துறந்த ஒழுக்கம், கிழவோற்கு இல்லை'
(தொல். பொருள். களவு. 45)

என்று தொல்காப்பியர் இக்கருத்தை வெளியிட்டுள்ளார். திருமணத் திற்குத் தீய கோள்கள் இல்லாத நல்ல காலம் அறிந்து அக்காலங் களில் செய்தனர் (அகம். 86:6-7). இதனால் காலத்தைப் பற்றிய ஆய்வு அக்காலத்தில் சிறந்து இருந்தது என்பது தெரியவரும்.

## அளவைகள்

நாழிகை வட்டிலால் காலம் உணர்த்துவதற்கென நாழிகைக் கணக்கரும் அரசாங்கத்தில் நியமனம் பெற்றிருந்தனர். காலக் கணிதம் போன்றே எண் கணிதமும், நிறுத்தல், அளத்தல் முதலிய வற்றிற்குரிய பல அளவைகளும் அந்நாளில் வழக்கத்திலிருந்தன.

## எண்கள்

எண்ணும் எழுத்தும் கற்றவர் நாட்டில் நிரம்பி இருந்தனர். ஒன்று (பெரும். 175) பத்து (கலி. 136:6) நூறு (புறம். 184:3) ஆயிரம் (பொருந. 247) நூறாயிரம் (தொல். எழு. உயிர். 65) கோடி (புறம்.

184:6) என்னும் எண்ணுப் பெயர்களும், தாமரை, வெள்ளம், ஆம்பல், ஊழி என்னும் பேரெண்களும் (தொல். எழுத்து, புள்ளி. 98; பதிற்று. 63:18-20) அக்காலத்தில் இருந்த கணக்கு அறிவினைப் புலப்படுத்தும். நாழி, கலம், மா, செறு, துலாம், குழஞ்சு முதலிய அளவைப் பெயர்களும் வழக்கத்தில் இருந்தன. ஆசிரியர் தொல் காப்பியர் எண்ணுப் பெயர்கட்கும் (தொல். எழுத்து. குற்றியலுகம் 28-7) அளவு நிறைப்பெயர்கட்கும் (தொல். எழுத். குற்றியலுகரம் 71; தொகை.மரபு 22-28) புணர்ச்சி விதி கூறியுள்ளார்.

## முத்தமிழ் போற்றல்

முத்தமிழையும் போற்றினர் என்பது 'தெரிமாண் தமிழ் மும்மைத் தென்னம் பொருப்பன்' (பரி.4:1) என்பதனால் போதரும். தொல்காப்பியர் கூறும் பொருளிலக்கணம் முற்றும் இலக்கிய மரபு பற்றியனவே. அக்கால வழக்கம் செய்யுளும் இருந்த நிலையை அவர்தம் நூல் நமக்கு உணர்த்துகிறது.

*''புலவர் அமைக்கும் இலக்கியத்தை*
*நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்*
*பாடல் சான்ற புலனெறி வழக்கம்''*
*(தொல்.பொருள். அகத்திணை. 56)*

என்பர். இலக்கியப் பொருளின் இயல்பை உணர்ந்தாரே உலகியல் மரபினை நன்கு அறிதல் கூடும் என்று கருதினர்.

*''தள்ளாப் பொருள் இயல்பின் தண்தமிழ் ஆய்வந்திலார்*
*கொள்ளார் இக்குன்று பயன்'' (பரி.9: 25-26)*

என்னும் பரிபாடல் அடிகள் மேற்கூறிய கருத்தினை உறுதிப் படுத்துகிறது.

தொல்காப்பியர் பாடாண் திணையில் துயிலெடை நிலை, ஆற்றுப்படை, பெருமங்கலம், மண்ணு மங்கலம், ஓம்படை, வாழ்த்து முதலிய இலக்கிய வகைகளை எடுத்துக் காட்டுதலினால்

இப்பொருள்களைப் பற்றிய பாடல்கள் அக்காலத்தில் மிகுதியும் விரும்பப்பட்டன எனலாம். சங்கநூல்களிலும் இப்பொருள் களைப் பற்றிய பாடல்களை நாம் காணலாம்.

## கலைஞர் விவாதம்

கலைகளில் வல்ல பெருமக்கள் பலர் கூடித் தத்தம் கல்வி முதிர்ச்சி தோன்ற விவாதங்கள் நிகழ்த்தி வந்தனர். இவர்கள் வாதம் புரியும் பொழுது தங்கள் கையில் உள்ள இருவிரல்களைக் காட்டிப் பேசுவது மரபாயிருந்தது (மலைபடு. 112-113). வாதம் புரிவோர் அதற்கெனத் தனிக்கொடி நாட்டி, வாதப்போர் புரிந்தனர்.

'பல் கேள்வித் துறை போகிய
தொல் ஆணை நல் ஆசிரியர்
உறழ் குறித்து எடுத்து உருகெழு கொடியும்''

(பட்டினம். 169-171)

என வருவது இதற்குச் சான்றாம்.

## கலைநுட்பம் செறிந்தவர்கள்

தமிழ்மக்களின் வாழ்க்கையை நோக்கும்போது இயற்கை யோடு இயைந்த வாழ்வும், இயற்கைப் பொருள்களிடத்து ஈடு பாடும் அறிவியற் கலைகளில் அவர்க்குள்ள விருப்பமும் நன்கு புலனாகின்றன. வாழ்விற்கு வேண்டிய பொருள்களைத் தேடி நன்முறையில் உண்டும், உடுத்தும், பொழுதுபோக்காக விழா முதலியன நிகழ்த்தியும், இசை, கூத்து, நாடகம் முதலிய கவின் கலைகளில் ஈடுபட்டும் இன்மாகப் பொழுது போக்கினர். ஆகவே, இவர்தம் வாழ்க்கையின் ஒவ்வொரு பகுதியிலும் கலைநுட்பம் செறிந்து இருந்தது என்று உறுதியாகக் கூறலாம்.

# 8. செந்நெறியும் சீரிய குறிக்கோளும்

## குறிக்கோள்

மக்கள் வாழ்க்கையில் ஒவ்வொரு பகுதியினரும் அவரவர் நிலைமைக்கேற்ற சில குறிக்கோள்களைக் கொண்டிருத்தல் இயல்பே. ஒவ்வொருவர் தனிவாழ்விலும்அவரவர்க்குத் தேவை யான வசதிகளைச் செய்துகொள்ளவும், பிறருடன் கூடி வாழவும் சில நியதிகள் அவசியமாகின்றன. வாழ்க்கைக்குரிய நியதி களையும் நெறிமுறைகளையும் பூட்கை (புறம். 9:6; 69:5) என முன்பு வழங்கினர். பூட்கையாவது பூண்பது அல்லது மேற்கொள்வது என்பது பொருளாம். இதனால் இலட்சியங்களை 'மேற்கோள்', 'குறிக்கோள்' என்றும் பின்னர் வழங்குவராயினர். மேற்கோள் இல்லாதவன் உடல் பொலிவிழந்து தோன்றும் என்று ஒரு புலவர் கூறுகின்றார் (புறம். 69:5).

'அறத்தாறு நுவலும் பூட்கை' என அறநெறியை எடுத்துக் கூறுதலையும் குறிக்கோள் என்று கொள்கின்றனர். முதுகுடுமிப் பெருவழுதி தான் பகைவர் நாட்டில் போர் தொடங்குவதற்கு முன்பு, எதிரியின் நாட்டில் வாழும் பசு, பார்ப்பன மாந்தர், பெண்டிர், பிணியுடையோர், புதல்வர்ப்பேறு இல்லாதவர் ஆகியோரை அப்பாற் சென்று விடும்படியாக அறிவித்தலைத் தனக்குரிய பெருங்கடமையாகச் செய்து வந்தானெனத் தெரிய வருகிறது. (புறம். 9:6)

## உயர்வுள்ளல்

வாழ்க்கையில் ஒவ்வொருவரும் உயர்ந்த கோட்பாடுகளை எண்ணுதல் முறையாகும். யானை வேட்டைக்குச் சென்ற ஒருவன் யானையை எளிதாகப் பெறுவான். குறும்பூழ்ப் பறவை வேட்டைக் குச் சென்ற ஒருவன் அதனைப் பெறாது வெறுங்கையோடு

திரும்புதலும் கூடும். அதனால் உயர்ந்த விருப்பத்தைக் கொள்கின்ற மேற்கோள் உடையவர்களுக்கு நல்வினைப் பயனால் அது கைகூடுவது உறுதி (புறம். 214:5-7).

உயர்ந்த இலட்சியங்களில் சென்று தோல்வி உறுவார் ஆயின், அதற்காகப் பின்னடைந்து இழிநிலைக்குச் செல்வதுமில்லை. உயர்ந்த மலையிலே புலி தான் பார்த்துச் சென்ற களிறாகிய இரை தப்பிவிடுமானால், அதற்காக அது எலியைத் தேடிப் பிடிப்பது இல்லை. அதுபோல எழுச்சியுடைய மாந்தர் மேலும் தங்கள் இலட்சியத்தில் செல்லவே விருப்புடையராய் இருப்பர் (புறம். 237:16-20).

## அறம் பொருள் இன்பம்

வாழ்வின் அடிப்படையாக அமைந்த குறிக்கோள்கள் அறம், பொருள், இன்பம் என்னும் மூன்றாம். ஆடவர் பெண்டிரது அன்பு வாழ்க்கையை ''இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு அன்போடு புணர்ந்த ஐந்திணை'' (தொல். களவு.1) என்று தொல்காப்பியர் குறிப்பிடுவர். அறத்தினால் பொருளாக்கி, அப்பொருளால் இன்பம் நுகர்தல் சிறப்பாகும் என்பதைக் கருதி இன்பத்தை முதலிலும் அதற்குக் காரணமான பொருளை அதனையடுத்தும் இவ்விரண்டிற்கும் மூலகாரணமான அறத்தை அதன் பின்னரும் ஆசிரியர் அமைத்திருக்கிறார். பிறர்க்கு உதவி வாழ்வதற்கும், தனக்கு நேரும் பகை முதலியவற்றை நீக்கி வெற்றி பெறுவதற்கும் தன் மனம் விரும்பும் காதல் இன்பத்தை நுகர்தலுக்கும் பொருளே ஆதாரமானது என்று எண்ணி ஒருவர் பொருள் முயற்சியை மேற்கொண்டனர்.

> *''அரிதாய அறன் எய்தி அருளியோர்க்கு அளித்தலும்*
> *பெரிதாய பகை வென்று பேணாரைத் தெறுதலும்*
> *புரிவு அமர் காதலின் புணர்ச்சியும் தரும்' என*
> *பிரிவு எண்ணிப் பொருள்வயிற் சென்றநம் காதலர்*
> *வருவர் கொல்''* (கலி. 11:1-5)

எனவரும் கலித்தொகைப் பாடற்பகுதி மேற்கருத்தை நன்கு தெளிவுற உணர்த்துகிறது.

மேலும் அறமும் இன்பமும் பொருளால் நிலைபெறுவது. ஆதலின், பொருளை இரண்டிற்கும் இடைமடுத்து கூறினாரும் உளர். ''சிறப்புடைய் மரபில் பொருளும், இன்பமும் அறத்து வழிப்படும் தோற்றம் போல'' (புறம். 31:1-2) எனவரும் கருத்துரையால் இதன் உண்மை தெரியலாம். சோழன் நலங்கிள்ளியை நோக்கி உறையூர் முதுகண்ணன் சாத்தனார், ''நீ சிறந்த வளமுள்ள நாட்டைப் பெற்றுள்ளாய். உனது செல்வம் அறம், பொருள், இன்பம் என்னும் மூன்றையும் அடைதற்கு உதவும். இதனை நீ செய்யாது ஒழிதல் நின்னைப் பாதுகாவாமையே ஆகும்' என்று மூன்று குறிக்கோளின் சிறப்பையும் அறிவுறுத்துகின்றார் (புறம். 28:14-17). அறம், பொருள், இன்பம் என்னும் மூன்றில் ஒன்றை மேற்கொள்ளாமல் செய்வன தீய செயல்களாகவே அமையும். பெறுதற்கரிய மக்கள் யாக்கையைப் பெற்றோர் மனம் வேறுபட்டுத் தாம் விரும்பின தீங்குகளைச் செய்வது இன்றியமையாத மூன்று குறிக்கோள்களை ஒருவன் பெறுவதைத் தடுக்கும் (கலி. 141:1-4).

''பெரியோருடைய நல்ல உள்ளம் ஒருகால் அறமல்லாதவற்றை விரும்புமாயின் அவர்கள் தாங்கள் கேட்ட கேள்வி என்னும் அங்குசத்தினாலேயே தங்கள் உள்ளமாகிய யானையை மீட்டு, இல்லறமும் பொருள் வழுவாத தன்மையை ஆராய்ந்து, தமது தகுதியையும் தகுதியின்மையையும் நன்குணர்ந்து, அதன் பின்னரே தாங்கள் கருதிய வினையை இயற்றுவர்.'' (அகம். 286:8-13).

எல்லாவற்றிற்கும் மூலமான அறமே யாவரும் மேற்கொள்ளத் தக்கது. பேகன் தன் மனைவி கண்ணகியைத் துறந்து வாழ்ந்தபோது, பரணர் அவனை நோக்கி ''பொருள் இன்பங்களுக்குக் காரணமான அறநெறியைத் தவறிவிட்டாய்; நீ குளிரால் நடுங்கிய மயிலுக்குக் கூடப் போர்வையை எடுத்துப் போர்த்தும் அருள் உள்ளம் படைத்தவன். அத்தகைய நீ உன் மனைவிமாட்டு அருள் செய்யாது ஒழிதல் மிகவும் கொடுமையானது. நீ அவளுடைய துன்பத்தைப் போக்கி, இன்பம் செய்யும் அறநெறியைக்

கடைப்பிடித்தல் வேண்டும். இதுவே நான் உன்னிடம் வேண்டும் பரிசு'' என்று கூறி, அவனை அறவழியில் செலுத்தினார்

## மனை வாழ்க்கை

மனை வாழ்க்கையில் ஒத்த அன்பு, கணவன் மனைவியர் இருவருக்கும் உரிய பண்பாகும். இந்த ஒத்த பண்பையே 'காதல்' என அழைத்தனர்.

*யாக்கைக்கு*
*''உயிர் இயைந்தன்ன நட்பின், உயிர்*
*வாழ்தல் அன்ன காதல்*
*சாதல் அன்ன பிரிவு அரியோளே!''*

*(அகம். 339:11-14)*

என்பது உத்தம காதல் வாழ்க்கையின் இலட்சியத்தைப் புலப் படுத்துகிறது.

காதல் வாழ்வில் இருவரும் பிரியாது கூடி வாழ்தலையே பெரும் பேறாகக் கருதினர். வறிய வாழ்க்கை வாழ்ந்தாலும் பிரியா வாழ்க்கையே பெருமை தரும் வாழ்க்கை என்று அறிவுறுத்தப் படுகின்றது. இளமையும் காமமும் இயையப் பெற்றார் அதன் பயனை நுகராது நாளைப் போக்கின் சென்ற இளமையை மீட்பழ இயலாது. இக்கருத்தை,

*இளமையும் காமமும் ஓராங்கிப் பெற்றார்*
*வளமை விழைதக்கது உண்டோ? உள்நாள்,*
*ஒரோஒ கை தம்முள் தழீஇ, ஒரோஒ கை*
*ஒன்றன் கூறு ஆடை உடுப்பவரே ஆயினும்,*
*ஒன்றினார் வாழ்க்கையே வாழ்க்கை; அரிதுஅரோ*
*சென்ற இளமை தரற்கு!*

*(கலி. 18:7-12)*

என்னும் பாடற் பகுதி புலப்படுத்துகிறது.

காதலர்கள் கூடும் கூட்டம் ஒருவர் மெய்யும் மற்றவர் உடம்பும் உட்புகுவது போன்று அவ்வளவு நெருக்கமாக அமைந்தது. இதனை ''மெய்புகுவன்ன கைகவர் முயக்கம்'' (அகம். 379:15) என்பர். காதலியின் முலை நெருங்குமாறு தழீஇக் கொண்டு, இரவு கழியும் மட்டும் நூலிடை கூட விலகினால் அதனால் தங்கள் முயக்கத்திற்கு வருந்தி, கழிபெரும் காம நுகர்ச்சியே சிறந்தது என்று இன்ப நுகர்ச்சியைப் போற்றினர்.

*''மாரிப் பித்திகத்து ஈர் இதர் அலரி*
*நறுங் காழ் ஆரமொடு மிடைந்த மார்பில்,*
*குறும் பொறிக் கொண்ட கொம்மை அம் புகர்ப்பின்*
*கருங்கண் வெம்முலை ஞெமுங்கப் புல்லிக்*
*கழிவதாக கங்குல்''* (நற். 314:3-7)

*''அணி வளை முன்கை, ஆய்இதழ் மடந்தை*
*வார் முலை முற்றத்து நூல் இடை விலங்கினும்*
*கவவுப் புலத்து உறையும் கழி பெருங் காமத்து*
*இன்புறு நுகர்ச்சியின் சிறந்தது ஒன்றுஇல்''*
(அகம். 361:4-7)

என வருவன மேற்குறித்த கருத்திற்கு அரண் செய்யும்.

மேலும், இன்பத்திற்குரிய காலம் இளமைக்காலம். முதிர்ந்தோர் மீண்டும் தம் இளமையைப் பெற இயலாது. தவிரவும் வாழ்நாளின் எல்லையும் ஒருவருக்கும் அறுதியிட்டு உரைக்க இயலாதது. ஆதலால் இன்ப நுகர்ச்சியில் வாய்ப்பு நேரும்போது, அதனைக் காலந் தாழ்த்தாது பெறுதல் வேண்டும் என்பதனை மேற்குறித்த பாடற்பகுதிகள் வலியுறுத்துகின்றன.

இத்தகைய நிலையில் இன்பம் துய்ப்போர் ஒருவருக்கொருவர் இன்றியமையாதவராய் ஒருவர் மாட்டு ஒருவருக்குள்ள பெருவிருப்பத்தைத் தம் இனிய காதல் மொழிகளால் புலப்படுத்தி நின்றனர்.

## ஆண் பெண் காதல் மொழிகள்

*''பைஞ் சுனைப் பூத்த பகுவாய் குவளையும்*
*அம்சில் ஓதி அசை நடைக் கொடிச்சி*
*கண் போல் மலர்தலும் அரிது; இவள்-*
*தன்போல் சாயல் மஞ்ஞைக்கும் அரிதே''*

*(ஐங்குறு. 299:2-5)*

*''உயிர் எழுந்து ஒன்றிய செயிர்தீர் கேண்மைப்*
*பிரிந்துறல் அறியா விருந்து கவவி,*
*நம்போல் நயவரப் புணர்ந்தன-*
*கண்டிகும் மடவரல்! - புறவின் மாவே''*

*(ஐங். 419)*

*''நலம் மாண் எயிற்றி போலப்பலமிகு*
*நன்னல நயவரவு உடையை*
*என் நோற்றனையோ? - மாவின் தளிரே!''*

*(ஐங். 365:3-5)*

*தொடலை தைஇய மடவரல் மகளே!*
*கண்ணினும் கதவ, நின் முலையே!*
*முலையினும் கதவ, நின் தடமென் தோளே!*

*(ஐங். 361:3-5)*

இவை காதலன் தன் காதலியின் நலங்கண்டு தனது பெரு விருப்பத்தை மொழிகளால் வெளிப்படுத்திய பகுதிகளாம்.

*''கழுத்து அமை கை வாங்காக் காதலர்ப் புல்ல,*
*விழுத்தகை பெறுக!''* *(பரி. 11:116-117)*

*''பூ வீழ் அரியின் புலம்பப் போகாது*
*யாம் வீழ்வார், ஏமம் எய்து!''*

*(பரி. 11:118-119)*

*''முன்முறை செய்தவத்தின் இம்முறை இயைத்தேம்*
*மறுமுறை அமையத்தும் இயைகை!''*

*(பரி. 11:138-139)*

*''சாதல் அஞ்சேன்; அஞ்சுவல், 'சாவின்*
*பிறப்புப் பிறிது ஆகுவது ஆயின்,*
*மறக்குவேன் கொல், என் காதலன்' எனவே''*

*(நற். 397:7-9)*

*''இம்மை மாறி மறுமை ஆயினும்*
*நீ ஆகியர் எம் கணவனை;*
*யான் ஆகியர் நின் நெஞ்சு நேர்பவளே''*

*(குறு. 49:3-5)*

இவை ஒரு காதலியின் அன்பு மிகுதியால் போந்த மொழிகள். தமது அன்பு பிறவி தோறும் தொடரவேண்டும் என்னும் விருப்பத்தையும் இவள் மொழிகள் புலப்படுத்துகின்றன. காதலின் எல்லையை அளவிட்டு உரைத்தல் இயலாது. இது பருகுதலை யொத்த தன்மை வாய்ந்தது. ஈருடல் என்னும் உடல் பேதமேயன்றி ஒருயிர்த் தன்மைப்பட்ட உயிர்வாழ்வையுடையது. இவர்தம் காதல் முயக்கத்தால் உடம்பும் ஒன்று என்னும்படியாக ஆகிவிடுகிறது. இத்தகைய உயரிய காதல் நிலையைப் பெற்றாரை,

*''பல்படை நிவந்த வறுமை இல் சேக்கை*
*பருகுவன்ன காதலொடு திருகி*
*மெய்புகுவன்ன கைகவர் முயக்கத்து*
*ஓர் உயிர் மாக்கள்''* *(அகம். 305:5-8)*

என அழைக்கிறார் ஒரு புலவர்.

''காதல் தானும் கடலினும் பெரிதே'' (நற். 166:10) என்றபடி பெரிதாகக் காணும் பொருள்களிலெல்லாம் மிகப் பேரளவினது ஆகும். காதல் உணர்ச்சி. ஒரு புலவர், நிலத்தைவிட மிகப் பெரியது; வானத்தைவிடவும் மிக உயர்ந்தது. நீரைப்போல அளந்து அறிய இயலாதது என்று இதனைப் பாராட்டுகிறார் (குறு. 3). இந்தக் காதல் தொடக்கம் முதல் வாழ்வு காலம் முடியவும் ஒரு பெற்றியதாக அமைய வேண்டும் என்பதே இருபாலரின் விருப்பமாக இருந்தது.

*''வேட்டோர்க்கு*
*அமிழ்தத்து அன்ன கமழ் தார் மார்பின்*
*வண்டு இடைப் படாஅ முயக்கமும்*
*தண்டாக் காதலும் தலைநாள் போன்மே''*

*(அகம். 332:12-15)*

என்பதனால் முதல்நாள் போல் என்றும் இன்பம் மிக்கு ஓங்கியமை பெறப்படும்.

## காமம் காதலாகப் பெருகுதல்

காதல் என்பது அன்பின் முதிர்ந்த நிலை. சாதாரணமாக நிகழும் அன்பைக் காமம் என்பர்.

*''காமம் கலந்த காதல் உண்டு எனின்*
*நன்றுமன்''* *(அகம். 268:6-7)*

என்பதனால் காமம் கலந்து பெருகி முதிர்ந்த நிலையில் அது காதலாக விளைகிறது. அது இருவர்மாட்டு மெய்யுறு புணர்ச்சியில் போய் முற்றுகிறது.

*''காதற் காமம், காமத்துச் சிறந்தது*
*விருப்போர் ஒத்து மெய்யுறு புணர்ச்சி''*

*(பரி. 9: 15-16)*

என்பது காமம் காதலாய்ப் பெருகிக் காதலரிடையே இன்பத்தைத் தோற்றுவிப்பதைப் புலப்படுத்துகிறது.

## முதற்கண் அரும்பும் காம நிலை

**ஒத்த தகுதி படைத்த ஆடவர், பெண்டிர் எதிர்ப்படும் காலத்து, ஒத்த உணர்ச்சியுடையாரிடையே நுட்பமாகப் பொருந்தி அமைவதே காம உணர்ச்சி. பேய் தான் கண்ட கனவை வெளியிற் கூறாதது போன்று இருவர் மாட்டும் நிகழ்ந்த காம உணர்ச்சியும் மறைத்து வைக்கப்படுகிறது.**

*'இடை பிறர் அறிதல் அஞ்சி, மறைகரந்து*
*பேஎய் கண்ட கனவின், பல்மாண்*
*நுண்ணிதின் இயைந்த காமம்.'*

*(அகம். 303:1-3)*

என்பது இருவர் மாட்டும் முதற்கண் அரும்புகின்ற காமநிலையை நமக்கு அறிவிக்கின்றது. இந்தக் காமத்தின் வளர்ச்சிக்கு இடையீடாகக் குறிக்கிடுவது நாணம். காமத்தின் எழுச்சி மிகமிக நாணம் விலகி ஓடுகிறது. அவர்தம் அறிவை மயக்குகிறது.

*'அளிதோ தானே - நாணே நம்மொடு*
*நனி நீடு உழந்தன்று மன்னே; இனியே,*
*வான் பூங் கரும்பின் ஓங்கு மணற்சிறுசிறை*
*தீம்புனல் தெரிதர வீந்து உக்கா அங்கு*
*தாங்கும் அளவைத் தாங்கி,*
*காமம் நெரிதரக் கைந் நில்லாதே'*

*(குறுந். 149:1-6)*

*''நாண் அட்டு,*
*நல் அறிவு இழந்த காமம்*
*வில் உமிழ் கணையின் சென்று சேண்படவே''*

*(குறு. 231:4-6)*

என்பவை கொண்டு நாணத்தை அடிமைப்படுத்தக் காமம் மீதூர்தல் பெறப்படும்.

காம உணர்ச்சியுற்றார் பிறருடைய அலர்மொழிக்கு அஞ்சினால் அவர்தம் காமம் கைவிடாது போகும். காமத்தை விட்டு விட்டால் எஞ்சி இருப்பது நாண் ஒன்றுமே ஆகும். ஆகவே, காமமும் அலர்மொழியும் ஒன்றுக்கொன்று முரணாக அமைந்து காதல் வெற்றிக்கு இடையூறாகக் குறுக்கிடும் (குறு. 112:1-5).

*'நலி தரும் காமமும் கௌவையும் என்று இவ்*
*வலிதின் உயிர் காவாத் தூங்கி, ஆங்கு என்னை*
*நலியும் விழுமம் இரண்டு''* *(கலி. 142:56-58)*

என்பது ஒரு காமமுற்ற பெண்ணின் நிலையை விளக்குகிறது. காமத்தால் நலியும் காதலிக்கு அன்பு மொழி கூறி ஆற்றுவிக்கின்ற தன்மை காதலன் ஒருவனுக்கு மட்டுமே இயைவதாகும். அவன்

உரிய காலத்தில் வந்து அன்புசெய்யாமல் போனால், காதலியின் நிலை இரங்கத் தக்கதாய்விடும்.

*'நோய் அலைக் கலங்கியமதன் அழிபொழுதில்*
*காமம் செப்பல் ஆண்மகற்கு அமையும்;*
*.... .... .... ....*
*என்ன மகன் கொல் தோழி! - தன்வயின்*
*ஆர்வம் உடையர் ஆகி*
*மார்பு அணங்குறுநரை அறியாதோனே'*

*(நற். 94:2-3; 7-9)*

என்று ஒரு காதலி தன் தோழிக்குத் தன் மனநிலையைப் புலப் படுத்துகின்றாள்.

காதலன் மறைவில் வந்து தலைவியிடத்தில் அன்பு செய்தா லும் அது இடையறவு படுதலினால், கள் மயக்கம் தீர்ந்தால் உறும் வேறுபாடு போன்று காதலிக்கு வேறுபாட்டைச் செய்வதற்குக் காரணமாய் இருந்தது. மறைவில் புணர்ச்சிக் காலத்தும் காதலியின் மேனி பசலையடைந்த காரணம் சிறிதளவு அவனது முயக்கம் நீங்கியதனாலோ அல்லது காம இச்சையின் இடையறவினாலோ ஏற்பட்டது ஆதல் வேண்டும் என்று அனுமானிக்கின்றாள் ஒரு தோழி.

*''துறை கெழு மரந்தை அன்ன இவள்நலம்*
*பண்டும் இற்றே, கண்டிசின் தெய்ய;*
*உழையின் போகாது அளிப்பினும், சிறிய*
*ஞெகிழ்ந்த கவின் நலம் கொல்லோ? - மகிழ்ந்தோர்*
*கட்களி செருக்கத்து அன்ன*
*காமம் கொல்? - இவள்கண் பசந்ததுவே!''*

*(நற். 35:7-12)*

என வருவது தோழியின் அனுமான வாக்கு. காமம் கை கடந்து செல்லுமாயின், அது தாங்குதல் எளிதன்று. எனவே, நாணத்தை கைவிட்டுக் காமத்திற்கு ஒரு எல்லை காண வேண்டும் என்று விரைவது காதலரின் இயல்பு.

*''சொல்லின் சொல் எதிர்கொள்ளாய், யாழநின்*
*திருமுகம் இறைஞ்சி நாணுதி கதுமென்;*
*காமம் கைம்மிகின் தாங்குதல் எளிதோ?''*
*(நற். 39:1-3)*

என வரும் தலைவன் பேச்சு காதலரின் மனநிலையை நன்கு புலப் படுத்துகிறது. காமம் விரைவில் கைகூடாதபோது இருபால ரிடத்தும் அது நெருப்பைப் போலச் சுடும் தன்மையுடையதாய் அவர்களை மிகவும் துன்புறுத்திவிடுகிறது.

*' அழல் மன்ற, காம அருநோய்; நிழல் மன்ற,*
*நேரிழை ஈத்த இம்மா.'* *(கலி. 139:30-31)*

இது விரும்பிய காதலியை முறைப்படி மணந்து கொள்ளக் கூடாத நிலையில், மடலேறுதலைத் தனக்கு உற்ற நோய்க்குரிய உபாயம் என்று துணிந்துவிட்ட காதலனது காமத்தின் உச்சநிலை யைக் காட்டுகிறது.

*'ஓஓ! கடலே! ஊர்தலைக் கொண்டு கனலும் கடுந்தீயுள்*
*நீர் பெய்தக்காலே சினம் தணியும்; மற்று இஃதோ*
*ஈரம் இல் கேள்வன் உறீஇய காமத்தீ*
*நீருள் புகினும் சுடும்'* *(கலி. 144:59-62)*

இது பிரிவுக் காலத்து ஒரு காதலி காமத்தால் நொந்த மனநிலையைக் காட்டுவது. காதலனைப் பிரிந்த நிலையில் இத்தகைய காம நோயும், அதனால் காதலி தன் நிலை கெட்டு, நாணத்தை விட்டு, துன்புறுதலும் இயல்பேயாகும். காதலனைப் பிரிந்த நிலையில் தலைவி இருந்த நிலையை,

*''துனையுநர் விழைதக்க சிறப்புப்போல், கண்டார்க்கு*
*நனவினுள் உதவாது நள்ளிருள் வேறாகும்*
*கனவின் நிலையின்றால், காமம்; ஒருத்தி*
*உயிர்க்கும்; உசாஅம்; உலம்வரும்; ஓவாள்;*
*கயல்புரை உண்கண் அரிப்ப அரிவார,'*

*பெயல்சேர் மதிபோல, வாண்முகம் தோன்ற,*
*பல ஒலி கூந்தலாள், பண்பு எல்லாம் துய்த்துத்*
*துறந்தானை உள்ளி, அழூஉம்; அவனை*
*மறந்தாள் போல் ஆலி நகூஉம், மருளும்*
*சிறந்ததன் நாணும் நலனும் நினையாது,*
*காமம் முனைஇயாள், அலமந்தாள்'' என்று எனைக்காண,*
*நகான்மின்; கூறுவேன், மாக்காள்! மிகாஅது,*
*மகளிர் தோள் சேர்ந்த மாந்தர் துயர்கூர நீத்தலும்*
*நீள்சுரம் போகியார் வல்லை வந்து அளித்தலும்,*
*ஊழ் செய்து இரவும் பகலும் போல் வேறாகி*
*வீழ்வார் கண் தோன்றும்; தடுமாற்றம் ஞாலத்துள்*
*வாழ்வார்கட்கு எல்லாம் வரும்.''*

*(கலி. 145:1-7)*

எனவரும் கலித்தொகைப் பாடற்பகுதி மேற்குறித்த நிலையை நன்கு விளக்கி உரைக்கின்றது.

## பாங்கன் அறிவுரை

காமத்தால் நாண் இழந்து நிற்கின்ற ஆடவரை அவர்தம் பாங்கர் கடிந்து, அதனைப் பாராட்டாது இருக்குமாறு அறிவுரை கூறுவதும் உண்டு. காமம் என்பது பேயோ அல்லது பெருநோயோ அன்று. தாங்கும் மனவலிமை இல்லாதவர்களைத் தான் அது பெரிதும் துன்புறுத்துகிறது என்று பாங்கன் எடுத்துக் கூறுவது ஓர் உலகியல்.

*'காமம் காமம்' என்ப; காமம்*
*அணங்கும் பிணியும் அன்றே; நுணங்கிக்*
*கடுத்தலும் தணிதலும் இன்றே; யானை*
*குளகு மென்று ஆள் மதம் போலப்*
*பாணியும் உடைத்து, அது காணுநர்ப் பெறினே*

*(குறு. 136:1-5)*

*'காமம் காமம்' என்ப; காமம்*
*அணங்கும் பிணியும் அன்றே; நினைப்பின்*
*முதைச் சுவற் கலித்த முற்றா இளம்புல்*
*மூதாதை வந்ததாங்கு,*
*விருந்தே காமம் - பெருந்தோளோயே!'*

*(குறு. 204:1-5)*

எனவரும் பாடல்கள் பாங்கன் காமத்துக்கு இலக்காகிய தன் தோழனுக்கு அறிவுரை கூறுவதாகும்.

ஆனால், தலைவனோ தனக்கும் அதன் தன்மை தெரியும் என்றும், தானும் நாணம், நட்பு, பணிவு, பயன், ஒழுக்கம் முதலியவற்றில் காமத்திற்கு இலக்காகும் முன், சிறந்த நிலையில் இருந்தது உண்டு என்றும், இதைப்பற்றி அறிவுரை கூறும், உன்னை விடவும் 'நான் நன்கு அறிவேன் 'என்றும் அவனுக்கு எதிர்மொழி அளிக்கிறான்.

*''நயனும் நண்பும் நாணு நன்கு உடைமையும்*
*பயனும் பண்பும் பாடு அறிந்து ஒழுகலும்*
*நும்மினும் அறிகுவென் மன்னே*
*.... .... .... ....*
*அரிம்தர் மழைக் கண் காணா ஊங்கே''*

*(நற். 160:1-3; 10)*

காயத்திற்கு இலக்காகிய ஆடவன் கூறும் இப்பகுதியிலிருந்து இந்நிகழ்ச்சி உலகத்தில் காமம் உற்றோர்க்கு எல்லாம் நேரும் பொது நிகழ்ச்சியே என்பது புலப்படும்.

## தலைவன் தலைவியர் ஒப்புமை

ஒத்த தலைவன் தலைவியர் ஊழ் வயத்தால் ஒன்றுபட்டு வாழ்க்கைத் துணையாக அமைவர் என்று நம்பினர். தலைவன் தலைவியர்க்குப் பத்து வகையான ஒப்புமைகள் கூறப்படும்.

*''பிறப்பே, குடிமை, ஆண்மை, ஆண்டொடு*
*உருவு நிறுத்த காம வாயில்,*
*நிறையே, அருளே, உணர்வொடு, திரு என*
*முறையுறக் கிளந்த ஒப்பினது வகையே''*
*(தொல். பொருள். மெய்பாட்டு. 25)*

இவ்விருவருக்கும் ஒத்த அன்பு நிகழ்வதற்கு இடையூறாக இருக்கின்ற குணநிகழ்ச்சிகளையும் தொல்காப்பியர் பின்வருமாறு கூறுகின்றார்.

*''நிம்பிரி, கொடுமை, வியப்பொடு, புறமொழி*
*வன்சொல், பொச்சாப்பு, மடிமையொடு, குடிமை*
*இன்புறல், ஏழைமை, மறப்பொடு, ஒப்புமை,*
*என்று இவை இன்மை' என்மனார் புலவர் ''*
*(தொல். பொருள். மெய். 26)*

இந்தக் குணங்கள் எல்லாம் கட்புலனாகச் சுட்டிக்காட்ட இயலா தவை. நாட்டுப் பழக்கத்தால் அனுபவத்தைக் கொண்டு மனத்தி னால் குறித்து உணரப்படுவனவாம்.

தலைவன் தலைவியர்க்குரிய ஒப்புமைக் குணங்கள் அவ்விருவரது மன ஒப்புமையால் இறுதியில் ஒரு நிலைப்பட்ட தன்மையராவார். ஒப்பு, உருவு, கற்பு முதலியன எல்லாம் நெஞ் சால் உணரப்படுவதன்றிக் கட்புலனாகக் காட்டத் தகுவனல்ல என்பதை,

*'ஒப்பும் உருவும் வெறுப்பும் என்றா,*
*கற்பும் ஏரும் எழிலும் என்றா,*
*சாயலும் நாணும் மடனும் என்றா,*
*நோயும் வேட்கையும் நுகர்வும் என்று, அங்கு*
*ஆவயின் வரூஉம் கிளவி எல்லாம்*
*நாட்டு இயல் மரபின் நெஞ்சு கொளின் அல்லது*
*காட்டலாகாப் பொருள' என்ப'*
*(தொல். பொருள. பொருள். 51)*

இச்சூத்திரத்துள் எல்லாம் என்று குறித்ததைக் கொண்டு ஒளி, அளி, காய்தல், அன்பு, அழுக்காறு, பொறை, நிறை, அறிவு என்னும் குணங்களையும் உரையாசிரியர் கொண்டு உரைப்பர். இந்தக் குணங்கள் வாயிலாக நேரும் அறம் பொருள் இன்பங்களின் நுகர்வு எல்லாக் காலத்தும் எல்லாவிடத்தும் நிகழ்வதாம். தேவர்கள் உலகினும்கூட இந்த நுகர்ச்சி இல்லாத காலம் இல்லை என்கிறார் ஆசிரியர் தொல்காப்பியர்.

*''இமையோர் தேஎத்தும் எறிகடல் வரைப்பினும்*
*அவைஇல் காலம் இன்மையான''*

(தொல. பொருள். பொருள்.52)

என்பது அவர் வாக்கு.

## மண வாழ்க்கை

தலைவன் தலைவியரால் தனிமையில் கூடும் களவு மணம் பெரியோர்களால் ஆதரிக்கப்பட்டதொன்றாகும்.

*''இருவேம் ஆய்ந்த மன்றல் இதுஎன*
*நாம் அறிவுறாலின் பழியும் உண்டோ''*

(குறி. 21-22)

என்று ஒரு தலைவி இதன் பழிப்பின்மையை எடுத்து மொழிகிறாள். எல்லோருமறிய மணம் செய்துகொள்ளுதலைக் 'கற்பு மணம்' என்பர். இது பெற்றோர்கள் விருப்புடன் தலைவியைக் கொடுக்கத் தலைவன் மணம் செய்தகொள்ளுதலாகும் (குறு. 51:3-6; அகம். 252:10-18). இந்தக் கற்பு மணம் உலகறியச் செய்து கொள்ளுதல் ஆதலால் இதனை 'நாடறி நல்மணம்' என்று கபிலர் குறிப்பிடுகிறார்.

*''நேர் இறை முன்கை பற்றி, நுமர்தர,*
*நாடு அறி நல்மணம் அயர்கம்; சில்நாள்*
*கலங்கல் ஓம்புமின் இலங்கு இழையர்!''*

(குறி. 231-233)

எனத் தலைவன் வாக்கின் மூலமாகத் தெரிவிக்கிறார். மகளிர் தாம் அன்பு கொண்டு விரும்பிய ஆடவரை மணந்துகொள்ளுதலேயன்றி வேற்றுவரைவு நேருமாயின், அதை விரும்புவதில்லை. மேலும், மகளிர்க்கு ஒரு மணத்தைத் தவிர இருமணம் நேருவதும் இல்லை.

*'விரிநீர் உடுக்கை உலகம் பெறினும்,*
*அருநெறி ஆயர் மகளிர்க்கு*
*இருமணம் கூடுதல் இல்இயல்பு அன்றே?'*

*(கலி. 114:19-21)*

எனவே தமிழர் இல்லங்களில் பெண்பாலர் தாங்கள் வரித்த ஒரே ஆடவனை மணத்தல் இயல்பாய் இருந்தமை புலப்படும்.

வையை நதி மலையில் பிறந்து கடைசியாகக் கடலைச் சென்று சார்கின்ற நிலையைக் களவுப் புணர்ச்சி புணர்ந்த தலைமகள் தன் நாயகன் இல்லத்திற்குத் தனித்துச் செல்வதைப் போல் உள்ளது என்று கற்பனை செய்கின்றார் ஒரு கவிஞர்.

*''மாமயில் அன்னார், மறையில் புணர் மைந்தர்,*
*காமம் களவிட்டு, கைகொள் கற்பு உற்றென,*
*மல்லல் புனல் வையை! மாமலை விட்டு, இருத்தல்*
*இல்லத்து நீ தனிச் சேறல் இளிவரல்''*

*(பரி. 11:41-44)*

நதி புறப்படும் இடம் மற்றையோர்க்குப் புலப்படாமல் பிறந்து எல்லோரும் காண நாயகனாகிய கடலை நாடியது மகளிரின் கற்பு ஒழுக்கத்தை ஒத்து விளங்கியது. பெண்கள் சுதந்திரமாகத் தங்கள் வாழ்க்கையைத் தாங்களே உறுதி செய்துகொள்ளும் வகையில் சுதந்திர நிலையில் வளர்க்கப்பெற்றனர். மகளிரைச் சிறையில் இட்டுக் காத்தல் அறமன்று என்றும் அது செல்வத்தின் தேய்விற்கு காரணமாக அமையும் என்றும் கருதப்பட்டது.

*''விளையாடு ஆயமொடு ஓரை ஆடாது
இளையோர் இல்லிடத்து இற்செறிந்திருத்தல்
அறனும் அன்றே; ஆக்கமும் தேய்ம்''*

*(நற். 68:1-3)*

## மனைமாட்சி

பெண்கள் எப்பொழுதும் தாங்கள் புகும் இடத்திலேயே பெருமதிப்புடன் போற்றத்தக்கவர்கள். மலையில் பிறந்த சந்தனமும், நீருள் பிறந்த முத்தும், யாழில் பிறக்கும் இசையும் அவற்றைப் போற்றுவோர்க்குப் பயன்பட்டுப் பெருமை பெறுகின்றன. பெண்களின் நிலையும் இவற்றை ஒத்ததே.

*''பல உறு நறுஞ் சாந்தம் படுப்பவர்க்கு அல்லதை,
மலையுளே பிறப்பினும் மலைக்கு அவை
தாம் என்செய்யும்?
நினையுங்கால், நும்மகள் நுமக்கும் ஆங்கு அனையளே
சீர்கெழு வெண்முத்தம் அணிபவர்க்கு அல்லதை,
நீருளே பிறப்பினும் நீர்க்கு அவைதாம் என் செய்யும்?
தேருங்கால், நும் மகள் நுமக்கும் ஆங்கு அனையளே
ஏழ்புணர் இன்இசை முரல்பவர்க்கு அல்லதை
யாழுளே பிறப்பினும் யாழ்க்கு அவைதாம் என்செய்யும்
சூழுங்கால் நும்மகள் நுமக்கும் ஆங்கு அனையளே''*

*(கலி 9:12-20)*

## பெண் குடும்ப விளக்கு

பெண்ணே குடும்பத்திற்கு விளக்காக அமைபவள். இவளுடைய பெருங்குணங்களே வாழ்க்கைக்குச் சிறப்பளிப்பவை. மகளிர்க்கு உயிராக விளங்குபவர் அவர்தம் கணவன்மார் ஆவர்.

*''ஒண்சுடர் பாண்டிற் செஞ்சுடர் போல
மனைக்கு விளக்கு ஆயினள் மன்ற''*

*(ஐங். 405:1-2)*

*''வினையே ஆடவர்க்கு உயிரே; வாள்நுதல்*
*மனை உறை மகளிர்க்கு ஆடவர் உயிர்''*

*(குறு. 135:1-2)*

ஆடவரின் அன்பும் ஆதரவும் அவர்களுக்குப் பேரரண்களாய் அமைந்தன.

*''குடி நன்கு உடையன்; கூடுநர்ப் பிரியலன்;*
*கெடு நா மொழியலன்; அன்பினன்''*

*(அகம். 352:8-3)*

என்று ஒரு தலைவனுடைய குணங்களைப் பாராட்டிப் பேசுகின் றாள் ஒரு தலைவி.

## இல்லக்கிழத்தியின் இயல்புகள்

இல்லக் கிழத்தியாகிய பெண் அன்பு, ஒழுக்கம், கற்பு, பொறை, விருந்தோம்பல், சுற்றத்தை உபசரித்தல் முதலிய குணங் களைப் பெற்று விளங்கினாள்.

*''அன்பும், மடனும், சாயலும் இயல்பும்*
*என்பு நெகிழ்க்கும் கிளவியும், பிறவும்.*
*ஒன்றுபடு கொள்கையொடு''*

என ஒரு தலைவியின் குணவியல் கூறப்படுகிறது (அகம். 225:1-3).

மேற்குறித்த குணவியல்புகளொடு தலைவனுக்கேற்ற வாழ்க்கைத் துணைவியாகப் பெண் அமைந்தாள். வாழ்க்கைத் துணைவிக்குரிய பெருங்குணங்களை,

*''கற்பும், காமமும், நற்பால் ஒழுக்கமும்*
*மெல் இயல் பொறையும், நிறையும் வல்லிதின்*
*விருந்து புறந்தருதலும் சுற்றம் ஓம்பலும்*
*பிறவும் அன்ன கிழவோள் மாண்புகள்''*

*(தொல். பொருள். கற். 11:1-4)*

என்று தொல்காப்பியர் எடுத்துக் கூறுகின்றார்.

## நாணும் கற்பும்

இக்குணங்களில் நாணும் கற்பும் பெண்களுக்குப் பேரணி கலங்களாவன. பூங்கொம்பின் தாழ்ந்து ஒசிந்து நிற்கும் தோற்றத்தையும் தினைக்கதிர் விளைந்து வளைந்து நிற்கும் கோலத்தையும் பெண்கள் நாணத்துடன் கூடியிருக்கும் நிலைக்குக் கவிஞர்கள் ஒப்பிடுகின்றனர்.

*''நல்லவர் நுடக்கம்போல் நயம் வந்த கொம்பொடும்''*
*(கலி. 32:10)*

*''நகை மொழி நல்லவர் நாணும் நிலைபோல்,*
*தகை கொண்ட ஏனலுள் தாழ்குரல்'*
*(கலி. 40:2-3)*

நாணம் மகளிர்க்கு உயிரைவிடவும் சிறந்தது. அந்த நாணத்தினும் சிறந்தது அவர்தம் கற்புடைமை.

*''உயிரினும் சிறந்த நாணும் நனிமறந்து*
*உரைத்தல் உய்ந்தனனே''*
*(நற். 17:8-9)*

*''உயிரினும் சிறந்தன்று நாணே; நாணினும்*
*செயிர்தீர் காட்சிக் கற்புச் சிறந்தன்று எனத்*
*தொல்லோர் கிளவி''*
*(தொல். பொருள். களவு. 23)*

இவ்விரண்டும் மகளிர்க்குச் சிறந்தன என்பதைத் 'தொல்லோர் கிளவி'யை எடுத்து மொழிதலின் இக்கருத்து மிகப் பழைமை யானது என்பது போதரும்.

## கற்பு முல்லை

மகளிர் கற்புக்கு அறிகுறியாக முல்லை மலர் சூடுதல் இயல்பாதலின் ''முல்லை சான்ற கற்பின் மெல்லியல் குறுமகள்'' (நற். 142:8-9; அகம். 274:13-14) என்று பாராட்டி உரைப்பர். ஆயர்

மகள் ஒருத்தி களவுப் புணர்ச்சியில் தன் காதலன் கொடுத்த முல்லையைத் தன் கொண்டையினுள் சூடி வந்ததும், இல்லத்தில் அவள் மலரின் நினைவின்றித் தன் கூந்தலை அவிழ்த்து விரிக்க, அம்மலர் அவளது தாய் தந்தையர் முன்னர் விழுந்து, அவள் ஒரு தலைவனை விரும்பிக் கற்பொழுக்கம் பூண்டாள் என்பதனை வெளிப் படுத்தியதாம் (கலி. 115:4-9).

## கற்புடையாரின் மேன்மை

கற்புடைய பெண்ணைத் தெய்வம் எனவே கருதிப் பேசினான் ஒரு தலைவன்.

*''பெண்மை சான்று பெருமடம் நிலைஇக்*
*கற்பு இறை கொண்ட கமழும் சுடர் நுதற்*
*புரையேள்''* (பதி. 70:14-16)

*''ஆன்ற கற்பின் சான்ற பெரியள்*
*அம் மா அரிவையோ அல்லள்*
.... .... .... ....
*ஏர் மலர் நிறை சுனை உறையும்*
*சூர் மகள் மாதோ என்னும்''*
(அகம். 198:12-13; 16-17)

மகளிர் கற்புக்கு மழை பெய்விக்கின்ற தெய்வீக ஆற்றலும் இருந்தது.

*''வறன் ஓடின் வையகத்து வான் தரும் கற்பினாள்''*
(கலி. 16:20)

என்று பெண் பாராட்டப்படுகின்றாள். மேலும், இவர்தம் கற் புடைமையால் வானத்தில் விளங்கும் அருந்ததியைப் போல உலகம் தொழுகின்ற பெருமை வாய்ந்தும் விளங்கினர்.

*''வடமீன் புரையும் கற்பின் நறுநுதல்''*

*(பெரும். 302-303)*

*''வடமீன் போல் தொழுது ஏத்த வயங்கிய கற்பினாள்''*

*(கலி. 2:21)*

என வருவன இதற்குச் சான்றாம்.

## அறக்கற்பு

இக்கற்பு நிலையை ஆறிய கற்பு, அடங்கிய கற்பு என்றும் அவர்தம் அமைதி ஒழுக்கத்தால் போற்றப்படுதலும் உண்டு. ''விளங்கு நகர் அடங்கிய கற்பின் நலங்கேழ் அரிவை'' (குறு. 338:7-8) ''ஆறிய கற்பின் அடங்கிய சாயல்'' (பதி. 16:1) 'ஆறிய கற்பின் தேறிய நல்லிசைவண்டார் கூந்தல் ஒண்தொடி'' (பதி. 90:29-50). இதனால் இல்லத்தின்கண் பிறர் பாராட்ட அடங்கிய சாயலொடு புகழ் வாய்ந்த கற்பு ஒழுக்கத்தால் பெண் பெருமை யுற்று விளங்குவது போதரும். இதனை அறக்கற்பு என்று கூறுவர்.

## கணவனைப் பேணுதல்

கற்புடைய மகளிர் தம் கணவன்மார்க்கு உண்டி முதலியன சமைத்து இட்டு உபசரித்து அவன் விருப்புடன் உண்பதைக் கண்டு பெருமகிழ்வு கொண்டனர்.

*''முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்,*
*கழுவுறு கலிங்கம் கழாஅது, உடீஇ,*
*குவளை உண் கண் குய்ப்புகை கமழத்*
*தான் துழந்து அட்ட தீம்புளிப் பாகர்*
*இனிது என கணவன் உண்டலின்,*
*நுண்ணிதின் மகிழ்ந்தன்று ஒண்ணுதல் முகனே''*

*(குறு. 167:1-6)*

இப்பாட்டு ஒரு பெண்ணின் இல்வாழ்க்கைத் தன்மையைக் கண்டு வந்து உவந்து உரைக்கும் செவிலித் தாயின் மகிழ்ச்சியை வெளிப் படுத்துகிறது. கணவனுடைய இல்லத்தில் வறுமை இருந்தாலும், அவனோடு இயைந்து அவனுக்குத் தொண்டு செய்து வாழ்தலையே கடமையாகக் கொண்டனர்.

## கணவனே களைகண்

தமது தந்தை செல்வச் செழிப்பில் இருந்த போதிலும் கணவனை விட்டுப் பிரிந்து செல்லும் நிலையில் பெண்கள் வாழவில்லை.

*''கொண்ட கொழுநன் குடிவறன் உற்றென,*
*கொடுத்த தந்தை கொழுஞ்சோறு உள்ளாள்*
*ஒழுகுநீர் நுணங்கு அறல்போல*
*பொழுது மறுத்து உண்ணும் சிறு மதுகையளே!*

*(நற். 110:10-13)*

*''அன்னாய் வாழி! வேண்டு, அன்னை! நம் படப்பைத்*
*தேன்மயங்கு பாலினும் இனிய - அவர் நாட்டு*
*உவலைக் கவற்கீழ்*
*மான் உண்டு எஞ்சிய கலுழி நீரே''*

*(ஐங். 203:1-4)*

மேலே சுட்டிய நிகழ்ச்சிகள் பெண்பாலர் தமது கணவனுடன் இயைந்து வாழ்தலை எவ்வளவு மேன்மையாகக் கருதினர் என்பதைத் தெரிவிக்கின்றன.

## கற்புடையாளால் கணவன் உயர்வுறல்

கற்புடைய நல்மனைவி வாய்க்கப்பெற்றவர் புகழ்பெற வாழ்ந்தனர். கற்புடைய நல்மனைவியின் வருகையால் கணவனுக்கு வறுமை வாழ்வு நீங்கிச் செல்வ வாழ்வு வாய்க்கவும் பெறுவான்.

*''ஓர் ஆண் வல்சிச் சீர் இல்வாழ்க்கை*
*பெரு நலக் குறுமகள் வந்தென*
*இனி விழவு ஆயிற்று என்னும், இவ் ஊரே''*

*(குற. 295:4-6)*

தலைவியை அடைவதற்கு முன் தலைவன் இல்லத்தார் ஒரு பசுவின் வருவாயைக் கொண்டு வாழ்ந்தவர், தலைவி தலைவனுடைய இல்லத்திற்கு வந்தபின், அவ்வில்லம் செல்வம்

பொங்கிப் பலரோடு உண்டு மகிழும் விழா நிகழ்ச்சிக்கு இட மாயிற்று என்று மேற்குறித்த பாடற்பகுதி தெரிவிக்கிறது.

## கணவரால் துறக்கப்பட்ட மகளிர் நிலை

மகளிரது நலத்தை நுகர்ந்து அவர்களை இடையிலே துறந்து ஆதரியாமல் ஆடவர் விட்டுச் சென்றால் அம்மகளிரது நிலை இரங்கத்தக்கதாய் முடிந்துவிடும். ஆடவரால் துறக்கப்பட்ட மகளிர் நீருண்டு எறிந்த எச்சில் இடையோலையை யொத்தும் பூவையொத்தும் புறக்கணிக்கின்ற நிலையினராவர்.

*''தோள் நலம் உண்டு துறக்கப்பட்டோர்*
*வேள் நீர் உண்ட குடை ஓரன்னர்*
*நல்குநர் புரிந்து நலன் உணப்பட்டோர்*
*அல்குநர் போகிய ஊன் ஓரன்னர்*
*கூடினர் புரிந்து குளான் உணப்பட்டோர்*
*சூடினர் இம்ம பூ ஓரன்னர்.''*

*(கலி. 23:8-13)*

## விருந்தோம்பல்

இல்வாழ்க்கையில் வரும் விருந்தினரை ஓம்புவதும், சுற்றத்தாரை உபசரிப்பதும், இரப்பார்க்கு ஈதலும், முக்கிய அற மாகும். விருந்தினரை இன்முகம் கொண்டு வரவேற்று அவர்க்கு இனிய உணவை ஆக்கி மகளிர் விருப்புடன் படைத்தனர்.

*'விருந்து அயர் விருப்போடு வருந்தினள் அசைஇய*
*முறுவல் இன்நகை காண்கம்!'* *(நற்.81:6-9)*
*'நீர் வார் புள்ளி ஆகம் நனைப்ப*
*விருந்து அயர் விருப்பினள் வருந்தும்.'*

*(நற். 374:7-8)*

இரவில் விருந்திவர் வந்தால் கூட அவரை உபசரிப்பதற்கு மகளிர் பின்னடைவது இல்லை.

*'எல்லி வந்த நல்இசை விருந்திற்கு*
*கிளர் இழை அரிவை! நெய்துழந்து அட்ட*
*விளர்ஊன் அம்புகை எறிந்த நெற்றி,*
*சிறு நுண் பல்லியர் பொறித்த*
*குறுநடைக் கூட்டம் வேண்டுவோரே.*

*(நற். 41:6-10)*

வந்த விருந்துக்காகச் சோறு ஆக்கியதனால் வியர்வை வழிவதையும், இரவென்றும் பாராது விருப்புடன் உபசரிப்பதையும் இப்பாடற் பகுதியில் காண்கிறோம். புதியராய் வந்தவர்களது வருத்தம் நீங்க இனிய கூறி ஆடவர் இல்லாத போழ்தும் குழந்தைகளைக் கொண்டு விருந்துக்கு வேண்டுவன நல்கினர்.

*''சேட்புலம்பு அகல இனிய கூறி'' (மலைபடு. 167)*
*'மகமுறை தடுப்ப மனைதோறும் பெறுகுவீர், (மலை. 185)*

என்பதனால் ஆடவர் இல்லாத காலத்திலும் மகளிர் விருந்தோம்பியதை அறியலாம். தம்மிடத்தில் பொருள் சிறிதளவாக இருந்த போதிலும், அதனை வருவார்க்குப் பகுத்து அளித்து மகிழ்ந்தனர் இல்லக் கிழத்தியர்.

*'தவச்சிறு ஆயினும் மிகப்பலர் என்னாள்*
*நீள் நெடும் பந்தர் ஊண்முறை ஊட்டும்*
*இற்பொலி மகடூஉப் போல, சிற்சில*
*வரிசையின் அளிக்கவும் வல்லள்'*

*(புறம். 331:7-10)*

எனவே, செல்வர் வறியர் எனப் பேதமின்றி எல்லோரும் தத்தமக்கு இயன்ற வகையில் விருந்தோம்பும் பண்பை மேற்கொண்டிருந்தனர் என்பது போதரும்.

## மக்கட் பேறு

இல்வாழ்க்கையின் சிறந்த பேறாக உள்ளது ''அறிவறிந்த மக்கட்பேறு'' எவ்வளவு பெருஞ்செல்வம் படைத்து இன்பமாக

உண்டு உடுத்து வாழ்ந்தாலும் மக்களைப் பெறாதார் வாழ்வு சிறப்பதில்லை. குழந்தைகளின் தளர்நடையும், மழலைப் பேச்சும், அவர்கள் சோற்றை அளைந்து உண்ணும்பேறும், மிக இன்பம் பயப்பனவாகும்.

*'படைப்புப் பல படைத்துப் பலரோடு உண்ணும்*
*உடைப் பெருஞ் செல்வர் ஆயினும் இடைப்படக்*
*குறுகுறு நடந்து, சிறுகை நீட்டி,*
*இட்டும் தொட்டும் கவ்வியும் துழந்தும்*
*நெய்யுடை அடிசில் மெய்பட விதிர்த்தும்*
*மயக்குறு மக்களை இல்லோர்க்குப்*
*பயக்குறை இல்லை - தாம் வாழு நாளே.'*

*(புறம். 188)*

என்று பாண்டியன் அறிவுடை நம்பியாகிய அரசனே மக்கட் பேற்றின் சிறப்பைக் குறித்துக் கூறுவது கருதற்பாற்று. தங்கள் குடிப்பிறந்த முன்னோர்களுக்கு நீர்க்கடன் அளித்த அவர்களுக்கு நற்கதியளிப்பவர் புதல்வர்களே யாவர்.

*'தென்புல வாழ்நர்கு அருங்கடன் இறுக்கும்*
*பொன் போல் புதல்வர்ப் பெறா அதீரும்'*

*(புறம். 9:3-4)*

*ஒடுங்கு ஈர் ஓதி ஒண்ணுதல் கருவில்*
*எண் இயல் முற்றி, ஈர் அறிவு புரிந்து*
*சால்பும் செம்மையும் உளப்படப் பிறவும்.*
*காவற்கு அமைந்த அரசு துறைபோகி*
*வீறுசால் புதல்வற் பெற்றனை, இவணர்க்கு*
*அருங்கடன் இறுத்த செருப்புகல் முன்ப'*

*(பதி. 74:17-22)*

நீர்க்கடன் செய்தற்குப் புதல்வர்ப் பேறு இன்றியமையாதது என்பதனைப் பொத்தியார் என்னும் புலவர் வாழ்க்கையாலும் அறியலாம். கோப்பெருஞ்சோழன் வடக்கிருந்தபோது, தன்னுடன் வடக்கிருக்க வந்த பொத்தியாரைப் புதல்வர்ப் பேறு பெற்ற

பின்னரே வடக்கிருத்தல் முறையாகும் என்று கூறித் தடுத்து விடுகிறான். தனக்குப் புதல்வன் பிறந்த பின் பொத்தியார் கோப்பெருஞ்சோழன் வடக்கிருந்த இடத்துக்கு வந்து தாமும் அதனை மேற்கொள்கின்றார்.

*'அழல் அவிர் வயங்கு இழைப் பொலிந்த மேனி*
*நிழலினும் போகா, நின் வெய்யோள் பயந்த*
*புகழ்சால் புதல்வன் பிறந்தபின்வா' என*
*என் இவண் ஒழிக அன்பிலாளா!*
*எண்ணாது இருக்குவை அல்லை;*
*என் இடம் யாது? மற்று இசை வெய்யோயே'*

என்னும் பொத்தியார் வாக்கினால் பேற்றின் இன்றியமையாமை தெரிய வருகிறது.

புதல்வரைக் 'குடிக்கு விளக்கு' என்று போற்றினர். இம்மைக்கும் மறுமைக்கும் இன்பம் பெறுவோர் புதல்வர்ப் பெற்றோரே என்பது பழமொழியாகவே நாட்டில் வழங்கியது.

*'கடவுட் கற்பொடு குடிக்கு விளக்கு ஆகிய*
*புதல்வற் பயந்த புகழ்மிகு சிறப்பின்*
*நன்னராட்டிக்கு அன்றியும், எனக்கும்,*
*இனிது ஆகின்றால்; சிறக்க, நின் ஆயுள்!'*

*(அகம்.184:1-4)*

*'இம்மை உலகத்து இசையொடும் விளங்கி,*
*மறுமை உலகமும் மறுஇன்று எய்துப,*
*செறுதரும் விழையும் செயிர்தீர் காட்சிச்*
*சிறுவர்ப் பயந்த செம்மலோர் எனப்*
*பல்லோர் கூறிய பழமொழி எல்லாம்*
*வாயே ஆகுதல் வாய்த்தனம்'*

*(அகம். 66:1-6)*

குழந்தையை வளர்த்துச் சான்றோனாக ஆக்குதல் தாய் தந்தையரின் பெருங்கடமையாகிறது.

''ஈன்று புறந்தருதல் என்தலைக்கடனே
சான்றோனாக்குதல் தந்தைக்குக் கடனே''

(புறம். 312:1-2)

என்கிறாள் ஒரு தாய்.

அறிவு நலம் சான்ற மக்களைப் பெற்ற தாய் தந்தையரை உலகம் போற்றிப் புகழ்ந்தது.

''நீ வாழியர், நின் தந்தை
தாய் வாழியர், நிற்பயந்திசினோரே''

(புறம். 137:14-15)

என்று நாஞ்சில் வள்ளுவனை வாழ்த்திய பாடலால் அறியலாம்.

தாயில்லாத பிள்ளைகளின் நிலை இரங்கத் தக்கதாயிருக்கும். வருத்த நிலைமைக்குத் தாயில்லாத குழந்தை நிலையை எடுத்துக்காட்டுவது மரபு (புறம். 4;18-19; 230:7; 379:14-15). குழந்தைக்கு எவ்விதத் துன்பமும் நேராது மிகக் கவனத்துடன் பாதுகாக்க வேண்டும். இத்தகைய விழிப்பு குடிகளைக் காப்பாற்றும் மன்னனுக்கும் அவசியம். குழந்தையைக் கவனமாக வளர்ப்பதைப் போலக் குடிகளைப் பாதுகாத்தல் வேண்டுமென்று அரசன் அறிவுறுத்தப்படுகிறான் (புறம். 5: 6-7; பதி. பதி.6-9).

குழந்தையின் தளர்நடையும், மழலையும் பெற்றோர்க்கு இன்பம் தருகின்றன. குழந்தையைத் தழுவிக் கொள்ளும்போது அது தம் கைகளால் பெற்றோரின் நெற்றி, கன்னம் முதலியவற்றைத் தடவி அவர்க்கு இன்பம் செய்கிறது. தாய் குழந்தைக்கு அம்புலி காட்டியும் பராக்குக் காட்டியும் உணவை உண்பிக்கின்றாள்.

''கிளர்மணி ஆர்ப்பச் சாஅய்ச் சாஅய்ச் செல்லும்
தளர் நடை காண்டல் இனிது;
ஐய காமரு நோக்கினை 'அத்தத்தா' என்னும் நின்
அம்புலி காட்டல்' இனிது;
ஐய! திங்கட் குழவி வருக! என யான் நின்னை
அம்புலி காட்டல் இனிது;''

(கலி 80: 10-11; 14-15; 18-19)

'கண்ணும் நுதலும், கவுளும் கவவியார்க்கு
ஒண்மை எதிரிய அம்கையும், தண் எனச்
செய்வன சிறப்பின் சிறப்புச் செய்து'

(கலி. 83: 17-19)

'பால் பெய் வள்ளம் சால்கை பற்றி,
என்பாடு உண்டனை ஆயின், ஒருகால்,
நுந்தைபாடும் உண்' என்று ஊட்டி,
பிறந்ததற் கொண்டும் சிறந்தவை செய்து, யான்
நலம் புனைந்து எடுத்தஎன் பொலந்தொடிக் குறுமகள்'

(அகம். 219: 5-9)

'நாவொடு நவிலா நகைபடு தீம்சொல்
யாவரும் விழையும் பொலந்தொடிப் புதல்வன் '

(அகம். 16: 4-5)

'யாழொடும் கொள்ளா; பொழுதொடும் புணரா;
பொருள் அறிவாரா; ஆயினும் தந்தையர்க்கு
அருள் வந்தனவால், புதல்வர் தம் மழலை;'

(புறம். 92: 1-3)

'மை அற விளங்கிய மணிமருள் அவ்வாய்தன்
மெய் பெறா மழலையின் விளங்கு பூண் நனைத்தர
பொலம் பிறையுள் தாழ்ந்த புனைவினை உருள்கலன்
நலம் பெறு கமழ் சென்னி, நகையொடு துயல்வர
உரு எஞ்சாது இடைகாட்டும் உடை கழல் அம்துகில்
அரிபொலி கிண்கிணி ஆர்ப்பு ஒவா அடிதட்ப
பாலோடு அலர்ந்த முலை மறந்து, முற்றத்துக்
கால்வல்தேர் கையின் இயக்கி, நடைபயிற்றா,
ஆல் அமர் செல்வன் அணிசால் விறல்
போல, வரும் என் உயிர்! ' (கலி. 81:1-10)

இவற்றால், பண்டை மக்கள் மக்கட் பேற்றிலும் மக்களை வளர்ப்பதிலும் எவ்வளவு கருத்துச் செலுத்தினர் என்பது புலனாகிறது. குழந்தையின் சொல்லும் செயலும் நடையும் வேறு பல செயல்களும் பெற்றோர்க்கு எத்தகைய பெரு மகிழ்ச்சியை ஈந்தது என்பதும் இல்லற வாழ்க்கையை எவ்வாறு இன்பமாகக் கழித்தனர் என்பதும் நன்கு புலனாகின்றன.

## குடிப்பிறப்பு

ஒழுக்கம், வாய்மை, புகழ் முதலியனவெல்லாம் அவரவர்தம் குடிப்பிறப்பிற்கு ஏற்ற வகையில் அமைவது இயல்பு.

*''தந்தையர் ஒப்பர் மக்கள்''* *(தொல். கற்பு.6)*

என்கிறார் தொல்காப்பியர்.

*''நாடும் ஊரும் இல்லும் குடியும்*
*பிறப்பும் சிறப்பும் இறப்ப நோக்கி*
*அவன் வயின் தோன்றிய கிளவியொடு தொகைஇ''*
*(தொல். பொருள். களவு. 24: 33-35)*

என்பதனால் ஒருவனுடைய குணம் செயல்களை அவன் பிறந்த நாடு, ஊர், குடியிருப்பு, பிறந்த குடி, அக்குடியுள் அவனது ஏற்றம் முதலிய செயல்களோடு ஒத்துப்பார்த்து மதிப்பிடுதல் முறையாகும் என்பது தெரிய வருகிறது. குடிப்பிறப்பு ஒருவனது சிறப்பிற்கு முக்கிய காரணமாகும். ''குடி நன்குடையன்'' (அகம். 352: 8) என்று ஒருவன் குறிக்கப்படுகிறான்.

*'நின்னொடு, தொன்று மூத்த உயிரினும் உயிரொடு*
*நின்று மூத்த யாக்கை அன்ன, நின்*
*ஆடுகுடி மூத்த விழுத் திணை'*
*(புறம். 24: 26-28)*

என்பதினால் குடிகளுள்ளும் மிகப் பழமையால் மூத்த குடியும் சிறப்பாக எடுத்துப் பேசப்படுதல் காணலாம். ஏற்றத் தாழ்வில்

லாத சிறந்த குடிப்பிறப்பு ''நூறு இதழ்களையுடைய தாமரை மலர்களின் வரிசையைப் போன்று சிறந்து விளங்குவது'' என்று போற்றியுள்ளார்.

*''சேற்று வளர் தாமரை பயந்த, ஒண்கேழ்,*
*நூற்று இதழ் அலரின் நிரை கண்டன்ன,*
*வேற்றுமை இல்லா விழுத்திணைப் பிறந்து,*
*வீற்றிருந்தோரை எண்ணும் காலை,*
*உரையும் பாட்டும் உடையோர் சிலரே;*
*மரை இலை போல மாய்ந்திசினோர் பலரே''*
*(புறம். 27: 1-6)*

தாமரையிலையைப் போல மாய்ந்து சிறப்பின்றிச் செல்கின்ற மக்களே மிகப் பெரிய அளவினராவர்.

குடிப்பிறப்பிற்கு ஏற்ற குணம், செயல்கள் ஒருவர் மாட்டு அமைவது இயற்கை, தவிரவும், அக்குடியிற் சிறந்து விளங்கிய முன்னோரின் பெருமையை எடுத்துக்கூறி, நீயும் அத்தகைய நிலைமையை ஆதல் வேண்டும் எனக் கூறுதலும் ஒரு மரபு (பதிற். 69; 72:4:85:5). சோழர்களைப் பற்றிக் குறிக்கும் காலத்துப் பருந்தின் தாக்குதலின்று புறாவைக் காப்பாற்ற வேண்டித் தன் அழிவையும் பாராது தராசில் ஏறிய சிபியை எடுத்துக் காட்டுகின்றனர். (புறம். 43:5-8; 46:1-2).

ஒருசமயம் - சோழன் நலங் கிள்ளி தம்பி மாவளத்தானும் தாமப்பல் கண்ணனார் என்னும் புலவரும் வட்டாடியிருந்த பொழுது, மாவளத்தான் இடையே வெகுண்டு, வட்டுக் கொண்டு புலவர் மேல் எறிய, அவர் 'நீ சோழன் மகன் அல்லை' என்று கடுமொழி கூற, அவன் நாணினான். ''கைவண் தோன்றல் ஐயமுடையேன்' என அவனுடைய பிறப்பிலே தாம் ஐயுறுவ தாகக் கூறி, 'நின் முன்னோர் புரியாத செயலை நீ செய்ததே எனது ஐயமுடைக்கு ஏதுவாம்' எனக் கடிந்து பேசினார். அப்பொழுது தவறுணர்ந்த மாவளத்தான் மிகவும் நாணினான். அதுகண்ட புலவர் தாமப்பல்கண்ணனார், பிறர் பிழைத்தன

பொறுத்தல் - இக்குடிப் பிறந்தோர்க்கு இயல்பே; உண்மையில் பிழை செய்தவன் நானே' எனக் கூறி அவனை வாழ்த்தினர்.

*'தம்மைப் பிழைத்தோரில் பொறுக்கும் செம்மல்*
*இக்குடிப் பிறந்தோர்க்கு எண்மைகாணும் என*
*காண்தகு மொய்ம்ப காட்டினை - (புற. 43: 18-19)*

என அவனுடைய குடியின் இயல்பினை எடுத்தோதுகின்றார் புலவர்.

## இழிபிறப்பு

மக்கட் பிறப்பில் குருடு, தசைத்திரள், கூன், குறள், ஊமை, செவிடு, மா, மருள் என்னும் எட்டும் சிறப்பற்ற இழிந்த பிறப்பாகவே கருதப்படும்.

*'சிறப்பு இல் சிதடும், உறுப்புஇல் பிண்டமும்,*
*கூனும், குறளும், ஊமும், செவிடும்,*
*மாவும், மருளும் உளப்பட வாழ்நர்க்கு*
*எண் பேர் எச்சம் என்று இவை எல்லாம்*
*பேதைமை அல்லது ஊதியம் இல்' என,*
*முன்னும் அறிந்தோர் கூறினர்;'*

*(புறம். 28:1-6)*

இந்த இழிபிறப்புக்கள் அறம், பொருள், இன்பங்களை அடைவதற்குப் பயன்படா. எனவேதான் இவற்றால் 'ஊதியம் இல்லை' என்று அறிந்தோர் உரைக்கின்றனர்.

## இளமையின் வளமை

இளமைப் பருவம் வாழ்க்கையில் சிறப்புடைய பருவம். செல்வத்தின் பயனாய் இன்பம் நுகர்வதற்கு ஏற்ற பருவம் இதுவே. சென்ற இளமையை மீட்பது இயலாதது. ஆகவே, இளமையில் வளத்தைத் தேடி இன்பத்தை அனுபவிப்பது மக்களின் குறிக்கோளாகும்.

*'இளமையில் சிறந்த வளமையும் இல்லை;*
*இளமை கழிந்தபின்றை, வளமை*
*காமம் தருதலும் இன்றே'*

*(நற். 126: 8-10)*

*'அரிதரோ சென்ற இளமை தரற்கு''*

*(கலி. 18: 11-12)*

*'இனிது உடன் கழிக்கின், இளமை*
*இனிதால் அம்ம, இனியவர்ப் புணர்வே''*

*(ஐங். 415: 3-4)*

## அன்பு

வாழ்வின் இன்பத்திற்கு அடிப்படையாகவுள்ளது அன்பு. அன்பு என்பது ஒருவர் நெஞ்சம் மற்றவர் நெஞ்சத்தோடு ஒன்றிக் கலப்பதாகும். உத்தமமான அன்பிற்குச் சேர்ந்து வாழ்தலும் கூடிப் பழகுதலும் முக்கியமன்று. அன்பு சுரக்கின்ற காலத்தில் அது இயல்பாகவே எழுந்து ஒருவரோடு மற்றவரைப் பிணித்துவிடும். முன்பின் பழகி அறியாத ஒரு ஆடவனுக்கும் ஒரு இளநங்கைக்கும் ஏற்பட்ட அன்பைக் குறித்து அந்த ஆடவன் வியந்து பேசுவது அன்பின் தோற்றத்தை நன்கு புலப்படுத்துகிறது.

*''யாயும் ஞாயும் யார் ஆகியரோ?*
*எந்தையும் நுந்தையும் எம்முறை கேளிர்?*
*யானும் நீயும் எவ்வழி அறிதும்?*
*செம்புலப் பெயல் நீர் போல*
*அன்புடை நெஞ்சம் தாம் கலந்தனவே''*

*(குறு. 40: 1-5)*

செம்புலப் பெயல்நீர் போல இயல்பாக எழுகின்ற பாச உணர்ச்சியே அன்பு. இது நீரைப் போன்று தண்மை பயப்பது. ''ஈரமுடைமையின் நீரோரனையை'' (பதி. 90:140). அன்பினால் ஒருவர்க்கொருவர் விருப்பம் மிகுதலும் இயல்பு. உயிர்க்கு உயிரன்னர் (குறு. 218:5) ''யாரினும் இனியன் பேரன்பினனே'' (குறு. 85: 1-2) என வருவன அன்பின் மிகுதியைப் புலப்படுத்தும்.

அன்பின் ஏதுவாக அருள் பிறக்கும். பொருளுக்காகப் பிரிகின்ற ஒருவன் அன்பையும் அருளையும் விடுத்து தன் மனத்தைப் பொருள் மேல் வைத்துச் செல்கிறான்.

''அருளும் அன்பும் நீக்கி, துணை துறந்து,
பொருள்வயிற் பிரிவோர்'' (குறு. 20: 1-2)

என்று இத்தகைய மனநிலையையுடைய ஒருவன் வருணிக்கப் படுகிறான். அருளும் அன்பும் நீக்கிப் பாவம் இழைத்தார் நரகத் திற்கு ஆளாவர் என்று நம்பினர்.

'அருளும் அன்பும் நீக்கி, நீங்கா
நிரயம் கொள்பவரொடு ஒன்றாது, காவல்
குழவி கொள்பவரின், ஓம்புமதி!'
(புறம். 5: 5-7)

என அரசன் ஒருவன் அறிவுறுக்கப்படுகிறான்.

ஒருவரையொருவர் கண்ணால் காணாமலேயே ஒத்த உணர்ச்சியுடையார்களிடத்து அன்பு பிறக்கும். கோப்பெருஞ் சோழனுக்கும் பிசிராந்தையாருக்கும் ஏற்பட்ட நட்பு, கண்டு பழகிய நட்பன்று. ஒருவர் தன்மையை ஒருவர் பிறர் மூலம் கேட்டு அதனால் வளர்ந்த அன்பின் முதிர்ச்சியே. பிசிராந் தையார் தனக்குரிய பெயராகத் தன் அன்புக்குரிய கோப் பெருஞ்சோழன் பெயரையே பிறர்பால் கூறிவந்தனர். கோப்பெருஞ்சோழனும் தான் வடக்கிருந்தபோது, செல்வக் காலத்தில் தன் நண்பன் தன்னை வந்து காணும் வாய்ப்பு நேரா விட்டாலும், இந்த துயரக் காலத்தில் நிச்சயம் வருவாரென்று நம்பினார். அவர் நம்பிக்கை பழுதாகாமல் பிசிராந்தையாரும் அங்கு வந்ததாகத் தெரிகிறது. பிசிராந்தையாரின் அன்பில் கோப் பெருஞ்சோழன் எவ்வகை நம்பிக்கை கொண்டிருந்தான் என்பது பின்வரும் அவன் உரையில் காணலாம்.

*'கேட்டல் மாத்திரை அல்லது, யாவதும்*
*காண்டல் இல்லாது யாண்டு பல கழிய,*
*வழு இன்று பழகிய கிழமையர் ஆயினும்,*
*அரிதே, தோன்றல்! அதற்பட ஒழுகல்' என்று,*
*ஐயங் கொள்ளன்மின், ஆர் அறிவாளீர்!*
*இகழ்விலன்; இனியன்; யாத்த நண்பினன்;*
*புகழ் கெட வரூஉம் பொய் வேண்டலனே;*
*தன் பெயர் கிளக்கும் காலை, 'என் பெயர்*
*பேதைச் சோழன்' என்னும், சிறந்த*
*காதற்கிழமையும் உடையன்; அதன் தலை,*
*இன்னது ஓர் காலை நில்லலன்;*
*இன்னே வருகுவன்; ஒழிக்க, அவற்கு இடமே!'*
*(புறம். 216)*

என்று கோப்பெருஞ்சோழன் பிசிராந்தையாரின் மிக்க அன்பு பட்ட உரிமையை எவ்வளவு பாராட்டிப் பேசுகின்றான் என்பது இதனால் புலப்படும்.

கள்ளில் ஆத்திரையனார் என்னும் புலவர் ஆதனுங்கன் என்னும் வள்ளலிடம் தான் கொண்ட அன்பின் திறத்தைப் புலப் படுத்துகின்றார். எப்பொழுதும் தான் ஆதனுங்கனையே எண்ணி அவன் புகழைப் பேசுவதினால், அவன் அவரது நெஞ்சத்தில் குடிபுகுந்துவிட்டானாம். அவருடைய நெஞ்சத்தைத் திறந்து பார்த்தால் அங்கே ஆதனுங்கனைக் காணலாம் என்கிறார். அவனை மறக்கும் காலம் என்றும் நேராது என்றும், இறக்கும் பொழுதுகூட நினைவு உள்ளவரையில் அவன் எண்ணமே நிலைத்து நிற்கும் என்றும் கூறுகிறார்.

*''எந்தை! வாழி; ஆதனுங்க என்*
*நெஞ்சம் திறப்போர் நிற்காண்குவரே;*
*நின் யான் மறப்பின், மறக்கும் காலை*
*என் உயிர் யாக்கையின் பிரியும் பொழுதும்*
*என் யான் மறப்பின் மறக்குவென்''*
*(புறம். 175: 1-5)*

என வரும் புலவரது உரை அவனிடத்தில் அவருக்குள்ள பேரன்பின் எல்லையைத் தொட்டுக்காட்டுகிறது.

## உத்தமமான நட்பு

உயிருடன் உயிர் கலந்து ஒருயிராய் ஒன்றிய தன்மைய தாம் உத்தமமான நட்பு. இந்நட்பில் வெறுப்பு என்பது தலைக் காட்டுவதில்லை. இந்நட்பிற்குப் பிரிவு என்பதும் என்றும் இல்லை. யாராலும் பிரிக்க முடியாத அத்தனை நெருக்கமாக அமைந்தது உயர்ந்த நட்பு. இருதலைப் புள்ளிற்கு ஒருயிர் அமைந்தாற் போன்று ஈருடல் ஒருயிராய் விளங்கும் நீர்மை யராவர் நட்பினர். மேலும், பிறப்புதோறும் தொடர்ந்து வரும் ஒரு பிணைப்புமாகும்.

*'துனி இன்று இயைந்த துவரா நட்பின்*
*இனியர் அம்ம, அவர்? என முனியாது*
*நல்குவர் நல்ல கூறினும், அல்கலும்,*
*பிரியாக் காதலொடு உழையர் ஆகிய'*

*(அக. 241: 1-5)*

*'யாத்தேம்; யாத்தன்று நட்பே;*
*அவிழ்த்தற்கு அரிது; அது முடிந்து அழைந்தன்றே'*

*(குறு. 313: 4-5)*

*'கடலினும் பெரிது எமக்கு அவருடைய நட்பே; '*

*(ஐங். 184:4)*

*'ஒன்றுதும்' என்ற தொன்றுபடு நட்பின் காதலர் '*

*(நற். 109:1-2)*

*'பயிலியது கெழீஇய நட்பு - '* *(குறு: 2-3)*

*'உயிர் கலந்து ஒன்றிய தொன்றுபடு நட்பின்*
*செயிர்தீர் நெஞ்சமொடு செறிந்தோர்'*

*(அக. 205: 1-2)*

*'உயிர் ஓரன்ன செயிர் தீர் நட்பின்*
*இருதலைப் புள்ளின் ஓர் உயிரம்மே'*

*(அக். 12:4-5)*

என்றும் பிரியாத பிணைப்பு மிகச் சீரியார் மாட்டே நிகழ்வது. செல்வக்காலத்து உடனிருந்து துன்பக் காலத்தில் பிரிவோர் சீரியரல்லர். பொருளுக்கு ஆசைப்பட்டு நட்பிற்குத் துரோகம் விளைவிப்போர் சிறப்புடையரல்லர். சேர்ந்திருக்கும் காலத்து புகழ்ந்து கூறிப் பிரிந்த இடத்தில் பழிகூறுவோர் நட்பு சீரியதன்று. நட்பினர்களிடமிருந்து மறைபொருள்களைத் தெரிந்து கொண்டு அவற்றை வெளியிலே பரப்புவோர் பெருமையுடையாரல்லர்.

சிறந்த நட்பினர்கள் மாட்டும் சிறிது கூட ஐயம் நேரா வண்ணம் ஒருவருக்கொருவர் நடந்துகொள்வது இன்றியமையாதது. சிறுதவறு நேரினும் அது நட்பினர்களிடம் பெரும்பிளவினை உண்டாக்கும். நெருங்கிப் பழகிய பின் பிரிவதென்பதும் மிக துன்பந் தருவதாகும். ஆகையால் பெரியோர் ஒருவரிடம் நட்புச் செய்யுங்காலத்து அவர்களுடைய இயல்புகளை நன்கு ஆராய்ந்து நட்புக் கொள்வர். நட்புக் கொண்ட பின் ஆராய்ச்சி செய்வதென்பது பொருந்தாத செயலுமாகும்.

*'நன்று அல் காலையும் நட்பின் கோடார்'* *(அக. 113:1)*
*'கடல் சூழ் மண்டிலம் பெறினும்*
*விடல் சூழலன் யான் நின்னுடைநட்பே'*
*(குறு 300:7-8)*
*'சிறப்புச் செய்து உழையராப் புகழ் ஏத்தி,மற்று அவர்*
*புறக் கொடையே பழி தூற்றும் புல்லியார்*
*தொடர்பு போல் '*
*(கலி. 25: 15-16)*
*செல்வத்துள் சேர்ந்தவர் வளன் உண்டு,மற்று அவர்*
*ஒல்கத்து நல்கியா உணர்விலார் தொடர்பு போல்?'*
*(கலி. 25:23-24)*
*நன்றும்*
*'விழுமிதின் கொண்ட கேண்மை நொவ்விதின்*
*தவறும் '* *(நற்.315:8-10)*
*'பழகிய பகையும் பிரிவு இன்னாதே'*
*(நற்.108:6)*
*'பெரியோர்*
*நாடி நட்பின் அல்லது,*
*நட்டு நாடார், தம் ஒட்டியோர் திறத்தே'* *(நற்.32:8-9)*

என வரும் கருத்துரைகளைப் புலவர் தம் பாடல்களிலே காண்கிறோம்.

நண்பர்கள் ஒருவருக்கொருவர் உதவியாக வாழ்வது எல்லாத் துறையிலும் நிகழும் ஒரு செயலாகும். ஒரு மன்னனுடைய வலிமைக்கு நட்பரசர்களும் உவக்கும்படியாக அவர்கள் வேண்டுவன கொடுத்து அவர்கள் வாழ்க்கையைச் சிறக்கச் செய்வது உலகியலாம். நள்ளி என்பான்,

*'நட்டோர் உவப்ப, நடைப்பரிகாரம்*
*முட்டாது கொடுத்தவர் '* (சிறு. 104-105)

என்று சிறப்பிக்கப்படுகிறான். 'நட்டவர் குடி உயர்க்குவை' (மதுரை 131) என்று தலையானங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் தமது நண்பர்களை மேன்மைப்படுத்தியதைக் கவிஞர் குறிப்பிடுகிறார். கண்ணோட்டமுடைய பேரன்பர்கள் தமது அன்பினர் நஞ்சைக் கொண்டு தரினும், மறுக்காது வாங்கியுண்ணும் பேரருளுடையராய் விளங்கினர். இவரை 'நாகரிகர்' என்று குறிப்பிடுகின்றார் கவிஞர்.

*'முந்தை இருந்து நட்டோர் கொடுப்பின்,*
*நஞ்சும் உண்பர் நனி நாகரிகர்'*
(நற்: 355: 6-7)

என்பது கவிஞர் வாக்கு.

சோழன் நல்லுருத்திரன் என்பான் தான் உவக்கும் நண்பர்கள் யார் என்பதைப் புறம் 190 ஆம் பாடலில் விளங்க உரைக்கிறான். விளைந்த வயலில் உள்ள நெற்கதிர்களைக் கொய்து கொண்டு வந்து, தனது வளைக்குள் நிறைத்து வைக்கும் எலி போன்ற சிறு முயற்சியுடையாரும், தம்மிடமுள்ள செல்வத்தைப் பிறர்க்கு வழங்காது இறுகப் பிடிக்கும் உலோப குணம் உடையாரும் ஆகிய இத்தன்மையுடையார் நட்பு இல்லாதொழியட்டும் என்கிறான்: புலி தான் கொன்ற முள்ளம்பன்றி ஆகிய இரை இடப்பக்கத்தே விழ, அதனை

உண்ணாது சென்று, பெரியமலைப் பக்கத்திலே களிறாகிய இரையை வலப்பக்கத்திலே வீழும்படியாகக் கொன்று தின்னுவது போன்ற உயர்ந்த மேற்கோள்களையுடையவர்களது நட்பே தனக்கு வேண்டுமென்கிறார்.

கோப்பெருஞ்சோழன் தன் நண்பர் பிசிராந்தையாரைப் பற்றிக்கூறும் பொழுது செல்வக் காலத்தில் வாராவிட்டாலும் துன்பக் காலத்தில் நிச்சயம் வருவார் என்கிறான். (புறம். 215: 8-9). கோப்பெருஞ்சோழன் கூறியபடியே அவன் வடக்கிருந்து துன்பச் சூழலில் நட்பைப் பற்றுக் கோடாகக் கொண்டு பிசிராந் தையார் அங்கு வர எல்லோரும் வியப்புறுகின்றனர். (புற. 21) பொன், பவளம், முத்து முதலியன வெவ்வேறு இடங்களில் பிறந்த போதிலும் ஆபரணம் அமைக்குங்காலத்து ஒரே இடத் தில் கூடுவது போல எப்பொழுதும் சான்றோர் சான்றோரையே நாடுகின்றனர் என்று கண்ணகனார் என்னும் புலவர் அப் பொழுது கூறினார்.

*'பொன்னும், துகிரும், முத்தும், மன்னிய*
*மாமலை பயந்த காமரு மணியும்,*
*இடைபடச் சேய ஆயினும், தொடை புணர்ந்து*
*அருவிலை நன்கலம் அமைக்கும் காலை,*
*ஒரு வழித் தோன்றியாங்கு - என்றும் சான்றோர்*
*சான்றோர் பாலர் ஆப;*
*சாலார் சாலார் பாலர் ஆகுபவே.'*

*(புறம். 218: 1-7)*

என்பது கோப்பெருஞ்சோழனோடு பிசிராந்தையாரும் உடன் வந்து வடக்கிருக்கக் கண்டு வியந்து போற்றிய உரைகளாகும்.

## சான்றோர்

சான்றோர் ·,கல்வி கேள்விகளாற் சிறந்து, என்றும் அமைதியான கொள்கைகளையுடைவர்களாவர்; அன்புடைய உள்ளத்தினராயும் அருள் நிறைந்த செய்கையினராயும் விளங்கு

வர். உலகிற்கு நல்ல நெறிகளை வகுத்துக் காட்டுவாரும் இவர் களேயாவர். தீமை செய்தார் மாட்டும் பொறுமையாய் நன்மையே செய்யும் இயல்பினராவர். செய்யத்தக்க அறங் களைச் செய்யாது விடுத்தல் பழியாகும் என்பதைக் கருத்தில் கொண்டவர். ஏனையோர் புகழும் முன்பே பெரிதும் நாண முடையராயிருப்பர். அத்தகைய இவர்கள் பழிபடும் செயலைக் கனவிலும் கருதார். உயிர்களையெல்லாம் காக்கும் பேரருள் உள்ளம் படைத்தவர்கள்.

*'நாருடை நெஞ்சத்து ஈரம் பொத்தி,*
*ஆன்றோர் செல்நெறி வழா அச் சான்றோன் '*
*(நற். 233: 7-9)*

*'சான்றோர்*
*கடன் நிலை குன்றலும் இலர்' (நற், 327:4-5)*

*'தீமை கண்டோர் திறத்தும் பெரியோர்'*
*தாம் அறிந்து உணர்க' (நற். 116: 1-2)*
*'பேணுப பேணார் பெரியோர் என்பது .*
*நாணுத் தக்கதன்று, அதுகாணுங்காலை, '*
*(நற். 72:1-2)*

*'சான்றோர்*
*புகழும் முன்னர் நாணுப*
*பழியாங்கு ஒல்பவோ காணுங்காலே'*
*(குறு. 252: 6-8)*

*'முன் திணை முதல்வர்க்கு ஓம்பினர் உறைந்து,*
*மன்பதை காப்ப அறிவு வலியுறுத்தும்*
*நன்று அறி உள்ளத்துச் சான்றோர்'*
*(பதிற்: 72: 4-6)*

இங்ஙனமாகப் பெரியோர் பழிநீக்கிப் புகழ்வர எல் லோர்க்கும் நல்வழிகாட்டுதலின் அவரைப் பேணுதல் எல்லார்க் கும் சிறந்த ஒத்த ஒழுக்கமாகும். பெரியோரை வணங்கி வழி படுதலும் அவரை நன்கு பேணிக்காத்தலும் சிறந்த அறமாம்.

முதுவோர்க்கு முகிழ்த்த கையினை (சிறுபாண். 23) என்பது பெரியோர்க்குத் தெரிவிக்கும் வணக்கத்தினைக் குறிப்பிடுகிறது.

*'வணங்கிய சாயல், வணங்கா ஆண்மை,*
*இளந் துணைப் புதல்வரின் முதியர்ப்பேணி,*
*தொல் கடன் இறுத்த வெல்போர் அண்ணல்'*
*(பதிற். 70: 20-22)*

*'பெரியோர் பேணி, சிறியோரை அளத்தி*
*(பதிற். 79:3)*

இவற்றால் முதிய பெரியோர்கள் எவ்வாறு போற்றப்பட்டனர் என்பது விளங்கும்.

பெரியோர்கள் சென்ற செந்நெறிகளிலே சென்று வாழ்வதே அறவாழ்வாகும். அதுவே ஒருவனுக்கு ஆக்கத்தைத் தருவதுமாகும். இதுவே ஒவ்வொருவரும் செய்யத்தக்க முதற் கடமையென்பதை,

*'பெரியோர் சென்ற அடிவழிப் பிழையாது,*
*குட முதல் தோன்றிய தொன்று தொழு பிறையின்*
*வழிவழிச் சிறக்க, நின்வலம்படு கொற்றம்: '*
*(மதுரை. 192-194)*

என்பதனால் அறியலாம். சான்றோர் எவ்வளவு விருப்பமுடைய வராயினும் அதனை அடைய பழிச் செயல்களை நாடாது, அவற்றிற்கஞ்சி நீதியொடுபட்ட அறநெறியே மேற்கொள்வர். இதுவே ஏனையோர்க்கும் எடுத்துக்காட்டாக அமைந்த சிறந்த ஒழுக்கமாகும்.

*'கழியக் காதலர் ஆயினும், சான்றோர்*
*பழியோடு ஒரூஉம் இன்பம் வெஃகார்'*
*(அக. 112:11-12)*

*'நயனும் நண்பும், நாணு நன்கு உடைமையும்,*
*பயனும் பண்பும், பாடு அறிந்து ஒழுகலும்,'*
*(நற். 160:1-2)*
*'சால்பும் செம்மையும் உடையை' (நற். 196:4)*

செம்மையான ஒழுக்கம் எல்லோரும் விரும்பத்தக்கது. பெரியோரிடத்தும் அந்தணர்களிடத்தும் ஏனையோரிடத்தும் எவ்வெவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதைத் தெரிவிப்பதே ஒழுக்க முறையாம். ஒழுக்க முறையை அறிந்தோர் அறியாதார்க்கு எடுத்துக்காட்டல் உலகியல்.

*'அந்தணர் திறத்தும், சான்றோர் தேஎத்தும்*
*அந்தம் இல் சிறப்பின் பிறர் பிறர் திறத்தினும்,*
*ஒழுக்கம் காட்டிய குறிப்பினும்'*
*(தொல். கற்பு. 5.)*

என்பதனால் ஒரு தலைவன் தன் காதலிக்கு அந்தணரிடத்தும் நடந்து கொள்ள வேண்டிய ஒழுக்கமுறைமை காட்டியது தெரிய வருகிறது. பெரியோர்கள் ஒன்றைத்தம் உள்ளம் விரும்பிய போதிலும் அவற்றை அடையும் முன்னதாகத் தமது கல்வி கேள்விகளால் நன்கு ஆராய்ந்து, அறம் பொருள் ஒழுக்கத்தில் வழுவாமல், தமது தகுதியையும் நோக்கிக் கண்ட பின்னரே, செயலில் ஈடுபடுவர். இதுவே அவர்க்குரிய சிறந்த ஒழுக்கமாம். எதனையும் இயற்றுமுன்னர் அதனால் நேரும் விளைவுகளை நன்கு ஆராய்ந்து அறத்தோடு பட்டதை இயற்றலே சிறந்த ஒழுக்கமாகும்.

*'விழையா உள்ளம் விழையும் ஆயினும்,*
*என்றும் கேட்டவை தோட்டி ஆகமீட்டு, ஆங்கு,*
*அறனும் பொருளும் வழாமை நாடி,*
*தற்தகவு உடைமை நோக்கி, மற்று அதன்*
*பின் ஆகம்மே, முன்னியது முடித்தல்;*
*அனைய, பெரியோர் ஒழுக்கம்.'*
*(அகம். 286: 8-13)*

ஒழுக்கத்தில் தவறுதல் சிறுமை தரும் செயலாகும். பொன் முதலியவற்றாலான ஆபரணம் சிதைந்தால் அதை மீண்டும் செய்து கொள்ள இயலும். ஆனால், ஒழுக்கம் தவறினால் மீண்டும் சீர் செய்வது இயலாததாகும். ஒழுக்கத் தவறாகிய மாசைப் போக்கி மாண்புடைய புகழை நிறுத்துவது எத்தகைய உயர்நிலையுடையார்க்கும் இயலாது.

'முத்தினும் மணியினும் பொன்னினும், அத்துணை,
நேர் வரும் குரைய இயல்பும் கலம் கெடின், புணரும்,
சால்பும் வியப்பும் இயல்பும் குன்றின்,
மாசு அறக் கழீஇ வயங்கு புகழ் நிறுத்தல்,
ஆசு அறு காட்சி ஐயர்க்கும், அந்நிலை,
எளிய என்னார், தொல் மருங்கு அறிஞர்'

(குறிஞ்சி.13-18)

என்பதனால் ஒழுக்கத்தின் விழுப்பம் புலனாகும். ஒழுக்கமுடையாரே 'அறவர்' என்று சிறப்பிக்கப்படுவர். (அகம். 304: 19; புறம். 399:19) ஆற்றுதல், போற்றுதல் முதலிய ஒரு சில ஒழுக்க நியதிகள் கலித்தொகை 133-ஆம் பாடலில் குறிக்கப் பெற்றுள்ளன. அவை பின்வருமாறு:

'ஆற்றுதல்' என்பது ஒன்று அலந்தவர்க்கு உதவுதல்;
'போற்றுதல்' என்பது புணர்ந்தாரைப் பிரியாமை;
'பண்பு' எனப்படுவது பாடு அறிந்து ஒழுகுதல்;
'அன்பு' எனப்படுவது தன்கிளை செறா அமை;
'அறிவு' எனப்படுவது பேதையர் சொல் நோன்றல்;
'செறிவு' எனப்படுவது கூறியது மறாஅமை;
'நிறை' எனப்படுவது மறைபிறர் அறியாமை;
'முறை' எனப்படுவது கண்ணோடாது உயிர் வெளவல்;
'பொறை' எனப்படுவது போற்றாரைப் பொறுத்தல்''

(கலி.133: 6-14)

இவற்றால் மனம் மொழி மெய்களில் நிகழும் எண்ணம், சொல், செயல்களால் செய்யத்தக்க அறங்கள் சில புலனாகின்றன.

## அடக்கம்

அடக்கமென்பது மனம் மொழி மெய்களில் விகார மின்றி நலம் தீங்கு கலவாது ஐம்புலனும் அடங்கிய நிலையில் இருப்பதாகும். இத்தகைய நிலையுடையாரையே,

'ஆன்று அவிந்து அடங்கிய கொள்கைச்
சான்றோர்' (புற. 191:6-7)

என்பர். இத் தொடருக்கு ''நற்குணங்களால் அமைந்து, பணிய வேண்டும் உயர்ந்தோரிடத்துப் பணிந்து, ஐம்புலனும் அடங்கிய கோட்பாட்டினையுடைய சான்றோர்'' என்று பழைய உரைகாரர் விளக்கம் தருகிறார். ஆன்றோர்க்கு அடக்கமென்பது இயல்பாக அமைந்த குணமாகும். மலரும் காலம் வருமளவும் அரும்பாகக் குவிந்திருக்கும் மலர் அரும்புகளுடைய கிளைகளின் தோற்றம் அறிவான் அமைந்த பெரியோர் தம் காரியத்தை முடித்தற்கு அக்காலம் வருமளவும் அடங்கி ஒடுங்கும் நிலைக்கு ஒப்புக் காட்டப்பட்டிருக்கின்றது.

'ஆன்றவர் அடக்கம்போல் அலர் செல்லாச்
சினையொடும்'
(கலி. 32:8)

'ஒன்று மொழிந்து அடங்கிய கொள்கை'
(பதிற் 15:29)

என்பதனால் அடக்கமுடையார் சொல்லில் தூயராய் விளங்குதல் பெறப்படும்.

## பொய்ம்மொழி - மெய்ம்மொழி

பொய்ம்மொழி எல்லோராலும் வெறுக்கத்தக்கது; மத்தளத்தின் உள்ளிடம் வெறுமையாக இருப்பதைப் போல ஒன்றும் உள்ளீடு இல்லாதது. பொய்மொழியை வாய்மொழி போலத் தோற்றுமாறு உரைத்தல் ஒருவருடைய துன்பத்தைக் களைவதில்லை. பொய்ம் மொழிக்கு நாணாமை மிக வருத்தந் தரும் செயலாகும்.

*'வல்லை மன்ற பொய்த்தல்*
*வல்லாய் மன்ற, நீ அல்லது செயலே'*

*(ஐங். 287: 3-4)*

*'வள் உயிர்த் தண்ணுமை போல,*
*உள் யாதும் இல்லது ஓர் போர்வை அம் சொல்லலே?'*

*(நற். 310: 10-11)*

*'நீ அளந்து அறிவை நின் புரைமை, வாய்போல்*
*பொய்ம் மொழி கூறல் - அஃது எவனோ?*
*நெஞ்சம் நன்றே, நின் வயினானே'*

*(குறுந். 259: 6-8)*

*'வாய் போல் பொய்ம்மொழி எவ்வம் என் களைமா?'*

*(அகம். 3:14)*

*'எம்மின் உணரார் ஆயினும், தம்வயின்*
*பொய்படு கிளவி நாணலும்*
*எய்யார் ஆகுதல், நோகோ யானே?'*

*(ஐங். 472:3-5)*

பொய் கலவாத மெய்ம் மொழியே புகழ் தருவதாகும். எனவே, வாய்மொழியை 'காலை அன்ன சீர்சால் வாய்மொழி' (பதி21:4) என்று சிறப்பிக்கிறார் ஒரு புலவர். பொய்யறியா நாவை' செந்நா' என வழங்குவர். ''பொய்படு அறியா வயங்கு செந்நா'' (பதிற். 58:9). நல்ல வாய்மொழிக்கு என்றும் அஞ்ச வேண்டுவதில்லை. ''நல்மொழிக்கு அச்ச மில்லை''(குறுந். 392:2) நல்லோர் எதுவரினும் வாய்மைக்கு மாறாகப் பொய் கூறமாட்டார். பகைவரிடத்தும் பொய் பேசுதலை அறியார். வாய்மையில் பொய்ம்மொழி கலந்தால், அதனைச் சந்திர னிடத்தில் தீத் தோன்றினாற் போலக் கருதுவர். பூமியே புரண்டு வீழ்ந்தாலும் தாங்கள் சொன்ன சொல்லை மாற்றமாட்டார்கள். விளையாட்டிற்குக் கூடப் பொய் பேசுதலைக் குற்றமாகக் கருதுவர்.

செம்மையான நீதிமொழி எமனுடைய செங்கோலுக்கு ஒப்பிடப்படுகிறது. பொய் அணுகாது மெய்மையில் நிலைத்து

நின்று விருப்பு வெறுப்பின்றி எல்லோருக்கும் ஒப்ப நேர் கூர்தலையே நடுவுநிலையென்பர்.

*'பொய் அறியா, வாய் மொழியால்'*
*புகழ் நிறைந்த, நல்மாந்தர்'*

*(மதுரை.19-20)*

*'முந்நீர் மீமிசைப் பலர் தொழத் தோன்றி,*
*ஏமுற விளங்கிய சுடரினும்,*
*வாய்மை சான்றநின் சொல் நயந்தோர்க்கே'*

*(நற். 283:6-8)*

*'நின்ற சொல்லர்; நீடுதோறு இனியர் '*

*(நற்.1:1)*

*'நிலம் புடை பெயர்வதாயினும், கூறிய*
*சொல் புடை பெயர்தலோ இலர்'*

*(நற். 289:2-3)*

*'மாரி பொய்க்குவது ஆயினும்,*
*சேரலாதன் பொய்யலன் நசையே!'*

*(பதிற் 18:11-12)*

*'நண்ணார் தோத்தும் பொய்ப்பு அறியலனே, '*

*(பதிற். 20:9)*

*'நிலம் திறம் பெயரும் காலை ஆயினும்,*
*கிளந்த சொல் நீ பொய்ப்பு அறியலையே'*

*(பதிற். 63:6-7)*

*'நகையினும் பொய்யா வாய்மை'*

*(பதிற். 70:12)*

*'குன்று அகல் நல் நாடன் வாய்மையில் பொய்*
*தோன்றின்'*

*'தெரிகோல் அன்ன செயிர் தீம் செம்மொழி'*

*(அகம். 349:3-4)*

## புறங்கூறுதல் இல்லை

வல்லாரையும் மாட்டாரையும் ஒக்கக் கொண்டு திறமை யற்றவர்களையும் அவரவர் தகுதிக்குத் தக்க வண்ணம் குறை கூறாது பாராட்டிப் பேசுதல் உலக இயல்பு. தம்மோடு மாறு கொண்ட பகைவரானாலும் அவரைக் குறித்துப் புறங்கூறுதல் என்பது வெறுக்கத்தக்கது.

*'நல்லோர் குழீஇய நாநாவில் அவையத்து,*
*வல்லார் ஆயினும் புறம் மறைத்து, சென்றோரைச்*
*சொல்லிக் காட்டி, சோர்வு இன்றி விளக்கி,*
*நல்லிதின் இயக்கும் அவன் சுற்றத்து ஒழுக்கம்'*
*(மலைபடு. 77-80)*

*'மாறு கொண்டு ஆற்றார் எனினும், பிறர் குற்றம்*
*கூறுதல் தேற்றாதோன் குன்று'*
*(கலி. 43:18-19)*

## பொய்ச் சான்று பகர்தல்

பிறர் குற்றம் கூறுதல் போலவே பொய்ச் சான்று கூறு தலும் ஒரு தீய செயலே. ஒருவனுடைய நெஞ்சமே அவனுக் குரிய நெருங்கிய சான்று. பொய்ச் சான்று புகன்றவர் இருந்த மரமும் அழகிழந்து வாடியதாம்.

*அறிபவர்*
*நெஞ்சத்துக் குறுகிய கரி இல்லை*
*(கலி. 125:3-4)*

*கரி பொய்த்தான் கீழ் இருந்த மரம் போலக் கவின் வாடி*
*(கலி. 34:10)*

*அறிகரி பொய்த்தலின், ஆகுமோ அதுவே?*
*(நற். 196:9)*

## இனியவை கூறல்

இனிய சொல் யாவராலும் விரும்பப்படுவது, இனிய சொல்லுக்கு அன்னையின் பேச்சு உதாரணமாக எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

*'மெல்லிய இனியமே வரக் கிளந்து*
*(குறிஞ்சி 138)'*
*'அன்னை போல இனிய கூறியும்,*
*கள்வர் போலக் கொடியன் மாதோ'*
*(நற்.28: 3-4)*

அன்னையின் மொழி இன்பம் பயப்பது. அவளுடைய அன்பு கலந்தசெய்கைகளினால் ஆகும்.

## செய்ந்நன்றி மறவாமை

ஈன்று வளர்த்த தாய்தந்தையர்க்குப் புதல்வர் நன்றிக் கடன் செலுத்துவது உலகியற்கை. நன்றி செய்பவர்களைப் பாராட்டிப் பேசுதல் உதவியைப் பெற்றவர்களது பெருங்கடமை யாகும். செய்ந்நன்றி மறத்தல் கழுவாய் இல்லாத பெரும்பாவம் என்று குறிக்கப்பட்டுள்ளது. பசுவின் மடியை அறுத்தலும், மகளிர் கருவைச் சிதைத்தலும் பார்ப்பாருக்குப் பிழை செய்த லும் மிகக் கொடிய பாவங்களாகக் குறிக்கப்பட்டுள்ளன. இந்தக் கொடிய பாவங்களிலும் கொடிய பாவம் செய்ந்நன்றி மறத்தலாம்.

*'ஆன் முலை அறுத்த அறனிலோர்க்கும்,*
*மாண் இழை மகளிர் கருச்சிதைத்தோர்க்கும்,*
*பார்ப்பார்த் தப்பிய கொடுமையோர்க்கும்,*
*வழுவாய் மருங்கில் கழுவாயும் உள' என,*
*நிலம் புடைய பெயர்வது ஆயினும், ஒருவன்*
*செய்தி கொன்றோர்க்கு உய்தி இல், என,*
*அறம் பாடின்றே - ஆயிழை கணவ!'*
*(புறம்.34:1-7)*

துன்பக் காலத்தில் ஒருவன் செய்த உதவிக்குத் கைம்மாறாக மீண்டும் எதிர்நன்றிசெய்யாமற் போனால், அது அவர்தம் எச்ச மாகிய சந்ததிகளையும் பாதிக்குமாம்.

*'பெரு நன்றி ஆற்றின், பேணாரும் உளரே?'*

*(குறுந்: 115:1)*

*'முன் ஒன்று தமக்கு ஆற்றின், முயன்றவர் இறுதிக்கண்*
*பின் ஒன்று பெயர்த்து ஆற்றும் பீடுடையாளர் போல்'*

*(கலி. 34:4-5)*

*''ஒற்கத்துள் உதவியார்க்கு உதவாதான்; மற்றுஅவன்*
*எச்சத்துள் ஆயினும் அஃது எறியாது விடாதே காண்''*

*(கலி. 149:6-7)*

## இன்னா செய்யாமை

நன்மையடையும் பொருட்டாகப் பிறர்க்குத் தீங்கு செய்தலும் வெறுக்கத் தக்க செயலாகும்.

*'தமக்கு இனிது என்று, வலிதின் பிறர்க்கு இன்னா*
*செய்வது நன்று ஆமோ மற்று?'*

*(கலி.62:7-8)*

என்பதனால் பிறர்க்கு இன்னா செய்தல் கடிந்து ஒதுக்கப்பட்டது புலனாகும்.

## வறுமை வாழ்வு

உலகில் வறுமையுற்றோர்க்கு வளமான வாழ்வு இல்லை. தம்மைச் சூழ்ந்துள்ள சுற்றத்தைப் பாதுகாத்தும் தாம் விரும்புபவர்களோடு கூடி இனிதாக மகிழ்ந்து வாழும் வாழ்க்கை இவர்களுக்கு வாய்ப்பதில்லை. அருளுள்ளம் படைத்தவர்களாயிருந்த போதிலும் பொருளற்ற ஈத்துவக்கும் இன்பம் பெற இயலாது. இல்லோர்க்கு இன்பம் துய்த்தலும் கை கூடுவதில்லை. இளமையில் வறுமை இன்னும் கொடியதாகும். வறிஞர்களுடைய இல்வாழ்க்கை யாசிப்பதையும் விட இழி நிலையுடைதாகும்.

'ஈதலும் துய்த்தலும் இல்லோர்க்கு இல்'
(குறுந். 63:1)

'இல்லோன் இன்பம் காமுற்றா அங்கு'
(குறுந்.120:1)

'தம் நயந்து உறைவோர்த் தாங்கி, தாம் நயந்து
இன் அமர் கேளிரொடு ஏமுறக் கெழீஇ,
நகுதல் ஆற்றார் நல்கூர்ந்தோர்!' (அகம். 151: 1-3)

'இருள் நடு நெஞ்சத்து இடும்பை தீர்க்கும்
அருள் நன்கு உடையர் ஆயினும், ஈதல்
பொருள் இல்லோர்க்கு அஃது இயையாது'
(அகம்.335:1-3)

'வறியவன் இளமை போல், வாடிய சினைய வாய்'
(கலி. 10:1)

'ஓர் ஆன் வல்சிச் சீர் இல் வாழ்க்கை'
(குறுந். 295:4)

'இரந்தோர் மாற்றல் ஆற்ற
இல்லின் வாழ்க்கை இரவினும் இளிவு'
(குறுந். 283:1-2)

## மடிமை

வறுமை வாழ்க்கைக்கு மூல காரணமாயிருப்பது மடி. சோம்பலுக்கு இடம் கொடுத்தோர் வாழ்வு சிறத்தல் இல்லை. அறத்தில் தவறாமல் ஒழுகுதலும் சுற்றத்தார் துன்பங்களைப் போக்குதலும் பகைவர் செருக்கை அழித்தலும் மடியுள்ளார் பெறக்கூடாதவை. செல்வப் பெருக்கும் அதன் பயனால் பிறர்க்கு ஈதலும் புகழ்பட வாழ்தலும் மடியுள்ளார்க்கு வாய்ப்ப தில்லை.

'அரும் பொருட் கூட்டம் இருந்தோர்க்கு இல்'
(நற்: 252:4)

'அறம் தலைப் பிரியாது ஒழுகலும், சிறந்த
கேளிர்கேடு பல ஊன்றலும், நாளும்
வருந்தா உள்ளமோடு இருந்தோர்க்கு இல்'
(அகம்.173:1-3)

TAMIL NADU STATE DEPARTMENT OF ARCHAEOLOGY, LIBRARY, MADRAS

'செறுவோர் செம்மல் வாட்டலும், சேர்ந்தோர்க்கு
உறும் இடத்து உவக்கும் உதவி ஆண்மையும்,
இல் இருந்து அமைவோர்க்கு இல்'

(அகம்.231:1-3)

'நட்டோர் இளமையும், கேளிர் துன்பமும்,
ஒட்டாது உறையுநர் பெருக்கமும், காணூஉ,
ஒருபதி வாழ்தல் ஆற்றுவதில்லை'

(அகம். 279:1-3)

'இசையும் இன்பமும் ஈதலும் மூன்றும்
அசையுநர் இருந்தோர்க்கு அரும்புணர்வுஈன்ம'

(நற்.214:1-2)

## பொருள் முயற்சி

ஒருவன் தானும் உண்டு உடுத்தி இன்பமாக வாழ்ந்து, சுற்றத்தார்க்கும் பிறர்க்கும் உதவி செய்து நல்வாழ்வு வாழ்வதற்குக் காரணமாயிருப்பது அவர்களுடைய பொருள் முயற்சி. வறுமைக் காலத்தில் பொருளை நாடி அதனைத் தேட விரைவது ஆடவரது இயல்பாகும். ஆள்வினை முயற்சியே ஆடவர்க்கு உயிர் போன்றது. மடியில்லாதவனுக்குச் செல்வம் மென்மேலும் பெருகும். அதனைக் கொண்டு தன் சுற்றத்தாரைப் பாதுகாத்தும் பகைவரைப் பணிய வைத்தும் ஒருவன் நல்வாழ்வு வாழ்தல் கூடும். ஆள்வினை முயற்சியே ஒருவனுக்கு நல்வாழ்வு தருவது

'இன்னாது ஆகிய காலை, பொருள்வயிற்
பிரியல் ஆடவர்க்கு இயல்பு'

(நற்.243:9-10)

'செயல்படு மனத்தர் செய் பொருட்டு
அகல்வர் ஆடவர்' (நற்.24:8-9)

'வினையே ஆடவர்க்கு உயிரே'

(குறுந் . 135:1)

''அருள் அன்று ஆக, ஆள்வினை ஆடவர் பொருள்''

(அகம். 75:1-2)

*'ஈதல் இன்பம் வெஃகி, மேவரச்*
*செய் பொருள் திறவர் ஆகி....*
*... ... ... .... ....*
*அறை இறந்து அகன்றனர்'*

*(அகம் 69:5:6;12)*

*'கேள் கேடு ஊன்றவும், கிளைஞர் ஒழுகவும்,*
*ஆள்வினைக்கு எதிரிய ஊக்கம்'*

*(அகம்.93:1-3)*

*'உயிரினும் எதிரிய ஊக்கம்'* *(அகம்.93:1-3)*

*'உயிரினும் சிறந்த ஒண்பொருள் தருமார்*
*நன்றுபுரி காட்சியர் சென்றனர்.'*

*(அகம். 245:1-2)*

## எண்ணித் துணிக கருமம்

ஒரு வினையைத் தொடங்குமுன் நன்கு ஆராய்ந்து தொடங்குதல் வேண்டும். ஒன்றை ஆராயாது செய்துவிட்டு அதன் விளைவுக்காகப் பின்பு நோவதால் பயனொன்றுமில்லை. நெய்தலங்கானல் இளஞ்சேட்சென்னி என்பான், செய்து பின் இரங்காத செய்கையையும் எங்கும் விளங்கும் பெரும்புகழையும் கொண்டிருந்தனன். அதனால் அவன்,

*'செய்து இரங்காவினை, சேண்விளங்கும் புகழ்,*
*நெய்தலங்கானல் நெடியோய்!'*

*(புறம்.10:11-12)*

என்று புகழப்படுகிறான். நல்ல வினைகளைத் தேர்ந்தெடுத்துச் செய்தால் பழி நேரினும் அது உண்மையான பழியாக இராது. பின் உண்மை தெரியவே அவர் செய்த வினையின் தூய்மை பெறப்படும்.

*'செய்து பின் இரங்கா வினையொடு*
*மெய் அல் பெரும்பழிஎய்தினென் யானே!'*

*(அக. 268:13-14)*

என்பது தேர்ந்து செய்த நல்வினையினால் உண்மை வெளிப் படாது பிறர் பழிப்புக்கு இடமாக நேர்ந்தது பெறப்படும்.

## திருந்திய செய்கை

திறமையுள்ளோர் நடத்தும் காரியம் எப்பொழுதும் அறத்தோடு பொருந்தியதாகவே இருக்கும். மேலும், அவை சுற்றத்தோடு கூடிய மக்களுக்குப் பற்றுக்கோடாகவும் விளங்கும்.

*'எழில்மிக உடையது; ஈங்கு அணிப்படூஉம்;*
*திறவோர் செய்வினை அறவது ஆகும்;*
*கிளையுடை மாந்தர்க்குப் புனையுமார் இவ்'*
*(குறுந். 247:1-3)*

என்பது நற்செய்கையினைப் பாராட்டி உரைக்கின்றது. எடுத்துக் கொண்ட செயலைத் திருத்தமுறமுடிப்பது இன்பம் பயப்ப தொன்றாகும்.

*செய்வினை முடித்த செம்மல் உள்ளம்'*
*(குறுந். 270:5)*
*'அருந்தொழில் முடித்த செம்மல் உள்ளம்'*
*(அகம். 184:5)*
*'வினை முடித்தன்ன இனியோள்'*
*(நற் 3:8)*

எனவரும் வாக்கியங்கள் குறித்த வினை முற்றியதால் உண்டா கும் உள்ள மகிழ்ச்சியைத் தெரிவிக்கின்றன.

## இரத்தல் இழிவு

உழைப்பால் முயன்று வாழ்க்கை நடத்தாது இரந்து உண்டு வாழ்தல் மிக இழிவெனக் கருதப்பட்டது.

*'ஈயென இரத்தல் இழிந்தன்று; அதன் எதிர்*
*ஈயேன் என்றல் அதனினும் இழிந்தன்று'*
*(புறம்..204:1-2)*

என்பது 'ஈ' என இரத்தலைப் புலப்படுத்துகின்றது. தக்க பெரியோர்கள் தமக்கு வறுமை நேர்ந்த காலத்தும் ஈயென இரப்பதற்கு நாணுவர். மோசிகீரனார் கொண்காணம்கிழானை நோக்கி,

*'ஈ என இரத்தலோ அரிதே' (புறம் 154:8)*

என்று தமது நிலையை வெளிப்படுத்துகிறார். உறவினரிடம் சென்று வறுமை காரணமாகப் பொருள் வேண்டிப் பெறுவதற்குக்கூட நல்லோர் மிகவும் நாணுவர். ஒருகால் பொருள் வேண்டிப் பிறரை அடுத்தாலும் வாய்விட்டு உரைக்க இயலாது தயக்கமுறுவர்.

*'செல்வம் கடை கொள, சாஅய், சான்றவர்*
*அல்லல் களை தக்க கேருளிழைச் சென்று,*
*பல்லூழ் பெயர்ந்து என்னை நோக்கும்;*
*மற்றுயான் நோக்கின்,*
*மெல்ல இறைஞ்சும் தலை' (கலி 61:2-6)*

இன்மையால் இரப்பது எல்லார்க்கும் இயல்பன்று. இரப்பவன் சொற்கள் மிக எளிமைப்பட்டுப் பிறரால் இகழும் நிலையில் காணப்படும்.

*'ஒன்று, இரப்பான் போல் எளிவந்தும்*
*சொல்லும்: உலகம்*
*புரப்பான் போல்வதும் ஓர் மதுகையும் உடையன்'*
*(கலி. 47:1-2)*

என்பது இரப்பவன் சொல்லின் நிலையைப் புலப்படுத்துகிறது.

## ஈதலின் சிறப்பு

ஈகையில் சிறந்த பெரியோர் ஏனையோர் தம்பால் வந்து வறுமை கூறி இரப்பதற்கு முன்பாக விரைந்து அவர்க்கு உதவுவர்.

*'இல்லது நோக்கி, இளிவரவு கூறாமுன்*
*நல்லது வெஃகி, வினை செய்வார்.'*

*(பரி.10:87-88)*

இங்ஙனம் உதவுவோரே என்றும் தம் பெயர் நிலைக்க வாழ் வோராவர்.

*'துன் அருஞ்சிறப்பின் உயர்ந்த செல்வர்,*
*இன்மையின் இரப்போர்க்கு ஈயாமையின்*
*தொன்மை மாக்களின் தொடர்பு அறியலரே'*

*(புறம்.165:3-5)*

என்பதனால் ஈவோர் பால் புகழ் நிலை பெறுதல் பெறப்படும். இரப்பார்க்கு ஒன்று ஈயாமல் கரத்தல் மிக இழிவு தரும் செய லாகும்.

*'தொலைவு ஆகி, இரந்தோர்க்கு ஒன்று*
*ஈயாமை இழிவு'*

*(கலி:2:11)*

*'இல் என, இரந்தோர்க்கு ஒன்று ஈயாமை இழிவு'*

***(கலி:2:15)***

*'இடன் இன்றி இரந்தோர்க்கு ஒன்று ஈயாமை இழிவு'*

***(கலி:2:19)***

**எனவரும் கலித்தொகை அடிகளால் உணரலாம். பிறர்க்கு ஈவதில் விருப்பமுடையோர்க்குச் செல்வம் பெருகுதல் இயல் பாகும். ''பிறர்க்கொன்று ஈயாது வீயும் உயிர் தவப் பலவே' (புறம். 235:19-20) என்றபடி ஈவோர் மிக அரியவராவர். ஈயாது,**

செல்வத்தைக் கரந்து வைப்போர் பொருள் யார்க்கும் பயன் படாது அது அழிந்து போகும்.

*'செல்வத்துப் பயனே ஈதல்;*
*துய்ப்பேம் எனினே தப்புநபலவே'*

*(புறம். 189:7-8)*

என்பதால் பொருளை நாமே அத்தனையும் அனுபவிப்போம் என்றில்லாது கொடுப்பதே செல்வம் பெற்றதனால் ஆய பெரும் பயனாம்.

*'ஈதலில் குறை காட்டாது, அறன் அறிந்து ஒழுகிய*
*தீதிலான் செல்வம் போல், தீம் கரை மரம் நந்த'*

*(கலி 27:1-2)*

*'உணர்ந்தவர் ஈகை போல் இணர் ஊழ்த்த மரத்தொடும்'*

*(கலி 32:11)*

*செம்மையின் இகந்து ஒரீஇப் பொருள் செய்வோர்க்கு,*
*அப்பொருள்*
*'இம்மையும் மறுமையும் பகையாவது அறியாயோ'*

*(கலி. 14:14-15)*

*'மடியிலான் செல்வம் போல் மரன் நந்த; அச்செல்வம்*
*படி உண்பர் நுகர்ச்சி போல் பல்சினை மிஞிறு ஆர்ப்ப'*

*(கலி 35:1-2)*

*'இரத்தோர்க்கு ஈயாது ஈட்டியோன் பொருள் போல்,*
*பரந்து வெளிப்படாது ஆகி*
*வருந்தகதில்ல, யாய் ஓம்பிய நலனே'*

*(அகம். 276:13:15)*

இவற்றால் ஈவோர் செல்வம் பெருக வாழ்தலும், ஈயாதோர் புகழ்பட வாழாமையும் பெறப்படும். பிறர்க்கு உதவு தற்கும் நல்ல உள்ளம் அமைதல் வேண்டும். தன்னிடம்

இல்லையென்று வந்தவர்க்கு இல்லையென்று மறுக்காது கொடுப்பது சிறந்த பண்புடைமையாகும். இத்தகைய உள்ளத்தை வர்னம்போல் பரந்த உள்ளம் என்று ஒருவர் குறிப்பிடுகிறார். எவ்வளவு குறைவாக இருந்த போதிலும் கரவாது இருப்பதைக் கொடுப்பது ஈவோர்க்குரிய சிறந்த பண்பாகும். பிறர்க்கு ஈந்து புகழ் பட வாழ்தலைப் பெரியோர் வலியுறுத்திக் கூறி வந்தனர்.

*'சிறுமனை வாழ்க்கையின் ஒரீஇ, வருநர்க்கு*
*உதவி ஆற்றும் நண்பின் பண்புடை*
*ஊழிற்றாக, நின் செய்கை! விழவில்*
*கோடியர் நீர்மை போல முறை முறை*
*ஆடுநர் கழியும் இவ் உலகத்து கூடிய*
*நகைப் பறன் ஆக, நின் சுற்றம்!*
*இசைப் புறன் ஆக, நின் சுற்றம்'*

*(புறம். 29: 20-26)*

எல்லோர்க்கும் கொடுக்கும் நெஞ்சினனாய் விளங்கிய நெடுஞ் சேரலாதனைப் பெற்ற தாய் வயிறு விளக்கம் பெற்றாள் என்று பாராட்டுகிறார் குமட்டூர் கண்ணனார்.

'எமக்கும், பிறர்க்கும், யாவர் ஆயினும்,
பரிசில் மாக்கள் வல்லார் ஆயினும்,
கொடைக் கடன் அமர்ந்த கோடா நெஞ்சினன்;
மன் உயிர் அழிய, யாண்டு பலமாறி,
தண் இயல் எழிலி தலையாது ஆயினும்
வயிறு பசி கூர ஈயலன்;
வயிறு மாசு இலீயர் அவன் ஈன்றதாயே!'

**(பதிற் 20:21-27)**

## பயன் கருதாது கொடுத்தல்

ஈதல் சிறந்த அறமெனக் கருதி வழங்குதலையன்றி வேறுஎந்த வகைப் பயனையும் கருதிக் கொடுத்திலர், மறுமைப்

பயனையும் கருதிக் கொடுத்திலர்; மறுமைப் பயனையும். விரும்பாது ஈகையாகிய பேறு ஒன்றனையே விரும்பினர்.

> 'எத்துணை ஆயினும் ஈத்தல் நன்று என,
> மறுமை ஆயினும் ஈத்தல் நன்று,
> பிறர், வறுமை நோக்கின்று அவன் கை வண்மையே
> (புறம். 141:13-15)

என்று பேகனது பெருங்கொடை பாராட்டப்படுகிறது. ஆய் என்பான் உலகத்துச் சான்றோர் புகழ்ந்த பேரறம் என்று கருதி எல்லோருக்கும் கொடுத்து மகிழ்ந்தான்.

> இம்மைச் செய்தது மறுமைக்கு ஆம்' எனும்
> அறவிலை வணிகன் ஆஅய் அல்லன்
> பிறரும் சான்றோர் சென்ற நெறிஎன,
> ஆங்குப் பட்டன்று, அவன் கைவண்மையே.
> (புறம். 134:1-4)

என்று ஆயன் பெருங்கொடை சிறப்பிக்கப்பெற்றுள்ளது.

தம்மால் இயன்ற பொருளைப் பிறர்க்கு உதவுதலும், இயலாத பொருளைத் தனது நிலைமை கூறி இயலாமையைப் புலப் படுத்துதலும் சிறந்த அறமாம். தனக்கு முடியாததை முடியு மென்று உரைப்பதும், கொடுக்கத்தக்க பொருளை இல்லை யென்று கூறுதலும் இரப்போர்க்குத் துன்பம் தருவதாகும். மேலும், இது ஈவோரின் புகழையும் மாசுபடுத்தும்.

> 'ஒல்லுவது ஒல்லும் மாசுபடுத்தும்
> ஒல்லாது இல் எனு மறுத்தலும், இரண்டும்,
> ஆள்வினை மருங்கின் கேண்மைப் பாலே;
> ஒல்லாது ஒல்லும் என்றலும், ஒல்லுவது
> இல்என மறுத்தலும், இரண்டும், வல்லே
> இரப்போர் வாட்டல். அன்றியும், புரப்போர்
> புகழ் குறைபடூஉம் வாயில் அத்தை;
> அனைத்து ஆகியர்.' (புறம். 196:1-8)

இயலும் பொருளைக் கரவாது கொடுக்கும் தன்மையாளனாகிய ஈர்ந்தூர் கிழான் தோயன் மாறன் என்பான்,

*'நிரப்பாது கொடுக்கும் செல்வமும் இலனே*
*'இல்' என மறுக்கும் சிறுமையும் இலனே'*

*(புறம். 180:1-2)*

என்று புகழப்படுகிறான். இயைவது கரவாத நெஞ்சமுடையானது இயல்பினை,

*'இல்லோர்க்கு இல்' என்று இயைவது கரத்தல்*
*வல்லா நெஞ்சம் வலிப்ப, நம்மினும்*
*பொருளே காதலர் காதல்;*
*'அருளே காதலர்' என்றி நீயே'*

*(அகம். 53:13-16)*

என வரும் அடிகள் எடுத்துக் காட்டுகின்றன.

பிறர்க்கு ஈயாமை மிகக் கொடிதென்பதைப் பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் கூறிய வஞ்சினத்தாலும் புலப்படுகிறது.

*'புரப்போர் புன்கண் கூர,*
*இரப்போர் ஈயா இன்மையான் உறவே'*

*(புறம். 72:17-18)*

என்பது அவன்தன் வஞ்சினமொழி. இரப்போர்க்கு ஈயாது வாழ்தலை விட உயிரை விட்டு விடுதலே மேலானது என்று கருதப்பட்டது.

*'இடும்பையால்*
*உரைத்தார்க்கு ஒன்று, ஆற்றாது வாழ்தலின்*
*சாதலும் கூடும்ஆம் மற்று.'* *(கலி. 61:11-12)*

## இரப்போர்க்கு ஈயும் பாங்கு

இரப்போர்க்கு உண்டியும் உடையும் பொன்னும் மணியும் பிற பொருள்களும் அளித்துப் போற்றுவது செல்வம் உடையோரின் சிறந்த கடனாக விளங்கியது. இரப்போரின் கை நிறையப் பொருள்களை அள்ளிச் சொரிந்தனர். மழையைப் போன்று பயன் கருதாது எல்லோர்க்கும் வாரி வாரி வழங்கினர். ஒருநாள் போல எந்நாளுமே ஈதலில் குறை காட்டாது பிறர்க்கு வழங்கி மனம் உவந்தனர்.

*'மடை வேண்டுநர்க்கு இடை அருகாது,*
*அவிழ் வேண்டுநர்க்கு இடை அருளி'*
*(புறம். 366:17-18)*

*'ஏற்ற பார்ப்பார்க்கு ஈர்ங்கை நிறையப்*
*பூவும் பொன்னும் புனல்படச் சொரிந்து,*
*பாசிழை மகளிர் பொலங் கலத்து ஏந்திய*
*நார் அரி தேறல் மாந்தி, மகிழ் சிறந்து,*
*இரவலர்க்கு அருங்கலம் அருகாது வீசி*
*வாழ்தல் வேண்டும், இவண் வரைந்து வைகல்.'*
*(புறம். 367: 4-9)*

*'இரப்போர் ஏந்து கை நிறைய, புரப்போர்*
*புலம்பு இல் உள்ளமொடு புதுவ தந்து [illegible]க்கும்*
*அரும் பொருள் வேட்டம்'*
*(அகம். 389 11-13)*

மழையினும் மிகுதியாக ஏற்பார்க்குக் கொடுத்தலைப் பின்வரும் பாடற்பகுதிகள் வெளிப்படுத்துகின்றன.

*'மைபடு மலர்க்கழி மலர்ந்த நெய்தல்*
*இதழ் வனப்பு உற்ற தோற்றமொடு, உயர்ந்த*
*மழையினும் பெரும்பயம் பொழிதி; அதனால்*
*பசியுடை ஒக்கலை ஒரீஇய*
*இசைமேம் தோன்றல்!' (பதிற். [illegible] 16-20)*

*'பரந்து இடம் கொடுக்கும் விசும்பு நோய் உள்ளமோடு*
*நயந்தனிர் சென்ற நும்மினும், தான் பெரிது,*
*உவந்த உள்ளமோடு, அமர்ந்து இனிது நோக்கி*
*..........................................*
*மழை சுரந்தன்ன ஈகை நல்கி*
*தலை நாள் விடுக்கும் பரிசில்'*

*(மலைபடு: 558:560; 580-581)*

ஒருவன் கொடுக்கும் கொடை இரப்போன் மீண்டும் மற்றொருவர்பால் சென்று இரக்க வேண்டாத வகையில் அவன் வாழ்க்கைக்கு வேண்டிய எல்லாப் பொருள்களும் உதவப் பட்டன.

*'நிற்பாடிய வயங்கு செந்நாப்*
*பின் பிறர் இசை நுவலாமை,*
*ஓம்பாது ஈயும் ஆற்றல் எம்கோ!'*

*(புறம்: 22:31-33)*

*'ஈதல் இன்பம் வெஃகி, மேவரச்*
*செய்பொருள் திறவர் ஆகி'*

*(அகம். 69:5-6)*

*'வளனும் ஆண்மையும் கை வன்மையும்*
*மாந்தர் அளவு இறந்தன.*

*(பதிற். 73: 16-17)*

இரக்க வருவோர்பால் இன்முகம் காட்டி என்றும் ஒரே தன்மை யராகக் கொடைத் தொழிலில் ஈடுபட்ட பெருமக்கள் பலவ ராவர். அதிகமான் நெடுமானஞ்சி,

*'ஒருநாள் செல்லலம்; இருநாள் செல்லலம்;*
*பல நாள் பயின்று, பலரொடு செல்லினும்,*
*தலைநாள் போன்ற விருப்பினன் மாதோ'*

*(புறம் 101:1-3)*

என்று புகழப்படுகிறான். இவனைப் போன்றே பிட்டங் கொற்றன் என்பானும்,

*இன்று செலினும் தருமே; சிறுவரை*
*நின்று செலினும் தருமே; பின்னும்,*
*முன்னே தந்தனென்' என்னாது, துன்னி*
*வைகலும் செலினும், பொய்யலன் ஆகி,*
*யாம் வேண்டியாங்கு எம்வறுங்கலம் நிறைப்போன்'*
*(புறம். 171:1-5)*

என்றும் ஒரு தன்மையாய்ப் பிறர்க்கு வழங்கி வாழ்ந்த செயல் பாராட்டப்படுகிறது.

## உணவு கொடுத்தோர் உயிர் கொடுத்தோர்

பிறர்க்கு உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோராகவே கருதப்படுகின்றனர்.

*'நீர் இன்று அமையா யாக்கைக்கு எல்லாம்*
*உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே'*
*(புறம். 18:18-19)*

## தகுதி நோக்கித் தக்கபடி வழங்குதல்

ஈவோர் ஏற்போரின் தகுதியை அறிந்து கொடை வழங்குதலே பாராட்டப்படும். அதிகமான் நெடுமானஞ்சி பெருஞ்சித்திரனாரை நேரில் சந்தித்து, அவர்தம் தகுதி அறிந்து பாராட்டிப் பரிசில் வழங்காது, அவருக்குப் பொருள் அனுப்பிய போது அதனைப் புலவர் வாங்க மறுத்தனர். தினையளவு சிறிய பொருள் கொடுத்தாலும் தகுதியறிந்து கொடுப்பதே நன்று என்று குறிப்பிடுகின்றார்.

*'காணாது ஈத்த இப்பொருட்கு யான் ஓர்*
*வாணிகப் பரிசிலன் அல்லேன்; பேணி,*
*தினை அனைத்து ஆயினும், இனிது - அவர்*
*துணை அளவு அறிந்து, நல்கினர் விடினே'*
*(புறம். 208:6-9)*

## மதிப்பாரைப் போற்றி மதியாரைப் புறக்கணித்தல்

கடல்நீர் எவ்வளவு பெருகிக் காணப்படினும் தாகத்தைத் தணிப்பதற்கு சிறிய ஊற்றுநீரையே மாந்தர் வினவுவர். அது போலவே, நல்லியல்பு இல்லா ஒருவன் எவ்வளவு பெருஞ் செல்வம் பெற்றிருந்தாலும் அதனை நல்லோர் விரும்புவ தில்லை. முறைமை தெரிந்து கொடையளிக்கும் தன்மை யாளர்களையே விரும்பினர்.

*திரை பொரு முந்நீர்க் கரை நணிச்செலினும்,*
*அறியுநர்க் காணின், வேட்கை நீக்கும்*
*சில் நீர் வினவுவர், மாந்தர்; அதுபோல்,*
*அரசர் உழையராகவும், புரைதபு*
*வள்ளியோர்ப் படர்குவர், புலவர்.'*

*(புறம். 154:1-5)*

*மண் கெழு தானை, ஒண், பூண், வேந்தர்*
*வெண் குடைச் செல்வம் வியத்தலோ இலமே;*
*எம்மால் வியக்கப்படூஉமோரே,*
*..........................................*
*சீறூர் மன்னர் ஆயினும், எம்வயின்*
*பாடு அறிந்து ஒழுகும் பண்பினாரே;*
*மிகப் பேர் எவ்வம் உறினும், எனைத்தும்*
*உணர்ச்சி இல்லோர் உடைமை உள்ளேம்;*
*நல் அறிவு உடையோர் நல்குரவு*
*உள்ளுதும், பெரும! யாம் உவந்து, நனி பெரிதே ஏற*

*(புறம். 197:7-9; 13-18)*

வெளிமான் தம்பியாகிய இளவெளிமான் பெருஞ்சித்திரனாரின் தகுதிக்கேற்பக் கொடை கொடுக்காது சிறிதளவு கொடுப்ப, அப்போது அதனை மறுத்து அவர் கூறிய உரைகள் அவர்தம் வாழ்க்கையின் பெருமிதத்தை எடுத்துக் காட்டுகின்றன.

*எழு இனி நெஞ்சம்! செல்கம்! யாரே,*
*பருகு அன்ன வேட்கை இல்வழி,*
*அருகில் கண்டும் அறியார் போல,*
*அகம் நக வாரா முகன் அழிபரிசில்*
*தாள் இலாளர் வேளார் அல்லர்?*
*'வருக' என வேண்டும் வரிசையோர்க்கே*
*பெரிதே உலகம்; பேணுநர் பலரே;*
*மீளி முன்பின் ஆளி போல,*
*உள்ளம் உள்.அவிந்து அடங்காது, வெள்ளென*
*நோவாதோன் வயின் திரங்கி,*
*வாயா வன்கணிக்கு உலகமரு வோரே.*

*(புறம். 207)*

என்பது பெருஞ்சித்திரனாரின் வாக்கு.

அதிகமான் நெடுமானஞ்சி பரிசில் நீட்டித்தபோது ஔவையார் வாயில் காவலனை நோக்கிக் கூறிய உரைகளில் பரிசிலரின் பெருமித வாழ்வும் அவர்தம் குறிக்கோளும் நன்கு புலனாகின்றன.

*'வாயிலோயே! வாயிலோயே!*
*வள்ளியோர் செவிமுதல் வயங்குமொழி வித்தி, தாம்*
*உள்ளியது முடிக்கும் உரனுடை உள்ளத்து*
*வரிசைக்கு வருந்தும் இப்பரிசில் வாழ்க்கைப்*
*பரிசிலர்க்கு அடையா வாயிலோயே!*
*கடுமான் தோன்றல் நெடுமான் அஞ்சி*
*தன் அறியலன் கொல்? என் அறியலன் கொல்?*
*அறிவும் புகழும் உடையோர் மாய்ந்தென,*
*வறுந்தலை உலகமும் அன்றே; அதனால்,*
*காவினெம் கலனே; சுருக்கினெம்-கலப்பை;*
*மரம் கொல் தச்சன் கைவல் சிறாஅர்*
*மழுவுடைக் காட்டகத்து அற்றே-*
*எத்திசைச் செலினும், அத்திசைச்சோறே.'*

*(புறம்.206)*

கற்றவர்களுக்கு எங்குச் சென்றாலும் பெருமதிப்பு உண்டு என்பது ஔவையின் வாசகத்தால் நன்கு புலனாகிறது. அதோடு வரிசையறிந்து தாம் பாராட்டப்படுதலைக் கற்றோர் விரும்பினர் என்றும், பொருளைப் பெரிதாக மதித்தலர் என்றும் இதனால் உணர முடிகிறது.

## கொடை வள்ளல்

கொடைக்கு அக்குரன் என்பவன் எடுத்துக் காட்டப்படுகிறான்.

*'அக்குரன் அனைய கை வண்மையையே'*
*(பதிற் 14:7)*

நல்லியக் கோடன் என்பான், அவனுக்கு முன் வாழ்ந்த கொடையிற் சிறந்த எழுவர் மேற்கொண்டிருந்த கொடையாகிய பாரத்தைத் தான் ஒருவனே தாங்கி வாழ்ந்தான் எனப் பாராட்டப்படுகிறான்.

*'எழுவர் பூண்ட ஈகைச் செந்நுகம்,*
*விரிகடல் வேலி வியலகம் விளங்க,*
*ஒருதான் தாங்கிய - உரனுடைய நோன்தாள்*
*.......................................*
*நல்லியக் கோடன்'* *(சிறுபாண். 113-115; 126)*

இவனைப் போன்று குமணனும், வள்ளல் எழுவரும் இறந்த பின்பு இரந்து வரும் பிறர் துன்பத்தைத் தாங்கி விளங்கினான் என்பதை,

*'எழுவர் மாய்ந்த பின்றை, 'அழிவரப்*
*பாடி வருநரும் பிறரும் கூடி*
*இரந்தோர் அற்றம் தீர்க்கு' என விரைந்து, இவண்*
*உள்ள வந்தெனன் யானே'*
*(புறம். 158:17-20)*

என்று பெருஞ்சித்திரனாரும் கூறுவர். முற்பட்டு விளங்கிய கொடை வள்ளல்கள் எழுவராவார். பாரி, ஓரி, மலையன், எழினி, பேகன், ஆய், நள்ளி என்போராவர். இது புறநானூற்றில் காணும் (158) பெயரடைவு ஆகும். இப்பெயரடைவு வள்ளல் கள் வாழ்ந்த காலம் கருதியா அல்லது அவர்தம் சிறப்புடைமை கருதியா என்பது புலனாகவில்லை.

இவருள் பாரி பறம்பு மலைக்குத் தலைவன். முல்லைக் குத் தேரீந்த பெருமையுடையான். ஓரி கொல்லி மலையை ஆண்டவன். இவனுக்கு 'வல் வில் ஓரி' என்னும் பெயருடைய குதிரை உண்டு.

மலையன் என்பவனை மலையமான் திருமுடிக் காரி என்றும் வழங்குவர். குதிரையின் பெயரும் காரி என்பதே. இவன் மாரி போன்ற வண்மையுடைவன். எழினி குதிரை மலைக்குத் தலைவன். கூவிளங் கண்ணியையும் வளைந்த ஆரத்தையும் அணிந்தவன். ஔவைக்கு அமிழ்தம் போன்ற நெல்லிக்கனியை ஈந்து புகழ் கொண்டவன்.

பேகன் ஆவியர்களின் தலைவன். தெய்வம் காக்கும் மலைகளோடு கூடிய நாட்டையாண்டவன்.

ஆய், மோசிகீரனரால் பாடப் பெற்ற சிறப்புடையோன். பாம்பு ஈன்று கொடுத்த நீலநிறமுடைய ஆடையை ஆலின் கீழ் அமர்ந்துள்ள கடவுளுக்குக் கொடுத்துப் புகழ் சிறந்தோன். விற்போரில் வல்லவன்.

நள்ளி, பகைவரை வென்று இரவலர்கள் மகிழப் பெரும் பொருள் அளித்தவன். இவனும் மலைநாட்டை ஆண்டவனே.

**இவருள் நள்ளி என்பான் வன்பரணர் என்பாருக்குத் தான் யாரென்று அறியாமலேயே மலைவழியில் கண்டபோது உணவு முதலியவற்றால் உபசரித்து, தனது மார்பிலுள்ள ஆரத்தையும் கைக்கடகத்தையும் பரிசிலாகக் கொடுத்துச் சென்றனன்.**

*'பெறுதற்கு அரிய வீறு சால் நன்கலம்*
*பிறிது ஒன்று இல்லை; காட்டுநாட்டேம்'' என,*
*மார்பில் பூண்ட வயங்கு காழ் ஆரம்*
*மடை செறி முன் கைக் கடகமொடு ஈத்தனன்,*
*பிறர் பிறர் கூற வழி கேட்டிசினே*
*'இரும்பு புனைந்து இயற்றாப் பெரும் பெயர்த் தோட்டி*
*அம்மலை காக்கும் அணி நெடுங் குன்றின்,*
*பளிங்கு வகுத்தனன் தீம் நீர்,*
*நளிமலை நாடன் நள்ளி அவன்' எனவே.'*

*(புறம். 150:18-28)*

இப்பாடற்பகுதியால் தங்கள் பெயரையும் புகழையும் விரும்பாது ஈதலறத்தைச் செய்வதையே பெரும் கடமையாகக் கொண்டது புலப்படுகிறது. பாணர் முதலியோரது கலைகள் தாம் பெற்ற செல்வமிகுதியால் மறந்து போகும் வண்ணம் மிகுந்த செல்வத்தை நள்ளி அளித்தானாம். நள்ளியின் விருந்தோம்பலில் கட்டுண்ட பாணர் முதலியோர் காலைக்குரிய மருதத்தை மாலையிலும், மாலைக்குரிய செவ்வழிப் பண்ணைக் காலையிலும் முறைமை கெட வாசித்தனர் என்கிறார் வன்பரணர்.

*நள்ளி வாழியோ; நள்ளி! நள்ளென்*
*மாலை மருதம் பண்ணி, காலை*
*கை வழி மருங்கின் செவ்வழி பண்ணி,*
*வரவு எமர் மறந்தனர் - அதுநீ*
*புரவுக் கடன் பூண்ட வண்மையானே:*

*(புறம். 149)*

என்பது வன்பரணர் வாக்கு.

## கொடை மடம்

பேகன், கொடை கொடுப்பதில் தன்னை மறந்து ஆழ்ந்து விடுவதால் அவனைக் கொடை மடம்படுவோன் என்கிறார் பரணர்.

*'கொடைமடம் படுதல் அல்லது,*
*படைமட்ம் படான், பிறர்படைமயக்குறினே'*
*(புறம்.142:5-6)*

என்பது புலவர் வாக்கு.

## தலை கொடுத்த குமணன்

குமண வள்ளல் தன் தம்பியால் நாடு கொள்ளப்பட்டு, காடே உறைவிடமாய் வ்ாழ்ந்த காலத்தும் தன்னிடம் வந்த பெருந்தலைச்சாத்தனாருக்குத் தன் தலையையே கொய்து கொண்டு சென்று, அதற்கு விலையாகத் தன் தம்பி அறிவித்த பொன்னைப் பெறுமாறு, வாளைப் புலவர் கையில் கொடுத்தாராம். இந்நிகழ்ச்சியை,

*கேடு இல் நல்இசை வயமான் தோன்றலைப்*
*பாடி நின்றனனாக, 'கொன்னே*
*பாடு பெறு பரிசிலன் வாடினன் பெயர்தல் என,*
*வாள் தந்தனனே, தலை எனக்கு ஈய,*
*தன்னின் சிறந்தது பிறிது ஒன்று இன்மையின்;*
*ஆடுமலி உவகையொடு வருவல்,*
*ஓடாப் பூட்கை நின் கிழமை யோற் கண்டே*
*(புறம். 164:8-15)*

எனவரும் பெருந்தலைச் சாத்தனாரின் வாக்கினால் அறியலாம். இவ்வாறாகத் தமது உயிரையும் இரப்போர்க்காகக் கொடுக்கும் வண்மையாளர்கள் வாழ்ந்தனர். ஈகைப்பேரறம் தமிழகமெங்கும் செழித்து விளங்கியது.

## புகழ்பட வாழ்தல்

இல்லோர்க்கு ஈந்து புகழ்பட வாழ வேண்டுமென்பது முக்கிய குறிக்கோளாகவும் கொண்டிருந்தனர். ஒருவன் தன் சுற்றத்தார்க்கும் பிறர்க்கும் ஈந்து புகழுடையனாக வாழ்தலே அவன் தன் பெயரை என்றும் நிலைக்கச் செய்ய வல்லது.

*'நகைப் புறன் ஆக, நின் சுற்றம்!*
*இசைப் புறன் ஆக, நீ ஓம்பியபொருளே!'*
*(புறம். 29:25-26)*

*'வசையும் நிற்கும்; இசையும் நிற்கும்;*
*அதனால், வசை நீக்கி இசை வேண்டியும்,*
*நசை வேண்டாது நன்று பொழிந்தும்,*
*நிலவு கோட்பு பல களிற்றொடு,*
*பொலம் படைய மா மயங்கிட,*
*இழை கிளர் நெடுந்தேர் இரவலர்க்கு அருகாது,*
*'கொள்' என விடுவை ஆயின், வெள்ளென,*
*ஆண்டு நீ பெயர்ந்த பின்னும்,*
*ஈண்டு நீடு விளங்கும், நீ எய்தியபுகழே'*
*(புறம். 359:10-18)*

*'விளங்கித் தோன்றுக, அவன் கலங்கா நல்இசை!*
*யாமும் பிறரும் வாழ்ந்த நாளும்*
*உரை செல்வம் சிறக்க, அவன் பாடல்சால் வளனே'*
*(புறம். 396: 28-31)*

இவற்றால் ஈதலே ஒருவனது புகழுக்கு முதற்காரண மாவது என்பது தெரியவரும்.

## பெருமித வாழ்வு

ஈதலால் ஒருவனுக்கு இன்பமும் புகழும் பெருகும். ஈதலோடு ஒருவனுடைய நற்குணங்களும் அறநிலை திறம்பா நடுநிலைமையும் போர் வெற்றியும் ஒருவனது வாழ்க்கையில் பெருமிதத்தை உண்டாக்கும். தொல்காப்பியரும் கல்வி, அஞ்சா மையோடு கூடிய வீரம், கொடை, புகழ் என்பனவே பெருமித வாழ்க்கைக்கு அடிநிலை என்பர்.

*'கல்வி, தறுகண், புகழ்மை, கொடை எனச்*
*சொல்லப்பட்ட பெருமிதம் நான்கே'*
*(தொல். மெய்.9)*

என்பது தொல்காப்பியம்,

'இசையும்-
இன்பமும் ஈதலும் மூன்றும் பொருள்
இல்லார்க்கு இல்லை, (நற்.214:1-2)

என்பதினால் பொருளால் ஒருவன் இன்பத்தையும் புகழையும் பெறுதல் பெறப்படும்.

'பாடுநர், கொளக் குறையாச் செல்வத்து, செற்றோர்,
கொளக் கொளக் குறையாதானைச் சான்றோர்
வண்மையும், செம்மையும், சால்பும், மறனும்,
புகன்று புகழ்ந்து, அசையா நல்இசை,
நிலம் தரு திருவின், நெடியோய் நின்னே'
(பதிற். 82:12-16)

என இளஞ்சேரலிரும் பொறை புகழ்ந்து பேசப்படுகிறான். இவனுடைய நல்லிசைக்குச் செல்வ மிகுதியும் படைப் பெருக்கமும் கொடைத்திறமும் நடுவுநிலைமையும் சால்புடைமையும் வீரமும் நிலைக்களமாக அமைந்தன என்கிறார் புலவர்.

## புலவர் பாடும் புகழ் உயர்நிலை உலகம்

மேலும், இவ்வுலகில் இசைபட வாழாதாருக்கு உயிர் நிலை உலகமாகிய வீட்டு உலகம் கிட்டுமென்றும் புலவர் முதலியோர் புகழும்படியான சிறப்புடையார்க்கே மேலுலக இன்பம் கிட்டுமென்றும் கருதினர்.

'இவண் இசை உடையோர்க்கு அல்லது, அவணது
உயர்நிலை உலகத்து உறையுள் இன்மை
விளங்கக் கேட்ட மாறு கொல்
வலம்படு குரிசில்! நீ ஈங்கு இது செயலே?'
(புற 50:14-17)

'புலவர் பாடும் புகழுடையோர் விசும்பின்
வலவன் ஏவா வான ஊர்தி
எய்துப என்ப, தம் செயல்வினை முடித்து?'
(புற. 27:7-9)

என வருவன மேலதற்குச் சான்றாகும். புகழ்பட வாழ்வோருக்குச் செல்வம் மேன்மேலும் பெருகும். அவருடைய பெயரும் புகழும் உலகமெங்கும் பரவி, பலராலும் பாராட்டப் பெறும். நல்ல இசையினை உடையார் திருமாலுக்கு ஒப்பான சிறப்பினைப் பெறுவர்.

*'இசைபட வாழ்பவர் செல்வம் போலக்*
*காண் தொறும் பொலியும்'* *(நற்.217: 1-2)*

*'உலகுடன் திரிதரும் பலர் புகழ் நல்லிசை'*
*(அக. 78:15)*

*'நெடியோன் அன்ன நல் இசை '*
*(பதிற், 15:39)*

*'வல்லார் ஆயினும், வல்லுநர் ஆயினும்,*
*புகழ்தல் உற்றோர்க்கு மாயோன் அன்ன,*
*உரைசால் சிறப்பின் புகழ்சால் மாற!'*
*(புற. 57:1-3)*

புகழுடன் வாழும் பேறு பெற்றோர் உலகிற் சிலரேயாவர். இவர்கள் பழிச் செயலுக்குப் பெரிதும் நாணுபவர். தம் புகழை எதிரே பிறர் கூறக் கேட்பினும் கூடப் பெரிதும் நாணத்தை அடைவார்கள்.

*'உரையும் பாட்டும் உடையோர் சிலரே'*
*(புறம். 27-5)*

*'சான்றோர் புகழும் முன்னர் நாணுப;*
*பழியாங்கு ஒல்பவோ காணுங்காலே?'*
*(குறுந்.252:6-8)*

*'தம் புகழ் கேட்டார் போல் தலை சாய்த்து மரம் துஞ்ச'*
*(கலி.119:6)*

இங்ஙனமாக உலக ஒழுக்கத்தைக் கடந்து தீங்கு செய்வார். பிறரது பழிப்புக்கு இடமாவர்.

*'வசையும் நிற்கும் இசையும் நிற்கும்'*
*(புறம். 359:10)*

என்றபடி ஒருவன் செய்யும் பழியும் என்றும் நிலைத்து நிற்கும்.

*'யார் கண்ணும் இகந்து செய்து இசை*
*கெட்டான் இறுதிபோல்,*
*வேரோடு மரம் வெம்ப, விரிகதிர் தெறுதலின்'*
*(கலி. 10:3-4)*

எனப்படுதலின், பழிச்செயல் செய்வான் தானும் கெடுதலோடு தனது சுற்றத்திற்கும் கேடு விளைவிப்பான் என்பது தெரிய வரும்.

ஆதலால், ஒருவன் தன்வாழ்நாளில் புகழுக்கு ஏதுவான செயல்களைச் செய்வதே இம்மைக்கும் மறுமைக்கும் இன்பம் தருவதாகும். அவர்களுடைய புகழ் நில்லா உலகில் என்றும் நிலைத்து நிற்கும். வானத்திலுள்ள நட்சத்திரங்களின் நடுவே ஒளிவிட்டு விளங்கும் சந்திரனைப் போல இவனது புகழும் ஒளி விட்டு விளங்கும்.

*'மன்னா உலகத்து மன்னுதல் குறித்தோர்*
*தம் புகழ் நிறீஇத் தாம் மாய்ந்தனரே'*
*(புற. 105:1-2)*

*'சேண் விளங்கு நல் இசை நிறீஇ,*
*நாநவில் புலவர் வாய் உளானே.'*
*(புற. 282: 12:13)*

*'மாரி வானத்து மீன் நாப்பண்,*
*விரி கதிர வெண் திங்களின்,*
*விளங்கித் தோன்றுக, அவன் கலங்கா நல் இசை'*
*(புற 396:26-28)*

புகழாளன், உலுகத்தார் நாவிலெல்லாம் என்றும் உளனாவான். அவன் புகழ் என்றும் இறவாது திகழும்.

## காலத்தால் செய்த நன்றி

பிறருக்குக் கொடுத்துப் புகழுடன் வாழ்தல் ஒருபுற மிருக்க, எவ்வகைத் துன்பத்திலும், பிறர்க்கு உதவி அவர்க்குப்

பாதுகாவலாக, அமைதலே இன்னும் சிறந்ததாகும். உதவி வேண்டியார்க்குச் சிறிதும் காலம் தாழ்த்தாது கண்ணுக்கு நேர்ந்த இடையூற்றைக் கை சென்று தடுப்பதைப் போல, உதவுதல் வேண்டும்.

*'கண்ணுறு விழுமம் கைபோல் உதவி,*
*நம் உறுதுயரம் களையார் ஆயினும்'*

*(நற். 216:3-4)*

என்பது பிறர் துன்பம் கண்டார் ஒருவர் செய்ய வேண்டும் உதவியின் தன்மையை வற்புறுத்துகிறது. தன்னைப் போன்று பிறரையும் எண்ணி ஏனையோர் நலத்திற்காகப் பாடுபடுபவர் உலகில் பெரிதும் போற்றப்படுபவர். இதன் முதற்படி தம் மிடத்துள்ளதைப் பிறருக்கும் பகுத்துக் கொடுத்து மகிழ்வ தாகும்.

## பகுத்து வழங்கல்

எவ்வளவு இனிய பொருளாக இருந்த போதிலும், அதனைத் தனக்கென வரைந்து கொள்ளாது பிறர்க்கு வழங்குதல் அரிய செயலாகும். அதியமான் உண்டாரை நீண்ட நாள் வாழ வைக்கும் நெல்லிக்கனியை அருமையாகப் பெற்று வந்தும், அதனைத் தானுண்ண நினையாது, தன்பால் அப்போது வந்த ஔவையாருக்குக் கொடுத்து மகிழ்ந்தனன்.

*'இனியவை பெறினே தனிதனி நுகர்கேம்,*
*தருக' என விழையாத் தா இல் நெஞ்சத்து,*
*பகுத்தூண் தொகுத்த ஆண்மை,*
*பிறர்க்கு என வாழ்த்தி நீ ஆகன் மாறே'*

*(பதிற். 38:13-16)*

*'இவரே, புலன் உழுது உண்மார் புண்கண் அஞ்சி,*
*தமது பகுத்து உண்ணும் தண் நிழல்வாழ்நர்'*

*(புற. 46:3-4)*

பிறர்க்கென உதவி வாழ்வதற்குப் பேரருளுடைய நெஞ்சம் வேண்டும். பிறர் உற்ற துன்பத்தைத் தமக்கு நேர்ந்த துன்பம் போல எண்ணும் எண்ணமே ஒருவரை அறநெறிக்குத் தூண்டுவது.

*'பிறர்க்கு என முயலும் பேரருள் நெஞ்சம்'*

*(நற். 186:8)*

*'பிறா நோயும் தம் நோய்போல் போற்றி,*
*அறன் அறிதல்,*
*சான்றவர்க்கு எல்லாம் கடன்'*

*(கலி. 139:2-3)*

*'நெடிய மொழிதலும் கடிய ஊர்தலும்*
*செல்வம் அன்று; தன்செய் வினைப்பயனே;*
*சான்றோர் செல்வம் என்பது, சேர்ந்தோர்*
*புன்கண் அஞ்சும் பண்பின்*
*மென்கட் செல்வம் செல்வம் என்பதுவே'*

*(நற். 210:5-9)*

சான்றோர்க்குரிய பெருங்கடன் பிறர் துன்பம் தன் துன்பமாகக் கருதுதலாகும் என்பதும், சான்றோர் மதிக்கும் செல்வம் சேர்ந்தோரது துன்பத்தில் பரிந்து உதவும் செல்வமே யென்பதும் பெறப்படும். எல்லோர்க்கும் இனியனாய் அருளும் உள்ளம் படைத்தோனாய் இருக்கும் நிலையையே 'மென்கட் செல்வம் செல்வம்' என்று போற்றப்படுகிறது.

## வரையாது வழங்குதல்

பிறர் துன்பத்திற்கு இளகும் மனமுடைய சான்றோர் பொருளைப் பாதுகாவாது தம்மிடமுள்ளதை எல்லோர்க்கும் வழங்கிடும் இயல்பினாவர்.

*'நல் இசை வேட்ட நயனுடை நெஞ்சின்*
*கடப்பாட்டாளனுடைப் பொருள் போலத்*
*தங்குதற்கு உரியது அன்று, நின்*
*அம் கலுழ் மேனிப் பாஅய பசப்பே'*

*(குறு. 143:4-7)*

பிறர்க்கும் ஈயும் உள்ளமுடைய பேருபகாரி தன்பால் உள்ள தனைத்தையும் பிறர்க்கு ஈந்து விடும் இயல்பினனாவன். இத னால் உபகாரியின் கையில் வரும் பொருள் என்றும் தங்கி நிற்பதும் இல்லை; தேங்கிக் கிடப்பதும் இல்லை.

ஆய் என்பவன் தன்பால் வரும் பாணர் முதலியோர்க் கும் புலவர் தனது கோயிலுள்ள எல்லாப் பொருள்களையும் இல்லையென்னாது கொடுத்துப் புகழ் பூண்டான். தன்பாலுள்ள யானைகளையெல்லாம் இரவலர்க்கு அளித்து விட்டமையால், யானை கட்டும் தறிகள் பாழ்பட்டுக் கிடந்தன. அவற்றில் காட்டு மயில் வந்து கூட்டமாக வந்து குதித்தாடிக் கொண்டிருந்தன. அவனது மனைவிமார் மாங்கல்ய சூத்திரத்தைத் தவிர வேறெவ் வித அணியும் இல்லாதவராயினள். இத்தகைய நிலையில் வறுமையடைந்திருந்த அவனது இல்லம் பிறர்க்கு ஈயாது தம் வயிற்றையே நிறைந்து வாழ்ந்த பிற அரசர்களின் இல்லங்களை விடவும் சிறப்புடைத்தாகும் என்கிறார். கொடுத்துப்புகழ் கொண்ட அவனது உள்ளம் உலகினர் நெஞ்சங்களின் புகுந்து பொலிவுடைதாயிற்று. இந்நிகழ்ச்சியை,

*'களங்கனி அன்ன கருங்கோட்டுச் சீறியாழ்ப்*
*பாடு இன்பனுவற் பாணர் உய்த்தென,*
*கான மஞ்ஞை கண்ணொடு சேப்ப*
*ஈகை அரிய இழை ஆகிய குய்யுடை அடிசில்*
*பிறர்க்கு ஈவு இன்றித் தம் வயிறு அருந்தி,*
*உரைசால் ஓங்கு புகழ் ஒரீஇய*
*முரைசு கெழு செல்வர் நகர் போலாதே.'*

*(புற.127)*

என்னும் புறப்பாடலில் காண்கிறோம்.

## தனக்கு என வாழாப் பிறர்க்குரியாளன்.

ஆயைப் போன்று பிறர்க்கு என வாழும் மாந்தரை, **'தனக்கென வாழாப் பிறர்க்குரியாளன்' (அக. 54:3) என்பர். இவ் வுலகம் நிலை பெற்று நன்கு நடைபெறுவதும் இத்தகைய பேர்**

பேருளாளர்களால் தான். இவர்கள் இந்திரன் நாட்டு உள்ள பெறற்கரிய அமுதமே கிடைத்த போதிலும் அதனைத் தாமே தனித்து உண்ணார். பிறர்க்கும் கொடுத்தே உண்பர். எத் தகையோரிடத்தும் வெறுப்புக் கொள்ள மாட்டார். பிறர் அஞ்சும் துன்பத்துக்குத் தாமும் அஞ்சுவர். அவரது துன்பத்தைத் தீர்த்தற்பொருட்டு மடிந்திராது செயல்புரிவர். புகழைத் தரும் செயலாயின் தம் உயிரையும் கொடுப்பர். உலகமும் முழுவதும் பரிசாகக் கிடைத்தாலும் பழிச்செயலை மேற்கொள்ளார். மனத்தில் எத்தகைய கவலைக்கும் இடங்கொடார். இவர்கள் தமக்கென்று வாழாது பிறர் பொருட்டாக வாழ்தலினால்தான் உலகமும் இன்புடன் இயங்க முடிகிறது. இத்தகு பேரருளாரின் நிலையை,

> *'உண்டால் அம்ம, இவ் உலகம் - இந்திரர்*
> *அமிழ்தம் இயைவது ஆயினும், 'இனிது எனத்*
> *தமியர் உண்டலும் இலரே; முனிவு இலர்;*
> *துஞ்சலும் இலர்; பிறர் அஞ்சுவது அஞ்சி,*
> *புகழ் எனின் உயிரும் கொடுக்குவர் பழி எனின்,*
> *உலகுடன் பெறினும் கொள்ளலர்; அயர்விலர்;*
> *அன்னமாட்சி அனையர் ஆகி,*
> *தமக்கு என முயலுநர் உண்மையானே'*
>
> *(புற.182)*

என்று கடலுள் மாய்ந்த இளம் பெருவழுதி நவின்றுள்ளார்.

## நலமும் தீங்கும்.

**ஒருவன், தன் வாழ்நாளில் நற்செயல்களைச் செய்து தீச்செயல்களை விலக்குதல் வேண்டும். நன்மை செய்யின் நன்மையும் தீமை செய்யின் தீமையும் ஒருவனுக்கு உளதாதல் என்றும் மாறாத பேருண்மையாகும். இவற்றை மறுப்போர் தீயோர் ஆவர். இவருடன் சேர்தல் தகாது என்கிறார் ஒரு புலவர்.**

*'நல்லதன் நலனும் தீயதன் தீமையும்*
*இல்லை' என்போர்க்கு இனன் ஆகிலியர்'*
*(புறம் 29:11-12)*

என்பது அவர்தம் வாக்கு. தீமை புரிவார்க்குப் பல்வகையான துன்பங்களும் வந்து சூழும் என்பதை,

*'வள்ளி கீழ் விழா; வரைமிசைத்தேன் தொடா*
*கொல்லை குரல் வாங்கி ஈனா- மலைவாழ்நர்*
*அல்ல புரிந்து ஒழுகலான்' (கலி. 39:12-14)*

என்பதனால் அறியலாம். ஒருவன் தன் வாழ்நாளில் அறம், பொருள், இன்பம் தருவதற்கு ஏதுவான செயல்களையே செய்தல் வேண்டும். ஒருவனுக்கு நல்வினைதான் அவன் துன்பத்தில் உழலும் காலத்தில் கை கொடுத்து உதவுவது.

*'ஏற்ற பார்ப்பருக்கு ஈர்ங்கை நிறையப்*
*பூவும் பொன்னும் புனல்படச் சொரிந்து,*
*பாசிழை மகளிர் பொலங்கலத்து ஏந்திய*
*நார் அரி தேறல் மாந்தி, மகிழ் சிறந்து,*
*இரவலர்க்கு அருங்கலம் அருகாது வீசி,*
*வாழ்தல் வேண்டும், இவண் வரைந்த வைகல்;*
*வாழச் செய்த நல்வினை அல்லது*
*ஆழுங் காலைப்புணை பிறிது இல்லை'*
*(புற. 367:4-11)*

துன்பத்தில் துணையாதலேயன்றி நல்வினை ஒருவர்க்கு வீட்டின்பத்தைத் தருவதற்கு ஏதுவும் ஆகும்.

*'எழுமதி; வாழ்க, நின் உள்ளம்! அழிந்தோர்க்கு*
*ஏமம் ஆகும் நின்தாள்நிழல் மயங்காது*
*செய்தல் வேண்டுமால், நன்றே - வானோர்*
*அரும் பெறல் உலகத்து ஆன்றவர்*
*விதும்புறு விருப்பொடு விருந்து எதிர் கொளற்கே'*
*(புற. 213:20-24)*

இம்மைக்கும் மறுமைக்கும் வாழ்வுதரும் நல்வினையை ஒருவரால் செய்ய இயலாது போயினும் தீமை செய்யாது ஒழிதல் பேரறமாகும். தீங்கின்றி வாழ்ந்தால் உலகத்தோர் மகிழ்வர். நல்ல வழிக்குக் கொண்டு செல்லும் ஒரு தூண்டுதலும் தீவினை செய்யாமையேயாகும்.

*'நல்லது செய்தல் ஆற்றீர் ஆயினும்,*
*அல்லது செய்தல் ஓம்புமின்; அதுதான்*
*எல்லோரும் உவப்பது; அன்றியும்,*
*நல் ஆற்றுப்படூஉம் நெறியுமார் அதுவே'*

*(புற.195:6-9)*

என்று அறிவுரை கூறுகிறார் நரிவெரூஉத்தலையார்.

## உலகியல் பழமொழிகள்

உலகியல் ஒழுக்கம் பற்றிய பழமொழிகளும் வழக்கத்தில் இருந்தன. பழமொழிகள் எனப்படுபவை வழிவழியாக மக்களிடையே வழங்கிவரும் உலக வசனங்களாகும். இவை ஒரு கருத்தை, கேட்போர் உள்ளம் கொள்ளும் வகையில் சுருக்கமாகவும் தெளிவாகவும் வெளியிடுவதாகும். ''சுருக்கம், தெளிவு முதலியன விளங்க அமைத்துக் கருதின பொருளை முடித்ததற்கு வரும் ஏதுவைக்குறித்த தொடர்கள் முதுமொழியெனப்படும்'' என்பது தொல்காப்பியர் தரும் முதுமொழி விளக்கமாகும். (தொல். செய். 170)

சங்கப் புலவர் பாடல்களிலும் ஒருசில பழமொழிகள் அங்கங்கே ஆற்றலுடன் எடுத்தாளப்பட்டுள்ளன.

*'அம்ம வாழி, தோழி! 'இம்மை*
*நன்று செய் மருங்கில் தீது இல்' என்னும்*
*தொன்றுபடு பழமொழி இன்றுபொய்த்தன்றுகொல்?'*

*(அக.101:1-3)*

என மாமூலனார் தமது அகப்பாடலில் பழமொழியொன்றை எடுத்துக்காட்டியதோடு 'தொன்றுபடு பழமொழி'யென வழி வழியாக அது வழங்கி வருகின்ற இயல்பினையும் புலப் படுத்தியுள்ளார்.

ஒருவன் ஐயுற்றும் அஞ்சியும் இருந்த பொருள் உண்மை யாகவே வந்து விடுதலும் உண்டு என்பதை,

*'நெஞ்சு நடுக்குறக் கேட்டும், கடுத்தும், தாம்*
*அஞ்சியது ஆங்கே அணங்காகும்' என்னும் சொல்'*
*(கலி.24:1-2)*

என்னும் பாடலடிகளில் காண்கின்றோம்.

பிறர் வருத்தத்தைத் தம் வருத்தமாகக் கொண்டொழுகு வதனை வாரணவாசி என்னும் ஊரிலுள்ளோரிடம் காணும் தன்மையாகக் கொண்டு கூறுதல் உண்டு.

*'தெரிவின்கண் காரணம் இன்றிக் கலங்குவார்க்*
*கண்டு நீ*
*வாரணவாசிப் பதம் பெயர்த்தல், ஏதில*
*நீ நின் மேல் கொள்வது; எவன்?'*
*(கலி. 60:12-14)*

என வரும் பாடற்பகுதியில் 'வாரணவாசிப் பதம் பெயர்த்தல்'. என்னும் உலகவழக்கு ஆட்சி பெற்றுள்ளது.

இருபக்கத்திலும் துன்பம் இருக்க இடை நின்று வருத் தும் நிலை குறித்து,

*'இருதலைக் கொள்ளி இடை நின்று வருந்தி,*
*ஒரு தலைப்படாஅ உறவி போன்றனம்'.*
*(அக. 339:9-10)*

என்று எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. இங்கே 'இருதலைக் கொள்ளி எறும்பு' என்னும் உலக வசனம் அமைந்துள்ளது.

*'துன்பத்திற்கு மேல் துன்பம் விளைதலை,*

*'வெந்த புண் வேல் எறிந்தற்றால், வருவோடு*
*தந்தையும் வந்து நிலை.'*

*(கலி. 83:29-31)*

என்றும்,

*'முந்தைய கண்டும், எழுகல்லாத என்முன்னர்.*
*வெந்தபுண்வேல் எறிந்தற்றா, இஃது ஒன்று*
*தந்தை இறைத்தொடிமற்ற இவன்தன் கைக்கண்*
*தந்தார் யார், எல்லாஅ! இது?'* *(கலி. 84:29-32)*

என்றும்,

*'வெந்து ஓர் புண்ணின் கண்வேல் கொண்டு*
*நுழைப்பான்போல்,*
*காய்ந்த நோய் உழப்பாரைக் கலக்கிய வந்தாயோ'*
*(கலி. 120:17-18)*

என்றும் கலித்தொகை கூறும்,

விழித்திருக்கும் போதே ஏமாற்றிச் செல்கின்ற இயல்புடையாரைக் 'கண்குத்திக்கள்வர்' என்பர்.

*'ஆ முனியா ஏறுபோல், வைகல், பதின்மரைக்*
*காமுற்றுச் செல்வாய்; ஓர் கட்குத்திக்கள்வனை;*
*நீ எவன் செய்தி, பிறர்க்கு?'*

*(கலி. 108:48-50)*

பறையினது ஓசை அவரவர் மனத்தில் எண்ணியதையே இசைப்பது போலத் தோன்றுவது இயற்கை.

*'ஓர்த்தது இசைக்கும் பறைபோல், நின்நெஞ்சத்து*
*வேட்டதே கண்டாய், கனா,'*

*(கலி. 92:21-22)*

## உவமையாய் வரும் உலக வசனம்

ஒரு சில உலக வசனங்கள் உவமைச் சொல் சேர்த்து உவமையாகவும் எடுத்துக் காட்டப்பட்டிருக்கின்றன.

*'கெடுத்துப்படு நன்கலம் எடுத்துக்கொண்டாங்கு,*
*நன்மார்பு அடைய முயங்கி, மென்மேல*
*கண்டனம் வருகம் சென்மோ? தோழி!'*

*(நற். 182:5-7)*

*'அண்ணல் யானை அடுபோர் வேந்தர்*
*ஒருங்கு அகப்படுத்த முரவு வாய் ஞாயில்*
*ஓர் எயில் மன்னன் போல,*
*துயில் துறந்தனள் கொல்? அளியல்தானே?'*

*(அக.373:16-19)*

இவை கெட்டுப்போன ஒரு பொருள் மீண்டும் கை வந்தால் ஏற்படும் பெருமகிழ்ச்சி நிலையை விளக்குவதாயின், பாதுகாப் பில்லாத நிலையில் பல துன்பங்கள் வந்து நெருக்குவதனைப் பல மன்னர்கள் முற்றுகையிட உடைந்த ஒரு மதிலுக்குட்பட்ட ஒரு மன்னன் நிலையையும் உணர்த்துவதாக உள்ளன. இவை பழமொழி போன்ற அமைப்பினால் தெரிய வருகின்றன. பொதுவாக உவமைகள் பொருள் விளக்கத்திற்காகக் கையாளப் படுவனவே. எனவே, இவற்றுள் சில, பொருள் தெளிவிற்காகக் கூறப்படும் பழமொழிகளையும் ஒத்தும் அமைதல் இயல்பே யாம்.

உவமையாகப் புலவர்கள் எடுத்தாண்டுள்ள பாடற் பகுதிகளெல்லாம் . எல்லோரது வாழ்விலும் குறுக்கிடும் சாதாரணப் பொருள்களையும் நிகழ்ச்சிகளையும் உணர்த்து வனவேயாம். பல வகை இலட்சியங்களைக் கூட உவமை யொடு கலந்து எடுத்துக் காட்டியுள்ளனர். ஒருசில எடுத்துக் காட்டுகள் வருமாறு:

*'வறியவன் இளமை போல், வாடிய சினையவாய்*
*சிறியவன் செல்வம் போல், சேர்ந்தார்க்கு நிழல் இன்றி,*
*யார் கண்ணும் இகந்து செய்து இசை*
*கெட்டான் இறுதிபோல்*
*வேரொடுமரம் வெம்ப, விரிகதிர்தெறுதலின்,*
*அலவுற்றுக்குடிகூவ, ஆறு இன்றிப்பொருள் வெஃகி,*
*கொலை அஞ்சா வினைவரால், கோல்*
*கோடியவன் நிழல்*
*உலகு போல், உலறிய உயர்மர வெஞ்சுரம்'*

*(கலி.10:1-7)*

*'உண்கடன் வழி மொழிந்து இரக்குங்கால்முகனும்தாம்*
*கொண்டது கொடுக்குங்கால் முகனும், வேறாதல்*
*பண்டும் இவ் உலகத்து இயற்கை; அஃது இன்றும்*
*புதுவது அன்றே - புலனுடை மாந்தர்!'*

*(கலி. 22:1-4)*

*'ஈதலின் குறை காட்டது, அறன் அறிந்து ஒழுகிய*
*தீதிலான் செல்வம் போல், தீம் கரைமரம்தந்த;*
*பேதுற மடமொழி, பிணை எழில் மான் நோக்கின்,*
*மாதரார் முறுவல் போல், மணமௌவல்முகை*
*ஊழ்ப்ப;'*
*'காதலர்ப் புணர்ந்தவர் கதுப்புப் போல், கழல்குபு*
*தாதொடும் தளிரொடும், தண் அறல் தகை பெற;*
*பேதையோன் வினை வாங்க பீடு இலா*
*அரசன் நாட்டு,*
*ஏதிலான் படை போல, இறுத்தந்தது இளவேனில்,'*

*(கலி.27:1-8)*

*'ஈன்றவள் திதலை ஈர் பெய்யும் தளிரொடும்,*
*ஆன்றவர் அடக்கம் போல் அலர் செல்லாச்*
*சினையோடும்,*
*வல்லாா யாழ் போல வண்டு ஆர்க்கும்*
*புதலொடும்.*
*நல்லவர் அடக்கம் போல் நயம் வந்த*
*கொம்பொடும்*
*உணர்ந்தவர் ஈகை போல் இணர் ஊழ்த்த*
*மரத்தொடும்,*
*புணர்ந்தவர் முயக்கம் போல் புரிவுற்ற*
*கொடியோடும்*
*நயந்தோர்க்கோ நல்லைமான், இளவேனில்!'*

*(கலி.32:7-13)*

*'மடியிலான் செல்வம் போல் மரன் நந்த, அச்செல்வம்*
*படி உண்பார் நுகர்ச்சி போல் பல்சினை மிஞிறு ஆர்ப்ப'*

*(கலி.35:1-2)*

*'அருள் தீர்ந்த காட்சியான், அறன்நோக்கான்,*
*நயம் செய்யான்.*
*வெருவுற உய்த்தவன் நெஞ்சம் போல், பைய*
*இருள் தூர்பு, புலம்பு ஊர, களைசுடர் கல்சேர*
*உரவுத் தகை மழுங்கித்தன் இடும்பையால் ஒருவனை*
*இரப்பவன் நெஞ்சம் போல், மரம் எல்லாம்,*
*இலை கூம்ப,*
*தோற்றம் சால் செக்கருள் நிறைநுதி எயிறாக,*
*நால் திசையும் நடுக்குறூஉம் மடங்காலை,*
*கூற்று நக்கது போலும், உட்வரு கடுமாலை!'*
*(கலி.120:1-9)*

*'மன் உயிர் ஏமுற, மலர் ஞாலம் புரவு ஈன்று,*
*பல் நீரால் பாய்புனல் பரந்து ஊட்டி, இறந்தபின்,*
*சில் நீரால் அறல்வார, அகல்யாறு கவின்பெற,*
*முன் ஒன்று தமக்கு ஆற்றி முயன்றவர் இறுதிக்கண்*
*பின் ஒன்று பெயர்த்து ஆற்றும் பீடுடையாளர் போல்,*
*பல் மலர் சினை உக, சுரும்பு இமிர்ந்து வண்டு ஆர்ப்ப,*
*இன் அமர் இளவேனில்'*
*(கலி.34:1-7)*

இவ்வகையாக எத்தனையோ உலகியல் உண்மைகளைப் புலவர் பெருமக்கள் எடுத்துக் காட்டும் உவமைகளால் நாம் தெரிந்து கொள்ளலாம்.

## இன்பமும் துன்பமும்

இன்ப மயமான காட்சிகளினூடே துன்பக் கலப்பு இல்லாமல் இல்லை; பிறப்பு என்னும் போதே இறப்பும், புணர்வு என்னும் போதே பிரிவும், பெருகல் என்னும்போதே சிறுகலும் கலந்துதான் தோற்றமளிக்கின்றன. இவை ஒருவருடைய வாழ்வில் இரவும் பகலும் போல மாறி மாறி வருபவை என்பதை உணர்தல் வேண்டும். இந்த உணர்வே ஒருவருக்குத் துன்பத்தைப் பொறுக்கும் ஆற்றலையும் தந்துதவும்.

*'இன்பமும் இடும்பையும் புணர்வும் பிரிவும்*
*நன்பகல் அமையமும் இரவும் போல,*
*வேறு வேறு இயல ஆகி, மாறு எதிர்ந்து,*
*உள' என உணர்ந்தனை ஆயின், ஒரூஉம்*
*இன்னா வெஞ்சுரம் நல் நசை துரப்ப,*
*துன்னலும் தகுமோ? - துணிவு இல் நெஞ்சே'*

*(அக.327:1-6)*

என்று உலகியலை எண்ணிப் பார்த்து ஒருவன் தான் பிரிகின்ற எண்ணத்தை விடுத்தான்.

சேர்ந்திருந்தோர் பிரிய நேர்தலும் பிரிந்து சென்றோர் மீண்டு வந்து கூடுதலும் உலகியற்கையே என்கிறாள் ஒரு தலைவி.

*'மகளிர் தோள் சேர்ந்த மாந்தர் துயர்கூர நீத்தலும்,*
*நீள் சுரம் போகியோர்வ்லை வந்து அளித்தலும்,*
*ஊழ் செய்து, இரவும் பகலும்போல், வேறாகி,*
*வீழ்வார் கண் தோன்றும், தடுமாற்றம் ஞாலத்துள்*
*வாழ்வார்கட்கு எல்லாம் வரும்'*

*(கலி.145:13-17)*

என்பது அத் தலைவியின் அனுபவ உரை.

## படைப்பின் விந்தை

ஒரே சமயத்தில் ஒரு பால் மகிழ்வும் மற்றொரு பால் துக்கமும் நிகழ்ந்து கொண்டேயிருக்கின்றன. உலகினைப் படைத்த முதல்வன் இப்படி ஒன்றையொன்று ஒத்துவராத வெவ்வேறு மாறுபட்ட இயல்புகளை ஒன்றாக நிகழும் வண்ணம் அமைத்திருப்பது மிகவும் விந்தையானது. ஒரு வீட்டிலே சாப்பறை ஒலிக்கிறது. தலைவனை இழந்த துக்கம் தாளாது ஒரு பெண் வாய்விட்டு அரற்றுகின்றாள். அவனைச் சேர்ந்தோர் துக்கக் கடலில் ஆழ்கின்றனர். மற்றொரு வீட்டிலோ திருமணம். மணமுரசினது இன்னிசை ஒலிக்கின்றது. காதலைச் சேர்ந்த பூவணி அணிந்து பொலிவுற்று விளங்குகிறாள். அங்கே

எல்லோருடைய முகத்திலும் அகத்திலும் மகிழ்ச்சி தாண்டவ மாடுகிறது. இந்த உலகியலை உற்றுணர்ந்து தமது கருத்தை வெளியிடுகின்றார் பக்குடுக்கை நன்கணியார்;

> 'ஓர் இல் நெய்தல் கறங்க, ஓர் இல்
> ஈர்ந்தண் முழுவின் பாணி ததும்ப,
> புணர்ந்தோர் பூ அணி அணிய, பிரிந்தோர்
> பைதல் உண்கண் பனி வார்பு உறைப்ப,
> படைத்தோன் மன்ற, அப்பண்பிலாளன்!
> இன்னாது அம்மா, இவ் உலகம்;
> இனிய காண்க, இதன் இயல்பு உணர்ந்தோரே'
>
> (புறம். 194)

இன்பதுன்பக் கலப்பான உலகத்தியற்கையைக் கொடி என்கிறார் இப்புலவர். இவ் இயல்புகளை நன்குணர்ந்தோர் எஃஞ்ஞும் இன்பம் பெருக்கும் பேரின்ப வாழ்விற்கு ஏதுவான நல்ல செய்கைகளை அறிந்து செய்க என அறிவுறுத்துகிறார்.

## நிலையாமை

மற்றொரு புலவர் சந்திரனுடைய கதியை எடுத்துக் காட்டி, அச்சந்திரன் கற்றுணரா மாந்தருக்கும் உலகின் நிலையா இயல்பை நிதர்சனமாக உணர்த்துவதை எடுத்துரைக்கின்றார். மேலும், இவர் உலகத்தே ஒருவர் திறமையுடையராயினும், ஒன்றும் செய்ய இயலாதவராயினும் எவ்வகை நிலையி லுள்ளாரும் வறுமையால் வருத்தமுற்று வந்தால், அவர் களுக்கு வேண்டுவன கொடுத்து, அவர்தம் துன்பம் துடைத்து, அவர்க ளை வாழ வைக்கும் பேரருளைப் பெற வேண்டும் என்று செய்யத் தக்க நல்வினையையும் குறிப்பிடுகிறார். அருளற்றார் எப்படிப்பட்ட பெருஞ் செல்வராயினும் அழிந்து படுவர் என் பதும் இவர் வாக்கினால் புலனாகும்.

*'தேய்தல் உண்மையும், பெருகல் உண்மையும்*
*பாய்தல் உண்மையும், பிறத்தல் உண்மையும்,*
*அறியாதோரையும் அறியக் காட்டி,*
*திங்கட் புத்தேள் திரிதரும் உலகத்து,*
*வல்லார் ஆயினும், வல்லுநர் ஆயினும்*
*வருந்தி வந்தோர் மருங்கு நோக்கி,*
*அருள, வல்லை ஆகுமதி; அருள் இலர்*
*கெடாஅமை வல்லர் ஆகுக;*
*கெடாஅத் துப்பின் நின் பகை எதிர்ந்தோரே.'*
*(புற. 27:11-19)*

'நின் பகைவர் அருள் இலராய்க் கெடாமை வல்லராகுக' என்பதனால், அருளுடையோர் தம் பகைவரை எளிதில் வெல்வர்என்பது கருத்தாகும். பகைவருடைய வீழ்ச்சிக்கு முதற் காரணம் அவர்கள் அருள் இல்லாராய் வாழ்தலே. இங்ஙனமாக, சோழன்நலங்கிள்ளிக்கு உலகின் நிலையா உண்மை நினைவு படுத்தி, அருளுடன் வாழ்தலின் அவசியத்தையும் எடுத்து உரைத்துள்ளார் உறையூர் முதுகண்ணன் சாத்தனார்.

## உலக நிலையாமை

உலகமும் உலகத்துறு பொருள்களும் என்றும் மாறிக் கொண்டே இருப்பவை; தோற்றமும் மறைவும் என்றும் நிகழும் என்னும் நிலையாமை உணர்ச்சி அறிவாளர்களிடையே வேரூன்றியிருந்தது.

*'மன்னா உலகத்து மன்னுதல் குறித்தோர்*
*தம் புகழ் நிறீஇ, தாம் மாயந்தனரே*
*(புற.165:1-2)*

*நில்லா உலகத்து நிலைமை தூக்கி*
*(பொருந. 176; பெரு. 466)*

*விழவில்*
*கோடியர் நீர்மை போல முறைமுறை*
*ஆடுநர் கழியும் இவ் உலகத்து, ' (புற. 29:22-24)*

உலகம் தோன்றி இயங்கி இறந்து போகின்ற காட்சியை விழா வில் வேறு வேறு கோலம் பூண்டு ஆடும் கூத்தர்க்கு ஒப்பிட்டுப் பேசுதல் சிந்தித்து மகிழ்தற்குரியது.

## வாழ்நாள், இளமை, வளமை - நிலையாமை

'உலகின் நிலை இவ்வாறாக இதில்பிறந்த பொருள் களின் நிலை கூறல் வேண்டுமோ? அவை யாவுமே நிலை யற்றனவே. ஒருவனது வாழ்நாள், அவ்வாழ்நாளில் அவனது இளமை, செல்வ வாழ்வு, எல்லாம் நிலையற்றவை. மூப்பும் மரணமும் நேர்தல் எல்லார்க்கும் ஒத்தது. இவற்றையெல்லாம் சங்கப் புலவர்கள் அங்கங்கே குறிப்பாகத் தம் பாடல்களில் சுட்டிச் செல்கின்றனர். ஒருவனுடைய ஆயுள் காலம் இவ்வளவு என்று அறுதியிட்டு அறிந்தார் எவரும் இல்லை.

*'வாழ்நாள் வகை அளவு அறிஞரும் இல்லை.*
*(நற். 314:1-2)*
*கடை நாள் இது என்று அறிந்தோரும் இல்லை*
*(கலி. 12:15)*
*வளியினும் வரை நில்லா வாழுநாள்*
*(கலி: 20 : 9)*
*நாற்றம் சால் நளி பொய்கை அடை முதிர்*
*முகையிற்குக்*
*கூற்று ஊழ் போல் குறைபடூஉம் வாழ்நாள்'*
*(கலி. 17:11-12)*

என்றபடி காற்றைக் காட்டினும் நிலையற்று வாழ்நாள் கழியும். கனவில் வந்து போகும் பொருள்கள் போல நாள்கள் ஒன்றன்பின் ஒன்று ஓடிப் போதலும், விரைவில் இளமை நீங்கி மூப்பு வருதலும் எல்லார்க்கும் - நேர்கின்ற ஒரு நிலைமை

*'நாளும்*
*கனவுக் கழிந்தனையவாகி, நனவின்*
*நாளது செலவும் மூப்பினது வரவும்*
*அரிது பெறு சிறப்பின் காமத்து இயற்கையும்*
*இந்நிலை அறியாய்!'* *(அக. 353:2-6)*

இளமையும் வாழ்நாளும் ஓடிப்போதலும் மூப்பும் மரணமும் கிட்டி வருவதும் ஒருகனவு நிகழ்ச்சி போன்ற வேகமான மாறுதல்களாகும். இளமை ஆற்றுநீர் ஓடுதல் போல மிக வேக மாக ஓடிப்போதலும் குளத்து நீர் போல ஒருகாலைக் கொரு கால் குறைந்துபடுதலும் ஆகிய நிலைமையை உடையது. அழகும் இன்பமும் எல்லாம் நிறைமதி தேய்வது போல் குறைந்து மாய்வனவாம்.

*'யாறுநீர் கழிந்தன்ன இளமை'* *(கலி. 20:13)*

*'தகை வண்டு புதிது உண்ணத்தாது அவிழ்*
*தண்போதின்*
*முகை வாய்த்த தடம் போலும் இளமையும்*
*நிலையுமோ'*

*(கலி. 17:15-16)*

*'வைகல் தோறும் இன்பமும் இளமையும்*
*எய்கணை நிழலின் கழியும், இவ் உலகத்து'*

*(நற். 46:1-2)*

*'நீள் கதிர் அவிர்மதி நிறைவு போல் நிலையாது*
*நாளினும் நெகிழ்பு ஓடும் நலன் உடன்'*
*(நிலையுமோ?*

*இளமையும் காமமும் நின்பாணி நில்லா*
*இடை முலைக் கோதை குழையமுயங்கும்*
*முறைநாள் கழிதல் உறாஅமைக்காண்டை-*
*கடை நாள் இது என்று அறிந்தாரும் இல்லை.*
*போன்றால் - பெரும்! நீ, காமம் புகர்பட*
*வேற்றுமைக் கொண்டு பொருள்வயிற்*
*(போகுவாய்)*
*கூற்றமும் மூப்பும் மறந்தாரோடு ஓரா அங்கு*
*மாற்றுமைக் கொண்ட வழி'*

*(கலி. 12:12-19)*

இளமை, இன்பம், வாழ்நாள் இவற்றின் அருமையை உணர்ந் தார் செயத்தக்க- செயல்களை விரைந்து செயல் வேண்டும் - மூப்பு, மரணம் இவற்றை மறந்து நடப்பார் அறிவில்லாதாரே.

## மூப்புத் துன்பம்

மூப்பு என்பதும் துயரம் தரும் ஒரு பருவமே. மிக மூப்புற்றார் தாங்கள் உயிர் வாழ்தலை வெறுப்பர். தண்டு காலாக ஊன்றி, பிணியும், பிறவும் வருத்த உலகில் வாழ்தலை ஒருபெருந் தண்டனையாகவே கருதுவர்.

*'வாழும் நாளோடு யாண்டு பல உண்மையின்;*
*தீர்தல் செல்லாது, என் உயிர்' எனப்பல புலந்து,*
*கோல் காலாக குறும்பல ஒதுங்கி*
*நூல் விரித்தன்ன கதுப்பினள், கண்துயின்று*
*முன்றிற் போகா முதிர்வினன் யாயும்'*

*(புற. 159:1-5)*

என்று பெருஞ்சித்திரனார் தமது தாயின் முதுமை நிலையை எடுத்து மொழிகின்றார். துன்பம் தொடரும் மூப்பினை எய்தும் முன்னரே, ஒருவன் தான் உலகிற் செய்ய வேண்டிய அறவினைகளை முறைப்படச் செயதல் வேண்டும். அவ்வாறு அறம் செய்து வாழாதான் மறுமையில் இன்பம் எய்தான்.

*'மறம் திருந்தார் என்றாய் நீ மலையிடை வந்தக்கால்,*
*அறம் சாரான் மூப்பே போல, அழிதக்காள், வைகறை,*
*திறம் சேர்ந்தான் ஆக்கம்போல் திருத்தகும்'*

*(கலி. 38:18-)*

என்பதனால் தருமநெறியில் வாழ்ந்து மூப்புற்றாரே பிறவியின் பயனை அடைந்தவராவர் என்பது போதரும்.

## *bOW. இறப்பு ய்ர்வர்க்கும் உண்டு

மரணம் யாவர்க்கும் வருவது உறுதி. உலகமெல்லாம் புகழ் பரவ ஒரு குடையின்கீழ் ஆண்ட மன்னரும் இறுதியில் மாய்ந்தனர்; உயிரை நிலையாகப் பெறுதல் அரசர்க்காயினும் பிறர்க்காயினும் இயலாததொன்றாகும்.

*விழுக் கடிப்பு அறைந்த முழுக் குரல் முரசம்*
*ஒழுக்குடை மருங்கின் ஒருமொழித்து ஆக,*
*அரவு எறி உருமின் உரறுபு சிலைப்ப,*
*ஒருதாம் ஆகிய பெருமையோரும்*
*தம்புகழ் நிறீஇச் சென்று மாய்ந்தனரே'*

*(புறம். 366:1-5)*

*'-தழங்கு குரல்*
*மயிர்க் கண் முரசினோரும் முன்*
*உயிர்க் குறியெதிர்ப்பைப் பெறல் அருங்குரைத்தே'*

*(நற். 93:10-12)*

உலகம் ஆண்டு மறைந்த மன்னர்களோ அளவிட்டுரைக்க இயலாத பேரளவினராவர். கடலினது திரை குவிக்கும் மணலினும் மிகப் பலராவர்.

*'பணை கெழு பெருந் திறல், பல்வேல் மன்னர்,*
*கரை பொருது இரங்கும், கனை இரு முந்நீர்த்*
*திரை இடு மணலினும் பலரே, உரை செல*
*மலர் தலை உலகம் ஆண்டு கழிந்தோரே!'*

*(மதுரைக் 234-237)*

இறப்பு என்பது எல்லோர்க்கும் பேரச்சம் தருவது.

*'அருந் துயர் உழத்தலும் ஆற்றாம்; அதன்தலைப்*
*பெரும் பிறிதாகல் அதனினும் அஞ்சுதும்'*

*(குறுந். 302:3-4)*

என்பதனால் துயரங்களில் எல்லாம் பெருந் துன்பம் இறப்பு என்னும் உண்மை சுட்டப்படுதல் காணலாம்.

## செல்வம் நிலையாமை

வாழ்நாளை வளமாக்கும் பொருளோ எல்லார்க்கும் ஒரு படித்தாகக் கிட்டுவதும் இல்லை. கிட்டிய பொருள் தானும்

நிலையாக இருப்பதும் இல்லை; அது மாறிமாறி உறழ்ந்து கொண்டேயிருக்கும்.

*'கிழவர் இன்னோர்' என்னாது, பொருள்தான்*
*பழவினை மருங்கின் பெயர்பு உறையும்'*
*(கலி. 21:10-11)*

*- பொருளே,*
*வாடாப்பூவின் பொய்கை நாப்பண்*
*ஓடு மீன் வழியின் கெடுவ'*
*(நற். 16:4-6)*

செல்வம் பெற்றதனால் ஆயபெரும் பயனை அடைந்து, அறநிலை வழுவாது வாழ்ந்தார் செல்வமும் கூட நிலைத்து நில்லாது போல் விடுகிறதாம்;

*'பெரிது ஆராச் சிறு சினத்தர்,*
*சில சொல்லான் பல கேள்வியர்,*
*நுண் உணர்வினான் பெருங் கொடையர்,*
*கலுழ் நனையான் தண் தேறலர்,*
*கனி குய்யான். கொழுந் துவையர்,*
*தாழ் உவந்து தழூஉ மொழியர்,*
*பயன் உறுப்புப் பலர்க்கு ஆற்றி,*
*ஏமம் ஆக இந்நிலம் ஆண்டோர்*
*சிலரே; பெரும! கேள், இனி; நாளும்,*
*பலரே, தகையஃது அறியாதோரே;*
*அன்னோர் செல்வமும் மன்னி நில்லாது'*
*(புற. 360:1-11)*

நல்வினையாளர் ஈட்டிய செல்வத்தின் நிலையே இவ்வாறு எனின், ஏனையோர் செல்வத்தைப் பற்றி யாது கூற முடியும்? உலகவாழ்வில் ஒவ்வொன்றையும் உற்று நோக்கும் போது எங்கும் நிலையாமைத் தத்துவம் நிலைபெறுதல் விளங்கும் உலகமும், உலகத்தே உறும் செல்வம், இளமை, வாழ்நாள் முதலியன எல்லாமே நிலையற்று ஓடுகின்ற நிலையில் ஒவ் வொருவரும் தம் வாழ்நாளைப் பயனுடையதாகச் செய்ய

வேண்டும். துன்புறும் நாள்கள் வரும் முன்பே குறித்த நற் செயல்களைப் புரிய வேண்டும். நற்செயல் புரிதற்குத் துறவு நெறியே சிறந்தது எனக் கருதியோரும் அக்காலத்திலிருந்தனர்.

## துறவு வாழ்க்கை

ஐயாதிச் சிறு வெண் தேரையார் - என்பார் 363-ஆம் புறப்பாட்டில் துறவு கொண்டு நல்வினை புரிக என அறி வுறுத்துகின்றார். துறவு கொள்வதற்கான ஏதுக்களையும் தமது பாடலில் விளங்க உரைக்கின்றார். ''எத்தனையோ சிறப்புடன் ஆண்ட மன்னாதி மன்னரும் மாண்டொழிந்தனர். அவர்தம் எண்ணிக்கைக்கு அளவு இல்லை; எல்லார்க்கும் இறப்பு வருதல் உறுதி; அதனை இயற்றும் யமன் சிறிதும் காலம் தவறாது கடமையைச் செய்துவிடுவான். ஆதலால் இறந்துபடும் முன்னர் இவ்வுலகப் பற்றை ஒழித்து துறவு கொள்க'' என்கிறார் இப்புலவர்.

*'இருங்கடல் உடுத்த இப்பெருங்கண்மாநிலம்*
*உடைமிலை நடுவணது இடை பிறர்க்கு இன்றி,*
*தாமே ஆண்ட ஏமங் காவலர்*
*இடு திரை மணலினும் பலரே; சுடுபிணக்*
*காடு பதி ஆகப்போகி, தம்தம்*
*நாடு பிறர் கொளச் சென்று மாய்ந்தனரே;*
*அதனால், நீயும் கேண்மதி அத்தை! வீயாது*
*உடம்பொடு நின்ற உயிரும் இல்லை;*
*மடங்கல் உண்மை மாயமோ அன்றே;*
*கள்ளி வேய்ந்த முள்ளி அம் புறங்காட்டு,*
*வெள்ளில் போகிய வியலுள் ஆங்கண்,*
*உப்பு இலாஅ அவிப் புழுக்கல்*
*கைக் கொண்டு, பிறக்கு நோக்காது,*
*இழிபிறப்பினோன் ஈயப் பெற்று,*
*நிலம் கலனாக, இலங்கு பலிமிசையும்*
*இன்னா வைகல் வாரா முன்னே,*
*செய்நீ முன்னிய வினையே,*
*முந்நீர் வரைப்பகம் முழுதுஉடன் துறந்தே'*

(புறம் 363)

என்பது தேரையாரின் வாக்கு. துறவிலும் முற்றும் துறத்தல் வேண்டும் என்பது இவர் கருத்து.

துறவு கொண்டு செல்வது அத்தனை எளிதன்று. இல் வாழ்க்கை என்னும் பெரும்பிணைப்பை விடுத்துக் கொண்டு செல்வது என்பது அவ்வளவு எளிதன்று

*'அதள் எறிந்தன்ன நெடுவெண் களரின்*
*ஒருவன் ஆட்டும் புல்வாய் போல,*
*ஓடி உய்தலும் கூடும்மன்;*
*ஒக்கல் வாழ்க்கை தட்கும்மா காலே'*

*(புறம். 193)*

என்னும் ஓரேமுழவரின் வாக்கினால் துறவு கொள்வது எவ் வளவு சிரமமான காரியம் என்பது போதரும். இல்வாழ்க்கைத் தளை காலை நன்றாகப் பிணைத்துக் கொண்டிருக்கிறதாம். இந் நிலையில் விடுதலை பெற்றுப் பிழைப்பது எப்படி என்கிறார் மற்றொரு புலவர். இல்லறத்தினும் பற்றுவிட்ட துறவறமே சிறந் தது என வான்மீகியார் குறிப்பிடுகின்றார். (புற. 358)

*'பருதி சூழ்ந்த இப்பயம் கெழு மாநிலம்*
*ஒரு பகல் எழுவர் எய்தியற்றே;*
*வையமும் தவமும் தூக்கின், தவத்துக்கு*
*ஐயவி அனைத்தும் ஆற்றாது ஆகலின்,*
*கைவிட்டனரே காதலர்; அதனால்*
*விட்டோரை விடாஅள் திருவே;*
*விடாஅதோர் இவள் விடப்பட்டோரே'*

*(புற. 358)*

பற்றுவிட்டாரைத் திருமகள் விடாது சென்று அடைவாளாம்;

*'நாகத்து அன்னபாகு ஆர் மண்டிலம்*
*தமவே ஆயினும் தம்மொடு செல்லா*
*வேற்றோர் ஆயினும் நோற்றோர்க்கு ஒழியும்'*

*(புற. 367:1-3)*

என ஔவையாரும் தவம் செய்வோர் பெறும் பயனை எடுத்து மொழிகின்றார்.

தவமியற்றினோர் தம்முடம்பை அழியாதிருக்கச் செய்து கொண்டு அதனால் ஆய பெரும் பயனை அனுபவிப்பார்.

*'அருந்தவம் ஆற்றியார் நுகர்ச்சி போல்'*

*(கலி. 30:1)*

*'தவம் செய் மாக்கள்தம் உடம்பு இடாஅது*
*அதன் பயம் எய்திய அளவை மான'*

*(பொருந. 91-92)*

இதனால் தவமியற்றுவோர் தாம் பெற - வேண்டும் நற்பயன் வாய்க்கப் பெறுவது வரையில் உடம்பினை இடாது இருக்கும் பெற்றியும், அதனால் நற்பயன் பெறும் அவர்தம் குறிக் கோளும் தெரிய வரும். தவம் இயற்றினோர் உரிய காலத்தில் தம் உடம்பை விடுத்து உயர்ந்த உலகாகிய வீட்டுலக இன்பத் தையும் அடைவர்

*'-அன்புற்று,*
*அடங்கு அருந் தோற்றத்து அருந்தவம் முயன்றோர் தம்*
*உடம்பு ஒழித்து உயர் உலகு இனிது பெற்றாங்கே'*

*(கலி. 138:29-31)*

என்பதனால் யமனது குறுக்கீட்டால் உடம்பைப் போடாது, உரிய காலத்தில் தாமே தனது உடம்பை விடுத்து இன்ப வுலகடையும் ஆற்றலுடையராவர் அருந்தவத்தோர் என்பது தெரிய வருகிறது.

வீடு பெறும் குணமுடைய மாதவர் இறைவன் திருவடிப் பேற்றுக்கு ஆளாவது உறுதி. உண்மையற்ற பொய்த்துறவிகள் நற்பேறு பெறார்; கூடா ஒழுக்கமுடைய துறவோரை, 'அழி தவப் படிவத்து அயரியோர்' என்று குறிக்கிறது பரிபாடல்.

இதனால் போலித் துறவாளரும் - அந்நாளில் சிலர் இருந்தனர் என்பதும், அவர்தம் போக்குக் கடிந்து உரைக்கப்பட்டது என்பதும் உணரலாம்.

*'நின்குணம் எதிர் கொண்டோர் அறம்*
*கொண்டோர் அல்லதை*
*மன்குணம் உடையோர் மாதவர்*
*வணங்கியோர் அல்லதை*
*செறுதீ நெஞ்சத்துச் சினம் நீடினோரும்,*
*சேரா அறத்துச் சீர் இலோரும்,*
*அழிதவப் படிவத்து அயரியோரும்,*
*மறுபிறப்பு இல் எனும் மடவோரும் சேரார்*
*நின்நிழல்'* (பரி. 5:71-77)

என்பது பரிபாடல். வீடு பெறும் குணமுடைய மெய்த் தவசியரை 'மாதவர்' என்கிறார்.

இத்தகைய மாதவம் எய்தற்கும் முற்பிறப்பில் தவம் செய்திருக்கவேண்டும். தவப்பயனே இறையடிக்கு ஆளாக்கும் நெறியில் ஒருவனைச் செலுத்தும்;

*'முன்முறை செய் தவத்தின் இம்முறை இயைந்தேம்;*
*மறுமுறை அமையத்தும் இயைக!'*
(பரி. 11:138-139)

என இம்மை நலத்திற்கும் முன் தவம் துணை செய்தமை குறிக்கப்பட்டிருக்கிறது. தெய்வசித்தம் உண்டாகி இறைவன் தாள் அடைந்து உய்தி பெறுதற்கும் தவம் உறுதுணையாய் நிற்றலை,

*'புரிமலர்த் துழா அய் மேவல் மார்பினோய்!*
*அன்னை என நினைஇ நின் அடிதொழுதனெம்;*
*பல்மாண் அடுக்கம் இறைஞ்சினெம் வாழ்த்தினெம்*
*முன்னும் முன்னும் யாம் செய்தவப் பயத்தால்*
*இன்னும் இன்னும் எம் காமம் இதுவே!'*
(பரி. 13:60-64)

எனத் திருமாலை நோக்கி நல்லெழுதியார் கூறும் விண்ணப்ப வுரைகளில் காணலாகும்.

தொல்காப்பியரும் இல்லறவாழ்க்கையின முடிந்த பயனாகத் துறவறத்தைக் குறிப்பிடுகின்றார். இந்நெறி ஆடவர் பெண்டிர் இருபாலருக்கும் ஏற்ற நல்துணையாம். வையத்தில் வாழ்வாங்கு வாழ்ந்து, இச்சைகள் எல்லாம் அறநீக்கி, வீட்டின்பம் பெறுதற்கு ஏதுவாகிய துறவு மேற்கொள்ளுதலே வாழ்வின் முடிந்த பயன் என்கிறார்.

*'காமம் சான்ற கடைக்கோட் காலை,*
*ஏமம் சான்ற மக்களொடு துவன்றி*
*அறம் புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்*
*சிறந்தது பயிற்றல் இறந்ததன்பயனே'*

*(தொல். கற்பு. 51)*

என்பது தொல்காப்பியரின் கருத்துரை.

## ஊழின் திறம்

எல்லாவற்றையும் ஆட்டிப்படைக்க வல்லது 'ஊழ்' என நம்பினர். ஊழினைப் 'பால்', 'முறை' என வழங்குகின்றனர். ஊழை ஒரு தெய்வம் என்றே கருதினர். ஆடவர் பெண்டிர் ஒருவர்க்கு ஒருவராய் வாழ்க்கைத் துணையாக அமைவது அவர்தம் ஊழ் வகுத்த முறைமைப்படி வருவதாகும் என்பர் தொல்காப்பியர்;

*'ஒன்றே வேறே என்று இரு பால்வயின்*
*ஒன்றி உயர்ந்த பாலது ஆணையின்,*
*ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப*
*மிக்கோன் ஆயினும் கடிவரை இன்றே'*

*(தொல். களவு - 2)*

இங்கே பாலது ஆணை என்பது ஊழினையே. இவ்வூழினைப் 'பால் வரை தெய்வம்' (தொல். சொல் கிளவி. 58) எனக் குறிக்கின்றார் தொல்காப்பியர்.

உயிர் ஊழியின் வழியே செல்கிறது என்கிறார் கணியன் பூங்குன்றன். நீர் செல்லும் திசையிலே மிதவை போவது போல உயிரும் ஊழ் செலுத்துகிற வழியே செல்கிறது எனக் கருதுகிறார் இவர்.

*'கல் பொருது இரங்கும் மல்லல் பேர் யாற்று*
*நீர் வழிப் படூஉம் என்பது திறவோர்*
*காட்சியின் தெளிந்தனம்'* (புற. 192:8-11)

என்பது பூங்குன்றன் வாக்கு.

*'பால் வரைந்து அமைத்தல் அல்லது அவர்வயின்*
*சால்பு அளந்து அறிதற்கு யாஅம் யாரோ?'*
(குறுந். 366:11-12)

என்று ஊழின் வசத்தால் எல்லாம் அமைகின்றன என்பதை எடுத்து மொழிகின்றாள் தலைவிக்கு ஒரு தோழி.

நன்மைக்கும் இன்மைக்கும் ஊழ் காரணமாகவே, ஊழினை 'நல்லூழ்', 'தீயூழ்' என்று குறிப்பிடுதலும் உண்டு. இன்பமும் நலனும் மகிழ்ச்சியும் எல்லாம் நல்லூழின் பயன் என மகிழ்தலும், துன்பமும் துக்கமும் நேரின் தீயூழின் பயன் என நொந்து கொள்வதும் மனித இயல்பு.

*'இம்மை போலக் காட்டி, உம்மை*
*இடை இல் காட்சி நின்னோடு*
*உடன் உறைவு ஆக்குக உயர்ந்த பாலே'*
(புற. 236:10-12)

*'இல்லோர் சொல்மலை நல்லியக்கோடனை*
*உடையை வாழி ஏற்புணர்ந்த பாலே'*
(புறம். 176:7-8)

*'நல்லை மன்றம்ம பாலே - மெல்இயல்*
*துணை மலர்ப் பிணையல் அன்ன இவர்*
*மணம் கமழ் இயற்கை காட்டியோயே'*
(குறு. 229:5-7)

*'ஆங்கும் ஆக்குமோ வாழியபாலே?'*
(ஐங். 110:5)

என வருவன வெல்லாம் நற்பேறு வாய்க்கப்பெற்றார் தமது ஊழினைப் போற்றிப் பேசிய உரைகளாம்.

*'பூப் புரை உண்கண் மடவரற்*
*போக்கிய புணர்த்த அறன் இல் பாலே!'*
*(ஐங். 376:5-6)*

*'பழி எவன் ஆம் கொல், தோய்தரு பாலே?'*
*(அக. 325:22)*

என வருவன துன்பத்தால் தீயூழை நினைந்து நொந்து உரைத்தன வாம். எனவே, ஊழ் வெல்லுதற்கு அரிய ஒரு பெருவலி படைத்தது என அந்நாளில் கருதப்பட்டு வந்தமை நன்கு புல னாகும்.

## நாட்டின் நல்வாழ்வு

ஒரு நாட்டிற்கு வேண்டிய சிறந்த பொருள்களைப் பலரும் அங்கங்கே சுட்டிச் சென்றுள்ளனர். முக்கியமாக ஓரம் போகியார் ஐங்குறுநூற்றின் மருதப்பகுதியில் முதலில் தொடங் கும் வேட்கைப் பத்தில் குறித்த செய்திகள், ஒரு நாட்டின் நல்ல கூறுகளை விளக்கமுற வெளிப்படுத்துகின்றன. ஒருநாடு நீர் நில வளம் மிக்கதாய் விளை பொருள்களை மிகுதியுடையதாய் வாணிகம் முதலியவற்றால் பொருள் வளம் சிறந்ததாய் அமைந்திருப்பதே அதன் நல்நிலைக்கு சிறந்த அறிகுறிகளாம்.

*'வாழி 'ஆதன், வாழி அவினி!*
*நெல் பல பொலிக! பொன் பெரிதுசிறக்க'*
*(ஐங். 1:1-2)*

*'மாரி வாய்க்க! வளம் நனி சிறக்க'* *(ஐங். 10:2)*

*'விளைக வயலே! வருக இரவலர்!'*
*(ஐங். 2:2)*

*'பால் பல ஊறுக! பகடு பல சிறக்க!'*
*(ஐங். 3:2)*

இங்கே, ஒரு தாயின் விருப்பம் எனக் கவிஞர் காட்டுகின்ற உரைகள் நாட்டின் வளத்திற்கு இன்றியமையாதனவற்றைக் குறிக்கின்றன. மழைவளம், பயிர் வளம், கால் நடைச் செல் வங்கள், பொன்னின்மிகுதி என்பனவை மக்களின் ,வாழ்க் கைக்கு அடிப்படைத் தேவையானவை.

ஒரு நாட்டு மக்கள் தங்கள் வாழ்க்கைக்கு வேண்டிய பொருள்களுக்குப் பிற நாட்டை எதிர்பாராது எல்லா வகையி லும் தன் நிறைவு உடையதாய் அமைந்திருக்க வேண்டும். அப் பொழுது தான் பகைவராலும் பிறவற்றாலும் நேரும் துன்பங் களைத் தாங்கி, அந்த நாடு தலைதூக்கி நிற்க முடியும். பாரியின் பறம்புநாடு தன் நிறைவு மிக்க வளம் சிறந்த நாடாக விளங்கியது என்று தெரிய வருகிறது. இதனால்தான் மூவேந்தரும் அம் மலையை முற்றுகையிட்டிருந்த போது சிறிதும் வருந்தாமல் தன் நாட்டு மக்கள் நிறைவுடன் வாழவும் பகைவரை எதிர்த்து நிற்கவும் முடிந்தது. இத்தகைய நாட்டு வளத்தாலும் பாரியின் படை வீரர்களின் போர் வல்லமையாலும் மூவேந்தரது பெரு முயற்சிகளைத் தாங்கி நீண்ட நாட்கள் நிற்க முடிந்தது. எத்தனை நாட்கள் முற்றுகையிட்டிருப்பினும் அவர்களால் அந்த நாடு நேர்மையான முறையில் வென்று கைக்கொள்ள முடிய வில்லையாதலால்,

*'அளிதோ தானே பாரியது பறம்பே!*
*நளி கொள் முரசின் மூவிரு முற்றினும்*
*உழவர் உழாதன நான்கு பயன்உடைத்தே;*
*ஒன்றே, சிறியிலை வெதிரின் நெல்விளையும்மே;*
*இரண்டே, தீம் சுளைப்பலவின் பழம் ஊழ்க் கும்மே;*
*மூன்றே, கொழுங்குடி வள்ளிக்கிழங்கு வீழ்க்கும்மே;*
*நான்கே, அணி நிற ஓரி பாய்தலின், மீது அழிந்து,*
*திணி நெடுங்குன்றம் தேன் சொரியும்மே.*
*வான்கண் அற்று, அவன் மலையே வானத்து*
*மீன் கண் அற்று, அதன் சுனையே; ஆங்கு,*
*மரம் தொறும் பிணித்த களிற்றினிர் ஆயினும்,*
*புலம் தொறும் பரப்பிய தேரினிர் ஆயினும்,*

*தாளின் கொள்ளலின்; வாளின் தாரலன்;*
*யான் அறிகுவென், அது கொள்ளும் ஆறே;*
*சுதிர் புரி நரம்பின் சீறியாழ் பண்ணி,*
*விரை ஒலி கூந்தல் நும் நிறலியர் பின்வர,*
*ஆடினிர் பாடினிர் செலினே,*
*நாடும் குன்றும் ஒருங்கு ஈயும்மே'*

*(புறம். 109)*

இது பாரியின் நண்பராகிய கபிலரால் பறம்புமலையை முற்றுகையிட்டிருந்த மூவேந்தர்க்கும் கூறிய உரைகளாம். மூவேந்தர் முற்றுகை முயற்சி பயனற்றது எனக் கூற வந்த புலவர் அப் பாரியின் நாட்டில் உழவர்கள் உழுது பயிர் செய்யாமலேயே இயற்கையில் கிடைக்கும் மூங்கில் நெல், பலாப்பழம், வள்ளிக்கிழங்கு, மலைத்தேன் என்னும்நான்குமே அங்கு வாழ் வோருக்குப் போதியதாய் இருந்தது என்கிறார். போர் வல்லமை யிலும் அவர்கள் மிஞ்சியவர்கள் என்பதையும் 'வாளில் தார லன்' என்பதனால் குறிப்பிடுகிறார். அதோடு பறம்பு மலையைக் கொள்வதற்கு உபாயம் இரந்து வருதலே என்று கூறி, பாரியின் கொடைத் தன்மையை இங்கு கவிஞர் புலப்படுத்தினார். இறுதியில் பாரியின் கொடைத் தன்மையாலே மூவேந்தரும் பயன்படுத்தி வென்றனர் என்றும் அறிகின்றோம்.

வளமற்ற வன்புலத்தை விடவும் நீர் வளமிக்க விளை நிலம் ஒரு நாட்டின் - வளப்பத்திற்குக் காரணமாய் இருந்தது. அதோடு என்றும் புதிய புதிய வருவாய்கள் வரத்தக்க வகை யிலும் நாட்டின் பொருள்துறை வளம் பெற்றிருந்தது. இதனைக் கருதியே ''மென்புலவைப்பின் நல்நாடு'' (புறம். 209:6) 'யாணர் நல்நாடு' (புற. 212:6) என வளமுள்ள நாட்டைக் கவிஞர்கள் சிறப்பிக்கின்றனர்.

எவ்வளவு செல்வம் வாய்த்திருந்த போதிலும் மக்கள் பிணியின்றியும் கள்வர் முதலிய கொடியோர் தாக்குதலின்றியும் பகைவர் படையெடுப்புகள் இன்றியும் காப்பாற்றப்படு தல் அவசியம். காவலுக்குச் சிறந்தோனாகிய நாட்டின் அரசன்

வலியனாயும் செங்கோலனாயும் விளங்குதல் வேண்டும். தவிர வும் அவன் பகைவர் இல்லாதவனாய் மேம்பட்டு விளங்குதல் வேண்டும். இவற்றையும்,

*'பசி இல்லாகுக பிணி சேண் நீங்குக!'*

*(ஐங். 5:2)*

*'பகைவர் புல் ஆர்க! பார்ப்பார் ஓதுக!'*

*(ஐங். 4:2)*

*'அரசு முறை செய்க! களவு இல்லாகுக!'*

*(ஐங். 8:2)*

எனவரும் வேட்கையுரைகளால் கவிஞர் வெளிப்படுத்தி யுள்ளார்.

நாட்டில் வாழும் குடிமக்களும் தீநெறி விலக்கி நன் னெறியில் செல்வோராக வாழ்தல் வேண்டும். பலவகை அறங்களும் சேர்ந்து விளங்கினால்தான் நாட்டுமக்கள் அமைதி யாக வாழ முடியும்.

*'அறம் நனி சிறக்க! அல்லது கெடுக!'*

*(ஐங். 7:2)*

*'நன்று பெரிது சிறக்க! தீது இல்லாகுக!'*

*(ஐங். 9:2)*

இவ்விரண்டு குறிக்கோள்களும் நாட்டு மக்களின் பொது வாழ் வுக்கு மிக இன்றியமையாதன. மக்களிடை உலகியல் ஒழுக்கம் மிகவும் சிறந்தோங்கியிருந்தது. பசி, பிணி, பகை முதலிய தீமை களை அகற்றுவதற்குக் குடிமக்களும் அரசியலாரும் ஒன்றுபட்டு உழைத்தனர்.

## பரத்தை ஒழுக்கமும் கள்ளும் சூதும் கடியப்பட்டன

*'இருமனப் பெண்டிரும் கள்ளும் கவறும்*
*திரு நீக்கப்பட்டார் தொடர்பு'*

என வள்ளுவர் கடிந்து கூறும் பரத்தையரும் கள்ளுண்ணலும் சூதாட்டமும் தமிழகமக்கள் வாழ்வில் மிகவும் ஊடாடியது போலப் பல இடங்களில் தோற்றமளிக்கிறது. செல்வர்கள் மத்தியில் ஏற்பட்ட பரத்தமை ஒழுக்கம் நாட்டின் பொதுவாழ்வில் எல்லா மக்களிடையேயும் இருந்ததென்று கருதுவது தவறாகும். சோழன் நலங்கிள்ளி தன்னை இகழ்ந்த பகைவரை வெல்லாமற் போனால் இன்னின்ன இழிநிலை தனக்கு வந்தெட்டும் எனக் கூறுகின்ற வஞ்சினத்தில், 'நெஞ்சத்தில் காதலில்லாத பொதுப்பெண்டிரது சேர்க்கையில் என்னுடைய மாலை துவள்வதாக' என்று குறிப்பிடுகிறான்.

*'வருந்தப் பொரேஎன் ஆயின், பொருந்திய*
*தீதுஇல் நெஞ்சத்துக் காதல் கொள்ளாப்*
*பல்இருங் கூந்தல் மகளிர்*
*ஒல்லா முயக்கிடைக் குழைக, என்தாரே!'*

*(புறம். 73:11-14)*

மனைவியர் பலருடன் கூடி இன்பம் அனுபவிக்கும் ஓர் அரசனே பரத்தையர் கூட்டத்தை இழித்துப் பேசுவானாயின், அது நாட்டில் அறவோரால் வெறுக்கப்பட்ட தென்பது போதரும்.

போர்ச் செயலில் ஈடுபட்டாரும் பிற நாட்டினரும் தான் கள்ளை மிகுதியாக உண்டவர்கள். சாதாரண குடிமக்கள் கள்ளை உண்பது அவர்களிடத்தே அறநெறியல்லாத தீமொழிகளைச் சேர்த்து, அறநெறியை ஒட்டி, அவர்களுடைய அறிவையும் கலங்கச் செய்யும் என்னும் கருத்து நிலவியது.

*'ஆறு அல்ல மொழி தோற்றி, அறவினை கலக்கிய,*
*தேறுகள் நறவு உண்டார் மயக்கம் போல, காமம்*
*வேறு ஒரு பாற்று ஆனது கொல்லோ?'*

*(கலி. 147:1-3)*

என வருவது கள்ளுண்டார் இழிநிலையைப் புலப்படுத்துகின்றது. இது போன்றே,

*'தவல் இல் தண் கழகத்துத் தவிராது வட்டிப்ப,*
*கவறு உற்ற வடுஏய்க்கும், காமரு பூங்கடற் சேர்ப்ப!'*
*(கலி. 136:3-4)*

என்பதனால் சூதாடுதலும் கடியப்பட்டுள்ளமை புலப்படும். சூதாடுவோருடைய விருப்பத்தை மிகுத்து அவர்களுடைய செல்வத்தையும் ஒழுக்கத்தையும் சிதைக்கும் சூதாடுகளத்தை, 'தண் கழகம்' என்று கூறியது அதன் இழிநிலை கருதியேயாகும்.

## அரசன் முறைசெய்து காப்பாற்றுதல்

மக்கள் அறம், பொருள், இன்பங்களில் வழுவாதொழு 'கும் வண்ணம் அவர்களைக் காக்கும் அரசனும் கருத்துடன் நாட்டை ஆண்டனன். அரசன் இன்முகமுடையனாய்க் காட்சிக்கு எளியனாய் சான்றோர் துணையாக நாட்டை நன்கு ஆண்டனன். பகைவர் எதிர்த்த போது முன்னணியில் நின்று வீரம் விளைத்து நாற்படைகளையும் நன்கு போற்றி, அவற்றின் துணையால் பகைவரை வென்று' புகழில் மேம்பட்டான். பெரியோரை வணங்கி, அவர் தம் அறிவுரையை ஏற்று, நண்பர்களுக்கு உதவியும் பகைவர்களை அடக்கியும் சிறந்து விளங்கினான். `பேரறிவுபடைத்தவனாய்த் தன் பால் வரும் அறிஞர்களைப் போற்றியும் இரவலர்க்கு ஈந்தும் அருளுடைய னாய் •வாழ்ந்தான். ஏரோராகிய உழவுத்தொழில் செய்யும் குடிமக்களை நன்கு காப்பாற்றினான். அவரது முயற்சிக்கு ஆக்கமாக நாட்டின் நீர் நில வளத்தைச் செம்மைப்படுத்தினான். அரச நீதி அறிந்து, கடிவன கடிந்து செய்வன திருந்தச் செய்து பெரும்புகழுடன் அரசர்கள் வாழ்ந்தனர். ஓய்வு நேரத்தைத் தனது காதல் மனைவியருடன் கூடிப் பொழிலாட்டு முதலிய இன்பக் கேளிக்கைகளில் ஈடுபட்டுப் பொழுது போக்கினான். பூச்சூடியும் சாந்து பூசியும் மணம் வீசும் மதுவை உண்டும் இன்பத்தையும் - அனுபவித்தனன். அரசனுடைய அறம், பொருள், இன்பியல் வாழ்க்கைகள், அவன் கீழ் வாழும் குடிமக்களுக்கும் எடுத்துக் காட்டாய் அமைந்தன. குடிமக்களும் நாட்டுப்பற்றுடையவர்களாய் வாழ்ந்தனர். அரசனது பெருமித வாழ்க்கையைச் சுட்டி மிகவும் புகழ்ந்து பேசினர்.

'செய்ந் நன்றி அறிதலும், சிற்றினம் இன்மையும்
இன்முகம் உடைமையும், இனியன் ஆதலும்,
செறிந்து விளங்கு சிறப்பின் அறிந்தோர் ஏத்த;
அஞ்சினர்க்கு அளித்தலும், வெஞ்சினம் இன்மையும்,
ஆண் அணி புகுதலும், அணிபடை தாங்கலும்,
வாள்மீக் கூற்றத்து வயவர் ஏத்த;
கருதியது முடித்தலும், காமுறப்படுதலும்,
ஒரு வழிப்படாமையும், ஓடியது உணர்தலும்
அரி ஏர் உண்கண் அரிவையர் ஏத்த;
அறிவு மடம் படுதலும், அறிவு நன்கு உடைமையும்,
வரிசை அறிதலும், வரையாது கொடுத்தலும்,
பரிசில் வாழ்க்கைப் பரிசிலர் ஏத்த;
பல் மீன் நடுவண் பால்மதி போல,
இன் நகை ஆயமொடு இரந்தோன்'

(சிறுபாண். 207-220)

'முதுவோர்க்கு முகிழ்த்த கையினை' எனவும்,
'இளையோர்க்கு மலர்ந்த மார்பினை' எனவும்,
'ஏரோக்கு நிழன்ற கோலினை' எனவும்,
'தேரோர்க்கு அழன்ற வேலினை' எனவும்,
நீசில மொழியா அளவை.'

(சிறுபாண். 231-235)

'இரு நிலம் கடந்த திருமறு மார்பின்
முந்நீர் வண்ணன் பிறங்கடை, அந்நீர்த்
திரை தரு மரபின், உரவோன் உம்பல்,
மலர்தலை உலகத்து மன் உயிர் காக்கும்
முரசு முழங்குதானை மூவருள்ளும்,
இலங்கு நீர்ப் பரப்பின் வளைமீக் கூறும்
வலம்புரி அன்ன, வசைநீங்கு சிறப்பின்,
அல்லது கடிந்த அறம்புரி செங்கோல்,
பல்வேல் திரையன்' (பெரும்பாண். 29-33)

'முறை வேண்டுநர்க்கும், குறை வேண்டுநர்க்கும்,
வேண்டுப வேண்டுப வேண்டினர்க்கு அருளி'

(பெரும். 443-444)

'நட்டவர் குடி உயர்க்குவை;
செற்றவர் அரசு பெயர்க்குவை;
பேர் உலகத்து மேஎந் தோன்றி'

(மதுரை 131-133)

'செற்ற தெவ்வர் நின் வழி நடப்ப,
வியன் கண் முதுபொழில் மண்டிலம் முற்றி,
அரசியல் பிழையாது அறநெறி காட்டி,
பெரியோர் சென்ற அடி வழிப் பிழையாது,
குட முதல் தோன்றிய தொன்று தொழு பிறையின்
வழிவழிச் சிறக்க, நின் வலம்படு கொற்றம்!
குண முதல் தோன்றிய ஆர் இருள் மதியின்
தேய்வன கெடுக, நின் தெவ்வர் ஆக்கம்!
உயர்நிலை உலகம் அமிழ்தொடு பெறினும்
பொய்சேண் நீங்கிய வாய் நட்பினையே;
முழங்கு கடல் ஏணி மலர்தலை உலகமொடு
உயர்ந்த தேஎத்து, விழுமியோர் வரினும்,
பகைவர்க்கு அஞ்சிப் பணிந்து ஒழுகலையே;
தென்புல மருங்கின் விண்டு நிறைய
வாணன் வைத்த விழுநிதி பெறினும்,
பழி நமக்கு எழுக என்னாய், விழுநிதி
ஈதல் உள்ளமொடு இசை வேட்குவையே;'

(மதுரை. 189-205)

'அரிய தந்து குடி அகற்றி,
பெரிய கற்று இசை விளக்கி,
முந்நீர் நாப்பண் ஞாயிறு போலவும்
பல்மீன் நடுவெண் திங்கள் போலவும்,
பூத்த சுற்றமொடு பொலிந்து, இனிது விளங்கி,
.................................................
பொற்புவிளங்கு புகழ் அவைநிற்புகழ்ந்து ஏத்த
இலங்கு இழை மகளிர் பொலங் கலத்து ஏந்திய

*மணம் கமழ் தேறல் மடுப்ப, நாளும்*
*மகிழ்ந்து இனிது உறைமதி, பெரும!*
*வரைந்து நீ பெற்ற நல் ஊழியையே!'*
*(மதுரை. 766-770; 778-782)*

*'கடன் அறி மன்னர் குடை நிழற்போலப்*
*பெருந் தண்ணென்ற மரநிழல் சிறிது இழிந்து'*
*(நற். 146:4-5)*

*'அருப்பம் பேணாது அமர் கடந்ததூஉம்;*
*துணைபுணர் ஆயமொடு தசும்பு உடன்*
*தொலைச்சி,*
*இரும்பாண் ஒக்கற் கடும்பு புரந்ததூஉம்;*
*அறம் அறக் கண்ட நெறிமாண் அவையத்து,*
*முறைநற்கு அறியுநர் முன்னுறப் புகழ்ந்த*
*தூஇயல் கொள்கைத் துகள் அறுமகளிரொடு,*
*பருதி உருவின் பல்படைப் புரிசை,*
*எருவை நுகர்ச்சி, யூப நெடுந் தூண்,*
*வேதி வேள்வித் தொழில் முடித்ததூஉம்;*
*அறிந்தோன் மன்ற அறிவுடையாளன்'*
*(புற. 224:1-10)*

*'தொடியுடை தோள் மணந்தனன்;*
*கடி காவில் பூச் சூடினன்;*
*தண் கமழும் சாந்து நீவினன்;*
*செற்றோரை வழி புத்தனன்;*
*நட்டோரை உயர்பு கூறினன்;*
*'வலியர்' என, மீக் கூறலன்*
*'மெலியர்' என, மீக் கூறலன்*
*பிறரைத் தான் இரப்பு அறியலன்;*
*இரந்தோர்க்கு மறுப்பு அறியலன்;*
*வேந்துடை அவையத்து ஓங்குபுகழ் தோற்றினன்;*
*வருபடை எதிர் தாங்கினன்;*
*பெயர்படை புறங்கண்டனன்;*
*கடும் பரிய மாக் கடவினன்;*

*நெடுந் தெருவில் தேர் வழங்கினன்;*
*ஓங்கு இயல களிறு ஊர்ந்தனன்;*
*தீம்செறி தசும்பு தொலைச்சினன்;*
*பாண் உவப்பப் பசி தீர்த்தனன்; ஆங்கு*
*மயக்குடைய மொழி விடுத்தனன்; ஆங்குச்*
*செய்ப எல்லாம் செய்தனன்,*

*(புற. 239:1-19)*

*'வாளின் வாழ்நர் தாள் வலம் வாழ்த்த,*
*இரவல் மாக்கள் ஈகை நுவல,*
*ஒண் தொடி மகளிர் பொலங்கலத்து ஏந்திய*
*தண்கமழ் தேறல் மடுப்ப, மகிழ் சிறந்து,*
*ஆங்கு இனிது ஒழுகுமதி, பெரும! 'ஆங்கு அது*
*வல்லுநர் வாழ்ந்தோர்' என்ப - தொல்இசை,*
*மலர்தலை உலகத்துத் தோன்றி,*
*பலர் செலச் செல்லாது, நின்று விளிந்தோரே.'*

*(புற. 24:29-36)*

மேற்குறித்த பாடற்பகுதிகளையெல்லாம் கூர்ந்து நோக்குவோமாயின் தமிழக மன்னரின் சீரிய வாழ்க்கை இலட்சியங்கள் பற்பல தெரிய வரும். அவர் திறம்பாச் செங்கோலும், குடிகளைக் குழந்தைகளைப் போலப் போற்றிக் காத்த திறனும், அவர்தம் மனைவாழ்க்கையின் மாண்பும், பெரியோரிடத்தும் பிறரிடத்தும் அவர்கள் நடந்து கொண்ட பான்மையும், இன்னோரன்ன பல செய்திகள் நமக்குப் புலனாகின்றன.

## நாட்டு மக்களின் நல்வாழ்வு

'அரசன் எவ்வழி அவ்வழி குடிகள்' என்பதற்கிணங்கக் குடிமக்களும் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு அவரவர் கடமைகளை நன்கு ஆற்றி வந்தனர். மேற்குலத்தாராகிய - அந்தணர், வணிகர் ஆகியோர் தத்தம் மரபுக்கேற்ற முறைமை வழுவாது வாழ்ந்தனர். அந்தணர்கள் ஓதல், ஓதுவித்தல், ஈதல், ஏற்றல், வேட்டல், வேட்பித்தல் என்னும் ஆறு - தொழில்களையும் செய்பவர்களாய்ச் சிறந்து விளங்கினர்.

*'ஓதல், வேட்டல்; அவை பிறர் செய்தல்*
*ஈதல், ஏற்றல், என்று ஆறுபுரிந்து ஒழுகும்*
*அறம் புரி அந்தணர் '* *(பதிற். 24:6-8)*

*'ஒரு சார் - அறத்தொடு வேதம் புணர்தவம் முற்றி,*
*விறல் புகழ் நிற்ப விளங்கிய வேள்வித்*
*திறத்தின் திரிவு இல்லா அந்தணர் ஈண்டி,*
*அறத்தின் திரியா பதி.'*

*(பரி. திரட்டு. 1:18-21)*

இவற்றால் அந்தணரது வாழ்க்கையொழுக்கங்கள் புலனாகின்றன. இதற்கு அடுத்தபடியாகச் சிறந்து விளங்கிய வணிகர்களும், தேவர்களை வழிபட்டும், யாகங்களைச் செய்வித்தும், எருது, பசு முதலியவற்றைப் பாதுகாத்தும், நெல் முதலிய பொருள்களை நேர்மையான முறையில் விற்றும், தங்கள் மரபுக்கேற்ற தொழில்களை வழுவாமல் நிறைவேற்றி வந்தனர்.

*'கொலை கடிந்தும், களவு நீக்கியும்,*
*அமரர்ப் பேணியும், ஆவுதி அருத்தியும்,*
*நல் ஆனொடு பகடு ஓம்பியும்*
*நான் மறையோர் புகழ் பரப்பியும்*
*பண்ணியம் அட்டியும், பசும் பதம் கொடுத்தும்,*
*கொடு மேழி நசை உழவர்*
*நெடு நுகத்துப் பகல் போல,*
*நடுவு நின்ற நல் நெஞ்சினோர்,*
*வடு அஞ்சி, வாய் மொழிந்து,*
*தமவும் பிறவும் ஒப்ப நாடி,*
*கொள்வதூஉம் மிகை கொள்ளாது,'*
*கொடுப்பதூஉம் குறை கொடாது,*
*'பல்பண்டம் பகர்ந்து வீசும்,*
*தொல் கொண்டி, துவன்று இருக்கை.'*

*(பட்டினப். 199-212)*

வணிகர் வாழ்க்கை இலட்சியங்கள் இவ்வாறாக, வேளாளர்கள், உழவுத்தொழிலை மேற்கொண்டு நாட்டு மக்களுக்கு மூலா

தாரமான உணவு முதலியவற்றை உற்பத்தி செய்தனர். அரசர்களுக்கு உற்ற சமயத்தில், உதவி அவர்களது அரசாட்சிக்கு ஊன்றுகோலாக விளங்கினர்.

*'வேளாண் மாந்தர்க்கு உழுதூண் அல்லது,*
*இல்' என மொழிப - 'பிறவகை நிகழ்ச்சி'*

*(தொல. 9:81)*

*'வேந்து விடு தொழிலின் படையும் கண்ணியும்*
*வாய்ந்தனர்' என்ப - 'அவர் பெறும் பொருளே?'*

*(தொல. 9:82)*

*'விளைவதை வினை எவன் மென்புல வன்புலக்*
*களமர் உழவர் கடிமறுகு பிறசார்'*

*(பரி. திரட்டு. 1:26-27)*

நாட்டிற்கு முக்கியமான உணவு முதலியவற்றை உற்பத்தி செய்யும் இவ்வுழவர்களைப் பாதுகாத்தலே அரசுக்கு அச்சாணி என்பதை,

*'வருபடை தாங்கி, பெயர் புறத்து ஆர்த்து,*
*பொருபடை தரூஉம் கொற்றமும் உழுபடை*
*ஊன்று சால் மருங்கின் ஈன்றதன்பயனே;*
*மாரி பொய்ப்பினும், வாரி குன்றினும்,*
*இயற்கை அல்லன செயற்கையில் தோன்றினும்;*
*காவலர்ப் பழிக்கும், இக்கண் அகல் ஞாலம்;*
*அது நற்கு அறிந்தனை ஆயின், நீயும்*
*நொதுமலாளர் பொது மொழி கொள்ளாது,*
*பகடு புறந்தருநர் பாரம் ஓம்பி,*
*குடி புறந்தருகுவை ஆயின், நின்*
*அடி புறந்தருகுவர், அடங்காதோரே'*

*(புற. 35:24-34)*

என வெள்ளைக்குடி நாகனார் உணர்த்துகின்றார். இவ்வாறு ஏனைய குடிமக்களும் தத்தமக்குரிய தொழில்களைச் செய்து நாட்டிற்குப் பயன்பட வாழ்ந்தனர்.

## நல்வழி காட்டிய நல்லோர்

நாட்டு மக்களுக்கு நல்லறிவு கூறி நேர்வழி நடக்க வழி காட்டியாய் அமைந்த அறிவர், அருந்தவர், சான்றோர் - முதலியோரும் முக்கியமாகக் குறிப்பிடத் தகுந்தவர். அருந்தவர்கள், துறவுவாழ்வை மேற்கொண்டவர்கள். இவர்கள், முனிவர், ஐயர், தவசியர், அந்தணர் முதலிய பெயர்களால் அழைக்கப் பட்டனர். இவர்கள் பிச்சையேற்று உண்டு, ஓரிடத்தில் தங்காது எங்கும் சஞ்சரித்துக் கொண்டிருப்பவர்கள். (குறுந். 273:3; ஐங். 384:1) இவர்கள் நினைத்த மாத்திரத்தில் செல்லும் சித்தி படைத் தவர்கள். (குறுந். 30). இவர்கள் பற்றற்ற வாழ்வினையுடைய ராய் விருப்பு வெறுப்பற்று எல்லோர்க்கும் எடுத்துக் காட்டாக விளங்கினர். (முருகு. 136-137) சூரியன் சென்ற வழியெல்லாம் சென்று அவனது வெம்மை உலகினைத் தாக்காது தாம் இடை நின்று அந்தரசாரிகளாய்த் திரிபவர். 'சுடரொடு திரியும் முனிவர்' எனப்படுவர். (புற. 43:1-4; முருகு. 107)

மூன்று கோலை ஏந்தி காவியுடை முதலிய தவ வேடத் துடன் திரிபவர்களும் ஒருவகையினர். இவர்கள் தம்மை எதிர்ப் பட்டு அறிவுரை கேட்பார்க்கு, உலக நடையை எடுத்துக் கூறி, நல்வழி காட்டினர். (முல்லை. 37:40. கலி. 9:1-4; கலி. 126:1-5)

இவர்களையொத்த பெரியார்களே அறிவர் என்றும், உயர்ந்தோர் என்றும், மேலோர் என்றும் போற்றப்பட்டனர். நன்மைக் கூறுபாட்டை அறிந்து உலகிற்கு நன்று தீது உணர்த்து தலின் இவர்கள் 'திறவோர்' என்றும் கூறப்பெறுவர் (புற. 192:10; புற 221:4). சான்றோர், ஆன்றோர் என்று குறிப்பிடப் பெறும் மேன்மக்கள் இவர்களே. இவர்கள் சான்றாண்மை, மேம்பாடு, ஒழுக்கம், புலனடக்கம் முதலிய பண்புகளையுடையராயிருந்த னர். இவர்கள் பழியொடுபட்ட செயல்களை என்றும் செய்த லில்லை. இச்சான்றோர்களால் உலகம் நல்ல நெறியில் செல்வ தாயிற்று.

## வாழ்க்கை இலட்சியம்

ஒருவனுடைய நல்வாழ்வுக்கு நல்ல வாழ்க்கைத் துணையும் அறிவு நிரம்பிய மக்களும் தன்னொடு ஒத்துழைக்கும் ஏவலர்களும் அறநெறி வழுவாத அரசனும் சான்றோர்களும் துணையாக அமைகின்றனர். கோப்பெருஞ்சோழன் வடக்கிருந்த காலத்து அங்கு வந்த பிசிராந்தையார் என்னும் புலவர், ஆண்டு பல சென்றும் நரை திரை பற்றாமல் எழுச்சியுடன் இருக்கக் கண்டு அதன் காரணத்தை அங்குள்ள சான்றோர் அவர்பால் வினவினர். அதற்கு அவர்,

*'யாண்டு பல ஆக, நரை இல ஆகுதல்*
*யாங்கு ஆகியர்?' என வினவுதிர் ஆயின்,*
*மாண்ட என் மனைவியொடு மக்களும் நிரம்பினர்;*
*யான் கண்டனையர் என் இளையரும் வேந்தனும்*
*அல்லவை செய்யான், காக்கும்; அதன்தலை*
*ஆன்று அவிந்து அடங்கிய கொள்கைச்*
*சான்றோர் பலர், யான் வாழும் ஊரே'*

*(புற. 191)*

என்று விடை பகர்ந்தனர். இவருடைய மறு மொழியிலிருந்து நல்வாழ்வு வாழ்தற்குத் துண செய்யும் இலட்சியங்கள் எவை யெவை என்பது நன்கு புலனாகின்றன.

புலவர் பெருமக்களும் மன்னர்க்கும் மற்றையோர்க்கும் தக்க காலத்தில் தக்க அறிவுரைகள ஈந்து சமூகத்தில் சிறப்புடன் விளங்கினர். இவர்கள் நலலொழுக்கமுடைய மக்களையே பாராட்டினர். தீயொழுக்க முடையோரைக் கடிந்து கூறி, அதிலிருந்து அவர்களை மீண்டு செல்ல வழி காட்டினர். இத்தகைய இலட்சியமாந்தர்கள் பலர் அங்கங்கே வாழ்ந்து நல்நெறி காட்டினமையால்தான் உலகம் நல்வழியில் நடந்தது. நிலம் எப்படிப்பட்டதாயினும் சான்றோர் வாழும் இடமே சிறப்புடையதெனப் போற்றப்பட்டது.

*'நாடா கொன்றோ; காடா கொன்றோ;*
*அவலா கொன்றோ; மிசையா கொன்றோ;*
*எவ்வழி நல்லை; வாழிய நலனே!'*
*(புறம். 187)*

இதனால் இலட்சிய வாழ்க்கை வாழ்ந்து உலகிற்கு எடுத்துக் காட்டாக - விளங்கிய நல்மக்களின் பெருமை புலனாகும்.

## மூவேந்தர் நிலை

இலட்சியங்கள் எவ்வளவு உயர்ந்ததாயினும் எல்லோரா லும் அவற்றைக் கொண்டு செலுத்துதல் என்பது இயலாது. முக்கியமாக வேந்தர்கள் ஒருவரையொருவர் வலியால் மிஞ்சி ஏற்றமுறுதலையே விழைந்தனர்.

*'ஒருவனை ஒருவன் அடுதலும், தொலைதலும்,*
*புதுவது அன்று; இவ் உலகத்து இயற்கை.'*
*(புற. 76:1-2)*

என்பது அரசர்களுக்கிடையே அமைந்த ஒரு பொது நீதியாம். தமிழக மன்னர்களும் இதற்கு விதிவிலக்காக இருக்கவில்லை. மூவேந்தர் ஒற்றுமையுடன் சேர்ந்து பணியாற்றுவது தமிழகத் திற்குப் பெருமை தருவதாகவும் என்று சான்றோர் கருதினர். சோழன் குராப்பள்ளித் துஞ்சிய பெருந்திருமா வளவனும் பாண்டியன் வெள்ளியம்பலத்துத் துஞ்சிய பெருவழுதியும் ஒருங்கு இருந்த காலத்து, அவர்களது சேர்க்கையைப் பாராட்டி, காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார் மகிழ்ந்து போற்றி னர். ''பலராமனும் கண்ணனும் சேர்ந்து - விளங்குதல் போல உங்கள் காட்சி இனிமை தருகின்றது. உங்களுடைய புகழ் நீண்ட நாள் விளங்குக. உங்களில் ஒருவருக்கொருவர் உதவி புரிந்து வாழ்வீராக! நீங்கள் இருவரும்வேறுபடாது ஒன்றுபட்டு இருந் தால் எல்லாநாடுகளும் உங்கள் ஆட்சிக்கு உட்பட்டிருக்கும். நும்மைப் பிரிப்பதற்கு முயலும் அயலோருடைய சிறப்பற்ற சூழ்ச்சி மொழிகளை கேளாது நீக்குவீராக! உங்களுடைய

சேர்க்கை இன்று போல் என்றும் விளங்கட்டும். உங்களிரு வருடைய இலச்சினைகளும் எங்கும் சேர்ந்தே பொறிக்கப் பட்டிருக்கும்'' என்று கூறினார்.

*'நீயே தண் புனற் காவிரிக் கிழவனை; இவனே,*
*.... .... ..... .....*
*தமிழ்கெழுகூடல் தண்கோல் வேந்தே;*
*பால் நிற உரவின் பனைக் கொடியோனும்*
*நீல் நிற உருவின் நேமியோனும், என்று*
*இருபெருந் தெய்வமும் உடன் நின்றா அங்கு,*
*உருகெழு தோற்றமொடு உட்குவரவிளங்கி,*
*இன்னீர் ஆகலின், இனியவும் உளவோ?*
*இன்னும் கேண்மின்: நும் இசைவாழியவே;*
*ஒருவீர் ஒருவீர்க்கு ஆற்றுதிர்; இருவீரும்*
*உடன் நிலை திரியீர் ஆயின், இமிழ்திரைப்*
*பௌவம் உடுதத இப்பயம் கெழுமாநிலம்*
*கையகப்படுவது பொய் ஆகாதே;*
*அதனால் நல்ல போலவும், நயவபோலவும்,*
*தொல்லோர் சென்ற நெறிய போலவும்,*
*காதல் நெஞ்சின் நும் இடைபுகற்கு அம் மரும்*
*ஏதில் மாக்கள் பொது மொழி கொள்ளாது,*
*இன்றே போல்க, நும் புணர்ச்சி;*
*வென்றுவென்று*
*அடுகளத்து உயர்க, நும்வேலே; கொடுவரிக்*
*கோண்மாக் குயின்ற சேண் விளங்கு தொடு பொறி*
*நெடுநீர்க் கொண்டை யொடு பொறித்த*
*குடுமிய ஆக, பிறர் குன்று கெழுநாடே'*

*(புற. 58:1; 13-32)*

இங்கே சோழ பாண்டியர்களுடைய ஒற்றுமை, வேற்றுமையில் காணும் ஓர் ஒருமைப்பாடு. இருவரும் தமிழகத்தின் பெரு மையை வெளியுலகிற்கு எடுத்துக் காட்ட இந்த ஒற்றுமை பயன் தரும் எனக் கருதியே புலவர் இவர்களைப் பாராட்டுகின்றனர்.

## ஒருகுடி பிறந்தோங்கிய மாறுபாடு

ஒரு குடிப்பிறந்த சோழன் நலங்கிள்ளியும் சோழன் நெடுங்கிள்ளியும் மாறுபட்டு உறையூர்க் கோட்டைக்குள் அடைத்துக் கொண்டிருந்த நெடுங்கிள்ளியை நலங்கிள்ளி முற்றுகையிட்டான். அப்பொழுது கோவூர் கிழார், ஒரு குடிப் பிறந்தாரிடையே இத்தகை மாறுபாடு கூடாதெனத் தக்க ஏதுக்களால் - அவர்களுக்குள் நேர்ந்த மாறுபாட்டை மாற்ற முயன்றனர்.

> *'இரும் பனை வெண்தோடு மலைந்தோன் அல்லன்;*
> *கருஞ்சினை வேம்பின் தெரியலோன் அல்லன்;*
> *நின்ன கண்ணியும் ஆருமிடைந்தன்றே; நின்னொடு*
> *பொருவோன் கண்ணியும் ஆர்மிடைந்தன்றே;*
> *ஒருவீர் தோற்பினும், தோற்பது நும் குடியே;*
> *இருவீர் வேறல் இயற்கையும் அன்றே; அதனால்,*
> *குடிப் பொருள் அன்று, நும் செய்தி; கொடித்தேர்*
> *நும் ஓர் அன்ன வேந்தர்க்கு*
> *மெய்ம்மலி உவகை செய்யும் இவ் இகலே'*

## ஒருமை உணர்வு - யாதும் ஊரே யாவரும் கேளிர்

இங்ஙனம் ஒரு குடிக்குள்ளும் ஒரு மொழியினர்க் குள்ளும் ஓரினத்தினர்க்குள்ளும் சிறுசிறு வேறுபாடுகள் இரந்த போதிலும் ஒற்றுமையையே குறிக்கோளாக ஆன்றோர் வற்புறுத்தினர். இந்த ஒருமை உணர்வு நாட்டெல்லை, இன எல்லை, போன்ற தடைகளையெல்லாம் தாண்டி உலக மெல்லாம் ஒன் றாகக் காணும் ஒரு பெரிய உலகச்சமுதாயத்தைக் காண ஆன்றோர் இழைந்தனர். எந்த ஊரையும் தன்னூர் ஆகவும் தாம் செல்லும் இடங்களில் வாழும் மாந்தரைத் தம் சுற்றமாகவும் கொண்டு வாழ்தல் உயர்ந்த இலட்சியமாகக் கருதப்பட்டது. இது போன்றே இன்ப-துன்பங்களை ஒன்றாகப் பாவித்து, - பெரியோர் சிறியோர் முதலிய எல்லோருடனும் கூடி வாழும் நிலையைப் பெரிதும் போற்றினர். இத்தகைய

பொதுமை இலட்சியத்திற்கு எடுத்துக் காட்டாக விளங்குவது கணியன் பூங்குன்றனாரின் பேருரை:

*'யாதும் ஊரே; யாவரும் கேளிர்;*
*தீதும் நன்றும் பிறர் தர வாரா;*
*நோதலும் தணிதலும் அவற்றோரன்ன;*
*சாதலும் புதுவது அன்றே; வாழ்தல்*
*இனிது என மகிழ்ந்தன்றும் இலமே; 'மின்னொடு*
*வானம் தண்துளி தலைஇ, ஆனாது*
*கல் பொருது இரங்கும் மல்லல் பேர் யாற்று*
*நீர் வழிப்படூஉம் புணைபோல், ஆர் உயிர்*
*முறை வழிப்படூஉம்' என்பது திறவோர்*
*காட்சியின் தெரிந்தனம் ஆகலின், - மாட்சியின்*
*பெரியோரை வியத்தலும் இலமே;*
*சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே.*

*(புற. 192)*

இவருடைய குறிக்கோள்கள் உலகமெங்கும் ஒரு குலம் எனக் காணும் விரிந்து பரந்து உயர்ந்த காட்சியாகும். இக்காட்சி எல்லோர் உள்ளத்திலும் அரும்பி மலர்வதாக!

முற்றும்

★★★

TAMIL NADU STATE DEPARTMENT OF ARCHAEOLOGY
MADRAS
LIBRARY

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை-600113

## அண்மை வெளியீடுகள்

| | |
|---|---|
| சங்கரநமச்சிவாயர் | 60.00 |
| Agreement in Dravidian Languages | 100.00 |
| இலக்கிய இதழ்கள் | 110.00 |
| சங்கப் பெண்பாற் புலவர்களின் மொழியும் கருத்தும் | 30.00 |
| சிரவையாதீனப் பதிப்புகள் | 30.00 |
| தமிழக வரலாறு மக்களும் பண்பாடும் | 125.00 |
| கருவூரார் பல திரட்டு | 70.00 |
| தமிழ் மொழியின் வரலாறு | 30.00 |
| சங்ககாலக் காசு இயல் | 30.00 |
| திருமணம் செல்வக்கேசவராய முதலியார் | 30.00 |
| பின்னத்தூர் அ. நாராயணசாமி ஐயர் | 35.00 |
| தொல்லியல் நோக்கில் சங்காலம் | 45.00 |
| சிவக்கவிமணி சி.கே. சுப்பிரமணிய முதலியார் | 35.00 |
| மூதறிஞர் மு. இராகவையங்கார் | 40.00 |
| உலகத் தமிழிலக்கிய வரலாறு கிபி 500 வரை | 45.00 |
| உலகத் தமிழிலக்கிய வரலாறு கிபி 501-900 வரை | 70.00 |
| மபொசியின் பார்வையில் தமிழ்மொழி இலக்கியம் பண்பாடு | 30.00 |
| தணிகைமணி வ.சு. செங்கல்வராய பிள்ளை | 50.00 |
| அருந்தமிழ் நூற் காவலர் அடிகளார் | 50.00 |
| விவிலியத் தமிழ் | 40.00 |
| ஆராய்ச்சிப் பேரறிஞர் திவை. சதாசிவ பண்டாரத்தார் | 45.00 |
| பாரத வெண்பா | 80.00 |
| நாவலர் ந.மு. வேங்கடசாமி நாட்டார் | 50.00 |
| அருந்தமிழ் அறிஞர் அ.ச.ஞா | 50.00 |
| தட்சிணாமூர்த்தி குருமுகம் 100 | 50.00 |
| Studies in Manimekalai | 50.00 |
| தமிழெழுத்தின் வரிவடிவம் | 30.00 |
| திராவிடமொழி இலக்கியங்கள் | 180.00 |
| பண்டைத் தமிழ் எழுத்துக்கள் | 40.00 |
| கார் நாற்பது களவழி நாற்பது இன்னாநாற்பது இனியவை நாற்பது நன்னெறி (ஆங்கில மொழி பெயர்ப்புடன்) | 30.00 |
| நாவல் கலையியல் | 50.00 |
| நாடகவியல் | 70.00 |
| இக்கால உலகிற்குத் திருக்குறள் - 3 தொகுதிகள் | 260.00 |
| குமரமலைப் பிள்ளைத் தமிழ் | 75.00 |
| தென்னிந்திய மருத்துவ வரலாறு | 115.00 |

**516 - சங்கத் தமிழர் வாழ்வியல் 100.00**